கபீர்தாஸ் சரித்திரம்.

௧

தத் ஸத்

ஸ்ரீ பாண்டுரங்காயநம:

ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம்.

இது,

கடப்பை ஜில்லா கடிகோட்டை ஆசிரமவாசிகளாகிய

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த

யோகீஸ்வரர் அவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை சூளை

ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்தில்,

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனியாரால்

பதிப்பிக்கப்பட்டது.

மூன்றம் பதிப்பு 2000,

1—1—1928

All Rights Reserved] விலை ரூபா 2—4—0

163980

வி. பி. தபால் பாகிங் செலவுகள் பிரத்தியேகம்

முக்கிய கவனிப்பு.

குரங்கைப்போல் ஓடித்திரியும் மனதை ஓடவிடாமல் நிறுத்தி முக்தியடைவதற்காக இந்நூலாசிரியரால் வெளியாகிய முக்கியமான நூல்கள்:—

	ரூ	அ
"ஜீவப் பிரமைக்கிய வேதாந்த ரஹஸ்யம்" அநேக தேவ ...யீங்களும் அநேக ஆபட்டோன் பிளாக் படங்களுமுள்ள மிகவும் அற்புதமான நூல் காலிகோபயிண்டு ...	4	0
ஜீவப் பிரமைக்கிய ராஜயோக ஸாராம்சம் தெலுங்கு ...	4	4
"ஜீவப் பிரமைக்கிய வேதாந்த ரஹஸ்யம்" இங்கிலீஷ் முதற்பாகம்	2	8
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை மூன்றாம் பதிப்பு காலிகோ பயிண்டு ...	2	4
ஞானார்த்தமாய் எழுதிய ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம், ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து கன்னடத்திலும், கன்னடத்திலிருந்து தமிழிலும் மொழிபெயர்த்தது; இதுவரையில் வெளியாகாதது இரண்டாம்பதிப்பு காலிகோபயிண்டு...	2	4
தத்துவபரிசோதனை அன்னதானபலன் மூன்றாம் பதிப்பு	0	8
ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் பூர்வஜன்ம இச்ஜன்ம சரித்திரம் இரண்டாம் பதிப்பு	0	6
மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல் தமிழ் ...	0	4
ஷை நூல் இங்கிலீஷ்	0	4
பூஜை அறைக்குவேண்டிய உயர்ந்த பரிமளமுள்ள $1\frac{1}{4}$-மணி நேரம் எரியும் ஊதுவத்தி 100-க்கு விலை	2	0
இந்நூலாசிரியர் பெரிய போடோ பூஜைக்கு உபயோகமானது வி.பி. அனுப்புவதில்லை. முன்னதாய் ரூபா மூன்று அணா எட்டு அனுப்பினால் படம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்	8	8

இவைகள் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

☞ ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி.
169, ஸ்டிராஹன்ஸ ரோட்டு, சூளைப் பட்டாளம்,
பெரம்பூர் பாரக்ஸ் போஸ்ட்டு, சென்னை.

N28

இந்நூலாசிரியர் வரவேற்பு.

திருவேவருக திறம்பொலிந்த
சிவமேவருக செழுஞ்சுடரின்
உருவேவருக உண்மைநிலை
உயர்வேவருக உலகமதின்
கருவேவருக அருந்தவக்
கனியேவருக காரணசற்
குருவேவருக குறையகற்றுங்
குணமேவருக வருகவே. (1)

மறையேவருக மாதவத்தின்
மலையேவருக வளர்யோகத்
துறையேவருக தொலைவறுநற்
சுகமேவருக தொண்டர்மன
நிறையேவருக நிர்மலநன்
நிலையேவருக நிகிலமதற்
கிறையேவருக வெம்முளத்தின்
இனிவேவருக வருகவே. (2)

பொருளே பொறியே புகன்றிடுநற்
புகழே பொலிவே புயலெனச்செய்
அருளே அளியே அசைவுதவிர்
அறிவே அழலே அருவுருவே
இருளே யொளியே யிலதுளதென்
றிசைக்காப்பொருளே இடரகற்றும்
தெருளே செல்வச் சிவம்வருகத்
தேனே வருக வருகவே. (3)

திகழுமகண்ட பரிபூர்ணத்
தேஜோன்மய ஸச்சிதாநந்த
புகழுநிகில நிராங்கார
புண்யபரம நிஷ்களங்க

நிகழுமரிய பரப்ரம்ம
நித்யானந்த நிராதார
மகிழுமழியாப் பொருள்வருக
மதியேவருக வருகவே. (4)

அடியார் வேண்டுகோள்.

உண்மைநிலையை அறியாமல்
உழலுமடியேம் உணர்ந்திடவே
வண்மைமொழி மந்திரமொன்றும்
மலர்வாய்த்திறந்து வழுத்திடுவீர்
திண்மைப்பொருளைத் தெரிந்தபசுந்
தேனேதிகட்டாத் தெள்ளமுதே
தண்மைப்பொழில்சூழ் கடப்பைநகர்
தனில்வீற்றிருக்கும் தவக்கொழுந்தே. (5)

மதத்தைத்தவிர்த்து மலமொழித்து
மயலைக்கெடுத்து மனநிறுத்தும்
விதத்தையுணர்த்தி விளங்குகின்ற
மெய்ஞ்ஞானப் பேரின்பநல்ல
முதத்தையருந்திப் பிறப்பாழி
முழுகா தருளுமுளரியஞ்செம்
பதத்தைமனதில் நிலைநிறுத்திப்
பணிந்தோம்சிரத்தி லணிந்தோமே. (6)

புன்சொல் எனினும் புகலுமிவையெல்லாம்
இன்சொல் என்மனதில் எண்ணியே—நன்சொல்
திருவாய் மலர்ந்தருள்வீர் சேவித்தேன் பாதம்
குருவாய்ச் சிரமீதில் கொண்டு.

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்
கூடிகோட்டை, கடப்பை ஜில்லா.

மூன்று மாதம் பதின்மூன்று தினங்கள் யோகசமாதியிலிருந்து வெளிவந்தவுடன் பிடித்த போட்டோ. 1865௵ பிப்ரவரி௴ 16௳ குருவாரம் சிம்மலக்கினத்தில் ஜநநம். வயது 63.

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்
கடிகோட்டை, கடப்பை ஜில்லா.

மூன்று வருஷங்கள் வரையில் யோகாப்பியாசம் செய்யாமல் விட்டிருந்தபோது இருந்த சரீரம். வயது 61, இது, யோக சமாதியில் உட்காரும் இரவு 9-மணிக்கு இருந்த சரீரம்.

அந்தயிடம் மிகவும் கடினமாய் (பிருசாய்) இருக்கப்பட்ட இட
மென்று தம் அனுபவத்தையும் தெரிவித்திருக்கின்றார். இவ்வா
ரா: வெண்மை ரோமங்கள் கரப்புநிரமாய் மாரியபிறகு, அந்த
ரோமங்களைச் சவரைத்தபோதிலும் மறுபடியும் உள்ளேயிருந்து
புதிதாய்ப் புறப்பட்டுவரும் ரோமங்களெல்லாம் கரப்புநிரமாய்
வருமேயொழிய வெண்மை ரோமங்களாய்ப் புறப்பட்டு வரமாட்
டாதுகள். இவைகளையெல்லாம் இந்நூலாசிரியர் அனுபவித்த
பிரத்தியக்ஷ திருஷ்டாந்தங்களையெல்லாம் உங்களுக்கு இந்நூல்
மூலமாய்த் தெரிவித்தார், இவைகளெல்லாம் எந்த சாஸ்த்திரங்
களிலும் சொல்லப்பட் டிருக்கவில்லை. இந்நூலாசிரியர் அனுபவத்
தைக்கொண்டு சொல்லப்பட்டதென்று அரியக்கடவீர்களாக.

இவர் யோகத்திலேயே ஒருவருஷகாலம் இருப்பாராகில்
எல்லா ரோமங்களும் கருப்பாய் மாரிவிடும் என்பதற்குச் சந்தேக
மில்லை. மூன்றுமாதம் பதின்மூன்றுதினங்கள் யோகநிஷ்டையி
லிருந்து வெளிவந்தவுடன் இவர்ரூபமும், ரோமங்களும், சரீர
மும் மாறுபட்டிருப்பதைப் போட்டோ பிடித்திருக்கின்றார்கள்.
ஏனென்றால்,

நரைபோம், மூப்புநீங்கும், விருத்தரும் பாலராவார் மேனியும்
சிவந்திடும் என்று, பெரியோர்கள் பாடல்களாய்ப் பாடி இருக்கின்
றார்களையொழிய இப்படிப்பட்ட சாதனையில் இருப்பவர்களை
இதுவரையில் அனேகர்கள் கண்டதில்லை. ஆதலால், பெரியோர்
கள் சொல்லியவாக்கு சத்தியம் என்பதற்காகவே இந்நூலாசிரி
யரை இப்போது திருஷ்டாந்தமாய்ச்சொல்ல போட்டோ பிடிக்
கப்பட்டது. இவர் வயது, 63-ஜநநம், 16-2-1865. குருவாரம்
சிம்ம லக்கணம்.

மூன்றுமாதம், பதின்மூன்று தினங்கள் யோகநிஷ்டையி
லிருந்து வெளிவந்தபிறகு பிடித்தபோட்டோ, 61-வது, வயதில்
பிடித்த போட்டோவிற்குப் பின்புரத்தில் இந்நூலுக்கு முதலில்
காட்டப்பட் டிருக்கின்றது. அந்த யோகசரீர படத்தைப்
பாருங்கள். இப்படம் பூஜைக்காக வேறாய் விற்கப்படுகின்றது.

அது, 12-அங்குலம் உயரம் 10-அங்குலம் அகலமுள்ள பெரிய
சயிஸ்போட்டோ. பூஜைக்கு மிகவும் உபயோகமானது. வி. பி.

மூலமாய் அனுப்புவதில்லை. முன்னதாய் ரூபா 3—8—0 அடியில் கண்ட விலாசத்திற்கு மணியார்டர் மூலமாய் அனுப்பினால் ஷை போட்டோ ரிஜிஸ்டர்மூலமாய் அவர்களுக்கு அனுப்பப்படும். இந்த யோகத்தினால் வெண்மைரோமங்கள் கரப்புநிரமாய் மாறி விடுவது மிகவும் பெரிதான கார்யமென்று எண்ணவேண்டாம். இந்த யோகமானது, வெண்மைரோமங்களையெல்லாம் கரப்புநிரமாய் மாற்றுவதுமே யல்லாமல், ம[illegible] ஒட்டத்தைநிறுத்தி மிகவும் ஆனந்தசுகத்தை உண்டாக்குவதை என்னவென்று சொல்லலாம். அப்பப்பா! அந்தசுகம் இப்படிப்பட்டதென்றுசொல்லத் தெரியாமலிருக்கின்றது. ஆயினும், அந்தச்சுகம் எப்படி இருந்ததோ அந்த அனுபவத்தை இனி இதனடியில் சொல்லப்போகின்றார் கேளுங்கள் :—

☞ **T. K. சுந்தரம்.**

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி, 169, ஸ்டிராஹன்ஸ் ரோட்டு,
ரூளைப்பட்டாளம் பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.
இங்கு போட்டோ பெறலாம்.

இந்நூலாசிரியர் யோகநிஷ்டையிலிருந்த சுவானுபத்தை வெளியிடுதல்.

இப்போது, இந்நூலாசிரியர் தம் யோகசாதன அனுபவங்களையெல்லாம் இதனடியில் சொல்லப்போகின்றார் கேளுங்கள் :—

அய்யா! இந்நூலாசிரியர், யோகத்திலிருப்பதற்காக இதுவரையில், முன் பக்கங்களில் சொல்லியிருப்பதுபோல் தயார்செய்து வைத்திருந்த ஷை அறைக்குள் சென்றபிறகு, இரவு, 2-மணிக்கு ஸ்நாணம் செய்து யோகாப்பியாசம் பிராரம்பம் செய்வது வழக்கம். இவ்வப்பியாசத்திற்கு முன், பெரிய எலிமிச்சம்பழம் அவ்வளவு பிரமாணம் வெண்ணையைச் சாப்பிடுவார். ஏனென்றால், யோகம் செய்வதனால் விசேஷ அக்நி ஜ்வாலை உண்டாகும். ஆதலால், வெண்ணை சாப்பிடுவதனால் ஷை அக்நி ஜ்வாலை சாந்தமாகும். இவ்வாறு வெண்ணையைச் சாப்பட்டபின் அவ் வர்த்தராத்திரி வேளையில் பால் கிடைக்காதபடியால், வலது நாசியில் சுவாசம் இழுத்து யோகாப்பியாசம் செய்யும்போதும், அதுபோல் இடது நாசியிலும், இரண்டு நாசிகளிலும் சுவாசம் இழுத்து யோகாப்பியாசம் செய்வதற்குமுன், ஒவ்வொருநாசிகளிலும் செய்யும்போதெல்லாம் பாலுக்குப்பதிலாய் மூன்றுவிழுங்கு ஜலம் சாப்பிட்டு, யோகாப்பியாசம் செய்வதுண்டு. பிறகு காலை 6-மணிமுதல், ஒவ்வொரு நாசிகளிலும் சுவாசம் இழுத்து யோகாப்பியாசம் செய்யும்போதெல்லாம், மூன்றுவிழுங்கு பால்மாத்திரம் சாப்பிட்டு குடல் நிரம்ப வாயுவை (சுவாசத்தை=மூச்சை)ப் பூர்த்தியாய் உள்ளுக்கிழுத்து விழுங்கி மறுபடியும் அவ்வாயுவை வெளிவிடாமல் நிறுத்தி, எவ்வளவு எண்ணிக்கைவரையில் நிறுத்தவேண்டுமோ அவ்வளவு எண்ணிக்கைவரையில் நிறுத்தி முடிந்தவுடன் பிறகு, உள்ளே நிறுத்தியிருக்கும் வாயுவை (சுவாசத்தை) யெல்லாம் மறுபடியும் வெளிவிடாமல் அவ்வாயுவிலிருந்து நாலங்குலம் நீளமவ்வளவு வாயுவைமாத்திரம் வெளியில் விட்டு, மறுபடியும் அன் நாலங்குல வாயுவைமாத்திரமே உள்ளுக்கிழுத்து, மறுபடியும் அந்த நாலங்குல வாயுவைமாத்திரம் வெளியில் விட்டுக்கொண்டும், மறுபடியும் உள்ளுக் கிழுத்துக்கொண்டுமாய் இருந்து, மற்றவாயுவை யெல்லாம் குடலில் நிறுத்திவைத்து நிஷ்டையிலிருக்கவேணடும். மேற்சொல்லியதுபோல் வாயுவை குடலில் நிறுத்திவைத்தால் பசி வுண்டாகமாட்டாது. இதையே வாயுபக்ஷணை என்று (காற்றைப் புசிப்பதென்று) பெரியோர்கள் சொல்லுவார்கள். இந்த வாயுபக்ஷணைக்குத் திருஷ்டாந்தம் நம்மாழ்வார் வைபவத்தில் என்ன சொல்லுகின்றதென்றால். "செத்தத்தின் வயற்றில் சிறியது பிறந்தால், எத்தைத்தின்றெங்கே கிடக்கும்" என்று மதுரகவியாழ்வார் கேட்டனர், அதற்கு, "காணலோடிய காட்டில் சிறியது பிறந்தால் அத்தைத்தின்று அங்கே கிடக்கும்" என்று, நம்மாழ்வார் பதிலளித்தனர். இதன் கருத்து என்னவென்றால், வயற்றில் பசி எடுத்தால், எதைத்தின்று பசியாரவேண்டுமென்றாலோ, காற்றைத் தின்று பசியாரவேண்டுமென்பதேயாம். இந்நூலாசிரியர் மேற்சொல்லியதுபோல் பாலும், காற்றும் இவ்விரண்டும் சாப்பிட்டு யோகத்திலிருந்து கலைந்தவுடன் பகல் 12-மணிக்குப் பாதி ஆப்பிலும், (Apple) அதுபோல், இரவு பாதி ஆப்பிலும் மாத்திரமே ஆஹாரமாய் எடுத்துக்

கொண்டு யோகத்திலேயே இருந்து, அதில் தான் அனுபவித்த
தம் அனுபவங்களை எல்லாம் இதனடியில் வெளியிடுகின்றார் :—

இவர், பத்மாசனத்தில் உட்கார்ந்து யோகாப்பியாசம் செய்து
முடித்துச் சும்மாய் உட்கார்ந்திருக்கும்போது இவர் மனமானது
எங்கும் ஓடாமல், அசைவற நின்றிருக்கும் தீபம்போல் நின்றிருந்
தது. மனம் இவ்வாறு சும்மாய் நின்றிருக்கும் சமயத்தில் உண்டா
கிய ஆனந்தசுகம் இவ்வாறிருக்கின்றதென்று உங்களுக்குச் சொல்
லவும், அதை யோசித்து இந்நூலில் எழுதவும் ஸக்தியற்றவரா
யிருக்கின்றார். இப்படிப்பட்ட சுகத்தை இந்திராதி தேவதை
களும், பிரமதேவனும் கண்டிரார்கள். ஏனென்றால், அவர்கள்
ஓர் எண்ணத்தைக்கருதி விசேஷ புண்ணியங்களைச் செய்து தேவ
லோக பதவிக்குப் போனவர்களாதலால், அவர்களுக்கு ஊசி நுனி
அவ்வளவுமாத்திரமும் இச்சுகம் கிட்டமாட்டாதென்று ஸ்பஷ்ட
மாய்ச் சொல்லலாம். இவர்களின் புண்ணியம் இருக்கும் வரையில்
மாத்திரம் அவ்விடமிருந்து "க்ஷீணே புண்யே மர்த்யலோகம்
விஸந்தி" என்னும் கீதாவாக்கியரீதியாய்ப் புண்ணியம் முடிந்த
வுடன் மரணமடைந்து மறுபடியும் யோகியாய்வந்து பிறந்தால்
மாத்திரம் இந்தச் சுகத்தை அனுபவிப்பார்களே யொழிய மற்றப்
படிக்கு ஷை இந்திராதி தேவதைகளும் அனுபவிக்கமாட்டார்கள்
என்பதற்குச் சந்தேகமில்லை. எந்த பூஜைகளினாலும், ஜபங்களின
லும், தவங்களினாலும் இப்படிப்பட்ட சுகம் கிடைக்குமென்று இந்
நூலாசிரியருக்குத் தோன்றவில்லை. இதனால் என்ன யேற்படுகின்ற
தென்றால், யோகம் ஒன்றிற்கே மனதைநிறுத்த ஸக்தி உண்
டென்று இந்நூலாசிரியர் புத்திக்கு ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது.
யோகத்தில் இப்படிப்பட்ட மஹிமை இருப்பதனால்தான், ஸ்ரீ
கிருஷ்ணபகவான் யோகமே சிரேஷ்டமானதென்று சொல்லு
வதுமே யல்லாமல், மஹான்களாகிய பெரியோர்களும் யோகமே
சிரேஷ்டமானதென்று சொல்லுகின்றார்கள். இந்த யோகத்
தையே சமாதியென்றும் சொல்லுவார்கள். இந்தச் சமாதியிலிருக்
கும்போது இந்நூலாசிரியருக்கு இருந்தவைகளையெல்லாம் வெளி
யிட்டுச் சொல்லுகின்றார் கேளுங்கள் :—

யோகாப்பியாசம் செய்துமுடித்துச் சமாதியிலிருக்கும்போது
அவ்விடம் மனம் இல்லாமலிருப்பதனால் அச்சமயத்தில் இருந்தச்
சுகம் இப்படிப்பட்டதென்று சொல்ல சாத்தியமாகாதென்று
இதுவரையில் முன்னமே சொல்லியிருக்கின்றோம். அப்படிப்
பட்ட சுகத்திலிருக்கும்போது நாவரண்டிருக்கும். எச்சலை விழுங்க
விடாது. கண், வாய்களைத் திறக்கவிடாது. கைகால்களை அசைக்க
இச்சை இராது. மூச்சு ஆடுவதும், ஆடாததும் தெரியவராது.
யார் உரத்த சப்தத்துடன் பேசியபோதிலும் கேழ்க்கமாட்டா.
வெளிச்சத்தையும், மனிதர்களையும் பார்க்கவும் பேசவும் இச்சை
யிராது. எப்பொழுதும் ஏகாந்த இருட்டு அறையிலேயே இருக்
கும்படி எண்ணத்தை உண்டாக்கும். அன்னியர்களிடம் பேசி
னால் அச்சுகம் போய்விடுமென்று எண்ணி எப்படிப்பட்டவர்களா
யிருந்தபோதிலும் அவர்களிடம் பேச இஷ்டமிராது.

இவ்வாராக பத்மாசனத்தில் இருக்கும்போது சிலமணிநேரம்
இருந்து பிறகு, சுவற்றில் மணையும், தலையணையும் சாற்றி இருப்ப
தில் சாய்ந்து பத்மாசனத்திலிருக்கும் காலை நீட்டிக் கைகளைத்
தன்னிஷ்டம்போல் வைத்துக்கொண்டு சும்மாய் உட்கார்ந் திருந்த
போதிலும் அந்தச் சுகம் அப்படியே இருக்கும். இவ்வாறாக சில
மணிநேரங்கள் இருந்தபிறகு, சாய்ந்தபடியே இருந்து இடது
காலின்பேரிலாகிலும் அல்லது, வலது காலின்பேரிலாகிலும் கால்
மேல் கால்போட்டு இரண்டுகைகளின் விரல்களைக் கோர்த்து ஷை
முழங்காலில் மாட்டிப் பிகுமானமாய் உட்கார்ந்து ஷை தலையணை
யில் சாய்ந்துகொண்டு சிலமணிநேரம் இருக்கும்வரையிலும், அந்தச்
சுகம் அப்படியே இருக்கும். பிறகு, கைகளை முழங்காலில் கோர்க்
காமலே கால்மேல் கால்போட்டுச் சாய்ந்து சிலமணிநேரம் இருந்த
போதிலும் அந்தச் சுகம் அப்படியே இருக்கும். பிறகு, கால்களை
மாற்றி கால்மேல் கால்போட்டு உட்கார்ந் திருந்தபோதிலும் அந்தச்
சுகம் அப்படியே இருக்கும். பிறகு, இடது குதிக்காலை வலது
துடையின்கீழ்வைத்து, வலது பாத மணிக்கட்டை இடது முழங்
கால்மீது வைத்திருந்தபோதிலும் அந்தச் சுகம் அப்படியே இருக்
கும். இதையே வீராசனம் என்று சொல்லுவார்கள். பிறகு, குத்
துக் கால்களாய் உட்கார்ந்து முதுகிற்கும், குத்துக்கால்களுக்கு
யோகப்பட்டையை மாட்டி இரண்டு முழங்கைகளையும் ஷை குத்துக்
கால்களுக்கும், மார்புக்கும் மத்தியில் வைத்து இரண்டு கைகளின்
விரல்களைக் கோர்த்து உட்கார்ந்திருந்தபோதிலும் அந்தச் சுகம்
அப்படியே யிருக்கும். இதற்கு யோகப்பட்டை ஆசனமென்று
சொல்லப்படும். பிறகு, தனக்கிஷ்டம் எப்படியோ அதுபோல்
உட்கார்ந்திருந்தாலும்சரி ஷை சுகத்தில் எள்ளுமூக்கு நுனி அவ்

வளவுமாத்திர சுகமும் குறைவுபடாமலே இருந்துகொண்டிருக்கும். இந்நூலாசிரியர் மேற்சொல்லியவைகளைப்போல் உட்கார்ந்திருந்து அந்தச் சுகத்தை அனுபவித்தபடியால், அது விஷயங்களெல்லாம் இங்கு விவரமாய் எழுதநேர்ந்தது. இவ்வாறாக தன் இஷ்டம் போல் எப்படி உட்காரவேண்டுமென்று எண்ணி உட்காருகின்றார்களோ அதையே சுகாசனமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

பிராணாயாமமென்கிற யோகத்தில் இப்படிப்பட்ட மஹா மஹிமையாகிய சுகம், இருப்பதனால்தான் ஸ்ரீ கிருஷ்ணபகவான் யோகத்தைப்பற்றி மிகவும் சிரேஷ்டமாய்ச் சொல்லியதுமேயல்லாமல் சாஸ்த்திரங்களும் சொல்கின்றது. பெரியோர்களெல்லோரும் இப்படிப்பட்ட யோகசாதனையை அனுஷ்டித்துவந்து மேற்சொல்லிய சுகத்தில் சொக்கிஇருந்து இச்சுகத்தை எவர்களுக்கும் வெளியிடாமல் தம்வரையில் தாமே யனுபவித்துச் சென்றுவிட்டார்கள். சிலர், இச்சுகத்தை பாடல்களாய்ப்பாடிச் சென்றுவிட்டார்கள். ஆதலால், நாம் மானவஜன்மமெடுத்து இப்படிப்பட்ட சுகத்தை அடையாமல் விருதா காலங்கழித்துச் சென்று விடுவதனால் யாதொரு பிரயோஜனமும் இல்லை. இப்படிப்பட்ட சிறந்த யோக சாதனையை எல்லோரும் அனுஷ்டித்துவர இந்நூலாசிரியர் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய" நூலில், தம் அனுபவங்களையெல்லாம் உபதேசமாய்ச் சொல்லி வெளியிட்டிருக்கின்றார். இவர், இந்நூலில் சொல்லி யிருப்பதுபோல் நீங்களும் அந்த யோக சாதனையை அப்யசித்துவந்தால், அவ் வப்பியாசமுதிர்ச்சியினால் மேற்சொல்லிய சுகங்களை, இந்நூலாசிரியர் அனுபவித்து வருவது போல் நீங்களும் தப்பாமல் அனுபவிக்கலாம். யோகத்தின் மஹிமையினால்தான், மனம் கட்டுப்பட்டு சுக மனுபவிக்கவேண்டுமே யொழிய மற்ற எவைகளாலும் கட்டுப்படமாட்டாதென்று ஸ்பஷ்டமாய் இந்நூலாசிரியர் அனுபவத்தால் தெரியவருகின்றது. மனம் யோகத்தினால் கட்டுப்பட்டபிறகு உலகத்தில் அவர்களுக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை.

இப்படிக்கு,

பரமஹம்ஸ ஸச்சிதாநந்தன்

கடிகோட்டை, கடப்பை ஜில்லா.

முகவுரை.

ஸ்ரீ பக்தவிஜயம் கபீர்தாஸ் சரித்திரம்.

வேங்கடக்ருஷ்ண ஸ்ரீ நரசிம்ஹா வேதவல்லி மந்நாதா அங்கித
விடல பார்த்தசாரதீ ஹரிவரத ரகுநாதா ... 1
ஸ்ரீ ஹரிவிடல ஸ்ரீதரகேசவ சிதாநந்த ஸ்ரீராமா, மோஹ
ப்ராந்தியை போக்கிய ஸ்ரீ குருமூர்த்தி நீ குணதாமா ... 2
இருகைகளை இடும்பில்வைத்து சரணம் செங்கல்மேல், அக
ஹாரத்ருஷ்டியை நாசாக்ரத்தில் எல்லோருங் கண்டு ... 3
நீயே விநாயக ரூபங்கொண்டு சகலவித்தைகளையும் தந்து,
பாக்யஜனங்களுக்குதர்சனம்தந்துபந்தவிமுக்திசெய்து ... 4
குலதேவதை வேங்கடேஸ்வரனை கோரியஜித்தபின்பு, அல
மேல்மங்கா தாயை எப்போதும் ஸ்துதிசெய்து ... 5
பரமகுரு பார்த்தசாரதியை ப்ரணமங்கள்செய்து, திருவல்
லிக்கேணி வேதவல்லிக்கு தீர்க்கதெண்டங்களிட்டு ... 6
பரமகுருயென் ஹ்ருதயவாசனாய் பக்திகதைகளைசெய்வித்து
இரவும் பகலும் நித்யசுகத்தை மனதில்தான்காட்ட ... 7
வேறுபாஷையிலுள்ள கதைகளை வெளியிட தானினைத்து,
சரியாயதை தமிழ்ப்பாஷையில் தெரிவிக்க ரசியித்து ... 8
கனவான் ஹரிகீர்த்தனை தமிழ்நாட்டில் உபயோகித்து, மன
தில் பக்தர்களின் மஹிமைகளெல்லாம் விளங்கச் சொன்
னேன் ... 9

"பக்திர்ஜநி த்ரிஜ்ஞாநஸ்ய பக்திர்மோக்ஷ ப்ரதாயிநி."

ஈஸ்வர பக்தியில்லாமல் ஞானம் உண்டாகமாட்டாது. ஆதலால், உலகத்தில் அப்படிப்பட்ட பக்தி பிரபலமாவதற்காக இந்த கலியுகம் பரதகண்டத்திற்கு வடபாகத்தில் பகவதாஞ்ஞையைப்போல் லோகரக்ஷணார்த்தமாய் அவதரித்து, ஸ்ரீமன் நாராயண மூர்த்தியை சுவாதீனம் செய்துகொண்டு, மோக்ஷமடைந்த ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரத்தை வாசிக்கப்பட்டவர்களுக்கு இருதயத்தை மூடிக்கொண்டிருக்கும் பாமரத்வங்களெல்லாம் நீங்கி, பக்தி ஞானவைராக்கியங்களுண்டாய் இஷ்டார்த்தங்களெல்லாம் கைக்கூடி பக்தஜன கல்பத்ருவமென்று மஹாத்மாக்களால் சொல்லப்படுவார்கள். இந்த மஹா பக்த விஜயமென்னும் புராணரத்னம், ஆதியில் பண்டரீபுர நிவாசகரான யுத்தவதாசர் என்னும் பரிசுத்தசீலர் லோகோபகாரார்த்தமாய் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதிவைத்தனர்.

பிறகு கலியுகாதி 4372-ல், பிரம்மாம்சத்தில்வந்த நாபாஜி சித்தர் என்பவர் எழுநூறு பக்தர்களின் சரித்திரங்களை யதா ரீதியாய் ஹிந்துஸ்த்தானி பாஷையில் தத்துவார்த்தங்களுடன் சேர்த்து பக்திசாரம் என்னும் பெயரையுடைய கிரந்தத்தை எழுதி, விருத்த வசிஷ்டாதி முனிவரிஷ்டர்களுக்கு வாசித்துக் காட்டினார். பிறகு விருத்தவசிஷ்டர் நாபாஜி சித்தரிடம்கேட்ட சரித்திரங்களை எல்லாம் குவாலியர்பாஷையில் பக்திமூலமென்னும் பெயருடைய கிரந்தத்தை எழுதி தம் சிஷ்யர்களுக்கு உபதேசித்தார். பிறகு கலியுகாதி 4862-ல் மஹீபதிபாவா என்பவர் தத்துவவிஷயங்களை எல்லாம் நீக்கி சரித்திராம்சங்களை எல்லாம் கிரகித்து மஹாராஷ்ட்ரத்தில் பக்தவிஜயம், பக்தலீலாம்ருதம், ஸந்தவிஜயம், ஸந்தலீலாம்ருதம், என்னும் பெயர்களுடைய சரித்திரங்களை எழுதி, பிரசித்தி செய்வித்தார். பிறகு, கலியுகாதி 4890-ல், தக்ஷிணதேசத்தில் நிவசித்துக்கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணபாத யோகீஸ்வரர் என்பவர் நாபாஜிசித்தர் சொல்லிய எழுநூறு சரித்திரங்களிலுள்ள சமஸ்த சாராம்சங்களையும் எடுத்து அதற்கு வேண்டிய தத்வார்த்தங்களை மாத்திரம்சேர்த்து சமஸ்கிருத பாஷையில் பக்திதத்வசாரமென்னும் பெயருடைய சரித்திரத்தை எழுதிமுடித்தனர். இதன்மத்தியில் ஸ்ரீமான் மஹீசூரு தேசாதிபதிகளில் 21-வது அரசராய்வந்த ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் பஹதூர் தம்காலத்தில் மஹீபதி பாவாஎழுதிய சரித்திரங்களில் பக்தவிஜயமென்னும்சரித்திரத்தைமாத்திரம் கன்னடபாஷையில் எழுதிவைத்தனர். இது ஐவர்களின் சரித்திரங்கள். இப்போது கன்னடபாஷையிலிருந்து தமிழ்பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாய் வருகின்றது. இப்படிப்பட்ட சரித்திரங்கள் இதுவரையில் வெளிவந்ததில்லை. இவைகள் வெளியாகாதது மிகவும் லோபத்வமாயிருக்கின்றது. இப்போது வெளிவந்துவிட்டது. ஆதலால், இந்த ஐந்து சரித்திரங்களிலும் ஸ்ரீகபீர்தாஸ் சரித்திரம் சொல்லுகின்றோம். இதை வாசித்து ஒவ்வொருவரும் இதிலுள்ள சாராம்சங்களை எல்லாம் அறிந்து பக்திசெய்து வரப்பட்டவர்களுக்கு சகலபந்தங்களும் விமோசனமாய் நித்தியானந்த பதவிக்கு பாத்திரர்களாவார்களென்று அறியக்கடவீர்களாக.

பரமஹம்ஸ ஸச்சிதானந்தன்

கடிகோட்டை, வீரபல்லி போஸ்டு,
ராயசோடி தாலுக்கா, கடப்பை ஜில்லா.

விஷய அட்டவணை.

	பக்கம்.
ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம்	1
ஸ்ரீ சுகர் சிசுரூபமாய்ப் பூலோகத்திற்கு வருதல் ...	13
தமால், சுசிலையைக்கொண்டுபோய் வளர்ப்பது ...	19
தேவரம்பை பூலோகத்தில் அவதரிப்பது	23
சுன்னத் செய்யவந்த காஜிக்கும் கபீருக்கும் நடந்த தர்க்கம்	26
ஜிஜ்ஜாபீபீ கபீரை நெசவுத்தொழிலில் விடுதல் ...	35
பகவானுக்கு கபீர் வஸ்திரதானம் செய்தல் ...	38
பகவான் கபீருக்கு சகுணோபாசனம் உபதேசித்தல் ...	55
பகவான் மறுபடியும் பகீர் வேஷத்துடன் கபீரிடம்வருதல்.	67
கபீருக்கும் பகீருக்கும் நடக்கும் சம்வாதம்	72
பகீர் ஜிஜ்ஜாபீபியிடம் கோள்சொல்லித் தண்டித்தல் ..	91
பகவான் கபீருக்குத் தரிசனங் கொடுத்தல்	95
கபீர் இராமானந்த சுவாமிகளை ஆசிரயிக்கப்போகுதல் ...	113
இராமானந்தர் சிஷ்யர்கள் கபீரை அடித்துத் துரத்துதல்...	120
கபீர் மறுபடியும் இராமானந்தரிடம்போய் ஆசீர்வாதம் பெறுதல்	135
கபீர் இராமானந்தரிடம் தாரகமந்திரம் உபதேசம்பெருதல்	144
கபீர் மஹம்மது மதத்தை ஜயித்தல்	155
கபீர் கோரக்கை ஜயித்தல்	186
தமால் கபீருக்கு விவாஹம் செய்யப் பிரயத்தனப்படுதல் ...	222
கபீருக்கு விவாஹகஞ் செய்தல்	234
கபீர் கோயிம்சையை நீக்குதல்...	252
பசுங்கன்று தன்விருத்தாந்தங்களைக் கபீரிடஞ்சொல்லுதல்	268
இம்சை பாபமென்று புராணரூபமாய் உபதேசித்தல் ...	273
பகவான் கபீரை பரீக்ஷித்தல்	281
கபீர் தன் பாரியாளை துளசிதாசனிடம் கொண்டுபோய் விடுதல்	283
தமாலும் ஜிஜ்ஜாபீபியும் சத்கதி அடைதல்	300

பகவான் கபீர் சங்கீதத்திற்கு நர்த்தனம் புரிதல் ...	308
கோதுமை அரைப்படுவதைப் பார்த்து கபீர் துக்கப்படுதல்	311
துஷ்டர்கள் கபீரைப்பார்த்து குட்ரயுக்தி செய்தல் ...	327
பகவான் கபீர் ரூபமாய்வந்து சாதுசங்கத்தை ஆதரித்தல்	333
துஷ்டர்களுக்குக் கபீர் தத்துவோபதேசம் செய்தல் ...	351
கபீர் தன் பாரியாளை வர்த்தகனிடம் கொண்டுபோய் விடுதல்	356
கபீர் குடும்ப சகிதமாய்ப் பண்டரீபுரஞ் செல்லுதல் ...	382
பகவான் அனுக்கிரகத்தினால் கபீருக்குச் சந்தானமுண்டாகுதல்	398
கமால் தீர்த்தயாத்திரை செய்தல்	406
கமால் தன் சிரசைச் சாது சந்தர்ப்பணைக்காகக் கொடுத்தல்	441
கபீருக்கும் ரோஹிதாசுக்கும் வாதம் உண்டாகுதல் ...	464
விஷ்ணுமூர்த்தி, கபீர் ரோஹிதாசுகளை சமாதானஞ் செய்தல்	493
கோரக் இரண்டாவதுமுறை கபீரிடம்வந்து தோல்வியடைதல்	505
பகவான் கபீரை பரமபதம் வரும்படி ஆஞ்ஞை செய்தல்...	525

மான்தோல்மீது உட்கார்ந்து ஜபம்செய்வதனால் உண்டாகும் பலன்.

ஓ சகோதரி! சகோதரர்களே!

யார், ஸந்தியாவந்தனம் அல்லது ஜபம், பூஜை, செய்து வந்தபோதிலும், மனை (பலகை)மேல் மான்தோல்போட்டு அதன்மேல் வெள்ளை வேஷ்டி மடித்துவிரித்து நிஷ்காம்யமாய் ஜபம்செய்ய வடக்குமுகமாய் உட்கார்ந்து, ஜபம் செய்துவரவேண்டும். அப்படிக்குச் செய்யாமல், பூமியின் மீதோ மனை (பலகை) யின்மீதோ அல்லது, வேஷ்டியின் மீதோ உட்கார்ந்து ஜபம்செய்துவந்தால், ஜபத்தின்பலனை, ஊசியைக் காந்தம் இழுத்துக் கொள்வதுபோல் பூமி புருஷன் செய்யும் ஜபத்தை இழுத்துக்கொள்ளும். மான் தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்துவந்தால், ஜபத்தின் பலனை பூமி இழுத்துக்கொள்ள சக்தியிராது. ஆதலால், மான்தோல்மீது உட்கார்ந்து ஜபம்செய்யவேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லியிருக்கின்றார். மான்தோல் மீது உட்கார்ந்து ஜபம் செய்யவேண்டுமென்று, ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லிய ரஹஸ்யம் இதுவேயாம். இந்த ரஹஸ்யம் குருவினால் தெரிந்துகொள்ளும்பொருட்டு, ஸ்ரீ கிருஷ்ண பகவான் வெளிப்படுத்தவில்லை; அப்படிப்பட்ட குருரஹஸ்யம் உங்களுக்கு இந்நூல் மூலமாய்த் தெரிவித்தோம். மான்தோலில், எந்தத் தோலாயிருந்தபோதிலும் சரி. அதன்மேல் உட்கார்ந்து ஜபம்செய்யலாம். புள்ளிமான் தோலே வேண்டுமென்பது அனுவஸ்யம். மான்தோல் அநேக இடங்களில் கிடைக்கமாட்டா. ஆதலால், ஸந்தியாவந்தனம், ஜபம், அல்லது பூஜை செய்து வரப்பட்டவர்களுக்காக ஸ்ரீசுவாமிகள் கடப்பையில், மான்தோல் விற்பனை செய்ய லோகோபகாரார்த்தமாய் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்; இந்தியாவிற்குள் மான்தோல் வாங்கப்பட்டவர்கள், ஒவ்வொருதோலுக்கும் ரூபா. **5-0-0** முன்னதாய் அடியிற்கண்ட விலாசத்திற்கு மணியார்டர் மூலமாய் அனுப்ப வேண்டும். பினாங்கு, சிங்கபூர் முதலாகிய அந்நியதேசங்களி

னுள்ளவர்கள் மான்தோலுக்காக ரூபா. **6-0-0** சரியான அவர்களின் விலாசத்துடன் கடிதமும், மணியார்டரும் அனுப்பவேண்டும். போஸ்டல் ஆர்டர் அனுப்பவேண்டாம். மேற்படி தோல், வீ. பீ. மூலமாய் அனுப்புவதில்லை. ரூபா அனுப்பியவர்களுக்கு எந்த சிலவுகளும் இல்லாமல் தபால் மூலமாய் மான்தோல் ரிஜிஸ்டர்செய்து அனுப்பிவிடுவார்கள்.

ஐயா! மானைக்கொன்று அதன் தோலை எடுத்தல்லவோ பூஜை அல்லது, ஜபம் செய்யவேண்டும். அது, பாபமான காரியமல்லவா என்று, சிலபுருஷர்கள் நினைக்கலாம். அது, பாபமான காரியமல்ல. ஏனென்றால், உலகத்தில் அனேக மான்களைக்கொன்று தம் ஜீவனத்திற்காக அதன்தோலை விற்பனைச்செய்கின்றார்களேயொழிய, புருஷன் ஜபம் செய்வதற்காகக் கொல்லப்பட்டவைகளல்ல. அம்மான்களில் எந்தமான் விசேஷ புண்ணியம் செய்திருக்கின்றதோ அம்மான்தோல் மாத்திரம் பூஜை அல்லது, ஜபம் செய்யப்பட்டவர்களுக்கு வருமேயொழிய மற்றவர்களுக்கு வரமாட்டா. இம்மான் தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்வதனால் அந்த ஜபத்தின் பலன் மேற்படி மானுக்கும் கிடைத்து அது, எந்த ஜன்மத்தை அடைந்திருந்தபோதிலும் அந்தச் ஜீவன் ஞானத்திற்குரிய சாதனங்களையே செய்துவரும். புண்ணியம் செய்யாத மான்களுக்கு இப்படிப்பட்ட சுகுர்தம் உண்டாகவேமாட்டா. புண்ணியம்செய்யாத மான்களின் தோல் கார்பெட்பாக்ஸ், பாதரக்ஷை வார், மேல்பட்டைகள் தைக்கவும், பாமரஜனங்கள் உட்காரவும், படுக்கவும் உபயோகப்படும். இப்படிப்பட்ட காரியங்களினால் அம்மான்களின் ஜீவன் யாதொரு ஞானமார்க்கத்தையும் அடையமாட்டாதென்று அரியக்கடவீர்களாக.

மான்தோல் விற்பனை செய்யும் விலாசம்:—

காயல, வெங்கடசாமி.

நாகராஜ பேட்டை, கடப்பை ஜில்லா.

Kayala. Venkatasawmy,

Nagarajapet, **Cuddapah.**

கடப்பையிலும், கடிகோட்டையிலும் மடாலயம் கட்ட

பொருள் உதவிசெய்த கனதனவான்களின் ஜாபிதா.



ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர் பாதக்குரடு படம்.

உலகத்திலுள்ள மானவ ஜனங்களெல்லோரும் எந்த ஸாஸ்த்திரங்களையும் வாசிக்காமல் ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் சொல்லியிருக்கும் யோகாப்பியா

சம், சிவராஜயோகம், பஞ்சாக்ஷரம் முதலாகிய இன்னும் அனேக ரகஸ்யங்களை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் ''ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்'' நூலில் எழுதி, எட்டுபதிப்புகள் விற்பனையாய் இப்போது ஒன்பதாம் பதிப்பு வெளிவந்திருக்கின்றது.

இந்நூலாசிரியராகிய மேற்படி யோகீசுவரர் தேச சஞ்சாரார்த்தமாய்ப்புறப்பட்டு, தஞ்சாவூர் மதுரை கோயம்புத்தூர் நீலகிரி சேலம் முதலாகிய ஜில்லாக்களும், அதைச் சார்ந்த தாலூக்கா கிராமங்களும் சென்று, அங்கங்கு வேதங்களிலுள்ள தேவ ரஹஸ்யங்களையும், யோகாப்பியாசம் செய்யவேண்டிய வழியையும், ராஜயோகம் செய்யும் ரஹஸ்யங்களையும் உபந்யாச மூலமாயும், உபதேச மூலமாயும் எளியனடையில் தெரிந்துகொள்ளும்படி உபதேசித்து, நமது முன்னோர்கள் மிகவும் ரஹஸ்யமாய் வைத்திருந்த வேதாந்த ரகஸ்யங்களையெல்லாம். வெட்டவெளியாய் உபந்யாசம் செய்துவந்தனர். அச்சமயம் கோயம்புத்தூர் ஜில்லா, தாராபுரம் தாலூக்கா, கண்மலியம்பட்டி, இன்னும் அதைச்சார்ந்த சில கிராமத்திலுள்ள ஸ்திரீகளும் புருஷர்களும், தம்தம் கிராமங்களுக்கும் வரவேண்டுமென்று இந்நூலாசிரியரை அழைத்துக்கொண்டுச் சென்றார்கள். மேற்சொல்லிய கிராமத்தில் பழணிசாமி கவுண்டர் பார்யாள், ஸ்ரீமதி சௌபாக்கியவதி செல்லம்மாள் மேற்படி சுவாமிகளால் இயற்றிய நூல்களை இதற்குமுன் வாசித்து ஆனந்தமடைந்திருந்தபடியால், மேற்படி சுவாமிகள் தம் கிராமத்திற்கு எழுந்தருளியதற்காக மிகவும் சந்தோஷமடைந்து சகல உபசாரங்களும் செய்து, எதிரில் காட்டியிருக்கும் இறநூறு ரூபா எடையுள்ள வெள்ளிப்பாதக்குறட்டை செய்வித்து, 1923ஞு மார்ச்சிமீ 13உயில் ஈசுவரார்ப்பணமாய்ச் சமர்ப்பித்தார்கள்.

ஆதியில், ருஷிகளும் சக்ரவர்த்திகளும் அரசர்களும், ஆசா பாசங்களையெல்லாம் அறுத்து மனோவேகத்தை அடக்கி, ஜீவாத்மாவை பரமாத்மாவில் ஐக்கியம் செய்ய எண்ணி, தம் ராஜ்ஜியங்களைவிட்டு மனித சஞ்சாரமில்லாத கானகம் (காடு) சென்று விட்டதுபோல், இந்நூலாசிரியராகிய மேற்படி சுவாமிகள் கடப்பையைவிட்டு, கடப்பைக்கு நாற்பது மையில் தூரத்திலிருக்கும் கடிகோட்டை யென்னும் நான்கு மலையடிவாரம் மத்தியில் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். அங்கு ஓர் மடம் கட்டி அதில், ஸ்ரீ ஏகாம்பரீசுவரரை பிரதிஷ்டை செய்யப்போகின்றார்கள். மேற்படி கடிகோட்டை யென்னும் மலையடிவாரத்திற்குப்போக சரியான பாட்டை இல்லாததனால், சென்னைக்கு வடக்கு 140-மையில் தூரத்திலிருக்கும் நந்தலூர் என்னும் ரெயில்வே ஸ்டேஷனில் இருந்து கடிகோட்டைப் போக 17-பதினேழு மையில் தூரம் பாட்டை போடுவதற்கும், மடம் கட்டுவதற்கும் ரூபா வேண்டும். ஆதலால், இக்கட்டட தர்மத்திற்கு பொருளுதவிசெய்யும் ஸ்திரீகளும், புருஷர்களும் அடியில் கண்ட ஸ்ரீ சுவாமிகளின் விலாசத்திற்கு மணியார்டர் மூலமாய் ரூபா அனுப்பினால் அவர்களின் பெயர்களையெல்லாம் ரிஜிஸ்டர் செய்து பத்தாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய"த்திலும், ஐந்தாம் பதிப்பு "ஸ்ரீ பகவத் கீதை"யிலும், நான்காம் பதிப்பு "ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திர"த்திலும் சேர்க்கப்படும்.

ரூபா அனுப்பவேண்டிய விலாசம்:—

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்
கடிகோட்டை, வீரபல்லி போஸ்டு.
ராயசோடி தாலூக்கா, கடப்பை ஜில்லா.

இவ்விலாசத்திற்கு அனுப்பலாம்.

பொருளுதவி செய்தவர்களின் ஜாபிதா.

கடிகோட்டை மலையடிவாரத்தில் ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரர் மடாலய கட்டடம் கட்ட இந்தியாவிலுள்ளவர்களும் சிலோன், இரங்கூன், பினாங்கு F. M. S. சிங்கப்பூர் முதலாகிய அன்னிய தேசத்திலுள்ளவர்களும் பொருளுதவி செய்த, புண்ணிய ஸ்திரீ புருஷ தர்மாத்மாக்களின் ஜாபிதா.

1923௵ மார்ச்சு௴ முதல்
1927௵ செப்டம்பர்௴ 5௳ வரையில் வந்த
வரவுகள்.

		ரூபா.
1	கடிகோட்டை மடாலயம் மதில்சுவர் கட்டுவதற்காக, நா. நாகமுத்து சேதுவாரயர், வங்குகாரேட்டு, 15-ஆ, கட்டை, கோலாலம்பூர். F. M, S. இனாஷார் மூலமாய் கடிகோட்டைக்கு அனுப்பிய ரூபா	300
2	K. தம்பய்யா, சேண்டாங்கட்டை நல்லூர், யாழ்ப்பாணம் (Jaffna) இவர் கடிகோட்டைக்கு நேரில் வந்து கட்டடவேலைக்காக கொடுத்த ரூபா ...	130
3	V. Ethirajulu Naidu, 11th, Thalvala Chall, Front of Mahadeve Temple, Thana Post, Bombay, மேற்படியார் பொம்பாயில் வசூல்செய்து அனுப்பிய ரூபா	100
4	பெரியதேசாசாரி, சின்னதேசாசாரி, குண்ரூஜ குப்பம், நகரிபோஸ்டு	60
5	M. S. Lazarus, Confectioner, Robertsonpet, K. G. F.	50
6	Ramasawmy Fandithar, G. Arimoetoe Goiffeur No. 85, Senen Weltevreden, Batavia (Java)...	50
7	M. S. சீனிவாச அய்யர், அஸிஸ்டெண்டு பார்சல் கிளர்க்கு G. I. P. Ry. விக்டோரியா டர்மினஸ், பாம்பே. மேற்படியார் பொம்பாயில் வசூல் செய்து அனுப்பிய ரூபா	45
	Carried over. Rs.	735

No.	Name	ரூபா.
	Brought-forwad.	785
8	R. M. P. R. R. M. Venkataramraja, Myaungmya Bassein...	43
9	T. R. நாராயணசாமி பிள்ளை, போஸ்ட் மாஸ்ட்டர், கொடுமுடி	25
10	செ. துரையப்ப. வாகூன்பஜார் ரோட்டு, Telukanson F. M. S...	25
11	Rustonji Fardanji, Contractor, Dahod ...	25
12	Edalji Rustonji, Fanibanda Excise Contractor, Baroda	25
13	Sir Manubhai N. Mekta, K. C. S. I. Diwan Saheb Baroda State	25
14	Lhambay Krishnajee Row, Munkojee Row, Naicknoor Hill, Via Vellaguttai Post ...	20
15	T. G. Narayana Iyar, Sirunallai Villrge, Palghat, S. Malabar	20
16	சீதாலக்ஷ்மியம்மாள், இராஜம்மாள், 48-40-வது, தெரு ரங்கூன்	20
17	சி. ரு. பொன்னுசாமி, coy, Q. V. O. Mardas & S. M.	20
18	Miscellaneous Subscriptions From Baroda City through K. N. Subbramaniya Mudaliar ...	20
19	K. S. Loganatha Reddy, Kavanur Village, Arkonam Post	16
20	S. ராமசாமிஸர்மா, காளிமுத்தன் வீதி, Sivaganga, Ramnad Dist	15
21	G. R. கிருஷ்ணராவ், மீனாக்ஷிபுரம் ஸரஸ்வதி ஸ்கூல் மானேஜர், மதுரை	15
22	P. S. தங்கவேலு முதலியார், P. மாணிக்கம் பிள்ளை M. & S. M. ரயில்வே, அரிசிக்கரை ...	15
23	சிவானந்தன், பச்சபாளையம், திரிச்சங்கோடு தாலுக்கா	15
	Carried over. Rs.	1079

No.	Name	ரூபா.
	Brought forward.	1079
24	ஜமேதார் சக்கரபாணி Q.V.O. M.&S.M. பெங்களூர்	15
25	S. முத்துகுமாரசாமி 94 சன்னதி தெரு திருப்பாபுலியூர்	13
26	K. R. ராமசாமி, P. K. P. S. Firm, சேக், Upper Burma	11
27	பூ. நா. சு. குப்புசாமி அய்யர் அண்டு சன்ஸ், சீதாராமையர், மதுரை	10
28	இராமானுஜன், பச்சபாளையம், திரிச்சங்கோடு தாலுக்கா	10
29	இ. இராமசாமி செட்டி, மேளியப்பள்ளி, திரிச்சங்கோடு தாலுக்கா	10
30	இ. மு. பழனிவேல் கவுண்டன், குட்டிக்காபாளயம், திரிச்சங்கோடு தாலுக்கா	10
31	இராகவராமானுஜர், பண்ணைபாளயம், திரிச்சங்கோடு தாலுக்கா	10
32	சின்னய்யா கவுண்டன், பூலாங்காடு, திரிச்சங்கோடு தாலுக்கா	10
33	இ. மு. குலசேகரன், பண்ணைகுத்திபாளயம், திரிச்சங்கோடு தாலுக்கா	10
34	மேற்படியார் தம்பி இ. மு. கேசவன் ...	10
35	செ. மு. சோமசுந்திரம் செட்டியார், ரைஸ்மில், திண்டிவனம்	10
36	T. S சுப்பய்யகோனார், பழயசன்னதி தெரு, திருநெல்வேலி ஜில்லா	10
37	K. ராமசாமி. இண்டியன் ஸ்டேஷன் ஆஸ்பத்திரி, மேமியோ, இரங்கூன்	10
38	V. அமுர்தம்நாயுடு, 16-பீச்சரோட்டு, கொளம்பு, சிலோன்	10
39	S. காளியப்பபிள்ளை, 76 பீச்சரோட்டு, கொளம்பு, சிலோன்	10
40	S. T. P. சிதம்பரம் பிள்ளை, தேவகோட்டை ...	10
41	C. அருணாஜலம் பிள்ளை, பென்ஷன் போலீஸ் கானிஸ்டேபில், ஆஸ்பத்திரி தெரு, முத்துப்பேட்டை, தஞ்சாவூர் ஜில்லா	10
	Carried over. Rr.	1268

ரூபா

Brought forward. 1268

42 லக்ஷ்மிநாராயணன், சிந்தலபட்டடை, நகரி போஸ்ட்டு 10
43 தர்மம்மாள், 48-40-வது தெருவு, இரங்கூன் ... 10
44 நெ. 2143, கிருஷ்ணசாமி முதலியார், 2-கம்பெனி, கன்னிகோவில் தெருவு, இராயவேலூர் ... 10
45 S. R. ராமய்யா முதலியார், வீரகொளம்பத்தூர் கிராமம், தென்காசி, திருநெல்வேலி ஜில்லா ... 10
46 லக்ஷ்மண முதலியார், நெ. 2-கம்பெனி E. டிவிஷன், ஜண்டலா, N. W. F. F. 10
47 K. V. முனுசாமி நாயுடு பினங்கு சென்றபோது இந்தியாவிலிருந்து 5-1-24-ல், பினங்குவந்து சேர்ந்த ரூ. 10
48 P. S. தங்கவேலு முதலியார், வொர்க் மேஸ்த்திரி, M. & S. M. Ry. அல்னுவர் போஸ்ட்டு, தார்வார் ஜில்லா 10
49 K. நடேசம்பிள்ளை, கிளர்க்கு. தாலுக்கா போர்டு ஆபீஸ். பெரம்பலூர், அரியலூர் போஸ்ட்டு ... 10
50 M. S. சீனிவாச அய்யர், அசிஸ்டென்டு பார்சல்கிளர்க்கு, G. I. P. Ry. விக்டோரியா டர்மினஸ் ஸ்டேஷன், பொம்பாய் 10
51 முத்துகிருஷ்ணன் பிள்ளை No, 2652 P. Du; சிக்நெல், Quetta 10
52 லக்ஷ்மண முதலியார், வீரகளம்பத்தூர் போஸ்ட்டு, தென்காசி தாலுக்கா 10
53 P. மாரிமுத்து நெ. 104, F. M. S. Ry. தைபிங் ... 10
54 A. M. வீரய்ய பண்டிதர், வைத்தியம், நெ. 2, Kuala Kettil, Keddah F. M. S. ... 10
55 V. A. கோவிந்தராஜுலு முதலியார், பட்டாணி வர்த்தகம், சின்னகடை, நெல்லூர் ... 10
56 மேற்படியார் 3-5-25ல் இரண்டாம்முறை கொடுத்தது 10
57 K. தில்லையம்பலம், Raub. Pohang, F. M. S. ... 10

Carried cver. Rs. 1428

ரூபா.

Brought forward. 1428

58 R. நாராயணசாமி அய்யர், Forester, பாலசமுத்திரம், அட்டகோட்டை போஸ்ட், பழனி ... 10
59 K. தம்பையா, P. W. D. Nuwara Eliya, Ceylon... 10
60 சின்னமலை கங்காணி, Sungei Puloh Estate, Kuala Selangor, F. M. S. 10
61 ஆ. இ. கு. கோவிந்தசாமி ராஜா, ஸ்ரீரங்கம், திருச்சினாப்பள்ளி 10
62 மு. ரு. செ. ரா. வன்னியப்ப செட்டியார், கண்டரமாணிக்கம், ராமநாதபுரம் ஜில்லா ... 10
63 முத்து. பெரி. முத்துராமஞ் செட்டியார், மிதுலைப்பட்டி ராங்கியம் போஸ்ட்டு புதுக்கோட்டை ஜில்லா ... 10
64 தெ. மு. கருப்பஞ்செட்டியார், ஆற்பநாதபுரம், ஆவடையார்க்கோவில் போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா ... 10
65 அ. சு. ப. சோமசுந்திரம் செட்டியார், மிதுலைப்பட்டி, ராங்கியம் போஸ்ட்டு, புதுக்கோட்டை ஜில்லா ... 10
66 ப. ரா. வெ. கி. வீரய்யஞ் செட்டியார், அறந்தாங்கி போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா... ... 10
67 A M. பொன்னுசாமிராஜா, தெற்குத்தெருவு, ராமனாதபுரம் 10
68 M. அப்பாதுரை உபாத்தியார், Anglo Chiresean School, Singapore 10
69 T. ராஜா, சர்வே ஆபீஸ் Seramban, British Malaya 15-Shillings Postal order... ... 10
70 K. தம்பையா, P. W. D. Nuwara Eliya, Ceylon 10
71 சிவன்மலை கங்காணி, Sungei Buloh Estate, Kula-S langor F. M. S. 10
72 ஆ. இ. கு. கோவிந்தசாமிராஜா. ஸ்ரீரங்கம், திரிச்சினாப்பள்ளி ஜில்லா 10

Carried over Rs. 1578

		ரூபா.
	Brought forward.	1578
73	மு. ரு. செ. ரூ. வன்னியப்ப செட்டியார், கண்டரமாணிக்கம், ராமநாதபுரம் ஜில்லா ...	10
74	முத்து. பெரி. முத்துராமஞ்செட்டியார், புதூர், கண்ணங்குடி போஸ்ட்டு, ராமநாதபுரம் ஜில்லா ...	10
75	தெ. மு. கருப்பஞ்செட்டியார். ஆற்பநாதபுரம், ஆவுடையார்கோவில் போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா ...	10
76	அ. சு. ப. சோமசுந்திரம் செட்டியார் மிதுலைப்பட்டி, ராங்கியம் போஸ்ட்டு, புதுக்கோட்டை ஜில்லா ...	10
77	ப. ரூ. வெ. கி. வீரய்யஞ் செட்டியார், அறந்தாங்கி போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா ...	10
78	A. M. பொன்னுசாமி ராஜா, South Street, Ramnad, Pamban Branch	10
79	V. அப்பாதுரை உபாத்தியாயர், Anglo Chirestan Sch ol, Singapore	10
80	கு. சி. செ. ச. சிதம்பரம் செட்டியார், அமராவதி பாளையம், பொன்னுக்காளிப்பாளையயபோஸ்ட்டு (Via) திருப்பூர், கோயம்புத்தூர் ஜில்லா	10
81	K. S. K. S. வேலாயுதம்பிள்ளை, Alvay, North Point Pedro. P. O. Ceylon	10
82	P. Marimuthu, Porter, Railway statio , Matang Road, Mataxg Post, Via Taiping F. M. S. ...	10
83	P. Marimuthu, Porter, No. 1015, F. M. S. Railway, Parit, Buntar, F. M. S. ...	10
84	S S. Arunachalam Iyer, Sathanoor, Villupuram Taluq, Gudalur Dist.	10
85	M. Narasima Naick, Nazir, Bhad, Mysore ...	10
86	K. Munisawmy Raj, Koracharapalayam, Bangalore City	10
87	லெ. ராமசாமி, காவனூர்	10
	Carried over,	Rs. 1728

		ரூபா
	Brought forward.	1728
88	W. V. Naidu, Chief Auditor, G. B. S. Ry. Goyagate, Baroda	10
89	Pestomji, F. Contractor, near Station, Baroda...	10
90	A. K. Savant, Goyagate, Baroda ...	10
91	Piroj Shah, P. Contractor, Baroda ...	10
92	V. K. Doraisawmy Moodr; Vandipalayam, Thorapadi, Vellore	10
93	G. Sundara Row, Thiruvaiyar, Tanjore Dist ...	10
94	K. தில்லையம்பலம், Raub, Pahang F. M. S. ...	10
95	அகிலாண்டம்மாள், தோரூர் கிராமம், நாமக்கல் போஸ்ட் சேலம் ஜில்லா	8
96	Rao Bahadur E. A. Ghotge, Police Commissicner, aroda State	7
97	வடிவாம்பாள், பினாங்கு சென்றபோது இந்தியாவிலிருந்து 5-1-24-ல், பினாங்கு வந்த ரூபா ...	6
98	S. சிதம்பரம் பிள்ளை, Asst. Statio Master, S. I. R. Punalur Post, Travancore ...	6
99	R. சிங்கார முதலியார், அசிஸ்டெண்டு ஸ்டேஷன் மாஸ்டர், M. & S. Ry. ராமகிரி	5
100	நெ. 3986, முனியப்பன் சிப்பாய் C. I. கமபெனி, சிக்னல் ஸெண்டர் டிப்போ, ஜப்பல்பூர் ...	5
101	வீராசாமி, டாடா பங்களா, கல்யாண் ...	5
102	சீதாமுத்துப்பிள்ளை, ஸன்றி ஷாப்பு நெ. 29, மார்க்கெட் தெருவு, பினாங்	5
103	S. கணபதி, ரெயில்வே ஸப் அசிஸ்டெண்டு இஞ்சினீர், மூப்பன், மோல்மின்	5
104	2148, சாபர் கிருஷ்ணசாமி, 2 கம்பெனி, டாரா இஸ்மால்கான், வஜிரிஸ்டான்	5
105	மாயாண்டிப் பிள்ளை குமாரன் சிதம்பரம் பிள்ளை, தெற்குத்தெருவு, சோளவந்தான் போஸ்ட், மதுரைஜில்லா	5
	Carried over.	Rs. 1860

ரூபா

Brought forward. 1860

106 M. வாசுதேவன், டாடா பங்களா கல்யாண ... 5
107 வேயர், லெ. 7, சர்வே பார்ட்டி, சிவகங்கை, ராமநாத புரம் ஜில்லா 5
108 சிக்னல் லெ. 2148, கிருஷ்ணசாமி, B. டிவிஷன் சிக்னல் ஸெக்ஷன், Quetta 5
109 P. T. லக்ஷ்மண நாயுடு, மடன் மர்ச்செண்டு, கீழ்வாசல், தஞ்சாவூர் 5
110 N. A. பொன்னுராஜா, தெற்குத்தெருவு, ராமநாதபுரம் 5
111 P. S. தங்கவேலு முதலியார், F. M. S. Ry. Alnavar Post, Dharwar Dist. 5
112 அ. நா. பொன்னுசாமி ராஜு, தெற்குத்தெருவு, ராமநாதபுரம், வி. அழகிய நாகலிங்கம் பிள்ளை வரவு ... 5
113 டையார் மூலமாய் வையூர் S. தெய்வநாயகம் பிள்ளை வரவு 5
114 A. N பொன்னுராஜா, தெற்குத்தெருவு, ராமநாதபுரம் 5
115 T. P. லக்ஷ்மண நாயுடு, மடன் மர்ச்சண்டு, கீழ்வாசல், தஞ்சாவூர் 5
116 P. S. தங்கவேலு முதலியார், F. M. S. Ry. Alnavar Post, Dharwar Dist 5
117 V. அழகிய நாகலிங்கம் பிள்ளை, Pamban Branch, Ramnad 5
118 S. தெய்வநாயகம் பிள்ளை, வையூர் ... 5
119 K. S. கந்தப்ப கவுண்டர், கூகலூர் போஸ்ட்டு, கோபி செட்டி பாளயம் தாலுக்கா 5
120 M. வீரபத்திர முதலியார், 2nd Grade Clerk No, 10 Fld, Company, Q. V. O. M. & S. M. Razmak, Waziristan 5
121 சிதம்பரம் பிள்ளை, தெற்குத் தெருவு, Sholavandan Post, Madura Dist 5

Carried over. Rs. 1940

ரூபா.

Brought forward. 1940

122 G. Viresalingam Pantulu, Sub Registrar, Cocanada, Godavari Dist 5
123 M. S. P. Menens, 9th Company, Manzai, W. F. Force 5
124 K. Ganapathi Pillay, Govt. Hospital, Kuala Kangsor F M. S. 5
125 L. D. Hanumantha Rao Manay H. S. Q. Mysore, Hebbel Post, Bangalore ... 5
126 S. K. I. Kandiah Pillay, 215, Cal Street, Kandy (Colombo) 5
127 K. Ganapathi Pillay, Govt. Hospital, Kuala Kangsor. F. M. S. 5
128 அ. ப. ருமலிங்கம், சதுர்வேதமங்கலம் ... 5
129 கா. சி. சோ. சோமசுந்தரம் 5
130 S. Sidyah, alias Kuttiah, Chelversankapal ... 5
131 K. N. Doraisawmy Mudaliar, 5, Thandavaraya St., Sowcarpet, Madars 5
132 Belgula jatti, Mysore 5
133 Swami Bhakta, Baroda 5
134 Hargovindas, Gordhandas Shab, Coach Factory, Baroda 5
135 Kodarlal Raichand, Coach Factory, Mistri Baroda 5
136 Majar Ganapatrao, Nimbalker Camp, Baroda ... 5
137 Kaji Abdul Latif, Palace Engineer, Shivabag, Baroda 5
138 Damodar Bhai, Motar Driver, Guest House Baroda 5
139 European Guest House Staff, Baroda ... 5

Carried over. Rs. 2030

ரூபா.

Brought forward. 2030

140 R. B. Shastri. Private Secretary to Diwan Sahab, Baroda 5
141 Sakarlal J. Thakar, Diwan, office, Baroda ... 5
142 Thakore Pratapsingji Baqnsingji Swasthan, Aglod 5
143 Abdul Rajak, Painter, Camp Baroda ... 5
144 P. V. Kamdar, Stores Superintendent G. P. S. Ry. Goyagate, Baroda 5
145 Purushottam Pannachand, Contractor P. W. D. Bajwada, Hanumampole, Baroda ... 5
146 ஸ்ரீ ராமபஜனை மந்திரம், Barr Lines, BangaloreCity 5
147 Inamdar Amarsing, Barote, North Gujrat Pattan 5
148 Fatehsing Dipsingji, Kanjri, Thakore, Baroda... 5
149 Patel Brothers, Sayajigamy Baroda ... 5
150 Lalloo mulji, Contractor, Leather goods, Pimpla Gate, Baroda 5
151 Magan Bhai, Shanker Bhai, P. W. D. Contractor, Baroda 5
152 Pawaskar Brothers, Goldsmiths, Dandia Bazaar Road, Baroda 5
153 D. B. Shukla, Engineer, G. B. S. Ry. Goyagate, Baroda 5
154 Bhailal Bhai Daji Bhai, Amin Alembie Chemical Works, Baroda 5
155 Shantilal Chimaulal, Olempia Cinema, Baroda 5
156 Rustomji Jamsetji, Contractor, Jubeli Bag. Baroda... 5
157 Ganpat, Narottam Electric Maistri, G. B. S. Ry. Goyagate, Baroda 5
158 Pannalal Hirachand, Cloth merchant, Ruopma Road, Baroda 5

Carried over. Rs. 2125

ரூபா.

Brought Forward. 2125

159 Sheth Chimanlal Motilal, Samal Becharwala, Baroda 5
160 Chimanlal Maneklal, Badshah Ahmedabadi Pole, Baroda 5
161 Chhotalal, B. Patel Sayaji Iron Works, Baroda 5
162 Girdharlal Dosabhai Parikhi, High Court Pleader, Baroda 5
163 Gauri Amma, Tanjavar wala, Baroda ... 5

Total, Rs. 2150

1927ஆம் செப்டம்பர்மீ 6உ முதல் 1928ஆம் ஜனவரிமீ 1உ வரையில் வந்த வரவுகள்.

ரூபா.

1 நெல்லூர், தாமரமடுகு சுப்பராம செட்டியார் வசூல் செய்து அனுப்பிய ரூபா 166
2 63rd Field Company, Q. V. O. Madras & M. Baghdad இக்கம்பெனியில் ஜமேதார் குப்புசாமி வசூல் செய்து அனுப்பிய ரூபா ... 120
3 V. சிங்காரவேலுமுதலியார், Sub Dvl Officer, Haveri, Dharwar Dist 100
4 M. S. Raman Chetty, Yaungoo Post ... 56
5 V. Suppaiya Thavar, Singapur ... 50
6 சிங்கபூர வரவு 50
7 V. Nadarajan No. 37, Fordes Road, Maradana, Colombo 50
8 முசுனூரு சுப்பய்யா தேவர், ரத்தின வியாபாரி, சந்தப் பேட்டை, நெல்லூர் 35

Carried over. Rs. 627

		ரூபா.
	Brought forward.	627
9	Miscelleneous Subscription, Baroda ...	34
10	Jamadar Kuppusawmy No. 3615. D. I. Company Q. V. O. Madras Sappers & Miners, Bangalore (Contt)	30
11	S. Shanmuganathan, Man mathury Camp, Remban N. S. (Via) Penang ...	30
12	V. A. கோவிந்தராஜ முதலியார், பட்டாணிக்கடை, சின்ன பஜார், நெல்லூர்	20
13	V. A. முனுசாமி முதலியார், Watch repairer, சின்ன பஜார், நெல்லூர்	20
14	Kilachand Denchand & Co., L. T. D. 63, Appala Street, Fort, Bombay	20
15	G. Kondiah, Health officer, Johore, F. M. S. ...	20
16	சா. பெரியண்ணன், கண்ணங்காரகுடி, திருமயம் ...	16
17	அனுமால செட்டி கிருஷ்ணய்ய செட்டி, ஜவுளி வியாபாரம், சின்ன பஜார், நெல்லூர்	15
18	Matloobhai Kantawala c/o Maharaja Mills, Baroda	15
19	V. A. ரங்கசாமி முதலியார், பட்டாணி வியாபாரம், சின்ன பஜார், நெல்லூர்	12
20	நாலுகோட்டை. மூ. சு. கருப்பையர் சிவகங்கை, இராமாதபுரம் ஜில்லா	11
21	மன்னுஜி போஜகடே ஜமேதார், மைசூர் லான்ஸர்ஸ், பெங்களூர்	11
22	துளசி அம்மாள், தோளூர். நாமக்கல் போஸ்ட்டு ...	10
23	T. R. Sadakopa Naidu No. 5, Annaikatti Muttu Street, Trichinopoly	10
24	நா. சு. நா. சுப்பையர், ஜவுளி வியாபாரம், தேனுசா தேவி தெருவு, திண்டிக்கல் ...	10
25	K. Rathinapandaram, Ayyanarkoil St. Trivallur, Tanjore Dt., ...	10
	Carried over, Rs.	921

		ரூபா.
	Brought forward.	921
26	முசனூரு வெங்கடம்மாள் ஆஞ்சநேய ஸ்வாமி தெருவு நெல்லூர்...	10
27	சுபேதார் முனுசாமி, D. I. Company. Q. V. O. Madras Sappers and Miners, Bangalore Cantonment	10
28	V. Ethirajalu Naidu, No. 11, Thalval Chall Oppt., Mahadeo temple, Thana Post, Bombay ...	10
29	V. A. மாணிக்கம்மாள். பட்டாணி வியாபாரம், கோவூர், நெல்லூர் ஜில்லா	10
30	பைண்டர் குப்புசாமி முதலி, மூலப்பேட்டை, நெல்லூர்	10
31	M. C. குஞ்சிராமன், போலீஸ், கான்ஸ்டேபில், நெல்லூர்	10
32	அம்படிபூடி சேஷகிரி ராவ், The great Indian Austrical Company Manager, Bezawada ...	10
33	Shanmugam. Zigon, Tharravaday Dt., ...	10
34	Malagan, Rawang Kuala Lumpur ...	10
35	Krishnaswamy, fitter, Ticket No. 2255 N. G. S, Ry. Lallaguda	10
36	T. A. Subramaniya Pillai, Building Contractor, Lower Bazar, Ootacamund	10
37	T. Swami Krishniyah, Overseer, Investigation Division, Nizamabad Residence, Hydrabad ...	10
38	Sirdar V. A. Kibdar Dhaibar, Kewadabag, Baroda ...	10
39	Maharaja Kumar Pravinsingji of Sant State, Baroda	10
40	R. N. Ghero & Co., Naotari, Baroda Street ...	10
41	Appasawmi Pillai, and Kanlimacli Amma, Tanjavarwala Dandiya, Bazaar Road, Baroda ...	10
42	R. V கனகசபாபதி, நடுத் தெருவு, ரூஜவல்லியபுரம் Palamadi Post, Tinnevelly	10
43	A. M. R. Gopal, Clerk, Indian Military Hospital Mandalay, Burma	10
	Carried over, Rs.	1101

		ரூபா.
	Brought forward.	1101
44	சா. கு. ரும. சிவசாமி செட்டியார், தாந்தாணி, அருந் தாங்கி போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா ...	10
45	சிந்தலபாடு. சுப்பராசு சிரசின்ட்ரகொலனு, கைகரம் போஸ்ட்டு, Via தாடேபல்லிகூடம் ...	10
45-A.	அண்ணாஜிராவ் பந்துலு கொட்டபாட், ஜெயபூர், விசாகபட்டணம்	7
46	சேஷய்ய, டின்மர்ச்சன்ட், சின்னபிஜார், நெல்லூர் ...	7
47	K. Srasrikanta, Supt., Palace Dairy & Cattle breeding form, Baroda	7
48	அவுல்தார் முனுசாமி No. 4124, D. I. Company Q. V. O. Madras Sappers & Miners, Bangalore (cantt)	5
49	do சூப்பர்வைஸர் பாபுதிவான்கான் ...	5
50	do அவுல்தார் கோவிந்தசாமி No. 3949 ...	5
51	do லான்ஸ்நாய்க் குப்புசாமி No, 1056 ...	5
52	do மில்டெரி ஹெட்குவார்டர் பரமபிள்ளை பாபு	5
53	do சாப்பர் No. 12100 சாரங்கபாணி ...	5
54	do சாப்பர் No. 11238 துலுக்காணம் ...	5
55	do No. 7243 வீரபத்திர முதலியார் ...	5
56	do No. 11713 உத்தண்டிப் பிள்ளை ...	5
57	do No. 6676, நரசய்யர் ...	5
58	do No. 8671 தாயார் வெங்கம்மாள் ...	5
59	do டோபி. வி. முனுசாமி ...	5
60	K. V. முனுசாமி நாயுடு, O. N M. H. OR No. 39 D. Company, Secunderabad, Deccan ...	5
61	T. G. Sundararajalu Naidu, Kanakdi East gate Market Tanjore	5
62	இடையன் மேலூர் மூ. சீ. ஆ. முத்தையா, சிவகங்கை	5
63	இளயூர். தி. ரங்கசாமி சேர்வை, புதுக்கோட்டை, திரிச்சி ஜில்லா	5
64	S. L. Moorthi Pillay Hd. Clerk, R. D. M. Railway B. Section, Munnu Buildings, Rangoon ...	5
	Carried over, Rs.	1227

		ரூபா.
	Brought forward.	1227
65	S. V. Hanumiah, Satulur, Narasaraopet ...	5
66	Gundapathy. Venkataramacharlu Vettapalem Post (Via) Samalkota	5
67	T. அருணாசல ஆசாரி, சின்ன பஜார், நெல்லூர் ...	5
68	மாசிலாமணி ஆசாரி, கிட்டங்கி தெருவு, நெல்லூர் ...	5
69	ரத்திஞசாரி, கிட்டங்கி தெருவு, நெல்லூர் ...	5
70	முசுனூறு சுந்தர ருமய்யர் தேவர, ரத்தின வியாபாரி, ஸந்தப்பேட்டை, நெல்லூர்	5
71	சேட் ஜவான்வல் தாராசந் கம்பெனி, சின்ன பஜார், நெல்லூர்	5
72	கந்துகூரு மல்லய்ய தேவர, மூலபேட்டை, நெல்லூர் ...	5
73	மத்முலூரு ரங்கநாயகம்ம, ஸந்தபேட்டை, நெல்லூர் ...	5
74	பைடா. பெஞ்சலசெட்டி, ஸந்த பேட்டை, நெல்லூர் ...	5
75	தேவன்ன, மஹாலக்ஷ்மியம்மாள், ஸந்தபேட்டை, நெல்லூர்	5
76	வாஸம் மங்கம்மாள், சந்தபேட்டை, நெல்லூர் ...	5
77	லக்ஷ்மிநாராயண, முனிசீப் கோர்ட்டு கிளார்க்கு, பெஜவாடா	5
78	N. Govindaswamy, Agent Bombay Company Ltd., Bellary Collectorate	5
79	கா. ஆ. ரு. சுப்பையயஞ் செட்டி, மணிகை, திருப்பூண்டி, Nagapatam	5
80	C. Manohar Swami Modaliar, Vaidya Chanpaner Road, Baroda	5
81	I. N. Mehta, Professor, Baroda College ...	5
82	R. A. Borker, Contractor P. W. D. & Ry., Borker's Bunglow, Baroda	5
83	Chimanlal Girdharlal c/o Zanerlakshmichand Mills, Baroda	5
84	Dorasawmy Pillai, Annand Bag, Baroda ...	5
	Carried over. Rs.	1327

		ரூபா.
	Brought forward.	1827
85	Ramalal Dayachai Stewerd, State General Hospital Baroda	5
86	S. & Company, Oppt., State General Hospital, Baroda	5
87	Sirdar Narsingjairao Rachadrarao Ghorpade Jubile, Bazaar, Baroda	5
88	A. Fernandig Motor Mechanical Driver of His Highness Baroda State	5
89	Zinabhai Himatlal Ladwada, Baroda ...	5
90	Mangalbhai Girdharbhai, city Municipal Inspector Baroda	5
91	Parikh Maganlal Chimanlal (Mulji Suntuwala) Dhrinarsinghji's pole Baroda	5
92	Baganna Balaji, Electric Engineer, Baroda ...	5
93	Baroda Cycle & Electric stores, Palace Road, Baroda	5
94	Shankerrao Shivaji Thakkar (Near Record office, behind Anandpura) Baroda	5
95	Kesarising Surajsing Thakore, Motor Driver to Managar G. B. S. Ry. Baroda	5
96	பகிரிசாமி படையாச்சி, லெட்சிகுடி, திருப்பணந்தாள் போஸ்ட்டு, கும்பகோணம் தாலூக்கா ...	5
97	ஷையார் குழந்தை ஆவடையாச்சி ...	5
98	A. Sreeramamurty Vamavaram, Atchanta Post, W. G. D.	5
99	T. N. Swamy, Temavaram, Atchanta Post. W. G. D.	5
100	G- Appalasawmy, Nakkavani Palayam, Waltair ...	5
101	K. V. Munusawmy Naidu No. 39, O. M. Hdr., D. Coy., 3rd. M Regt., Secunderabad, Deccan ...	5
102	மு. காளியப்ப கவுண்டன் தாகுமண்டி கருவம்பாளையம் திருப்பூர்...	5
103	T. முத்துசாமி, மலாகா	5
	Total, Rs.	1422

☞ K. N. சுப்ரமண்ய முதலியார் c/o திவான் சாஹேப் ரேஸ்கோர்ஸ் ரோட்டு, பரோடா; கடிகோட்டையி

லிருக்கும் இந்நூலாசிரியராகிய ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் மடத்திலிருந்து, நந்தலூர் என்னும் ரெயில்வே ஸ்டேஷன் போக ரோட்டு (பாட்டை) போடுவதற்காக மேற்படி முதலியார் தேக கஷ்ட மெடுத்துக்கொண்டு இந்நூலில் தெரிவித்திருக்கும் பரோடா விலாசதாரர்களிடம் ரூபா. 500 எழுத்தால் ரூபா ஐந்நூறு வசூல் செய்து, இந்நூலாசிரியராகிய யோகீஸ்வரரவர்களுக்கு இன்ஷூர் மூலமாய் அனுப்பியிருக்கின்றார்.

மேற்படி தர்ம கைங்கர்யத்திற்காகப் பொருளுதவி செய்யப்பட்டவர்கள் இந்நூலாசிரியராகிய யோகீஸ்வரரவர்களுக்கு, அடியில் கண்ட விலாசப்படி ரூபா அனுப்பினால், அவர்களின் பெயர்களை ரிஜிஸ்டர் செய்து வைத்து, பத்தாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" அச்சிடும்போது வரிசைக் கிரமமாய் அந்தந்தத் தொகையுடன் சேர்த்து அச்சிடுவதும் தவிர ஸ்ரீ பகவத்கீதை, ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரத்திலும் சேர்த்து அச்சிடப்படும்.

ரூபா அனுப்பவேண்டிய விலாசம்.

☞ ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்
கடிகோட்டை. வீரபல்லி போஸ்ட்டு,
ராயசோடி தாலுக்கா, கடப்பை ஜில்லா.

கடிகோட்டை மலையடிவாரத்தில் ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரர் மடாலய கட்டடம் கட்ட, S. S. பினங், சிங்கப்பூர், மலாகா முதலாகிய நாடுகளுக்கும், F. M. S. கிட்டா, பேராக், கோல சிலாங்கூர், ஜோகூர், பஹாங் முதலிய மலாய் நாடுகளுக்கும் அடியேன், 1923ஆம் டிசம்பர்மீ 17உசென்றிருந்தபோது, அந்நாடுகளிலுள்ள புண்ணிய ஸ்திரீ புருஷ தர்மாத்மாக்கள் பொருளுதவி செய்தவர்களின் ஜாபிதா:—

1924ஆம் ஜனவரிமீ முதல், ஷை வருஷம்
செப்டம்பர்மாதம் 17உ வரையில்
மலாய் நாடுகளில் வந்த
வரவுகள்.

		வெள்ளி $
1	மு. குமாரசாமி, கோலாலம்பூர், F. M. S. ...	150
2	நகரத்தார், மலாகா, S. S.	150
8	நகரத்தார், மூவார், ஜோகூர்	101
4	நா. நாகமுத்து சேதுவராயர், வங்குசாரோட்டு, 15ங் கட்டை. கோலாலம்பூர், F. M. S. ...	80
5	S. சின்னதுரை ரிவிடெண்டு ஆபீஸ், கோலா லிப்பிஸ், F. M. S. பஹாங், இவர் மூலமாய் கிராணிமார்கள் (Clerks) கொடுத்தது	65
6	சி. தியகராஜன் பண்டிதர், நெ. 31, ஆச்சாரோட்டு, சிங்கப்பூர்	62
7	பேட்டாம் தோட்டம் அண்ணாவி முத்து நாடார் வகயரா கிராமணிமார்கள், (Clerks) கப்பல் பத்தாஸ், கிட்டா	54
8	நகரத்தார், வத்து பஹாரு, ஜோகூர் ...	51
9	அ. ரு. ரு. ம. சொ. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு ...	50
10	V. சீனிவாசம் பிள்ளை, செகிர்டெரி, இந்து சங்கம்; செந்துல் கோலாலம்பூர், F. M. S. (கடிகோட்டை மடாலயத்திற்கு ரத்ன கம்பளம் தர்மம் செய்தது) ...	50
	Carried over, $	813

		வெள்ளி. $
	Brought forward.	813
11	A. சிற்றம்பலம், ஸ்டேஷன் மாஸ்டர், F. M. S. & E. அய்யாதுரை, போஸ்ட்டு மாஸ்டர், கிமாஸ் F. M. S. இவர்கள் மூலமாய் வந்த வரவு ...	50
12	S. சதாசிவம், சீப் கிளார்க், F. M. S. Railway, சிங்கப்பூர், இவர் மூலமாய் வந்த வரவு ...	46
13	N. V. N. மீனன், சித்தியவான், F. M. S. ...	40
14	செட்டிகள், தமிழாதிகள் சுங்குப்பட்டாணி, கிட்டா ...	39
15	கா. சின்னய்ய கோனார், Chartered Bank Watchman, Singapur, இவர் மூலமாய் வந்தது ...	36
16	கா. மெ. சொ. அரு. கிட்டங்கி, பினங்ஸ்டிரீட்டு, பினங்கு	35
17	நகரத்தார், ஜோகூர் பாரு	31
18	கா. நமசிவாயம், ஸ்ரீ உமயவள் பஜனைகூடத்து தலைவர், பட்டர்வொர்த், (கோலப்பிரை) ...	80
19	V. விரகத்தி பிள்ளை, ஆஸ்பத்திரி ஸர்ஜன், சுங்குப்பட்டாணி, கிட்டா	80
20	மு. முனுசாமி உடையார், பாரிட், ஈப்போ, F. M. S.	80
21	நகரத்தார், சிகமெட், S. S.	27
22	டாக்டர் P. நாகலிங்கம் பார்யாள், சிரஞ்சீவி சௌபாக்யவதி அர்ரலக்ஷிமியம்மாள், கோலாசிலங்கூர், F. M. S.	25
23	அ. ரு. ரு. ம. நா. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு ...	25
24	தி. சொ. do do ...	25
25	வீ. செங்கல்வராயன், மேசனூர், ஈப்போ, F. M. S. ...	25
26	செ. முருகப்பிள்ளை, இஞ்சினீர் ஆபீஸ், முனிசிபாலடி, சிங்கப்பூர்	25
27	S. கணபதி பிள்ளை, P. W. D. ஓவர்சீர், சுங்குப்பட்டாணி, கிட்டா	20
28	அ. மு. க. மு. ரு. ம. பினங்கு ஸ்டிரீட், பினங்கு ...	20
	Carried over, $	1372

		வெள்ளி. $
	Brought forward.	1372
29	E. வேலுபிள்ளை, போஸ்ட்டு மாஸ்டர், பாரபத்தா, F. M. S. ...	20
30	E. Aune (ஒனி) சூப்பிரெண்டெண்டு, சர்வே ஆபீஸ், செரம்பான், F. M. S. ...	20
31	பெ. ரி. நா. நா. மார்கெட் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர் ...	20
32	T. சுப்பிரமணியம் பிள்ளை, கண்டிராக்டர், அலஸ்டார், (கெட்டா) ...	15
33	சீனிவாசம் பிள்ளை, எட் ஓவர்சியர், P. W. D. பஹாங், F. M. S. ...	15
34	A. சாமிவேல், F. M. S. ரெயில்வே கிளார்க், கோலாலம்பூர் ...	15
35	வே. மாணிக்க முதலியார் மார்க்கெட்டு, கோலாலம்பூர், F. M. S. ...	15
36	ப. ள. க. ன. மு. சி. த. கோலாகங்சர், F. M. S. ...	15
37	பொ. வீ. ரு. வீராசாமி, சாத்தாங்கோவில், மலாகா, S. S. ...	15
38	செ. மு. சுப்பய்யா பிள்ளை, அதிமனம், மலாகா, S. S. ...	15
39	பி. நடராஜபிள்ளை சூவேஜு டிபார்ட்மெண்டு, முனிசிபல் ஆபீஸ், சிங்கப்பூர், இவர் மூலமாய் வந்தது ...	15
40	செ. ரு. ம. பெ. சி. த. பினாங் ஸ்டிரீட்டு, பினாங்கு ...	10
41	ராஜா, கஸ்டம் ஆபீஸ் சிப் கிளார்க், பட்டர் வொர்த்து, கெட்டா ...	10
42	அருணாஜலம் செட்டியார், பட்டர் வொர்த்து, கெட்டா ...	10
43	R. M. உடையப்ப செட்டியார், சுங்குப்பட்டாணி, கெட்டா ...	10
44	Dr. ரத்துக்குமரு. பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	10
45	அ. கு. ரு. ம. சொ. ஆ. சொக்கலிங்கம் செட்டியார், அலஸ்டார், (கெட்டா)	10
	Carried Over. $	1612

		வெள்ளி. $
	Brought forward.	1612
46	வெ. சி. நா. பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	10
47	மு. மு. do do ...	10
48	மெ. ரு. ம. வெ. ல. do do ...	10
49	உ. ரு. ம. மெ. சு. ப். சே. வு. பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	10
50	உ. ரு. ம. உ. மு. பினாங்கு ஸ்டிரீட்டு, do ...	10
51	வெ. ரு. ம. சு. do do ...	10
52	க. வீ. அ ள. do ...	10
53	சா. கா. அ. அ. ள. do ...	10
54	சா. கா. அ. சொ. do ...	10
55	சா. ரு. ம. மு. அ. do ...	10
56	சொ. மு. அ. do ...	10
57	ரு. ம. கா. காசப்பிள்ளை do ...	10
58	K. கணபதி பிள்ளை, ஆஸ்பத்திரி, கோலாகங்சர், F. M. S. ...	10
59	ரு. ம. மு. சோ. ம. தைபிங், F. M. S. ...	10
60	ப. ள. க. ச. ஆ. ரு. ம. சொமரப்பசெட்டி, கோலாகங்சர்	10
61	செ. ப. ள. மலையாண்டி கவுண்டர், செட்டிக்குரிச்சி, துவரங்குரிச்சி போஸ்ட்டு, மணப்பாறை மார்க்கம் ...	10
62	சு. ப. அ. ப. ள. பழனியப்ப செட்டியார், கோலாகங்சர் F. M. S. ...	10
63	சி. ப. ள ரு. ம. கோலாகங்சர், F. M. S. ...	10
64	முத்து, மு. முத்தப்ப செட்டி, கோலாகங்சர், F. M. S. ...	10
65	வை. பெ. கோவிந்தசாமி, கண்ட்ராக்டர், ஈப்போ, F. M. S. ...	10
66	மு. அப்பாதுரை பிள்ளை, ஈப்போ. F. M. S. ...	10
	Carried over. $	1822

		வெள்ளி. $
	Brought forward	1822
67	சிவன்மலை கங்காணி, சுங்கைபூலோ எஸ்டேட், கோல சிலங்கூர் போஸ்ட்டு, F. M. T. ...	10
68	K. சின்னப்ப. ஸ்டேஷன் மாஸ்டர், கோலசிலங்கூர், F. M. S. ...	10
69	வி. மாரிமுத்து, கௌரவகாரியதரிசி, இந்து சங்கம் செந்துல், கோலாலம்பூர், F. M. S. ...	10
70	லெ. நா. க. அ. ள. ரு. ம. ஈப்போ, F. M. S. ...	10
71	வி. சிதம்பரம் பிள்ளை, கண்ட்ராக்டர், கோலலங்காட் டிஸ்டிக்டு, F. M. S. ...	10
72	A. T. கோவிந்தசாமி பிள்ளை, மர்ச்செண்டு, சுங்கைபிசி, F. M. S. ...	10
73	கா. துரைசாமி பார்யாள், கோலாலம்பூர் F. M. .S ...	10
74	ராசர் do ...	10
75	K. வேலுபிள்ளை, கண்ட்ராக்டர், கோலாலம்பூர் F. M. S. ...	10
76	ரு. ம. ப. ள. கிட்டங்கி, சிறம்பான், F. M. S. ...	10
77	உ. ரு. ம. உ. மு.ச. ப. கிட்டங்கி, சிறம்பான், F. M. S. ...	10
78	கு. சோமசுந்தரம், நெ. 41—1, அல்பர்ட் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர் ...	10
79	கு. மு. சொ. கிட்டங்கி, சிறம்பான், F. M. S. ...	10
80	வ. கோ. பகீரிசாமி, நெ. 26, ரெயில்வே ரோட்டு கும்பகோணம், கியாம்பு, நெ. 26, ஜாலான் இங்கான் ரோட்டு, வத்துபஹார், ஜோகூர் ...	10
81	R. O. நாயுடு, P. W. D. கோதாதிங்கி, ஜோகூர் பாரு ...	10
82	S. சதாசிவம். சீப் கிளார்க், F. M. S. ரெயில்வே, சிங்கப்பூர் ...	10
	Carried over,	$ 1982

		வெள்ளி. $
	Brought forward.	1982
83	ச. வே. வரதராஜலு நாயுடு, நெ. 243 பெங்குலன் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர்	10
84	ரு ம. அ ரு. சோ. ஈப்போ, F. M. S. ...	9
85	ப. ள. மு. நா. ஈப்போ, F. M. S. ...	9
86	ப. ள. மு. நா. சிறம்பான், F. M. S. ...	9
87	சி. மு. ரு. ம. do ...	8
88	பெ. ப. வீ., பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	8
89	ஆ. வி. ப. ள. do . do ...	8
90	க. அ. ள. ரு. ம. do do ...	7
91	உ. வீ. ர. do do ...	7
92	க. அ. ள. ரு. ம. ராமசாமி செட்டி, கிட்டா ...	7
93	க. மு. நா. பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	6
94	சி. க. ரு. சோ. do do ...	6
95	மெ. ரு. ம. அ. do do ...	6
96	க. வெ. ரு. ம. do do ...	6
97	சா. அ. ரு. ம. do do ...	6
98	சா. நா. சா. தெ. பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	6
99	மெ. செ. ஈப்போ, F M. S. ...	6
100	முத்து, க. மா. மு. சோ. ம. அ. ரு. ஈப்போ, F. M. S. ...	6
101	மெ. செ. மெ. மெ. ஈப்போ, F. M. S. ...	6
102	மு. ஆ. ரி. நா. ஈப்போ, F. M. S. ...	5
103	க. சொ. பினாங்கு ஸ்டிர்ட்டு, பினாங்கு ...	5
104	ஆ. ரு. ப. ட. சி. ப. பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு ...	5
105	ப. ள. க. ரு. ம. do do ...	5
106	சா. நா. ரு. மா. சு. do do ...	5
107	ஆ. ரு. ப. ள. சி. ப. ள. do do ...	5
108	மு. யெ. மு. do do ...	5
109	பெ. க. அ. சி. த. do do ...	5
	Carried over.	$ 2158

வெள்ளி.
$
Brought forward. 2158

110 அ. ரூ. ரூ. ம. மெ. மெ. பிஞங் ஸ்டிரீட்டு, பிஞங் ... 5
111 உ. ரூ. ம. மெ. சு. செ. do do ... 5
112 அ. ரு. வீ. ர. do do ... 5
118 அ. ரு. ரூ. ம. do dc ... 5
114 அ. ள. ரூ. ம. சி. மெ. இ. சி. இ. இத.
பிஞங்கு ஸ்டிரீட்டு, பிஞங்கு ... 5
115 ப. ள. பெ. ரி. தைபிங். F. M. S. ... 5
116 யே. மு. வ. do do ... 5
117 பெ. ரி. ப. ள. அ. கோலாகங்சர், F. M. S. ... 5
118 அ. ள. ஆ. do do ... 5
119 மு. ரூ. ம. சொ. do do ... 5
120 சைவம் சிவசுப்ரமண்யம், கோலாகங்சர், F. M. S. ... 5
121 தேவசகாயம். கோட்டு துபாஸ். கோலாகங்சர்,
F. M. S. ... 5
122 கொழந்தவேலு பிள்ளை, போஸ்ட் ஆபீஸ், கோலா
கங்சர் F. M. S. 5
123 R கோவிந்தராஜுலு, கோலாகங்சர், F. M. S. ... 5
124 T. A. ஆரோக்யசாமி பத்தர், கோலாகங்சர் ... 5
125 அ. ள. ரூ. ம. ரூ. ம. கோலாகங்சர், F. M. S. ... 5
126 மு. மு. do ... 5
127 சி. மு. ப. மு. do ... 5
128 முத்து, சு. do ... 5
129 வீ. ர. க. ரு. செ. கோலாகங்சர், F. M. S. ... 5
180 வீ. ர. க. ரு. தைபிங், F. M. S. ... 5
181 டாக்டர் சுப்ரமண்யம், காஜாங், F. M. S. ... 5
182 அங்கம்மா, கோலாலம்பூர் do ... 5
188 அய்யாகண்ணு. கோலாலம்பூர் do ... 5
184 செ. கெ. செல்லய்யா, கோலாலம்பூர் do ... 5

Carried over, $ 2283

வெள்ளி
$
Brought forward 2283

135 மு. ரூ. ம. சு. ப. வத்துகாஜா, F. M. S. ... 5
136 உ. ரூ. ம. உ. மு. சு. ப. இட்டங்கி. தாப்பா. F. M. S. 5
137 H. பெருமாள், கோலாலம்பூர். F. M. S. ... 5
138 செ. ரூமசாமி do do ... 5
139 V. S. வேலுபிள்ளை, புடு. சிலாங்கூர். F. M. S. ... 5
140 A. செல்வதுரை, கோலசிலாங்கூர், F. M. S. ... 5
141 P. நாகலிங்கம் do do ... 5
142 மு. கிருஷ்ணன் do do ... 5
143 ப. ள. நா. சிறம்பான், F. M. S. ... 5
144 தெ. சொ. ப. ள. do do ... 5
145 அ. யெ. அ. ரு. இட்டங்கி. சிறம்பான். F. M. S. ... 5
146 வேதாசலம் கோர்ட்டு, கோலபிலா F. M. S. ... 5
147 S. நாகலிங்கம், டிஸ்டிரிக்ட் ஆபீஸ் do ... 5
148 V. தர்மலிங்கம், P. W. D. கோலபிலா, F. M. S. ... 5
149 V. கணபதி பிள்ளை, ரெயில்வே போலீஸ் ஆபீஸ்,
சிங்கப்பூர் ... 5
150 செ. இந்திரராஜா, ரெயில்வே ஸ்டேஷன் டாங்
ரோட்டு, சிங்கப்பூர் ... 5
151 சு. லெ. வீரப்பசெட்டி, ராபர்ட் லேயின், சிங்கப்பூர் ... 5
152 T. கந்தய்யா, பிளாண்டர்ஸ் ஸ்டோர் & ஏஜென்சி
Let, கோலாலம்பூர். F. M. S. ... 5
153 E. பொன்னம்பலம். போஸ்டு மாஸ்டர், புடு. சிலங்கூர்
கோலாலம்பூர். F. M. S. ... 5
154 K. சரவணமுத்து, கமர்ஷல் பிரஸ். கோலாலம்பூர்.
F. M. S. ... 5
155 பெ. யெ. பெரிய அய்யாப்பிள்ளை, வத்துபஹார்,
ஜோகூர் 5

Carried over, $ 2888

		வெள்ளி. $
	Brought forward	2388
156	ரா. வெ. பெருமாள் நாயுடு, துபாஸ், போலீஸ் கோர்ட்டு, ஜோகூர்பாரு	5
157	மு. ப. துரைசாமி பண்டிதர், தஞ்சாவூர் ...	5
158	ச. ஆ. கோவிந்தசாமி பண்டிதர், ஒத்தைத்தெருவு, புதுச்சேரி ...	5
159	வே. வேலு. ஜனரல் போலீஸ் ஸ்டேஷன், ஜோகூர்பாரு ...	5
160	வே. குளந்தவேலு மேஸ்த்திரி, சலிவம்பேட்டை. வேலூர் ...	5
161	மாணிக்கம் தம்பு, முனிசிபல் ஆபீஸ், சிங்கபூர் ...	5
162	K. கணபதி பிள்ளை, வைத்தியசாலை, சிங்கபூர் ...	5
163	சபாபதி பத்தர், நெ. 37, ஆச்சாரோட்டு, சிங்கப்பூர் ...	5
164	நா. தெ. தெய்வநாயகம் செட்டியார், நெ. 182, அரப் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர்	5
165	ரா. சு. சி. சுப்பா ரெட்டியார், 183, அரப் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர் ...	5
166	அ. ப. தண்டபாணி ஷூ நெ. 245, அரப் ஸ்டிரீட்டு சிங்கப்பூர் ...	5
167	அ வ. க. கந்தசாமி பிள்ளை, ஜாங்கி, 8¼ மையில் சிங்கப்பூர் ...	5
168	ப. அம்பிகைபாகன், சர்வே ஆபீஸ், சிங்கப்பூர் ...	5
169	சு. வைத்யலிங்கம், P. W. D. ஜோகூர்பாரு ...	5
170	அ. இ. ஆறுமுகம், எமிகிரேஷன் ஆபீஸ், ஜோகூர்பாரு ...	5
171	வி. கே. ராமன் நாயர், ஜோகூர்பாரு ...	5
172	நா. டாக்டர் முத்துத்தம்பி, ஜோகூர்பாரு ...	5
	Total, $	2473

One of the Seven Wise Men of Greece

A Sophist wishing to puzzle him with difficult questions, the sage of Miletus replied to them all, without the least hesitation, and with the utmost precision:—

1. What is the oldest of all things?
"GOD, Because He has all always existed."
2. What is the most beautiful of all things?
"THE WORLD, Because it is the work of God."
3. What is the greatest of all things?
"SPACE, Because it contains all that has been created"
4. What is the most constant of all things?
"HOPE, Because it still remains with man, after he has lost everything else."
5. What is the best of all things?
"VIRTUE, Because without it there is nothing good."
6. What is the quickest of all things?
"THOUGHT, Because in less than a moment it can fly to the end of the universe."
7. What is the strongest of all things?
"NECESSITY, Which makes man face all the dangers of life."
8. What is the easiest of all things?
"TO GIVE ADVICE."
9. What is the most difficult of all things?
"TO KNOW THYSELF."
10. What is the wisest of all things?
"TIME, Because it discovers all things."

Extract from the Indian Patriot of the 10th February 1914.

LECTURES BY A YOGI AT GOOTY.

A correspondent writes:—

Swami Paramahamsa Sachidananda is the name of a very earnest and learned person and he lives now at Cuddapah. He rigidly endeavours to practise the Ashtanga Raja Yoga and knows the Gita and the Upanishads by heart. He delivered three eloquent lectures in Telugu in this town on the great imperative need for man to aspire and strive for true and spiritual enlightenment, and to live a clean and pious life. His copious and ready quotations in Sanskrit from the Gita and the Upanishads are so apt and illuminative. He is anxious to deliver lectures in different centres before entering into a stage of meditation, called Samadhi.

Extract from the Army and Civil News, Bangalore, 18th January 1915.

An Indian Correspondent writes the following:—

His Holiness, Swami Paramahamsa Sachidananda Yogeeswarar of Cuddapah, performed with success the Jalasthambha, feat, as advertised yesterday, Sunday the 17th instant, in the tank of the Subramanya's temple, Old Madras Road, Ulsoor, Bangalore. His Holiness remained floating on the water with hands and legs folded, for over an hour and a half, and spoke with the people around him from that posture, about the practice of Brahmasutram. The feat, rare in itself, was made rarer by the beautiful exposition of "Mind, Atman and Paramatman" but owing to the large concourse of people which continued pouring in till late in the evening, and owing to the unmanageableness of the crowd which numbered over 5000, the lecture became inaudible, espe-

cially at the end. Swamiji, therefore at the request of many gentlemen, has kindly consented to perform the same feat, once again, next Sunday the 24th instant, at the same place with the programme a little changed as stated under: (1) Lecture on "Mind and How to control it?" in the Subramanya's temple, Ulsoor, 2 to 3 P. M., (2) *Jalasthamba* performance in the tank attached to that temple, 3 to 4 P. M. (3) Lecture again in the Contonment in the Sankaranarayana Sabha Hall, Sivan Chetty Garden Street, on "Atman and its relation to the body."

Extract from the New India, dated Saturday, *the 15th May 1916.*

A LECTURE IN FLOATING POSTURE.—The Kristnappa Naicken Tank, George Town, was this morning at 6 o'clock, the scene of a huge crowd of anxious spectators, numbering over 7,000 ladies and gentlemen, young and old, rich and poor, educated and uneducated, to see Swami Paramahamsa Sachidananda Yogeeswarar of Cuddapah, perform Jalasthambanam Yogam (floating on water) and to hear him deliver a lecture in Tamil in that posture on "Brahmasutram and how to practice." There were also spectators on house tops round the tank. The Swami began to demonstrate his floating feats and to deliver his lecture precisely at the appointed time at the north ghaut of the tank and took one hour and forty-five minutes to finish it, arriving in the end at the same ghaut. During this long time he kept himself floating round the big tank with his legs in what is known as *Padmasanam* and his hands in sleeping posture. The Swami was always in touch with people by floating near the parapet walls, so that the people might see and hear him. However, it was impossible to hear him distinctly, owing to very large number of people round the parapet walls and to the low level of the water in the tank. A very smart sale of the Swami's photographs and his book on Yoga in Telugu and Tamil was made on the spot.

Extract from the Malaya Tribune, Singapore, Dated 5th September 1924.

YOGA MAGIC.

A rare opportunity of seeing some feats of Yoga practice will be afforded to the public of Singapore when Yogeeswarar Sachithananda Swamy of Cuddapah, India, will deliver a lecture in Tamil on "Yoga practice whilst floating on the surface of water "**Jalasthambhanam**" **posture** "Padmasanam" at 4 p. m. on Saturday the 6th instant at the Sand Pits Ponds opposite the Bidadari, Upper Serangoon-road, weather permitting. The ponds and premises have been kindly lent for the occasion by Mr. S. N. S. Meyyappa Chettiyar. There is standing accommodation for about 2,000 people all round the tank and the general public irrespective of nationality are cordially invited. The lecture will last about 1½ hours.

Extract from the Malaya Tribune Singapore, Dated 8th September 1924.

IMPRESSIVE YOGI DEMONSTRATION.

Several hundreds of Indians including a number of Europeans and members of other communities were present at the "Sand Pits Pond" in Upper Serangoon-road, on Saturday afternoon when Yogeeswarar Sachithananda Swami of Cuddapah, India, gave a very interesting demonstration of Yogic practice.

The banks of the pond were bordered by the people when the Swami entered the water and whilst floating on the water went round delivering his sermon. The lecture lasted for nearly an hour and a half.

PREFACE.

I thought I was singularly fortunate in having had my request granted by Swami Paramahamsa Sachithananda Yogeeswarar of Cuddapah, who has been known to me for the last few years, to write a preface to the second edition of the mystic treatise "*Jeeva Brahmaikya Vedanta Rahasyam*" (the secrets of the human soul becoming the part and parcel of the Universal Soul) In my hurried preparations on my professional tours to Burma and Siam, I went hurriedly through here and there some of his instructive lectures and lessons in "Upanishad." The main object of these lessons seems to me to be that the five senses of human beings can be controlled without allowing themselves to fall victims to Temptations.

The Swami floating on the surface of water in various tanks with arms and legs folded (*Padmasanam*) and preaching sermons in that mystic posture has attracted the admiration of the religious public and the photo describing the posture is appended to his book. When **Swamiji** was questioned by me to explain as to how he could float on water and speak in that posture, he told me that he could breathe in fully into the stomach of 22 ft, and lie down on the surface of water, when he could flooat. Then a small quantity of air should be given out and the same quanitity should be breathed in and this process repeated will help the **Swami** to deliver lectures. The original quantity of air, after expunging the small quantity should remain fixed so long as he delivers lecture on the surface

of water, only the small quantity of air should be alternately breathed in and breathed out. All these can be fully understood in the *Jeeva Brahmaikya Vedanta Rahasyam*, in Tamil, Telugu and English—Ist and 2nd parts.

All the illustrations necessary for understanding these lectures together with the exposition of their deep significance are well expatiated by the Swami in the first Six Chapters of his BHAGAVADGEETA.

The treatise has been prepared at the request of the several disciples of the **Swami** and it is considered desirable that these papers should be given a wide publication; and he made it easily accessible both to the rich and to the poor and with this object in view it has been decided to issue at a cheap rate.

The papers have been arranged under different headings and suppiled with glossaries to understand the Sanskrit words written in Tamil and photos to suit the lectures for the convenience of those that read the treatise.

I hope that these lectures will prove helpful in disseminating religious knowledge among the people.

A. TIRUVENKATASWAMI MUDALIAR, B. A.,
Consulting Geologist.

CONSTIPATIAN
மலச்சிக்கல் நிவாரணை செய்யும் அன்னரஸ ஸஞ்ஜீவி.

ஓ சகோதரி சகோதரர்களே !

உலகத்திலுள்ள ஜனங்களின் சரீரங்களெல்லாம், பிருதிவி (மண்) அப்பு (ஜலம்) தேயு (அக்கி) வாயு (காற்று) ஆகாசம் (வெளி) என்னும் பஞ்ச (ஐந்து) பூதங்களினால் உண்டாயிற்று. இவ்வாறு எல்லோருடைய சரீரங்களும் பஞ்சபூதங்களினால் உண்டானபோதிலும், இச்சரீரங்களெல்லாம் ஒரேவிதமாயிராமல் வெவ்வேறு பேதங்களா யிருப்பதை இதனடியில் சொல்லுகின்றோம். அதாவது,

சிலருக்குப் பித்தம் அதிகமாயும், சிலருக்குச் சமமாயும், சிலருக்கு குறைவாயுமிருக்கும். அதுபோல், உஷ்ணம் அதிகமாயும், சமமாயும், குறைவாயும் இருக்கும். அதுபோல், நாடிகளும் வெட்டைச் சூடுகளும் சிலேஷ்ம (சீதள)ங்களும் ஜன்னிகளும் திமிர்களும் காமாலைகளும் தித்திப்புகளும் கசப்புகளும் புளிப்புகளும் உட்காணல்களும் ஸ்தூலமாகுதலும் கருகுதலும் (மெலிந்து போகுதலும்) நரம்புவலிகளும் தொண்டைக் கட்டுதலும் மூச்சு அதிகமாய் விடுதலும் மேல்சுவாசம் உண்டாகுதலும் பச்சை காமாலைகளும் மஞ்சள் மூத்திரங்களு முடையவர்களா யிருக்கின்றார்கள். இதற்குத் திருஷ்டாந்தம் ஒனபதாம்பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" 169-வது பக்கம் நாடிகளும் அவற்றின் குணங்களும் என்பதில் காண்க.

மேற்சொல்லிய சரீரங்களில், சிலர் சரீரங்களுக்கு மலச்சிக்கல் (Constipation) உண்டாய் மல விசர்ச்சனை செய்யும் பொழுது (விடும்பொழுது) மலம் தாராளமாய் (தளர்ச்சியாய்) வாராம லிருப்பதனால், மூச்சைப்பிடித்து நிறுத்தி

முக்கலிடும்போது அம்மலம் அழுத்தமாயும் உருண்டை உருண்டைகளாயும் மூச்சின்பலத்தால் மிகவும் கஷ்டத்துடன் சிலமலம் வெளியில்வரும். இவ்வாறு வரும் மலத்திற்கே மலச்சிக்கல் (Constipation) என்று சொல்லப்படும். இவ்வாறான மலச்சிக்கலுடையவர்களுக்கும், மலம் தாராளமாய் வரப்பட்டவர்களுக்கும் எப்பொழுதும் எந்த நோய்களும் வராமலிருக்க பிரதிதினம் பழயசாதமும், அந்த சாதத்தின் ரசமாகிய அந்நரச சஞ்சீவியையும் சாப்பிடவேண்டிய முறையை இதனடியில் சொல்லியிருப்பது போல் சாப்பிட்டுவந்தால் எப்பொழுதும் மலச்சிக்கலும், வியாதிகளும் வராமல் மிகவும் சுகமாயிருக்கலாம். இனி, பழயசாதம் செய்யவேண்டிய முறையும், அதைச் சாப்பிடவேண்டிய விதமும் இதனடியில் சொல்லுகின்றோம். அது போல் செய்து சாப்பிட்டுவரவேண்டும்.

ஐயா! இரவில் போஜனமுண்டு (சாப்பிட்டு) மிகுதியாயிருக்கும் சாதத்தில், சில பெண்டுகள் குளிர்ந்த ஜலத்தையும், மற்றும் சில பெண்டுகள் வென்னீரையும் விட்டுப் பழயசாதமாய்ச் செய்து, மறுநாட்காலை அந்த சாதமும் நீரும் விட்டுச் சாப்பிடுவார்கள். இவ்வாறு சாப்பிடாமல் அடியிற் சொல்வதுபோல் செய்து பழயசாதமும் அதன் நீரும் சாப்பிட்டுவந்தால், அவர்களுக்கு மலச்சிக்கலில்லாமலும், சரீரத்திற்கு எவ்வித வியாதிகளும் வாராமல் எப்பொழுதும் சுகமாயிருப்பார்கள். இனி, பழயசாதம் செய்யவேண்டிய முறை இதனடியில் சொல்லுகின்றோம் அதுபோல் எல்லாக் குடும்பங்களிலும் செய்து சாப்பிடவேண்டும்.

இரவில் சாதம் வடித்தபிறகு, சுத்தஜலம் ஒரு பாத்திரத்திலாகிலும் அல்லது பாண்டத்திலாகிலும் விட்டு நன்றாய்த் தென்ளும்படி (கொதிக்கும்படி) எரிவிட்டு, கொதித்

தபின் அச்சலத்தை வேறாய் எடுத்து ஆறவைக்கவேண்டும். பிறகு, சாதம் வடித்த கஞ்சிநீர் எட்டை நீக்கி அந்தந்த குடும்பத்திற்கு வேண்டுமளவு கஞ்சிநீர் வேறோர் பாண்டத்தில் விட்டு, அந்த கஞ்சிநீர் இரண்டளவு பிரமாணம் முன் காச்சிய வென்னீரை ஆற்றி, ஷை கஞ்சிநீரில்விட்டுக் கலந்து தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

இரவில் எல்லோரும் சாப்பிட்டபிறகு, மிகுதியாகும் சாதத்தில், முன் தயார்செய்து வைத்த கஞ்சிநீர் ஜலத்தை ஷை சாதமுள்ள பாண்டத்தில் குடும்பத்திற்கு வேண்டும் பிரமாணம் ஷை ஜலம்விட்டு, அப்பாண்டத்தை மூடிவைக்கவேண்டும். பிறகு, இரவு நித்திரைசெய்து காலையில் எழுந்து காலக்கடனை முடித்து பல்தேய்த்து ஸ்தானம் செய்து நெற்றியில் விபூதியோ அல்லது, ஸ்ரீ சூர்ணமோ அணிந்து, சிவபூஜையோ, அல்லது விஷ்ணுபூஜையோ செய்து முடித்து, ஷை பழயசாதம் இலையில் சாப்பிடாமல், ஒரு கிண்ணியில் போட்டு, ஷை பழயசாதம் நீர் சாதத்திற்குமேல் இரண்டு அங்குல மிருக்கும்படிவிட்டு, அதில் சமுத்திரலவணம் (உப்பு) கொஞ்சம் அதிகமாய்க் கரிக்கும்படிபோட்டுப் பிசைந்து ஏதாகிலும் ஊர்காய் வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் கடைசியில் அந்நீரையும் சாப்பிடவேண்டும். எவ்வளவு மழைகாலமாயிருந்தாலும் அல்லது, குளிர்காலமாயிருந்தாலும் ஒருநாளும் தவராமல், தம் ஆயுள் உள்ளவரையில் ஷை பழயசாதம் சாப்பிட்டு வருவாராகில், அவர்களுக்கு எப்படிப்பட்ட வியாதிகளும் எக்காலத்திலும் உண்டாகவே மாட்டா. ஆதலால், பிரதிதினம் சிறுவர்களும் சிறுமியர்களும் பெரியோர்களும் ஆறுமாத காலம் வரையில் தவராமல் மேற்சொல்லியதுபோல் பழயசாதம் செய்து சாப்பிட்டுவாருங்கள். அதன் அனுபவம் உங்களுக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும்.

நமது முன்னோர்காலத்தில் காலையில், இட்லி சாம்பார் றவைதோசை உப்புமா இன்னும் அநேக பக்ஷணங்களும், காபி, டீ முதலானவைகள் இல்லை. இவைகள் யாவும் கலியுகம்பெருகப்பெருக இப்போது உண்டாயிற்று. நமது முன்னோர் காலத்தில் முன் சொல்லியதுபோல், பழய சாதம் செய்து சாப்பிட்டுவந்து எந்நோய்களும் இல்லாமல் மிகவும் சுகஜீவிகளாயிருந்து காலங்கழித்துச் சென்றார்கள். பழயசாதம் அதன்நீர் விஷயம் இவ்வளவு விஸ்தாரமாய் எழுதுவதற்குக் காரணமென்னவென்றால், இப்பழயசாதமும் அதன்நீர் விஷயமும் அனேகர்களுக்குத் தெரியவராது; ஆதலால், இதை எல்லோரும் தெரிந்துக்கொண்டு அதுபோல் பழயசாதம் செய்து சாப்பிட்டு வருவதற்காக இந்நூல் மூலமாய்த் தெரிவித்தோம். இனி இம்முதல் எல்லாக் குடும்பத்திலுள்ளவர்களும் பழயசாதம் செய்து சாப்பிட்டுவாருங்கள். எந்த பக்ஷணங் (பலகாரங்) களும் காபி, டீ முதலானவைகளும் சாப்பிடவேண்டாம். சுவற்றின்மேலல்லவோ சித்திரம் (படம்) எழுதவேண்டுமென்பதுபோல், சரீரம் வியாதி இல்லாமலிருந்தாலல்லவோ சிவபூஜையும், யோகாப்பியாசமும், ஞானமும் அடையலாம். சரீரம் நல்ல ஸ்திதியிலில்லாவிட்டால் எதையும் அடையமாட்டார்கள். ஷை சாதத்தின்நீர் ரகசியம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

முன்சொல்லிய பழயசாதம் நீரை நன்றாய்க் கலக்கி ஓர் கலாய்ப் பாத்திரத்தில், மூன்று பூறு டம்ளர், அல்லது இரண்டரை டம்ளருக்குக் குறையாமல் அளந்துவிட்டு அதில் உப்புகொஞ்சம் அதிகமாய்க் கரிக்கும்படி போட்டுக் கலக்கி காலையில் எதுவும் சாப்பிடாமல் வெறும்வயற்றில் அந்நீரைச் சாப்பிட்டு உடனே தாம்பூலம் போட்டு விழுங்க வேண்டும். இவ்வாறு சாப்பிட்டால் ஒன்று அல்லது

இரண்டுமுறை அந்தந்த தேகத்திற்குத் தக்கபடி பேதியாய்ப் பிறகு, அந்நீர் குடலையெல்லாம் கழுவி வெறும் ஜலமாய்க் கொண்டுவந்து வெளியில் தள்ளும். உப்பு கொஞ்சம் அதிகமாய்க் கரிக்கும்படி போட்டுச் சாப்பிட்டால் இக்குணத்தைத்தரும்; உப்பு அவ் வளவிற்குமேல் விசேஷமாய்ப் போட்டு, அதன் காரத்தினால் திகட்டும்படி கஷ்டத்துடன் சாப்பிட்டால், வயிர்நோய் உண்டாகும். வாந்தியாகும். குடலைமுறுக்கும். தாஹமெடுக்கும். நன்றாய்ப் பேதியாகும். ஆதலால், உப்பு அவ்வளவு அதிகமாய்ப் போடாமல், சாதாரணமாய்ச் சாப்பிடும் உப்பைவிட கொஞ்சம் அதிகமாய்க் கரிக்கும்படிப்போட்டுச் சாப்பிட்டால் மிகவும் சுலபமாய்ப் பேதியாகும், இவைகளையெல்லாம் அடியேன் பரீக்ஷித்துப்பார்த்து உங்கள் எல்லோருக்கும் இப்புஸ்தகமூலமாய்த் தெரிவித்த கைகண்ட அன்னரச அமிர்தசஞ்சீவி ஔஷதமென்று அரியக்கடவீர்களாக.

ஒ சகோதரிகளே! உங்கள் பிள்ளைகளாகிலும், பெண்களாகிலும் வாசிக்கப் பள்ளிக்குச் செல்லும்போது, இதுவரையில் கொடுத்திருந்த பக்ஷணங்கள், காபி அல்லது டீ முதலானவைகளை நிறுத்தி, முன்சொல்லிய பழயசாதம் இலையில் போடாமல் கிண்ணியில் போட்டு, மேற்படி சாதத்தின்நீர் அதிகமாய்விட்டு, ஊர்காய்வைத்து சாப்பிட்டபிறகு, அந்நீரை சிறிதேனும் நிறுத்தாமல் எல்லா நீரையும் சாப்பிடும்படிச்செய்து பள்ளிக்கு அனுப்புங்கள். ஆறுமாதம் சென்றபிறகு அதன் அனுபவம் உங்களுக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும். உங்கள் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் இது கைகண்ட அவுஷதமாயிருந்தால், அவர்களின் ஜீவகாலபரியந்தம் மழைக்காலமென்றும், குளிர்க்காலமென்றும் பாராமல் பிரதிதினம் இப்பழயசாதமே சாப்பிட்டுவரும்படிச்

சொல்லவும். நீங்களும் அதுபோல் சாப்பிட்டுவாருங்கள். உங்களுக்கும் எந்நோயும் உண்டாகவே மாட்டா; தேகம் மிகவும் ஆரோக்கியமாயிருக்கும்.

மேற்சொல்லிய பழய சாதத்தில், தயிராகிலும் மோராகிலும் விட்டுச் சாப்பிடலாகாது. அவ்வாறு சாப்பிட்டால் திமிர், சோம்பேரித்தனம், கோட்டாவி, தூக்கம், மந்தபுத்தி முதலானவைகள் உண்டாவதுமேயன்றி வியாதிகளுக்கும் தாய்வீடாயிருக்கும். மேற்படி பழயசாதத்திற்கு இரவு மிகுதியாகும் பதார்த்தம் வைத்துச் சாப்பிடலாகாது. எந்த ஊர்காயாகிலும் வைத்துச் சாப்பிடவேண்டும். இப்பழயசாதமும் ஓர் ஔஷதமென்று நினைத்துச் சாப்பிட்டுவாருங்கள்.

இப்படிக்கு

பரமஹம்ஸ ஸச்சிதானந்தன்

கடிகோட்டை, வீரபல்லி போஸ்ட்டு,
ராயசோடி தாலூக்கா,
கடப்பை ஜில்லா.

ஸ்ரீ சற்குரு பாதந்துணை.

சிறப்புப்பாயிரம்.

இது,

ஸ்ரீ ஷண்முகாநந்தர் மரபில்வந்த

ஸ்ரீ சதாநந்த ஸரஸ்வதி

இயற்றியது.

நேரிசை யாசிரியப்பா.

உலகெலாம் போற்று மொருதனிப் பரஞ்சுடர்
அருளிய வாரணம் பிரம சூத்திரமுங்
கண்ணனெம் பெருமான் கனிந்த கீதையும்
அவன்பதம் பரவிய வனந்தமா முனிவரர்
வேத பாரகர் வித்தகச் செல்வரும்
பாதஞ் சலமுனி பகர்ந்தநூண் முறையும்
யோக சிகோப நிடதக் குண்டலி
யோக தத்துவம் யோக சூடாமணி
ஆத்ம போதம் யாஞ்ஞ வல்கியம்
சர்வ சாரந் தக்ஷிணா மூர்த்தம்
ஏகா க்ஷரத்தோ டிசைந்த சந்யாசம்
ஓதிய வுபநிடத் தாதிய வுயர்நூல்
ஆங்காங் கமைதரு மரும்பொரு ளாய்ந்து
ஈங்குளம் வியம்ப வின்சுவை யிஃதெனு
முத்தமிழ்க் கவிஞர் சித்தங் களிப்புற
எளிதினி லியாவரு மின்பவீ டெய்தும்
யோக சாதனத் துயர்பொரு ளோர்ந்தே
தன்னனு பவத்தைத் தாரணி யுவப்பப்
பொருளல்ல வற்றைப் பொருளென [illegible] மருளும்

பொய்திக ழுல்க முய்வகை முறையே
பொருளி னரும்பொருள் புகன்றனன் புண்ணியன்
அன்னவன் யாரெனி லறைகுதுங் கேண்மின்
கிஞ்சுக மஞ்ஞையுங் கிளர்பூங் காவினங்
கொஞ்சு மாவளர் கோகிலங் குலவு
மதுமலர்ச் சோலையு மாதவிச் சாலையும்
அன்னங் கண்படு பகவிதழ்க் கமலம்
உன்னருந் தண்பணை யோங்கு மொருதனி
நீர்வள நிலவள நெல்வள நிலவிய
சீர்வளம் பொருந்துந் தேடரு மளவில்
அலகில் புகழ்பெறூஉ மாடவர் மங்கையர்
இலகு மெழில்பட ரின்னிசை மன்னிய
பொன்னி னனையர் பொருந்து பூம்பதி
உருப்படு முத்தம ருயர்நலங் கிளர்ந்த
திருப்பனங் காடெனுந் திருப்பதிச் செல்வன்
ஆடகம் வேய்ந்த கூட லம்பதி
சுந்தரன் சோம சுந்தரன் தூய்பதம்
சந்ததம் பரவுஞ் சிந்தைய னுவந்த
சுந்தரன் சோம சுந்தர வள்ளல்
மாட்சி வளர்விசா லாட்சிமுற் பவத்தில்
பழுத்த மனத்தே வழுத்திய தவமெலாம்
ஒருங்கே குழீஇ பொருமக வாகித்
திருந்திய திருவிற் றிருக்குலந் தழைக்கும்
அருந்தவ மியற்ற வாரிய னமர்ந்துளன்
பவக்கடல் கடக்கும் பற்பல துறையே
தவத்திறம் பூண்ட தனியோ குடையரும்
மறைமறை பயின்ற மாதவ ரோதிய
முறைமுறை தேர்ந்த மூதறி வாளன்
குறைவில் சீர்த்தியன் குணப்பெருங் குன்றம்

அன்பருள் வாய்மை யடக்கம ளவில்சீர்
தன்பொரு ளாமெனத் தம்முளம் வளர்த்தோன்
மாரக மிருதரு மாமறைப் பொருளாம்
தாரக நாமத் தனிமுத லிராமன்
தாரகச் சரிதையின் தத்துவ முணர்த்தினன்
முற்று மாய்ந்துணர் தத்துவ னுத்தமன்
வெட்ட வெளியில் விளங்குநன் மரபினன்
முத்தி சாதனத் துத்தம பாகத்
தெத்தகை ஞருமிஃ தெளுதி னுணர்வதாம்
இத்தகை றாலிங் கியற்றி யளித்தனன்
நன்னயம் பெருகும் பெண்ணையாற் றருகின்
களிமது குடையுங் காவுஞ் சோலையும்
அளிமளர் நந்தன மனந்தம் வளந்தரும்
மாட மாளிகை மதிதவழ் கோபுரச்
சிகர மோங்கித் திருமக டிகழ்தருங்
கடைப்பையம் பதியின் கருதருந் தவத்தினன்
அருளொரு வடிவத் தமர்ந்த வாரியன்
நித்தியா னந்த நிமலருக் கினியவன்
ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகசியம்
தாவிலி யோகந் தழைக்கத் தந்ததில்
நிலைநிலை யாமை நிகழ்த்தினன் வெளியாய்
அலையு மனத்தை யகத்தி லடக்கிடும்
பூரக ரேசகம் பொருந்துங் கும்பம்
பயிலும் பான்மையும் பாங்குறும் பத்தியம்
ஆதியா யனைத்து மநுபவித் தறைந்தனன்
உச்சிமேற் புலவ ருவக்கும்
ஸச்சிதா நந்தத் தபோதனன் மாதோ

ரகசியமும், இவ்வன்னதானத்தினால் என்னபலன் உண்டாகின்றதோ அதை அறியவேண்டுமென்று எண்ணி பெரியோர்களைத் தரிசிப்பதற்காக காட்டுக்குச்சென்ற ஒருவன் காட்டில் ஓர் மஹாரிஷியைக்கண்டு, அன்னதான பலன் ரகஸ்யார்த்தங்களை யெல்லாம் அந்த ரிஷியால் தெரிந்து கொண்டு, வரும்போது அளவற்ற பொருளுடன் வந்து பிறகு, அப்பொருள்களை யெல்லாம் அன்னதானம் செய்ய சாஸ்வதமான சிலாசாஸனம் ஏற்படுத்திவைத்த விஷயமும் இந்நூலில் எழுதியிருக்கின்றார்.

எல்லா தானங்களிலும் நிதானமே பெரிது. அதற்குத் தாழ்ந்ததானம் அன்னதானமேயாம். கோதான, பூதான, வஸ்திரதான, கன்னிகாதான, திலாதானமென்று சொல்லும் முப்பத்திரெண்டு தானங்களுக்கெல்லாம் மேற்சொல்லிய அன்னதானத்திற்குக் கீழ்ப்பட்டனவேயாம். ஆதலால், ஒவ்வொரு குடும்பத்திலும், இவ்வன்னதான நூல் அத்தியாவஸ்யமாய் இருக்கவேண்டும். இந்நூலை வரவழைத்து வாசித்தவுடன், இப்படிப்பட்ட அன்னதானமே செய்துவரவேண்டுமென்று ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களுக்கும் இச்சையுண்டாகும். இவ்வாறான, அன்னதானங்களைச் செய்துவந்தால், மறுஜன்மத்தில் நல்லகதிக்குப் பாத்திரர்களாவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால், அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதி இந்நூலை வரவழைத்துப் பார்த்து அன்னதானம் செய்துவாருங்கள்.

தத்துவபரிசோதனை, அன்னதான பலன் மூன்றும் பதிப்பு
விலை அணா 0—8—0 வி. பி. சிலவு, பிரத்தியேகம்.

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி.
169, ஸ்டிராஹன்ஸ் ரோட்டு, குளப்பட்டாளம்
பேரம்பூர் பாரக்ஸ், சென்னை.

ஸ்ரீ பாண்டுரங்காயநம:.

ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம்.

"பக்திர்ஜநி த்ரிஜ்ஞாநஸ்ய, புக்திர்மோக்ஷ ப்ரதாயநி"
என்பது சுருதிப் பிரமாணம்.

ஈசுவர பக்தியில்லாமல் மோக்ஷ ஸாம்ராஜ்ய பதவி உண்டாகவே மாட்டாது. ஆதலால், பக்தியானது சாஸ்வத மாகவும் மோக்ஷத்திற்கு ஆதாரமாகவும் இருக்கின்றது. விசேஷ பக்திசெய்து பகவானை சுவாதீனம் செய்துகொண்டு மோக்ஷத்தை அடைந்த பக்த சிரோமணிகளின் சரித்திரங்களை நாம் வாசிப்பதனால் பாமரத்வம் நீங்கித் துர்க்குணங்கள் ஒழிந்து ஸத்குணங்களுண்டாகப்பெற்றுப் பகவதனுக்கிரஹத்தை அடைய இந்தக் கபீர்தாஸ் சரித்திரமே மிகவும் முக்யமானது. இந்தச் சரித்திரத்தை வாசிப்போர்களும், கேட்போர்களும் ஐஹிக சுகங்களில் விரக்தி யுண்டாகப்பெற்று ஈசுவரபக்தி அதிகரித்து நிற்பார்கள். ஈசுவரபக்தி செய்யவேண்டிய முறை, "ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில்" சொல்லப்பட்டிருக்கின்றது. இனிக் கபீர்தாஸ் சரித்திரம் சொல்லப்போகின்றோம் கேளுங்கள்.

ஸ்ரீமத் அகண்ட மஹீமண்டல மத்யவிராஜமான பரத கண்டத்தில், பக்திக்குப் பீஜஸ்தானமாய் விளங்கும் ஸ்ரீ பண்

டரீபுரத்தில் அமோகமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் சந்திரபாகா நதிதீரமாய் தண்டகாரண்யமென்னும் புண்ணிய வனம் ஒன்றுண்டு. அந்த வனத்தில், தர்ம ஸம் ஸ்தாபனார்த்தமாக பிரஹ்மகுலத்தில் அவதரித்து நாபாஜிஸித்தரெனப் பெயர்பெற்று, பிரஸித்தியடைந்த மஹானுபாவர் ஒருவர் பர்னசாலை நியமித்துக்கொண்டு நிர்மல பிரஜ்ஞையுடன் பிரஹ்மநிஷ்டா கரிஷ்டராய் வீற்றிருந்தார். ஒரு நாள், விருத்த வஸிஷ்டாதி மஹரிஷி வரிஷ்டர்கள், சந்திரபாகா நதியில் ஸ்நாந ஸந்தியானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, நாபாஜி சித்தரிடம்வந்து பக்தி விசுவாஸங்களுடன் அவரை நமஸ்கரித்துநின்றார்கள். உடனே நாபாஜி சித்தர் பிரதி வந்தனம்செய்து அவர்களைத் தர்ப்பாஸனத்தின் மீது எழுந்தருளச்செய்து தானும் ஓர் ஆஸனத்தில் அமர்ந்து முனிபுங்கவர்களைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லினர்.

“ஓ மஹாத்மாக்களே! தேவரீர்களினுடைய பாததூளி இங்குப் பட்டமாத்திரத்தில் அடியேனுடைய ஆசிரமமும் ஜன்மமும் பவித்திரமாயின. தேவரீர்களோ பரிசுத்தர்கள்; பரம தபோதனர்கள்; ஆசிரயித்தவர்களை ரக்ஷிக்கப்பட்ட ஸத்புருஷர்கள். இன்று அடியேனுடைய குடிசைக்கு எழுந்தருளிய காரணம் எதுவோ அதனை ஆஜ்ஞாபித்தால் பூர்த்தி செய்வித்துக் கிருதார்த்தனாகின்றேன்” என்று அதி விநயமாய்ச் சொல்லினர். அதைக்கேட்ட விருத்தவஸிஷ்டர் சொல்லுகின்றார்.

“ஓ மஹானுபாவா! நீர், பிரஹ்மநிஷ்டை செய்யப்பட்டவர்களில் அதிக சிரேஷ்டமானவர். அஷ்டசித்திகளும் தேவரீருடைய ஆசிரமத்திற்குத் துவாரபாலகர்களாயிருக்கின்றன. உம்மைப்போல் ஜ்ஞானமடைந்தவர்கள் இந்தப் பூலோகத்தில் ஒருவருமில்லை. பிரபஞ்சத்தில் உமக்குத்

தெரியாத விஷயம் எதுவுமில்லை; நீரோ மஹானுபாவர். உமது தர்சனம் ஸாமாந்யர்களுக்கு லபிப்பது மிகவும் கஷ்டம். அதிர்ஷ்ட வசத்தினால் அடியேங்களுக்குச் சுலபமாய் லபித்தது; அதனால் அடியேங்களினுடைய ஜன்மங்கள் கிருதார்த்தமாயின; எங்களுடைய அஜ்ஞானம் நீங்கிற்று. எவ்வளவு வர்ணித்தபோதிலும் உமது மஹாமஹிமைக்கு அபாரமொன்றுண்டோ? உலகத்தில் பக்திசெய்து முக்தியடைந்த மஹானுபாவர்களாகிய ஸ்ரீ கபீர்தாஸ், ஸ்ரீ துளசிதாஸ் ஸ்ரீ ஜ்ஞானதேவ், ஸ்ரீ வாமதேவ், ஸ்ரீ நாமதேவ், முதலாகிய பக்தர்களின் சரித்திரங்களை ஸவிஸ்தாரமாய்த் தெரிவித்து அடியேங்களைக் கிருதார்த்தர்களாக்கவேண்டும்” என்று கேட்க, விருத்தவசிஷ்டர் சொல்லத்தொடங்கினர்.

அதைக்கேட்ட நாபாஜிஸித்தர் மந்தஹாஸத்தையுடைய முகாரவிந்தராய், மஹரிஷிகளைப் பார்த்து “ஓ மஹாத்மாக்களே! நல்ல பிரஸ்நை (கேள்வி) கேட்டீர்கள்; இதனால் அடியேன் பரமானந்த பரிதனானேன். பெரியோர்களால் கேள்விப்பட்ட இவ்விஷயங்களை அடியேனுக்குத் தெரிந்தவரையில் சொல்லுகின்றே” னென்று சொல்லிப் பாண்டுரங்க மூர்த்தியைத் தமது இருதய கமல கர்ணிகா மத்தியில் நிறுத்தித் தியானம்செய்து நமஸ்கரித்துப் பின்வருமாறு சொல்லினர்.

“ஓ மஹாத்மாக்களே! நீங்கள் முதல்முதல் கபீர்தாஸ் சரித்திரத்தைக் குறிப்பிட்டுச் சொன்னபடியால், அவரது சரித்திரங்கள் சொல்லி முடிந்தவுடன் மற்றச் சரித்திரங்களைச் சொல்லுகின்றேன். ஸாவதான சித்தத்துடனிருந்து கேட்பீர்களாக.

பூர்வத்தில் “தமால்” என்னும் பெயரையுடைய மஹம்மது மதஸ்தர் ஒருவர் காசீ நகரத்தில் நிவாஸம்

செய்துகொண் டிருந்தார். அவர் மிகவும் இருதய சுத்தமுடையவராயும், பகவத் பக்தராயும், பாப ரஹிதராயும், மதபேதங்களில்லாதவராயும், எப்பொழுதும் ஸத்புருஷர்களைச் சேவித்துக்கொண்டு சன்மார்க்கத்தில் பிரவர்த்தித்துக்கொண்டிருப்பார். இவர், ஜீவ ஹிம்சை செய்யும் வம்சத்தில் ஜனித்திருந்தபோதிலும் ஜீவ வதையென்னும் வார்த்தையைக் காதில் கேட்டமாத்திரத்தில் உடல் நடுங்கிப் பதைபதைத்துத் துடிதுடித்து மூர்ச்சையுற்றுச் சோர்ந்துவிடுவார்; எந்த ஜீவஜந்துக்களின்மீதும் மிகவும் பச்சாத்தாபமுடையவர்; எந்த ஜந்துக்களுக்கும் கெடுதி வாராதபடி மிகவும் ஜாக்கிரதையுடன் வீற்றிருப்[illegible]. இவ்வித குணங்களிருப்பதால் தம் ஜீவனத்திற்கு உத்தமமான தொழில் எதுவென்று ஆலோசித்துப்பார்த்து, நெசவுத்தொழிலே சிரேஷ்டமானது. இஃது, எவர்களுக்கும் பாதையைத் தரத்தக்கதல்லவென்று எண்ணிக் கைத்தொழில் செய்யும் சிலரை ஆசிரயித்துக் கிரமக் கிரமமாய் நெசவு வேலையைக் கற்று அதனைத் தமது பார்யாளுக்கும் கற்றுக்கொடுத்து, இருவருமாய்ப் பட்டுவஸ்திரங்களை நெய்து, அதனால் வரும் லாபத்தில் பாதி எழைகளுக்குப் பங்கிட்டுக்கொடுத்து, மிகுதி பாதியைத் தமது கிருஹ கிருத்தியங்களுக்கு உபயோகித்துக்கொண்டு மிகவும் ஸந்தோஷத்துடன் காலக்ஷேபம் செய்துவந்தனர். அப்போது அந்தப்பட்டிணத்தில் நெசவுத்தொழிலில் கைதேர்ந்தவர்கள் இவரைவிட மற்றொருவர் இல்லை. எப்பொழுதும் ஸத்புருஷர்களுடன் ஸஹவாஸம் செய்து ஸன்மார்க்கத்தில் பிரவர்த்தித்துத் தன்னால் இயன்றவரையில் எழைகளுக்கு உபகாரஞ்செய்துகொண்டு அஹிம்சை (ஜீவஹிம்சை) விரதத்தை மிகவும் நீதியுடன் அனுஷ்டித்துக்கொண்டு வருவதனால், காசிதேசத்திலுள்ள

ஜனங்களெல்லோரும் இவரை மிகவும் சிரேஷ்டமாய் நினைத்துவந்தார்கள்.

இவரது மனைவியாகிய ஜிஞ்ஜாபீபீ என்பவள் தனது நாயகனை தெய்வமென்று எண்ணி அவரது ரூபத்தைத் தனது இருதய கமலமத்தியில் நிறுத்தி நித்திரைவேளை தவிர மற்ற வேளைகளிலெல்லாம் தனது நாயகனையே நினைத்துக்கொண்டிருப்பாள். 'கள்ளக்காதலனிடத்தன்பு கலந்து வைத்தொழுகும், உள்ளக்காரிகைமடைந்தைப்போல்'. அஃதாவது, பரபுருஷ கமனமுடைய ஓர் ஸ்திரீ, தன் வீட்டிலுள்ள புருஷனுடையவும், மாமி, மாமன், மூத்தார், மைத்துனர்கள், நாத்தி[illegible] முதலானவர்களினுடையவும் இஷ்டானுஸாரமாய் நடந்துகொண்டிருந்தபோதிலும் அவளது மனம்மாத்திரம், எப்பொழுதும் சோரநாயகனிடத்திலேயே லயித்து அவனையே சதா நினைத்துக்கொண்டு அவனிடம் சேர்வதற்குத் தக்க ஸமயங்களை எப்படி எதிர்பார்த்துக்கொண் டிருப்பாளோ அதுபோல், ஜிஞ்ஜாபீபியும் கிருஹஸ்தாசிரமத்திலிருந்துகொண்டு தன் வீட்டில் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் முன் சொல்லிய சோரநாயகியைப்போல், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களால் செய்துகொண் டிருந்தபோதிலும், அவள் தன்னுடைய மனதை மாத்திரம் அவ்வேலைகளில் பற்றவிடாமல் சதா தன் இருதயகமலத்தில் நிறுத்தியிருக்கும் தனது நாயகனது ரூபத்திலேயே ஐக்கியம் செய்துகொண்டிருப்பாள். இதுவிஷயம் இன்னும் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளோர் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம்-5, ச. 11-ல், விரிவாய்க் காணலாம்". ஜிஞ்ஜாபீபி நாயகன் கார்யார்த்தமாய் வெளியில் சென்று வரும்போது அவரை எதிர்கொண்டழைத்து வந்து ஓர் ஆஸனத்தில் உட்காரச்செய்து அவருடைய

இரண்டு பாதங்களையும் தட்டில் வைத்து அலம்பி, பாத தீர்த்தம் சாப்பிட்டுச் சிரசில் தெளித்துக்கொண்டு பட்டுப் பீதாம்பரத்தினால் துடைத்து இளைப்பாறும்படி விசிறியினால் சிரமம் தீரும்படி சிலநேரம் விசிறி பிரியவசனங்களினால் அவரைச் சந்தோஷப்படுத்துவாள். இன்னும்,

“கார்யேஷு தாஸி கரணேஷு மந்த்ரீ போஜ்யேஷு மாதா ஶயனேஷு ரம்பா தர்மாநுஸாரீ க்ஷமயா தரித்ரீ ஷட்குண்ய பார்யா குலமுத்தரந்தீ”

என்னும் வாக்கியரீதியாய்ப் புருஷனது ஸர்வகார்யங்களிலும் யோசனை செய்வதில் மந்திரியைப்போலவும், சரீர ஸம்ரக்ஷணையில் தாயைப்போலவும், காமபோகத்தில் ரம்பையைப்போலவும் உபசரித்துக்கொண்டு, அவரது வார்த்தையை மீறி நடவாமலும், தன் புருஷனுக்கு வேண்டாதவர்கள் தனக்கு நெருங்கிய பிராண சிநேகிதர்களாயிருந்தபோதிலும் அவர்களின் முகதரிசனம் செய்யாமலும் அவர்களைக் கனவிலும் நினையாமலிருப்பாள். துஷ்ட ஸ்த்ரீகளுடன் எப்பொழுதும் ஸஹவாசம் செய்யாமல், ஸத்குண ஸத்கிருத்தியங்களையுடைய ஸ்த்ரீகளுடன் பேசிக்கொண்டிருப்பாள். இப்படிப்பட்ட பதிவிரதா குணங்கள் ஒன்றும் தவறாமல் இருப்பதனால், இவ்வம்மையாரை எல்லோரும் புகழ்ந்துகொண்டிருப்பார்கள். இப்படியிருக்க,

ஒருநாள் தமால் வெளியில் சென்றிருக்கும் சமயத்தில் ஜிஜ்ஜாபீபீ ஏகாந்தமாய் உட்கார்ந்து நெசவுத்தொழிலைச் செய்துகொண்டிருந்தாள்.. அதுசமயம், அவ்விடத்திற்கு ஓர் பகீர் வந்தார். அவரோ சாமான்யரல்லர். பின் எப்படிப்பட்டவரென்றால், இந்திரியங்களென்னும் வீரர்களையும், அந்தக்கரணங்களென்னும் சேனாதிபதிகளையும், ஸங்கல்பங்களென்னும் அலைகளையும், மத மச்சரங்களென்னும் மதகஜங்களையும் மாநாபி மானமென்னும் ரதங்களையும், எண்ணங்களென்னும் சாரதிகளையும், ஜீவத்வமென்னும் ராஜனையும், ஞானமென்னும் பாணத்தினால் கண்டகண்டங்களாய்க் கண்டித்து மறுபடியும் அவைகளைத் தலைகாட்டாவண்ணம்செய்து ஸதாநந்தமனுபவித்து, பாசமென்னும் புரத்தைவிட்டு, ஆசையென்னும் கிருஹத்தைத் தீமூட்டி, காமமென்னும் காமனை விடுவித்துக்கொண்டு, நிஷ்காம்யமென்னும் பார்யாளுடன் எப்பொழுதும் ஸந்தோஷமனுபவித்துக்கொண்டு ஏகாந்த ஸ்தலத்திலிருந்து யோகமார்க்கத்தை அனுஷ்டித்து வந்தவர். எப்படிப்பட்டவர்களாயிருந்தபோதிலும் அவரைக் கண்டவுடன் எழுந்து மரியாதை செய்யவேண்டுமென்னும் எண்ணத்தை உண்டாக்கும் கம்பீரமான முகவிலாஸமுடைய பகீரியை ஜிஜ்ஜாபீபீ பார்த்தவுடன் எழுந்திருந்து உசிதாஸனத்தில் வீற்றிருக்கும்படிச்செய்து அஞ்சலி ஹஸ்தமுடையவளாய் (இரண்டு கைகளையும் குவித்து) நின்றாள். அவளது பக்தி சிரத்தைகளுக்குப் பகீர் ஸந்தோஷித்து ஆஹா! இப்படிப்பட்ட தர்ம குணங்களுடைய ஸ்த்ரீபுருஷர்கள் உலகத்திலிருப்பது மிகவும் அரிது; பகவதனுக்ரஹத்தினால் இவர்களுக்கு எல்லா பாக்கியங்களும் ஸம்பூர்ணமாயிருக்கின்றன; புத்திர பாக்கியம் ஒன்றுதான் இல்லாமலிருக்கின்றது; அதுவும் உண்டாகும்பக்ஷத்தில் இவர்களைப்போன்ற மஹா பாக்ய ஸம்பன்னர்கள் மற்றொருவரும் இரார்கள் என்று தமக்குள் தாமே ஆலோசித்து, மிகவும் கருணையுடையவராய் அவ்வம்மையைப்பார்த்து ‘அம்மா! உனக்கு ஸகல ஸத்குணங்களுமுடைய புதல்வன் ஒருவன் கிடைக்கப்போகின்றான். அவனால் நீங்களும், உங்கள் வம்சத்தார்களும் நிஸ்ஸம்சயமாய் (ஸந்தேஹமில்லாமல்) கடைத்தேறப்போகின்றீர்கள்’’ என்று சொல்லித் தம் வழியாய்ச் சென்றார். அவ்வார்த்தைகளைக் கேட்ட ஜிஜ்ஜாபீபீ மிகவும் ஸந்தோ

ஷித்து, புருஷன் வந்தவுடனே தனக்குப் பகீர் சொன்ன விஷயங்களை எல்லாம் ஒன்றுதவராமல் சொல்லி "பகீர் ஆஸீர்வாதம் செய்ததுபோல் எனக்குச் ஸந்தானமுண்டாகுமா" வென்று கேட்டாள்.

அதற்குத் தமால் "பைத்தியக்காரீ! ஏன் இவ்விதமான மயக்கத்தை அடைந்திருக்கின்றாய்; உனக்கோ யௌவனம் போய் கிழத்தனம் தலையெடுக்க ஆரம்பித்துவிட்டது; இப்படிப்பட்ட வயதில் ஸந்தானம் உண்டாவது மிகவும் ஆச்சர்யகரமாயிருக்கின்றது; இப்பொழுது நீ கொண்டிருக்கும் எண்ணம் நிறைவேறுமென்று நான் எண்ணவில்லை" என்றார். அதற்குச் ஜிஜ்ஜாபீபீ "ஆம்; தாங்கள் சொல்லியதுபோல் எனக்கு யௌவனம் கடந்துவிட்டது; ஸ்த்ரீகள் மாதவிடாயானதுமுதல் பன்னிரண்டு வருஷங்களுக்குள் ஸந்தான முண்டாகவேண்டுமென்றும், அதன் பிறகு உண்டாவது துர்லபமென்றும் வதந்தியுண்டேயொழிய, கெடுவு கடந்தபின் ஸந்தான முண்டானவர்களும் சிலர் இருக்கின்றார்கள் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன்; பிராரப்த மிருந்தால் அவ்வாறு ஏன் உண்டாகலாகாது" என்று சொன்னாள். அதைக்கேட்ட தமால் பக்கென்று சிரித்து "ஆஹா! இன்னும் நிச்சயமாய் ஸந்தானம் உண்டாகுமென்று நம்பிக்கொண்டிருக்கின்றாயா? இனி நீ இந்த நம்பிக்கையை விட்டுவிடு; எவராகிலும் இதைக்கேட்பாராகில் பரிஹாசம் செய்வார்கள். தலை நரைத்துவிட்டது, தந்தங்கள் வீழ்ந்துவிட்டன, சரீரம் சுருங்கியது, மூன்றாவது காலும் (ஊன்று கோலும்) தேடவேண்டியதாயிருக்கின்றது. இதுதானா கர்ப்பம் தரிப்பதற்குச் சின்னங்கள் (குறிகள்) இந்த மாயா வார்த்தைகளை ஏன் நம்புகிறாய், இந்த நம்பிக்கையை விட்டுவிடு" என்று சொல்லினர். அதைக் கேட்டவுடன் ஜிஜ்ஜாபீபீ மனதிற்கு வருத்தமுண்டாய்

சில நிமிஷங்கள் சும்மா இருந்து "ஆம் தாங்கள் சொன்ன வார்த்தை வாஸ்தவமே. ஆயினும், பெரியோர்களின் வார்த்தைப் பொய்யாகாதென்னும் எண்ணம் என்மனதிற் குடிக்கொண்டிருக்கின்றது. பூர்வம் நம்மவர்களில் மிகவும் பிரஸித்தியடைந்த 'வலீ' (ருஷீ) ஒருவர் தேசத்தைத் தலைகீழாய்ச் செய்தாரென்னும் 'மந்ஸூர்' என்னும் மஹானுபாவர் சூர்ய பகவானை ஓர் மலையின்மீது வரவழைத்தாரென்றும், இறந்த குழந்தைகளைப் பிழைப்பித்தார் என்றும் சொல்லியிருப்பதை நாளதுவரையில் கேட்டு வருகின்றோமல்லவா? உலகத்தில் மஹான்களுக்குச் சாத்தியமாகாத கார்யமும் ஒன்றுண்டோ? எனக்கு ஆசீர்வாதம்செய்த மஹாத்மாவிற்குச் சாத்தியமாகாத கார்யமும் ஒன்றுண்டோ? என் மனோரதம் ஏன் சித்திக்கலாகாது" என்று வார்த்தையாடினாள். அதைக்கேட்ட தமால் "இந்த வீண்வார்த்தையினால். காலத்தை விருதாவாய்க் கழிப்பதில் பிரயோஜனமென்ன; மனதை நிறுத்திப் பகவத்பக்தி செய்துவந்தால் அளவற்ற ஆனந்தத்தையடைவாய். குழந்தை குழந்தையென்றுஏன் மனக்கவலைக் கொண்டிருக்கின்றாய்; இதுகாலம் வரையில் பகவத்பக்திசெய்து, பாகவ தோத்தமர்களைப் பூஜித்து, அந்திய காலத்தில் இஹலோக சுகத்தில் அகப்பட்டு, கடைத்தேறவேண்டிய மார்க்கத்தைப் பூர்த்தியாய் மறந்துவிட்டாய். விவேக முடைய நீ, கேட்கவேண்டிய பலன் நித்தியமான பதார்த்தத்தையா அல்லது அநித்தியமான பதார்த்தத்தையா. இதை நீயே சற்று ஆலோசித்துப்பார். இந்த ஆசா பிசாசங்களை உன் இருதயத்திலிருந்து வெளிப் படுத்தி நிச்சிந்தையாயிரு" என்று நல்ல வார்த்தையைப் போதித்துத் தனக்கு வேண்டிய வரையில் பட்டை யெடுத்துக்கொண்டு கங்காநதி தீரத்திற்

குச் சென்று ஓர்ப்புறமாய் உட்கார்ந்து பட்டை விடுவித்துக்கொண்டிருந்தார்.

அதுசமயம் அநேகர்கள் கும்பல்கூடி கங்காதேவிக்கு விநய பூர்வகமாய்ப் பூஜைசெய்து முடித்தவுடன், மாங்கல்ய ஸ்திரீகளுக்கெல்லாம் புஷ்பம், பழம், தாம்பூலம் கொடுத்து தம்பதிகளை ஆராதித்து "பாகிரதி! எங்கள் பாபத்தைப் போக்கி வம்ச விருத்தியடைய புத்திரர்களை அனுக்கிரகித்து எங்களைப் பவித்திரர்களாகச் செய்யக்கடவாய் தாயே" என்று பிரார்த்தித்துக்கொண் டிருந்தார்கள். இவைகளையெல்லாம் பார்த்திருந்த தமால், தனக்குள் தானே என்ன ஆலோசிக்கின்றா ரென்றால் "ஐயையோ! தாரேஷணை, தனேஷணை, புத்திரேஷணை என்னும் ஈஷணாத்திரயங்களில் புத்திரேஷணையே மிகவும் விசேஷமாயிருக்கின்றது. இஃது எப்படிப்பட்டவர்களையும் விட்டதல்ல, துக்கமயமாகிய புத்திரமோகத்தில் அகப்பட்டு மிதியுண்டுகிடக்கும் இவர்களின் புத்தியீனத்தை என்னவென்று சொல்லலாம்: இந்த புத்திர வாஞ்சையைவிட்டுப் பகவானை ஆராதித்து சந்தோஷப்படுவது பரமோத்தமமென்று இவர்களுக்குத் தெரியாமற் போயிற்றல்லவா? பகவதாராதனையினால் உண்டாகும் ஆனந்தம் கனவிலும் நினையாதவர்களாய்க் காணப்படுகின்றார்கள். ஐயோ! மந்தமதியுடையவர்களே! உங்களுக்கேன் இந்தத் துராசையென்னும் பிசாசம் பிடித்துக்கொண்டிருக்கின்றது. எவ்விதமாய் இவர்கள் கடைத்தேறப்போகின்றார்கள். மஹா ஆனந்தத்தை மறந்து இந்தச் சிறிய ஆனந்தத்திற்கு இவ்விதமாய் அலைகின்றார்கள். இதனால் இவர்களுக்கு உண்டான பலன் யாது? அநுபவிக்கும்போதல்லவா இதன் கஷ்டசுகங்கள் இப்படிப்பட்டவைகளென்று தெரியவரும்.

ஓஹோ! இவர்களைப் பிடித்துக் கொண்டிருக்கும் பிசாசு சீக்கிரமாய் விடுவதாகக் காணப்படவில்லை. அற்ப

சுகத்திற்காக எவ்வளவு பிரயாசைப்படுகின்றார்கள் பார். இது, எப்படிப்பட்ட பாழும் மோஹமோ தெரியவில்லை; இம்மோஹம் உலகத்தாரை விருதாவாய்ப் பாழாக்குகின்றது.

இது, இப்படிப்பட்ட மோஹம் அல்லாவிடில் எனது பாரியாள் என்னுடன் இவ்வளவு தர்க்கவாதம் வாதிப்பாளா? சர்வசக்தியுடைய பகவானே! உனது மாயை உன்னைவிட இதரர்கள் அறிய சாத்தியமாகமாட்டாது. ஆஹா! உலகத்தில் இன்னும் எப்படிப்பட்ட மோஹபாசத்தினால் கட்டி ஆட்டுகின்றாயோ தெரியவராது. எந்தக் காரணத்தினால் எனது பாரியாளுக்குச் சந்தானம் அனுக்கிரகிக்காமல் போனீரோ தெரியவில்லை. அவள், புத்திர மோஹமென்னும் மஹா அந்தகார (இருளடைந்த) குகையில் அகப்பட்டு வழிகாணாமல் தத்தளித்துக்கொண் டிருக்கிறாள். அவளுக்கு எப்பொழுது சுயம்பிரகாசம் லபித்து, இருளடைந்திருக்கும் குகையிலிருந்து வெளிப்படுவாளோ அதையான் அறியாமலிருக்கின்றேன். யதார்த்த ஞானம் அவளுக்குஉண்டாயிருந்தபோதிலும் இந்த ஓர் விசனம்மாத்திரம் அவளை விட்டதல்ல. துக்க சுபாவமுடைய மாதர்களுடன் கூடி வாழ்வதைவிட கானகம்சென்று சருகு, காய், கனிகளைப் புசித்துப் பகவத் தியானம் செய்து கடைத்தேறலா"மென்று அநேக விதங்களாய் எண்ணிக்கொண்டு பராக்கா யிருந்தபடியால் தன் கையிலிருந்த பட்டுநூல் நழுவி கங்கையில் வீழ்ந்து அடித்துக்கொண்டுப் போய் விட்டது.

பிறகு தமால் திடுக்கிட்டு கங்கை ஜலம் அடித்துக் கொண்டு சென்ற பட்டுநூலைக் காணாமல் "இதுவரையில் ஆலோசித்ததற்கு இதுவல்லவா பிரயோஜனம். ஆஹா! நான் எவ்வளவு பைத்தியம் பிடித்தவன்; கையிலிருந்த

நூலைப் போக்கடித்துக்கொண்டு வியசனத்திற்கு உட்பட்டேன்; புத்திர மோஹமும் இப்படிப்பட்டதுதான் போலிருக்கின்றது. அற்ப ஆனந்தத்திற்கு ஆசைப்பட்டு பகவதாராதனையினால் உண்டாகும் மஹா ஆனந்தத்தைப் போக்கடித்துக்கொண்டு துக்கப்படுவது வாஸ்தவமென்னும் திருஷ்டாந்தம் இப்போதல்லவா தெரியவந்தது. யோசித்துப் பார்த்தால் சந்தானமில்லாவிடினும் துக்கமே; சந்தானமிருந்தாலும் துக்கமே; ஜீவித்திருந்தாலும் துக்கமே; இறந்தாலும் துக்கமே; இப்படி அநேக துக்கங்களுக்குக் காரணமாயிருக்கும் குழந்தைகளைப் பெற்றதனால் என்ன சுகமனுபவிப்பார்களோ தெரியவராது. விவேகியானவர்கள் இதை எப்பொழுதும் கனவிலும் நினையார்கள். பன்றியுடன்கூடிய பசுவும் கெட்டதுபோல், பாமரர்களின் பரிசம் (காற்று) பட்டவுடன் பரம வைராக்கியத்தைப் போக்கடித்துக்கொண்டேன். வட்டிக்கு ஆசைப்பட்டு முதலைப் போக்கடித்துக் கொண்டதுபோல் கெட்ட எண்ணங்களுக்கு உட்பட்டு வியர்த்தமாய்ப் பட்டு நூலைப் போக்கடித்துக்கொண்டேன்; இது ஐம்பது பகீரிகளுக்குத் திருப்தியாய்ச் சந்தர்பணைச்செய்ய உபயோகப் பட்டிருக்கும். அநியாயமாய்ப் போயிற்றல்லவா" என்று விசனப்பட்டு, அதைக் கண்டுபிடிப்பதற்காகக் கங்கையோரமாய் நின்று எங்குப் பார்த்தபோதிலும் நூல் காணப்படவில்லை. நெடுநேரம் பார்த்து, திரும்பிச் சென்றார். பின்னும் நூலை விட்டுப்போக மனமில்லாததால் மறுபடியும் கங்கையிடம் செல்வார். இவ்விதமாகப் பல முறைகளில் திரிந்து திரிந்து நதியோரமாகவே நெடுந்தூரம் சென்று கடைசியில் நிர்மானுஷ்ய (மனிதர்களில்லாத) ஆரணியத்தில் பிரவேசித்தார். பிரவேசித்தவுடன்; தமக்குள் தாமே என்ன ஆலோசிக்கின்றாரென்றால்; "ஆஹா! அதிக ஆசை, ஆபத்துக்கு மூல

மென்னும் பழமொழி நிச்சயமாயிற்றே? அற்பமாகிய நூலிற்கு ஆசைப்பட்டு, கால்கள் கொப்பளிக்கும்படி கங்கையோரமாகவே வெகுதூரம் நடந்துவந்தது விருதாவாயிற்றல்லவா? இதனால் என்ன பலத்தை அடைந்தோம்? மனதில் ஏதோ கவலையை வைத்துக்கொண்டு தீராத விசனத்துடன் இருக்கும் பாரியாளுடன் கூடியிருப்பதைவிட, இந்தக் கானகத்தில் (காட்டில்) வசித்து, சருகு காய் கனிகளைத் தின்று பகவத்தியானம் செய்துகொண்டிருப்பது உத்தமமென்றும், இதைவிட வேறு சுகமில்லையென்றும், நிச்சயித்துக்கொண்டு அவ்வனத்திலேயே பர்ணசாலை நியமித்துக்கொண்டு உட்கார்ந்து பகவானை நினைத்துத் தவஞ் செய்ய ஆரம்பித்தார்.

ஸ்ரீ சுகர் சிசுரூபமாய்ப் பூலோகத்திற்கு வருதல்.

இவ்விடத்தில் இப்படியிருக்க, பரமபதத்தில் லோகரக்ஷகனாகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தி, அநந்த கருட விஷ்வக் சேநாதிகளுடன் மணி மண்டபத்தில் சூழப்பட்டு நவரத்தினம் இழைத்த சிம்மாசனத்தின்மீது வீற்றிருந்தார். அப்போது சுக மகரிஷியைப்பார்த்து; "ஐயா! சுகமுநீந்திரா! பூலோகத்தில் மாயை என்பது விருத்தியடைந்து பக்திமார்க்கம் நசித்துவிட்டது; அதைச் சீர்திருத்தி வரவேண்டுமென்று நாம் முன் ஆலோசித்திருந்தோமல்லவா? அந்த முறை இப்போது உமக்குவந்தது. ஆதலால் நீர் சீக்கிரம்சென்று, காசிதேசத்தில் வசித்துக்கொண்டு, அஹிம்ஸா (கொல்லா) விரதத்தை அநுஷ்டித்து நெசவுத்தொழிலால் ஜீவனம் செய்து எப்பொழுதும் சத்புருஷர்களையே சேவித்துக்கொண்டு சாந்தசித்தனாய் வசித்துக்கொண்டிருக்கும் 'தமா'வினுடைய பாரியாள் பதிவிரதா

விரதம் பூண்டு புத்திர சந்தானம் இல்லையே யென்று என்னையே துதிசெய்துகொண்டிருக்கும் ஜிஜ்ஜாபீபீ கர்ப்பத்தில் நீர்போய் அவதரித்து, கர்மபூமியிலுள்ள பாமரர்களையும் மிலேச்சர்களையும் (மகம்மதியர்களையும்) நல்லவழிக்குக் கொண்டுவரவேண்டும்'' என்று சொல்லினர். மாயையைக் கடந்து, சகஜாநந்த ஸம்பத்தால் தம்மைத்தாம் மறந்து நிஷ்டைசெய்யும் சுகப்பிரம்ம ரிஷியானவர் பகவத் வாக்கியத்தைக் கேட்டவுடன் திடுக்கிட்டு மெய் சோர்ந்து வியர்த்துச் சற்றுநேரம் சென்றபிறகு தெளிவு உண்டாய் பகவானைப் பார்த்து "ஓ ஸ்வாமி! தேவரீர் ஆஞ்ஞாபித்த விஷயம் அதிக ஆச்சரிய கரமா யிருக்கின்றது. கர்ப்ப நரகத்தில் வீழ்ந்து மாயையால் கட்டுப்பட்டு, அஞ்ஞானாந்தகாரத்தினால் மிதியுண்டு அளவற்ற அகங்கார மமகாரங்களில் ஆழ்ந்து பிரம்ம ஞானத்தைப் போக்கடித்துக்கொண்டு, உமதுமீதிருக்கும் பக்தியை மறந்து, சம்சார சக்கரத்தில் அகப்பட்டுப் புண்ணிய பாபகர்மங்களைச் செய்துகொண்டு, அந்தப் புண்ணிய பாப பலன்களை அனுபவிப்பதற்காக ஸ்தூல சரீரத்தைவிட்டு மரணமடைந்து, சூக்ஷ்ம சரீரத்துடன் தேவலோகம் சென்று, அங்குள்ள தேவதா சரீரத்திற் புகுந்து போகானுபோகங்களைச் சிலநாள் அனுபவித்து மறுபடியும் பூர்வ கர்மானுசாரமாய் அந்தத் தேவதா சரீரத்தை விட்டுவிட்டுப் பூலோகத்தில் தாயின் கர்ப்பத்திலிருக்கும் ஸ்தூல சரீரத்திற் போய்ப் புகுந்துகொண்டு சிசுவாய்ப் பிறந்து, மறுமடியும் பூர்வ கர்மானுசாரமாய் கர்மங்களைச் செய்துகொண்டிருந்து மரணமடைந்து சொர்க்க நரகங்களிலிருந்து மறுபடியும் பூலோகத்தில் ஜன்மித்து இவ்வண்ணம், ஜலப்பிரவாகத்துச் சுழலில் அகப்பட்டுக்கொண்ட புழுவானது அந்தச் சுழலிலிருந்து தப்பித்துக் கொள்வதற்குச் சக்தியில்லாமல் அந்தச் சுழலில்

தானே சுற்றிச்சுற்றித் திரிந்து உழல்வதுபோல், ஜனன மரண பிரவாகச் சுழலில் அகப்பட்டுக்கொண்டு பலகால் பிறந்தும் இறந்தும், அதினின்றுந் தப்பித்துக்கொண்டு போக சக்தியில்லாமல் அலைந்து தத்தளித்துக்கொண்டிருக்கட்டும் என்று எண்ணுகின்றீரோ என்ன'' என்று அதிவிநயத்துடன் சுகப்பிரம்ம ரிஷி சொல்லினர். அதற்கு ஸ்ரீமந் நாராயணமூர்த்தி மந்தஹாஸம் செய்து "இல்லையில்லை, அஞ்ஞானிகளுக்கு நிர்மலமாகிய கர்மம், பக்தி, ஞான மார்க்கங்களை உபதேசித்துக் கடைத்தேறச் செய்யும் பொருட்டே அவ்விதமாய்ச் சொன்னேனே யொழிய வேறல்ல. அவசியமாய் நீர்சென்று அந்தக் காரியத்தைச் செய்துவரக்கடவீர்'' என்று சொல்லினர். அவ்வார்த்தையைக் கேட்ட சுகர் சிலநேரம் யோசித்து "சரிசரி நல்ல வார்த்தையைச் சொன்னீர். நான் சென்று மாயையில் அகப்பட்டுக் கொண்டபிறகு பாமரர்களை நான் கடைத்தேறும்படி செய்யப்பட்டவனாகவே யிருப்பேன்! உமது மாயையின் மகிமை இப்படிப் பட்டதென்று தெரிந்து கொள்ள எவர்களுக்கும் சாத்திய மாகாவிடினும், தேவரீர் அநுக்கிரஹத்தினால் அடியேன் கிஞ்சித்மாத்திரம் தெரிந்து கொண்டிருக்கின்றேன். இந்தக் காரியார்த்தமாய் முன் சென்றவர்கள் பட்டபாட்டை அடியேன் பார்த்திருக்கவில்லையா? அப்பப்பா! உமது மாயையின் காற்று திருணமவ்வளவு வீசினாலும் கோடி ஜன்மங்களுக்கும் விடாமல் பாதாளத்தில் ஆழ்ந்துபோகவேண்டியதே! பாமரர்களைக் கடைத்தேற்றவேண்டுமென்று இச்சை யிருக்கும் பக்ஷத்தில் உமது மாயையினுடைய திரையைச் சற்று நீக்கினால் பிரபஞ்சத்திலுள்ள எல்லோரும் கிருதார்த்தராகின்றார்கள்'' என்று சொல்லினர். அதற்குப் பகவானான நாராயணமூர்த்தி சொல்லுகின்றார். "அப்பா சுகப்பிரம்மமே!

எதற்காக நீர் இவ்விதமாய்ப் பயப்படுகின்றீர்? என்னால் அனுப்பப்பட்ட உமக்கு இப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஏன் உண்டாகும். கண்களுக்கு இமைபோல், எப்பொழுதும் உம்மைக் காத்துக்கொண்டிருக்கமாட்டேனா? எந்தெந்தக் காலத்தில் எவ்வெவ் விதமாய் உலகத்தைக் காப்பாற்றவேண்டுமோ அதுபோலல்லவா காப்பாற்றவேண்டியது எனது தர்மம். அதற்கு மாறுபாடாய் நீர் சொல்லியதுபோல் செய்தால், சிருஷ்டி ஸ்திதி சம்மாரங்கள் முதலாகிய நியமங்களுக்கு லோபத்துவம் உண்டாய்ப் பலவிதமாகிய கஷ்டங்கள் உண்டாகும். ஆதலால், ஒரே முறையாய் எல்லோரையும் கிருதார்த்தர்களாய்ச் செய்யவேண்டுமென்னும் வார்த்தை உத்தமமாய் இருப்பதாய்க் காணப்படவில்லை. கிரமக்கிரமமாய் ஜனங்களைத் துன்மார்க்கத்திலிருந்து நீக்கிச் சன்மார்க்கத்திற்குக் கொண்டுவருவதே யுத்தமானது'' என்று சொல்லினர். அதைக்கேட்ட சுகர் "நல்லது அவ்வாறு நீர் செய்யாமற் போனால் போகட்டும்; இதுவரையில் அடியேனுக்கு ஆஞ்ஞாபித்ததே போதுமானதாயிருக்கின்றது. இப்போதே பூலோகத்திற்குச்சென்று தேவரீருடைய திவ்யப் பிரபாவங்களை யெல்லாம் வெளிப்படுத்திப் பாமரர்களுக்கெல்லாம் பிரம்மஞானத்தைப் போதித்து, முமுக்ஷுக்களாய்ச் செய்து, ஓர் நிமிஷத்தில் வருகின்றேன். இவ்வளவு மாத்திரத்திற்கு ஜன்மமெடுக்கவேண்டியதேன்?'' என்று சொல்லினர். அதைக்கேட்ட பகவான், சுகரைப் பார்த்து "ஐயா! எந்த மனதுடன் இவ்விதமாய் வார்த்தையாடுகின்றீர்; இது கலியுகமென்று அறியீரோ? இப்போதிருக்கப்பட்டவர்கள் எல்லோரும் ஞான ஈனர்களென்றும் அநித்தியமாகிய பதார்த்தங்களில் அபேக்ஷையுடையவர்கள் என்றும் அறியீரோ? நீர் இளி முகத்துடன் சென்று நின்றமாத்திரத்தில்

உம்மைக் கேலிசெய்து சிறுவர் சிறுமியர்கள் கற்களால் எறிந்து நீர் தப்பித்துக்கொண்டு ஓடும்வரையில் உம்மைவிடார்கள். நீர் கலிகால மகிமையை அறிந்தவராகக் காணப்படவில்லை. துன்மார்க்கர்களாகிய மிலேச்சர்கள் உலகமெங்கும் ஆக்கிரமித்துக்கொண்டு மதோன்மத்தர்களாய்த் தேவருஷிகள், பிரமருஷிகள், ராஜருஷிகள் முதலாகிய மகான்களை வதைத்து தேவதா விக்கிரகங்களை நிக்கிரகஞ் செய்கின்றார்கள். நீர் சென்று அவர்களிடம் அகப்பட்டுக்கொண்டால் உயிர் பிழைத்து வருவதே மிகவும் கஷ்டமாயிருக்கும். ஆதலால், துன்மார்க்கர்களைக் கொல்லுவதும், சன்மார்க்கர்களைக் காப்பாற்றுவதுமாய் நடப்பது உத்தமம். இதனால் உமக்கு எந்த ஆபத்துகளும் உண்டாகமாட்டாது. சீக்கிரம் செல்லக்கடவீர்'' என்று சொல்லினர். அதற்கு சுகர் பயந்து, "ஸ்வாமி! இஃதொன்று தவிர இனி எந்த சிக்ஷைக்குப் பாத்திரனாகச் செய்தாலும் செல்வேனேயொழிய கர்ப்ப நரகத்தில் மாத்திரம் பிரவேசிக்கேன்; இது விஷயமாய் அடியேனை மன்னிக்கவேண்டும்'' என்று அநேக விதங்களாய் வேண்டிக்கொண்டனர். அந்த வார்த்தையைக்கேட்ட ஸ்ரீமந் நாராயணமூர்த்தி புன்சிரிப்புக்கொண்டு "ஏனையா! நான் பூர்வம் வாமன மூர்த்தியாயும், பரசுராம மூர்த்தியாயும், ஸ்ரீராம மூர்த்தியாயும், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியாயும், ஒவ்வொரு பாக்கியவதிகளின் கர்ப்பத்தில் அவதரித்து விநோதங்களைச் செய்தது நீர் அறியவில்லையா? இந்த அற்ப விஷயத்திற்காகவா இவ்வளவு சம்சயப்படுகின்றீர்? என் வார்த்தையை நம்பி நான் சொல்லியதுபோல் செய்யக்கடவீர்'' என்று மறுபடியும் போதித்தார். "ஸ்வாமி! நீரோ மாயையை ஜயித்தவர். சர்வத்திற்கும் கர்த்தனாயிருக்கின்றீர். நீர் சர்வசக்தர். சர்வஞ்ஞர். சச்சிதாநந்தமூர்த்தி.

ஆதி மத்யாந்த ரஹிதர். அப்ரமேயர். ஆதலால், கர்ப்பப்பையில் பிரவேசித்தபோதிலும், தாமரை யிலையின்மீதுள்ள ஜலபிந்துவைப் போலும், பிள்ளைப்பூச்சியைப்போலும் எதிலும் பற்றுதவராய் நிர்மலராய் இருப்பீர். அப்படிப்பட்ட பெரிய காரியங்களை அடியேனால் செய்யத்தகுமா? மாயாஜாலத்தில் அகப்பட்டுக்கொண்டபிறகு தப்பித்துக் கொள்வது மிகவும் கஷ்டம். பூர்வம் ஓர் சமயத்தில் ரம்பையைவிட்டுப் பரிசோதித்த விஷயத்தை நினைத்தால் இப்பொழுதும் தேகம் மயிர்ச்சிலிர்க்கின்றது. எப்படியாகிலும் அடியேனை மன்னிக்கவேண்டும்'' என்று தாழ்ந்த வணக்கத்துடன் மறுபடியும் பிரார்த்தித்தனர்.

பிறகு நாராயணமூர்த்தி "ஐயா! முநிபுங்கவா! உம்முடைய மனதிற்கு அவ்வளவு பயங்கரம் தோன்றுவதனால் பலாத்காரமாய் பிரவேசிக்கும்படி ஏன் செய்யவேண்டும். நீர் சிசுரூபம் தரித்துக் கங்கையில் பிரவேசித்து ஆரணியத்தில் தவம் செய்துகொண்டிருக்கும் தமாலிடம் சேர்ந்து அவரது குமாரனென்று பெயர்பெற்று இந்தக் காரியங்களைச் செய்யக்கடவீராக. இதுவும் என்னாலாகாதென்று சொல்லுகின்றீரா என்ன?'' என்று சொல்லினர். அதன் பிறகு பதில் சொல்ல நாவெழாமல் சுகமஹரிஷி மகா பிரசாதமென்று ஸ்வாமிகளின் ஆஞ்ஞைக்கு உட்பட்டு "ஸ்வாமீ அடியேன் பூலோகத்திற்குச் சென்றபிறகு பிரம்ம ஞானத்தை உபதேசிக்கவேண்டுமா? அல்லது தேவரீருடைய திவ்வியநாம மஹிமைகளை பிரசுரஞ் செய்யவேண்டுமா? இவைகளில் எதுவோ அதை அநுக்கிரஹம் செய்யவேண்டும்'' என்று பிரார்த்தித்தனர். அதற்கு விஷ்ணு மூர்த்தி, "முநிசார்வபௌமா! நிர்க்குணாராதன பரர்களாயும் மகா மூர்க்கர்களாயும் இருக்கும் மிலேச்சர்களைச் சகுணாராதனையினால் ஜயிப்பது மிகவும் கஷ்டசாத்தியம். ஆதலால்,

நிர்க்குணாராதனை மூலமாகவே அவர்களின் மூர்க்கத்தைப் போக்கடித்துச் சகுண நிர்க்குணங்களுக்கு உள்ள பேதத்தை சரியாய்த் தெரிவித்து ஞானவைராக்கிய சூந்யர்களான மானவஜன்மங்களைக் கடைத்தேறும்படிச் செய்யக்கடவீர்'' என்று பகவான் சொன்னவுடன் நல்லதென்று சொல்லி, உடனே சுகப்பிரம்மரிஷியானவர் மஹா புருஷ லக்ஷண சுந்தர திவ்விய தேஜோமயமாய் சிசுரூபத்தைத் தரித்துக் கங்கையில் பிரவேசித்தார். அப்போது பிரம்மாதிதேவதைகளும் சனக சனந்தனாதி முனீந்திரர்களும் அநந்த கருட விஸ்வக்ஸேநாதி நித்திய சூரிகளும் அந்தச் சிசுவின் சௌந்தரியத்தை மிகவும் ஆர்ச்சர்யத்துடன் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அந்தச் சமயத்தில் விஷ்ணுவானவர் வந்து அந்த சிசுவை மூன்றுமுறை கங்கையில் மூழ்த்தி மேலுக்கெடுத்து ஓர் முத்துச் சிப்பியில் மிகவும் ஜாக்கிரதையாய் வைத்துக் கங்கையில் விட்டுவிட்டார். அப்போது சிசுவைக் கங்கையில் மூழ்த்தினவுடன் தனது பூர்வஜன்ம ஸ்மரணைத் தப்பி மாயையால் மூடப்பட்டு திக்குமுக்குலாடிக்கொண்டு க்வா! க்வா!! க்வா!!! என்று அழுது திமிறி கைகால்களை உதரி பிறகு, பெருவிரலை வாயில் வைத்துக்கொண்டு சிசு கங்கையில் ஓடத்தலைப்பட்டது. அப்போது கங்காதேவி தன் அலைகளாகிய கரங்களால் (கைகளால்) முத்துச்சிப்பியைத் தாங்கிக்கொண்டு, மிகவும் வேகமாய்ச்சென்று தமால் தவம் செய்துகொண்டிருக்கும் பர்ணசாலையின் சமீபமாய் விட்டுவிட்டாள்.

தமால், சிசுவைக்கொண்டுபோய் வளர்ப்பது.

வனத்தில் அகோரமாய்த் தவம்செய்துகொண்டிருக்கும் தமாலினுடைய மனதைப் புத்திர சந்தானத்தின்மீது அதிக இச்சையுண்டாகும்படி, தனக்குள் அந்தர்யாமியாயும்

சாக்ஷிசொரூபமாயும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பரப்பிரமத்தின் அம்சமாகிய ஆத்மா, அவரது மனதிற்குச் சாவியைக்கொடுத்து, தவஞ்செய்யாவண்ணம் கிளப்பிவிட்டது. உடனே தமால் நிஷ்டைகலைந்து எழுந்துநின்றார். அந்தச் சமயத்தில் சிசுவானது க்வா! க்வா! க்வா!!! என்று வீறிட்டு அழும் சப்தம் அவருடைய காதில் கேட்டது. இவருக்குப் புத்திரவாஞ்சை விசேஷமா யிருந்தபடியால் அழும்சப்தம் எந்தமார்க்கமாய் வருகின்றதென்று உற்றுக் கேட்டு அம்மார்க்கமாய்ச்சென்று, கங்கை ஓரமாய் முத்துச் சிப்பியில், வில்லைப்போன்ற க்ரியநிறமுடைய புருவங்களும், தாமரைக்கமலம் போன்ற விழிகளுமுடையதாய்க் கோடி சூரியப்பிரகாசமாய்ப் பிரகாசித்துக்கொண்டு விஷ்ணுமூர்த்தியைப்போலச் சயனித்துக் கொண்டிருக்கும் சிசுவை தமால் பார்த்தவுடன் மிகவும் ஆத்திரத்துடன் கங்கையில் குதித்து, முத்துச் சிப்பியிலிருக்கும் சிசுவை எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு மிகவும் சந்தோஷத்துடன் கரையேறி இமைகொட்டாமல் ஒரே பார்வையாய் சிசுவைப்பார்த்து, ஆஹா ஜிஜ்ஜாபீபீ செய்த பாக்கியமே பாக்கியம்; அவளது மனோ வியாகூலத்தைப் போக்கடிப்பதற்காகவே இந்தச் சிசு ஈசுவரனால் அனுப்பப்பட்டதுபோல் இருக்கின்றது. ஆஹா! எவ்வளவு சுந்தரமான விக்கிரகமிது, இந்தச் சிசுவைப்பெற்ற தாய் தந்தையர்கள் எப்படிப்பட்ட சுந்தரமுடையவர்களோ அறியேன். இப்படிப்பட்ட ரூப ரேகா விலாஸமுடையவன் மற்றொருவன் உலகத்தில் இருப்பானென்று நான் நம்பவில்லை. இவனது லக்ஷணங்களைப் பார்த்தால் உலகத்தைச் சீர்திருத்தவந்த மஹா புருஷனென்றே தெரியவருகின்றது. புத்திரசோகத்தைத் தீர்த்து எங்களைத் தன்யர்களாய்ச் செய்யவந்த இவன் பரம பவித்திரனாயிருக்கவேண்டுமென்று பலவிதங்களாய் ஸ்துதி

செய்து, ஜலம்வேண்டுமென்று எண்ணினவனுக்குத் தேவாமிருதமும், பிக்ஷுகனுக்கு ராஜ்ரீகமும், கற்களைப் பொறுக்கப்பட்டவனுக்கு ரத்தினமும், உலகவியாபாரத்தில் மூழ்கியிருப்பவனுக்குப் பகவத்தியானமும் லபித்ததுபோல், பட்டுநூலைப் போக்கடித்துக்கொண்டுத் தேடப்போன தனக்குப் பரம பவித்திரனான புத்திரன் கிடைத்ததற்காகப் பரமாநந்தத்தை யடைந்து "சர்வசக்தியுடைய பகவானே! உன் மஹா மஹிமையை யாரறிவார்? எதை சங்கல்பித்தேனோ அது லபிக்கும்படிச் செய்தாய். நீர் செய்த மஹா உபகாரத்திற்குப் பிரதியுபகாரம் அற்பனாகிய யான் என்ன செய்யப்போகின்றேன்? இதோ அதிக பக்தி விசுவாசங்களுடன் இருகைகளையும் குவித்து அஞ்சலி யஸ்தனாய் நமஸ்கரிக்கின்றேன்" என்று பகவானை அதிக பக்தியுடன் பிரார்த்தித்து, அவ்விடமிருந்து மிகவும் வேகமாய் நடந்து வீடுசேர்ந்து அதிக ஆத்திரத்துடன் தனது பாரியாளை அழைத்துத் தன்கையிலிருந்த திவ்விய சுந்தர விக்கிரகத்தை அவள்கையில் கொடுத்துத் தனக்குஅந்தப்பாலன் கிடைத்த சவிஸ்தாரங்களையெல்லாம் சொல்லி "இந்தப் புத்திரன் ஈசுவரானுக்கிரகத்தினால் நமக்குக் கிடைத்தவன்" என்று சொல்லி அதிக ஆச்சரியத்தை அடைந்தனர்.

அந்தச் சங்கதிகளைக் கேட்டவுடனே ஜிஜ்ஜாபீபீ மிகவும் ஆச்சரியப்பட்டுத் தன்னை ஆசீர்வதித்த பகீரை நினைத்து, அநேக வந்தனங்கள் செய்து அந்தக் குழந்தையை மடியில்வைத்துத் தனது நாயகனைப்பார்த்து, "ஓ பிராண நாதா! முன் எனக்கு வரங்கொடுத்திருந்த பகீர் சொன்ன வார்த்தை யாதெனில், உனக்கு சகலசற்குணங்களுமுடைய புதல்வன் ஒருவன் கிடைக்கப் போகின்றானென்று சொன்னார். புத்திர வாஞ்சையின் மீதிருந்த மோஹத்தினால் அவர் சொல்லிய வார்த்தையைக் கவனியாமல் எனக்கே

சந்தான முண்டாகப் போகின்றதென்றும் அவர் வாக்குப்
பொய்யாகாதென்றும் இவை முதலாகிய விஷயங்களைத்
தங்களிடம் சொல்லியிருந்தேன். சாக்ஷாத் பரப்பிரம்மமே
பகீர் வேஷங்கொண்டு எனது புத்திரசோகத்தை நிவர்த்தி
செய்ய வந்ததேயொழிய சாதாரணமாகிய பகீரைப்போல்
அவரை எண்ணலாகா'' தென்று புன்சிரிப்புடன் சொல்லி
னன். அதற்கு தமால் ஆம் வாஸ்தவந்தான், புத்திரன்
கிடைக்கப்போகின்றானென்று சொல்லாமல் பகீர் ஆசீர்
வாதம் செய்ததுபோல் எனக்குச் சந்தான முண்டாகுமா
வென்று கேட்டபடியால், அவர் சொல்லியதுபோல் உண்
டாகாதென்று நானும் சொல்லவேண்டியதாய் நேரிட்டது.
நீ சொல்லியதுபோல் சாக்ஷாத் பரப்பிரம்மமே பகீர்
வேஷங்கொண்டு உனது இச்சையைப் பூர்த்திசெய்ய
வந்ததேயொழிய சாதாரணமான பகீரென்று சொல்ல
லாகாதென்று அவரைப் பகுவிதங்களாய் ஸ்துதிசெய்து
குழந்தையை ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வரும்படி
ஆஞ்ஞாபித்துச் சென்றார். பிறகு ஜிஜ்ஜாபீபி நகசிக
பர்யந்தம் என்றால், பாதப்பெருவிரல்முதல் உச்சிவரையில்
இமைக் கொட்டாமல் சிசுவைப் பார்த்து அதன் ரூப
ரேகா விலாஸத்திற்கு மிகவும் ஆச்சரியப்பட்டுத் தலையை
அசைத்துச் சிசுவின் தாடைகளை முத்தமிட்டு உச்சிமோந்து
பரமானந்தத்தில் சொக்கியிருக்கும் சமயத்தில் பகவ தனுக்
கிரகத்தினால் ஜிஜ்ஜாபீபிக்கு அகஸ்மாத்தாய் ஈஸ்வரானுக்
கிரகத்தினால் இரண்டு ஸ்தனங்களிலும் கங்கையைப்போல்
பால் சுரந்தது. திடீலென்று பால் சுரந்து பெருகியதால்
ஜிஜ்ஜாபீபி அதிக ஆச்சரியப்பட்டு சிசுவிற்குப் பால்
கொடுத்துத் தான்பெற்ற செல்வக் குழந்தையைப்போல்
நினைத்து அப்பியங்க ஸ்நானம் செய்வித்து விலையுயர்ந்த
ஆபரணங்களினாலும், பட்டு ஆடையினாலும் அலங்கரித்து,

தொட்டிலில் வளர்த்தித் தாலாட்டித் தூங்கும்படிச் செய்
தாள். இதுசங்கதி தெரிந்து அண்டை அயல் வீட்டுக்
காரர்களெல்லாம் குழந்தையைப் பார்க்கவந்தவர்களிடம்
தங்களுக்கு மைந்தன் கிடைத்த விருத்தாந்தங்களை யெல்
லாம் சவிஸ்தாரமாய்ச்சொல்லி ஆனந்தசாகரத்தில் (சமுத்
திரத்தில்) மூழ்கியிருந்தாள். இவ்விதமாய்ச் சிலநாள்
சென்றபிறகு தமால் தமது பந்துமித்திரர்களுடன் எல்லோ
ரையும் வரவழைத்துத் தமது மதாசாரரீதியாய் சிசுவிற்கு
"கபீர்" என்று நாம கரணஞ்சூட்டி, விருந்திட்டு அவரவர்
களுக்குத் தக்க மரியாதைகளைச்செய்து அனுப்பிச் சிசுவை
மிகவும் ஜாக்கிரதையுடன் வளர்த்துவந்தார்கள். இவ்வித
மாய் வளர்ந்துவரும் நாளில்,

தேவரம்பை பூலோகத்தில் அவதரிப்பது.

தேவலோகத்தில் அப்சர ஸ்திரீகளில் ஒருத்தியாகிய
ரம்பையென்பவள் சுகமஹரிஷி தவத்தை அழித்து வருவ
தாய் இந்திரனுடன் சபதம்கூறிச்சென்று சுகமஹரிஷியால்
அவமானப்பட்டு மறுபடியும் தேவலோகம்சென்று, தனக்
குச் சமானமுடைய அப்சர ஸ்திரீகளையும், இந்திரனையும்
பார்க்க நாணமுண்டாய் மிகவும் கவலையடைந்து சற்று
நேரம் யோசித்து எவ்விதமாகிலும் இவரை ஜயித்துத்
தனது சபதத்தை நிறைவேற்றிக்கொள்ளவேண்டுமென்று
எண்ணங்கொண்டு சுகமஹரிஷியின் ஆசிரமத்திற்குச் சமீப
மாய் ஓர் ஆசிரமத்தை அமைத்து ரம்பையும், ஜடையுடன்
காஷாயவஸ்திரம் தரித்து ரிஷிவேஷங்கொண்டு சிலகாலம்
சருகு, காய், கனிகளைப் புசித்துத் தனது ஆசிரமத்தில் உட்
கார்ந்து கண்களைமூடி சின்முத்திரையுடன் பத்மாசனத்தில்
உட்கார்ந்து அகோரதவம் செய்பவளைப்போல் நடித்துக்

கொண்டு வந்தாள். சுகமஹரிஷி பிரதிதினம் தமது மார்க்கமாய்ச் செல்லும்போது இவைகளையெல்லாம் கவனித்துக்கொண்டேவந்து இவர் எவரோ மஹாத்மாவாய் இருக்கின்றாரென்று எண்ணி அவளைப்போய்த் தரிசிப்பதற்காக அவளது ஆசிரமம் சென்று நிஷ்டையிலிருப்பவளின் முகதேஜோ விலாஸத்தைக்கண்டு இவர் யாரோ பெரிய தபசியாயிருக்கின்றாரென்று எண்ணி "சுவாமீ நீங்கள் யார்! எதற்காக அகோரமான தவம் செய்கின்றீர்கள்? அதை அடியேனுக்கு அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று" கேட்டனர். அதைக்கேட்ட ரம்பையானவள் மிகவும் கோபங்கொண்டவளைப்போல் அபிநயித்து ஓஹோ! உன் வழியாய் நீ செல்லாமல் என்னை விசாரிக்கவேண்டிய அவசியம் உனக்கேன்? நீ என்னுடன் வார்த்தையாடினதால் என் தவத்திற்குப் பின்னம் நேர்ந்தது. ஆதலால், இப்போது நீ என் இஷ்டத்தைப் பூர்த்திசெய்வதாய் வரங்கொடுத்தால் உத்தமம். இல்லாவிடில் உனக்குச் சாபம் கொடுப்பேன் என்று சொல்லினள். அவ்வார்த்தையைக் கேட்ட சுகர் மிகவும் திகிலடைந்து "சுவாமீ! தங்கள் உத்தேசம் இப்படிப்பட்டதென்று அறியாமல் அவசரப்பட்டு விசாரித்தேன், மன்னிக்க வேண்டும். உங்கள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்கின்றேன் அதைச் சொல்லக்கடவீர்" என்று அதிவிநயத்துடன் சுகர் கேட்டுக்கொண்டனர். பிறகு ரம்பை தன்மீதிருந்த காஷாய வஸ்திரத்தை நீக்கித் தன் நிஜ சொரூபத்தைக்காட்டி தங்களைச்சேர்ந்து புத்திரனைப் பெறவேண்டுமென்னும் எண்ணம் நெடுநாளாய் என்னைப் பாதித்துக்கொண்டு வருகின்றது. ஆதலால், இப்போது வாக்தானம் செய்தது போல் அடியாளுடன் சேர்ந்து புத்திரசந்தானம் தரவேண்டுமென்று கேட்டனள். இதைக்கேட்ட சுகர் திடுக்கிட்டு வார்த்தையாடனா வெழா

மல் சற்றுநேரம் பிரஞ்ஞையற்று ஸ்தம்பம்போல் நின்று மறுபடியும் அறிவுண்டாய், பிசக்காய் வாக்தானம் செய்துவிட்டபடியால் அதைத் தப்பித்துக்கொள்ள சாத்தியப்படாமல் "கலியுகத்தில் உன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்கின்றேன்" என்று வரங்கொடுத்தனுப்பினர். அதற்கு ரம்பை மிகவும் சந்தோஷித்து எப்படியாகிலும் இவரை வலையில் போட்டுக்கொண்டேனல்லவா என்று மிகவும் சந்தோஷித்துத் தேவலோகம்சென்று இது விவரம் இந்திரன் முதலானவர்களுக்குத் தெரிவித்து சுகர் எப்பொழுது கலியுகத்தில் அவதரிக்கப்போகின்றார் என்று சமயம் பார்த்திருந்தனள். இப்படியிருக்க சுகர் சிசுரூபங்கொண்டு கங்கையில் சென்று பூலோகத்தில் தவஞ் செய்துகொண்டிருக்கும் தமால் கையில் அகப்பட்டு கபீர் என்னும் பெயருடன் வளர்ந்து வருவதை ரம்பை கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷங்கொண்டு இந்திரனிடம் சென்று, சுகமஹரிஷியால் கொடுத்த வரத்தைப் பூர்த்திசெய்வித்துக் கொள்வதற்காக பூலோகத்தில் ஜன்மிக்க உத்தரவு பெற்றுக்கொண்டு தமாலினுடைய சமீப பந்துக்கள் வீட்டில் அவதரித்து சுந்தரா என்னும் பெயருடன் வளர்ந்து வந்தனள். தேவலோகத்திலுள்ள அப்சர ஸ்திரீகளில் மிகவும் அழகுடையவள் ரம்பையே என்று எங்கும் பிரசித்திபெற்றவளே பூலோகத்தில் அவதரித்திருப்பதால் அவள் அழகை நாவினால் வர்ணிக்கவும் கூடுமோ? அவளைக்கண்ட ஸ்திரீகளாகிலும், புருஷர்களாகிலும் அவளைவிட்டுப்பிரிய மனம் வராமல் எந்தெந்த அவயவங்களைப் பார்த்து நின்றார்களோ அந்தந்த அவயவங்களையே பார்த்துச் சொக்கியிருப்பார்கள். சுந்தராவினுடைய ரூப ரேகா விலாஸ சௌந்தரியம் உலகமெங்கும் பிரசித்தியாய் இருந்தது. இவளது சௌந்தர்யத்தைக் கபீர்னுடைய தாய் தந்தைகளும், கபீரினுடைய சௌந்தர்யத்

தைச் சுந்தராவினுடைய தாய் தந்தைகளும் கேள்விப் பட்டார்கள். சிலமாதம் சென்றபிறகு கபீருனுடைய தாய் தந்தைகள் சுந்தராவைப் பார்க்கச் சென்று தமது குமாரனுக்குத் தக்கபெண் இவளேயென்று நினைத்து அவளது தாய் தந்தைகளுடன் கலந்துபேசி சம்பந்தங்கொண்டுக் கபீரைப் பார்க்கவரும்படி சொல்லிப்போனார்கள். சிலநாள் சென்றபிறகு சுந்தராவினுடைய தாய் தந்தைகள் கபீரைப் பார்க்கச்சென்று தமது குமார்த்திக்குத் தகுந்தவன் இவனேயென்று தீர்மானம்செய்து ஒருவரோடொருவர் கலந்துபேசிச் சம்பந்தம் கொண்டார்கள்.

சுன்னத் செய்யவந்த காஜிக்கும் கபீருக்கும் நடந்த தர்க்கம்.

இவர்கள் ஒருவரோடொருவர் கலந்து பேசியபின் தமது மதாசாரப்படி கபீருக்குச் சுன்னத் செய்விக்க ஓர் நாள் ஏற்படுத்தி அந்நாளில் காஜீ முதலானவர்களைத் தமது கிருகத்திற்கு வரவழைத்தார்கள். அவர்கள் வந்தவுடன் மதாசாரப்படி செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாம் செய்து முடித்தபின் காஜியின் சமீபத்திலிருக்கும் அம்பட்டனைக்கூப்பிட்டு "கபீருக்குச் சுன்னத்செய்" என்று காஜீ சொன்னார். கபீர் அவ் வார்த்தையைக் கேட்டவுடன் "ஐயா! சில சந்தேகங்கள் தங்களால் தெரிந்துகொள்ள வேண்டியவனாயிருக்கின்றேன். ஆதலால், நீர் தயை செய்து என் சந்தேகத்தை நிவர்த்தி செய்விப்பீர்களென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்" என்று கேட்டனர். அதற்குக் காஜி உனது சந்தேகத்தை நிவர்த்தி செய்விக்க யாதொரு தடையுமில்லை. அது என்ன விஷயமோ சொல்லக்கடவாய்

என்று கேட்டனர். அதன்பிறகு கபீர் காஜி எதிரில் உட்கார்ந்து கேள்விகேட்க ஆரம்பித்தார்.

கபீர்:—சுன்னத் என்றால் என்ன?

காஜீ:—அசுத்தமாகிய தோலை அறுத்து எடுத்துவிடுவது.

கபீர்:—அப்படி அறுத்து எடுத்துவிடுவதனால் என்ன பலன் உண்டாகும்?

காஜீ:—அதை எடுத்துவிடுவதனால், மனிதன் பரிசுத்தனாகின்றான்; அதனை எவன் செய்துகொள்ளவில்லையோ அவன் நீசனென்றே சொல்லப்படுவான். ஆதலால், புருஷர்களுக்கு முக்கியமான குறி இதுவேயாம். இப்படிப் பட்டவர்களைத்தான் முஸல்மான் என்று சொல்வார்கள்.

கபீர்:—இதென்ன! மிகவும் குரூர கிருத்தியமாயிருக்கின்றதே?

காஜீ:—இதில் குரூர கிருத்தியம் ஒன்றுமில்லை; ஆதியிலிருந்து நமது பெரியோர்களெல்லாம் அனுஷ்டித்துக் கொண்டுவந்ததே யொழிய புதிதாய் ஏற்பட்டதல்ல.

கபீர்:—இந்த ஆசாரம் நமது மதத்திற்கு மாத்திரமே விதிக்கப்பட்டிருக்கின்றதா? அல்லது, இதர மதத்திற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதா?

காஜீ:—இதர மதஸ்தர்களுக்கு இது இல்லை; நமது ஜாதியார் ஒருவருக்கே பகவானால் நிர்ணயமாயிருக்கின்றது. அதனால்தான் நம்மை முஸல்மானென்றும், மற்றவர்களை காபரி என்றும் சொல்லுவார்கள்.

கபீர்:—ஆனால், நமது ஜாதியின் ஸ்திரிகளுக்கும் சுன்னத் செய்விக்கின்றார்களா?

காஜீ:—ஸ்திரீகளை சுன்னத் செய்வதில்லை. அவர்களைப் பரிசுத்திசெய்ய மந்திரமிருக்கின்றது.

கபீர்:—அந்த மந்திரத்தினல் புருஷர்களையும் பரிசுத்தம் செய்விக்கலாகாதா? இந்தக் குரூரயிம்சை ஏன் செய்ய வேண்டும்?

காஜீ:—ஹா! இதைக் குரூரயிம்சையென்று சொல்ல வேண்டாம், பகவதாஜ்ஞானுசாரமாய் ஆதியிலிருந்து பெரியோர்களால் நடத்திக்கொண்டு வரப்பட்டதென்று அறியக்கடவாய்.

கபீர்:—இதர வருணஸ்தர்களுக்கும் நமது சுஜாதியிலுள்ள ஸ்திரீகளுக்கும் இல்லாததுமாகிய இது, நமது புருஷர்களுக்குமாத்திரம் பகவான் ஏற்படுத்தினரென்றால் நம்பத் தகுந்ததல்ல. இது அசுத்தமென்று பகவானுக்குத் தோன்றினல் சிருஷ்டிகாலத்திலேயே அசுத்தமாகிய தோலை நீக்கியே சிருஷ்டி செய்திருப்பார். அப்படிச் செய்யவில்லை ஆதலால் இது பகவானல் விதிக்கப்பட்டதல்லவென்றும், மனுஷ்யர்களால் கற்பிக்கப்பட்டதென்றும் திருடமாய்த் தெரியவருகின்றது.

காஜீ:—அப்பா! நீயோ மிகவும் சிறுபாலன். அக்ஷராப்பியாசமும் இன்னும் உனக்குச் சரியாய்த் தெரியவில்லை. நமது மதகிரந்தங்களைப் பரிசோதித்துப் பார்ப்பாயாகில், நீ இவ்விதமாய்ச் சொல்லமாட்டாய். நமது மதத்திற்கு மூல புருஷராகிய இப்ராஹிம் பைகம்பர் காலத்திலேயே இது பகவானல் விதிக்கப்பட்டது.

கபீர்:—ஐயா! இப்பொழுது நீர்சொல்லிய இப்ராஹிம் பைகம்பர் பகவான்மீது பிரமாணம்செய்து கடைசியில் அதுபோல் நடவாமற் போனதனல் அவருக்கு மாத்திரம் இது பிராயச்சித்தமாய் விதிக்கப்பட்டதே யொழிய, எல்லோருக்குப் பகவானல் விதிக்கப்பட்டதல்ல.

காஜீ:—அவர் காலத்திலிருந்த நம்ருத்பாச்சா விசாரணை யில்லாமல், அவருக்கும் சிக்ஷை விதித்தாரேயொழிய அவரிடத்தில், கொஞ்சமேனும் தோஷம் இல்லை.

கபீர்:—ஏனையா இவ்விதமாய் மறைத்துச்சொல்லுகின்றீர்? இப்ராஹிம் பைகம்பர் தனது இரண்டாவது பாரியாளின்மீது இருந்த மோஹத்தினல் அவள் ஆஜ்ஞைக்கு உட்பட்டு நடப்பதாய் பகவான்மீது சத்தியம் செய்துகொடுத்து கடைசியில் யுக்தா அயுக்த பரிஞ்ஞானமில்லாமல் அவள் போதனைக்கு உட்பட்டுப் பரம பதிவிரதையும் பூரண கர்ப்பவதியுமாயிருந்த தனது ஜேஷ்டபாரியாளை நிர்மானுஷ்ய (மனிதசஞ்சாரமில்லாத) ஆரணியத்தில் சிறைச்சாலையில் வைத்தார். பிறகு பகவதனுக்கிரகத்தினல் கஷ்டங்களுக்கெல்லாம் தப்பித்துக்கொண்டு அவள் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். இது விஷயம் இப்ராஹீம் பைகம்பர் கேள்விப்பட்டு அவளைப்பார்க்க எண்ணங்கொண்டபோது, இவனது இரண்டாவது பாரியாள் மூத்தவளைப் போய்ப் பார்க்கலாகாதென்று பலவாறு தடுத்தும் அதனைக் கேளாமல் அவள் வார்த்தையை மீறி குமாரனைப் போய்ப்பார்த்தபடியால் இவள் இந்தவிஷயத்தைத் தனது தந்தைக்குத் தெரிவித்தாள். இவன் பகவான்மீது சத்தியம் செய்துகொடுத்துத் தவறிவிட்டபடியால் இப்ராஹிம்பைகம்பரை அவமானம் செய்விக்கவேண்டுமென்று நம்ருத்பாச்சா விசாரணையில்லாமலே இவ்விதமாய்ச் செய்ததாய் உங்கள் மத கிரந்தத்திலேயே எழுதியிருக்கின்றதல்லவா?

காஜீ:—நமது ஆசாரியருக்கு நம்ருத்பாச்சா விதித்ததுமுதல் இவரது வம்ச பரம்பரையிலுள்ளவர்களெல்லோரும் இந்தவிதியை அனுஷ்டிக்க வேண்டுமென்று பகவானுடைய ஆஜ்ஞையாயிருப்பதால் நமது மதஸ்தர்கள் எல்லோரும் இதை அனுஷ்டித்து வருகின்றார்கள்.

கபீர்:—நல்லது, இப்படிச் செய்வது பகவானுடைய ஆஜ்ஞையென்றல்லவா சொல்லுகின்றீர்? அப்படியிருக்க இப்ராஹிம் பைகம்பரினுடைய சிறியபார்யாள் குமாரனகிய இசாக் என்பவனுக்கு ஏன் இந்தவிதி விதிக்கப்படவில்லை.

காஜீ:—அவர் சைதான் (பிசாசு) போதனைக்கு உட்பட்டு இப்ளிஸ் ஆய் கெட்டுப்போய்விட்டார். ஆதலால், இந்த ஆசாரத்தை அனுஷ்டித்தவரல்ல. நீயும் அவரைப் போல் ஆகவேண்டுமென்றிருக்கின்றாயா என்ன ?

கபீர்:—இதென்ன ஆச்சரியமாயிருக்கின்றது; இசாக் என்பவர் ஒரேமதத்தில் சேர்ந்தவராயிருக்க இதை அனுஷ்டிக்கவேண்டுமென்னும் எண்ணம் அவருக்கு இல்லாமற் போயிற்று ?

காஜீ:—இசாக் மதஸ்தர்கள் ஞானமார்க்கம் தவிர, மற்ற விஷயங்களெல்லாம் மகம்மதீயர்களுக்குச் சமானராகவே யிருந்தபோதிலும், சுன்னத் அங்கீகரிக்காத தோஷத்தினால் அவர்கள் நீசரென்றே சொல்லப்படுகின்றார்கள்.

கபீர்:—ஆனால் உங்கள் மதத்தில் ஞானங்கூட இருக்கின்றதா ?

காஜீ:—ஆஹா அதற்குச் சந்தேகமென்ன ! ஞானமில்லாவிட்டால் மகம்மதீயர்களுக்கு விசேஷர்களென்னும் பெயரும் வருமா ?

கபீர்:—நீங்கள் விசேஷர்களென்பது வாஸ்தவமாயிருந்தால் ஞான ஈனமாகிய தியானமும் ஞான ஈனமாகிய ஆசாரமும் நிஷ்பிரயோஜனமென்று அறியமாட்டீர்களா ? அப்படி அறிந்தவர்களாயிருந்தால் சர்வோத்கிருஷ்டமான ஞானத்தை உபதேசிக்காமல் இந்தக் குரூரமாகிய கிருத்தியங்களை ஏன் செய்துகொண்டுவருகின்றீர்கள்.

காஜீ:—இது குரூர கிருத்தியமல்லவென்று முன்னமே ஒருமுறை சொல்லியிருக்கின்றேனல்லவா ? இது நமது குலாசாரப்படி ஒவ்வொருவரும் அனுஷ்டிக்க வேண்டியதாயிருப்பதனால் நீ இதை அவசியம் அனுஷ்டித்தே தீர வேண்டும். இந்த விதியைத் தவறுதல் செய்யலாகாது.

கபீர்:—இதைச் செய்துகொண்ட மாத்திரத்தில் ஞானம் ஏதாகிலும் உண்டாகுமா ?

காஜீ:—இது செய்துகொண்ட அளவிலேயே ஞானம் சித்திக்குமா ? இது பூர்வ ஆசாரம்; நம்மை மகம்மதீயர்களென்று அறிவதற்காக இது ஓர் குறியாகிய சாதனமேயொழிய ஞானசித்திக்குச் சாதனமல்ல.

கபீர்:—அப்படியானால் இதுவிஷயத்தை இதுவரையில் நிறுத்தி ஞானமார்க்கத்தைப் போதியுங்கள்; முக்கியமாய் ஞானசாதனம் வேண்டுமேயொழிய இப்படிப்பட்ட ஆசாரங்களினால் யாதொரு பிரயோஜனமுமில்லை. மனுஷ்யனாய் ஜன்மித்ததற்கு முக்கியமாய் ஞானத்தையல்லவா சம்பாதிக்கவேண்டும். ஞான ஈனர்களாகிய மானவர்கள் பசுவிற்குச் சமானமல்லவா என்று சொன்ன வார்த்தைகளையெல்லாம் காஜீ கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு, அடடா இவன் மஹா சமத்காரன்; எவ்வளவு தந்திரமாய் வார்த்தையாடி நமது வாயை மூடும்படிச் செய்விக்கின்றான். ‘பக்ஷி’ சின்னதும் அதன் கூச்சல் பெரிதுமென்று சொல்லும் வார்த்தை நிஜமாகவே யிருக்கின்றது என்று தனக்குள் தான் ஆலோசித்துப் பின்வருமாறு சொல்லுகின்றார்.

காஜீ:—கபீர்? ஷரீகத் (சரிகை), தரிகத் (கிரியை), அகீகத் (யோகம்), மாரீபத் (ஞானம்) ஆகிய இந்நான்குபடிகளில் முதல் மூன்று படிகளையும் தெரிந்துகொண்ட பின்னல்லவோ நான்காம்படியாகிய மாரீபத் (ஞானம்) அடைய வேண்டும். ஷரீகத் (சரிகை), என்பதே உனக்குத்தெரியாமலிருக்க, மாரீபத் (ஞான) மார்க்கங்களைப் போதித்தால் எவ்விதமாய்த் தெரியப்போகின்றது என்று சொல்லினர். அதைக்கேட்ட கபீர் புன்சிரிப்பாய்ச் சிரித்து இந்தவார்த்தைகளினால் என்ன பிரயோஜனம்? மாரீபத் (ஞானம்) போதிக்கும் அவ்வளவு சக்தி உம்மிடத்தில் இருக்கும்

பக்ஷத்தில் அதைச் சற்றே தெரியச்சொல்லும். அஞ்
ஞானத்தினால் (அகங்கார மமகாரங்களால்) மூடப்பட்டு
ஜனன மரண ரூபமாகிய துக்க பரம்பரையாயிருக்கும்
சம்சார சமுத்திரத்தைக்கடந்து, அகண்டமாய் ஆதிமத்
யாந்தரஹிதமாய் சச்சிதாநந்தமாய் சுயம்பிரகாசமாய் அத்
விதீயமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பரப்பிரம்மத்
தில் கலந்து நித்தியாநந்தத்தை அனுபவிக்க வேண்டும் என்
னும் வார்த்தை கடைசியாய் உமக்கே தெரியப்போகின்
றது. வியர்த்தமாகிய பிரசங்கத்தை இதுவரையில் நிறுத்த
வும் என்று சொல்லினர். இந்தவார்த்தைகளை யெல்லாம்
கேட்ட காஜீயினுடைய முகம் வெளுத்து, அப்பப்பா
இவன் ஜாணளவு சிறுவனாயிருந்தபோதிலும் எல்லாம்
அறிந்தவனைப்போல் வார்த்தை யாடுகின்றான். இவனுக்
குச் சமாதானம் சொல்லாவிடில் இவன் சுன்னத் செய்து
கொள்ளமாட்டான் என்று தனக்குள்தான் நிச்சயித்துக்
கொண்டு தமாலைப்பார்த்து, "ஐயா! உன்குமாரனுக்குப்
போதித்து நமது மார்க்கத்திற்குக்கொண்டுவரும் சாமர்த்தி
யம் எங்களுக்கில்லை. ஆதலால், நீ அவனுக்குத் தந்தையா
யிருப்பதனால் நயத்தினாலோ அல்லது பயத்தினாலோ அவ
னுக்குப் போதித்து அவன் சம்மதித்தவுடன் எங்களுக்குத்
தெரிவித்தால் நாங்கள் வந்து காரியத்தை நிறைவேற்றுகின்
றோம்" என்று சொன்னவுடனே வந்தவர்களெல்லோரும்
"ஆம், இது உத்தமமாயிருக்கின்றது; இதுபோலவே,
செய்யலாம்" என்று ஒரே வாக்கியமாய் எல்லோரும்
வார்த்தையாடினார்கள். அதன்பிறகு காஜீ தம்முடன்
கூட வந்தவர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு சென்
றார்.

பிறகு, ஜிஜ்ஜாபீபியும் தமாலும் கபீரைப்பார்த்து
"நாயனா! நீ, இன்னும் சிறுபாலன், யுக்தா அயுக்தம்இப்படிப்

பட்டதென்று அறியமாட்டாய்; உன் வயதிற்குத்தகுந்த
வார்த்தையாடாமல் விசேஷமாய்த்தெரிந்த பெரியமனித
னைப்போல் வார்த்தையாடி நம்மில் மிகவும் பெரியவரா
யிருக்கும் காஜீ முதலாகிய பெரிய மனுஷ்யர்களை யெல்
லாம் அவமானப்படுத்தினாய். பெரியோர்கள் என்ன
சொன்னபோதிலும் அதைப் பக்தியுடன் கேட்க வேண்டி
யதேயொழிய அவர்களின் வார்த்தையை நிராகரிக்க
லாகாது. ஆதலால், அவர் சொல்லியதுபோல் நமது
மதாசார தருமத்தை முக்கியமாய் அனுஷ்டிக்கவேண்டும்"
என்று போதிக்கத் தலைப்பட்டார்கள். கபீர் அவ்வார்த்தை
களைக் கேட்டவுடன் தாய் தந்தையர்களைப் பார்த்து
"அம்மா! அவர்களை அவமானப்படுத்த வேண்டு மென்
னும் எண்ணத்தினால் நான் அவர்களுடன் வார்த்தை
யாடினவனல்லன்; சில நியாய மார்க்கங்களைத் தெரிந்துக்
கொள்ளவேண்டுமென்றே விசாரித்தேன். அந்த நியாயத்
திற்குப் பதில்சொல்ல சக்தியில்லாமல் போய்விட்டால்
நான் என்செய்வேன்? என்மீது தோஷம் எவ்வளவேனும்
இல்லை. அம்மா! இவர்களேயல்லர், இவர்களைப் பிறப்பித்த
வன் வந்து சொல்லியபோதிலும் மோக்ஷமார்க்கத்தைத்
தவிர இதர மார்க்கங்களை நான் எப்போதும் அனுஷ்டிக்க
மாட்டேன். மனிதர்களால் ஏற்படுத்தினவைகளை யெல்
லாம் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருவது யுக்த
மானதாய்க் காணப்படவில்லை! சாஸ்திரயுக்தமாய் இருந்
தால்தான் கிரகிக்கவேண்டும். சுன்னத் செய்துகொள்வத
னால் சுகமுண்டென்பது உங்களுக்கு ஏதாகிலும் தெரிந்
திருந்தால் அதை எனக்கு நிதரிசன (பிரத்தியக்ஷ) மாய்க்
காட்டவேண்டும்" என்று சொல்லினர். அதைக்கேட்ட

வுடன், தமானுக்கு மிகவும் * கோபம் உண்டாயிற்று; அந்தக்கோபத்தினால் கண்கள் சிவந்து மீசைகள் படபடவென்று துடித்துத் தேகம் நடுக்கலுண்டாய், "அடா! துன்மார்க்கா! பெரியோர்கள் சொல்லியவார்த்தையை அனுஷ்டித்து மதாசாரத்தில் பிரவேசிக்காமல் துராசாரத்தில் பிரவேசிக்கத் தலைபட்ட உன்னை, பிராணனுடன் வைப்பது தருமமல்ல. இப்போதே ஆயுதத்திற்குப் பலிகொடுத்து விடுகின்றேன் என்று சொல்லி உள்பிரவேசித்தார். தந்தைக்குக் கோபம் உண்டாயிற்றென்று கபீர் தெரிந்துகொண்டு அவ்விடமிருந்து ஓடோடியும் சென்று எவர்களுக்கும் காணப்படாத ஓரிடத்தில் பதுங்கியிருந்தார்.

* கோபம்:—கோபத்தினால் சரீரத்திலிருக்கும் இரத்தம் பொங்குகின்றது. இரத்தம் பொங்குவதனால் கண்கள் சிவந்துதேகமெல்லாம் நடுக்கல் உண்டாகி, மீசைகள் படபடவென்று துடிக்கும்படி செய்யும். காரியாகாரியங்களை யோசிக்காமல் மனதை துர்பிரவர்த்தியில் பிரவேசிக்கச்செய்யும். கோபம் தணிந்தவுடன் இரத்தம் சாந்தமாகும். ரத்தம் சாந்தமானவுடன் ஏன் இப்படிப் பட்ட காரியங்களைச் செய்தோமென்று மனம் ஆலோசிக்கும். இதற்குத் திருஷ்டாந்தம் என்னவென்றால், ஜலமுள்ள பாத்திரத்தின் மீது தட்டைமூடி எரிவிட்டபோது, ஜலத்திற்குச் சூடுண்டாய் மேல்தட்டானது எகிறிக்கொண்டிருக்கும். இதுபோல் கோபத்தினால் உஷ்ணமுண்டாகும். அந்த உஷ்ணத்தினால் இரத்தத்திற்குச் சூடுண்டாய், தேகத்தை நடுக்கும்படிச் செய்விக்கும், நடுக்கல் உண்டாவதனால் கண்கள் சிவந்து மீசைகள் படபடவென்று துடிக்கும், ஆதலால், இதை வாசிக்கும் அன்பர்களில் எவர்களுக்காகிலும் கோபம் வந்தவுடன் அந்தக்ஷணமே அவ்விடமிருந்து ஐம்பது அடிதூரத்தில் சென்றுவிடுவீர்களானால், கோபம் சாந்தமாய் இரத்தக்கொதிப்பு அடங்கிவிடும். அதனால், எந்தக்கலகமும் விரோதமும் உண்டாகமாட்டாது.

ஜிஜ்ஜாபீபீ கபீரை நெசவுத்தொழிலில் விடுதல்.

அப்போது சகல ஜந்துக்களின் இருதயகமலத்திற்குள் சாக்ஷி சொரூபமாயிருக்கும் பரப்பிரம்மத்தின் அம்சமாகிய ஆத்மா, புத்திரவாஞ்சை உண்டாகும்படி ஜிஜ்ஜாபீபீ மனதிற்குச் சாவியைக்கொடுத்துத் திருப்பிவிட்டபடியால், ஜிஜ்ஜாபீபிக்கு புத்திரவாஞ்சை அதிகமாய் உண்டாய், மகன் எங்கு சென்றானோவென்று, விசாரப்பட்டுக்கொண்டு ஆங்காங்கு சென்றுதேடி கடைசியாய் ஓரிடத்தில் பதுங்கியிருக்கும் கபீரைக்கண்டுபிடித்து, நல்லவார்த்தைகளால் வீட்டுக்கு அழைத்துவந்து தமது மதாசார தருமங்களையெல்லாம் பகுவிதமாய் உபதேசம் செய்ய ஆரம்பித்தாள். அவளது உபதேசங்களெல்லாம் தன் காதில் நுழையவிடாமல் மகம்மது மதத்தை திரஸ்கரித்துக்கொண்டே வந்தபடியால் கடைசியில் அவள் மனம் வெறுத்து புத்திரன் மீது கோபித்து "அடா! இந்த வார்த்தைகளை யாரிடம் கற்றுக்கொண்டாய். நீ ஆடப்பட்ட வார்த்தைகளுக்குத் தக்க வேலை செய்தால்தான் அரைவயிற்றிற்காகிலும் கொஞ்சம் கஞ்சி வார்ப்பேன். இல்லாவிடில் பட்டினியால் சாகவேண்டியதே என்று சொல்லி, பட்டுநூல் சுருள் ஒன்று கபீர் கையில்கொடுத்து இதனால் ஓர் பீதாம்பரத்தை நெய்துவா" வென்று சொல்லி பலாத்காரமாய் கையைப் பிடித்திழுத்து நெசவுக்குழியில் உட்காரவைத்தாள்.

அகண்ட பரிபூரண பிரம்மானந்தத்தில் மூழ்கி, சிசுக்களின் உச்சியைப்போலும், தவளையின் நெஞ்சுக்குழியைப்போலும், மனிதர்களின் மனதைப்போலும் சர்வகால சர்வாவஸ்தைகளிலும் ஏகதேக தியானத்திலிருக்கும் கபீரை நெசவுத்தொழிலில் விட்டபோது அவர் ஸ்திதியை என்னவென்று சொல்லலாம். சந்திரனை ராகு கேதுவினுடனும்,

விவேகியை அவிவேகியுடனும், பசுக்களை வியாக்கிரகங்க(புலிக)ளுடனும், தேவர்களை ராக்ஷசர்களுடனும், சர்ப்பங்களைக் கருடன்களுடனும், சௌந்தரியமுள்ள ஸ்திரீயை நபும்ஸக (ஆணும் பெண்ணுமல்லாத அலியி)னுடனும், பூததயாளமுடையவனை காதக (கொல்லுந் தொழிலையுடையவ)னுடனும் சேர்ப்பித்ததுபோல் எவ்வளவு பச்சாத்தாபகரமானதாய் இருக்கின்றது. ஜிஜ்ஜாபீபி, கபீருனுடைய சித்த விருத்தியை அறியாதவளாதலால் தன்குமாரனை எவ்விதமாகிலும் தம் மதாசார தருமத்திற்கு உட்படுத்திக்கொள்ள வேண்டுமென்னும் உத்தேசத்தினால் அவ்விதமாய்ச் செய்தவளேயொழிய கபீர்மீது கெட்ட எண்ணத்துடன் செய்தவளல்ல.

பரம பாகவத சிரோமணியாகிய கபீர், தாயின் ஆஞ்ஞானுசாரமாய்ப் பீதாம்பரத்தை நெய்ய ஆரம்பித்து ஒருமுழம் நெய்வதற்குள் இடையிடையில் பகவந்நாமத்தில் சொக்கிக்கொண்டு, அதிக பிரயாசையுடன் ஓர் முழம் பீதாம்பரம் நெய்து கடைசியில் பிரம்மானந்தத்தில் மூழ்கித் தன்னை மறந்திருந்தார். அப்போது பகவான், பக்தர்களிடம் பரம விசுவாசமுடையவராதலால், அதிருசியமாய் (கண்களுக்குத் தென்படாமல்) இருந்து, கபீருக்குப்பதிலாய் பீதாம்பரத்தைத் தான் ஒருமுழம் நெசவு செய்தனர். இதற்குள், குமாரன் என்னசெய்கின்றானோ பார்க்கலாமென்று ஜிஜ்ஜாபீபி வந்து, கண்களைமூடி பகவத்தியானத்தில் சொக்கியிருக்கும் குமாரனைக்கண்டு, "அடாபயலே! வேலை செய்வதை நிறுத்தி உறங்கி வீழ்ந்துகொண்டிருக்கின்றாயா? தலைக்குப்போட்டால் காலுக்கும், காலுக்குப் போட்டால் தலைக்கும் போட்டு அகடவிகடங்களைப் பேசுவதில் சமர்த்தனாயிருக்கின்றாயே யொழிய வேலையில் மாத்திரம் உதவாத பந்தமாகவே யிருக்கின்றாய். நல்லது, இந்

தப் பீதாம்பரத்தை அறுத்து ஜவுளிக்கடைகளுக்குக் கொண்டுபோய் நல்லவிலைக்கு விற்பனைச் செய்துவந்தால்தான் உனக்கு அன்னமிடுவேன். இல்லாவிடில் குடிக்க கஞ்சிநீரும் வார்க்கேன்; சீக்கிரமாய்ப்போ"வென்று கடின வார்த்தையுடன் சொல்லினள். அதைக்கேட்ட கபீர் மறுவார்த்தையாடாமல் தாயின் வார்த்தைக்குச் சம்மதித்து பீதாம்பரத்தை அறுத்து எடுத்துக்கொண்டு, மெதுவாய் கடைவீதிக்குச் சென்று அவ்விடம் கூடியிருக்கும் ஜனங்களுக்கு அதைக்காட்டி "பீதாம்பரம் வாங்குகின்றீர்களா" என்று உரத்த சப்தத்துடன் சொல்லி இங்குமிங்குமாய் நடந்துச் சென்றார். அவர் செல்வது எப்படி இருந்ததென்றால், அரிச்சந்திரன் தனது பாரியாளையும், புத்திரனையும் விற்பதுபோல் இருந்தது. எப்படிப்பட்ட வஸ்துக்களையும் விற்பனைச் செய்யவேண்டுமானால் அதற்குத்தக்க சமத்காரமும் இருக்கவேண்டும். இல்லாவிடில் எவ்வளவு உயர்ந்த பொருளாயிருப்பினும் அற்பமாய் எண்ணப்படும்; இந்த விஷயத்தில் கபீர் அவ்வளவு சமத்காரமுடையவரல்லர்; பின் எப்படிப்பட்டவரென்றால், சதாகாலமும் பகவந்நாமத்தையே சிந்தித்துக்கொண்டு மனதை லோகவியாபாரத்தில் போகவிடாமல் நிர்ப்பந்தப் படுத்திக்கொண்டிருக்கும் மகானுபாவர். இப்படிப்பட்டவரை, மந்திர தந்திரங்களில் தேறியிருக்கும் மானவர்களின் சகவாசத்துடன் சேர்ப்பித்தால், அவரது குணங்கள் எப்படியிருக்குமோ அதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். பீதாம்பரத்தைப் பார்த்தவர்களெல்லோரும் ஆஹா! இது எவ்வளவு நேர்த்தியான பீதாம்பரம். ஜல்லடைக்கண்களைப் போல் எவ்வளவு நேர்த்தியாயிருக்கின்றது. ஜாணுக்கொரு இழையாயிருக்கின்றது. இதை நெய்தவர் கைகளுக்குத் தங்கக்காப்புப் போடலாம். இது உலகத்திலில்லாத விசித்

திரமான நெசவா யிருக்கின்றது. இதைத்தரிக்க நாம் அருகராகமாட்டோம் என்று, பலவிதங்களாய்ப் பேசிக் கல்லென்று சிரிக்க ஆரம்பித்தார்கள். அதைவாங்க எண்ணங்கொண்டுவந்து, பார்க்கப் பட்டவர்களுக்கு மாத்திரம் பகவானது மகிமையால் எவ்வளவோ அழகாயும் மிகவும் விலையுயர்ந்ததாயும் காணப்பட்டு, இதற்குத் தக்கவிலை கொடுத்து வாங்க நமக்குச் சக்தியில்லையென்று முன்வைத்த காலை பின் வைத்துச் செல்லுவார்கள். சர்வலோகேசுவரரான நாராயண மூர்த்தி திவ்விய அஸ்தத்தால் நெய்த அந்தப் பீதாம்பரத்திற்கு விலைமதிக்க யாவரால் முடியும். கபீர், சூரியாஸ்தமாகும் வரையில் பிரதக்ஷணமாய் வந்தபோதிலும், அதை வாங்குவோர் ஒருவரும் காணப்படவில்லை. பிறகு பீதாம்பரத்தை மடித்துக் கையில் பிடித்து மெதுவாய் வந்தவழியே சென்றார்.

பகவானுக்குக் கபீர் வஸ்திரதானம் செய்தல்.

இதற்குள் விஷ்ணுமூர்த்தி, ஏழைப் பிராமணனைப் போல் வேஷம் தரித்து கபீரைப் பின்தொடர்ந்து கையிலிருந்த பீதாம்பரத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தார். கபீர், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து ஓடிக்கொண்டிருக்கும் கிழப்பிராமணரைப்பார்த்து "ஓ பிராமணரே ஓடாதீர் நில்லும் நில்லும், எவ்வளவு தூரம் ஓடுகின்றீரோ ஓடும்பார்ப்போம். உம்முடைய வேகத்தையும் என் வேகத்தையும் இப்போதல்லவோ பார்க்கவேண்டுமென்று சொல்லிப் பின்தொடர்ந்து ஓடி அவரைக் குறுக்கிட்டு நிறுத்தி ஓய் கிழப்பிராமணத் திருடா! கோபிகைகளின் வஸ்திரங்களைக் கிருஷ்ணமூர்த்தி அபகரித்துக் கொண்டு சென்றதுபோல் என் அஸ்தத்திலிருந்த பீதாம்பரத்தைப் பிடுங்கிக்கொண்டு ஓடுகின்றீரா? உம்மைப் போன்ற திருடன் மற்றொருவன் இந்த உலகத்தில் இரான். பகற்காலத்திலேயே இவ்விதமாய்க் கண்களை மூடி உலகத்தார் சொத்தைக் கொள்ளை யடிப்பதில் மிகவும் தேர்ந்தவரா யிருக்கின்றீர்" என்று சொல்லி, அவர் கையிலிருக்கும் பீதாம்பரத்தைப் பிடித்துக்கொண்டு "விடும் விடும்" என்று பிடுங்கத் தலைப்பட்டார்.

கபடநாடக சூத்திரதாரியாகிய பிராமணர், கபீரைப் பார்த்து "கையிலிருக்கும் பீதாம்பரத்தைப் பிடுங்காதே உங்கள் பிதுரார்ஜிதம் கொள்ளைப் போனதுபோல் ஏன் அவ்வளவு தொந்தரவு படுகின்றாய்" என்றுசொல்லி, மடிப்புடனிருந்த பீதாம்பரத்தை அவிழ்த்து, வேடிக்கைப்பார்க்க வந்து தன்புறமாய் நின்றிருக்கும் ஜனங்களுக்கெல்லாம் காட்டி, "ஐயா! இதைப்பாருங்கள் இவன் நெய்திருக்கும் இந்த வலையையும் பீதாம்பரமென்று பிதற்றுகிறான். இது கௌபீனத்திற்காயினும் உதவாததா யிருக்கின்றது. இதுவரையில் இப்படிப்பட்ட பீதாம்பரத்தை எப்போதாகிலும் நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா" என்று சொல்லிக்கொண்டே எல்லோரும் பார்க்கும்படியாய் இரண்டு துண்டுகளாய்க் கிழித்துவிட்டார்.

அதைப்பார்த்த கபீர் கோபங்கொண்டு பிராமணரை உற்றுப்பார்த்து, "ஏனையா! கொஞ்சமாகிலும் புத்தி இல்லாதவரா யிருக்கின்றீர்? ஸ்ரீமந் நாராயணமூர்த்திக்கு அலங்கரிக்கத் தக்க பீதாம்பரத்தை அநியாயமாய்க் கிழித்துவிட்டீர். பார்ப்பதற்கோ பெருத்த சாஸ்திரஞ்ஞராய் இருக்கின்றீர். உமக்கு யுக்தா அயுக்த பரிஞ்ஞானமில்லாமற் போனதென்ன? பிராமண பிசாசுகளுக்கெல்லாம் ஊர்ச்சொத்தை அபகரிப்பது சுபாவ குணமல்லவா? நீர் எவ்வளவு வேத வேதோக்தமனாய் இருந்தபோதிலும்,

உமது ஜாதிபுத்தி என்விடுவீர். “ப்ராமணோ யமகாதகஃ” என்னும் வார்த்தையை ஸ்திரப்படுத்தினீர்” என்று சொல்லிக்கொண்டே பிராமணர் கையிலிருந்த பீதாம்பரத்தை பலாத்காரமாய் பிடுங்கிக்கொண்டார். அப்போது கபடப் பிராமணர், புன்சிரிப்புடன் சொல்லுகின்றார். அதாவது “துன்மார்க்கன் ஒருவன் துராசாரமுடையவனையும், வேசியையும், விபசார புருஷனையும், விபசார ஸ்திரீயையும் மெச்சுவதுபோல் நீ இந்தக் கௌபீனத்தை மெச்சுகின்றாய். உனக்குத் தக்க புத்திதானே இருக்கு” மென்று சொல்லி பக்கென்று சிரித்தார். இவர் சிரித்தவுடன் வேடிக்கை பார்க்கவந்த ஜனங்களெல்லோரும் சிரித்தார்கள். அப்போது கபீர், கபடப் பிராமணரைப்பார்த்து “உம்முடைய யோக்கியதைக்குத் தக்கபடியே பிதற்றுகின்றீர்; குணமுடையவனுக்கு சம்பத்தேன்? தருமமுடையவனுக்குத் தபசு ஏன்? பதிவிரதைக்கு அழகேன்? பூததயை பச்சாத்தாபமுடையவனுக்கு விரதமேன்? ஆசார ரகிதனுக்குச் சந்நியாசமேன்? பதிவிரதைக்குக் காவலேன்? ஆத்மசுத்தியுடையவனுக்கு ஆசாரமேன்? ஆதலால், பட்டினால் நெய்த பீதாம்பரத்திற்கு வேலைத்தரமேன்? இது சாக்ஷாத் பகவானுக்கு உபயோகிக்கத் தக்கதென்பதற்குச் சந்தேகமில்லை? இதன் மகிமை தெரிந்தவர்களுக்கே தெரியுமேயொழிய உம்மைப்போன்ற பிக்ஷகனுக்கு என்ன தெரியப்போகின்றது. எவ்விடத்தில் சமாராதனை, பூரி முதலான தானம் கொடுக்கின்றார்களோ அவ்விடத்திற்குப் போய்ப்பாரும்” என்று கபீர் சொல்லினர்.

இதுவெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கபடப் பிராமணர் புன்னகையுடன் சிரித்து “உனக்கேன் அவ்வளவு கோபம் வரவேண்டும், யாராகிலும் கொடுக்கும் தக்ஷணைக் காசுகளை முடிபோட்டுக்கொள்ள இது உபயோகப்படும்,

இதற்கு என்ன விலை சொல்லுகின்றாயோ சொல் பார்ப்போம்; இதை வாங்கிக்கொள்ளுகின்றேன்” என்று கேட்டனர். அதற்குக் கபீர் “நான் விலைசொல்லேன்; இவ்விடம் கூட்டமாய் இருக்கும் பத்து மனிதர்களிடம் இதைக் காட்டும். அவர்கள்பார்த்து என்னவிலை மதிப்பிடுகின்றார்களோ அதை நான் வாங்கிக்கொள்ளுகின்றேன்” என்று சொல்லினர். “அப்படியானால் மிகவும் நல்லதே” என்று தன் புறமாய்நின்றிருக்கும் ஜனங்களெல்லோரையும் பிராமணர்ப் பார்த்து, “ஐயா, இந்தச் சல்லடைக்கந்தையைப் பார்த்தீர்களாவென்று விரித்துக்காட்டி இதற்கு என்னவிலை மதிக்கின்றீர்களோ சொல்லுங்கள்” என்று கேட்டனர். பகவானது மகிமையினால் அவ்விடம் நின்றிருந்த ஜனங்களுக்கெல்லாம் அது, பலவிதமாய்க் காணப்பட்டு வந்தபடியால் ஒருவன் ஒருபணம் பெறுமென்றும், ஒருவன் ஒரு வராகன் பெறுமென்றும், ஒருவன் பத்து வராகன் பெறுமென்றும், மற்றொருவன் ஐம்பது வராகன் பெறுமென்றும், இன்னொருவன் நூறு வராகன் பெறுமென்றும் இவ்விதமாய் வெவ்வேறாய் அவரவர்களுக்குத் தோன்றியபடிக்கெல்லாம் சொல்லத் தொடங்கினார்களே யொழிய இவ்வளவுதான் பெறுமென்று மதிப்பிட்டவர்கள் ஒருவருமில்லை.

அப்போது கபடப்பிராமணர் அவர்களைப் பார்த்து, “சரி சரி. ஓர் பலகரைக்கும் உதவாத இந்தக் கிழிந்த துணிக்குப் பத்து, ஐம்பது, நூறு வராகன்கள் பெறுமென்று வாய்க்கு வந்தபடியெல்லாம் மதிப்பிடுகின்றீர்கள். மிகவும் புத்திசாலிகள்தான்” என்று சொல்லி, கபீரைப்பார்த்து “ஓ சிறுவனே! பத்துப்பேர்கள் பத்துவிதங்களாய்ச் சொல்லுகின்றார்கள். அவையெல்லாம் பிரயோஜனப்படாத வார்த்தைகளே; நீ விற்கப்பட்டவன். நான் வாங்கப்பட்டவன். உனக்கும் எனக்கும் நஷ்டமில்லாமல் பார்த்துக்கொள்ள

வேண்டியதே முக்கியமானது. ஆதலால், உனக்குத் திருப்தியாகும்படி நல்ல விலைகொடுக்கின்றேன் பெற்றுக் கொள்'' என்று சொல்லி தன் இடுப்பிலிருந்த கந்தையை மெதுவாய் அவிழ்த்துக்கொண்டே "அடா அப்பா! நீ இன்று காலை எழுந்தவுடன் அரசன் முகமோ, பதிவிரதையின் முகமோ, பகவத் பக்தர்களின் முகமோ, நரியின் முகமோ பார்த்திருக்கவேண்டும். இல்லாவிடில் இந்த உதவாத துண்டுக்கு இவ்வளவு விலைகொடுத்து வாங்கப் பட்டவர்கள் ஒருவரும் இல்லை'' யென்று சொல்லிக் கொண்டே மூட்டையை அவிழ்த்து அதிலிருந்து இரண்டு மூளிப்பலகரைகளை கையிலெடுத்து மூடிக்கொண்டு இது நல்லவிலை, கையைப் பிடியென்று சொல்லி கபீர் கையில் வைத்து இந்தத் துண்டு இவ்வளவு விலை பெறுவிட்டாலும் நீ சிறியவனாயிருந்து மிகவும் கஷ்டத்துடன் எடுத்துக் கொண்டு வந்தபடியால் சந்தோஷத்தை அடையும்படி இவ்வளவு விலை கொடுத்தேன் இதைப் பெற்றுக்கொண்டு சந்தோஷமாய்ப் போவென்று சொல்லினர். தன் கையில் வைத்த மூளிப்பலகரைகளை கபீர் பார்த்து புன்னகையுடன் சிரித்து ஜனங்களின் பக்கமாய்த் திரும்பிப்பார்த்து "ஓ ஜனங்களே! பார்த்தீர்களா இந்தப் பிராமணன் கந்தையின் முடிச்சை அவிழ்த்துக்கொண்டே நல்லவிலை, நல்ல விலை யென்று இவ்வளவு நேரம் புகழ்ந்து கடைசியாய் கையில் வைத்தது இரண்டு மூளிப்பலகரைகளே. இவர் மிகவும் பேராசை பிடித்தவரா யிருக்கின்றார்'' என்று சொல்லிக்கொண்டே பலகரைகளை வீசி எறிந்தார்.

கபடப் பிராமணர் அதைப்பார்த்து "அடே துன்மார்க்கா! உனக்கு இவ்வளவு அஹங்காரமா? என் பாட்டன், முப்பாட்டன்மார்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு சம்பாதித்துவைத்த மூலதனத்தை இவ்வளவு அலக்ஷியமாய் எறிந்துவிட்டாயல்லவா? நீ மிகவும் கர்வம் பிடித்தவனாகவே காணப்படுகின்றாய். இன்னும் எவ்வளவு விலை பெற்றுக்கொள்ளலாமென்று இருக்கின்றாய்? இதுவரையில் என்னைத் துராசைப் பிடித்தவனென்று நிந்தித்தாய்; இப்போது துராசையுடையவர் யாரோ அதை நீயே யோசித்துப்பார். நீ சிறுவனாயிருக்கின்றாயே, போகட்டும் பாவமென்று எண்ணியல்லவோ இந்தச் சொத்தை உனக்குக் கொடுத்தேன். கடைசியில் சிறுவனாகிய உன்புத்தியைக் காட்டினாய். ஆஹா! சாளக்கிராம லிங்கம், மாணிக்கம் முதலியவைகளில் அனுக்கிரக மூர்த்திகளாய் எழுந்தருளி இருக்கும் ஹரி ஹரர்களின் நாமங்களை இவ்வளவு அலக்ஷியம் செய்யலாமா? இந்தப் பலகரையின் மஹா ரகசியம் துன்மார்க்கனான உனக்கு என்ன தெரியவரும். புத்தியென்பது இல்லவேயில்லை; இதரர்கள் சொல்வதையும் கேட்கமாட்டாய்'' என்று சொல்லிக்கொண்டே, கீழேவிழுந்த பலகரைகளை எடுத்துக்கொண்டு மறுபடியும் கபீரிடம் வந்து "அடா புத்தியில்லாதவனே இந்தப் பலகரையைக் கொண்டு உன்னையும் உன்பாட்டன் முப்பாட்டன் முதலானவர்களையும், சுவர்க்க மத்திய பாதாளமாகிய மூன்று உலகங்களையும்கூட விலைகொடுத்து வாங்கிக்கொள்வேன்; வேண்டுமானால் குபேரனுக்கும் கடன்கொடுப்பேன். அன்றியும் இந்த அண்டத்தைத் தலைகீழாயுஞ் செய்வேன். தாரித்திரியத்தைத் தலைகாட்டாமல் தொம்ஸம் செய்துவிடுவேன்; பயித்தியக்காரா! இதன் மகிமை உனக்கென்னதெரியும். எத்தனையோ ஜன்மங்களெடுத்து எவ்வளவு தவம்செய்தபோதிலும் கிடைக்கத்தகாத இந்த சொத்தை உனக்குக்கொடுத்தபோதிலும் அதின்மகிமையைத் தெரிந்துகொள்ளாமல் அலக்ஷியமாய் எறிந்துவிட்டாய்; ஆதலால் நீ துர்திஷ்டமானவனே'' என்று

அனேகவிதங்களாய் அந்தப் பலகரையை துதிசெய்து அனேக முறைகள் கபீருக்குக் காட்டுவதும் மறுபடியும் மறைத்துக் கொள்ளுவதுமாயிருந்து தான்கற்ற இந்திர ஜால வித்தைகளையெல்லாம் காட்டினார்.

இவைகளையெல்லாம் பார்த்தும் கேட்டுமிருக்கும் கபீர் புன்சிரிப்பாய்ச் சிரித்து "அப்பப்பா! நீயோ மிகவும் வாக் சாமர்த்தியமுடையவனாயிருக்கின்றாய். சபாஷ்! இந்த வாக் சாலக்கினால் எத்தனைபேர்களின் குடும்பங்களைக் கொள்ளையடித்தாயோ தெரியவராது. உன்ஜபம் என்னிடம்சாயாது. உன்னையும், உன்பாட்டன், முப்பாட்டன்களையும்கூட விக்கிரயம் செய்தபோதிலும் இந்தப் பீதாம்பரத்திற்கு ஈடாக மாட்டார்கள்; உன்முகத்தைப் பார்க்கும்போதே இதை வாங்குவதாகவே இருக்கின்றது. போ போ" வென்று சொல்லினர்.

அப்போது அவ்விடம் கும்பல் கூடியிருக்கும் ஜனங்களெல்லாம் இவர்களிருவர்களின் வாக்குவாதங்களையெல்லாம் கண்டும் கேட்டுமிருந்ததால் இது உலகத்திலில்லாத அற்புத விநோதமாயிருக்கின்றது; உதவாத கந்தையை மெச்சிக்கொண்டே இவன் விலைசொல்லுவதும், உதவாத பலகறையின் மகத்துவத்தை அவன் புகழ்ந்து சொல்லுவதைப் பார்த்தால், குருடனும் செவிடனும் நடனம் பார்ப்பதுபோலும், சோரஸ்திரீயும் பதிவிரதையும் திருவிழாப் பார்க்கச் சென்றதுபோலும், தர்மவானும் கர்மவானும் பகவானைச் சேவிப்பதுபோலும், மௌனியும் கலகப்பிரியனும் புராண சிரவணம் செய்ததுபோலும், விருத்தனும் பாலனும் யுத்தம்செய்ததுபோலும், கோள்சொல்பவனும் குரூர மனமுடையவனும் நியாயம் தீர்ப்பதுபோலும், கள்ளனும் லோபியும் வர்த்தகம் செய்வதுபோலும், சுராபானம் செய்பவனும் பிக்ஷுகனும் நாட்டியம் செய்வதுபோலும்

சர்வ லக்ஷணங்களும் கூடிஇருக்கின்றதென்றுசொல்லி சிரித்துக்கொண்டே அவர்களிருவரையும் பார்த்து "ஐயா! பயித்தியம் பிடித்தவர்களே! யுக்தா அயுக்த பரிஜ்ஞானமில்லாமல் இவ்விதமாய் என் துர்வாதம் செய்துகொள்கின்றீர்கள்? கந்தைக்குத்தகுந்த பொந்தை என்பதுபோல் இந்த ஜல்லடைக்கந்தைக்கும் அந்த ஒட்டை பலகரைக்கும் சரியாகவே யிருக்கின்றது. அதைப்பெற்றுக்கொண்டு திருப்தியுடன் செல்லும் என்று நல்ல வார்த்தையாகச் சொல்லி அவரவர்களின் வழியாச் சென்றார்கள்.

கபடப்பிராமணர் கபீரை விடாமல் மறுபடியும் "அடா பயலே! என் பலகரையின் மகிமையை நீ அறியாதவனானதால், நான் பிடித்த முசலுக்கு மூன்றுகால்களே என்று சொல்வதுபோல் முரட்டுப் பிடிவாதமாய்ப் பேசுகின்றாய். இப்போது இந்தப் பலகரைகளை பெற்றுக் கொள்ளாவிட்டால் பின்னிட்டுப் பச்சாத்தாபப்படுவாய், நன்றாய் யோசித்துப்பார்" என்று சொல்லினர்.

அதைக்கேட்ட கபீர், ஓ ஹோ! பீதாம்பரமகிமை உனக்குத் தெரியாததனால்தான் ஏதேதோ பிதற்றிக் கொண்டிருக்கின்றாய். ஆயிரவார்த்தைகளேன்? நல்ல விலை வந்தபோதிலும் இந்தப் பீதாம்பரத்தைக்கொடேன். இதன் மீதிலுள்ள துராசையினால் நீர் ஏன் வீண்விவாதம் ஆடுகின்றீர். வந்தவழியே செல்லும்" என்று சொல்லினர்.

பிறகு கபடப்பிராமணர் மறுபடியும் தன் கையிலிருக்கும் பலகரையைக்காட்டி "இதோபார்; கைக்குவந்த நல்ல விலை தவறிவிடுகின்றது. உன் வலைத்துணிக்கு இதைவிட நல்லவிலை கிடைக்கமாட்டாது. என் வார்த்தையைக் கேட்டு இதை வாங்கிக்கொண்டு கொடுத்துவிட்டுச் செல்; கையில் பிடித்துக்கொண்டு ஏன் விருதாவாய்த் திரிகின்றாய்" என்று சொல்லினர்.

அதற்குக் கபீர் "இனி உமது பிரசங்கத்தை நிறுத்தும். உம் எண்ணத்தைப்பார்த்தால், வயற்றிற்கும் வஸ்திரத்திற்கும் இல்லாத பிக்ஷுகன் லக்ஷாதிபதி வீட்டிலுள்ள கன்னிகையை மணம்புரிய எண்ணங்கொண்டதுபோல் இருக்கின்றது. எங்கேயோ குப்பையில்கிடந்த இரண்டு கூளிப்பலகரைகளைக் கையில் பிடித்துக்கொண்டுவந்து உலகத்தாரை வார்த்தைகளால் மோசம்செய்ய வந்திருக்கின்றீர்; நீர் வாங்கியது போதும்போதும்; பேராசைப்படாமல் செல்லும். இனி என் இவ்விடம் நின்றிருக்கின்றீர்? வந்து வெகுநேரமாயிற்று போம்; போம்?" என்று திரஸ்காரமாய்ச் சொல்லினர். பிறகு கபடப்பிராமணர் நல்ல வார்த்தைகளால் "நாயனா! ஏன் அவ்வளவு கோபிக்கின்றாய்? நான் ஏழைப்பிராமணன்; இதற்குத் தகுந்த விலைகொடுக்க எனக்கு சக்தியில்லை; தர்மார்த்தமாய் இந்த பீதாம்பரத்தில் பாதிகொடுத்தால் போதுமானது. கோகுல பிருந்தாவனத்தில் நடக்கும் மகோச்சவத்தில் இந்தப் பீதாம்பரத்தைப் பகவானுக்கு அலங்காரம் செய்கின்றேன்; அதனால் உனக்குச் சகல சம்பத்துகளும் உண்டாவதே யல்லாமல் புண்ணியமும் கீர்த்தியும் உண்டாகும். பூர்வம் உச்சிஷ்ட பழங்களைச் சமர்ப்பித்த சபரிக்கும், ஓர்பிடி அவல்கொடுத்த குசேலனுக்கும் உண்டாகிய மஹாபதவி உனக்கும் உண்டாகும். முன்பின் யோசிக்காமல் சீக்கிரமாய்த் தானம்செய்" என்று அதிக வினயத்துடன் சொல்லினர். அதைக் கேட்ட கபீர் "சுவாமீ! தாங்கள் சொல்வது வாஸ்தவமே. இந்த வஸ்திரத்தை தேவரீருக்குச் சமர்ப்பிக்கும் அவ்வளவு சுதந்திரனல்லன். ஒருவேளை தர்மார்த்தமாய் இதை உமக்குக் கொடுக்கும்பக்ஷத்தில் என்தாய் என்னைக் கொன்றுவிடுவாள். ஆதலால், முன்பின் யோசிக்கவேண்டியதாயிருக்கின்றது. நல்லவிலைக்கு விற்பனைச்செய்து

வரவேண்டுமென்று என்தாய் முன்னமே திட்டம் செய்து அனுப்பியிருக்கின்றாள். ஆதலால் இதுவிஷயம் மன்னிக்கவும்" என்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக் கொண்டனர்.

பிறகு கபடநாடகச் சூத்திரதாரியாகிய பிராமணர், கபீர் சமீபமாய்வந்துநின்று "நாயனா! உன்னைப்பார்த்தால் தருமபுத்திரனாயிருக்கின்றாய். உன் முகதேஜசும் உன் காம்பீரமும் சாந்த சுபாவமும் பார்த்தால் மகாநுபாவனென்றே சொல்லலாம். விளையும் பயிர் முளையில் தெரியவரும் என்னும் பழமொழிபோல் உன் சத்குணங்களெல்லாம் பால்யத்திலேயே தெரியவருகின்றன. இன்னும் சிலதினங்களில் இந்தக் காசிபட்டணத்தில் தியாகக்கொடி போடப்போகின்றாய். அப்போது நானேவந்து உன்னிடத்தில் அனேக உபகாரங்களை அடையப்போகின்றேன். முகத்திற்கிச்சையாய்ப் பேசி இந்த வஸ்திரத்தை வாங்கிக்கொண்டு போகின்றேனென்று எண்ணவேண்டாம். நடக்கப்போகும் விஷயமே சொல்லுகின்றேன். இப்போது சொல்லப்போகும் விஷயத்தைச் சாவதான சித்தத்துடன் கேட்கக்கடவாய். நாயனா! தருமம் ஒன்றே தன்னுடன் கூடவரப்பட்டதேயொழிய, தாய்தந்தையர்கள், புத்திர களத்திராதிகள், பந்துமித்திராதிகள் முதலானவர்களில் ஒருவரும் வரப்பட்டவர்களல்லர். எவ்வளவு சம்பத்துகள் இருந்தபோதிலும் நசிக்கத்தக்கதேயொழிய சாஸ்வதமானதல்ல. மனிதர்களுக்கு ஜன்மங்கள்தோறும் அதிக சகாயகாரியாயிருப்பது தருமமேயொழிய வேறொன்றில்லை. தருமம் சம்பாதிக்க பிரயத்தினம் செய்யாத ஜன்மம் வியர்த்தமே. நான் சொல்லும் விஷயங்களை யோசித்துப் பார்ப்பாயாகில் தருமத்தைவிட உத்கிருஷ்டமான பதார்த்தம் வேறொன்றில்லையென்று உனக்கே உறுதியாய்த் தெரியவரும். யாசகம் செய்வது

எவ்வளவு தாழ்ந்ததோ, லோபத்துவமும் அவ்வளவு தாழ்ந்ததென்று தெரிந்துகொள்ளக்கடவாய். பாத்திரமறிந்து தானம்செய்யவேண்டும். அபாத்திரத்தில் உபயோகப்படுத்திய பதார்த்தம் சாம்பலில்விட்ட நெய்யைப்போல் நிஷ்பிரயோஜனமாகும். நான் வுத்தம பிராமணன்; இந்தப் பீதாம்பரம் என் நிமித்தியமாய் இச்சித்ததல்ல: பகவானுக்கு அலங்கரிப்பதற்காகவே, பகவதற்பணம் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டேன். ஆதலால், என் மனோரதத்தைப் பூர்த்திசெய்வாயாகில் உன்மனோரதம் சீக்கிரமாய்ப் பலிதமாகும்'' என்று சொல்லினர்.

இவைகளையெல்லாம் கேட்ட கபீர், தனக்குள் தான் என்ன ஆலோசிக்கின்றாரென்றால், இந்தப் பீதாம்பரத் துண்டை இவருக்குக் கொடுப்பது பெரிதன்று. இதைக் கொடுத்துவிட்டால் தாய் என்ன சொல்லுவாளோ தெரியவில்லையே? இந்தத் தரும சங்கடத்திற்கு நான் என்னசெய்வேன்! என்று அநேக எண்ணங்களை எண்ணிக்கொண்டு பீதாம்பரத்தை கொடுப்பதற்காயினும் அல்லது இல்லையென்று சொல்வதற்காயினும் மனமில்லாதவராய் ஆலோசித்துக்கொண்டே கபீர், பிராமணரது முகத்தை ஏறயிறங்கப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தார். இப்படி வெகு நேரம்பார்த்துக்கொண்டிருக்கும் கபீரைப்பார்த்து கபடப் பிராமணர் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்.

“ஓ பிரபு குமாரா! என்ன ஆலோசிக்கின்றாய்? நீ யோசிப்பதைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது. உன்னைத் தேசம் கேட்டேனா? ராஜ்ஜியம் கேட்டேனா? நாடு கேட்டேனா? அல்லது நகரம் கேட்டேனா? இந்த அற்ப துண்டுக்காக இவ்வளவு ஆலோசனை செய்யவேண்டுமா? உன் முகவிலாசம், சந்திரபிம்பம்போல் பிரகாசித்து தர்மகுணங்கள் குடிகொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட

குணமுடைய உனக்கு இந்த அற்பமாகிய துண்டைக் கொடுக்க மனமெழாமலிருக்கும் காரணம் என்னமோ தெரியாமலிருக்கின்றது. துராத்மாக்களுக்கு இருக்கவேண்டிய லோபகுணம் உன்னிடத்தில் இருப்பதற்குக் காரணமென்ன? லோபகுணமுடையவனுக்கு எப்பொழும் சத்கீர்த்தி உண்டாகமாட்டாது; எத்தனை விதங்களாய் நான் உன்னை வேண்டிக்கொண்டபோதிலும் உன்மனம் இரங்காமலிருக்கின்றது; ஏதோ உன் முகத்தை நன்றாய் ஏறெடுத்து என் முகத்தைப்பார். அப்படிப் பார்ப்பாயாகில் உன்னை மூடிக்கொண்டிருக்கும் லோபத்துவமெல்லாம் இப்பொழுதே சொல்லாமல் ஓடிப்போம். பிறகு மஹா தாதாவென்று பெயர் பெறுவாய். தர்மகாரியத்திற்குப் பிரயத்தனப்பட்ட புருஷர்களுக்கு, என்ன கஷ்டநஷ்டங்கள் வந்தபோதிலும் சந்துஷ்டியை அடைந்திருப்பார்கள். பூர்வம் உலகத்தை பஸ்மம் செய்யவந்த ஆலகாலவிஷத்தை ஈசுவரன், பானம்செய்து உலகத்தையும், தேவர்களையும் ரக்ஷித்தாரென்றும், தனக்குச் சம்பவிக்கப்போகும் ஆபத்தையும் ஈசுவரன், லக்ஷ்யம் செய்யாமல் பகாசூரன் கோரியவரத்தைத்தந்து கடைசியில் ஈசுவரனதுசிரசில் பகாசூரன் அஸ்த்தத்தைவைக்க பிரயத்தனப்பட்டபோது தான் ஓடி ஐவேலங்காயில் புகுந்து கொண்டாரென்றும், ஈசுவரனுக்குத் தகாத காரியமாயிருந்தபோதிலும் பாணாசூரன் வேண்டுகோளால் அவன் வாசலில் காவலாயிருந்தாரென்றும், ராவணாசூரன் கோரியபடி ஈசுவரனது பார்வையைக் கொடுத்தாரென்றும், அர்ஜுனன்கோரியபடி பரம பவித்திரமாகிய பாசுபதாஸ்த்திரத்தைக் கொடுத்தாரென்றும், மார்க்கண்டேயருக்குச் சிரஞ்சீவிப்பட்டம் கொடுத்தாரென்றும், பலிச்சக்கிரவர்த்தி வாசலை விஷ்ணுமூர்த்தி காத்திருந்தாரென்றும், சூரர்களின் வேண்டுகோளால் ஜனனமரணாதி

ரூபமுடைய மானவசரீரம் எடுத்தாரென்றும், பாண்டவர்களுக்காகத் தூதுசெல்ல ஸ்ரீ கிருஷ்ணன் சம்மதித்தாரென்றும், அர்ச்சுனன் வேண்டுகோளால் சாரத்தியம் செய்ய ஸ்ரீ கிருஷ்ணன் ஒப்புக்கொண்டாரென்றும், கோபாலர்களைக்காக்க கோவர்த்தனகிரியைத் தன் விரலால் சுமந்து குடைபிடித்தாரென்றும், பிரீதியுடன் ஓர்பிடி அவல் கொடுத்த குசேலனுக்கு அகண்ட ஐஸ்வர்யத்தைக் கொடுத்தாரென்றும், சிவனது தீனதசையை லக்ஷ்மி தேவி பார்த்துக் கனிகரமுண்டாய்த் தன் அஸ்தத்தால் பிக்ஷையிட்டு பிரம்ம அத்தியைப் போக்கடித்தாளென்றும், தேவர்கள் வந்து, ததீசியென்னும் ராஜரிஷியின் முதுகெலும்பைக் கேட்டமாத்திரத்தில் தன் தேகத்தைப் பெரிதாயெண்ணாமல் ஒப்புக்கொண்டு சல்யங்களை (எலும்புகளை)க் கொடுத்தாரென்றும், வாமனமூர்த்திக்குப் பலிச்சக்கிரவர்த்தி த்ரிலோகமும் கொடுத்துத் தான் சுதலத்திலிருக்கச் சம்மதித்தானென்றும், சிபிச்சக்கிரவர்த்தி தன் மாம்சங்களை யெல்லாம் அறுத்து கபோதமென்னும் பக்ஷியை ரக்ஷித்தானென்றும், பரம தபோதனராகிய ருஷ்யஸ்ருங்கரிஷி (கலைக்கோட்டுமஹாரிஷி) தசரதனுக்குப் புத்திரசந்தானம் கொடுத்தாரென்றும், தேவர்களுக்காகத் தன்பிராணத்தின்மீது ஆசைவையாமல் தசரதன் சம்பருவனுடன் யுத்தம் செய்தாரென்றும், தர்மர் தன்னை ஆசிரயித்திருந்த சுனகத்தை (நாயை) தேவலோகத்திற்கு அழைத்துச் சென்றாரென்றும், தனக்குப் பிராண ரக்ஷகமாயிருந்த சகஜ கவச குண்டலங்களை நிர்லக்ஷியமாய்க் கர்னன் ஸ்ரீ கிருஷ்ணனுக்குக் கொடுத்துவிட்டானென்றும், தன்னைச் சரணாகதியடைந்த கந்தர்வனை ரக்ஷிப்பதற்காக அர்ச்சுனன் ஸ்ரீ கிருஷ்ணனுடன் யுத்தம் செய்தானென்றும், இந்திரனுக்குச் சம்பவித்த பிரஹ்ம அத்தியை பிருகஸ்பதி வகித்தானென்

றும், ஹம்ஸத்வஜன் தன் சரீரத்தில் அர்த்தபாகம் பிளந்து தந்தானென்றும், இவை முதலான விஷயங்களைக் கேட்டிருக்கின்றாயல்லவா? இப்படியிருக்க இந்தத் துண்டு வஸ்திரத்தைத் தானம் கொடுப்பது எவ்வளவு பெரிதான கார்யமோ அதை நீயே யோசித்துப்பார்! நீ நல்ல மனமுடையவனென்றெண்ணி வாயைத்திறந்து கேட்டேன். அற்பமாகிய இந்தத் துண்டு வஸ்திரத்திற்கு இவ்வளவு ஆலோசிப்பாயென்று தெரிந்திருந்தால் உன்னைக் கேட்கா வண்ணம் இந்த வாய்க்கு முத்திரை போட்டிருப்பேன். இந்தப் பிரசங்கத்தினால் பிரயோஜனமென்ன? துண்டு வஸ்திரத்தைக் கொடுத்தால் சந்தோஷமுண்டாகும்; இல்லாவிடில் வியாகூலம் உண்டாகும். சும்மாயோசிப்பதனால் பிரயோஜனமென்ன? மனதைத் திடப்படுத்தி இந்தத் துண்டு வஸ்திரத்தைக் கொடுத்துவிடு; உனக்கு சகலமுகம் உண்டாகும்'' என்று சொல்லினர்.

இவர் வார்த்தையை மிகவும் சிரத்தையுடன் கேட்டிருந்த கபீர், மிகவும் சந்தோஷப்பட்டு தனக்குள்தான் பின் வருமாறு ஆலோசிக்கின்றார். இவர் யாரோ பெருத்த மஹாத்மாவாயிருக்கின்றார். சாமான்னியமானவர்களுக்கு இப்படிப்பட்ட உபந்நியாசம்செய்ய சக்தியிராது. ஆஹா! இவரது கண்டஸ்வரமும் வாக்கு தாரூட்டியமும் மிகவும் சுரோத்திரானந்தமாயிருக்கின்றது. தர்மவிஷயங்களைக் குறித்து இவ்வளவு ஸ்பஷ்டமாய் மற்றவர்கள் எவரும் போதிக்கார்கள். எப்படிப்பட்ட லுப்தனாயிருந்தபோதிலும் இவரது உபந்யாசத்தைக் கேட்டமாத்திரத்தில் லுப்தத்துவம் நீங்கித் தயாளத்துவமும், தர்மகுணமும் உண்டாவதற்கு ஆக்ஷேபனையுமுண்டோ? பிராணனையும் நிர்லக்ஷியமாய் கொடுத்துவிடத் துணிவார்கள். இந்த மஹாத்மா சொல்லிய வார்த்தைகளெல்லாம் வாஸ்தவமே. பலிச்சக்கிர

வர்த்தி நிச்சல சித்தத்துடன் மூன்று லோகத்தையும் தத்தம் செய்தபடியாலல்லவோ அகண்ட சாம்ராஜ்ஜிய பதவியும் சிரஞ்சீவிப் பட்டமும் அடைந்து நித்தியானந்தத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றான். அவன் செய்யப்பட்ட தரும கைங்கரியத்திற்கு விகாதம் செய்ய வந்தபடியாலல்லவோ சுக்கிரன் ஓர் கண்ணைப் போக்கடித்துக்கொண்டு அபகீர்த்திக்குப் பாத்திரனானான்.

லோபத்துவம் எப்பொழுதும் இருக்கலாகாது. கை நீட்டி யாசகம் கேட்கப்பட்டவர்களுக்குத் தன் சக்தியானுசாரம்கொடுத்து சந்தோஷப்படுத்துபவனுடைய ஜன்மமே ஜன்மம். மற்றவர்களின் ஜன்மம் பசுவின் ஜன்மத்திற்குச் சமமாகும். கிருகஸ்த்தர்களுக்குத் தருமமும், வானப்பிரஸ்தர்களுக்குத் தபசும், ஸ்திரீகளுக்குப் பதிவிரதமும், புருஷர்களுக்கு விவேகமும் முக்கியமாயிருக்கவேண்டும். வர்த்தகம் செய்யவந்த நான் கிருகஸ்தனாய் விட்டேன். கிருகஸ்தா சிரமத்தை அடைந்தபோது அதற்குத் தக்க தருமகாரியத்தையும் அனுஷ்டித்தே தீரவேண்டும். சத்விஷயங்களைச்செய்ய ஆரம்பித்தபோது அனேக சங்கடங்கள் உண்டாவது சகஜமா யிருந்தபோதிலும் மனோதிரமுடையவன் இவைகளுக்கெல்லாம் பின்வாங்காமல் தான் முயன்ற காரியத்தில் ஸ்திரசித்தத்துடனிருந்து நிர்விக்கினமாய் நடத்தவேண்டும்.

அதிதிகளினுடையவும் அப்பியாகதிகளினுடையவும் யோகிகளினுடையவும் சன்யாசிகளினுடையவும் கோரிக்கையைப் பூர்த்திசெய்யும் ஒருவனே புருஷன். தானதரும பரோபகாரமில்லாத தௌர்பாக்கியனுக்கு எவ்வளவு சம்பத்திருந்தபோதிலும் பாழடைந்த வீட்டில்வைத்த தீபம்போல் நிஷ்பிரயோஜனமேயாகும் என்று பகுவிதங்களாய் எண்ணி, வந்தது வரட்டும் இந்தப் பிராமணர் கோரிக்கையை நிறைவேற்றி அனுப்புவதே உத்தமமென்று நிச்சயித்துத் தன் கையிலிருந்த இரண்டு பீதாம்பரத்தில் ஒன்றையெடுத்து தன் மதாசாரப்படி "பிஸ்மில்லா" என்று சொல்லி கபீர், கையிலிருந்த பீதாம்பரத்தைப் பிராமணருக்குக் கொடுக்கப்போனார்.

"பிஸ்மில்லா" என்னும் வார்த்தையைக் கபடப் பிராமணர் கேட்டமாத்திரத்தில் சகிக்காதவராய் நடித்து "அடே நீசா! வேதங்களில் இல்லாத வாக்கியத்தை உச்சரித்தாய். ஜப தப யாக யோகாதிக் கிரியைகளுக்கும், ஐஹிகா முஷ்மிகங்களுக்கும் பிரதான சாதனங்களை வேரறுத்து ஜிவ்ஹா சாபல்யத்திற்காக (நாருசிக்காக) ஜீவஹிம்சை செய்ய எழுதிவைத்த அசத்தாகிய கிரந்தத்திலுள்ள துர்வாக்கியத்தைச் சொல்லி தானம்கொடுக்க வந்தாய். சீ! சீ! நீ உத்தமஜாதியானென்றல்லவோ நான் இதுவரையில் எண்ணியிருந்தேன். ஐயோ! தெரியாமல் இவனைப் பிரபு குமாரனென்றும் சொல்லிவிட்டேனே" என்று வார்த்தை யாடிக்கொண்டே கபீரினுடைய சிரசைக் கையில் பிடித்துக்கொண்டு அனேகமுறை திருப்பித் திருப்பிப் பார்த்து "ஐயோ! உன் முகத்தில் சுபகரமாகிய ஊர்த்துவ புண்டரமிருக்கின்றதென்றல்லவா பிரமித்தேன்? பாழடைந்த முக முடையவனென்று தெரிந்திருந்தால் உன்னிடத்தில் வார்த்தையாடி யிருப்பேனா? அடா! கோர இம்சைசெய்யும் பாபாத்மா! உன்னைத் தீண்டினதால் கங்கையில் ஸ்நானம் செய்யவேண்டிய பிராயச்சித்தம் ஒன்று உண்டாக்கிக் கொண்டேன். தூ! தூ! துச்ச குணமுடைய மிலேச்சா! தூரமாய்ச்செல். இனி என்னைத் தீண்டாதே" என்று திரஸ்கரித்து இரண்டு மூன்றடி பின்னுக்கே தூரமாய்ச் சென்றுநின்றார்.

பிறகு கபீர் அவரைப்பார்த்து விசாரமடைந்து "சுவாமீ! கோபங் கொள்ளவேண்டாம்; தாங்கள் இஷ்டப்பட்ட வஸ்திரத்தைப் பெற்றுக்கொள்ளும்" என்று அதிகவினயத்துடன் வேண்டிக்கொண்டனர்.

அதற்குப் பிராமணர் "சீ! சீ! அவ்வார்த்தையை மறுபடியும் எடுக்கவேண்டாம். நான் நல்லபிராமணனாயிருப்பதால், உன்னைப்போன்ற நீசனிடத்தில் தானம் வாங்கமாட்டேன்; எனக்கு வேண்டாம் எனக்கு வேண்டாம்" என்று நிராகரித்தார். "சுவாமி! இவ்விதமாய் நிராகரித்தால் நானென்ன செய்வேன்? தானம்கொடுத்த வஸ்திரத்தை மறுபடியும் பெற்றுக்கொள்வேனென்று யோசிக்கின்றீர்களா என்ன? நான் பெற்றுக்கொள்ளேன் பெற்றுக்கொள்ளேன். எப்படியாகிலும் தயவுசெய்து தாங்களே பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று கபீர் சொல்லி வேண்டிக்கொண்டனர்.

அதற்குப் பிராமணர், "சீ! சீ! நான் பெற்றுக்கொள்ளேன்; உனக்கு வேண்டாவிடில் இனி யாருக்காகிலும் கொடுத்துவிடு" என்று சொல்லினர். அதைக்கேட்ட கபீர் "ஒருவர் இச்சைகொண்ட வஸ்துவை அவருக்கே கொடுப்பது தருமமேயொழிய இதரர்களுக்குக் கொடுப்பது தருமமன்று; இந்த வஸ்திரத்தைக் கோரினவர் நீரேயாதலால், இதை உமக்கே சமர்ப்பிக்கவேண்டும்" என்று சொல்லினர். அதைக்கேட்ட பிராமணர் "நீ உத்தம ஜாதியானென்றெண்ணி துரிதப்பட்டுக் கேட்டேனேயொழிய இல்லாவிடில் உன்னைக்கேட்டிருப்பேனா? நான் இதைப் பெற்றுக்கொன்ளேன்; இதரர்களுக்குக் கொடுக்க இஷ்டமில்லாவிடில் நடுத்தெருவில் போட்டுவிடு. ஜீவஹிம்சை செய்யப்பட்ட துன்மார்க்கர்களின் வமிசத்தில் ஜனித்த உன்னிடமிருந்து தானம் பெற்றுக்கொள்வது உசிதமானதன்று;

உன்னைப்போன்றவனிடம் பேசுவதும் தோஷமே" என்று மறுபடியும் நான்கடி பின்னுக்கே சென்றார்.

அப்பொழுது கபீர், மிகவும் விசனத்துடன் பிராமணர் முன்சென்று "சுவாமீ! இதுவரையில் என்னுடன் சம்பாஷித்ததனாலும் தீண்டினதனாலும் பிராயச்சித்தம் ஒன்று உண்டாக்கிக் கொண்டேனென்றல்லவோ சொன்னீர்கள்? அந்தத் தோஷத்துடன்கூட இதையும் பெற்றுக்கொண்டு உமக்கு இஷ்டமானவர்களுக்குக் கொடுத்துவிட்டு, இவைகளுக்கெல்லாம் ஒரே முறையாய்ப் பிராயச்சித்தம் வைத்துக் கொள்ளலாகாதா? என்று சொல்லிக்கொண்டே வஸ்திரத்தைக் கொடுக்கச்சென்றார்.

அதற்குப் பிராமணர் கபீரைப்பார்த்து "அடா! ஒரே பிடிவாதமாயிருந்து என்னை நிர்ப்பந்தப் படுத்துகின்றாய்; நல்லது, நான் இப்போது சொல்வதைப்போல் நடப்பதாயிருக்கும் பக்ஷத்தில், இதைப் பெற்றுக்கொள்ளுகின்றேன்: இல்லாவிடில் நான் பெற்றுக்கொள்ளேன், பெற்றுக்கொள்ளேன் என்று" சொல்லினர்.

அதைக்கேட்ட கபீர், "நல்லது, தங்கள் சொல்லைப்போல் நடந்துகொள்ளுகின்றேன். தயைசெய்து சொல்லக்கடவீர்" என்று சொல்லினர். அதற்குப் பிராமணர் கபீரைப்பார்த்து பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்.

பகவான் கபீருக்கு சகுணோபாசனம் உபதேசித்தல்.

"அடா! நான் சொல்லப்போகும் விஷயத்தை நன்றாய்க் கவனித்துக்கேள். பகவானது சின்னமாகிய (குறியாகிய) ஊர்த்துவ புண்டரமாகிலும், சிவனது சின்னமாகிய

விபூதியாகிலும் நெற்றியில் தரிக்கவேண்டும். அப்படித் தரிக்காதவர்கள் நாஸ்திகர்களென்று சொல்லப்படுவார்கள். திரிகூட ஸ்தானத்தில் (நெற்றியில்) பரஞ்சோதி பிரகாசித்துக்கொண்டிருக்கின்றதென்று, பாமரர்களுக்குத் தெரியும்படி ஊர்த்துவ புண்டரமாகிலும், விபூதியாகிலும் வைத்து ஞாபகத்திற்குக் கொண்டுவர நியமிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் ஊர்த்துவ புண்டரங்களை லலாடத்தில் (நெற்றியில்) வைத்துக்கொண்டு அது பகவானது பாதங்களென்றும் பரஞ்சோதி பரப்பிரம்மமென்றும் எண்ணவேண்டும். அப்படி எண்ணப்பட்டவர்களுக்குப் பகவத்தியானம் பிடிபடும். லலாடம் சூன்யமாய் இருக்கப்பட்டவர்களுக்குத் தத்துவ விசாரணை சூன்யமாகவேயிருக்கும். சம்சாரமென்னும் சமுத்திரத்தை நாசம்செய்யச் சதாகாலமும் தாரகமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு எவர்களுக்கு ஈனதைக்கொடுத்த போதிலும் 'சீதாராமார்ப்பண' மென்று, சொல்லிச் சமர்ப்பிக்கவேண்டும். இவ்விதமாய்க் கொடுக்க நீ சம்மதித்தால் பெற்றுக்கொள்வேன். இல்லாவிட்டால் பெற்றுக்கொள்ளேன்'' என்று சொல்லினர்.

இவைகளையெல்லாம் கேட்ட கபீர் மிகவும் ஆச்சரியப்பட்டு, ஆஹா! இஃதென்ன! இவர்சொல்லும்வார்த்தை மிகவும் அற்புதமாயிருக்கின்றதே? சகுண நிர்க்குணங்கள் இரண்டிலும் நிர்க்குணமே பிரதானமென்று அனேகர்கள் சொல்வதுமேயல்லாமல், நிர்க்குணோபாசனையில் கடைத்தேறியவர்கள் அநேகர்கள் இருக்கின்றார்களே. இப்படியிருக்க இதற்கு விரோதமாய்ச் சகுணமே பிரதானமானதென்று இவர் திடமாய்ச் சாதிக்கின்றாரே; இவ்விரண்டில் எது நிச்சயமோ, அதை இவர் மூலமாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணங்கொண்டு பிராமணரைப்பார்த்து, "சுவாமீ! பரப்பிரம்மம் இப்படி''.

தென்று நிரூபிக்கக்கூடாமல் அரூபமாயிருக்கின்றது. இது நாமரூபங்களில்லாத வஸ்து; இப்படிப்பட்ட வஸ்துவிற்குப் பரப்பிரம்மமென்று நாமாகவே பெயர் வைத்துக்கொண்டோம். இந்தப் பரப்பிரம்மம், நாசமில்லாததாயிருப்பதால் நித்தியமானதென்றும், மல (ஆணவம், காமியம், மாயையென்னும் மும்மலங்களு) மில்லாததாயிருப்பதால் நிர்மலமானதென்றும், குணவிகாரங்களில்லாததனால் நிர்க்குணமானதென்றும், அஹங்காரமில்லாததனால் நிரஹங்காரமானதென்றும் அனேக நாமங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட வஸ்து ரூபநாமக்கிரியையில்லாததாய் அவாங்மனோகோசரமாய் சத்தா மாத்திரமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருப்பதனால் இதை அனுஷ்டித்து வருவதே முக்கியமானது. இப்படி அனுஷ்டித்து வருவதே நிர்க்குணாராதனை யென்று வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படியிருக்க நீர் மாத்திரம் சகுணாராதனையே முக்கியமானதென்று ஸ்திரப்படுத்துவதுமேயல்லாமல் விஷ்ணுவின் லீலாவதாரங்களில் ஒன்றாகிய ராமாவதாரத்தை மாத்திரம் மிகவும் கௌரவித்து ராமநாமமே சர்வோத்கிருஷ்டமானதென்று புகழ்ச்சியாய்ச் சொல்லுகின்றீர். இதுவிஷயம் எனக்கு மிகவும் சமுசயமாயிருக்கின்றது; இதற்குத் தக்க காரணம் இருக்கும் பக்ஷத்தில் தயைசெய்து அடியேனுக்குச் சொல்லக்கடவீராக'' என்று அதிக விநயத்துடன் கபீர் கேட்டுக்கொண்டனர்.

இந்த வார்த்தைகளையெல்லாம் கேட்ட கபடப் பிராமணர் புன்னகையுடன், சிரித்து "அடா! சொல்லுகின்றேன்கேள். பரப்பிரம்மம் அவாங் மனோகோசரமானதென்று இதுவரையில் நீ சொல்லிய விஷயம் ஞாபகம் இருக்கின்றதல்லவா? அதுபோலவே மனதிற்கும் வாக்கிற்

கும் எட்டாமல் வெட்டவெளியாயிருக்கும் பரப் பிரம்மம் எல்லோருக்கும் எவ்விதமாய்ப் பிடிபடும். அதை நீயே சற்று யோசித்துப்பார். மௌனமுத்திரையினால் மனதை ஜயித்து இந்திரியங்களை நிக்கிரகித்த மஹாத்மாக்களுக்கே நிர்க்குணப் பிரம்மம் பிடிபடும். இவர்கள் தவிர மற்றவர்கள் ஓர் நிமிஷமாகிலும் அவகாசமில்லாமல் சலித்துக் கொண்டிருக்கும் மனதை இந்திரியங்களுடன் பிரவேசிக்கச்செய்து அதன் விகாரங்களுக்கு உட்பட்டுச் சொக்கி தேகமும் இந்திரியங்களும் அந்தக்கரணங்களும் பிராணன்களும் நானேயென்று நிச்சயித்துக்கொண்டு இந்தத்துண்டு வஸ்திரத்தைப்போன்ற அற்ப வஸ்துக்களை யெல்லாம் எனது என்று பிரமித்து அஹங்காரமென்னும் சேற்றில் அழுந்தி அஞ்ஞானமென்னும் படுகுழியில் வீழ்ந்து அலைந்து கொண்டிருக்கப் பட்டவனுக்கு நிராகாரமாய் இருக்கப் பட்ட பரப்பிரம்மத்தை ஆராதிக்க எவ்விதமாய்ப் பிடிபடும்? தன்னைத் தானறிந்த மஹாத்மாக்களுக்கு மாத்திரம் கர்மத்தினால் பிரயோஜனமில்லையே யொழிய மற்றவர்களுக்கெல்லாம் கர்மம் அவசியமாய் இருந்தே தீர வேண்டும். (இதுவிஷயம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 8,சு. 19-20 பார்க்க) நல்தகதி அடைவதற்காகத் தருமம் செய்துவரப் பட்டவன் உத்தமனேயொழிய, பந்தத்திற்காகச் செய்து வரப்பட்டவன் உத்தமனன்று. இதரர்களிடம் நல்லொழுக்கமாய் நடந்துகொள்வது வந்தனமேயொழிய இரண்டு கைகளையும் குவித்து நமஸ்கரிப்பது வந்தனமாகமாட்டாது. நிர்ப்பந்தத்திற்கு உட்படாமல் மானத்தைக்காப்பாற்றிக் கொள்ளப்பட்டவள் பதிவிரதையே யொழிய நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டவள் பதிவிரதையாகமாட்டாள். இதுபோல் தியானமென்பது சமான்யமானதன்று. சகல

வஸ்துக்களிலும் பேதமில்லாமல் நிறைந்திருக்கும் பரப் பிரம்மத்தில் லீனமாய் ஆனந்தத்தில் சொக்கியிருப்பதே பிரம்மத்தியானமே யொழிய பொய்க் குருவினால்கற்ற மந்திரங்களை மனதினால் உச்சரித்துக்கொண்டிருப்பது தியானமன்று" என்று சொல்லினர்.

அதைக்கேட்ட கபீர் "சுவாமீ! தாங்கள் சொல்லிய விஷயம் வாஸ்தவமானதே. தனதல்லாத வேறு வஸ்துக்களையெல்லாம் தனதாகப்பாவிக்கும் அஹங்காரத்தை நிர்மூலம்செய்து அத்விதீய பரப்பிரம்மத்தில் ஐக்கியமாவதே உத்தமமாகிய தியானமென்றும், சப்தாதி விஷயங்களையெல்லாம் நீக்கி அஹங்காரமுடைய மனதைச் சூன்யம் செய்து நிரஹங்காரமாகிய பரப்பிரம்மத்தில் ஏகீபவித்து (ஒன்றாய்ச் சேர்த்து) சதா ஆனந்தத்துடன் இருப்பதே மௌனமென்றும், சராசர பிரபஞ்சமெங்கும் பரப்பிரம்மமே வியாபித்திருக்கின்றதென்றும், அதில் தான் என்னும் வஸ்து வேறல்லவென்றும் நிச்சயித்து பரிபூரணமாயிருப்பதே பிரம்மத்தியானமென்றும், அஹங்கார எண்ணத்துடன் எந்தக் காரியங்களையும் செய்யாமல் தனக்குத் தானாய் லபித்தவஸ்துக்களை அனுபவித்துக்கொண்டு அஹங்காரமென்னும் கொடியை சல்லிவேர்களுடன் பிடுங்கியெறிந்து சிதாகாசமாயிருப்பதே பிரம்மஞான மென்றும், ஒரு யாகமுமில்லாத நல்ல நித்திரையில் மனம் அடங்கியிருப்பதுபோல் பிரம்மநிஷ்டையில் மனோநாசமுண்டாவதனால் மஹா மௌனமென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இந்த விஷயங்களை அடியேன் உங்களைக் கேட்கவில்லை. சீதா ராமார்ப்பணமென்று சொல்லும்படி இதுவரையில் போதித்த விஷயத்திற்குமாத்திரம் சொல்ல வேண்டு" மென்று பக்தி விசுவாசங்களுடன் வேண்டிக் கொண்டனர்.

அதைக்கேட்ட கபடப் பிராமணர் "என்னடா! அவிவேகியாயிருக்கின்றாய்? இவ்வளவுநேரம் உபந்நியாசம் செய்ததெல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதியதுபோல் நிஷ்பிரயோஜனமாயிற்றே? நீ கேட்பது எப்படி இருக்கின்றதென்றால், ராமாயணமெல்லாம் மிகவும் சாந்தமாய்க் கேட்டு ராமருக்குச் சீதை என்னவேண்டுமென்று விசாரிப்பதுபோல் இருக்கின்றது. இதுவரையில் யான் உபந்நியசித்த விஷயங்களிலுள்ள முக்கியாம்சங்களை விட்டுவிட்டு, ஏதோ விசேஷம் தெரிந்தவனைப்போல் தியானமென்றும், மௌனமென்றும் பேசத்தொடங்கினாய். உன்னையும் உன் அப்பன் பாட்டன்களையும் சகல பிரபஞ்சத்தையும் விழுங்கி ஓர் அணுமாத்திரமாய் வைத்துக்கொண்டு இருக்கும் பரப் பிரம்மத்தைவிட நீ அன்னியமானவனா யிருந்தாலல்லவோ பிரம்மத்தைத் தியானிக்கவேண்டும். சமுத்திரஜலத்தைவிட அலைகள் வேறாகாமலும், நெருப்பைவிட சுவாலை வேறாகாமலும், பூமியைவிடத் தரை வேறாகாமலும் இருப்பதுபோல் பரப் பிரம்மத்தைவிட நீ வேறானவனன்று. சர்வமும் தானாய் சுயம்பிரகாசமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பரப் பிரம்மத்தைவிட அன்னியமாய் யெண்ணுவது ஞானமா, அஞ்ஞானமா? அதை நீயே யோசித்துப்பார். இந்தப் பிரபஞ்சமெல்லாம் அரூபமாய் நிச்சலனமாய் இருக்கப்பட்டது. சுத்தப் பிரம்மத்தினால் உண்டாயிற்றா அல்லது மாயா சொரூபமுடைய விஷ்ணுவினால் உண்டாயிற்றா சொல் பார்ப்போம்" என்று சொல்லிக் கபீரினுடைய சிரசில் ஓர் குட்டுக் குட்டினர்.

அதற்குக் கபீர் பிராமணரைப்பார்த்து "ஐயா! நிராகாரப் பரப்பிரமம் நிச்சலமாய் நிஷ்கிரியையாய் இருப்பதனால், அதுபிரபஞ்சத்தைச் சிருஷ்டிசெய்யாது. (இதன்விஷயம் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" குருஸ்துதி

முழுமையும்பார்க்க). ஆதலால், மாயா சொரூபமுடைய விஷ்ணுவினால் பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்பட்டது. அப்படிச் சிருஷ்டித்தமாத்திரத்திலேயே பிரதான காரணமாகிய பரப் பிரம்மத்தைவிட்டு நிமித்தகாரணமாகிய விஷ்ணு மூர்த்தியைத் தியானிக்கவேண்டுமென்பது யுக்தமானதாயில்லை. அஹங்கார மமகாரங்களில்லாத ஆத்ம விவேகிகள் மாத்திரம் மௌனத்தைத் தரிப்பதேயல்லாமல் அஹங்காரமுடையவர்களும் நிராகாரமாயிருக்கப்பட்ட பரப்பிரம்மத்தைத் தியானிக்கலாமென்று அனேக சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இதனால் என்னபிரயோஜனம்? ஏதோ இப்படித் திரும்பிப்பார்த்துச் சொல் பார்ப்போம்" என்று கபீர் கேட்டனர். அதற்குக் கபடப் பிராமணர்,

"அடாபயலே! நீ இன்னும் சிறுவனாதலால் தாரதம்மியம் தெரியாமல் இவ்விதமாய் வார்த்தையாடுகின்றாய். சர்வமும் பிரம்மமானால் தானம் கொடுப்பவன் யார்? வாங்கப்பட்டவன் எவன்? ஸ்துதிசெய்பவன் யார்? அதைக் கேட்பவன் எவன்? மோக்ஷமென்றால் எது? முமுக்ஷு யார்? ஆனந்தமெது? அதை அனுபவிப்பவன் எவன்? ஆசாரியன், யார்? சிஷ்யன் எவன்? இஹபரங்கள் எவை? இஹபரங்களை அனுபவிப்பவன் யார்? ஜனன மரணங்கள் எவை? அவற்றின் சம்மந்தமான துக்கங்களை அனுபவிப்பவன் யார்? பிரபஞ்சம் எது? பிரபஞ்சத்தைச் சிருஷ்டிப்பவன் யார்? சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரங்கள் எவை? ஜாக்கிரம், சொப்பனம், சுஷுப்தி எவை? அவைகளை உண்டாக்கி விகற்பம் செய்யப்பட்டவன் எவன்? தாய் தந்தைகள் யார்? புத்திரன் யார்? நீ யார்? நான் யார்? பிரகிருதி எது? பரப்பிரம்மமெது? தான் எது என்று வேறுபிரிக்கக்கூடாமையாயிருப்பதால் மஹா சந்தேகத்திற்கு ஆஸ்பதமாயிருக்கின்றது. இப்படிப்பட்ட பிரம்மஞானமுடைய

மஹாநுபாவனாய் இருப்பதனாலல்லவோ கிழிந்ததுண்டு வஸ்திரத்தைக்கொடுத்துவிட்டால் தாய் அடிப்பாளென்று இவ்வளவு நாழிகையாய் மனங் கலங்கி யிருக்கின்றாய். போலி வேதாந்தங்களுக்கென்ன, வாயில் வந்தபடிக்கெல்லாம் பேசலாம். நடக்கும் போதல்லவோ யோக்கியதை தெரியவரும். ஜாக்கிராவஸ்தையில் சுஷுப்தியாவஸ்தை எதுவரையில் வாராதோ அதுவரையில் "நீ" "நான்" என்னும் துரபிமானம் பாதித்துக்கொண்டேயிருக்கும். சுஷுப்தியாவஸ்தை அடைந்தவர்களுக்குப் பின்ன பாவங்கள் உண்டாகமட்டாது. ஊமை பேசுவதும், பதிவிரதை இதரர்களுடன் பரிஹாச வார்த்தைகளாடுவதும், சத்தியவந்தன் வார்த்தை தப்புவதும் எப்படி இல்லையோ, அதுபோல் அத்விதீயபாவத்தில் நிச்சயபுத்தி உண்டான பிறகு ஞானவானுக்குப் பிரம்மத்தில் துவித எண்ணங்கள் உண்டாகமாட்டாது. அபின்னத்தைப் பின்னமாய்ப் பாவித்தால் பிரமத்தைவிட, தான் முன்னமே பின்னப் படவேண்டியதாயிருக்கும். பின்னமானபிறகு அபின்னபாவம் கெடாமலிராது. அபின்னமாகிய பரப்பிரம்மத்தில் ஐக்கியப்பட்டவன் மறுபடியும் பின்னபாவத்தில் இருக்கத்தகாது. பின்னபாவமாயிருப்பவன் மறுபடியும் அத்விதீயமாகிய அபின்னபாவத்தை அடைவது கஷ்டசாத்தியம். பதிவிரதை விபசாரியாகாள்; விபசாரி பதிவிரதையாகாள். இப்படிப்பட்ட ரகஸ்யங்களைத் தெரிந்துகொள்ள நீ புத்திசாலியல்ல. இதற்குமேல் போதித்தால் தெரிந்துகொள்ளத்தக்க சக்தி உனக்கில்லை. ஆதலால், இதை இதுவரையில் நிறுத்தி இப்போது சொல்லிவந்த விஷயங்களிலுள்ள முக்கியாம்சங்களைமாத்திரம் தெரிந்துகொள். அஹங்கார மமகாரங்கள் இன்னும் உன்னைவிட்டு ஒழியவில்லை. அதனால்தான் அசிர்வாக்யமாகிய "பிஸ்மில்லா"

என்னும் வாக்கியத்தைச் சொன்னாய். அதன் அர்த்தம் தெரிந்துகொள்ளாமல் துரிதப்பட்டு வார்த்தையாடினாய். முதல் முதல் சகுணோபாசனை (விக்கிரக ஆராதனை) செய்தால் மனம் நிர்க்குணோபாசனமாய் (வெட்டவெளியாய்) நிற்கச் சாத்தியமாகும். இஹபரங்கள் அசத்தியமென்று தெரிந்துகொண்டு ஆசைகளை ஜயித்துத் தேகாபிமானத்தைவிட்ட ஒருவனே நிர்க்குணோபாசனத்திற்கு அதிகாரி. நின்றவன் உட்கார்ந்தல்லவோ சயனிக்கவேண்டும். நின்றபடியே சயனித்தால் கீழே விழுந்து மண்டையை உடைத்துக் கொள்ளவேண்டும். அதுபோல், மனோ நிக்கிரகத்திற்குச் தகுந்த சாதனங்களன்றி முதலில் நிர்க்குணதியானத்திற்குப் பிரயத்தனப் பட்டால், அந்த நிர்க்குணம் "வெட்டவெளி." அந்த வெட்டவெளி மனதிற்குப் பிடிப்படாது. அதனால் உபய (இரண்டிற்கும்) பிரஷ்டனாகின்றான். அதாவது பக்தியும் கெட்டு ஞானமும் கெட்டு இரண்டும் இல்லாமல் கெட்டுவிடுகின்றான் என்பதேயாம். மெத்தையின்மீது ஏறவேண்டுமானால் ஒவ்வொரு படியாயல்லவோ ஏறிச் செல்லவேண்டும். ஒரே முறையாய்த் தாவி மேலே செல்லவேண்டுமென்றால் சாத்தியமாகுமா? ஆகாசத்தில் பறந்துகொண்டிருக்கும் பக்ஷிகளைப் பார்த்துப் பாலர்கள், தாமும் அதுபோல் பறக்கவேண்டுமென்று பிரயத்தனப் பட்டால் அது சாத்தியமாகுமா? அதுபோல் மனோநிக்கிரஹமுடைய பெரியோர்களைப் பார்த்துப் பாமர ஜனங்கள் தாமும் அதுபோல் இருக்கவேண்டுமென்று எண்ணிப் பிரயத்தினப்படுவதனால் என்ன பிரயோஜனம். இது எப்படி இருக்கின்றதென்றால் புலியைப்பார்த்து நரி சூடு போட்டுக்கொண்டு பாதைப்படுவதுபோலாகும். வாசா வேதாந்தங்களை உபந்நியாசம் செய்வதனால் காரியமில்லை, சொல்லியதுபோல் தவறாமல் நடந்துகொள்ளவேண்டியதே

முக்கியமானது. வேதாந்தங்களைப் பேசிக்கொண்டு உலகத்தாரைப் பிரமிக்கச்செய்யும் புருஷர்கள் கோமுக வியாக்கிரமே (புலியே). இப்படிப்பட்டவர்களுடன் சேராமல், இவர்களை எப்பொழுதும் பெரிய புலியைப்போல் எண்ணி, மிகவும் சாக்கிரதையுடன் இருப்பதே புத்திமான்களுக்கு மிகவும் உத்தமம். ஆதலால் இப்போதே நிர்க்குணோபாசனம் செய்யவேண்டுமென்னும் எண்ணத்தை இதுவரையில் விட்டுவிட்டு இன்றுமுதல் சகுணோபாசனையில் விசேஷ சிரத்தையுடையவனாயிருந்து, பரம பாகவதர்களாகிய நாரதாதி முனிபுங்கவர்கள், யாருடைய திவ்விய நாமங்களை ஜபித்து அதன் மகிமையினால் நிர்மல ஞானசம்பத்தை அடைந்தார்களோ, அந்த நாமத்தை ஜபித்தால் சர்வ பாபங்களும் நிர்மூலமாகும். ஆதலால், அப்படிப்பட்ட பரம பவித்திரமாகிய 'ராம' நாமத்தை யாரிடத்திலாகிலும் உபதேசம்பெற்று பக்தி சிரத்தையுடன் அனுஷ்டித்து மனம் ஸ்திரமாய் நின்றபிறகு நிர்க்குணோபாசனத்திற்குப் பிரயத்தனப்படு.

அதாவது, மனமானது நாள் ஒன்றுக்கு அனேக ஆயிரம் எண்ணங்களை எண்ணுகின்றது. அவ்விதமாய் எண்ணும் மனதை ஒன்றுமில்லாத ஆகாசரூபமாயிருவென்றால் இராது. ஆதலால், அப்படிப்பட்ட அனேக ஆயிர எண்ணங்களையுடைய மனதை ஓர் எண்ணமாய் நிறுத்துவதற்காக எவரெவர்களுக்கு எந்தெந்தத் தேவதைகளின்மீது பிரீதியோ அந்தந்தத் தேவதைகளின் ரூபத்தை இருதய கமலத்தில் நிறுத்தி அந்த விக்கிரக ரூபத்தை அகமுகமாய் (உள் நோக்கி) மனதினால் சதாகாலமும் தைலதாரையைப்போல் தியானம் செய்துகொண்டு வந்தால் ஆயிரக்கணக்காய்ப் பிறந்துகொண்டிருந்த எண்ணங்களெல்லாம் ஒழிந்து ஒரே தியானத்தில் மனம் நிற்கும். பிறகு அந்த ஓர்

தியானத்தையும் நினையாமல் வெகுசுலபமாய் நிறுத்திவிடலாம். இவ்விதமாய் நிறுத்துவதற்காகவே விக்கிரக ஆராதனைச் செய்யவேண்டும். விக்கிரக ஆராதனைச் செய்வதே சகுணோபாசனம் என்று சொல்லப்படும். பிறகு அந்த விக்கிரக ஆராதனையும் நீக்கிவிட்டால் மனம் இறந்ததாகும். அப்படி மனம் இறந்ததே நிர்க்குணோபாசனம் என்று சொல்லப்படும். ஆதலால், ஓ கபீர்! நிர்க்குணோபாசன விசேஷத்தினால் திரிமூர்த்திகளையும் திரஸ்காரம் (அலக்ஷியம்) செய்த தாருகாவன முனீசுவரர்களைப்போல் அவமானப்படாதே. இனிமேல் உன்னால் ஆகவேண்டிய காரியங்கள் அனேகமுண்டு. உன் லக்ஷணங்களைப் பார்த்தால் மகம்மது மதத்தை நிர்மூலம்செய்ய அவதரித்தவனென்று நிச்சயமாய்த் தோன்றுகின்றது'' என்று பல விதங்களாய்ப் பேசிக் கபீருடைய மனம் வேறு மார்க்கமாய்ச் செல்லாமல் போதித்து, சகுணோபரசனத்தினால் நிலைக்கச்செய்து, சீதா ராமார்ப்பணமென்று அவரால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டவஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டு ஆசீர்வாதம் செய்து சென்றார். இவ்விதமாய்ப் போதித்து சென்றபிறகு இவரைச் சோதிப்பதற்காக மறுபடியும் பகவான் பகீர்வேஷங்கொண்டு முன் வரப்போகின்றார்.

பகவான் கபீரிடம் வந்து பல வந்தனம்செய்து மனம் பரிசுத்தமாய் ஒரே நிலையில் நிற்பதற்காகச் சகுணோபாசனத்தில் ஸ்திரமாய் நிற்கப்போதித்துச் சென்றபிறகு, கபீர் தனக்குள் தான் என்ன ஆலோசித்துக்கொண்டு செல்லுகின்றாரென்றால், ஆ ஹா! இந்த மஹாபுருஷன் யாரோ தெரியவில்லை. சர்வமும் அறிந்த சர்வஞ்ஞமூர்த்திபோல் தோன்றுகின்றது. இவர் உபந்நியசித்த விஷயங்களில் தள்ளத்தக்க விஷயம் ஒன்றாகிலுமில்லை. கிரமக்கிரமமாய் படிகள் ஏறி மெத்தையின் மீது போகவேண்டியது. யுக்த

மானதேயொழிய ஒரேமுறையாய்த் தாவிச்செல்வது யுக்தமானதாயில்லை. அதுபோலவே கிரமக்கிரமமாய்ப் பக்தி தியானம், யோகம், ஞானங்களைச் சாதித்தால் மனச் சுத்தியால் நிர்க்குணாராதனையில் நிற்கும் என்பது வாஸ்தவமானதாகவே யிருக்கின்றது. இந்தத் துண்டு வஸ்திரத்தைக் கேட்டதற்குத் தாராளமாய்க் கொடுக்க மனம் வாராமல் போயிற்றல்லவா? இதற்கே யிப்படியிருக்க இனித்தேகாபிமானம் எவ்விதமாய் விட்டு ஒழியும். வாயில் பேசும் வேதாந்தங்களெல்லாம் மூடர்களை வஞ்சிப்பதற்காக உபயோகப்படுமேயொழிய விவேகிகளின்முன் நிமிஷமாகிலும் நின்று பேச உதவாது. பேசுவதுபோல் நடப்பது மிகவும் கஷ்டம். அப்படி நடந்துகொள்ளப் பிரயத்தினப்படாமல் காலத்தை விருதாவாகக் கழிப்பவன் மிகவும் நிஷ்பிரயோஜனமுடையவனே. ரூப நாம கிரியாதீதமாய் அகண்டமாய்ச் சச்சிதானந்தமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பரப்பிரம்மத்தை மனதில் நிறுத்துவது சுலபமானதல்லவென்று இப்போதல்லவோ தெரியவந்தது. சகுணாராதனை (விக்கிரக ஆராதனை)யில் சரியாய் நிற்காதமனம் நிர்க்குணாராதனை (வெட்டவெளி)யில் நிலைக்குமென்னும் விஷயம் எவ்வளவேனும் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. முமுக்ஷுக்கள் இருக்கவேண்டிய தியானம் எப்படிப்பட்டதென்று இவரை விசாரித்துத் தெரிந்துகொள்ளாமல் போனேன். நடந்துபோனதைக்குறித்து யோசிப்பதனால் என்னபிரயோஜனம். இந்த ரகஸ்யத்தை ஆசாரியர்மூலமாய்த் தெரிந்துகொள்ளும் வரையில், இப்போது உபதேசித்துச் சென்ற மஹாபுருஷரது வாக்கியத்தில் அதிக விசுவாசம்வைத்து நடந்துகொள்வதே முக்கியமான விஷயமென்று நிச்சயித்துப் பரமபக்தியுடன் பகவத்தியானம் செய்துகொண்டு மெதுவாய் நடந்துசென்றார்.

பகவான் மறுபடியும் பகீர் வேஷத்துடன் கபீரிடம் வருதல்.

இவ்வித யோசனைகளுடன் செல்லும்போது கபீர் மனதை சோதிப்பதற்காகப் பகவான் பகீர் ரூபத்துடன் சென்று கபீரை ஆசீர்வாதம்செய்தார். அப்போது கபீர் மிகவும் வணக்கத்துடன் வணங்கி பகீரை நமஸ்கரித்து "சுவாமீ! நீங்கள் யார்" என்று விசாரித்தார். அதைக் கேட்ட பகீர் கபீரைப்பார்த்து "நாயனா! நான் ஓர் விதேசியன் (அன்னியதேசத்தன்), காரியார்த்தமாய்த் தேசாந்தரம் சஞ்சரிக்கின்றேன். இப்போது இங்குவந்தேன். நீ மிகவும் கிருபா தயாள குணமுடையவனென்று இவ்விடத்திலுள்ள ஜனங்களால் கேள்விப்பட்டேன். ஆதலால், உன்னைப் பார்த்துச் செல்லலாமென்று இவ்விடம் வந்தேன். உன் முக விலாசத்தைப் பார்த்தால் மகம்மது மதத்திற்கெல்லாம் பெரிய புருஷனாய்க் காணப்படுகின்றது. உன்னைப்பார்த்ததனால் மிகவும் சந்தோஷமாயிற்று. நான் ஆங்காங்குத் திரிந்து வயிற்றிற்குவேண்டிய அன்னத்தைச் சம்பாதித்துக் கொள்ளுகின்றேனேயொழிய மேலும் கீழும் தரித்துக்கொள்ள வஸ்திரமில்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்றேன் பார்; கரிக்கந்தையைப்போன்ற இந்தக் கிழிந்த வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு யாரிடமாகிலும் செல்ல மிகவும் வெட்கமாயிருக்கின்றது. குலயீனமானாலும் ஆகலாமேயொழிய வஸ்திர யீனமாயிருக்கலாகாதல்லவா? புண்ணியவசத்தினால் நீ இன்று எனக்கு அகப்பட்டாய். ஆதலால், தயைசெய்து என் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, உன் கையிலிருக்கும் துண்டுவஸ்திரத்தைப் பகவத்பிரீதியாய் எனக்குத் தயவு செய்தால் போதுமானது. பெரியோர்களிடம் செல்லும்போது மேலே தரித்துக்

கொள்ளுகிறேன். இதை எனக்குக் கொடுப்பாயாகில் பரமானந்தத்தை உனக்குப் பகவான் பிரசாதிப்பார். "தேகி" என்பவனுக்கு "நாஸ்தி" (இல்லை) என்று சொல்லாமல் கோரியவஸ்துவைக் கொடுக்கப்பட்டவனே மனுஷ்யர்களில் முதன்மையான மனிதன். "நாஸ்தி" என்று சொல்லப்பட்டவனுக்கு சமஸ்தமும் நாஸ்தியே யாகும். புருஷர்களுக்குப் புண்ணியமும், ஸ்திரிகளுக்குப் பதிவிரதா தருமமும் புருஷார்த்தமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. 'இட்டாருக் கிட்டபலன்,' என்பதைக் கேட்டிருக்கின்றாயல்லவா? இகத்தில் கீர்த்தியும் பரத்தில் பரமானந்தமும் ஜன்மாந்திரங்களில் மஹாபாக்கிய சம்பத்தும் உண்டாக்கத்தக்கது தருமமேயாம். நான்கேட்ட பதார்த்தம் மிகவும் அல்பமென்று உனக்கே தெரிந்திருக்கின்றதல்லவா? லோபகுணத்தால் கொடேனென்று சொல்வாயாகில் அது, உனக்கு மிகவும் தாழ்ந்ததாகும் ராஜபுத்திரனைப்போன்ற உனக்கு இது, லக்ஷ்யமானதல்ல. உன் முகாரவிந்தத்தைப் பார்த்தால், சகல விஷயங்களும் அறிந்தவனைப்போல் காணப்படுகின்றது. ஆதலால், தரும விஷயங்களைக் குறித்து உனக்கு விசேஷமாய்ப் போதிக்க வேண்டியதேயில்லை. எவ்விதமாகிலும் இந்தத் துண்டு வஸ்திரத்தை எனக்குத் தயைசெய்து கொடுக்கவேண்டும்" என்று பலவிதங்களாய் வேண்டிக்கொண்டனர்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட கபீர் அவரது கண்டத்தொனியைப் பார்த்து சந்தேகப்பட்டு, ஆஹா! இவர் இது [illegible]ரயில் வந்து சகுணத்தியானத்தைப் போதித்துப் பட்டு வஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டுபோன பிராமணரைப் போல் காணப்படுகின்றது. இவரது முகாரவிந்தமும் அது போலவே யிருக்கின்றது. அந்த மஹாபுருஷன் இந்த பகீர் வேஷத்துடன் வருவாரா? என்று சற்றுநேரம்

யோசித்துக் கடைசியில் இல்லை இல்லை, இந்தப் பகீரை முன் எவ்விடமோ பார்த்திருப்பதாய் ஞாபக மிருக்கின்றது. இவரும் பரம பக்தரைப்போல் தோன்றுகின்றார். இந்த வஸ்திரத்தைப் பகவத்பிரீதியாய் இவருக்குக்கொடுத்துவிடுவதே மிகவும் உத்தமமானதென்று நிச்சயித்து அந்தப் பகீரியைப் பார்த்து "ஐயா! இந்தத்துண்டு வஸ்திரத்திற்காக இவ்வளவு சிலாக்கியப்படுத்த வேண்டுமா? இதோ பெற்றுக்கொள்ளும்" என்று தன்கையிலிருந்த பட்டு வஸ்திரத்தை "சீதாராமார்ப்பண" மென்று சொல்லி அவர்கையில் கொடுக்கப்போனார்.

அவ்வார்த்தையைக் கேட்ட பகீர் "அரே! தோபா தோபா" என்று சொல்லி இரண்டு கைகளையும் இரண்டு காதுகளின்மேல் வைத்து மூடிக்கொண்டு பரிசுத்த மனதுடன் "தரூத்" மந்திரத்தை வாசித்துக் கண்களில் நெருப்புப் பொரிகள் பறக்கத்தக்க கோபமுண்டாய் கபீரைப் பார்த்து "அடா துர்மார்க்கா! என்னடா உளறினாய். நித்தியமாய் சத்தியமாய் நிர்விகல்பமாய் நிரஹங்காரமாய் நிர்க்குணமாய் நிராமயமாய் நிரஞ்சனமாய் நிர்மலமாய் நிர்விகாரமாய் நிஷ்கிரியையாய் நிஷ்களங்கமாய் நாமரூபக் கிரியா சூன்யமாய் மஹாசூன்யமாய் அவாங் மனோகோசரமாய்ப் பரிசுத்தமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் பரப்பிரம்மம் தவிர வேறு பதார்த்தம் உண்டோ? நமது குரானுக்கு விருத்தமாயிருக்கப்பட்ட சாமான்யமான மனிதனுடைய பெயரைச்சொல்லி எனக்குத் தானம் கொடுக்க வந்தாய். ஆஹா! உன்னைப் பார்த்து முசல்மான் பையனென்றல்லவோ எண்ணிவந்தேன். காபரியென்று தெரிந்திருந்தால் உன் முகத்தையும் பார்ப்பேனா? ஐயோ புத்தியில்லாதவனே! நிராகாரமாகிய பகவானை ஆராதிக்காமல் சாகாரத்தை உபாசனை செய்கின்றாயே? இந்தத் துர்ப்புத்தி

உனக்குச் சகஜமாய் வந்ததுபோல் தோன்றவில்லை. எவனோ துர்மார்க்கன் இப்படிப்பட்ட துர்ப்போதனையை உனக்குப் போதித்துவிட்டான்போல் காணப்படுகின்றது. அப்படிப் போதிக்காவிட்டால் தலையை வெட்டியபோதிலும் இவ்வார்த்தையைத் துலுக்கர்கள் வாயினால் சொல்வார்களா! சர்வ வஸ்துக்களிலும் நிறைந்து சச்சிதாநந்த மூர்த்தியாயிருக்கும் சர்வேசுவரனைவிட்டுப் பெறுத்த குற்றத்திற்கு வியர்த்தமாய் ஆளானாய். அவ்வார்த்தையை உச்சரித்த உன் நாக்கை அறுத்துவிட்டபோதிலும் தோஷமில்லை. துராசாரத்தில் பிரஷ்டனாய் உன்னிடத்தில் நின்றிருப்பதே தோஷமாயிருக்க, அப்படிப்பட்ட உன்னிடமிருந்து தானம் வாங்கினால் என்னபலன் உண்டாகுமோ அதைச் சொல்லவும் வேண்டுமோ? சீ சீ! இனி இவ்விடம் நிற்கலாகாது'' என்றுசொல்லிப் பின்னுக்கே திரும்பிச்சென்றார்.

அவர் சொற்களைக்கேட்ட கபீர் ஆச்சரியப்பட்டு பகீருக்கு முன்சென்று பயபக்தியுடன் நமஸ்கரித்து "சுவாமி! கோபம் செய்யாதீர்; என் வார்த்தையைச் சற்றுக் கவனிக்க வேண்டும். ஈசுவரப் பிரீதியாய்த் தேவரீருக்குச் சமர்ப்பித்த இந்தப் பதார்த்தத்தைச் சந்தோஷமாய்ப் பெற்றுக்கொள்ளும். இதை நிராகரித்துப் போகவேண்டாம். நிரபராதியாகிய அடியேன்மீது நிர்நிமித்தியமாய்க் குற்றத்தைச்சுமத்திச் சிக்ஷைக்குப் பாத்திரனாக்கவேண்டாம். கொடுத்தவஸ்துவைத் தன்னிடம் வைத்துக்கொண்டால் பரத்தில் சிக்ஷையுண்டாகுமென்று தங்களைப் போன்ற பெரியோர்களால் கேள்விப்பட்டிருக்கின்றேன். சொல்லியவிதமாய் நடவாதவர்கள் யோக்கியர்களல்லவென்று சொல்வது எல்லோருக்கும் தெரிந்த விஷயமேயல்லவா? நான் சிறுவன்; தருமாதருமங்களெல்லாம் அவ்வளவு தெரிந்தவனல்லன். இப்படிப்பட்ட அடியேனை அனுக்கிரகிக்காமல் நிஷ்காரணமாய்க்

கோபித்துப் பிரீதியுடன் கொடுக்கவந்த பதார்த்தத்தைப் பெற்றுக்கொள்ளாமல் நிராகரித்துச் செல்லுவது, தங்களைப் போன்ற பெரியோர்களுக்கு நியாயமல்லவே? நீர் சர்வஞ்ஞர். நான் தங்களுக்குத் தெரியச்சொல்லும் அவ்வளவு சக்திவந்தவனல்லன். என்மீது அனுக்கிரகம் வைத்து இந்த வஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டு அடியேனை கிருதார்த்தனாய்ச் செய்வித்து தங்களுக்கு இஷ்டமானவிடம் செல்லலாம்'' என்று பலவிதங்களாய் வேண்டிக்கொண்டனர்.

அப்போது பகீர் கபீரைப் பார்த்து "அடா புத்தியில்லாதவனே! ஏன் இவ்வாறு வேண்டிக்கொள்ளுகின்றாய்? குரானுக்கு விரோதமாய் நடக்கப்பட்டவனிடம் மூளிப் பலகரையைப் பெற்றுக்கொண்டாலும் பாபமுண்டாகுமென்று சொல்லப்பட்டிருப்பதால் நீ பிரியத்துடன் கொடுத்தாலும் அல்லது அப்பிரியத்துடன் கொடுத்தாலும் உன் வஸ்த்திரத்தைத் தீண்டவேதீண்டேன். இனி இந்த ஆசையை நிவர்த்திசெய்துகொள்'' எல்று திரஸ்கரித்து மறுத்துவிட்டார். அதற்குக் கபீர் மிகவும் மனம்நொந்து இன்று முழுவதும் கெட்டநாளாயிருக்கின்றது. ஆதலால், காலைமுதல் எங்குச்சென்றாலும் துர்விவாதங்களே வந்துகொண்டிருக்கின்றன என்று சற்றுநேரம் சிந்தித்து மறுபடியும் பகீரைப் பார்த்து "சுவாமீ! நீர் அவ்வளவு துரிதப்பட வேண்டாம். நான் மிகவும் பாலியதசையில் இருந்தபோதிலும் எனக்குத் தெரிந்த விஷயங்களைத் தேவரீரிடம் சொல்லிக்கொள்ளுகின்றேன். அதைக்கேட்ட பிறகு யுக்தா அயுக்தங்களை விவரித்துச் சொல்லுங்கள்'' என்று சொல்லினர். பகீர் அதைக்கேட்டு "அடா! மறுபடியும் யுக்தா அயுக்தங்களை விவரித்துச் சொல்லுங்கள் என்று கேட்கின்றாயா? சரி சரி; அந்தச் சந்தேகத்தையும் நிவர்த்தி செய்துகொள்; யுக்தம் எதுவோ அயுக்தம் எதுவோ சற்றே தெரியச்சொல்

னும்" என்று சொல்லினர். அதன்பிறகு கபீர் பகீருக்கு வந்தனம்செய்து "சுவாமீ! ஏதோ எனக்குத் தெரிந்தவரையில் விஞ்ஞாபனம் செய்துக் கொள்ளுகின்றேன். பிழைகள் இருந்தால் திருத்தி அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகின்றேன்" என்று சொல்லி அடியில் வருமாறு பகீருடன் வாதம் செய்ய ஆரம்பித்தார்.

கபீருக்கும் பகீருக்கும் நடக்கும் சம்வாதம்.

"ஐயா! கேளும்; வெண்ணெய்க்கும் அதனால் உண்டாகும் நெய்க்கும், பொன்னுக்கும் அதனால் உண்டாகும் ஆபரணங்களுக்கும், நூலுக்கும் அதனால் உண்டாகும் வஸ்திரங்களுக்கும், வர்ணத்திற்கும் அதனால் எழுதிய சித்திரங்களுக்கும், சிலைக்கும் அதனால் செய்யப்பட்ட பிரதிமைகளுக்கும், இரும்புக்கும் அதனால் செய்யப்பட்ட ஆயுதங்களுக்கும், மண்ணுக்கும் அதனால் செய்யப்பட்ட பாண்டங்களுக்கும், ஜலத்திற்கும் அதனுடன் சேர்ந்திருக்கும் லவணத்திற் (உப்புக்) கும் பேதமென்ன? அதுபோலவே நிராகாரமாயிருக்கும் பரப்பிரம்மத்திற்கும் அதன் பிரதிபிம்பமாகிய சாகாரத்திற்கும் பேதமில்லையென்று ஏன் நினைக்கலாகாது? ஜலபிந்துவினால் உண்டாகிய முத்துக்கள் ஜலபிந்துவைவிட முக்கியமானதுபோல், பரப்பிரம்மத்தைவிட புருஷோத்தமன் உத்தமமானவனென்று ஏன் நினைக்கலாகாது? ஆதலால், விஷ்ணுமூர்த்தியின் திவ்விய நாமமே சமஸ்த வஸ்துக்களிலும் நிறைந்திருக்கின்றது" என்று சொல்லினர்.

அதைக்கேட்ட பகீர் "அடா நீ சொல்லுவதைப் பார்த்தால் குருவிற்குத் திருமந்திரம் உபதேசம் செய்வதுபோல் தோன்றுகின்றது. புத்தியில்லாதவனே! இப்போது

நீ சொல்லிய பதார்த்தத்தில் பிரதானகாரணமெது? பொன்னோ ஆபரணமோ? மண்ணோ பாண்டமோ? நூலோ வஸ்திரமோ? இரும்போ ஆயுதமோ? சிலையோ பிரதிமையோ? வர்ணமோ சித்திரமோ? நிராகாரமோ சாகாரமோ? எதுவோ சொல் பார்ப்போம்" என்று கேட்டனர்.

அதற்குக் கபீர் "நீர் சர்வமும் தெரிந்தவராயிருந்தும் என்னைச் சோதிக்க எண்ணி இவ்விதமாய் வார்த்தையாடுகின்றீர். அதற்கென்ன கேளும். எனக்குத் தெரிந்தவரையில் சொல்லுகின்றேன். அதாவது, நிராகாரமாகிய பரப்பிரம்மமே பிரதான காரணமாயிருந்தாலும் ஜலம் தோய்ந்து கட்டியாவதுபோல் சாகாரமாய் இருப்பதே பகவத்ரூபமென்று சொல்லப்பட்டு லோகரக்ஷணம் செய்கின்றதல்லவா? சூரியனும் கிரணங்களும், சந்திரனும் குளிர்ச்சியும், அக்நியும் உஷ்ணமும், தீபமும் (விளக்கும்) பிரகாசமும், ஜலமும் ருசியும், தனமும் கௌரவமும், கோபமும் பாபமும், எண்ணமும் ஜன்மமும், கர்மமும் தேகமும், நரகமும் துக்கமும், க்ஷமையும் சாந்தியும், தியானமும் ஞானமும், ஜபமும் மௌனமும், அபிமானமும் அஞ்ஞானமும், மாயையும் பிரபஞ்சமும், நிராசையும் சந்நியாசமும், பூததயையும் மஹா விரதமும், குருவும் தெய்வமும், தெய்வமும் பிரம்மமும், ஆனந்தமும் மோக்ஷமும், பின்னமாகாமலிருப்பதுபோல் பரப்பிரம்மமும் பகவானும் பின்னமாகாமலிருக்கின்றார்கள். அவாங்மனோகோசரமாய், அதீந்திரியமாய், அப்பிரமேயமாய் இருக்கப்பட்ட பரப்பிரம்மத்தைத் தியானிப்பதைவிட திவ்விய மங்கள விக்கிரக ரூபமாயிருக்கப்பட்ட பகவானுடைய திவ்விய ரூபத்தைப் பக்தர்கள் ஸ்மரிப்பதற்கு மிகவும் சுலபமானதல்லவா?" என்று சொல்லினர்.

அதைக் கேட்ட பகீர் "என்னடா பிதற்றுகின்றாய்? அது பிரளயத்தில் நாசமாகும் ரூபமுடையது. க்ஷணத்தில் அழியத்தக்க சரீரத்தைச் சத்தியமென்று நம்புகின்றாய். சகுணோபாசனை செய்வதனால் ஜனன மரண ரூபமாகிய சம்சார துக்கம் எவ்விதமாய் நீங்கும்? விஷமென்று தெரிந்திருந்தும் அது, அமிர்தமென்று எண்ணும் மூடனைப்போல் இதுவரையில் வியர்த்தமாய்த் துர்விவாதம் செய்துகொண்டு வந்தாய்? விஷம் சாப்பிட்டு மரணமடைவதைவிட அமிர்தம் சாப்பிட்டு நாசமில்லாத பதவியை அடைவது மேன்மையான தல்லவா? இனியாகிலும் புத்தியுடன் இருந்து அழியத்தக்க சகுணோபாசனத்தை நம்பி அதோகதியாகாமல், நித்தியமாகிய நிர்க்குண பதார்த்தத்தை நம்பி நித்தியானந்த சுகத்தை அனுபவிக்கக் கடவாய். எத்தனை விதங்களால் போதித்தபோதிலும் காதில் போட்டுக்கொள்ளாமல் ஏன் கெட்டுப் போகின்றாய்? தகாத காரியத்தில் பிரவேசிக்கப்பட்டவர்கள் எப்போதும் கடைத்தேரமாட்டார்கள்" என்று சொல்லினர்.

அதற்குக் கபீர் "ஜந்துக்களை இம்சிக்க வேண்டுமென்னும் கெட்ட எண்ணங்களை விட்டு விட்டால் அது முதிர்ந்து ஞானம் அடைவதுபோல், சத்துவகுண பிரதானமாகிய பகவத்ரூபமே சச்சிதானந்த பரப்பிரம்மமாய் சதானந்தத்தை உண்டாக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால், பகவானது ரூபத்தை எப்போதும் மறக்கலாகாது. ரூபமில்லாத பரப்பிரம்மத்தைவிட பக்தஜன பிரார்த்தனைக்காகப் பூலோகத்தில் மானுஷ விக்கிரகமாய் வந்து அனேக விநோதங்களை உண்டாக்கிப் பிரபஞ்சத்தைப் போஷிக்கப்பட்ட பகவானே பிரதானமானவரென்று நிர்ணயிக்கச் சந்தேகமில்லை" என்று சொல்லினர்.

அதைக் கேட்ட பகீர் பக்கென்று சிரித்து "உன்னுடைய வாக்கினால் நீ விவேகனென்றே தெரியவருகின்றது.

நிர்க்குண பரப்பிரம்மமொன்றில்லாவிட்டால் மாயையாகிலும் மாயா சம்பந்தமான குணங்களாயினும் குணங்களில் பிரதிபலித்த மூர்த்தித் திரயங்களாயினும் எவ்விடமிருந்து உண்டாகும்? நிஜத்தைத் தெரிந்துகொள்ளாமல் விருதா வார்த்தைகளைப் பேசுகின்றாய். இனியாகிலும் நிராகார பரப்பிரம்மத்தைவிட பின்னமாய் (வேறாய்க்) காணப்படும் திருசிய பிரபஞ்சங்களை ,யெல்லாம் விட்டுப் பரப்பிரமம் ஒன்றையே உபாசனம் செய்துகொண்டுவா" என்று சொல்லினர்.

அதற்குக் கபீர் "ஐயா! சஹஜமாயிருக்கும் விஷயத்தைத் தெரியச் சொல்லியும் அதை ஒப்புக்கொள்ளாமல் முரட்டுத்தனமாய் வாதித்துக்கொண்டு வருகின்றீர். சராசர பிரபஞ்சத்திற்கெல்லாம் பிராணாதாரமாயிருக்கும் ஜலத்திற்கு அதிபதி நாராயணனென்றும், அவர் அந்த ஜலத்தைத் தராவிடில் தாவர ஜங்கம ரூபமாயிருக்கும் ஜந்துவர்க்கங்களில் எதுவும் ஜீவித்திராதென்றும், அதனால் நீரும் நானும் நம்மைவிட இதர பிரம்மோபாசனை செய்யப்பட்டவர்களும் நாமரூபமில்லாமல் நாசமாவார்களென்று உமக்குத் தெரியாமல் போயிற்றல்லவா? ஜகத்ரக்ஷகனான புண்டரீகனைவிட அதிகமானவர் யார்? ஆதலால், புத்தியுடன் வார்த்தையாடும். பரமபுருஷராகிய நாராயணமூர்த்தியை ஸ்மரிக்காவிட்டால், உம்மைப்போன்ற பாமரர்களுக்குத் துர்க்கதியேயொழிய சத்கதி உண்டாகமாட்டாது" என்று சொல்லினர்.

அதைக்கேட்ட பகீர் பக்கென்று சிரித்து "அடா! நீ வேதாந்த சாஸ்திரங்களைக் கொஞ்சமேனும் பார்த்தவனல்ல; தத்துவங்களைச் சோதித்துச் சத்தியத்தைக் கிரகிக்கும் வரையில் உன் பிரமை நீங்காது. விசார ஞான சூனியமானவர்களெல்லோரும் இவ்விதமாகவே யிருப்பார்கள்.

சுத்தி (முத்துச்சிப்பி) ரஜதமா (வெள்ளியா) யும், ரஜ்ஜு (கயிறு) சர்ப்பமாயும், இரவில் ஸ்தாணு (நின்றிருக்கும் ஸ்தம்பம்) புருஷனாகவுந் தோன்றினாலும், யதார்த்தமல்லாததுபோல், பிரகிருதி (மாயா) பிரபஞ்சத்தையும் மூர்த்தித்திரயங்களையும், அதாவது பிரம்மா, விஷ்ணு, மஹேசவரர்கள் மித்தையென்றும், பரப்பிரம்மம் ஒன்றே சத்தியமானதென்றும் வேத சாஸ்திரங்களெல்லாம் முறையிடுகின்றன. இதற்கு விரோதமாய்ப் பிரம்மாவே விஷ்ணுவென்றும், விஷ்ணுவே சத்தியமென்றும் உன்னிஷ்டம்போல் வார்த்தையாடுகின்றாய்? நிர்க்குண பரப்பிரம்மத்திற்கு சலனம் (அசைதல்) ஏது? அப்படிப்பட்ட நிச்சலமான (அசையாத) பரப்பிரம்மம் விஷ்ணு ரூபங்கொண்டு பிரபஞ்சத்தையெல்லாம் ரக்ஷிக்கின்றாரென்று எவ்விதமாய்ச் சொல்லலாம்? சூரியனிடம் இருளும், சுகத்தில் துக்கமும், பிரியத்தில் அப்ரியமும், பதிவிரதையில் பரபுருஷகமனமும் எவ்விதமாய் உண்டாகமாட்டாதோ, அதுபோல் நிராகாரமாகிய பரப்பிரம்மத்தில் சாகாரமாகிய விஷ்ணுமூர்த்தி உண்டாவதற்கு இடமில்லை. நிரஹங்காரமாகிய பரப்பிரம்மத்தில் சாகாரமாகிய விஷ்ணு ரூபம் எவ்விதமாய் உண்டாகுமோ அதை நீயே யோசித்துப்பார். உனக்கு எத்தனை நாளாய் இந்தப் பயித்தியம் பிடித்துக்கொண்டிருக்கின்றது" என்று சொல்லினர்.

அதற்குக் கபீர் "ஐயா பயித்தியம் உமக்குப் பிடித்திருக்கின்றதே யொழிய எனக்கல்ல. ரூபமில்லாத ஆகாசத்தில் வாயுவும், சுத்த சூனியமாகிய சுழுப்த்தியில் சங்கல்பமும், ரக்த மூலமாய் சுக்கில சுரோணிதங்கள் (ஆணுக்குச் சுக்கிலமும், பெண்ணுக்குச் சுரோணிதமும்) சேர்ந்து பிண்ட ரூபமும், முட்டையில் இல்லாத சித்திர வர்ணங்கள் மயிலினது இறகிலும், விதையில் இல்லாத

பரிமளம் புஷ்பத்திலும், விருக்ஷத்தில் இல்லாத ருசி பழத்திலும் உண்டாவது சுபாவ மல்லவா? அதுபோல் ஸ்திரமாயிருக்கப்பட்ட பதார்த்தத்தில் பகவான் சுபாவமாய் உதித்து சித்திரவிசித்திரங்களான இந்தப் பிரபஞ்ச மெல்லாம் சிருஷ்டி செய்தனர். நீர் சொல்லியதுபோல் பகவான் இல்லாவிட்டால், மாயையும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்னும் பஞ்ச பூதங்களும், சிவப்பு, கறுப்பு, வெண்மை, நீலம், பச்சை என்னும் பஞ்ச வர்ணங்களும், சுவர்க்க நரகங்களும், இஹபரங்களும், சுக துக்கங்களும், புண்ணிய பாபங்களும், குரு சிஷ்யர்களும், ஸ்துதி நமஸ்காரங்களும், சராசர ரூபங்களும், ஜந்துக்களும், நீரும், நானும், தர்மதானங்களும், தபசுகள் முதலான யாவும் இல்லாமற் போகவேண்டியதே யல்லவா? இவை யெல்லாம் எவ்விதமாய் உண்டாயிற்று? இனி வாயைத் திறக்க வேண்டாம் கிழவா?" என்று சொல்லினர்.

அதைக் கேட்ட பகீர் "கெட்டிக்காரன் கெட்டிக்காரன், தானமேது தர்மமேது என்று சொல்லிவிட்டு எனக்குக் கொடுக்கவந்த துண்டுவஸ்திரத்தைக் கொடாமல் நிறுத்திக்கொள்ள உபாயம் செய்தாற்போல் தோன்றுகின்றது. ஆஹா! உன் புத்திசாலித்தனம் இப்போதல்லவோ தெரியவந்தது" என்று சொல்லினர்.

அதற்குக் கபீர் "நீர் அவ்வாறு நினைக்க வேண்டாம். வேண்டுமானால் என் பிராணனையும் உமது பாதத்தில் அர்ப்பணம் செய்யச் சித்தமா யிருக்கின்றேன். அப்படியிருக்க இந்தத் துண்டு வஸ்திரம் ஓர் பெரிதான காரியமல்ல? இதைப் பெற்றுக்கொள்ளும். நீர் வந்து வெகு நேரமாயிற்று, பெற்றுக்கொண்டு சந்தோஷமாய்ச் செல்லும்" என்று சொல்லித் தன்கையிலிருந்த வஸ்திரத்தை அவருக்குக் கொடுத்துவிட்டார்.

பகீர் அதை மிகவும் பிரீதியுடன் பெற்றுக்கொண்டு கபீரைப் பார்த்து "நாயனா! உன் உதார காம்பீரியத்திற்கு மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆனால் உனக்கு இன்னும் ஆத்ம ஞானம் பிடிபடாம லிருப்பதற்காக விசனப்படுகின்றேன். கர்மத்தைவிட பக்தி உத்தமமானதென்றும், பக்தியைவிட் விரக்தி உத்தமமானதென்றும், விரக்தியைவிட ஞானம் உத்தமமானதென்றும் வேதாந்த சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. அப்படிப்பட்ட சர்வோத்தமமான யதார்த்த ஞானத்தை அப்பியசிக்காமல் பக்தியே முக்கியமென்று பிடிவாதமாய்ச் சொல்லுகின்றாய். இதுவும் ஓர் அவிவேகமல்லவா?" என்று சொல்லினர்.

அதற்குக் கபீர் "சுவாமி! நீர் வாசா வேதாந்தங்களைப் பேசி காலத்தை விருதாவாய்ப் போக்கடிக்கிறவரைப்போல் காணப்படுகின்றீர். இல்லாத குயுக்திகளை நீர் தெரிந்துகொண்டு கீழும் மேலுமாய்ப் புரட்டிப் புரட்டிப் பேசுவதனால் ஞான முடையவர்களாகமாட்டீர். உமக்கு இவ்வளவு வயது வந்தபோதிலும் சுலபமாய் ஞானம் சம்பாதித்துக்கொள்ளத் தகுந்த சாதனத்தைக் காணாமலிருக்கின்றீர். முதல்முதல் பரிசுத்தமாய்ப் பக்திசெய்து அதன் மூலமாய்க் கிடைத்த வைராக்கியத்தினால் பிரபஞ்ச விரக்தி உண்டான பிறகல்லவோ ஞானத்தைச் சாதிக்க அதிகாரமுண்டாகும். அப்படியல்லாமல் ஒரே முறையாய் ஞானத்தைச் சாதிக்க வேண்டுமானால் எவ்வாறு முடியும். மேடையின்மீது ஏற வேண்டுமானால் ஒவ்வொரு படியாயல்லவோ ஏறவேண்டும். ஒரே முறையாய்த் தாவவேண்டுமானால் கீழே விழுந்து கை கால்களை யல்லவோ ஒடித்துக்கொள்ளவேண்டும். அது போல் சகுணாராதனை யில்லாமல் நிர்க்குணாராதனை எவ்விதமாய் உண்டாகும். அவிவேக தசையில் இருக்கும் எனக்கு இப்போது அனுகூலமானது பக்தியேயொழிய

ஞானமல்ல. (இதை வாசிக்கும் அன்பர்கள் இது விஷயம் இன்னும் விவரமாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமானால் "ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத் கீதை" அத்யாயம் 3, சு-8, 22, 23, அ-4, சு-7, 8, 9, 11, 12. அ-5, சு-4, 7ல், விரிவாய்க் காணலாம்.) பக்திமார்க்கத்தில் பிரவேசித்து மனதை நிறுத்திப் பக்தவச்சலனை பரமேசுவரரது திவ்யமங்கள விக்கிரகத்தை நேத்திரோச்சவமாய்த் தரிசித்துப் பக்தி விசுவாஸங்களுடன் நமஸ்கரித்து இருளடைந்த பாழுங் கிணற்றில் வீழ்ந்து மேல்கிளம்ப சக்தியற்றதா யிருக்கும் மனதை மெதுவாய் மேல்கிளப்பி ஸ்திரமாய் நிறுத்திய பிறகல்லவோ நிர்க்குணோபாசனம் செய்து பந்த விமுக்தனான பிறகு ஞானநிஷ்டா விசிஷ்டனாய் ஆனந்தசாகர (சமுத்திர)த்தில் மூழ்கி அஹங்கார மமகாரங்களை நிவர்த்திசெய்துகொண்டு நிர்மல ஞான சம்பத்தால் அத்துவிதீய பரமோத்தமனை அடையவேண்டுமென்றல்லவோ நிச்சயித்துக்கொண்டிருக்கின்றேன். நீர் இந்த விஷயங்களைத் தெரிந்துகொள்ளாமலே ஒரே முறையாய் வெட்ட வெளியைப் பிடித்துக் கொள்ளுமென்று போதிக்க ஆரம்பித்தீர். இந்த வெட்டவெளி சாதாரணமாய் எல்லோருக்கும் பிடிபடுவதல்ல. இது விஷயம் நீரே சற்று ஆலோசித்துப்பாரும்" என்று சொல்லினர்

அதைக் கேட்ட பகீர் "ஓஹோ! இப்போதல்லவா உன் விஷயம் தெரியவந்தது. நீர்க்குமிழியைப்போன்ற க்ஷணபங்கமாகிய இந்தத் தேகத்தை நித்தியமென்று உன் மனதில் சத்தியமாய் நம்பி இருப்பதனாலல்லவோ இப்படிப்பட்ட எண்ணங்களெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கின்றாய்? சரி சரி, பகவான் உன்மீது அனுக்கிரகம் வைத்து உன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிச் சந்தோஷத்தை உண்டாக்கட்டும். நிச்சலனமாய் (அசையாத தீபம்போல்)

பிரகாசித்துக் கொண்டிருக்கும் பரப்பிரம்மத்திலிருந்து பகவானும் பகவானிலிருந்து சர்வ பிரபஞ்சமும் உண்டாயிற்றென்று சொல்லுகின்றாயல்லவா? அந்த விஷயம் எதுவோ அதைச் சற்றே சொல் பார்ப்போம். அதைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்னும் அபேக்ஷை எனக்கு விசேஷமாயிருக்கின்றது. இது, விவரித்துச் சொல்லும்போதல்லவா உனது வண்டவாளம் வெளிவரப் போகின்றது'' என்று சொல்லினன்.

அவ்வார்த்தையைக் கேட்ட கபீர் மிகவும் கோபங்கொண்டு "ஓஹோ! இதுவரையில் உன்னை மிகவும் யோக்கியனென்று எண்ணியிருந்தேன். இப்போதல்லவா உன் குணம் தெரியவந்தது. வீண்வாதத்தில் மிகவும் கைதேர்ந்தவனாயிருக்கின்றாய். நல்லது இதுவரையில் பேசிவந்த உன் வாயைமூடி உன் துன்மார்க்க குணங்களை ஒழிக்கின்றேன்'' என்று கடின வார்த்தையாய்ப் பேசிப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

"அவாங் மனோகோசரமாய், அகண்டமாய், ஆனந்தமயமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பரப்பிரம்மத்தில் சுழுப்தியைப்போன்ற அவ்வியக்த மூலப்பிரகிருதி (மாயை) ஒன்று உண்டாயிற்று. அதிலிருந்து, சத்துவ ரஜ தமோ (சாத்விக ராஜச தாமசம்) என்னும் மூன்று குணங்கள் உண்டாயின. அதில், சாத்வீகத்தில் சத்துவம் உண்டானபோது, பிரதிபிம்பித்த பிரம்மமே விஷ்ணுவென்று சொல்லப்படும். அந்த விஷ்ணுவினுடைய நாபிக்கமலத்தில் சதுர்முகப்பிரமதேவர் பிறந்து எழுவித ஜன்மங்களையுடைய சராசர ரூபமாகிய பிரபஞ்சமெல்லாம் சிருஷ்டி செய்தனர். அரூபமாயிருந்தபோது பிரம்மமென்றும் சொரூபமாயிருந்தபோது விஷ்ணுவென்றும் ஒரு பதார்த்தத்திற்கே சொல்லப்பட்டிருக்கின்றது. இதுவே சுருதி, ஸ்மிருதிகளின்

வாக்கியம். ஆதலால், மகாவிஷ்ணுவே பிரதான தெய்வமென்று திடமாய் நம்பவேண்டியதாயிருக்கின்றது. தேச கால வஸ்து பரிச்சேதமில்லாமல் விலக்ஷணனாய் எங்கும் நிறைந்திருப்பதனால் விஷ்ணுவென்றும், காரியகாரண விலக்ஷணமாய் நித்திய சத்திய சுத்த புத்த முக்த்த சுபாவமுண்டாய்ப் பிரகாசிப்பதனால் பரமாத்மாவென்றும், சுந்தரமாகிய கேசங்களை (மயிர்களை) உடையவனாயிருப்பதனாலும், 'கேசி' என்னும் ராக்ஷதனைக் கொன்றதனாலும், சங்கரன் சதுர்முகன் முதலானவர்கள் தனக்கு உட்பட்டிருப்பதனாலும் கேசவனென்றும், க்ஷரத்திற்கு அதீதமாயும் அக்ஷரங்களுக்கெல்லாம் உத்தமனாயும் இருப்பதனால் புருஷோத்தமனென்றும், இந்திரிய வர்க்கங்களுக்கெல்லாம் சாக்ஷியாய் எஜமானனாய் க்ஷேத்ரஞ்ஞனாய் இருக்கின்றவனாதலாலும், இந்திரியங்களைத் தன் வசப்படுத்திக் கொண்டு தான் அவைகளுக்கு உட்படாமல் இருப்பதனாலும், சூர்ய சந்திரர்களின் ஆனந்த கிரணங்களால் சகல புவனங்களையும் நித்திரிக்கச்செய்து மறுபடியும் விழிக்கச் செய்வதனால் ருஷீகேசவனென்றும், சொரூப சாமர்த்தியத்திற்கு நாசமில்லாமல் தன் ஸ்தானத்திலிருந்து சலிக்காமலிருப்பதனால் அச்சுதனென்றும், வராகரூபமெடுத்து ஜலத்தில் மூழ்கியிருந்த பூமியை வெளிப்படுத்திச் சந்தோஷிக்கச் செய்ததனால் வராகனென்றும், கோவர்த்தனகிரியை அடியோடு பெயர்த்து விரலால் பிடித்து மழையைத்தடுத்து கோக்களுக்கு ஆனந்தத்தை உண்டாக்கினதால் கோவிந்தனென்றும், சகல ஜகத்தையும் சிருஷ்டி செய்வதற்குக் காரணமாகிய கமலத்தை நாபியில் வைத்துக்கொண்டிருப்பதனாலும், எல்லொருடைய இருதய கமலத்தின் மத்தியில் பிரகாசித்துக்கொண்டிருப்பதனாலும், பதும (தாமரை) கமலம் போன்ற உதடுகளை உடையவனாதலாலும் பத்மநாப

னென்றும், ஜகன்மாதாவாகிய மஹாலக்ஷ்மிக்கு பர்த்தாவா யிருப்பதனாலும், சகல வித்தைகளுக்கும் அதிபதியா யிருப்பதனாலும், நிர்மல ஞானத்தினால் அறியத் தக்கவனா யிருப்பதனாலும், மதுவம்சத்தில் பிறந்தவனாதலாலும் மாதவனென்றும், தன் கிரணங்களில் பிறந்து சதுர்முகனை கொல்லவந்த மதுவென்னும் ராக்ஷதனைச் சங்காரஞ் செய்ததனால் மதுசூதனனென்றும், இருதயமென்று புகழப்பட்ட புண்டரீகத்தில் பிரகாசித்துக் கொண்டிருப்பதனாலும், புண்டரீகம்போன்ற கண்களையுடையவனாதலாலும் புண்டரீகாக்ஷனென்றும், துஷ்டர்களைத் துர்கதி செய்விப்பதனாலும் புருஷார்த்தத்திற்காக ஜனங்களால் பிரார்த்திக்கப்படுவதனாலும் ஜனார்த்தனனென்றும், ககநாதி பூதங்களுக்கும் நரர்களுக்கும் தான் ஸ்தானமா யிருப்பதனாலும், சகல லோகத்திற்கும் ஜீவாதாரமா யிருக்கும் ஜலத்திற்கு அதிபதியா யிருப்பதனாலும் நாராயணனென்றும், ஷட்பாவ (காம குரோத லோப மோக மத மாச்சர்ய) விகாரங்கள் இல்லாதவனாதலால் அச்சுதனென்றும், சகல புவனங்களிலும் நிவசித்துக்கொண்டும் சகல பிரபஞ்சங்களையும் பிரகாசிக்கச்செய்தும் விவகரித்துக்கொண்டும் ஸ்துதித்துப் பிரார்த்தனை செய்யப்பட்டும் முமூக்ஷுக்களால் புகழப்பட்டும் வசுதேவபுத்திரனாய் அவதரித்ததனால் வாசுதேவனென்றும், பிரபஞ்சத்திற்கெல்லாம் பிரதான காரணமா யிருந்து சகல பூதங்களையும் இவரே பிரசாதித்ததனால் ஆதிதேவனென்றும், ஸ்மரித்த மாத்திரத்தில் மனிதர்களின் சகல பாபங்களையும் அஞ்ஞான சம்பந்தமாகிய சம்சார பந்தங்களையும் ஹரிப்பதனாலும், யஞ்ஞபாகங்களை ஹரிப்பதனாலும் ஹரியென்றும், இயம நியமாதி சாதனங்களால் உத்தம கதியைத் தரத்தக்கவனாதலாலும் யசோதா தேவியின் கயிற்றால் கட்டப்பட்டவனாதலாலும் தாமோதர

னென்றும், 'யோகீசுவரர்களினுடைய நித்தியானந்தத்தில் கிரீடித்துக்கொண்டு சுயேச்சையாய்த் தனக்கிஷ்டமான சரீரங்களைத் தரிப்பதனால் ராமனென்றும், முக்தியைப் பிரசாதிப்பவனாதலால் முகுந்தனென்றும் கல்பாந்தரத்தில் சகல பூதங்களையும் சம்மரித்து சமஸ்த பிரபஞ்சங்களையும் ஜல ரூபமாய்ச் செய்து ஆதிசேஷன்மேல் சயனித்துக் கொண்டிருப்பதனால் சேஷசயனனென்றும், தருமம் ஐஸ்வரியம் லக்ஷ்மி வைராக்யம் மோக்ஷம் முதலானவைகள் இருப்பதனாலும் உதயம், லயம், கதி, துர்கதி, வித்தை அவித்தை முதலானவைகளை' அறிந்தவனாதலால் பகவானென்றும், பூத தன்மாத்திரை ரூபமான ஜங்கியமென்னும் வனமாலையைத் தரித்ததனால் வனமாலி என்றும், உரஸ்தலத்தில் ஸ்ரீவத்ஸமென்னும் சுபலக்ஷணமிருப்பதால் ஸ்ரீவத்ஸலனென்றும், ஸ்ரீ தேவி வக்ஷஸ்தலத்தில் வஸிப்பதனால் ஸ்ரீநிவாஸனென்றும், அமுருத மர்தன சமயத்தில் லக்ஷ்மிதேவி தேவர்களை உல்லங்கனம்செய்து இவரையே மணம்புரிந்ததனாலும், பராசக்திக்குப் பிரபுவா யிருப்பதனாலும் ஸ்ரீயஃபதி யென்றும், தேசகால வஸ்து பரிச்சின்னங்களில்லாமலும் தேவ கந்தர்வ கின்னர கிம்புருஷ யக்ஷ ராக்ஷர சித்தசாத்திய வித்தியா தரர்கள் முதலானவர்கள் இவரைக் காணாததனால் அநந்தனென்றும், தபசு, வேதம், சத்தியஞானம் முதலானவைகளை அறிந்து தெரிவித்ததனால் பிராமண்யனென்றும், தன்னில் சகல லோகங்களும் கட்டுப்பட்டிருப்பதனாலும் சகல புவனங்களுக்கெல்லாம் தான் தந்தையா யிருப்பதனாலும், பிரபஞ்சத்தில் இவரைத்தவிர பந்து மற்றொருவர் இல்லாததனாலும், சுருதி, ஸ்மிருதி லக்ஷணங்களினால் உலகத்தில் பந்து ஜனங்களுக்கு ஹிதாஹிதோபதேசம் செய்வதனாலும் லோகபந்துவென்றும், பக்தர்களிடம் மிகவும் சமீபமாயிருப்பதனால், பக்தவத்ஸல

னென்றும், சதுர்த்தச புவனங்களுக்கு ஈசுவரனு யிருப்பதனுல் லோகேசுவரனென்றும், சுவர்க்க மத்திய பாதாள லோக திரயங்களைத் தரித்ததனுல் லோகோதரனென்றும், சேஷாம்சத்துடனிருந்து புவனங்களைத் தரித்திருப்பதனுல் பூதரனென்றும், மந்திரங்களினுல் முதல் பிறந்தவனுதலாலும், சுதன் என்பவனுக்கு முன், தான் பிறந்தவனுதலாலும் சதாக்ரஜனென்றும், விராட் சூத்ராத்மா துரீயாத்மாவென்னும் சதுஷ்டயங்கள் உண்டாயிருப்பதனுலும் யுகங்கள் தோறும், சித ரக்த பீத கிருஷ்ண மென்னும் சதுர்வித ரூபங்கள் உடையவனுதலாலும் சதுர் மூர்த்தி என்றும், சரீரபுருஷ பந்தபுருஷ வேதபுருஷ மஹாபுருஷனென்று உபநிஷத்துகளில் சொல்லப்பட்ட சதுர்வியூகங்கள் உண்டாயிருப்பதனுல் சதுர்வியூகனென்றும், வெகு வித ஜன்மாந்தரங்களாய்ச் சம்பாதித்த தபோ தியான சமாதி விசேஷங்களால் பாப விமுக்தர்களான மானவர்களுக்குத் துர்லபமான பக்தியினுல் லபிக்கத்தக்கவனுதலால் துர்லபனென்றும், அதிபிரயாசையுடன் அடையத்தக்கவனுதலால் துர்லபனென்றும், சர்வமும் தெரிந்தவனுதலால் சர்வஞ்ஞனென்றும், நித்தியத்துவ சர்வதத்வங்களினுலும் தேசகால வஸ்துக்ருத பரிச்சேத பாவங்களினுலும், சேஷரூபமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருப்பதனுல் அநந்தனென்றும், பக்தர்களுக்கு முக்தியை பிரசாதித்துத் துக்கங்களையெல்லாம் தூரப்படுத்துவதனுல் சுகப்தன் என்றும், சகல புவன ரக்ஷணுர்த்தனுய் சுதர்சனமென்னும் சக்கரத்தை அஸ்தத்தில் தரித்துக் கொண்டிருப்பதனுல் சக்கிரதரனென்றும், பூதாதியகங்காராத்மகமாகிய பாஞ்சஜந்ய மென்னும் சங்கத்தைத் தரித்திருப்பதனுல் சங்கதரனென்றும், வித்யாமயமாகிய நந்தகமென்னும் கட்கத்தைத் தரித்ததனுல் நந்தகதரனென்றும், இந்திரியா தியஹங்காராத்மகமாகிய சாரங்க

மென்னும் தநுசைத் தரித்ததனுல் சாரங்கதரனென்றும், புத்தி தத்துவாத்மகமாகிய கௌமோதகி என்னும் கதையைத் தரித்ததனுல் கதாதரனென்றும், அனந்தாதி விவித ரூபங்களால் பிரபஞ்ச ரூபமா யிருப்பதால் அநந்தரூபனென்றும் சொல்லப்படுகின்றுன். துஷ்ட சிக்ஷணமும் சிஷ்ட ரக்ஷணமும் தரும ஸ்தாபனமும் செய்யும் பொருட்டு, மச்ச கச்சப ,வராக நரசிம்ம வாமன புருகுராம ரகுராம பலராம முதலாகிய அவதார விசேஷங்களால் நாநா விதங்களாகி விநோதங்கள் செய்துகொண் டிருப்பார். அவர் செய்யும் அமோகமான .விவித காரியங்களினுல் அவருக்கு அனேக நாமங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பரம புருஷராகிய புண்டரீகனுடைய மஹா மஹிமையைத் தெரிந்துக்கொள்ளாமல் ஏளனம் செய்ய ஆரம்பித்தீர். உலகத்தில் எவர்களாகிலும், அவரை நினையாமலும் பூசிக்காமலும் ஸ்மரிக்காமலும் இரார்கள். அந்த மஹா புருஷனைச் சொல்லாத வேத ஆகம சாஸ்திர புராண இதிஹாசங்கள் இல்லை. அந்த மஹா புருஷனைச் சேவித்தவர்களுக்குச் சகல லாபங்களும் சித்திக்கும். ஐயா! பகீர்! இவ்வளவு நேரமாய்ப் பிரம்மம் பிரம்மம் என்று எதுவோ வாதாடிக் கொண்டிருந்தீர். அந்தப் பிரம்மத்திற்கு உசுவாச நிசுவாசங்கள் ஆடிக்கொண்டிருக்கின்றனவா? அது எவர்களிடமாகிலும் வார்த்தையாடுமா? எதோ முகத்தை இப்படித் திருப்பிப் பார்த்துச் சொல்லும். வியர்த்தமாய் துர்விவாதத்திற்கு ஆரம்பித்து வீண்காலத்தைப் போக்குகின்றீர்? நீர் இந்த விஷயமாய் எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டு தலைகீழாய் நின்று உபந்நியாசம் செய்தாலும் உமது மார்க்கத்திற்கு என் மனம் திரும்பமாட்டாது. உதவாத உம்முடைய பிரசங்கத்தை இதுவரையில் நிறுத்தி மெதுவாய்

வந்தவழியே செல்லக்கடவீர்" என்று கபீர் பகீரை நிராகரித்தார்.

அதைக்கேட்ட பகீர் கபீரை இன்னும் சோதிக்க நினைத்து மறுபடியும் சொல்லுகின்றார். "ஆஹா! கபீர்! உன் பாண்டித்தியமெல்லாம் வினியோகம்செய்து மிகவும் சிரமமடைந்தாயே யொழிய யதார்த்தத்தை மாத்திரம் கண்டுகொள்ளாமல்போனாய். 'அகண்டமென்றும் அத்வைதமென்றும் அசலமென்றும் அநந்தமென்றும் ஆதியந்தரகிதமென்றும் அப்பிரமேயமென்றும் ஆனந்தமயமென்றும் நித்தியமென்றும் நிர்மலமென்றும் நிராமயமென்றும் நிஷ்களங்கமென்றும் நிரஹங்காரமென்றும் நிர்விகல்பமென்றும் சத்யமென்றும் சச்சிதானந்தமென்றும் சுயம்பிரகாசமென்றும் சர்வதோமுகமென்றும் விஸ்வமென்றும் விமலமென்றும் விஸ்வதோமுகமென்றும் விஸ்வாதீதமென்றும் விசேஷமென்றும் துரியமென்றும் துரியாதீதமென்றும் பரமென்றும் பராத்பரமென்றும் பரப்பிரம்மமென்றும் அனேக நாமங்களால் சொல்லப்படும் பரமாத்மாவை நீக்கி மஹா அஹங்காரத்துடன் ராக்ஷதர்களைச் சம்மரித்த விஷ்ணுவை உன்னிஷ்டம்போல் புகழ்ந்த உனக்கு யதார்த்த ஞானம் எவ்வாறு பிடிபடப்போகின்றது. நல்லது, எதுவோ மஹா நியாயம் சொல்லவந்தாயல்லவா? விதை முதலா, விருக்ஷம் முதலா? தகப்பன் முதலா? குமாரன் முதலா? பிரபு முதலா, பரிசாரகன் முதலா? தமயன் முன்னா, தம்பி முன்னா? எதோ கொஞ்சம் விவரித்துச் சொல் பார்ப்போம்" என்று உரத்த சப்தத்துடன் கேட்டார். அதற்குக் கபீர் பகீரைப்பார்த்து ஐயா! நீ மிகவும் அகட விகடனா யிருக்கின்றீர்; ஏதேதோ இல்லாத குயுக்திகள் செய்து தலை கீழாய்ப் பேசிப் புரட்டப் பார்க்கின்றீர். எப்போதும் பனந்தோப்பில் வாசம் செய்து

கொண்டிருக்கும் நரி சலசலப்புக்கு அஞ்சுமா? பதிவிரதையிடம் பரபுருஷன் தந்திரம் உபயோகப்படுமா? வைரி (பகைவன்) சைன்னியங்களைப் பார்த்து வீரன் பின் செல்வானா? பிரம்மானந்த மனுபவிப்பவன் விஷயானந்தத்தைக் கோருவானோ? சித்த சலனமில்லாதவனுக்குத் துக்கங்கள் உண்டாகுமா? தைரியசாலி அதைரியத்திற்கு உட்படுவானா? சில சுட்க வேதாந்தங்களைக் கற்றுக்கொண்டு வந்த உன் மிரட்டலுக்குக் கபீர் பயப்படுவானா? போதும் போதும் நிறுத்து. விக்கிரகங்களின் மீதே நில்லாத மனம் ஆகாச வடிவமாய் வெட்ட வெளியாயிருக்கும் பரப்பிரம்மத்தில் எவ்வாறு நிற்கும். நீர் சொல்லுவது எப்படியிருக்கிறதென்றால் ஆகாசத்தில் ஏணியை நிறுத்தி ஏறச் சொல்லுவதுபோல் இருக்கின்றது. விருக்ஷமில்லாவிட்டால் விதையென்றும், குமாரனில்லாவிட்டால் தகப்பனென்றும், பரிசாரக னில்லா விட்டால் பிரபுவென்றும், தம்பி இல்லாவிட்டால் தமயனென்றும் பெயர்கள் எவ்வாறு உண்டாகும்? நான் பக்தனாயிருப்பதனால் எனக்குப் பகவான் எங்கும் இருக்கின்றார். நீ பக்தனல்ல. ஆதலால் உனக்குப் பகவான் இல்லை. சலனமில்லாமலிருக்கும் பரப்பிரம்மத்துடன் வார்த்தையாடினால் அது, பேசுமா? கருணா கடாக்ஷங்களினால் நம்மை அறியுமா? இப்படிப் பட்ட உதவாத வார்த்தைகளினால் பிரயோசனமென்ன? திக்கில்லாதவனுக்குத் தெய்வமே துணை? பரிசாரகனுக்குப் பிரபுவே துணை; பக்தனுக்குப் பகவானே துணை; நரர்களுக்கு நாராயணனே துணை. பூர்வம் யானை முதலையால் பிடிபட்டு பரமேசுவரா! என்னைக் கார்க்கக்கடவாய் என்று முறையிட்டபோது விஷ்ணு ரக்ஷித்தாரா? அல்லது பிரம்மம் ரக்ஷித்ததா? இரண்யகசிபன் அரியைக்காட்டுகின்றாயாவென்று குமாரனைத் தண்டித்துச் சபா ஸ்தம்

பத்தைத் தன் காலால் உதைத்தபோது பக்தன் வார்த்தையைக் காப்பாற்றுவதற்காக நரசிம்ம ரூபமாய் விஷ்ணு உத்பவித்தாரா அல்லது பிரம்மம் உத்பவித்ததா? துரியோதனன் சபையில் திரௌபதியை துச்சாதனன் பங்கம் படுத்த வந்தபோது ரக்ஷிக்க வேண்டுமென்று திரௌபதி பிரார்த்தித்தபோது அவளுக்கு, அக்ஷய வஸ்திரங்கள் விஷ்ணு கொடுத்தாரா, பிரம்மம் கொடுத்ததா? ஓ! பகீர் நீரே சற்று ஆலோசித்துப்பாரும். பிரபஞ்சத்திற்கெல்லாம் நாராயணமூர்த்தி ஒருவரே ரக்ஷகனா யிருக்கின்றார். எப்பொழுதும் அவரைச் சேவிக்கப் பட்டவர்களுக்கு நரகமில்லை. பிரதிதினம் அணுவேனும் சோராமல் ஸ்மரிக்கப் பட்டவர்களுக்கு ஆபத்துகள் உண்டாகவேமாட்டா? விஷ்ணுமூர்த்தி தவிர ரக்ஷகன் மற்றொருவரில்லை. ராம நாமத்தைத்தவிர மற்றொரு நாமமில்லை. பதிவிரதையைப் பிராணவதை செய்தாலும் அவள் பரபுருஷனிடம் சேராமலிருப்பதுபோல் பக்தியையுடைய புருஷன் பக்தவச்சலனான புருஷோத்தமனைத் தவிர இதரர்களை ஆசிரயிக்கான். இனி நீ எனக்கெவ்வளவு போதித்தபோதிலும் சர்வலோக ரக்ஷகனான புண்டரீகனைவிட இதரர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் அவர்களை ஆசிரயிக்கேன். நீ இப்போது வியர்த்தமாய்த் துர்விவாதத்தில் உடன்பட்டு காலத்தை என் விருதாவாய்க் கழிக்கின்றாய். இதனால் உனக்குச் சிறிதேனும் லாபமில்லை. இனி வார்த்தையாடாதே. நான் சொல்லும் விஷயங்களுக்குச் சமாதானம் சொல்ல சக்தி இல்லாவிட்டாலும் ரோஷத்தினால் கையை நீட்டி நீட்டி கூச்சலிடுகின்றாய். இதனால் உனக்காகிலும் எனக்காகிலும் சிறிதேனும் பிரயோசனம் உண்டாகமாட்டாது. இதோடு உன் பிரசங்கத்தை நிறுத்தக்கடவாய். நீர் வந்து வெகு நேரமாயிற்று. இரவிற்கு வேண்டிய போஜனம் சம்பா

த்துக்கொள்ளவேண்டுமே அதற்கு ஏதோ ஒரு உபாயம்
தேடவேண்டுமல்லவா? காலம் மீறிவிட்டது, போங்கள்
போங்கள்" என்று மெதுவாய்க் கபீர் சொல்லினார்.

"அதைக்கேட்ட பகீர்" அடே, மூடா! கற்றகல்விகளை
யெல்லாம் இன்றே செலவழித்து விடுகின்றாய்! நாளைக்கு
வேண்டுவதற்காகக் கொஞ்சம் வைத்துக்கொள். ஆஹா!
நிராகாரமாகிய பரப்பிரம்மத்தையே ஆராதனை செய்யும்
நிர்மலமான வமிசத்தில் பிறந்த உனக்குச் சகுணாராதனை
(விக்கிரக ஆராதனை)யை உபதேசித்துத் துன்மார்க்கத்தில்
பிரவேசிக்கச்செய்த துஷ்டர்கள் யாரோ தெரியவில்லையே.
ஐயோ! அப்பிரயோசகனே! இப்போது உன் மூகாந்தர
மாய் குலக்ஷயமாகவேண்டியதா யிருக்கின்றதல்லவா?
ஆஹா! பரிசுத்தமாகிய மகம்மது மதத்தை அநுஷ்டித்து
வரும் உன் தாய் தந்தையர்களுக்கு எந்தத் தோஷத்தி
னாலோ கரும்பிற்குச் சோகை உண்டானதுபோல் நீ உண்
டானாய். ஐயையோ! இது மிகவும் ஆச்சர்யமாயிருக்
கின்றது" என்று சொல்லி மிகவும் வருத்தமடைபவர்
போல் நடித்துக்காட்டினார்.

அதைக்கேட்ட கபீர் புன்னகையுடன் சிரித்து 'ஐயா!
என் தாய் தந்தையர்கள் மிகவும் புண்ணியம் செய்துகொண்
டதனாலல்லவோ பரிசுத்தமான சகுணாராதனை (விக்கிர
ஆராதனை) எனக்கு உண்டாயிற்று. இது விஷயமாய்க் கஷ்
டப்பட்டுப் பகவதனுக்கிரகம் சம்பாதித்துக்கொண்டால்
எங்கள் வமிசத்திலுள்ளவர்களெல்லோரும் கிருதார்த்தர்க
ளாவார்கள். உன்னைப்பெற்ற தாய் தந்தையர்கள் பாபாத்
மாக்களென்று சொல்ல சந்தேகமில்லை. முழநீளம் தாடி
யும், பாதம் வரையில் நீண்ட சொக்காயும், சொக்கைப்
போன்ற நீளமுள்ள காலையும் வைத்துக்கொண்டு மிகவும்
பெரியமனுஷ்யனைப்போல் புறப்பட்டுவந்து, மஹாத்மாக்

களுக்குத்தவிர இதரர்களுக்குச் சாத்தியமாகாத நிர்க்குணராதனை ஒன்றே சிரேஷ்டமானதென்று சொல்லி நீ கெடுவதுமல்லாமல் உலகத்தாரையும் பிரமிக்கும்படிச் செய்கின்றாய். உன் வமிசத்தார்களுக்கெல்லாம் உன் முகாந்தரமாய்த் துர்க்கதி சம்பவிப்பதற்குச் சம்சயமில்லை'' என்று தீரத்துடன் சொல்லினர்.

அதைக்கேட்ட பகீர் மிகவும் கோபங்கொண்டு கபீரைக் கோபப்பார்வையுடன் பார்த்து "என்னடா! கொஞ்சமாகிலும் தாரதம்மியம் பாராமல் தாறுமாறாய் உளர ஆரம்பித்தாய்? சீ சீ! வாயைமூடு'' என்று அதட்டினர்.

அதற்குக் கபீர் "தாறுமாறாய் நான் ஒன்றும் சொல்லவில்லை; உதவாத பிரசங்கத்தினால் உலகத்தாரைப் பாழ் செய்ய இவ்வளவு நேரமாய் உன் பிரசண்ட வித்வத்தைக் காட்டினாய். நீ உலகத்தாரையெல்லாம் துர்மார்க்கத்தில் நடக்கும்படி கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் மஹானுபாவன். உன்னைப்போன்ற துர்ப்புத்தி யுடையவனுடன் சகவாசம் செய்தால் இருக்கும் புத்தியும் கெட்டுப்போகும். இனிச் செல்லும் செல்லும்'' என்று கபீர் கசரிக்கொண்டனர்.

அதைக்கேட்ட பகீர் சபாஷ்! சபாஷ்!! வாஸ்தவமே சொன்னாய். துஷ்டர்களையும் தரும பிரஷ்டர்களையும் சிக்ஷிக்கக் கங்கணம் கட்டிக்கொண்ட என் சாமர்த்தியத்தைக் கொஞ்சம் தெரிவிக்கின்றேன் பார். என் கையிலிருப்பது என்ன பார்த்தாயா? இதனால் உன் முதுகுதோல் உரியும்படி பிளக்கின்றேன் பார். அப்படிக்கில்லாவிட்டால், உன்பேரால் கூப்பிடு'' என்று சொல்லித் தன் கையிலிருக்கும் பிரம்பைக் காட்டினர்.

அதற்குக் கபீர் "ஆம்; இவ்வளவு மாத்திரம் மிரட்டாவிட்டால் உன் வேஷத்திற்குக் கௌரவம் உண்டாகுமா? உன்னைப்போன்ற பிகாரிகளை இதுவரையில் எத்தனையோ பேர்களைப் பார்த்தேன். பகவத்பக்தி லக்ஷணம் இதிலேயே தெரிகின்றது. வாயை மூடிக்கொண்டு மெதுவாய்ச் செல்லக்கடவாய்'' என்று திரஸ்காரமாய்ச் சொல்லினர்.

அதைக்கேட்ட பகீர் மிகவும் கோபங்கொண்டு "ஆஹா! நீ இவ்வளவிற்கு உடன்பட்டாயா? என்னைச் செல்லக்கடவாயென்று கசரத்தக்கவனாய் விட்டாயா? என் வழியாய் நான் போய்க்கொண்டிருப்பவனைப் பலாத்காரமாய்க் கூப்பிட்டுப் பலவந்தப்படுத்தி இந்த வஸ்திரத்தை எனக்குக் கொடுத்து இவ்வளவு பேச ஆரம்பித்தாயல்லவா? நல்லது, இந்த விஷயங்களை யெல்லாம் உன் தாயினிடம் சொல்லி உனக்குத் தகுந்த சிக்ஷை செய்விக்கின்றேன். இது வரையில் நீ பேசிய துஷ்ட வார்த்தைகளை யெல்லாம் அவள்முன் சொல்லவேண்டும்'' என்று சொல்லி ஜிஜ்ஜாபீபியை அழைத்துவர மிகவும் கோபத்துடன் சென்றார்.

பகீர் ஜிஜ்ஜாபீபியிடம் கோள் சொல்லித் தண்டித்தல்.

கபீர் அதைக்கேட்டு மனம் நொந்து "இவனெவனோ மஹா கலகப் பிரியனா யிருக்கின்றான். சரி சரி, ஜாதிக்குத் தக்க நீசபுத்தியே இருக்கின்றது. இந்தத் துன்மார்க்கன் நிர்நிமித்தியமாய்த் தானே துர்வாதம்செய்ய ஆரம்பித்துக் கடைசியில் தன் குற்றத்தை என்மேல் சுமற்றி எவ்வளவு துடுக்காய்ச் சொல்லுகின்றான் பார்! இவன் சென்று நான் கொடுத்த வஸ்திரத்தை என் தாயிடம் காட்டுவானாகில், அவள் கோபமென்னும் நெருப்பை மூட்டைக் கட்டிக்கொண்டு இப்பொழுதே புறப்பட்டு வருவாள். அப்படி

வருவாளாகில் அவள் கோபத்திற்கு நான் நிச்சயமாய்ப் பலியாகவேண்டும். இதற்கென்ன செய்யலாமென்று சில நேரம் துக்கித்துக் கடைசியாய்த் தைரியமில்லாமல் ஓடி பகீரினுடைய பாதங்களைக்கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு "சுவாமி! பகவானுக்காக என் குற்றங்களை மன்னிக்க வேண்டும், அவிவேகத்தினால் உடல் தெரியாமல் ஏதோ பேசிவிட்டேன். இந்தச் சங்கதி என் தாய் கேட்பாளாகில் என்னைக் கொன்றுவிடுவாள். நான் பாதைப்படுவதனால் உமக்கென்ன பிரயோசனம்" என்று வெகுவிதங்களாய்க் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர். அதற்குப் பகீர் "அடே துன்மார்க்கா! இப்போது உன்னை க்ஷமிக்கமாட்டேன். உன் தாயிடம் சொல்லி இப்போதே உனக்குத் தகுந்த சிக்ஷை செய்விக்காமல் விடேன்" என்று சொல்லி காலால் உதரித்தள்ளி, மிகவும்வேகமாய் ஜிஜ்ஜாபீபியிடம்சென்றார்.

கபீரினுடைய இரக்கத்திற்கு மனம் இரங்காத பகீரினுடைய கடின சித்தத்திற்காகச் சற்றுநேரம் கபீர் வியசனப்பட்டு "துலுக்கர்கள் துடுக்கர்களென்று தெரிந்திருந்தும் ஆத்திரப்பட்டு இப்படிப்பட்ட ஆபத்தைச் சம்பாதித்துக் கொண்டேனல்லவா? ஏதோ பினற்றிக்கொண்டு போனால் போகட்டுமென்று பதராமல் இருந்திருந்தால் இவ்வாறு உண்டாகமாட்டாதல்லவா? உள்ளதை யுள்ளபடி சொன்னதனாலல்லவோ? இவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தன. இவன் செய்யும் சேஷ்டைகளைப் பார்த்தால் இப்போது துன்பமுண்டாகும்போல் தோன்றுகின்றது. யோக்கியதை அறியாமல் இந்தப் பிகாரிக்கு பகீர் அதிகாரம் யார் கொடுத்தார்களோ தெரியவில்லையே" என்று நினைத்துத் தப்பித்துக்கொள்ள எதுவும் தோன்றாமல் சற்று நேரம் சும்மாயிருந்து பிறகு தனக்குச் சமீபமாயிருக்கும் குட்டிச் சுவரிடம் சென்று பூனையைப்போல் பதுங்கிக்

கொண்டு பரமேஸ்வரா! இந்தச் சமயத்தில் என்னை ரக்ஷிக்கும் பாரம் உன்னுடையதே" என்று பகவத்பிரார்த்தனை செய்துகொண்டு கண்களைமூடி உட்கார்ந்திருந்தார். இங்கு இப்படி யிருக்க.

பகீர் சீக்கிரமாய் ஜிஜ்ஜாபீபியிடம் சென்று "அம்மா பாக்கியவதி! உன் உத்திரவுபடி உன் குமாரன் கடைக்கு விக்கிரயம் செய்யக் கொண்டுபோன பீதாம்பரத்தைக் கையில் பிடித்துக்கொண்டு தன்வழியாய்ச் சென்றுகொண்டிருக்கும் பிராமணனைக் கூப்பிட்டு இந்தப் பீதாம்பரத்தைப் பலவந்தமாய்க் கொடுக்கப்போனான். அதைப் பார்த்து எனக்குக் கொடென்று பலவிதங்களாய் வேண்டிக் கொண்டபோதிலும் கொடாமல் கடைசியில் இந்தப் பீதாம்பரத்தை இரண்டாய்க் கிழித்து எனக்கொரு துண்டும் பிராம்மணனுக்கொரு துண்டும் கொடுக்க வந்தான். அது வேண்டாமென்று மறுத்துச் சொல்லும்போது, தானாகவே என்னிடம் ஓடிவந்து கொடுக்க வந்தான். வேண்டாமென்று நான் எவ்வளவு தடுத்தாலும் அதைக் கேட்காமல் என் கழுத்தில் கட்டிவிட்டு என் தாயைக் கேட்டால் இன்னும் உமக்கு வேண்டிய பீதாம்பரத்தைத் தருவாளென்று சொல்லினன். இந்த விஷயம் உன்னிடம் சொல்ல வேண்டாமென்றும், தான் என்னுடன் கூட வந்தால் தானே அழைத்து வந்தானென்று நீ எண்ணிக் கொள்வாயென்றும், நீயே சென்று உன் காரியத்தை நிறைவேற்றிக் கொண்டு நீ வரும் வரையில் நான் இங்கே இருக்கின்றேனென்றும் சொல்லி என்னை இங்கு அனுப்பினான். தான் ஒருவனே அங்குக் குட்டிச்சுவரிடம் ஒளித்திருக்கின்றான். அம்மா! அவனுக்கு இந்தப் பால்யத்திலேயே இப்படிப்பட்ட தருமகுணங்கள் உண்டாயிருப்பதைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது! ஆஹா! இப்படிப்பட்ட

சத்புத்திரனைப்பெற்ற உங்கள் பாக்கியமே பாக்கியமென்று அவனைச் சற்று நேரம் புகழ்ந்து, அம்மா! உங்கள் பேரிருக்கும்படி ஓர் பீதாம்பரத்தைக் கொடுக்கக்கடவாய்'' என்று மிகவும் வணக்கமாய்க்கேட்டனர்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட ஜிஜ்ஜாபீபீ, ''ஐயா! பகீர்! நீர் கோரியபடி நல்ல பீதாம்பரமே கொடுக்கின்றேன்; என் குமாரன் எங்கு ஒளிந்திருக்கின்றானோ சற்றே காட்டுங்கள்'' என்று சொல்லிப் புறப்பட்டாள். அப்போது பகீர் ''காட்டுகின்றேன் வா'' என்று தன்னுடன்கூட மெதுவாய் அழைத்துச் சென்று கபீர் ஒளித்திருக்கும் இடத்தைக் காட்டி ''அம்மா! இதோபார், நீ வருகின்றாயென்று அறிந்து ஒன்றும் அறியாதவனைப்போல் கண்களைமூடிக்கொண்டு மாயைசெய்கின்றான். அப்பப்பா! இவன் மஹா திருடனாயிருக்கின்றான்; இவனை நம்பலாகாது. நாம் இவ்வழிச்சென்றால் அவன் அவ்வழியாய் ஓடிவிடுவான். ஆதலால், நாம் இருவரும் இரண்டு பக்கங்களாய்ச் செல்வோம்'' என்று சொல்லி ஜிஜ்ஜாபீபியை ஒருபுறமாய் வரச் சொல்லித் தான் ஒருபுறமாய்வந்து ''கபீர்! இதோ உன் தாய் வருகின்றாள் மெதுவாய் எழுந்திருந்து தப்பித்துக் கொள்'' என்று சைகைசெய்தார்.

அப்போது கபீர் தாயைப் பார்த்தவுடன், அவள் முகம் கோபத்தினால் நெருப்புப்போல் இருந்தபடியால் பயந்து எழுந்து, பகீர் இருக்கும்படியான மார்க்கமாய் ஓடத்தலைப்பட்டார். அப்போது பகீர் கபீரினுடைய தலையில் ஓர் குட்டுக்குட்டிக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு 'இதோ திருடன் திமிறுகின்றான்' என்று கூச்சலிட்டுப் போகவிடாமல் நிறுத்தினார். அப்போது கபீர் மிகவும் நடுநடுங்கிப் பகீருக்கு அநேகவந்தனங்கள் செய்துகொண்டு ''திருடனை வரச்சொல்லித் தீபம் கொண்டுவந்து

காட்டுவதுபோல் என்னைப் பிடித்துக்கொண்டு என் தாயினிடம் ஒப்பிப்பது உமக்குத் தர்மமல்ல; அநேக சலாம்! சலாம்!! சலாம்!!! என்தாய் வருவதற்குள் என்னை விட்டுவிடு'' என்று அனேக விதங்களாய் வேண்டிக்கொண்டபோதிலும் ''அப்பப்பா! இதற்குள் உன்னை விடேன்; இந்த நயவினயங்களெல்லாம் அப்போது எங்குப் போயிற்று; இதுவரையில் என்னைப் பேசிய பேச்சுக்களெல்லாம் ஞாபகமிருக்கின்றதல்லவா? உன்னை என்ன செய்விக்கின்றேன் பார்'' என்று சொல்லி ஜிஜ்ஜாபீபியை சீக்கிரமாய் வரும்படிக் கூச்சலிட்டார்.

பகவான் கபீருக்குத் தரிசனங் கொடுத்தல்.

அந்தக் கூச்சலை ஜிஜ்ஜாபீபீ கேட்டவுடன் ஓடோடியும் வந்து கபீர்கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ''அடே துன்மார்க்கா! விற்பனைச்செய்து பணம் கொண்டுவரும்படி கொடுத்தனுப்பின பீதாம்பரத்தைக் கிழித்து வழிப்போக்கர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்தாயா? பெரியோர்கள் இருக்கின்றார்களென்னும் பயம்கூட இல்லாமல் இப்போதே இவ்வளவு சுவதந்திரம் வகித்துக்கொண்டாயா? இப்போது உன்னை என்னசெய்கின்றேன் பார்'' என்று கையினால் ஓர் அறை அறையப்போனாள். ''அவனை அப்படிச் செய்யவேண்டாம். இதோ இந்தப் பிரம்பினால் வாங்கென்று'' சொல்லித் தன்கையிலிருந்த பிரம்பை ஜிஜ்ஜாபீபிகையில் பகீர் கொடுத்தார். அப்போது ஜிஜ்ஜாபீ பிரம்பைப்பெற்றுக்கொண்டு கபீர் முதுகின்மீது தன் பலம் கொண்டவரையில் நோக்கி இரண்டடிகள் கொடுத்தாள். அந்த அடியால் கபீர் தள்ளிவிழுந்து ''ஹரேராம் ஹரேராம்'' என்று கெட்டியாய்க் கூச்சலிட்டவுடன் அந்த அடி

கபீர்மீது படாமல், எண்பத்து நான்குலக்ஷ ஜீவராசிகளின் மீது பட்டவுடனே அவைகளெல்லாம் துள்ளிவிழுந்து, இதென்ன இதென்னவென்று எல்லோரும் முறையிட்ட போது நிரதிசயானந்த சொரூப சாக்ஷாத்கார தசையடைந்த கபீர் ரூபமாயிருக்கும் ஸ்ரீசகமஹரிஷியின்மீது ஜிஜ்ஜாபீபீ அடித்த இரண்டு அடிகளும் எல்லோருக்கும் இவ்வாறுபட்டதென்று சொல்லும்போது, மாயா பகீர் வேஷம்கொண்டிருக்கும் பகவான் மீதும் அந்த அடிகள் பட்டபடியால் அந்த அடிகளுக்குப் பகவான் தாளாமல் மாயாபகீர் சரீரத்தைவிட்டுத் தன் நிஜசொரூபத்தைத் தரித்துக் கபீரை ஆலிங்கனம் செய்துகொண்டார்.

இவ்வாறு ஜிஜ்ஜாபீபீ அடித்தவுடன் அவள் மனங் கலங்கிக் கண்களில் ஜலம் ததும்பி மனம் தாளாமல் "நாயனா! கொஞ்சமாகிலும் கனிகரமில்லாமல் உன்னை அடித்துவிட்டேன், ஆஹா! என் உடல் பற்றியெரிகின்றதே; என் குடல் நடுங்குகின்றதே" என்று சொல்லித் தன்குமாரனைத் தழுவப்போனாள். அதற்குமுன்பே திவ்விய ரத்தினங்களை இழைத்த கிரீடத்தின் காந்திகள் தசதிசை (பத்துத் திக்கு)களிலும் பிரகாசித்துக்கொண்டும், காதுகளில் ஆடிக்கொண்டிருக்கும் மகரகுண்டலங்களின் காந்திகள் தகதகாயமாய் ஜொலித்துக்கொண்டும், கழுத்தில் தரித்திருக்கும் கௌஸ்துப வனமாலாதி ஹாரங்களினால் மிகவும் சந்தோஷத்தைத் தரத்தக்கதும், சுப்ரசுஸ்தமென்னும் சங்குசக்ராதி திவ்விய ஆயுதத்தை அஸ்தத்தில் பிடித்துக்கொண்டும், உலகத்திலுள்ள எல்லா அழகைவிட அதிக அழகுடைய மூர்த்திகரமாய் நின்று கபீரைத் தழுவிக்கொண்டிருக்கும் மஹாபுருஷனது ரூபலாவண்ணியத்தை ஜிஜ்ஜாபீபீ நேத்ரோச்சவமாய்ப் பார்த்துத் திக்பிரமை யடைந்துகொண்டு யாதொன்றும் சொல்லத் தோன்றாதவளாய்க்

கண்களைச் சிமிட்டாமல் பகவானை ஒரே பார்வையாய்ப் பார்த்து நின்றாள்.

அப்போது பகவான் தனக்குத் தானாய்ச் சொல்லிக்கொண்டு பின்வருமாறு துக்கிக்கின்றார்.

"ஆஹா! இது, எப்படிப்பட்ட பிரமாதத்திற்கு வந்துவிட்டது! பூர்வத்தில் பலியைச் சோதிக்கச் சென்றபோதாகிலும், பதிவிரதா சிரோன்மணியாகிய அநுசூயா தேவியினால் அகப்பட்டுக் குழந்தைவடிவம் எடுத்தபோதாகிலும், இரண்யாக்ஷ ஹிரண்யகசிபன் ராவண கும்பகர்ண நரகாசுர முதலாகிய சூரர்களை வதைத்தபோதும், பாரதயுத்தத்தில் ஆயுதங்கள் தீண்டாமல் ரதசாரத்தியம் செய்தபோதும், தருமராஜன் அசுவமேத யாகம் செய்யத்தொடங்கியபோது அவருக்காகச் சென்று தாம்ர த்வஜனிடம் அகப்பட்டுக்கொண்டபோதும், காலயவன் பின்தொடர்ந்து துரத்தியபோதும், சிசுபாலதந்தர்கள் நாநா விதங்களாய்த் தூஷித்தபோதும், இப்படிப்பட்ட துரவஸ்த்தையை யான் அடைந்ததில்லை. அப்பப்பா! இவனைப் பரீக்ஷிக்கவந்த மாயா பகீர்சரீரமும் இரண்டு அடிகளால் பறந்தோடிப்போயிற்று. அடடா! இது,மிகவும் ஆச்சரியகரமாயிருக்கின்றது!

அமோகமான என்மாயா பகீர் சரீரத்தைப் போக்கடித்த இவ்விரண்டு அடிகளும் கபீருக்குப் படாமல் தப்பிப்போனபடியால் பிழைத்தானேயொழிய இல்லாவிட்டால் இதுவரையில் அந்யாயமாய் இறந்திருப்பானே! ஆஹா! ஒவ்வொரு அடியும் ஒவ்வொரு லக்ஷம்பெறும்" என்று சிலநேரம் பச்சாதாபப்பட்டு மறுபடியும் அதிக பிரியத்துடன் கபீரைப் பார்த்து "நாயனா! உனக்கு எவ்வளவு ஆபத்துச் சம்பவிக்கயிருந்தது! கையில் பிரம்பைப் பிடித்து உன் தாய் உன்னை அடிக்க வந்தபோது எவ்வளவு பயந்தாயோ? உன்மீது அடிபட்டிருந்தால் உன்பிராணன்

உன் சரீரத்தில் நின்றிராது. நீ அதிக பக்தியுடன் ஜபித்துக் கொண்டிருக்கும் 'ராம' நாம பிரபாவத்தினால் உன் ஆபத்து நீங்கிற்றேயொழிய, இல்லாவிடில் மிகவும் பிரமாதம் உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. இப்போது எனக்கு மிகவும் சந்தோஷமாயிற்று'' என்று பல விதங்களால் தேறுதலைச் சொல்லினார். அப்போது ஜிஜ்ஞாஸி பகவான்மீது வைத்திருந்த திருஷ்டியிலிருந்து விடுபட்டு அஞ்சலி அஸ்தத்துடன் நின்று கண்களில் ஆனந்த பாஷ்ப ஜலம்பெருகி தேகம் சிலிர்த்து வினய பயபக்தி பூர்வகமாய்ச் சம்பிரமத்துடன் அந்த மஹானுபாவனை பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து நின்று பின்வருமாறு சொல்லத் தொடங்கினள்.

''தேவா! அவாங்மானஸகோசரமாகிய மஹா அதிசயங்களுடன் பிரகாசித்துக்கொண்டிருக்கும் உம்மைத் தரிசிப்பதற்காக அனேக மஹாத்மாக்கள் எப்பொழுதும் நித்திரை ஆஹாரங்களில்லாமல் மிகவும் பரிதபித்துக் கொண்டிருக்கின்றார்கள். சிலர், உமது அனந்த திவ்விய நாமங்களைத் திரிகரணசுத்தியாய் எப்பொழுதும் ஜபித்து விசேஷ பக்தியுடன் பூஜித்து இஹலோக சுகங்களையெல்லாம் நிர்மூலம் செய்து க்ஷுத்பிபாஸங்களுக்கு (பசி தாஹங்களுக்கு) சகித்து நானாவித கஷ்டங்களால் உம்மைத் தேடித் தேடி அலைந்தும் காணாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சிலர், உமது லீலா வினோதங்களை எல்லாம் பரமானந்தகரமாய்ப் பாடி அதனால் தங்கள் மனம் உருகிப் பரவசமடைந்து சர்வதா நடனம் செய்துகொண்டு உம்மிடத்திலேயே தங்கள் மனதை அற்பணம் செய்து சகலமும் மறந்து பரம பக்தர்களை கௌரவித்து அவர்களுக்கு வேண்டிய பதார்த்தங்களைச் சமர்ப்பித்துச் சேவைசெய்து கொண்டிருக்கின்றார்கள். சிலர், கிருகஸ்தாசிரமத்திலிருந்

தால் மன சுத்தியும் புத்தியும் உண்டாவது மிகவும் துர்லபமென்று நிச்சயித்துக்கொண்டு சகல போகங்களையும் விட்டு விரக்தர்களால் உமது திவ்விய நாமங்களை ஸ்மரித்துக் கூத்தாடிக்கொண்டிருக்கின்றார்கள். சிலர், உலகவியாபாரங்களை அடியோடே விட்டு முனிவேடம் பூண்டு வனங்களில் வசித்துக்கொண்டு கந்தமூல பலங்களைப் புசித்துச் சகல இந்திரியங்களையும் ஜயித்து உஷ்ணகாலங்களில் பஞ்சாக்கினி மத்தியிலும் சீதகாலங்களில் ஜலத்திற்குள்ளும் இருந்து தவம் செய்கின்றார்கள். சிலர், யோகபலத்தினால் நாபியிலிருக்கும் குண்டலி சக்தியைக் கிளப்பி, யோகாக்கினியை உண்டாக்கி எழுபத்தீராயிரம் நாடிகளிலும் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் பிராணவாயுவை நிறுத்தி மறுபடியும் நாபியில் பதினேழுசித்துக்களையும் பந்தித்துப்பிந்துவை பிரம்மரந்திரத்தில் கொண்டுபோய் நிறுத்திக் குறி சிதராமலிருந்து அந்தரங்கத்தில் ஆபோஜ்யோதியை பிரகாசிக்கச் செய்து பிந்துவில் பிரணவத்தைச் சேர்த்துச் சிதாகாசத்துடன் கலந்து ஆனந்தத்தை அடைந்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட மஹா யோகிகளுக்கும் இந்த மகத்தாகிய மஹா தரிசனத்தைப் பிரசாதிக்கமாட்டாயல்லவா? பரமேஸ்வரா! இச்சா மாத்திரத்தினால் சகல பிரபஞ்சங்களையும் ஸ்ருஷ்டித்து ரக்ஷித்து சிட்சித்துக் கொண்டிருக்கப்பட்டவர் நீரல்லவோ! உமது மஹா மஹிமை உமக்குத் தவிர மற்றெவர்களுக்கும் தெரியவரமாட்டாதல்லவா? நீர் புருஷோத்தமன்; புராணபுருஷன்; பரமபவித்திரன்; விமல சரித்திரன்; பத்ம நேத்திரன்; அவாங்மானஸ கோசரன்; அகிலபாப விமோசகன்; நிர்மலன்; நித்திய கல்யாணன்; சத்யசந்தன்; சர்வவியாபகன்; சச்சிதானந்தன். உமது மஹா மஹிமையை வர்ணிக்க யார் சக்தியுடையவர்கள்? இருதய கமலத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கப்

பட்டவன் நீரல்லவா? உமது பாதத்தில் உண்டாகிய கங்கை மூன்று உலகங்களையும் பவித்திரம் செய்கின்றது. அப்படிப்பட்ட கங்கைக்குத் தாய்வீடாயிருக்கும் உமது பாதங்களைத் தரிசித்தமாத்திரத்தில் மறுபடியும் ஜனனமரணங்கள் உண்டாகுமா? எந்தப்புண்ய பிரபாவத்தினால் உமது சௌந்தரிய தேஜோவிலாச நித்தியானந்த சொரூபத்தை என் கண்களால் தரிசிக்கும் பாக்கியம் இன்று லபித்ததோ அதை அறியாமலிருக்கின்றேன். பரமேஸ்வரா! பரம புருஷா! பரந்தாமா! உமது கல்யாண குணங்களை வர்ணிப்பதற்கு என்னால் முடியுமோ? பிரதியுகங்களிலும் நீர் தருமத்தைப் பரிபாலஞ்செய்து துஷ்டர்களைச் சிட்சித்து சஜ்ஜனங்களை ரக்ஷிப்பதற்காக பிரம்மானந்தகரமாகிய அவதாரங்களை எடுத்துப் பரம ஆச்சரியகரமாகிய விநோதங்களைச் செய்துகொண்டு வருகின்றீர். நீர் சர்வ வியாபகன்; சர்வ பூதங்களுக்கும் சாக்ஷியாயிருக்கப்பட்டவன்; சர்வ சக்தன்; ஆதி மத்யாந்த ரஹிதன்; அப்ரமேயன்; அநாத ரக்ஷகன்; அகண்டசொரூபன் இப்படிப்பட்ட புராதன புருஷனை இன்று நேத்திரோச்சவமாய்ச் சேவித்ததனால் என்ஜன்மம் கிருதார்த்தமாயிற்று. என் சஞ்சித கருமங்களெல்லாம் நிர்மூலமாயின; சர்வ துக்கங்களும் நிவர்த்தியாயிற்று'' என்று வெகு விதங்களாய்த் துதித்தனள்.

அப்போது பகவான் ஜிஜ்ஜாபீபியைப் பார்த்து, ''அம்மா! இந்தச்சிறுவன் சாமான்னியனல்லன் என்னை அரை நிமிஷமாகிலும் விடாமல் விசேஷபக்திசெய்துகொண்டு சர்வதா ஸ்மரித்துக்கொண்டு நிச்சல இருதயமுடையவனாய் ஜனனமரணமென்னும் பந்தம் இல்லாதவனாய்ச் சின்மாத்திரனாயிருந்து, சதானந்த கைவல்ய சாம்பிராஜ்ஜிய பதவியில்சொக்கியிருக்கும் முனிபுங்கவனென்று தெரிந்துகொள்ளக்கடவாய். இவனால் நடக்கவேண்டிய

163980

விஷயங்கள் அநேகமிருக்கின்றன. இவன் மஹானுபாவன் என்னும் விஷயம் உனக்குச் சம்சயமாயிருந்தால் நீ உன் கோபத்தினால் அடித்த இரண்டு அடிகளும் இவன் முதுகில் இருக்கின்றதா? என் முதுகில் இருக்கின்றதா பார்'' என்று தன் முதுகைக் காட்டினார். அப்போது ஜிஜ்ஜாபீபி புருஷோத்தமனது முதுகிலிருக்கும் இரண்டு அடிகளால் உண்டாகிய ரத்தத் தழும்புகளைப் பார்த்துப் பயந்து நடுநடுங்கி நாவரண்டு பெருமூச்சுவிட்டு "ஹா! பரமேஸ்வரா! நான் எவ்வளவு கடின இருதயமுடையவள்; விவேகமில்லாமல் இப்படிப்பட்ட துஷ்காரியத்தில் ஈடுபட்டேன்; மன்னிக்கத் தகாத பெறுத்த குற்றம் செய்தேன். சகல லோகத்திற்கும் நாயகனாயிருக்கும் உம்மை அடித்து மகத்தாகிய பாபத்தைத் தேடிக்கொண்டேன். இனி என் ஜன்மம் ஏன்'' என்று தலையைக்கல்லில் இடித்துக்கொண்டு மரணத்திற்குச் சமானமான மூர்ச்சையாய்க் கீழேவிழுந்தனள். உடனே பக்தவச்சலனான பகவான் தமது அஸ்தத்தினால் அவளைத் தழுவிக்கொடுத்து மூர்ச்சையைத் தெளிவித்து உட்காரும்படிச் செய்து "அம்மா! ஏன் இவ்வளவு வியசனப் படுகின்றாய்? நீ மிகவும் பரம பக்தியுடையவளென்றேயல்லவா இவனை உன்வசம் ஒப்புவித்தேன். இவன்மீது எனக்கிருக்கும் பிரீதியை உனக்குத் தெரிவிப்பதற்காக என்முதுகை உனக்குக் காட்டினேனேயொழிய, நீ செய்த குற்றத்தினாலல்ல. இதற்காக நீ வருத்தமடையவேண்டாம். நீயும் உன்புருஷனும் இவன்மீது அதிகபிரீதி வைத்து நானே இவனென்று எண்ணி இவனிஷ்டம்போல் நடப்பீர்களாகில் கடைசியில் நீங்களிருவரும் என்னையடைந்து நித்தியானந்த பதவியை அடைவீர்கள்'' என்று சொல்லிமுடித்துக் கபீரைப் பார்த்து "மஹாத்மா! உன் மனதைச் சோதிப்பதற்காக முதல் பிராமண ரூபமாயும்

மறுபடியும் பகீர் ரூபமாயும் காணப்பட்டு உன்னைக் கஷ்டப் படுத்தினேன். உன் தாயால் அடிப்பித்தேனென்னும் கவலையினால் என்னைத் தூஷிக்காதே'' என்று பலவிதங்களாய்க் கேட்டுக்கொள்ளத் தொடங்கினார். அதற்குக் கபீர் பகவானை அதிக பக்தியுடன் பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்து இருகைகளையும் குவித்து அஞ்சலி அஸ்தராய் நின்று:—

"பரமேஸ்வரா! பிரம ருத்திராதி தேவதைகள் சகிதம் உன்மாயையை அறியாமல் தத்தளித்துக்கொண்டிருக்க நான் எவ்வளவுமாத்திரன்! பிகாரி பகீர் வேஷம் தரித்து என்னுடன் வீண்வாதங்கள் பேசி, இல்லாத தோஷங்களை எல்லாம் என் தாயினிடம் சொல்லி, அவளுக்குக் கோபம் உண்டாகச்செய்து, அவள்கையில் பிரம்பைக்கொடுத்து என்னை அடிப்பித்து, அந்த அடியை மறுபடியும் நீரேவாங்கிக்கொண்டு தபோதனர்களுக்குக்கூட லபிக்காத இந்தத் திவ்வியமங்கள விக்கிரக சேவையை நேத்திரோச்சவமாய் எங்களுக்குப் பிரசாதித்தீர். உமது தயாரசம் என்னவென்று புகழ்வேன்? என் சம்சயங்களை நிவர்த்தி செய்து என் அவிவேகத்தைப் போக்கடித்து என்னைத் தன்னியனாய்ச் செய்வதற்காகவே யல்லவா இப்படிப்பட்ட விநோதமான காரியங்களைச் செய்வித்தீர்! ஆஹா! நீர் இந்த பகீர் வேஷத்தைத் தரித்துக்கொண்டு வருவதை அறியாமற் போனேனல்லவா? சகுணோபாசனை (விக்கிரக ஆராதனை) செய்தாலேயன்றி சித்த சுத்தி உண்டாகாதென்றும், சித்த சுத்தியில்லாமல் நிர்க்குணோபாசனை யுண்டாக மாட்டாதென்றும் உபதேசிப்பதற்காகவே முதல் பிராமண ரூபமாயும் பிறகு பகீர் ரூபமாயும் வந்து தரிசினம் கொடுத்தீர். இந்த மர்மத்தை அறியாமல் உம்மைச் சாமன்னியமனுஷ்யனென்று எண்ணி ரோஷத்தினால் விசேஷமாய்த் தூஷித்-

தேன். என் அவிவேகத்தை என்னவென்று சொல்வேன்! அஞ்ஞானத்தினால் உமது விஷயத்தில் நான்செய்த அபராதத்தை க்ஷமித்து என்னை ரக்ஷிக்கவேண்டும். அகண்ட சச்சிதாநந்த மூர்த்தியாயும். ஆனந்த மயமாயும் இருக்கும் நீர் தரித்திரனைப்போலிருந்து என்னைப் பிரபுவென்று பூஷித்து இந்தத் துண்டு வஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டு போவதைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது. பரமேஸ்வரனான உம்மைப் பாமரத்துவத்தினால் தெரிந்துகொள்ளாமல் இந்த அல்ப விஷயத்திற்காக உமக்கு மிகவும் அவமானத்தை உண்டாக்கிக் கடைசியில் கோரநரகத்திற்குப் பாத்திரனானேன். சகல பாபங்களையும் போக்கடிக்கத்தக்க உமது நாம ஸ்மரணைத்தவிர வேறு சரணம் எனக்கில்லை. நீர் தீனபந்து ஆதலால், இந்தத் தீனனிடத்தில் பரிபூரண தயாரசத்தை பிரசாதித்து என் குற்றங்களையெல்லாம் மன்னித்து உமது நாமஸ்மறணை மறவாமலிருக்க வரம் அனுக்கிரஹிக்க வேண்டும். அச்சுதனாய் ஆனந்த மயமாய் அப்பிரமேயனாய் ஆதியந்தரஹிதனாய் அனாதரக்ஷகனாய் ஆபத்பாந்தவனாய் தசரதனாய்த் தயாசிந்துவாய் சீதா மநக்கமல மித்திரனாய்ப் பரம பவித்திரனாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் உன் அனந்தநாமங்களை ஜபித்துக்கொண்டிருப்பேன். என்னைக் கிருதார்த்தனாய் செய்யக்கடவாய் பக்தவச்சலா!'' என்று இவ்வாறு வெகு விதங்களாய்ப் பிரார்த்தித்துப் பரமானந்தனாயிருந்து ஆனந்தக்கண்ணீரை பிரவாகரித்து நின்றுகொண்டிருந்தார்.

அப்போது பகவான் கபீரைப்பார்த்து "பக்தசிகாமணி! உன்னிஷ்டம்போல் உன்னை எப்பொழுதும் நிழல்போல் காத்துக்கொண்டிருப்பேன். ஆனால் நீ எப்பொழுதும் என் நாமஸ்மரணஞ்செய்து பிரம்மானந்தத்தில் சொக்கியிருக்கக்கடவாய்'' என்றுசொல்லினர். அதற்குக்

கபீர் பகவானை நமஸ்கரித்து "தேவா உம்மைக் கனவிலும் மறப்பேனா? உம்மை மறந்த பிறகு ஜீவனும் வைத்திருப்பேனா? உமது திவ்விய நாம மந்திரத்தை இருதயத்தில் நிறுத்தி ஸ்மரிக்காமல் ஒரு நிமிஷமாகிலும் ஏமாந்திருப்பேனா? என்மீது உமது கிருபாகடாக்ஷம் ஒருவேளைத் தவறினால் என்னமோ சொல்லேன். உமது கிருபை இருக்கும் வரையில் தவறேனென்பதற்குச் சந்தேகமில்லை" என்று சொல்லிக்கொண்டனர். பரமேஸ்வரா! "சகுணாராதன ரூபமான தியானம் உத்தமமா? அல்லது நிர்க்குணாராதன ரூபமான ஞானம் உத்தமமா? இவைகளில் எதை அனுஷ்டித்தால் புருஷர்கள் கடைத்தேருவார்களோ அந்தச்சம்சயத்தை நிவர்த்திசெய்வித்து என்னைக் கிருதார்த்தனாய்ச் செய்யவேண்டுமென்று" பிரார்த்தித்தனர்.

அதைக்கேட்ட புருஷோத்தமன் கபீரைப்பார்த்து "நாயனா! நீ இப்போது கேட்ட கேள்வி பரமோத்கிருஷ்டமானதே! சுருதி ஸ்மிருதி புராணங்களில் கர்மம், பக்தி, ஞானமார்க்கங்கள் இம்மூன்றும் கிரமக்கிரமாய் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றொன்றும் மனம் பரிபக்குவமடைவதற்கு அந்தந்த மனிதர்களுக்குத் தக்கபடி சொல்லப் பட்டிருக்கின்றது. அஞ்ஞானத்தில்பூர்த்தியாய் முழுகியிருக்கப்பட்டவர்களுக்கு, தேகமே தானென்றும் திருசிய பிரபஞ்சமெல்லாம் நித்தியமென்றும் தோன்றுவது சகஜமாதலால், அப்படிப்பட்டவர்கள் அவசியமாய் மனச் சுத்திக்காக சத்கர்மங்களில் இச்சைவைத்து நடக்கவேண்டும். அவர்களைவிட கொஞ்சம் அதிக அறிவையுடையவர்கள், ஜீவனே தானென்றும் திருசிய பிரபஞ்சமெல்லாம் காலக்கிரமத்தில் வேறுரூபமாய் மாறுவதனால் அது அநித்தியமென்றும் தெரிந்துகொள்வார்கள். அப்படிப்பட்டவர்கள் சித்த சுத்திக்காக சத்குண விசிஷ்டர்களாய்ப் பக்திமார்க பிரவிஷ்டர்களாயிருக்கவேண்டும். சுத்த ஞான சம்பன்னர்களாயிருக்கப்பட்டவர்கள், ஸ்திர விசாரணையினால் பிரம்மமே தானென்றும் திருசிய பிரபஞ்சமெல்லாம் மித்தை என்றும் அறிந்து பரமாத்மாவுடன் கலந்து பரவசமடைந்து மௌனநிஷ்டையை அவலம்பித்து, நீ நான் என்னும் துவைத பேதம்நீங்கி, துரிய திருஷ்டியில் நிர்மலமாய் நின்றிருக்கவேண்டும். மௌன நிலையை அடைந்தவர்கள் நிர்மலமான அகண்டஞான சம்பத்தால் நிராகார பரப்பிரம்மமாகிய என்னை அறிந்து கேவல தியானரூபமாகிய பக்தி செய்துகொண்டு ஐந்தாவது பதவியாகிய கைவல்யத்தில் இச்சையுண்டாய் ஜீவன்முக்திதசையை அடைந்து கடைசியில் விதேகமுக்தியை அடைகின்றார்கள். நிர்மலமாகிய கர்ம மார்க்கத்திலும் உத்தமமாகிய பக்தி மார்க்கத்திலும் சத்தியமாயிருந்து என்னைச் சந்தோஷிக்கச் செய்பவர்கள், சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுஜ்ய பதவிகளை அடைவார்கள். சிலருக்குப் பக்திமார்க்கம் சுலபமாயிருக்கும். சிலருக்குக் கர்ம மார்க்கம் சுலபமாயிருக்கும் கர்மத்தை அனுஷ்டிக்காவிட்டால் பக்தி உண்டாகமாட்டா. பக்தியில்லாவிட்டால் ஞானம் சித்திக்கமாட்டாது, ஞானம் சித்திக்காவிட்டால் முக்தியில்லை. பிரம்மஞானம் சாதாரணமாய் மனிதர்களுக்கெல்லாம் உண்டாகத்தக்கதல்ல. அது, அனேக ஜன்மங்களாய் என்னை அத்தியந்தபக்தியுடன் ஆராதித்த ஒருவனுக்கே லபிதமாகுமேயொழிய இதரர்களுக்கு லபிதமாகமாட்டாது. ஆனந்தத்தைத் தரத்தக்க மௌனநிஷ்டை எல்லோருக்கும்லபிப்பது மிகவும்துர்லபம். "ஜ்ஞாநி த்ரைலோக்ய துர்லப" என்னும் வாக்கியம் கேட்டிருக்கின்றாயல்லவா? கர்மம் பிஞ்சைப்போன்றது; பக்தி காயைப்போன்றது; ஞானம் பழத்தைப்போன்றது. முதல் சத்

கர்மங்களினல் சந்தோஷிக்கச்செய்து அதனல் என் அனுக்கிரகம்பெற்று அதி சூக்ஷமமாயிருக்கும் என்னை ஞான [illegible]ரங்களினல் அறிந்து சமுசயங்களையெல்லாம் [illegible]ண்டு நிர்க்குணோ பாசனைசெய்து சத்திய [illegible] சொரூபனைச் சர்வமும் மறந்து தேசகால பேதங்க[illegible] ஆரூட ஞானசம்பத்தை அடையவேண்டும். [illegible] பிரபஞ்சங்களின் மீதுள்ள இச்சையை ஒழி[illegible]ம் சுட்கவேதாந்தங்கள் சிலவற்றைக் கற்றுக் கொண்டு தாமே பிரம்மமென்று அஹங்கரித்து ஞான யோகத்தில் தமக்குப் பூரண பாண்டித்தியம் உண்டாயிருப்பதுபோல் நடித்துக்காட்டிக் கர்மயோக பக்தியோகங்களை நிராகரித்துக் கடைசியில் உபய பிரஷ்டனைய் அனேக தடவைகளில் பிறந்துகொண்டும் இறந்துகொண்டும் துரவஸ்தைகளை அனுபவித்துக்கொண் டிருக்கும் மூடர்களுக்கு, அனேக கற்பாந்தம் கடந்தபோதிலும், என் அனுக்கிரஹம் திருணமாத்திரமாகிலும் உண்டாகமாட்டாது. கர்மயோக பக்தியோக ஞானயோகங்களில் எதில் பிரவேசித்தாலும் பூததயை எல்லோருக்கும் இருக்கவேண்டும். அஹிம்சையைவிட பரமோத்தமமான தர்மம் வேறென்றில்லை. சர்வ பூதங்களையும் தன்னைப்போல் எண்ணப்பட்டவனைவிட உத்தமன் மற்றொருவனில்லை. சர்வபூதங்களையும் சமதரிசனமாய்ப் பார்ப்பதனல் உண்டாகும் பலனைவிட விசேஷ லாபம் மற்ற எதனலும் உண்டாகமாட்டாது. பரஸ்திரீகளைத் தனது தாயைப்போலும், பர திரவியத்தை ஓட்டைப்போலும், சர்வபூதங்களைத் தன்னைப்போலும் யார் அறிகின்றார்களோ, அவர்கள் என்னை அந்தர்முகத்தில் நிர்க்குணமாயும், பஹிர்முகத்தில் சகுணமாயும் தரிசிப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நானும் கர்மநேத்திரங்களுக்குச் சாகாரமாகவும், ஞானநேத்திரங்களுக்கு நிராகார

மாகவும் தரிசனம்தந்து அவர்களை ஆநந்தக்கடலில் மிதக்கும்படிச் செய்விப்பேன். ஞானமில்லாதவர்களாயிருந்தாலும் என்னை நம்பி எப்பொழுதும் பக்தி செய்துவந்தால் அவர்களுக்குச் சகல சாம்ராஜ்ஜியங்களையும் பிரசாதிப்பேன். இப்படிப்பட்ட பக்தர்களிடம் நான் எப்பொழுதும் வசித்துக்கொண் டிருப்பேன். பக்தியினல் என்னை அனுஷ்டித்து வந்தால் குழந்தைகளைத் தாய் ரக்ஷிப்பதுபோல் நான் அவர்களை ரக்ஷிப்பேன். சகல போக ப[illegible]ங்களையும் விட்டு யோக மார்க்கத்தினல் என்னைச் சதா தியானிக்கப்பட்டவனைப் பிரத்தியக்ஷ பரோக்ஷங்களைச் சரியாய்ப் பரீக்ஷித்து எனக்குச் சம்மதமாயிருந்தால் அவர்களிடம் மிகவும் சிநேகமா யிருப்பேன். ஞானம் அடைந்தவர்களை எனக்குச் சமானமானவராய் நினைத்து அவர்களை ஆதரிப்பேன். மோக்ஷ ஐக்கியபரர்களாகிய முமுக்ஷுக்களுக்குப் பக்திமார்க்கம் பாலியமென்றும், யோகமார்க்கம் யௌவனமென்றும், ஞானமார்க்கம் கிழத்தனமென்றும் சொல்லப்படும். பால்யாவஸ்தையிலும் கிழத்தனத்திலும் அஹங்கார மமகாரங்கள் அடங்கியிருப்பதுபோல், பக்தி ஞானங்களை அனுஷ்டித்து வரப்பட்டவர்களுக்கு அஹங்கார மமகாரங்கள் முதலாகிய விகாரங்கள் பூர்த்தியாய் அடங்கிவிடும். யௌவனத்தில் அஹங்காரம் தலைகாட்டுவது சகஜமா யிருப்பதுபோல் விரக்தியடைந்து யோகசாதனஞ் செய்துகொண்டு வரப்பட்டவர்களின் இருதயத்தில் அஹங்காரம் தலைகாட்டிக்கொண் டிருக்கும். ஆதலால், அப்படிப்பட்டவர்களை நான் அவசியமாய்ப் பரீக்ஷை செய்யவேண்டும்.

பக்தர்கள் எப்பொழுதும் பரமபக்தியுடன் எல்லாவற்றிற்கும் பகவான் இருக்கின்றார் அவரைவிட மற்றொருவன் கதியில்லை என்று நிச்சயித்துக்கொண்டு அஹங்கார

மமகாரங்களை நிவர்த்திசெய்து திரிகரண (மனம் வாக்கு காயம் மூன்றும்) சுத்தியாய் என்னிடத்தில் விசுவாசம் வைத்து என் நாம ஸ்மரணம் செய்துகொண்டு எந்த விகாரங்களும் இல்லாமலிருப்பார்கள். ஞானிகள் பிராரப்த வசத்தினாலுண்டாகிய தேகத்திற்குச் சம்பவிக்கும் சுகதுக்கங்களில் சமபாவமுண்டாய் கர்மானுசாரமாய் எல்லாம் நடக்கின்றதென்று நிச்சயித்துக்கொண்டு மௌன சாதனத்தினால் அஹங்கார மமகாரங்களை அடக்கி நிரஹங்காரமாய் நிர்மலமாய் நிரவயவமாய் நித்தியமாயிருக்கும் பதார்த்தத்தில் மனதை லயிக்கச்செய்து பரமானந்தத்தை அனுபவிப்பார்கள். பக்தர்களுக்கு ராகத்துவேஷங்கள் முக்கியமாய் இருக்கலாகாது. அவர்களுக்குத் திடவைராக்கியம் வேண்டும். முக்தர்களுக்கு முக்கியமாய் மௌனமுத்திரை இருக்கவேண்டும். சிரத்தையில்லாத பக்தியும், விரக்தி அடையாத யோகமும், சாந்தவிருத்தியில்லாத ஞானமும் நிஷ்பிரயோஜனமாகும். அஹங்காரம் மமகாரம் ஜீவஹிம்ஸை இம்மூன்றில் ஒவ்வொன்றும், சர்வ தர்மங்களையும் நிர்மூலம் செய்விக்கும். இம் மூன்று குணங்கள் இல்லாமலிருந்தால் அவர்களின் பெருமையைச் சொல்லவும்வேண்டுமோ? தர்மங்களை நிர்மூலம் கெய்யும் இம்மூன்று குணங்களையும் விசர்ஜித்தால் (நீக்கிவிட்டால்) சகல சுபங்களும் உண்டாகும். ஆதலால், முதலில் இம்மூன்று குணங்களையும் விட்டு கர்மம், பக்தி, ஞானம் இவைகளை ஒவ்வொன்றாய் அனுஷ்டித்துவரவேண்டும். நீ பாலியதசையிலிருப்பதால் ஞான மார்க்கத்தில் பிரவேசித்து நிர்க்குணோபாசனைசெய்ய சக்தி போதாமலிருக்கின்றது. நீ இப்போது பக்திமார்க்கம் ஒன்றையே அனுஷ்டித்து வரவேண்டும். பக்திமார்க்கம் உனக்கு திடப்பட்டால் சீக்கிரமாய் நித்தியானந்த சுகத்தை அனுப

விப்பாய். ஆதலால், நீ இப்போது சகல சாஸ்திரங்களையும் வாசித்து சற்குணனையும் சதாசார சம்பன்னனையும் சத்திய சாந்தனையும் இருக்கப்பட்ட ஓர் ஆசாரியனை அடுத்து அவர் மூலமாய் யதார்த்த அந்தரார்த்தத்தைத் தெரிந்துகொள்'' என்று சொல்லிவிட்டு அந்தர்த்யானமாயினர்.

பகவான் அந்தர்த்யானமானவுடன் கன்றை யிழந்த பசுவைப்போலும், புருஷனைப்பிரிந்த ஸ்திரீயைப்போலும், குழந்தையைப் பிரிந்த தாயைப்போலும், விஷ்ணுவைப் பிரிந்த கபீர் மிகவும் துக்கித்து பின்வருமாறு சொல்லத் தொடங்கினர். ''ஹே! பரமேஸ்வரா! பரந்தாமா! மித்தியா சொரூபத்தை விசிதமாய்த் தெரிவிக்காமல் என்னைமோசஞ் செய்து சென்றுவிட்டீரல்லவா? இனி என்கதியை விசாரிக்கப் பட்டவர்கள் யார்? என் சம்சயங்களைத் தீர்த்து என்னை ஆதரிக்கத்தக்க ஆசாரியரை எங்குச் சம்பாதிப்பேன்? நீரே பிரத்தியக்ஷமாய்வந்து கடைத்தேறும் மார்க்கத்தை உபதேசிக்காமல் வேறே ஆசாரியரை ஆசிரயிக்கும்படி உபதேசித்துச் சென்றுவிட்டதைப் பார்த்தால் என் மீது உமக்கு அனுக்கிரகம் இல்லைபோல் நிச்சயமாய்த் தெரியவருகின்றது. உம்மைவிட வேறு என்னை ரக்ஷிக்கப் பட்டவர்கள் யார்? உமது அனுக்கிரகம் இவ்வாறிருந்தால் நானென்ன செய்வேன்? பரம தயாநிதியாகிய உமது பாத கமலங்களை ஆசிரயித்து உமது சந்நிதானத்தில் உபதேசம் பெறாமல், மானவர்களை ஆசிரயித்து எவ்வாறு உபதேசம் பெறுவேன்? பரமபுருஷா! பரந்தாமா! பராத்பரா! பரம பாவனா! புராணபுருஷா! புருஷோத்தமா! புண்டரீக நயனா! புஜகேந்திர சயனா! தாரகநாமா! தானவபீமா! ராவணமர்த்தனா! ரகுவம்ச வர்த்தனா! ஜானகீநாதா! ஜலதர ஸ்யாமா! ஜகதபிராமா! பூர்ணேந்துவதனா! முனி மநஸ்

ஸதநா! நிகமாந்தவேத்தியா! பவரோக வைத்தியா! சர்வ காருண்ணியா! சரஸிஜ ஹஸ்தா! ஜகத்பிரசித்தா! புதஜநரஞ்ஜநா! துரித விபஞ்சநா! தேவ தேவோத்தமா! தேவதா ஸார்வபௌமா! அடியேன்மீது இவ்வளவு நிர்தாக்ஷிண்ணியமாய் இருப்பது தருமமல்ல. அடியேன் வார்த்தையை அங்கீகரித்து சம்சார சமுத்திரத்தைக் கடந்து மோக்ஷமென்னும் வீட்டை அடையத்தக்க உபதேசங்களை உபதேசித்து என்னைக் கிருதார்த்தனாகச் செய்து ரக்ஷிக்கவேண்டும்'' என்று பலவிதங்களாய்ப் பிரார்த்தித்து இருகண்களிலும் ஜலம் தாரைதாரையாயோட அழுது நின்றிருந்தார்.

அப்போது ஜிஜ்ஜாபீபி பகவானை மிகவும் துதிசெய்து கபீர் கண்களைத் துடைத்து ஆலிங்கனம்செய்து "குமாரா! உன் மஹா மஹிமையை அறியாமல் உன்னைச் சாமான்னியனாய் எண்ணிக் கடினசிக்ஷை செய்தேனல்லவா! அந்தோ! நான் எவ்வளவு புத்தியில்லாதவள். பரமசாதுவாகிய உன்னைத் துர் அஹங்காரத்தினால் அடித்தேன்; அந்த அடியைப் பட்டுக்கொண்டு "ஹரே ராம் ஹரே ராம்'' என்று சொன்னவுடனே எனக்கு மிகவும் துக்கம் உண்டாய் என் குடல் பற்றி எரிந்தது. உன் கோரமாகிய பாதையை சகிக்காமல் உன்னைத்தழுவ வந்தேன். எனக்கு முன்னமே பகவான் வந்து உன்னைத் தழுவிக்கொண்டு நின்றார். ஹே! புண்ணியபுருஷா! உன் மஹிமையினாலல்லவோ தேவர்களும் காணத்தகாத பகவானது தரிசனம் இன்று கிடைத்து, நேத்திரோச்சவமடைந்து பிரம்மானந்தத்தில் சொக்கிகின்றேன். பகவானை யுன்னைப் புத்திரனாகப் பெறுவதற்கு முன் ஜன்மாந்திரங்களில் எப்படிப்பட்ட தவங்களைச்செய்து வந்தோமோ அவை தெரியவில்லை. என் ஜன்மம் கிருதார்த்த மடையும்படிச் செய்வித்தாய்''

என்று அனேக விதங்களாய்த் துதிசெய்து மிகவும் சந்தோஷத்துடன் குமாரனைத் தழுவிக்கொண்டே கிருகத்திற்குச்சென்று, நடந்த விருத்தாந்தங்களை எல்லாம் தன் பர்த்தாவுடன் சொல்லி மிகவும் ஆச்சரியப்படத் தொடங்கினாள்.

தமால் இந்தச் சங்கதிகளைக் கேட்டவுடன் அற்புத பரமானந்த பரவசனாய்க் குமாரனையும் மனைவியையும் ஆலிங்கனஞ்செய்து "ஹே! உங்கள் பாக்கியமே பாக்கியம்: உங்கள் ஜன்மமே ஜன்மம். பிரம ருத்ரேந்திராதிகளுக்கும் கிடைப்பதற்கரிதாகிய சேவையை இன்று நீங்கள் கிடைக்கப் பெற்றீர்களல்லவா! ஹே! நாயகீ ரத்னமே! உனது புண்ணியமே புண்ணியம். நீ நோற்றநோன்பே நோன்பு. நல்ல அதிஷ்டமுடையவளாதலால், பகவானுடைய தரிசனம் உனக்குக் கிடைத்தது நான் மிகவும் துரதிருஷ்டன். ஆதலால், உன் கூடவர புத்தி பிறக்காமற் போயிற்று. உனக்கு உண்டாகிய சௌபாக்கிய மென்ன? எனக்கு உண்டாகிய துர்ப்பாக்கியமென்ன? நீ செய்த வுபகாரமென்ன? நான் செய்த அபகாரமென்ன? உன்னிடத்திலுள்ள சதாசாரமென்ன? என்னிடத்திலுள்ள துராசாரமென்ன? உன்மீது அனுக்கிரஹம் வைத்துத் தரிசனந்தந்த முகுந்தன் எனக்கேன் தரிசனம் தராமற்போனாரோ அஃது அறியாமலிருக்கின்றேன்'' என்று சொல்லி முடித்துக் கபீரைப் பார்த்து "உன் தாய்க்கு மாத்திரம் பகவானது தரிசனம் லபிக்கும்படிச் செய்வித்தாயேயொழிய எனக்கு லபிக்கும்படிச் செய்விக்காமற் போனாயல்லவா? மற்றொரு முறை வரும்படி நீ வேண்டிக்கொண்டால் வாராரா! தாயைத் தன்னியளாய்ச்செய்து தந்தையை உபேக்ஷிப்பது தர்மமல்ல. உன் மஹாமஹிமை பகவானுக்குத் தவிர எங்களைப் போன்றவர்களுக்கு என்ன தெரியப் போகின்றது? இப்

படிப்பட்ட மஹாமஹிமை உன்னிடத்தில் இருப்பதனால் தான், அன்றுவந்த காஜி முதலாகிய பெருத்த பண்டிதர்களையெல்லாம் அவமானஞ் செய்துவைத்தாய். அப்போது நீ இப்பட்டவனென்று யாங்கள் தெரிந்துக்கொள்ளாத அவிவேகத்தினால் முறைகடந்து நடந்தாயென்று எண்ணி உன்னைத் தண்டனை செய்தோம். உன் நிலைமை இப்படிப் பட்டதென்று இன்றல்லவோ தெரியவந்தது? உன் மூலமாய் நம் வம்சத்தாரெல்லோரும் பவித்திரரானார்கள். பூர்வ ஜன்மாந்திரங்களில் நாங்கள் என்ன புண்ணியம் செய்தோமோ தெரியவில்லை. அந்தப் புண்ணிய வசத்தினால் இந்தச் ஜன்மத்தில் தயாரசனான பகவான் உன்னை எங்களுக்குப் புத்திரனாய் அவதரிக்கும்படி அனுக்கிரகம் செய்திருக்கின்றார். எங்கள் பாக்கியத்திற்குச் சமானமான பாக்கியம் உடையவர்கள் மற்றொருவரு மிரார்" என்று தனக்கு உண்டாகிய சந்தோஷத்தினால் சொல்லி முடித்து "பரமேஸ்வரா! உன்னைத் தீனதயாளனென்றும் பக்தவச்சலனென்றும் பெரியோர்கள் புகழ்கின்றார்களல்லவா? இப்படிப்பட்ட மஹா புண்ணிய புருஷனாகிய நீ வஞ்சனை செய்வது தகுதியன்று. என் மனையாளுக்குமாத்திரம் தரிசனந் தந்து என்னை நிராகரிப்பது என்ன காரணமோ தெரியவில்லை! நான் உனக்குச் செய்த அபராதமென்ன? உன் எண்ணம் அவ்வாறிருந்தால் நானென்ன செய்வேன்" என்று அநேகவிதங்களாய்ப் பிரார்த்தித்து அன்றுமுதல் கபீரை சாக்ஷாத் பகவத்சொரூபமாய் நினைத்து குமாரனென்னும் எண்ணத்தை அறவேவிட்டு தமது ஆசாரியராக நினைத்து அவர் சொல்லைப்போல் நடந்து வந்தார்கள்.

கபீர் இராமானந்த சுவாமிகளை ஆசிரயிக்கப்போகுதல்.

ரகசியார்த்தத்தை ஆசாரியர் மூலமாய்த் தெரிந்து கொள்ள வேண்டுமென்று பகவான் ஆஞ்ஞாபித்த விஷயம் கபீருக்கு ஒருநாள் ஞாபகத்திற்கு வந்து தனக்குள் தான் பின்வருமாறு ஆலோசித்துத் துக்கிக்கத் தொடங்கினார்.

"ஆஹா! இவ்வளவு காலத்தை வியர்த்தஞ் செய்துவிட்டேனல்லவா! புருஷன் இல்லாத மனையாளும், வித்தையில்லாத பக்தியும், சுறுசுறுப்பில்லாத புத்தியும், சாரம் அறியாத சிரத்தையும், பூததயையில்லாத தவமும், நிச்சலனமில்லாத ஜபமும், ஆறில்லா ஊரும், பகவானைத் துதிசெய்யாத நாவும், அரசனில்லாத நகரமும், நீதியில்லாத ராஜரீகமும், அறிவில்லாத வித்தையும், பக்தியில்லாத பூஜையும், விரக்தியில்லாத யோகமும், கௌரவமில்லாத ஜீவனமும், விசுவாசமில்லாத சிநேகமும், ஆரோக்கிய மில்லாத தேகமும், தானங்கள் செய்யாத கைகளும், தர்மாத்மாக்களில்லாத க்ஷேத்திரமும், சத்தியமில்லாத சௌசமும், ஜலமில்லாத ஏரியும், பரோபகாரமில்லாத பிரயாசையும், துர்விஷயத்தில் துராசையும், அனியாயமாய்ச்சம்பாதித்த தனமும், சமுத்திரத்திற் பெய்த மழையும், துஷ்டர்கள் செய்யும் சத்கிரியைகளும், பதியை அவமானித்த ஸ்திரீயும், பரஸ்திரீகளின்மீது வெறுப்புமில்லாதகுமாரனும், கோமய (சாண) மில்லாத கிருககிருத்தியங்களும், வாசனையில்லாத மலரும், குரு உபதேசமில்லாத ஜன்மமும் பிரயோஜனமற்றதென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். நானோ குரு உபதேசம அடையாத குணவீனனா யிருக்கின்றேன். குரு உபதேசம் அடையும் வரையில் நான் நிந்திக்கப்பட்டவனே

யல்லவா? ஆசாரியனை ஆசிரயிக்காவிட்டால் சமுசயங்கள் தீராது; சமுசயம் தீராவிட்டால் விஸ்ராந்தி உண்டாக மாட்டாது; விஸ்ராந்தி உண்டாகாவிட்டால் பிரம்மானந்தம் ஜனிக்காது'' என்று பலவிதங்களாய் கபீர் எண்ணித் தனக்கு அனுகூலமான ஆசாரியரைத்தேட ஆரம்பித்தார்.

அப்பொழுது வாரணாசி (காசி) யில் மிகவும் பெரியவரென்று பேர்ப்பெற்றிருந்த இராமானந்தசுவாமிகள் என்பவர் ஒருவர் வாசஞ்செய்துகொண்டிருந்தார். அவருடைய வேதாந்த சாஸ்திர உபந்நியாசங்களைக் கேட்ட யாவரும் தம்முள் நிகழும் சமுசயங்களை நீங்கப்பெற்றார்கள். அவர், அநுபவஞான சம்பன்னனாய் சதா ஆனந்தத்தில் சொக்கி இருப்பவருமாயிருந்தார். அவர், தாரேஷணை, புத்திரேஷணை, தனேஷணை என்னும் ஈஷணாத்திரயங்களையும் நிவர்த்திசெய்து, ஆணவம், மாயை, காம்யம் என்னும் மும்மலங்களும் இல்லாதவராய் அஹங்கார மமகாரங்களைக் கண்டித்து, தேஹாபிமானங்களை விட்டு, ஆசா பிசாசங்களைத் துரத்தி, அஞ்ஞானாந்தகாரத்தைக்கடந்து, இந்திரிய வர்க்கங்களைச் ஜயித்து, அந்தக் கரணங்களின் (மனம் புத்தி சித்தம் அஹங்காரங்களின்) வேகத்தை அடக்கி, மஹாவாக்கியார்த்தத்தை நன்றாய்க்கிரஹித்து, அஹிம்ஸா விரதம் அநுஷ்டித்து, சுகதுக்கங்களின் விகாரங்களை அடையாமல் அகண்ட சச்சிதானந்த நிரதிசயானந்தத்தில் மூழ்கியிருந்தார். அந்த மஹாத்மாவின் சத்விருத்திகளுக்காக அவ்வூரார் எல்லோரும் சந்தோஷித்து அவரை அன்பார்ந்த பக்தியுடன் பூஜித்து வந்தார்கள். இப்படியிருக்க,

ஒருநாள் கபீர் இந்த விஷயங்களையெல்லாம் கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷித்து அவரைத் தரிசித்து வர வேண்டுமென்று ஆசைகொண்டு அங்கிருந்து புறப்பட்டு மெதுவாய் இராமானந்தர் மடத்திற்குச்சென்று சேர்ந்தார்.

அங்கு இராமானந்தர் தரிசனார்த்தமாய் வந்துகொண்டிருக்கும் ஜனங்களையெல்லாம் பார்த்துத் தான் உட்செல்ல சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாமலிருந்தார். அப்போது உள்ளிருக்கும் ஜனங்கள் வெளியில் வந்துகொண்டிருப்பதும், வெளிஜனங்கள் உட்செல்லுவதுமாய் இவ்வாறே ஓயாமல் வருவதும்போவதுமாயிருந்தார்கள். கபீர் இவைகளையெல்லாம் கண்ணுற்று பிறகுச் செல்லலாமென்றெண்ணி வாசற்படி திண்ணையின்மீது உட்கார்ந்திருந்தார். இவ்வாறு பாதிராத்திரி வரையில் உட்கார்ந்திருந்தும் உட்செல்ல சந்தர்ப்பம் கிடைக்காமலே இருந்தது. பிறகு நாளைய அதிகாலையில் வந்து தரிசிப்போமென்று நிச்சயித்துக்கொண்டு வீட்டிற்குச் சென்று போஜனம் அருந்தி நித்திரை செய்யச் சென்றார். அப்படிச் சென்றும், பொழுது எங்கு விடிகின்றதோ என்னும் கவலையினால் நித்திரை வராமலிருந்தது. இவ்விதமாய் விழித்திருந்து கோழி கொக்கரித்துக் கூவினவுடன் எழுந்து இப்போதே மடத்திற்குச் சென்றால் பக்தர்கள் வருவதற்குள் சுவாமிகளைக் காணலாமென்று எண்ணிக்கொண்டு வீட்டில் யாரிடமும் சொல்லாமல் தான் ஒருவராகவே புறப்பட்டு மடத்திற்குச் சென்றார்.

அப்போது மடத்திலுள்ள பிராமணர்கள் எல்லோரும் மடத்தில் உட்கார்ந்துகொண்டு லோக வர்த்தமானங்களை எல்லாம் பேசிக்கொண் டிருந்தார்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கபீர் மடத்திற்குள் வந்தவுடனே சில பிராமணர்கள் தீபம் கொண்டுபோய் கபீர் முகத்தைப்பார்த்து மடத்திலுள்ள சாமான்களைக் கொண்டுபோக எவனோ துலுக்கப்பையல் மடத்திற்குள் பிரவேசித்துவிட்டானென்றெண்ணி "யாரடா நீ! இந்த அர்த்தராத்திரி வேளையில் இங்கேன் வந்தாய், கையில் அகப்பட்டதை எதாகிலும் எடுத்துக்கொண்டு போவதற்காக வந்தாயாவென்ன? போ

போ! இங்கு நின்றால் உன் பிராணன் போய்விடும்'' என்று அதட்டினார்கள்.

அதைக்கேட்ட கபீர் "சுவாமிகளே! ஏன் கோபங் கொள்ளுகின்றீர்கள்? இன்னும் நான் மடத்திற்குள் காலும் சரியாய் வைக்கவில்லையே; இதற்குள் என்மீது திருட்டுத்தனம் சுமத்துகின்றீர்களே? சற்றே சாந்தப்படுங்கள். சாந்தகுணமே பிரதானமா யிருக்கவேண்டிய வேதாந்திகளாகிய உங்களுக்குக் கோபம் உண்டாவது தகுதியல்ல. விஷயங்களை விசாரித்துத் தெரிந்துகொள்ளாத முன்பே இவ்வளவு ஆத்திரப்படுவதனால் லாபமென்ன? எவ்வளவோ அபேக்ஷையாய்ச் சுவாமிகளைத் தரிசிக்க வந்தவனை மனம் நோகச்செய்து துரத்திவிடுவது பாபமல்லவா? என் வார்த்தையைத் தெரிந்துகொண்டு பிறகு உங்களிஷ்டம்போல் செய்யுங்களென்று'' மிகவும் வினயத்துடன் கேட்டுக்கொண்டனர்.

"அடே! என்னடா உளறுகின்றாய்? சீ! சீ! வெளியே போ. உன் கபடமான பேச்சுகளுக்கு உட்படுபவர்கள் இங்கு யாருமில்லை. உன்னைப் போன்ற நாய்களை இந்த வாசற்படியையாவது மிதிக்கும்படிச் செய்விப்போமென்று எண்ணி யிருக்கின்றாயா! துலுக்கனுக்கு இங்கு என்ன வேலை? மசூதிக்குப் போ. காலையில் எழுந்து உன் முகத்தைப் பார்த்தாலும் பாவம் சித்திக்கும். சாதுக்கள் எல்லோரும் எழுந்திருக்கும் சமயமாயிற்று. எழுந்தவுடன் அவர்கள் உன் முகத்தைப் பார்க்கலாகாது. இனி இங்கே நில்லாதே, நீ நல்ல எண்ணம் உடையவனாயிருந்தால் நாங்கள் சொல்லும்போதே மரியாதையாய் வெளியில் சென்றுவிடு'' என்று நிராகரித்தார்கள்.

அதைக்கேட்ட கபீர் "சுவாமிகளே! வீணாய் என்னையேன் நிந்திக்கின்றீர்கள்? என் முகத்தைப் பார்ப்பதனால்

உங்களுக்கேன் பாவம் சித்திக்கும். பரம பக்தர்களாகிய நீங்கள் பரர்களை (அன்னியர்கள்) உபசரிப்பது யுக்தமல்லவா? சாந்தகுணம் வகித்து இந்த யேழையின் வார்த்தையைச் சற்றுக் கவனிக்கவேண்டும்'' என்று சொல்லினர்.

அதற்கு அந்தப் பிராமணர்கள் "ஜீவஹிம்ஸா பரர்களாகிய துலுக்கர்களுக்குப் பிராமணர்களால் பிரயோஜனம் என்ன யிருக்கின்றது? வீணனுக்கு கீர்த்தன வித்தையும், சஜ்ஜனனுக்கு வீணர் கோஷ்டியும், துஷ்டனுக்கு சிஷ்டாசாரமும், கள்ளனுக்குச் சத்கர்மானுசாரங்களும் கிட்டுமோ? உன் சமத்காரம் இங்குச் சாயமாட்டா? பக்தர்கள் வரும் சமயமாயிற்று, இனி நீ இங்கு நில்லாதே, சென்றுவிடு'' என்று பிராமணர்கள் சொல்லினர்கள்.

அதைக்கேட்டுக் கபீர் "சுவாமிகளே! உங்களுக்கு அனேக வந்தனம் செய்கின்றேன். சற்றுநேரம் என்னை இங்கு நிற்கும்படிச் செய்யவேண்டும். சுவாமிகளைச் சற்று தரிசித்துக்கொண்டு சென்றுவிடுகின்றேன். நான் இவ்விடம் நிற்பதனால் உங்களுக்கு யாதொரு நஷ்டமும் இல்லை. சுவாமிகளை தரிசிக்கவேண்டுமென்னும் எண்ணம் எனக்கு அதிகம் உண்டு. பக்தர்கள் எல்லோரும் வந்த பிறகு சுவாமிகளைத் தரிசிப்பது மிகவும் அரிது. அதற்காகவே இவ்வளவு அதிகாலையில் வந்திருக்கின்றேன். நீங்கள் இதை அறியாமல் நான் எதையோ திருடிக்கொண்டு போகவந்தேனென்று என்மீது பழிசுமத்தி என்னைத் துரத்திவிடப் பார்க்கின்றீர்கள். நான் திருடும்போது கண்களால் பார்த்தவர்கள் இவ்விடம் யாராகிலும் இருக்கின்றார்களா? நீங்கள் பெரியோர்களா யிருந்தும் இப்படிப்பட்ட நிந்தையைக் கூறலாமா? அங்கயீனமும் குலயீனமும் எண்ணலாகாதென்றும், குணத்தை மாத்திரமே கிரகிக்க வேண்டுமென்றும் உங்களைப் போன்ற பெரியோர்கள் சொல்லுகின்றார்

கள். பெரியோர்கள் சொல்வதைச் சிறியோர்கள் கேட்க வேண்டும். அதற்காக நான் ஒன்றும் வருத்தமடைய வில்லை. சுவாமிகளின் சேவைக்காக நேற்றைய காலைமுதல் அர்த்தராத்திரி வரையில் காத்திருந்தும் அவருடைய சேவை கிடைக்காததனால் யாவரும் வருமுன்னமே தரிசிப்பதற்காக இன்று அதிகாலையில் புறப்பட்டு வந்தேன். சுவாமிகளைத் தரிசித்தவுடன் சென்றுவிடுகின்றேன். அது வரையில் ஓர் மூலையில் நிற்பதற்காக அனுக்கிரகம் செய்ய வேண்டும். சுவாமிகளை எனக்குத் தரிசனம் செய்விப்பீர்களாகில், உங்களுக்கு மிகவும் புண்ணிய முண்டாகும்" என்று கபீர் வேண்டிக்கொண்டனர்.

பிராமணர்கள் அவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் மிகவும் அட்டகாசம் செய்து "அடே மூர்க்கா! துடுக்கா! நுனிக்கிளையிலிருக்கும் கனிக்காசைப்பட்டு கைகளை நீட்டிக் கொண்டிருக்கும் ஜானளவு மனிதனுக்கு அது எட்டுமோ? அதுபோல் நீ இராமானந்த சுவாமிகளைத் தரிசிக்க எண்ணி வந்தாய். நீ அவிவேக சிகாமணியாதலால் போகலாமென்றும் போகக்கூடாதென்றும் தாரதம்மிய மறியாமல் வந்திருக்கின்றாய். நீ ஆசைப்படுவது எப்படி யிருக்கின்றதென்னில், முடவன் உச்சியிலிருக்கின்ற கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதுபோலும், தென்னை மரத்திலுள்ள தேங்காயை லகுவாய்க் கையினால் எந்திக்கொள்ள முயல்வதுபோலும் இருக்கின்றது. துச்ச மிலேச்சனாகிய நீ பிரம்ம சொரூபமாகிய சுவாமிகளைத் தரிசிக்க முடியுமோ. இப்ராஹிம் சாயபுக்கும், ஏகாதசிக்கும் சம்பந்தமென்ன? நல்ல குலத்தில் பிறந்தவர்களுக்கே தரிசனம் கிடைக்காமல் அவர்களில் அநேகர் காத்துக்கொண் டிருக்கின்றார்கள்? அப்படியிருக்க நீசனும் துன்மார்க்கனுமான உனக்கு சுவாமிகளின் தரிசனம் எப்படிக் கிடைக்கும்? வீண் பிர

யாசைப்படுவதனால் பிரயோஜனமென்ன? இதை விட்டொழித்து உன் குலாசாரத்துக்குத் தக்கப் பகீரிசனை ஆசிரயித்தால் பலனுண்டு. இனி, இங்கு நில்லாதே, சென்றுவிடு" என்று சொல்லினர்.

பின்னும் கபீர் "சத்புருஷர்களே! பரமபதத்தில் நாராயண மூர்த்தியினிடம் காத்துக்கொண்டிருக்கும் ஜய விஜயர்களைப்போலும், கைலாசத்தில் பரமசிவனிடத்தில் காத்துக்கொண்டிருக்கும் நந்திகேசுவரரைப்போலும் நீங்கள் மாத்திரம் சுவாமிகளை சேவித்துக்கொண்டு காமக் குரோத லோப மோக மத மாச்சரிய மென்னும் தசவர்க்கங்களை (இதன் விபரங்களை ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் காண்க) நீக்கி நிர்மல இருதயராய் நித்தியானந்தத்தை அனுபவித்துக்கொண் டிருக்கின்றீர்கள். நீங்கள் தயைகூர்ந்து சற்றுக் கனிகரம் வைக்கும்பக்ஷத்தில் கிருதார்த்தனாகின்றேன். என் வார்த்தையை அங்கீகரித்து என் மனோரதம் பலிக்கும்படிச் செய்யவேண்டும்" என்று சொல்லி அவர்களின் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்தார்.

அப்போது பிராமணர்கள் துள்ளிவிழுந்து "ஓஹோ ஹோ! என்னடா எங்களைத் தீண்டினாய்? ஐயய்யோ இனிப் பிராயசித்தம் செய்துகொள்ள நேரிட்டதல்லவா! சீ சீ! இனி இங்கிருப்பாயாகில், உனக்குத் தக்கசிக்ஷை செய்வோம். சென்றுவிடு" என்று கோபமாய்ப் பேசி அடிக்கப் போனார்கள்.

அதற்குக் கபீர் புண்ணியாத்மாக்களே! உங்கள் திவ்வியகரத்தால் தக்கசாந்தி செய்வீர்களாகில் என் பாவ கர்மங்களெல்லாம் இப்போதே வெந்து நீறாய்விடும். அவசியமாய் அவ்வாறு செய்யவேண்டும். உங்கள் அஸ்த பரிசத்திற்காக எவ்வளவோ புண்ணியம் செய்திருக்க

வேண்டும்'' என்று மிகவும் சனசுரமாய்ச்சொல்லி தன் முதுகைக் குனிந்து காட்டினர்.

அதைப்பார்த்து கடினசித்தர்களாகிய பிராமணர்கள் "அடே துன்மார்க்கா! பரமசண்டாளா! என்னடா! நீ கற்ற ஜாலவித்தையையெல்லாம் எங்களிடம் காட்டவந்தாயா? சுவாமிகளைப் பார்ப்பதனால் நீ அடையும் லாபமென்ன? அவர் எங்களைப்போன்ற மனிதரே. எங்களைப்போல் அவருக்கும் இரண்டு கால்களும், இரண்டு கைகளும் இருக்கின்றன. இதைவிட விசேஷம் அவரிடம் என்னயிருக்கின்றது? அவரைப் பார்க்கவேண்டுமென்னும் அவா உனக்கேன்? சற்றே தெரியச்சொல் பார்ப்போம். உன் அபிப்பிராயத்தையாகிலும் தெரிந்துகொள்ளலாம்'' என்று கேட்டார்கள்.

இராமானந்தர் சிஷ்யர்கள் கபீரை அடித்துத் துரத்துதல்.

அதற்குக் கபீர் சொல்லுகின்றார், "தர்மாத்மாக்களே இவ்வார்த்தை மிகவும் உத்தமமானது. இப்படிவிசாரித்து என் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டாலல்லவோ இவன் யோக்கியனென்றும் அல்லது அயோக்கியனென்றும் தெரியவரும். இதுவரையில் உங்களுக்குத் துன்பத்தைக் கொடுத்ததற்குக் காரணம் என்னவென்றால், சுவாமிகளை ஆஸ்ரயித்து அவரிடம் உபதேசம் பெறுவதற்கேயன்றி மற்றவைகளுக்கல்ல. நீங்களெல்லோரும் என்னிடத்தில் கடாக்ஷம் வைத்து என் விஷயமாய்ச் சுவாமிகளிடம் சொல்லி எவ்விதத்திலாகிலும் புனிதனைச் செய்விக்க வேண்டும். இப்பரம உபகாரத்தை எனக்குச் செய்வீர்களாகில் உங்களுக்கு மிகவும் புண்ணிய முண்டாகும்'' என்றுசொல்லி மன்றாடிக் கேட்டுக்கொண்டனர்.

அவ்வார்த்தையைப் பிராமணர்கள் கேட்டவுடன் பக்கென்று சிரித்து "ஆஹா! இப்பொழுது நன்றாயிருக்கின்றது! நல்ல விஷயமே கோரிவந்தாய். அடா மூடா! தரித்திரன் ராஜபோகமும், பாபாத்மன் அமுதபானமும், காமி சந்நியாசமும், துர்த்தன் சுவர்க்கச் சுகமும், ஸ்திரீலோலன் மோக்ஷமும், அஹங்காரி ஞானமும், மிலேச்சன் துவி ஜத்துவமும் ஆசைப்படுவதுபோல் இருக்கின்றது. போதும் போதும், வாயைமூடு. கோ இம்சை செய்யப் பட்டவனுக்கு உபதேசமும் ஒன்று வேண்டுமா? மிகவும் புத்திசாலியே! இங்கு நில்லாதே போய்விடு சித்தசுத்தியுடைய வித்துவாம்சர்களும், பரோபகார பரர்களாகிய பரம புண்ணியாத்மாக்களும் பூஜிக்கத்தக்க அரசர்களும், எத்தனையோபேர்கள் அனேக காலமாய் மடத்தின் வாசற்படியில் காத்துக்கொண்டு சுவாமிகளை ஆசிரயித்து உபதேசம்பெற எவ்வளவோ கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாலும் சுவாமிகளின் தரிசனம் அவர்களுக்குக் கிடைப்பது மிகவும் துர்லபமாயிருக்கின்றது. அப்படிப்பட்டவர்களின் கதியே அவ்வாறிருக்கக் கசாயித்தொழில் செய்யும் உனக்குக் கேட்டவுடனே எவ்வாறு உபதேசம் செய்வார். இந்தத் துராசையை விட்டொழி. மெதுவாய் வந்தவழியே செல். இதோ பக்தர்களும் வருகின்றார்கள்; அவர்களை ஏதாகிலும் தீண்டப்போகின்றாய். சீக்கிரமாய்ப் போய்விடு'' என்று சொல்லினர்கள்.

அதற்குக் கபீர் "பக்தர்கள் வந்தால்தானென்ன? நான் ஒரு மூலையாய்நின்று சுவாமிகளைத் தரிசித்துப் போய்விடுகின்றேன்'' என்று தூரமாய் ஒதுங்கியிருந்தார்.

அதைப் பார்த்துப் பிராமணர்கள் "அடே பிரஷ்டா! வெளியில் சென்றால் நாங்கள் சொல்லியும் எங்கள் வார்த்தையை அலக்ஷியம்செய்து பிடிவாதமாயிங்கேயே நிற்கத் தலைப்பட்டாயா? தெரியாமல் உன்னை யாராகிலும் தீண்டினால் மறுபடியும் ஸ்நானஞ்செய்து பிராயச்சித்தம் செய்துகொண்டல்லவோ மறுபடியும் இங்கு வரவேண்டும். 'நல்ல பேச்சுகளால் மாங்காய் உதிருமா' என்னும் வார்த்தை நிஜமாயிற்று. என்னமோ அறிவில்லாத பயலென்றல்லவா போகட்டுமென்று நல்லதனமாகச் சொல்லச் சொல்ல தலைமேல் ஏறுகின்றாய்ப் போலிருக்கின்றது. உன் உடலிலிருக்கும் எலும்பை நொறுங்க அடிக்கும்வரையில் நீயேன் போகப்போகின்றாய்" என்று சொல்லி ஒரு தடியை கபீர் கழுத்தில் குறுக்காய்வைத்து "போ போ" வென்று தள்ள ஆரம்பித்தார்கள்.

அதற்குக் கபீர் மிகவும் மனம் நொந்து "ஐயா! காம பக்தர்களே! எருமைக்கிடாவை அடித்து ஓட்டுவதுபோல், மனிதனை ஓட்ட ஆரம்பித்தீர்கள். ஆஹா! உங்கள் விவேகத்தை என்னவென்று சொல்லலாம்! வந்த பக்தர்களை யாரையாகிலும் தீண்டினேனா? அல்லது வேறு துஷ்ட காரியங்களைச் செய்தேனா? வியர்த்தமாய் என்னை ஏன் தொந்தரவு செய்கின்றீர்கள்? நான் பக்தர்களைத் தீண்டினால் தோஷமென்ன? நான்கூட ஸ்நானம் செய்துவந்தேன். என் மீது ஏன் விருதாவாய்க் கோபங்கொள்ளுகின்றீர்கள்? மடம்என்றால் எல்லோருக்கும் பொதுவேயொழிய உங்களுக்குமாத்திரம் சொந்தமானதல்ல. இதுவரையில உங்களைப் பெரிய பக்திமான்களென்று கௌரவித்திருந்தேன். இப்போது உங்கள் பக்தி விசேஷம் தெரிந்துவிட்டது. நீங்கள்செய்தசகாயம் போதும் போதும் நிறுத்தும். இனி, என் ஜோலிக்கே வராமல் சும்மாயிருங்கள்" என்று கீழே

குனிந்து தன் கழுத்தின்மீதிருக்கும் தடியை நழுவும்படிச் செய்துகொண்டு மறுபடியும் ஒரு மூலையில்போய் ஒதுங்கப் போனார். பிறகு பிராமணர்கள் மிகவும் கோபங்கொண்டு கபீரை முறைத்துப்பார்த்து "சீ சீ! நாயே என்னகுலைக்கின்றாய்? போகட்டுமென்று நல்லபேச்சுகளாய்ப் பேசியதனாலல்லவோ இவ்வளவிற்குவந்துவிட்டாய்! நடவாத மாட்டை முள்ளுக்கோலால் குத்தி நடத்தவேண்டும். அதிலும் நடக்காவிட்டால் தடியாலடித்து ஓட்டவேண்டும். எருமைக்கிடாவைவிட பத்துமடங்கு அதிக முரடனாயிருக்கின்றாய். ஆதலால், உன்னை எருமைக்கடாவைப்போல் அடிக்கவேண்டும். நல்ல பேச்சுகளாலும் கெட்ட பேச்சுகளாலும் சொல்லியும் கேளாமலும், தடியால் தள்ளியும் போகாமலும் குதர்க்கஞ் செய்துகொண்டிருக்கின்றாய். எவர்களுக்காகிலும் தலையில் பட்டாலல்லவா தடவிப் பார்த்துக்கொள்ளுவார்கள். உனக்குத் தக்க சிக்ஷைசெய்தால்தான் நீ இங்கிருந்து போவாய்" என்றுசொல்லி மேல்விழுந்து அடிக்க ஆரம்பித்தார்கள்.

பிறகு கபீரை அடிக்கவந்தவர்களின் கையிலிருக்கும் தடியைக் கபீர் பிடித்துக்கொண்டு "பூததயை பச்சாத்தாபமென்பது சிறிதேனும் இல்லாத முறட்டுத்தன முள்ளவர்களே! உங்களுக்கு மடத்தில் அதிகாரம் கொடுத்தவர்கள் யார்? சுவாமிகளின் அடியார்களென்றல்லவோ இதுவரையில் பொருத்திருந்தேன். இல்லாவிட்டால் இந்தத் தடியாலேயே உங்களை இதுவரையில் நையப்புடைத்து அதோகதி செய்திருப்பேன். நீங்கள் இந்த மடத்தில் சேர்ந்துகொண்டு இங்குவரும் ஏழை சாதுக்களை வதைசெய்கின்றீர்கள். நீங்கள் செய்யும் காரியங்கள் மிகவும் அக்கிரமமானது. இத்தோடாகிலும் உங்கள் துர்மார்க்கத்தை விட்டு விடுங்கள். நீங்கள் என்னை செய்த கோலத்திற்கு

மற்றொருவராயிருந்தால் இதுவரையில் உங்களுக்குத் தக்க பிராயச்சித்தம் செய்தே யிருப்பேன். இன்று நீங்கள் நல்ல முகத்தில் விழித்தபடியால் தப்பித்துக்கொண்டீர்கள்" என்று எதிர்த்துப்பேசி தடியைப் பிடுங்கித் தெருவில் விட்டெறிந்து நிச்சல பக்தியுடன் நின்றுகொண்டிருந்தார்.

அப்போது கபீர் வார்த்தைகளால் பிராமணர்களுக்கு மிகவும் கோபமுண்டாகி கபீர்மீது விழுந்து கைகால்களால் அறைந்து கன்னத்தில் அடித்து முழங்கைகளால் முதுகின் மீது குத்தி தலையிற் குட்டி கழுத்தைப்பிடித்து நெட்டித் தள்ளிவிட்டு தங்கள் சாமர்த்தியங்களையெல்லாம் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

அப்போது கபீர் பிராமணர்களால் அடிப்பட்டு மிகவும் நொந்து தெருவாசற்படியில் நின்று "ஆஹா! எவ்வளவு காரியம் நடந்துவிட்டது. இவர்கள் ஏதோ சிஷ்யர்களென்று நம்பிவந்ததற்குக் கடைசியில் கஷ்டமே வந்து சம்பவித்ததல்லவா? இனிச் சுவாமிகளின் தரிசனம் கிடைப்பது மிகவும் அரிது. சந்தனமரத்தில் சர்ப்பமும், பானகத்தில் சுப்பலும், தருமகாரியத்தில் லோபியும், சந்திரனிடத்தில் களங்கமும், புருஷனிடத்தில் அவிவேகமும், ஸ்திரீயினிடத்தில் சோரத்துவமும் உண்டாயிருப்பது போல், இந்த மகாத்மாவினிடம் இக்கொடிய பாபிகள் வந்து சேர்ந்திருக்கின்றார்கள். அதனால் பலவித கஷ்டநஷ்ட நிஷ்டூரங்களும் உண்டாவதற்குக் காரணமாயிருக்கின்றன. இப்படிப்பட்ட தாபிமான பேய்கள் இவ்விடத்தில் இருப்பது யுக்தமன்று: இவர்களை இவ்விடமிருந்து தொலைக்கப்பட்டவர்கள் யாரையுங் காணோம்" என்று பலவிதங்களாய் எண்ணாததெல்லாம் எண்ணிக் கடைசியில் பக்த ஜனங்கள் அனேகர்கள் உட்செல்லும்போது அவர்களுடன் கூடவே தொடர்ந்து உட்சென்று,

தான் ஒருவன் மாத்திரம் ஒரு மூலையில் நின்றிருந்து சுவாமிகளின் வரவை எதிர்பார்த்திருந்தார். மறுபடியும் மடத்துக்குள் வந்திருக்கும் கபீரைப் பிராமணர்கள் பார்த்துக் கோபாவேச பரவசர்களாகி ஊர்க்குருவியின்மீது பிரமாஸ்திரம் தொடுத்ததுபோலும், அபிமன்யுவின்மீது கௌரவர்கள் ஒன்றாய்த் திரண்டு சூழ்ந்துகொண்டதுபோலும், கபீரைச் சூழ்ந்துகொண்டு "அடே துன்மார்க்கா! சற்று முன்னேயல்லவா உன்னை அடித்துத் துறத்திவிட்டோம். இதற்குள் வெட்கமில்லாமல் மறுபடியும் இங்கு வந்தாயா! அப்பொழுது செய்த சிக்ஷை போதாமலிருக்கின்றதுபோல் தோன்றுகின்றது; இல்லாவிட்டால் இதற்குள் பிரவேசிப்பாயா? என்று சொல்லிப் பேருக்கொரு குத்துக் குத்திக் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளினார்கள்.

அப்போது கபீர் மிகவும் துக்காக்கிராந்தனாய் "சுவாமி! உமது தரிசனார்த்தமாய் வந்த என்னை இந்தத் துன்மார்க்கர்கள் பிடித்துக்கொண்டு எலும்புகள் ஒடியும்படி அடித்து உள்ளே வரவிடாமல் நெட்டித்தள்ளி மிகவும் தொந்தரவு செய்கின்றார்களே! இந்த அக்கிரமத்தை விசாரிக்கும் புண்ணியவான்கள் யாருமில்லையா? ஐயையோ! என் குறையை யாரிடம் சொல்லிக்கொள்வேன்" என்று அழுது கூச்சலிட்டுச் சொன்னார். அந்தக் கூச்சல் இராமானந்தர் காதில் விழுந்தவுடனே அதிக் ஆத்திரத்துடன் உள்ளிருந்து வெளியே ஓடிவந்து, கபீரைப்பார்த்துக் கனிகரத்துடன் "ஐயோ! இந்தச் சிறுவனை இவ்வாறு அடித்தவர்கள் யார்? சரீரமெல்லாம் காயப்பட்டு ரத்தம் வடிகின்றதே" என்று பச்சாத்தாபத்துடன் கேட்டனர். அப்பொழுது பிராமணர்கள் இராமானந்தரைப் பார்த்து "சுவாமீ! இவன் மஹா துன்மார்க்கன்; இதுவரையில் இவன் தூஷித்த தூஷணைகளை நீங்கள் கேட்கவில்லை; இவன்

கொடிய துஷ்டன். நல்ல வார்த்தைகளால் நாங்கள் எவ்வளவு சொன்னாலும் கேட்டவனல்லன். இவன் யாரென்றால் துலுக்கப்பையன். சிவ விஷ்ணுக்களைத் தூஷித்துக் கோஹிம்சை முதலான காரியங்களைச் செய்வது இவர்களுக்கு சகஜகுணம். இவன் சாமான்னியனல்லன். வீண் வாதம் செய்வதில் மிகவும் சமர்த்தன். பார்ப்பதற்கோ மிகவும் சாதுவைப்போல் காணப்படுகின்றானே யொழிய, இவன் அங்கமெல்லாம் விஷமே நிறைந்திருக்கின்றது. இவன் மிகவும் அறிவுடையவனாம். தனக்கு உபதேசிக்கத் தக்க ஆசாரியர் இப்பூமண்டலத்தில் எவர்களும் இல்லையாம். தங்கள் விஷயம் யாரிடமோ கேள்விப்பட்டுப் பார்க்க வந்தானாம். பார்த்த பிறகு தனக்குச் சமாதானப்பட்டால் தங்களை ஆசிரயித்து உபதேசம் பெறவேண்டுமாம். நாங்கள் தங்கள் மகிமைகளையெல்லாம் இவனுக்குத் தெரியச் சொல்லி, எங்கள் சுவாமிகள் உன்னைப்போன்ற நீசர்களுக்கு உபதேசம் செய்யார் என்றும், இதற்காக நீ வீணாய்ச் சிரமப்படவேண்டாமென்றும், உன்னைப்போன்றவர்கள் இங்கு நிற்கலாகாதென்றும் எங்களால் கூடியவரையில் பற்பல விதங்களாய்ச் சொல்லியபோதிலும் காதில் நுழையவேயில்லை. ஸ்நானம்செய்து பரிசுத்தமாய் வரப்பட்ட பக்தர்களின்மீது வீழ்ந்து எல்லோரையும் அசுத்தர்களாகச் செய்து இப்போதே உங்கள் எல்லோரையும் நாசஞ்செய்கின்றேன். மடம் என்றால் எல்லோருக்கும் பொதுவல்லவா? இதில் உங்களுக்கென்ன அதிகாரமிருக்கின்றது? உங்களை இந்த மடத்தில் வைத்தவர்கள் யார்? என்று சொல்லி எங்கள்மீது விழுந்து அடிக்கவந்தான். அதனால் எங்களுக்குக் கோபமுண்டாய் இவனுக்குத் தக்க சாந்தி செய்து இங்கிருந்து துரத்திவிட்டோம். அதனுடன் போகாமல் மறுபடியும் வந்து துர்வாதத்திற்காக மடத்திற்குள் பிரவேசித்தான். மறுபடியும் வெளியில் தள்ளிவிட்டோம். தங்களுக் கிஷ்டமிருந்தால் இவனைப் பிரிய சிஷ்யனாக வைத்துக்கொண்டு மஹா வாக்யோபதேசம்செய்து தன்னியனாகச் செய்யலாம். எங்களுக்கென்ன?'' என்று இல்லாத வார்த்தைகளை யெல்லாம் சேர்த்துக்கொண்டு சொல்லிச் சும்மா யிருந்தார்கள்.

அவ் வார்த்தைகளைக் கேட்டவுடன் இராமானந்தர் அதிக ஆத்திரத்துடன் ஆஹா! இவன் இவ்வளவு துன்மார்க்கனா? அக்கிரமமாய் மடத்திற்குள் வந்ததுமே யல்லாமல் உங்களை அவ்வளவு தொந்தரவு செய்தானா? சரி சரி! பசுக்களை வதைத்துப் புசிக்கும் பாபாத்மனுக்கு நான் உபதேசம் செய்யவேண்டுமா? நன்றாயிருக்கின்றது! நன்றாயிருக்கின்றது! சித்த சுத்தியில்லாத சிஷ்யனுக்கு உபதேசிக்கும் ஆசாரியனும், யுக்தா அயுக்த பரிஜ்ஞானமில்லாத ஆசாரியனை ஆசிரயித்த சிஷ்யனும் உபய பிரஷ்டர்களாய் அதோகதி அடைவார்களென்று சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. கோமாம்ச பக்ஷணம் செய்யும் துன்மார்க்கனுக்கு சத்கதி இல்லையென்று போதிக்கும் சாஸ்திரங்களை வாசித்துக்கொண்டிருந்தும் விவேகமில்லாமல் மறுபடியும் இப்படிப்பட்ட துஷ்காரியங்களுக்குத் துணியும் புருஷன் எப்படிப்பட்டவனாயிருப்பான். மந்திரம் உபதேசிப்பது வாய்ப்பேச்சல்ல. குரு அனுக்கிரகத்திற்கு பாத்திரனாக வேண்டியவன், சாதன சதுஷ்டய சம்பத்துடையவனும், நிரஹங்கார ரஹிதனும், (அஹங்காரமில்லாதவனாய்) வேதாந்த சாஸ்திரங்களைப் பரிசோதித்து சாந்தம் வஹித்து விவேகியாய் சர்வசங்கமும் பரித்தியாகம் செய்து சதா குருசேவை செய்துகொண்டு ராஜஸ தாமஸ குணங்களைவிட்டு சுத்த சாத்வீக குணமுடையவனாயும் பரிசுத்தனாயும் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவனுக்குத்

தவிர இதரர்களுக்கு உபதேசிக்கலாகாது. நீச ஜாதியில் பிறந்து நீசகுணங்களிருக்கும் இப்படிப்பட்ட துஷ்டர்களுக்கு உபதேசிக்கும் பக்ஷத்தில் பெறுத்த கஷ்டமும் அனேக நஷ்டமும் அடையவேண்டியதாய் நேரிடும். முன்னமே கழுத்தைப்பிடித்து நெட்டித்தள்ளாமல், இந்த மொண்டிக்கட்டையை மடத்தில் பிரவேசிக்கச் செய்தவர்களையல்லவா சொல்லவேண்டும்?" என்று சொல்லிக் கோபித்துக் கபீரைப் பார்த்து "அடே துச்சா! மிலேச்சனுக்கேன் மோக்ஷ இச்சை? துச்ச புத்தியினால் மோக்ஷ மார்க்கத்தை என்னிடம் தெரிந்துகொள்ள வந்ததற்காக தக்கபலன் பூரணமாய் அனுபவித்தாய். இனி இதோடேயாகிலும் திருப்தியடைந்து செல்; உனக்கும் உபதேசத்திற்கும் மிகவும் தூரம். சமுசாரம் நிச்சாரமென்று நிச்சயமாய்த் தெரிந்துகொண்டு வாஞ்சனைகளை அறுத்து நிச்சல சித்தனாய் இருக்கப்பட்ட ஒருவனைத் தவிர இதரர்களுக்குக் காரணகுருக்கள் எப்பொழுதும் உபதேசிக்கமாட்டார்கள். கோயிம்சை செய்யும் துராத்மாக்களுக்குப் பரிசுத்தமாகிய உபதேசம் எவ்வாறு கிடைக்கும்? காஜீகளை யாகிலும் அல்லது பகீரிகளையாகிலும் ஆசிரயித்து உனக்கு வேண்டிய அம்சங்களை அவர்களால் தெரிந்துகொள். என்னை ஆசிரயிப்பதனால் உனக்குக் கொஞ்சமாகிலும் பலன் உண்டாகமாட்டாது. ஆயிரமேன்? நீ என்னை ஆசிரயித்து உபதேசம் பெற அருகனாவென்று நீயே யோசித்துப்பார். பிராமணர்களுக்கு அவமானத்தை உண்டுபண்ண உத்தேசித்து வந்ததாய்க் காணப்படுகின்றது. இப்பொழுது நீ செய்த பெறுத்த தப்பிதத்திற்காக உன் மூக்கையும் காதுகளையும் அறுத்து அங்கயீனனாய்ச்செய்து அனுப்பவேண்டியது நியாயமா யிருந்தாலும் அவ்வாறு செய்யாமல் மன்னித்திருக்கின்றேன். மற்றொருமுறை இவ்வாறு வருவாயாகில்

தப்பாமல் முன் சொல்லியதுபோல்செய்து அனுப்பப்படும்" என்று சொல்லிப் பிராமணர்களைப் பார்த்து "இவன் எப்பொழுதும் இங்குத் தலைகாட்டாதபடி கட்டுத் திட்டம் செய்து துரத்திவிடுங்கள்" என்று ஆஞ்ஞாபித்து உள்ளே செல்லப்போனார். அப்போது கபீர் ஓடி அவர் பாதங்களின்மீது விழுந்து முத்தமிட்டு திடீரென்று எழுந்துநின்று பிராமணர்கள் அடித்த காயங்களை யெல்லாம் காட்டி "சுவாமி தாங்கள் பரிசுத்தசித்தர்கள்: நிர்மலவிருத்தியுடையவர்; ஜீவன் முக்தர்; பக்தஜனப்பிரியர்; பரமானந்தர்; ஞானசொரூபர்; சுயம்பிரகாசர்; சர்வகுண வசிஷ்டர்; சதாசாரநிஷ்டர்; சம்சாரத்தைத் தப்பித்துக்கொண்டிருக்கும் புருஷர்களைக் கடாக்ஷித்துப் பிரம்மானந்த சுகத்தை அனுபவிக்கச்செய்யும் பரமபவித்திரர்; அகண்டானந்த சாம்ராஜ்ஜிய பதவியில் மிதந்து கொண்டிருப்பவர். இன்று தேவரீருடைய தரிசனத்தால், அடியேனை மூடிக்கொண்டிருந்த அஞ்ஞானமெல்லாம் படாபஞ்சாய்ப் பறந்தோடிற்று. தேவரீரை மிகவும் பரிசுத்தரென்றும், மஹா சித்தபுருஷரென்றும், பரம பக்தரென்றும், ஜீவன்முக்தரென்றும், இவ்வாறு பலவிதங்களாய் ஜனங்கள் புகழக் கேள்விப்பட்டு, தாபத்திரயங்களினால் அலைந்துகொண்டிருக்கும் என் மனதை நிறுத்திக்கொள்ள யாதொரு உபாயமும் தெரியாததனால், தேவரீர் பாதங்களை ஆசிரயிக்க வந்தேன். அருட்பார்வையால் அடியேனைக் கடாக்ஷிக்காவிட்டால், அனியாயமாய்க் கெட்டுப்போவேன். உபதேசத்திற்குத் தக்க பரிபக்குவம் அடைந்திருக்கின்றேனோ இல்லையோவென்று தயைசெய்து பரிசோதித்துப் பிறகு தங்களிஷ்டம்போல் செய்யுங்கள்" என்று மிகவும் தீனத்துவமாய்க் கபீர் கேட்டுக்கொண்டனர்.

அவ்வார்த்தைகளைக்கேட்ட இராமானந்தர், "ஓஹோ! இவன் மிகவும் அசாத்தியனாயிருக்கின்றான். இவன் கற்ற கல்விகளையெல்லாம் பூடக நாடகம்போல் நம்மெதிரில் காட்டுகின்றான். இவன் வாஸ்தவமாய் ஆஷாடபூதியாகவே இருக்கின்றான். இவன் ஜாதி என்ன? நீதியென்ன? கோத்திரமென்ன? வருணமென்ன? தருமமென்ன? விதண்டாவாதத்தில் தனக்குண்டாயிருக்கும் அகண்டபாண்டித்தியத்தைத் தெரிவிக்க எண்ணியல்லவோ இவ்வாறு உளர ஆரம்பித்தான்" என்று சொல்லிக் கபீரைப்பார்த்து "அடா! பேச்சில் என்னைவிடத் தேர்ந்தவர்கள் ஒருவரும் இல்லையென்று எண்ணி இவ்வாறு பிரசங்கம்செய்ய ஆரம்பித்தாயா என்ன? போதும் போதும் நிறுத்து. மிகவும் விரக்தியடைந்தவனைப்போல் இவ்வளவு நேரமாய், கைகளை வீசிக்கொண்டும் தலையை அசைத்துக்கொண்டும் கண்களைச் சிமிட்டிக்கொண்டும் முகத்தைப் பார்த்துக்கொண்டும் வாதித்துக்கொண்டிருக்கின்றாய்? உன் பக்தி இவ்வளவுமட்டில் போதும். இப்படிப்பட்ட பக்தி இருதயத்தில் இருப்பதனாலேயே விரக்தி அதிகமாய், உபதேசத்திற்கு இங்குவந்தாயா! ஓர் நிமிஷமாகிலும் இங்கு நிற்கவேண்டாம் ஓடிப்போ" என்று கோபித்து "இந்த துலுக்கநாயை இங்கு மறுபடியும் வராமல் இருக்கும்படிச் சொல்லித் துரத்திவிடுங்கள்" என்று தன் சிஷ்யர்களுக்குச் சொல்லி இராமானந்தர் மடத்திற்குள் சென்றார்.

சுவாமிகளின் வாக்கிலிருந்து அவ்வார்த்தை வருவதற்கு முன்பே இடுப்பைத் தயாராய்க் கட்டிவைத்துக் கொண்டிருக்கும் பிராமணர்கள் கபீர்மீது வேட்டை நாய்கள் விழுவதுபோல் விழுந்து "என்னடா! இதுவரையில் மடம் எல்லோருக்கும் சம்பந்தப்பட்டதென்று உளரினாயே? இப்போது உன் நாக்கை அறுத்துவிட வேண்டு

மல்லவா? இனி எப்போதாகிலும் தவறி இம்மார்க்கமாய் வருவாயாகில் உன் சதைகளை அறுத்துப் பருந்துகளுக்குப் போட்டுவைப்போம்; திரும்பிப்பாராமல் ஓடிப்போ; மறுபடியும் ஏதாகிலும் உன் துலுக்கப் புத்தியை முன் காட்டியதுபோல் காட்டப்போகின்றாய்" என்று பற்பல விதங்களாய் நிந்தித்து மறுபடியும் அடித்துத் துரத்தினார்கள்.

அப்போது கபீர் அந்த அடிகளைப் பட்டுக்கொண்டு "ஓ ஹோ! அவதூதர்களாயிருந்தவர்கள் யமதூதர்களானதுபோல் இருக்கின்றது. இவர்களைப் பார்த்துவிட்டு வரும்படி அனுப்பினால் கொளுத்திவிட்டே வருவார்கள். இனி இங்கு நின்றால் இன்னும் ஆபத்துண்டாகும். சுவாமிகளைத் தரிசித்து அவர் பாதங்களைக் கண்ணில் ஒத்திக் கொண்டேனேயொழிய, என் ஆசைதீர அவர் மகிமையை புகழாமற் போனேன். நல்ல சமயம் வாய்த்தபோது மதியில்லமால் போனபடியாலல்லவோ பின்னிட்டு விசனப்பட வேண்டியதாய் நேரிட்டது. ஐயோ! இந்த துஷ்கிருத்தியங்களை எல்லாம் யாரிடம் சொல்லிக்கொள்வேன்! 'காசிக்குப்போனாலுங் கருமம் தீரவில்லை' என்பதுபோல் நிர்ப்பாக்கியன் எங்குச் சென்றாலும் மேன்மை அடையமாட்டான். இந்தத் துஷ்டர்களிடம் அகப்பட்டுக்கொண்டு இவ்வளவு கஷ்டப்பட்டபோதிலும் கடைசியில் நஷ்டமேயொழிய லாபம் சிறிதாகிலும் கிடைக்கவில்லையல்லவா? இனி என்செய்வேன்! யாரை நிந்திப்பேன்?" என்று பல விதங்களாய்த் துக்கித்து, யுத்தரங்கத்தில் அபஜயமடைந்த சூரனைப்போல் அவாங் மனோகோசரமாகிய விசாரத்தில் மூழ்கி, கண்களில் நீர் ததும்பி அங்கிருந்து மெதுவாய்ச் சென்று வீடுசேர்ந்து தாய் தந்தையர்களிடத்திலும் பேசாமல் ஓர் அறையில் உட்கார்ந்து மனோவேதனையைச் சகிக்காமல் தனக்குள்தானே அழுதுகொண்டிருந்தார். அப்போது

தன் குமாரன் எப்போதும்போல் சந்தோஷமாயிராமல் வியசனத்துடன் ஓர் மூலையில் உட்கார்ந்து எண்ணமிட்டுக் கொண்டிருப்பதை தமால் தெரிந்துகொண்டு கொஞ்சம் சந்தேகப்பட்டு சமீபமாய் வந்து "நாயனா! இன்று உன்னைப் பார்த்தால் ஓர் விதமாயிருப்பதுபோல் காணப்படுகின்றது. இவ்வளவு விசனம் உனக்கு உண்டாவதற்குக் காரணமென்ன? யார் உனக்கு மனோவருத்தத்தை உண்டு செய்தவர்கள்? சற்றே தெரியச்சொல்" என்று பல விதங்களாய்க் கேட்டபோதிலும் கபீர் வார்த்தையாடாமல் இருந்தபடியால் கபீரை சேர்த்து ஆலிங்கனம் செய்து துடையின்மீது உட்காரவைத்து உடலைத் தழுவும்போது, காயத்தில் ரத்தம் வருவதைக்கண்டு ஓவென்று கூச்சலிட்டு ஐயையோ உன்னை இவ்வாறு அடித்தவர்கள் யார்? சீக்கிரமாய்ச் சொல்; இப்போதே அவர்களைப் பலி கொடுக்கின்றேன், சற்றாகிலும் கனிகரமில்லாமல் உன்னை இவ்வித கஷ்டப் படுத்தினவர்கள் யார்? அப்படிப்பட்ட துஷ்டனை சும்மாய் விடலாமா? உன்னை அடித்தவர்கள் எங்கிருக்கின்றார்கள்? காட்டுவா பார்ப்போம்" என்று குமாரனைத்தொந்தரவு செய்தார். இவைகளை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஜிஜ்ஜாபீபி ஓடிவந்து தன் குமாரன் சரீரத்திலிருக்கும் காயங்களைக்கண்டு வயறெரிந்து "ஐயையோ! உன்னை இப்படி அடித்த துராத்மாக்கள் யாராயிருப்பார்கள்? ஐயோ! என்மகனே! உன் சுகுணங்களைக் கண்டாகிலும் அந்தக் கடினசித்த முடையவர்களுக்கு மனம் இரங்க வில்லையா! உன்னை இவ்விதமாய் அடித்து வேதனையை உண்டாக்க அந்தத் துஷ்டர்களுக்குக் கைகள்தான் எப்படி வந்தன! காலையில் எழுந்தவுடன் யார் முகத்தைப்பார்த்தாய்? ஹா! அன்றையதினம் நாளென்னமோ தெரியாமல் உன்னை இரண்டு அடிகள் அடித்ததற்காக அந்த அடிகளை தயா

மூர்த்தியாகிய நாராயணமூர்த்தித் தாங்கிக்கொண்டு தள்ளிவிட்டாரே? அப்படிப்பட்ட உன்னை இவ்வாறு கஷ்டப் படுத்தினவன் யார்? கேட்டால் வாயை மூடிக்கொண்டு ஊமையைப்போலிருக்கின்றாயே? என் வயிறு பற்றியெரிகின்றதே? அடித்தவர்கள் யாரோ காட்டுவா பார்ப்போம்" என்று கையைப்பிடித்து எழுப்பினாள்.

அப்போது கபீர் தாய் தந்தைகளைப்பார்த்து "ஏன் இவ்வளவு தொந்தரவு படுகின்றீர்கள்? சற்றே பொருத்துக் கொள்ளுங்கள். எப்படிப்பட்டவர்களுக்காகிலும் கஷ்டமில்லாமல் லாபம் உண்டாகமாட்டாது. கஷ்டப்பட்டவர்கள் இஷ்டர்களாவார்கள். சுகம் அனுபவித்தால் அதற்குத் தக்க துக்கம் அனுபவிக்காமற் தீராது. நிஷ்டானுபூதி இல்லாமல் நித்தியானந்தபதவி உண்டாகமாட்டாது. உலகத்திலுள்ள ஆனந்தங்களுக் கெல்லாம் பிரம்மானந்தமே பிரதானமானதால் அதைச் சம்பாதிப்பதற்காக இராமானந்தர் சந்நிதானத்திற்குச் சென்றேன்; அவர் சேவை பிராப்தி இல்லைபோலிருக்கின்றது. அதனால், அவர்கள் என்னை நிராகரித்துவிட்டார்கள்" என்று சுருக்கமாய்ச் சொல்லி முடித்துவிட்டார்.

அதைக்கேட்ட தாய் தந்தையர்கள் இராமானந்தர் சிஷ்யர்களே தன் குமாரனை இவ்வாறு அடித்தவர்களென்று நிச்சயித்துக்கொண்டு கோபாவேசத்துடன் முரடர்களாகிய துலுக்கர்களிடம் சொல்லி அனேகர்களைப் பலப்படுத்திக்கொண்டு இராமானந்தரையும் அவர் சிஷ்யர்களையும் அநேக விதங்களாய்த் தூஷித்து அவர்கள் எல்லோரையும் தும்சம்செய்யச் சித்தமானார்கள். அப்போது கபீர் அவர்களின் துஷ்ட காரியத்திற்காக மிகவும் வருத்தமடைந்து தன் தாய் தந்தையர்களுக்குச் சகாயமாய் வந்திருக்கும் மகம்மதியர்களை மிகவும் வணங்கி வந்தனஞ்

செய்து தீனத்துவமாய் "புண்ணியாத்மாக்களே! என் இவ்வளவு தொந்தரவுடன் நீங்களெல்லோரும் இப்படிப்பட்ட காரியங்களுக்கு பிரயத்தனப்படுகின்றீர்கள்? இராமானந்தர் அனுக்கிரகத்தினாலேயே நான் மகதாநந்த சம்பன்னனாகவேண்டுமென்னும் எண்ணம் எனக்குப் பூர்த்தியாயிருந்து, அவரைத் தரிசிக்கும்பொருட்டு அவ்விடம்சென்றதனாலல்லவோ, அவர் சிஷ்யர்களின் அஸ்த பரிசத்தினால் என் தேகம் பவித்திரமாய்விட்டது. சர்வேஸ்வரர் ஆஞ்ஞானுசாரமாய் எனக்குச் சதாநந்த சாம்பிராஜ்ஜியபதவி இராமானந்தரால் உண்டாக வேண்டுமேயொழிய, இதரர்களால் உண்டாகமாட்டாது. யுக்தா அயுக்தங்களை விசாரிக்காமல் துரிதப்பட்டு இப்படிப்பட்ட காரியத்தில் பிரவேசித்து என் காரியங்களை என் பங்கப்படுத்துகின்றீர்கள். நீங்கள் இந்த விஷயத்தில் மன்னிக்கவேண்டும்" என்று பலவிதங்களாய்ச் சொல்லிக் கேட்டுக்கொண்டனர்.

அவ் வார்த்தைதயக் கேட்ட துலுக்கர்களெல்லோரும் "கபீர் நீ பரிசுத்தமாகிய மகம்மது மதத்தில் பிறந்தவனாயிருந்தும் ஞான ஈனர்களாகிய இந்துக்களை ஆசிரயிப்பது உத்தமமானதல்ல. உனக்கேன் இப்படிப்பட்ட விபரீத (மாறுதலான) புத்தி பிறந்ததோ தெரியாமலிருக்கின்றோம். சத்தியமாகிய மதத்தைவிட்டு அசத்தியமாகிய மதத்தை அனுஷ்டிக்க ஆரம்பித்ததனால்தான் பகவான் உனக்குத் தக்க பிராயச்சித்தம் செய்தார். உன்னைப் பிடித்த சைதான் இதோடே விட்டுவிட்டது. இராமானந்தர் தப்பு அபிப்பிராய முடையவரென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் நீ செய்த குற்றத்திற்காக உன்னை உளியால் செதுக்கி உன் மாமிசத்தைப் பருந்துகளுக்கு இரையாய்ப் போட்டாலும் எங்களுக்குள்ள கோபம் தீராது. கரும்பிற்கு சோகை உண்டாய்க் கரும்பைக் கெடுத்தது

போல் துர்மார்க்கனான நீ சன்மார்க்க வமிசத்தில் பிறந்தும், அந்த வமிசத்தாரையெல்லாம் நாசஞ்செய்ய வந்திருக்கின்றாய். 'காபர்' மதத்தை அனுஷ்டிக்கும் உனக்கு, எவன் இந்த விஷயத்தில் சகாயஞ் செய்தாலும் அவன் தப்பாமல் பகவானிடம் சிக்ஷைக்குப் பாத்திரனாவான். சீ சீ! உன் முகத்தில் விழிக்கலாகாது" என்று சொல்லிவிட்டு அவரவர்களின் வழியே சென்றுவிட்டார்கள்.

அப்போது தமாலும் ஜிஜ்ஜாபீபியும் கபீர்மீது கோபித்துக்கொண்டு மறுபடியும் இரரமானந்தரைத் தூஷித்து, நமது சுயஜாதியாரெல்லாம் முன்பே நம்முடன் விரோதித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதோடுகூட நீ இப்போது அவர்களை பேசிய பேச்சுக்களினால் விரோதம் இன்னும் அதிகமாய்விட்டது. சுயஜாதியுடன் விரோதம் காட்டிக்கொண்டிருப்பது தகாதென்று தாய்தந்தையர்களிருவரும் பேசிக்கொண்டு விசனப் பட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது கபீர் அவர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு மிகவும் விநயத்துடன் தாய்தந்தையர்களை நமஸ்கரித்துப் பிரிய வசனங்களுடன் நல்ல வார்த்தைகளைச்சொல்லி "எனக்குப் பகவான் சகாயமாயிருப்பதனால், இவர்களின் சகாயம் வேண்டுவதில்லை. இந்தச் சொற்ப விஷயத்திற்காக நீங்களேன் விசனப்படுகின்றீர்கள்" என்று சமாதானப்படுத்தி அவர்களின் ஆயாசத்தைத் தீர்த்துப் போஜனத்திற்கு எழுந்திருக்கும்படிச் சொல்லிச் சமாதானஞ்செய்தார்.

கபீர் மறுபடியும் இராமானந்தரிடம் போய் ஆசீர்வாதம் பெறுதல்.

இவ்வாறு சிலநாட்கள் சென்றபிறகு வியர்த்தமாய்க் காலங் கழிந்துவிடுகின்றதே என்று கபீர் மனம் நொந்து

"ஐயோ! என் பூர்வஜன்ம பரிபக்குவ விசேஷத்திற்கு
என்னவென்று சொல்வேன்! கற்பக விருக்ஷமென்று பிரக்
யாதி பெற்றிருக்கும் ராமானந்தர் அனுக்கிரகம் கடைசி
யில் லபிக்காமற் போயிற்றல்லவா? குருவில்லாத வித்தை
கூடாதென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். தான் எவ்
வளவு புத்திமானாயிருந்தாலும் குருவில்லாமல் மனதுக்குச்
சமுசயம் நிவர்த்தி யாகாது. இவரைவிட்டு மற்றவர்களை
ஆசிரயிக்க உதவாது. ஆதியில் இராமானந்தரே பரம
ஆசாரியரென்றும் அவர் ஆசிரமமே மஹதாசிரமமென்
றும் அவர் சேவையே முக்கியமான தென்றும த்ரிகரண
சுத்தியாய் நிச்சயித்துக் கொண்டேன். ஏதோ ஓர்தடை
நேரிட்டதனால் அவர் அனுக்கிரகம் இல்லையென்று இதரர்
களை ஆசிரயிப்பது யுக்தமானதல்ல. இப்போதில்லா விட்
டாலும் மற்றொரு போதாகிலும் அவர் அனுக்கிரகம்
கிடைக்குமென்று நிச்சயமாய் நம்புகின்றேன். அப்படி
யிருந்தும் மனது கேட்கவில்லை. தேகம் நீர்க்குமிழியைப்
போன்றது. ஆதலால், நித்திரை ஆஹாரங்களாகிய
சாமான்ய வியாபாரங்களே முக்கியமானதென்று திருப்தி
அடைந்திருக்கும் மந்தபுத்தி யுடையவர்கள் தவிர புத்தி
மான்கள் ஒருநிமிஷமாகிலும் விருதாகாலம் போவதற்குச்
சகிக்கமாட்டார்கள். புராதன சுகிர்த பரிபாக விசேஷத்தி
னால், ஞான சூனியமாகிய பசு பக்ஷியாதி ஜன்மங்களில் பிர
வேசிக்காமல் உத்தமமாகிய மனுஷ்ய ஜன்மம் உண்டா
யிற்று. கிடைக்கத்தகாத துர்லபமான மானவ ஜன்மம்
லபித்தபோதிலும் புத்தி மந்தத்தினால், தாய்தந்தையர்கள்
களத்திர புத்திர பௌத்திரர் முதலானவர்கள் தன்னுடை
யவர்களென்றும், கிருகம் பூமி தோட்டம் துறவுகள் முத
லானவைகள் தமதெனறும் எண்ணி ஆசா பாசங்களால்
கட்டப்பட்டுப் பல தடவைகளில் பிறந்துகொண்டும்,

இறந்துகொண்டும் இருக்கும்பக்ஷத்தில் எவ்விதமாய்க்
கடைத்தேறுவார்கள்? தேஹாபிமானம்போய் விவேக
முண்டானாலும் சிரத்தாதிமார்க்க சதுஷ்டயங்கள் தெரியா
மல் மோக்ஷராஜ்யத்தை அடைவது அசாத்தியம்; அந்த
மார்க்கம் ஒவ்வொன்றும் ஆசாரியரில்லாமல் சாத்தியமாக
மாட்டாது. சர்வ வியாபகனை ஈசுவரன் உள்ளும் புறம்
பும் எங்கும் நிறைந்திருக்கின்றா ரென்பது வாஸ்தவமா
யிருந்தாலும் அதன் சூக்ஷமம் இப்படிப்பட்டதென்று
தெரிவிப்பதற்காக ஆசாரியர் ஒருவர் வேண்டும். அவரில்
லாமல் தெரிந்துகொள்ள சாத்திய மாகமாட்டாது. சர்
வாந்தரியாமியாய் சர்வேசுவரனைப் சகல பிராணிகளுக்கும்
இஷ்டார்த்தங்களைத் தந்து ரக்ஷிக்கும் பரமேஸ்வரனை சத்
பக்தியுடன் பூஜிக்கவேண்டிய தென்பது யதார்த்தமா
யிருந்தாலும் அதிலுள்ள மர்மங்களைத் தெரிவிக்க மஹதா
சாரியர் ஒருவர் இருந்தே தீரவேண்டும். அவரில்லாமல்
திருணமும் (துரும்புக் காரியமும்) நடக்கமாட்டாது.
தேகத்தில் உச்வாச நிசுவாசங்களாய் ஆடிக்கொண்டிருக்
கும் பிராண வாயுவை வசப்படுத்திக்கொண்டு இந்திரிய
வியாபாரங்களை நிறுத்தி வாயுவை பிரம்ம ரந்திரத்தில் ஏற்றி
நாதசப்தங்களைக் கேட்டு ஜோதிதரிசனம் செய்யவேண்டு
மென்று நிச்சயித்தாலும் அதன் ரகஸ்யத்தை அறிவிக்க
தேசிகன் ஒருவன் வேண்டும். தேசிகனில்லாமல்
யோகம் சாத்திய மாகமாட்டாது. தானே பிரம்மம் பிரம்
மமே தானென்று அபேத புத்தியுடனிருந்து ஆனந்
தத்தை அடையவேண்டுமென்று நிச்சயித்தாலும் அதன்
மர்மங்களைத் தெரிவிக்க காரணாசாரியர் ஒருவர் வேண்
டும். சத்கர்மானுஷ்டான பரர்களுக்கே முக்தி என்றும்,
பக்தி நிஷ்டாபரர்களுக்கே பரமபத மென்றும்,
ஞானநிஷ்டர்களுக்கே கைவல்லியமென்றும் பலர் பலவிதங்

களாய்ச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அன்றியும், சத்
கர்மானுஷ்டான சம்பன்னர்களுக்கு சத்தியலோகமும்,
பக்தி நிஷ்டா கரிஷ்டர்களுக்குப் பரமபதமும், யோக
நிஷ்டாபரர்களுக்குக் கைவல்யமும், ஞான நிஷ்டர்களுக்கு
அத்வைத ஆனந்தபாவமும் சித்திக்குமென்று பெரியோர்
கள் சொல்லுவார்கள். இந்நான்கிலும் உத்தமமானது
இஃதென்று திடமாய்த் தெரிந்துகொள்வதற்காக ஓர்
ஆசாரியர் வேண்டியதாகவே இருக்கின்றது. எவ்வித
மாய்ப் பார்த்தபோதிலும் குருவை சம்பாதித்துக்கொண்
டாலேயொழிய அவரன்றி எதுவும் சாத்தியப்படமாட்
டாது. இதற் கென்னசெய்யலாம்'' என்று பல விதங்க
ளாய்த் துக்கித்துச் கடைசியில் "எவ்விதத்திலாகிலும்
நாளையதினம் இராமானந்தரைத் தரிசித்து மனதிலுள்ள
சமுசயம் தீர்த்துக்கொள்ளவேண்டு''மென்று நிச்சயித்துக்
கொண்டு அன்றிரவை ஓர் யுகமாய்த்தள்ளி அதிகாலையில்
எழுந்து தான் ஒருவனாகவே இராமானந்தர் மடத்திற்குட்
சென்று ஓர்மூலையில் நின்று அவ்விடம் உபந்நியாஸம்செய்து
கொண்டிருக்கும் வேதாந்த விஷயங்களைக் கர்ணானந்த
மாய்க் கேட்டுக்கொண்டிருந்தார். பிறகு, இராமானந்தர்
சிஷ்யர்களுடன் ஸ்நானார்த்தமாய்க் கங்காதீரத்திற்குச்செல்
லும்போது கபீர் பார்த்து பரமானந்தபரிதனாய் கூட்டங்
களை நீக்கிக்கொண்டு மெதுவாய் முன்னுக்குச் சென்று
நக்ஷத்திர மண்டலங்களுக்கு மத்தியிலிருக்கும் சந்திரனைப்
போல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் இராமானந்தரைத்
தரிசித்து அதிக பக்தியுடன் அவர்பாதத்தில் சாஷ்டாங்க
மாய் விழுந்து நமஸ்கரித்துப் பாதங்களை முத்தமிட்டு
"ஸ்வாமி! சரணாகதியடைந்தேன்; என்னை ரக்ஷிக்கவேண்
டும்'' என்று மிகவும் தீனசுரத்துடன் அவர் பாதங்களைக்
கெட்டியாப் பிடித்து வேண்டிக்கொண்டு அற்புத பிரம்ம

ஞானத்தில் மனதைச் செலுத்தினவராய் எழுந்திராம லிருந்தார்.

அப்போது இராமானந்தர் அதிக ஆச்சர்ய முடையவராய் இவ்வளவு ராத்திரியில்வந்து சரணமடைந்தவன் எவனாயிருப்பானென்று எண்ணிக்கொண்டே "சுகீபவ சுகீபவ'' என்று ஆசீர்வாதம்செய்து இனி எழுந்திரு இனி எழுந்திரு என்று சொல்லினர். அவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே கபீர் பரமானந்தமடைந்து எழுந்துநின்று கொண்டு அஞ்சலியஸ்தராய் "ஸ்வாமீ! அடியேனுக்கு இன்று தேவரீருடைய ஆசீர்வாதம் பெறவேண்டிய யோகமிருந்தது. அடியேனுடைய பந்தங்களெல்லாம் நீங்கின. அடியேன் ஜன்மம் கிருதார்த்தமாயிற்று. சத்குருவென்றும் ஜகந்நாதனென்றும் வேதாதீதனென்றும் வேதாந்த வித்தென்றும் பந்த விமோசனனென்றும் பக்தவச்சலனென்றும் ஆபத்பாந்தவனென்றும் அநாதரக்ஷகனென்றும் தேவரீர் ஒருவருக்கே செல்லும். தேவரீர் நிஷ்குரோதர், நிஷ்கல்மஷர், நிச்சலர், நிர்மலர், துரியாதீதர், சர்வஞ்ஞர், ஸச்சிதானந்தர். தங்கள் மஹாமஹிமையைப் புகழ அடியேன் எவ்வளவுமாத்திரன்? அடியேனைப்போன்ற பாமரர்களை உத்தரிக்க நீர் பூமியில் மானவ தேகத்துடன் அவதரித்த நாராயணமூர்த்தியே யொழிய மற்றொருவரல்ல'' என்று பலவிதங்களாய்த் துதிசெய்து நின்றார்.

இவைகளையெல்லாம் கேட்டு இராமானந்தர் தம் சிஷ்யர்களைப்பார்த்து "உங்களில் யாராகிலும் இவனைப் பார்த்தீர்களாவென்று கேட்டனர். அப்போது சிஷ்யர்கள் கபீர் சமீபமாய்ச் சென்று கபீரை நகசிக பரியந்தம் பார்த்துக் கண்களை யுருட்டிப் பற்களை நறநறவென்று கடித்து "சுவாமீ! இவன் எவனென்று தெரிந்துகொண்டீர்களா?

அன்று நமது மடத்திற்குவந்து அடம் சாதித்த துலுக்கப் பையன். ஐயோ! தாங்கள் கொஞ்சமாகிலும் ஆலோசிக்காமல் துரிதப்பட்டு இந்த துன்மார்க்கனுக்கு ஆசீர்வாதம் செய்துவிட்டீர்களே! தங்கள் கௌரவத்திற்குப் பங்கம் வந்துவிட்டதே! துர்ஜ்ஜன சங்கத்தால் நாங்களும் பிரஷ்டர்களானோம். இதற்கென்ன செய்யலா'' மென்று விசனிக்க ஆரம்பித்தார்கள். அந்தச் சொற்கள் இராமானந்தர் காதில் அம்புபோல் தைத்தவுடன் கபீரைப் பார்த்து "துன்மார்க்கா! தூரத்தேபோடா" என்று கோபித்துக் கைகொண்டமட்டும் கபீர் கன்னத்தின்மீது ஓர் அறை அறைந்தார். அதனுடன் திருப்தியடையாமல் "இவனுக்குத் தக்க சாந்திசெய்து மறுபடியும் இவ்வழி வராதபடி கட்டு திட்டஞ் செய்யுங்க" ளென்று இராமானந்தர் சிஷ்யர்களுக்கு உத்தரவுசெய்து தாம் ஸ்நானத்திற்குச் சென்றார். அப்போது அந்தப் பிராமணர்கள் காலருத்திரனைப் போல் கிளம்பி கபீரை நன்றாய் அடித்து எலும்புகளை முறித்துக் கீழேதள்ளிக் கைகளையும் கால்களையும் கட்டித் தொழுவில் போட்டுப் பொழுது விடிந்தவுடனே ராஜசேவகர்களிடத்தில் ஒப்புவிக்க நிச்சயித்துக்கொண்டு தங்கள் சாமர்த்யங்களையெல்லாம் புகழ்ந்துகொண்டு கங்கைக் கரைக்குச்சென்று சுவாமிகளுடன் இந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லிச் சந்தோஷித்தார்கள்.

அப்போது தொழுவில் அகப்பட்டுக்கொண்டு பாதை சகிக்காமல் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் கபீர், விஷ்ணு மூர்த்தியைத் தன் இருதயகமலத்தில் நிறுத்தி "பரமேஸ்வரா! பரமபாவகா! புராணபுருஷா! புண்டரீகாக்ஷா! பக்தவச்சலா! பவபந்தவிமோசனா! அப்பிரமேயா! ஆநந்தநிலயா! பிரம்மாண்டநாயகா! பிரம்மாநந்த சந்தாயகா! உன்னை நம்பினவர்களுக்கு எப்பொழுதும் ஆபத்து

கள் உண்டாகாவென்பது நிச்சயமல்லவா? ஆதலால், நான் எப்பொழுதும் உன்னைப் பக்திசெய்துக்கொண் டிருந்தும் இப்படிப்பட்ட ஆபத்துகள் உண்டாவதற்குக் காரணமென்ன? உன் ஆஞ்ஞையில்லாமல் அணுவேனும் அசையாதல்லவா? அப்படியிருக்க நிர்நிமித்தமாய் இப்படிப்பட்ட துர்தசைகள் எனக்கேன் சம்பவித்தன? இது உன் மாயாவிலாஸமேதவிர மற்றப்படிக்கு வேறல்ல? இப்படிப்பட்ட சங்கடங்களை ஏன் உண்டாக்கினையோ தெரியவில்லை. இது விஷயமாய் உன்னை நிந்திப்பதில் யாதொரு பிரயோஜனமுமில்லை. பூர்வ ஜன்மத்தில் எப்படிப்பட்ட துஷ்டகாரியங்களைச் செய்தேனோ தெரியவில்லை. அதன் பலத்தை இப்போது அனுபவிக்கின்றேன். எது எப்படியிருந்தபோதிலும் நீ தயாரசனாதலால் என்முறையை அங்கீகரித்து என்னைப் பவசாகரத்திலிருந்து உத்தரிக்கக்கடவாய். என்னிடத்தில் கருணையுண்டாகும்படி இராமானந்தரைச் செய்விப்பாயாகில் மஹோபகாரமென்று எண்ணிக்கொள்வேன். இந்தச் சமயத்தில் உன்னைவிட சகாயம் செய்யப்பட்டவர்கள் மற்றொருவரில்லை" என்று மிகவும் பக்தியுடன் ஆகாசமார்க்கமாய்ப்பார்த்து உபந்நியசித்தார். அப்போது பகவான் பிரசன்னராய் கபீரைப்பார்த்து "ஐயா! பிராமணர்கள் எவ்வளவு கடின இருதயமுடையவர்கள்! கொஞ்சமாகிலும் கனிகரமில்லாமல் உன்னை இவ்வாறு கஷ்டப்படுத்திச் சென்றார்களல்லவா"? என்று விசனப்பட்டு சுத்தகரங்களாகிய தன் கரங்களால் உடலைத்தழுவிக் கட்டுகளை அவிழ்த்துத் தொழு மரத்தைத் துண்டுதுண்டுகளாய்க் கத்தரித்துக் கீழேதள்ளிக் கபீரை ஆலிங்கனம் செய்துகொண்டு 'பயப்படவேண்டா' மென்று அபயங்கொடுத்து விசனத்தை நிவர்த்தி செய்துகொண்டே மெதுவாய் அழைத்துவந்து தமால் எதிரில்விட்டு மறைந்துவிட்டார்.

இவ்விதமாய் விஷ்ணுமூர்த்தி தன்னை அழைத்துவந்து வீடுசேர்ப்பித்து அந்தரத்கானமானவுடனே கபீர்மனம் மிகவும் நொந்து தன்னிடத்தில் பகவானுக்கிருக்கும் கிருபையை நினைத்துநினைத்து விக்கிவிக்கி அழுதுகொண்டு "ஹா! தீனபந்து! என்னை ஏன் இவ்விதமாய்த் தொந்தரவு செய்வித்துத் தூரநின்று பார்த்துக்கொண்டிருக்கின்றாய்? நான் செய்த தோஷமென்ன? பவசாகரத்திலிருந்து தப்பித்துக்கொள்ள ஓர்வழி காட்டினால் கடைத்தேறமாட்டேனா"? என்று அழத்தொடங்கினார்.

அப்போது தமால் நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் தன் குமாரனால் கேள்விப்பட்டு ஆச்சரியமடைந்து சற்றுநேரம் மெய்மறந்து மறுபடியும் அறிவு வந்து குமாரனைப்பார்த்து "நாயனா! பகவான் அதிக பிரீதியுடன் வந்து உனக்குத் தரிசனந்தந்து சமாதானப்படுத்திச் சென்றாரா? ஆஹா! எவ்வளவு புண்ணியம்செய்தவன்! ஆனந்தமாய் அவரது ரூபங்களைத் தரிசித்து அவர் வாக்குகளைக் காதுகளால் கேட்டு மனம் குளிர்ந்து ஆனந்தமாய், அவர் பரிசம்பட்டு சுகத்தையடைந்தாய். நீ மஹானுபாவனேயொழிய கேவலனல்லன்? இப்படிப்பட்ட பரம பவித்திரனை புத்திரனாய்ப் பெற்ற எங்கள் பாக்கியமே பாக்கியம்; எனக்கு மாத்திரம் பகவான் தரிசனம் கொடாமலிருப்பதைப் பார்த்தால் என் விஷயத்தில் ஏதோ ஓர் தோஷம் உண்டாயிருக்கவேண்டுமென்று நினைக்கவேண்டியதாயிருக்கின்றது. ஏதோ பாக்கிய விசேஷத்தினால் உன்னைக் குமாரனாய்ப் பெற்றோமேயொழிய, நிச்சயமாய் ஆலோசிக்குமளவில் நான் மிகவும் பாபி என்பதற்குச் சந்தேகமில்லை. புருஷோத்தமன் உன்னை அழைத்துவந்து என்முன்விட்டு எனக்குமாத்திரம் தரிசனம் கொடாமல் சென்றுவிட்டதே நான் முன் சொல்லியவைகளுக்குத் திருஷ்டாந்தமாயிருக்

கின்றது. அந்தப் பரமபுருஷனுக்கு என்மீது இனி கருணையுண்டாகாதோ என்னமோ தெரியவில்லை? அந்தப் புருஷோத்தமன், நேத்திரோச்சவமாய் என்றைக்கு எனக்குத் தரிசனம் கொடுப்பாரோ தெரியவில்லை. என் பாபங்களையெல்லாம் ரூபமில்லாமல்செய்து என்னை எப்பொழுது தன்யனாய்ச் செய்வார்? ஹா குமாரா! பகவானைச் சேவிக்க எனக்கு ஓர் உபாயம் சொல்லலாகாதா?" என்று சொல்லிப் பலவிதங்களாய்த் துக்கித்துக் குமாரனை ஆலிங்கனம் செய்துகொண்டு தொடையின்மீது உட்காரவைத்து அதிக பிரேமாதிசயத்துடன் அவனது தேகமெல்லாம் தடவிக்கொடுத்தபோது காயங்களில் இரத்தம் தோய்ந்திருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டு ஹா! குமாரா! இதென்ன? உன் சரீரமெல்லாம் காயங்களாயிருக்கின்றன. இவ்வாறு உன்னை அடித்தவர்கள் யார்? கேட்டதற்கு ஒன்றும் சொல்லாமல் மௌனமாயிருக்கின்றாய்? சீக்கிரமாய்ச்சொல்" என்று தொந்தரவுசெய்ய ஆரம்பித்தார். கபீர் அதைக்கேட்டு "இவர்கள் முன்பு ஒருமுறை தூராக்கிருதமாய் பிராமணர்களையெல்லாம் தும்சம்செய்யப் பிரயத்தனப்பட்டதுபோல் மறுமடியும் அவ்வாறே இப்பொழுதும் செய்யப்போகின்றார்க"ளென்று தனக்குள் தான் ஆலோசித்துக்கொண்டு தனக்கு நேர்ந்த விஷயக்களை அவரிடம் சொல்லாமல் "ஒன்றுமில்லை ஒன்றுமில்லை" என்று சங்கதிகளை மறைக்கத் தொடங்கினார். அப்போது ஜிஜ்ஜாபீபியும் வந்து பார்த்துத் தன்னால் ஆனவரையில் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டும் கடைசியில் அவள் பிரயத்தனம் ஈடேறவில்லை. அப்போது ஜிஜ்ஜாபீபி மனம் வெறுத்து தங்கள் உத்தரவில்லாமல் வெளியில் செல்லலாகாதென்று குமாரனுக்குக் கட்டுதிட்டம்செய்து "உன்னைப் பார்த்துச் சகிக்காமல் யாரோ இவ்வாறு செய்துகொண்டு வருகின்றார்கள்.

இன்றைக்கில்லாவிட்டாலும் மற்றொருநாளைக்கு அகப்படாமற் போகார்கள். அகப்பட்டபிறகல்லவோ அவர்கள் கதி தெரியப்போகின்றது'' என்று சொல்லிக் கபீரை வெளியில் போகவிடாமல் மிகவும் கண்வைத்துப் பார்த்துக்கொண்டு அடித்தவர்களைக் கண்டுபிடிக்கப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

கபீர் இராமானந்தரிடம் தாரகமந்திரம் உபதேசம் பெறுதல்.

இவ்வாறு சிலநாட்கள் சென்றபிறகு ஓர்நாள் இரவு தனக்குச் சம்பவித்த பிரதிபந்தங்களையெல்லாம் கபீர் நினைத்து நினைத்துத் துக்கித்து "ஆஹா! என் துரதிருஷ்டமெப்படிப்பட்டது! இதன் மகிமாதிசயத்தை எவ்வளவு புகழ்ந்தாலும் தீராது. இப்பொழுது வியர்த்தமாய்க் காலம் கழிகின்றதேயொழிய கொஞ்சமாகிலும் பிரயோஜனமுண்டாகவில்லை. தூர ஆலோசனையில்லாமல் பிரதிதினம் ஆகாராதி வியவகாரங்களில் அகப்பட்டுக்கொண்டு சோம்பேறித்தனத்தை விருத்தி செய்துகொண்டிருக்கின்றேன்! ஓர் விஷயத்தைப் பற்றவேண்டுமென்று திடநிச்சயமுண்டானால் அது கைகூடும்வரையில் சாதிக்கவேண்டியதேயொழிய அதை விடலாகாது. திட சித்தத்துடனிருந்து பிரயத்தினப்பட்டவர்களுக்குச் சாத்தியமாகாத காரியம் ஒன்றுமில்லை. ஓர் விஷயத்தில் பிரவேசித்தால் அனேக விக்கினங்கள் வந்துகொண்டிருப்பது சகஜம். என்ன கஷ்டங்கள் வந்தாலும் லக்ஷியம் வைக்காமல், தான் எண்ணிய காரியத்தைத் தைரியமாய்ச்செய்து வரப்பட்டவனே புருஷன். ஆஹா! நான் இராமானந்தரை ஆசிர

யித்து உபதேசம் பெறவேண்டுமென்று பிரயத்தனப் பட்டும் கடைசியில் ஏதோ ஓர் விக்கினம் நேர்ந்தவுடனே பின்னுக்கடைந்து சும்மாவிருக்கின்றேனல்லவா? எவ்விதத்திலாகிலும் குரு அனுக்கிரகம் சம்பாதித்துக் கொள்ள வேண்டியது புருஷனுக்கு முக்கியமானதென்று சிலநேரம் யோசித்து "அநாதோ தைவாக்ஷக:'' என்னும் வாக்ய ரீதியாய்த் தெய்வத்தை நம்பினவர்களுக்குத் துக்கமுண்டாக மாட்டாது. ஒருவேளை இதன்மூலமாய்ப் பிராணன் போனாலும் நன்மையே; சுவாமிகளுக்குக் கோபம் வந்தாலும் நன்மையே; அவர் சிஷ்யர்கள் அடித்துக் கொன்றாலும் உத்தமமே. எது எப்படியிருந்தாலும் இன்று சுவாமிகளின் வாக்கால் மெதுவாய் ஓர் வாக்கியத்தைக் கிரஹித்து அதையே பிரம்மோபதேசமாய்நினைத்து பக்தி சிரத்தைகளுடன் அனுசந்தானம் செய்துகொண்டு வரவேண்டும்'' என்று நிச்சயித்துக்கொண்டு, அதற்குவேண்டிய தந்திரமென்னவென்று எண்ணிக்கொண்டே அன்று இரவெல்லாம் ஓர் யுகமாய்க் கழித்து அதிகாலையில் எழுந்து தான் ஒருவராய்ப் புறப்பட்டு மணிகர்ணிகா கட்டத்திற்குச் சென்று ஸ்நானம்செய்து, சுவாமிகள் ஸ்நானத்திற்காக இறங்கும்படியில் மல்லாந்து படுத்துக்கொண்டு பரமபக்தியுடன் குருஸ்மரணை செய்துகொண்டிருந்தார்.

பிரகு இராமானந்தர் யதாப்பிரகாரம் ஸ்நானார்த்தமாய் தமது சிஷ்யர்களுடன் கூடப் புறப்பட்டு மணிகர்ணிகா கட்டத்திற்குவந்து படிகளின்வழியாய் இறங்கும்போது இருட்டாயிருந்தபடியால் தெரியாமல் கபீர் நெற்றியில் தமது பாதத்தைவைத்தார். அவர் பாதம் பட்டவுடனே "அய்யய்யோ'' என்று கபீர் கெட்டியாய்க் கூச்சலிட்டார். அப்போது இராமானந்தர் திடுக்கிட்டு "ராம ராமா'' எவனையோ ஒரு சிறுவனைத் தெரியாமல் மிதித்து

விட்டேனல்லவா என்று பரிதாபப்பட்டு அவனைத் தூக்கி தமது மிருதுவாகிய கரங்களால் சிரசுமுதல் பாதம்வரையில் கபீரைத் தடவிக்கொடுத்து மற்றொரு புறமாய்ச் சென்று கங்கையில் ஸ்நானம் செய்து நித்திய கிருத்தியங்களை முடித்துக்கொண்டு மடத்திற்குச் சென்றுவிட்டார். அப்போது கபீர் பரமானந்தமடைந்து "இப்போதல்லவா நான் கிருதார்த்தனானேன்! இன்றல்லவோ என் ஜன்மம் கடைத்தேறியது! இன்றையதினம் பகவானுக்கு என்மீது அனுக்கிரகம்உண்டாயிற்று. அன்று பிராமண ரூபமாய் வந்த பகவான் அனுக்கிரகித்த தாரகமந்திரமே இன்று ஆசாரியரும் உபதேசித்திருக்கின்றார். இதனால் சகல பாபங்களும் நிர்மூலமாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. பார்வதி தேவிக்குப் பரமேசுவரனும்; வால்மீகருக்குப் நாரதரும், பரத்துவாசருக்கு வால்மீகரும், வியாசருக்கு பராசரரும், சுகருக்கு வியாசரும் உபதேசித்தது இந்த ராமதாரக மந்திரமேயல்லவா? இந்த மஹாமந்திரத்தை நிஷ்டையுடன் அனுஷ்டித்துவந்த அனேக மகாத்மாக்கள் கடைத்தேறியிருக்கின்றார்கள். ராம தாரகமந்திரத்தை விட உத்தமமான மந்திரம் வேறே எது இருக்கின்றது! நான் கடைத்தேற இந்த மஹாமந்திரம் ஒன்றே போதாதா? திரிகரணசுத்தியாய் இந்த மந்திரத்தில் விசுவாசம்வைத்து அனுஷ்டித்தவர்கள் சந்தேகமில்லாமல் சம்சாரக்கடலைத் தாண்டுவார்கள். இதை அனுஷ்டிக்காதவர்கள் அதோகதியடைவார்கள்" என்று பலவிதங்களாய்ச் சொல்லி சந்தோஷித்துத் தான் கடைத்தேற சந்தேகமில்லைஎன்று நிச்சயித்துக்கொண்டு பரமானந்தத்தையடைந்து குருவை துதிசெய்து மறுபடியும் கங்கையில் ஸ்நானம்செய்து ஈரவஸ்திரத்துடன் வீட்டிற்குச்சென்று தாய்தந்தையர்களை நமஸ்கரித்து பகவத் கடாக்ஷத்தினால் தனக்கு இராமானந்தர்

அனுக்கிரகம் உண்டாயிற்றென்றும், அவர் சந்நிதானத்தில், நித்தியானந்த பிராப்திக்கு வேண்டிய சாதனம் சம்பாதித்துக்கொண்டு வந்தபடியால், நிச்சயமாய் நாமெல்லோரும் முக்தர்களாவதற்குச் சந்தேகமில்லை. இன்றுமுதல் நீங்களும் இராமானந்தரிடம் அதிகசிரத்தை பக்தியுடன்இருந்து அவரது சின்னங்களைத் தரித்துக்கொண்டு சதாகாலமும் ராம நாமத்தை ஸ்மரணைசெய்துகொண்டு வரவேண்டுமென்று தெரியச் சொல்லித் தான் ஓர் பட்டுப் பீதாம்பரத்தைத் தரித்துக்கொண்டு இராமானந்தர் தரித்துக்கொள்வதுபோல் நெற்றியில் பெரிய ஊர்த்துவ புண்டரமும் வைத்து துளசிமணிகளை கழுத்தில் தரித்து பூஜைக்கு வேண்டிய வஸ்துக்களை எடுத்துக்கொண்டு அதிக பக்தியுடன் "ஜயஸீதாராம் ஜயஸீதாராம்" என்று ஜபித்துக்கொண்டு மெதுவாய்நடந்து இராமானந்தர் சந்நிதானத்திற்குச்சென்று ஆசாரியருக்குச் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து அங்கிருந்த பக்தர்கள்எல்லோருக்கும் தெண்டம் சமர்ப்பித்து, தான் கொண்டுபோன பூஜை வஸ்துக்களை சுவாமிகளிடம்வைத்து நமஸ்கரித்து சாதுசங்கத்துடன் கூடி ஓரிடத்தில் பத்மாசனம்போட்டு உட்கார்ந்து வலதுஅஸ்தத்தில் ஜபமாலையைப்பிடித்து உருட்டிக்கொண்டு கண்களைமூடி ராமராமவென்று ஜபிக்க ஆரம்பித்தார்.

அப்போது அங்கிருக்கும் பக்தர்களெல்லோரும் இவரது சேஷ்டைகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டு "ஓஹோ" இதென்ன! பாழடைந்த நெற்றியில் பங்கநாமம் போட்டு கட்டுத்திட்டமாய் கழுத்தில் துளசிமாலைகள் அணிந்து கண்களை மூடிக்கொண்டு துலுக்க குரு வந்திருக்கின்றார்! ஆசாரியர் ஏதாகிலும் இவனுக்கு உபதேசம் செய்தாரோ என்னமோ தெரியவில்லை. இல்லாவிட்டால்

இவ்விதமாய்வந்து உட்காருவானா" வென்று சொல்லி முன் விரோதம்வைத்திருக்கும் பிராமணர்களெல்லோரும் கபீர் மீது எகிறிக்குதித்து "அடே துன்மார்க்கா! பக்தர்களின் நடுவில் பரம பக்தனைப்போல்வந்து உட்கார்ந்து அவர்களை யெல்லாம் அபவித்திரர்களாகச்செய்யத் தலைபட்டாயா? நீ எவ்வளவு மூர்க்க குணமுடையவனாயிருக்கின்றாய். எத்தனை விதங்களாய்ப் போதித்தபோதிலும் எங்கள் பேச்சுகளைக் காதில் போட்டுக்கொள்ளாமல் பலதடவைகளில் வந்து கொண்டேயிருக்கின்றாய்" என்றுசொல்லி பேருக்கொரு குத்துக் குத்தி காதைநிமிட்டி சபையிலிருந்து எழுப்பி இருவர்கள் கபீரினுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு "அடே! பசுவை வதைக்கப்பட்டவனே! உன் முகத்தில் பங்கநாமமும் கழுத்தில் துளசிமாலைகளும் கையில் ஜபமாலையும் என்னடா? எங்களைப் பரிஹாசஞ் செய்ய இந்த வேஷத்துடன் வந்தாயா? இப்போது உன்னை என்ன செய்கின்றோம் பார்" என்று கைகளைப்பிடித்து இழுக்க ஆரம்பித்தார்கள்.

அப்போது கபீர் பிராமணர்களைப் பார்த்து "சுவாமிகளே! என்னையேன் இவ்வாறு தொந்தரவு செய்கின்றீர்கள்? இன்றுகாலை கங்காதீரத்தில் சுவாமிகள் தாரகமந்திரம் உபதேசித்து என்னை கிருதார்த்தனாய்ச் செய்தார். இதில் உங்களுக்கு ஏதாகிலும் சமுசயம் இருக்கும்பக்ஷத்தில் சுவாமிகளை இப்போதே விசாரித்துத் தெரிந்துகொள்ளுங்கள்" என்று சொல்லினர்.

பிராமணர்கள் அதைக் கேட்டு "அப்படியானால் சுவாமிகளை நீயே விசாரிப்பாய் வா?" என்று கபீரை இழுத்துக்கொண்டுபோய் சுவாமிகளிடம் நிறுத்தி "சுவாமீ! தாங்கள் இந்தத் துலுக்கப்பையனுக்கு இன்று தாரகமந்திரம் உபதேசித்தீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு

இராமானந்தர் இவ்வார்த்தையை சொன்னவர்கள் யார்" என்று கேட்டனர். அதற்கு பிராமணர்கள் "இந்த துன்மார்க்கனே தேவரீருடைய சன்னிதானத்திலேயே நேரில் சொல்லுவதாக அழைத்துவந்தான். சுவாமிகள் இவனுக்கு உபதேசித்தது வாஸ்தவந்தானா? தயைசெய்து சொல்லவேண்டு" மென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களின் வார்த்தையக் கேட்டவுடன் இராமானந்தர் கபீரைப் பார்த்து "என்னடா உளறினாய்" என்று பாதக்குறட்டை யெடுத்து விசிறி எறிந்தார். அது, கபீர் நெற்றியில் பட்டு பெரியகாயமாய் ரத்தம் ஆறாய்ப் பெருகலாயிற்று.

அப்போது கபீர் பரமானந்தபரிதராய் பயப்படாமல் திட்டமாய் நின்று இராமானந்தரைப்பார்த்து "சுவாமி! தேவரீருடைய பாதக்குறடு என் நெற்றியில் படுவதற்கு நான் என்னபாக்யம் செய்துகொண்டேனோ அறியாமலிருக்கின்றேன். ஆஹா! இப்படிப்பட்ட பாக்யம் இங்கிருக்கும் பரம பக்தர்களுக்கு இதுவரையில் யாருக்காகிலும் கிடைத்திருக்கின்றதா? இத்தனை தினங்களுக்குப் பின் இன்றைக்கல்லவோ தேவரீருடைய கிருபாகடாக்ஷம் அடியேன்மீது உண்டாயிற்று. இன்று என் ஜன்மம் கிருதார்த்தமாயிற்று. என் பாபங்களெல்லாம் பறந்தோடிப் போயின. நீரே பரமேசுவரன்; நீரே ஜகதீசன்; நீரே சர்வேசுவரன்; நீரே பரமபாவனர்; நீரே ஜகதாசாரியர்; நீரே பரமபுருஷர்; நீரே பரமபாவனர்; நீரே தீனபந்து. உமது கல்யாண குணங்களைப் புகழ நான் எவ்வளவு மாத்திரன்?" என்று பலவிதங்களாய் ஸ்துதிசெய்து நின்றார்.

கபீர் சொல்லிய மிருது மதுரமாகிய வசனங்களால இராமானந்தர் மனமிரங்கி கபீரைப் பார்த்து "அடே கள்ளக் கும்பிடு போடும் திருட்டுப்பையா! நான் உனக்கு எப்பொழுது உபதேசம் செய்தேன் நிஜமாய்ச் சொல்"

லென்று கேட்டனர். அதற்குக் கபீர் இருகைகளையும் குவித்து அஞ்சலியஸ்தராய் நின்று "சுவாமீ! தாங்கள் இன்று அருணோதயத்திற்குமுன்! ஸ்நானார்த்தமாய் மணிகர்ணிகா கட்டத்திற்குவந்து படிகளின் வழியாய் இறங்கும்போது என் சிரசின்மீது தேவரீருடைய பாதங்களினால் மிதித்து தாரக மந்திரத்தை உபதேசிக்கவில்லையா? இதற்குள் மறந்துவிட்டீர்களா?" என்றுசொல்லி சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று இருகைகளையும் குவித்து "குருசிரோமணீ! தேவரீருடைய மஹாமஹிமையை அறிந்து புகழ நான் எவ்வளவு மாத்திரன்? நீர் நிரவயவர்; நிஷ்களங்கர்; நிர்த்தோஷர்; நிரஞ்ஜனர், நிர்க்குணர்; நிர்மலர்; அத்யாத்ம தத்வ வித்யாதனர். மானவ தேகத்துடன்வந்து இந்த உலகத்திலுள்ள சிஷ்டர்களை அனுக்கிரஹித்து துஷ்டர்களை நிக்கிரகிக்க அவதரித்த புராணபுருஷரேயொழிய வேறல்ல. என் பூர்வபுண்ணிய பரிபாக விசேஷத்தினால் இன்று தேவரீருடைய பாதஸ்பர்சமாயிற்றேயொழிய மற்றப்படிக்கு வேறல்ல. தாங்கள் என்னிடத்தில் பரிபூரண அனுக்கிரகம் வைத்து தாரக மந்திரம் உபதேசித்ததனால் இங்குநிற்க யோக்கியதை உடையவனானேனேயொழிய இல்லாவிடில் பிரஷ்டனாய் எழுந்து செல்லவேண்டியவனேயல்லவா? தேவரீர்செய்த மஹோபகாரத்திற்கு பிரதியுபகாரம் நான் என்ன செய்யப் போகின்றேன்? தேஹம் உள்ளவரையில் தேவரீருடைய பாதசேவை செய்துகொண்டு மடத்தில் விழுந்துகிடைக்கின்றேன். ஆதலால், தேவரீருடைய கருணா கடாக்ஷத்தினால் அடியேனை வீக்ஷித்து தாபத்திரயங்களை உபசாந்தி செய்து நிலைநிறுத்தவேண்டும். திரிமூர்த்தி சொரூபிகளாகிய தேவரீருக்கு மிகவும் நமஸ்காரம்செய்கின்றேன். மாயாந்தகாரத்தினால் மூடிக்கொண்டிருக்கும் கண்களைச்

சுஜ்ஞானாஞ்ஜனத்தினால் (சுத்த ஞானமென்னும் மைபோட்டு) பார்வைகளை சரிப்படுத்தி சத் பதவிக்குக் கொண்டுவந்து ரக்ஷிக்கப்பட்ட மஹானுபாவராகிய உம்மை நமஸ்கரிக்கின்றேன். தேவரீருடைய தயாரசம் சமுத்திரத்தைவிடப் பெரிதானது. உமது தயை பூமியைவிடப் பெரிது. சரணமடைந்தவனை ரக்ஷிக்கவேண்டும் ரக்ஷிக்கவேண்டும்" என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுப் பிரார்த்தித்தனர்.

கபீரினுடைய பக்தி சிரத்தைகளுக்கு இராமானந்தர் மிகவும் மெச்சி தன் கிருபா கடாக்ஷத்தினால் வீக்ஷித்து "அடே! தந்திரம் செய்து மந்திரத்தை கிரகித்துகொண்டாய்! நீ மிகவும் கெட்டிக்காரன். சிலநாட்கள் ஆசிரயித்து உன் கோரிக்கை ஈடேறாததனால், கடைசியாய் இந்த உபாயத்தினால் என்னை மோசம்செய்து காரியத்தை சாதித்துக்கொண்டாய்" என்றுசொல்லி பிராமணர்களைப் பார்த்து "இவன் சொல்லிய வார்த்தை வாஸ்தவமே. ஆதலால், இவனை இன்றுமுதல் உங்களுடன் சேர்த்துக் கொண்டு சிநேகிதனாய் பாவிக்கவேண்டு"மென்று சொல்லினர்.

இவ்வாறு இராமானந்தர் சொல்லியவுடனே குரூரபுத்தியுடைய பிராமணர்கள் இராமானந்தரைப் பார்த்து "சுவாமீ! தாங்கள் நல்ல வார்த்தையே சொன்னீர்? இருளில் தெரியாமல் இவனை மிதித்துவிட்டபடியால் எப்பொழுதும் வழக்கத்தைப்போல் ராமராமவென்று சொன்னீரேயல்லாமல் மனப்பூர்வகமாய் இவனுக்கு உபதேசித்தீரா! நாம் பிராமணர்களாயிருந்தும் இப்படிப்பட்ட நீசஜாதியுடையவனை நம்முடன் சமமாய்ச் சேர்த்துக்கொண்டபிறகு நமக்கென்ன கௌரவமிருக்கப்போகின்றது? இன்று இவன்வந்தபடியே நாளைக்கு சண்டாளன் வருகின்றான். அவனையும் அப்படியே யல்லவோ சேர்த்துக்கொள்ள

வேண்டுமென்று சொல்லப்பட்டவரேயல்லவா? எவ்வளவு துஷ்ட காரியங்களைச் செய்தபோதிலும் பிராமணன் பிராமணனே. எவ்வளவு சத்கிருத்தியங்களைச் செய்தபோதிலும் நீசன் நீசனே. கறுப்புநாயை வெள்ளைநாயாய்ச் செய்யமுடியுமா? தாங்கள் சந்நியாசியா யிருந்தும் இவ்வாறு சொல்லலாமா? ஒருவேளை தாங்கள் மனப்பூர்த்தியாய் இவனுக்கு உபதேசித்திருந்தாலும் எங்களுடன் சேர்த்துக்கொள்ளமாட்டோம். அவ்வாறு சேர்த்துக் கொள்ளும்பக்ஷத்தில் அபவாதம் பெறுவதுமேயன்றி கௌரவத்திற்கு ஹானியுண்டாகும். நம்மை ஆதரித்து வரும் உலகத்திலுள்ளவர்களெல்லோரும் உப்புக்கூட உள்ளங்கையில் வைக்கமாட்டார்கள். இவனை இங்குவராதபடிக்குக் கட்டுதிட்டம்செய்து அனுப்பிவிடுவதே உத்தமம். இவன் இவ்விட மிருக்கவேண்டுமென்று எண்ணுவீராகில் பின்னிட்டு மிகவும் வருத்தமடையவேண்டியதாய்நேரிடும். பகுஜன விரோதமாகிய இவ்வுத்தேசத்தை இதனுடன் விட்டுவிடுவதே உத்தமம். நாங்கள் சொல்லவேண்டிய விஷயங்களைச் சொன்னோம். இதற்குமேல் தங்களிஷ்ட'' மென்று சொல்லிச் சும்மா இருந்தார்கள்.

அதன்பிறகு இராமானந்தர் சற்றுநேரம் தீர்க்க ஆலோசனைசெய்து கடைசியில் விதியில்லாமற்போனதால் அவர்களின் அபிப்பிராயத்திற்கு ஒப்புக்கொண்டு "உங்களிஷ்டம்போல் செய்யுங்களென்று சொல்லி'' கபீரைப் பார்த்து "நாயனா! நீ அன்னிய ஜாதியானவன்; அதிலும் தந்திரம்செய்து என்னிடத்தில் மந்திரம் கிரகித்தவன், ஆதலால், நீ குப்தமாயிருப்பதே மிகவும் யுக்தமானதென்று எனக்குத் தோன்றுகின்றது. வீட்டில் சுகமாயிருந்து கொண்டு ராமமந்திரத்தை ஜபித்துக்கொண்டிரு. இனிமேல் நீ இந்தவழியாய் வரவேண்டாம். அப்படி வருவாயாகில்

குருவார்த்தையை மீறினவனாகின்றாய். நீ உத்தமபுருஷன். இங்கிருந்தாலென்ன அங்கிருந்தாலென்ன எல்லாம் ஒன்றே'' என்று ஆசீர்வாதம்செய்தார். அப்போது கபீர் நல்லதென்று ஒப்புக்கொண்டு குருவை சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்து செலவுபெற்றுக்கொண்டு போய்விட்டார். கபீர் சென்றவுடன் இராமானந்தர் பரமானந்தபரிதராய் சபையோர்களைப்பார்த்து "ஐயா! இதுவரையில் நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் நீங்கள் பார்த்தீர்களல்லவா? இவ்வளவு சிறுபிள்ளைக்கு பக்தி விசுவாசங்கள் எவ்வளவு பிடிபட்டிருக்கின்றன பாருங்கள்; அவனைப்பார்த்தால் நான்குவேதங்களின் சாராம்சங்களையெல்லாம் கிரகித்தவனா யிருக்கின்றான். இவ்வளவு சிறுபிள்ளைக்கு நான்குவேதங்களின் சாராம்சம் உண்டானதற்குக் காரணம் என்னவென்றால், இவன் முன் ஜன்மாந்தரங்களில் நல்ல குலத்தில் பிறந்து நான்கு வேதங்களிலும் விசேஷ பாண்டித்திய முடையவனாயும் பக்தர்களிடம் விசேஷ வாஞ்சையுடையவனாயும் குருபக்தியில் சிறந்தவனாயும் இருந்தவன்; ஏதோ பூர்வ ஜன்மங்களின் கர்மசேஷத்தினால் நீசகுலத்தில் பிறந்திருக்கின்றான். சத்கர்மங்களைச் செய்யப்பட்டவர்கள் எப்பொழுதும் நீசராகமாட்டார்கள். துஷ்கர்மங்களைச் செய்யப்பட்டவர்கள் எப்பொழுதும் பிராமணர்களாகமாட்டார்கள். ஜன்மங்களினால் என்ன பிரயோஜனம்? குணமொன்றே பிரதானமானது. ஈனஜாதியில் ஜனித்த ஒருவன் வால்மீகிரிஷி என்று பிரசித்தி அடையவில்லையா? தத்வவிசாரணைச் செய்தவர்களை பிராமணோத்தமனென்று சொல்ல சந்தேஹமே இல்லை. ஜாதி பிரதானமென்று எண்ணுவதனால் துரபிமானம் அதிகரித்து அதோகதி அடையவேண்டியதாய்நேரிடும். அந்தச் சிறுவினுடைய குணம் லக்ஷணம் நடவடிக்கை வாக்கு முத

லானவைகளைப்பார்த்தால் சாமான்யவனல்லவென்றும் அவதாரபுருஷனாகவே இருக்கவேண்டுமென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. இதுவரையில் எத்தனையோ புருஷர்கள் சிஷ்யர்களானார்களேயொழிய இவனைப்போல் இவ்வளவு கஷ்டப்பட்டு என்னிடத்தில் உபதேசம் பெற்றவர்கள் ஒருவருமில்லை. கோர கர்மங்களுக்கு ஜன்மமாகிய தனுஜவம்சத்தில்பிறந்த, பிரகலாதன் விபீஷணன் முதலானவர்கள் பரமபாகவதர்களென்று பிரசித்தியடைந்து மிகவும் பெரியோர்களென்று இப்போதும் சொல்லப்படவில்லையா? பகவானுடைய லீலா விநோதங்கள் இப்படிப்பட்டதென்று நிரூபிக்க எவர்களுக்குச் சாத்தியமாகும்? உலகத்தில் துஷ்ட குணமுடையவர்கள் வெளிவேஷம் போட்டுக்கொண்டு பிரதிதினம் ஆயிரம் அக்கிரமங்களைச் செய்துகொண்டு வருவதைத் தம்கண்களால் பார்த்துக் கொண்டிருந்தாலும் அந்த வேஷதாரிகளையே மெச்சுகின்றார்களேயொழிய விநயாதி குண சம்பன்னர்களாயிருக்கும் தீனர்களை எவ்வனவேனும் கௌரவிக்கார்கள். புத்திமானாயிருக்கப்பட்டவன் இவைகளையெல்லாம் பரிசோதித்து யுக்தா அயுக்தங்களை கிரகிக்கும்வரையில், தத்துவஞானம் உண்டாகமாட்டா'' தென்று சொல்லிமுடித்துக் கண்களை மூடி பகவத்தியானத்திலிருந்தார்.

குருவினுடைய ஆஞ்ஞானுசாரமாய் கபீர் தன்வீடு சேர்ந்து ஜனனீ ஜனகர்களை நமஸ்கரித்து நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் அவர்களுக்குத் தெரியச்சொல்லி, தான் ஒருவனாய் ரகசிய ஸ்தலத்தில் உட்கார்ந்து மிகவும் பக்தியுடன் சதாகாலமும் தாரகமந்திரம் ஜபிக்க ஆரம்பித்தார். அதுமுதல் பிரதிதினமும் காலையில் எழுந்து பாகீரதி நதிக்குச்சென்று ஸ்நானம்செய்து திட்டமாய் துவாதசோர்த்துவ புண்டரங்களைத் தரித்து துளசிமாலைகளை கழுத்தில்

போட்டு கையில் ஜபமாலையைப்பிடித்து விஷ்ணுமூர்த்தியைக் கீர்த்தனைகளினால் பாடி மெதுவாகனடந்து வீடு சேர்ந்து ஏகாந்தஸ்தலத்தில் பத்மாசனத்துடன் உட்கார்ந்து நிச்சல சித்தத்துடனிருந்து தாரகமந்திரம் ஜபித்துவிட்டு போஜனமானவுடன் மிகவும் சந்தோஷமாய் உட்கார்ந்து மிருது மதுரமாகிய பதங்களுடன் பக்தி விரக்தி விஷயங்களாகிய கீர்த்தனைகளைப் பாடி, பக்தி யோக பிரபாவங்களைப் பலருக்கும் தெரியச்சொல்லிப் பரமானந்தத்தை அனுபவித்துவந்தார்.

கபீர் மஹம்மது மதத்தை ஜயித்தல்.

இவ்விதமாய் சிலகாலம் சென்றபிறகு துஷ்டர்களாகிய துலுக்கர்களுக்கு, தமால் கபீர் முதலானவர்களின் சேஷ்டைகளைப்பார்த்து, மிகவும் அசங்கியமுண்டாய், ஒரு நாள் துலுக்கர்களெல்லோரும் காஜீவீட்டில் சபைசேர்ந்து தமாலையும் ஜிஜ்ஜாபீபியையும் வரவழைத்து "நீங்கள் ஆதியிலிருந்து சொச்சமாகிய மஹம்மது மதத்திலிருந்தும் மத்தியில் ராமநாமத்தை ஜபிப்பதைப்பார்த்தால் ஹிந்து மதத்தை அனுஷ்டிப்பதாய்க் காணப்படுகின்றது. நீங்கள் இவ்வாறுசெய்யும்பக்ஷத்தில் எங்கள் வீதியில் ஒரு நிமிஷமாகிலும் குடியிருக்கத்தகாது; இந்தவீட்டை மூடிவிட்டு உங்களுக்கு இஷ்டமானயிடத்தில் மற்றொருவீடு பார்த்துக் கொள்ளுங்கள். இனி உங்களுக்கும் எங்களுக்கும் சரிப்படாது. எங்கள்பேச்சைக் கேளாமல் நீங்கள் இவ்விடமிருப்பீர்களாகில் பின்னிட்டு அனேக விரோதங்கள்வந்து நேரிடும். எவ்வளவு ஜாக்கிரதையாகஇருக்கின்றீர்களோ அவ்வளவும் நன்மை; நாங்கள் சொல்லவேண்டிய நல்ல பேச்சுக்களைச்சொன்னோம். இனி உங்களிஷ்டம்'' என்று

நிர்ப்பந்தம்செய்ய ஆரம்பித்தார்கள். பிறகு, தமால் இவ்வார்த்தைகளையெல்லாம் தன் குமாரனிடம்சொல்லி காஜீ வீட்டிற்கு அழைத்துவந்தார். அப்போது கபீர், துலுக்கர்களெல்லோரையும் பார்த்து "உங்கள் அபிப்பிராயமென்ன"வென்று விசாரித்தனர். அதற்குத் துலுக்கர்கள், "நீங்கள் ஹிந்துமதத்தை அனுஷ்டித்து மஹம்மது மதத்தை லக்ஷியம்செய்யாமலிருப்பதனால் இனி உங்களுக்கும் எங்களுக்கும் சரிப்படாது. நீங்கள் ஹிந்துக்கள் இருக்கப்பட்ட இடத்திற்குப் போகவேண்டியதே என்று சொல்லுகின்றோம்" என்று தெரியச்சொன்னார்கள். கபீர் அதைக்கேட்டு "ஓஹோ! இதற்காகவா உங்கள்வீதியிலிருந்து போகவேண்டும் 'சரிசரி' நன்றாயிருக்கின்றது, நீங்கள் போய்விடுங்களென்றால் நாங்கள் போய்விடுவோமோ?"

'ராம்ரஹீம்' என்னும் வாக்கியத்தின் முக்கியார்த்தத்தைத் தெரிந்துகொள்ளாமல் எங்களை என் வியர்த்தமாய் நிந்திக்கின்றீர்கள்? அந்தவாக்கியத்திலுள்ள அர்த்தத்தைக் கொஞ்சம் விசாரித்துப் பாருங்கள்; அவ்வளவு அவசரப்படவேண்டாம்" என்று அதிக விநயத்துடன் கேட்டுக்கொண்டனர்.

இதைக்கேட்டவுடன் துலுக்கர்களுக்கெல்லாம் மிகவும் பண்டிதராயும் காஜீயாயும் இருக்கப்பட்டவர் ஒருவர், கபீர் சமீபமாய் வந்துநின்று, பாதமுதல் உச்சிவரையில் கபீரைப்பார்த்து அவருடன் வாதம்செய்ய ஆரம்பித்து, பின் வருமாறு கேட்கப்போகின்றார்.

காஜீ:—'ராம்ரஹீம்' என்பதில் பேதமில்லை என்று சொன்னாயல்லவா? அவ்வாறு எப்படிச்சொல்லலாம்? ராமன் என்பவன் ராஜகுமாரன். ரஹீம்என்பது ஆதியந்தமில்லாதவராய் அவாங்மனோகோசரமாய் சத்தியமாய் நித்தியமாய் நிராகாரமாய் பரப் பிரம்மமாயிருக்கின்றது. ராஜகுமாரனுக்கும் பரப் பிரம்மத்திற்கும் எவ்வாறு சம்பந்தம் உண்டாகும்? மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடப் பார்க்கின்றாய். புத்தியில்லாத பேச்சுகளைப் பேசவேண்டாம். சொல்பவனுக்கு புத்தியில்லாவிட்டாலும் கேட்பவனுக்கும் விவேகமில்லாமற்போகுமா?

கபீர்:—ஐயா! காஜீயவரே! அவ்வளவு தொந்தரவுபடவேண்டாம், நான்சொல்லும் விஷயத்தைச் சற்றே கேளும்! பரப்பிரம்மத்திலிருந்து பிரதிபலித்த விஷ்ணுமூர்த்திக்கு லோகரக்ஷண விலக்ஷணங்கள் சகஜமாதலால் அவர் பிரதி யுகங்களிலும் துஷ்ட நிக்கிரகமும் சிஷ்ட ரக்ஷணமும் தர்ம ஸ்தாபனமும் செய்யும்பொருட்டு அவதரித்துக்கொண்டிருப்பார். பூர்வம் அதிக கர்வங்கொண்டு கோரகர்மங்களுக்குட்பட்டு தர்மங்களை நிர்மூலம்செய்து எப்போதும் உலகத்தைநாசம்செய்ய ஏற்பட்ட தசகண்டனை (ராவணனை) சம்மாரம்செய்ய தேவதைகள் விஷ்ணுமூர்த்தியைப் பிரார்த்தித்தபடியால், ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியே தசரதராஜன் குமாரனாய் அவதரித்து உலகத்தை ரக்ஷித்தாரேயொழிய மற்றொருவரல்ல. இந்த மர்மத்தைத் தெரிந்துகொள்ளாமல் ஸ்ரீராமமூர்த்தியை, உன்னைப்போன்ற பாமரர்கள் சாமான்னிய மனிதனென்று நினைப்பார்களேயொழிய தத்துவவேத்தர்கள் எப்பொழுதும் அவரை புருஷோத்தமனென்றே எண்ணுவார்கள்.

காஜீ:—ஆஹா! புளுகினாலும் சரியாய்ப் புளுகவேண்டுமேயல்லாமல் இவ்வாறு புளுகினால் யார்தான்நம்புவார்கள்? உலகத்தில் தெய்வங்கள் இரண்டிருக்கின்றனவென்று இன்று உன்னால் கேள்விப்பட்டேனேயொழிய மற்றவர்களால் கேள்விப்படவில்லை. பெருமையில்லாத 'காபர்' மதத்தில் பிரவேசித்த உனக்கு இதைவிட விசேஷம் என்ன

தெரியப்போகின்றது. அநியாயமாய் காபர்களுடன் கூடி அறிவுகெட்டு அந்தியகாலத்தில் பகவானிடம் ஏன் சிக்ஷைக்குப் பாத்திரனாகின்றாய்? இனியாகிலும் எங்கள் சொற்களைக்கேட்டு ஹிந்துமதத்தை விட்டுவிடு என்று சொல்லினர்.

கபீர்:— கபீர் அதைக்கேட்டு காஜியரே! இந்த துராலோசனையினால் என்னலாபம்? நிராகாரமாகிய பரப்பிரம்மமே பிரதான தெய்வமாயிருந்தபோதிலும் அதன் பிரதிபிம்பமாகிய விஷ்ணுமூர்த்தியே சகல பிரபஞ்சத்தையும் சிருஷ்டிசெய்திருக்கின்றார். ஆதலால், ஆதியிலிருந்த பெரியோர்களெல்லாம் அவரையே தியானம்செய்துவருகின்றார்கள். மத்தியில் வந்து அஹங்காரங்கொண்ட இப்ராஹீம் முதலாகிய துரஹங்காரம் கொண்டவர்கள் ஸகுணோபாசனையை (விக்கிரக ஆராதனையை) நிவர்த்திசெய்தார்கள். அதை நிவர்த்தி செய்ததற்காக சிக்ஷை அனுபவிக்காமற் போகவில்லை. ஆதியில் பகவான் நான்முகனுக்கு உபதேசரூபமாய் பிரசாதித்த வேதங்கள் மாத்திரமே நிச்சயமானதேயொழிய சில நாட்களுக்குப்பின் மஹம்மது என்னும் ஓர் துரபிமானனால் உண்டாக்கப்பட்ட கிரந்தம் நிச்சயமானதல்ல.

காஜி :—அடே! துஷ்டா உனக்குத் தலைப்புழு ஆடுகின்றதா என்ன? ஒருநிமிஷத்தில் உன் தலைப்புழுவை எடுத்துவிடுவேன். சுத்தமாகிய எங்கள் குரானை பொய்யென்று சொல்லுகின்றாயா? நிராகாரமாகிய பரப் பிரம்மம் சங்கல்பித்தமாத்திரத்தில்உண்டாகிய இந்தப்பிரபஞ்சத்தை, சாகாரரூபமாயிருக்கும் விஷ்ணு பிரபஞ்சசிருஷ்டிசெய்தானென்று உளருகின்றாய்? உன் மூடத்துவம் இதிலேயே தெரிந்துவிட்டது. எங்கள் மதத்தை உண்டுபண்ணிய மஹம்மது பயகம்பருக்கு பகவதனுக்கிரகத்தின்படி தேவ

தூதர்கள் கொண்டுவந்து கொடுத்த குரான் என்னும் வேதமே மஹா சத்தியமானதேயொழிய மற்றவைகளல்ல. எங்களைத்தவிர, மந்தபுத்தியுடைய ஹிந்துக்களுக்கு வேதமேது? ஹிந்துக்களுக்கு வேதமே யில்லை. எங்கள் வேதத்திலுள்ள கூடார்த்தம் உன்னைப்போன்ற மொட்டைப்பையனுக்கு எங்கிருந்து கிடைக்கப்போகின்றது என்று சொன்னார்.

கபீர் :—அதற்குக் கபீர் ஐயா காஜியாரே நல்லது நீ சொல்லியதுபோல் பகவானுக்கு சங்கல்பம் ஒன்று இருப்பது வாஸ்தவமானால் விகல்பமொன்று இருக்கவேண்டியதல்லவா? சங்கல்ப விகல்பங்கள் எப்போது உண்டாயிற்றோ அப்போது அதை கிரஹிக்க மனது ஒன்று இருக்கவேண்டும். அந்த மனம் குடியிருக்க தேகம் ஒன்று வேண்டும். தேகம் இருந்தால் சந்தேகமில்லாமல் ரூபம் ஒன்று இருக்கவேண்டும். அரூபமாகிய பதார்த்தத்திற்கு ரூபமேது? நிஸ்ஸங்கல்பத்திற்கு சங்கல்பமேது? நிர்விகல்பத்திற்கு விகல்பமேது? நிஷ்கிரியைக்கு கிரியையேது?

கிரியைஇல்லாவிட்டால் ஜகத்துஇல்லை. ரூபமில்லாவிட்டால் சங்கல்பமில்லை. நிராகாரமாகிய வஸ்துவினாலேயே பிரபஞ்சம் உண்டாயிற்று. இது எப்படி இருக்கின்றதென்றால், ஆகாசத்தில் படவு போகின்றதென்று சொல்வதுபோலவும், அந்தரங்கத்தில் விருக்ஷம் நின்றிருக்கின்றதென்று சொல்வதுபோலவும், கானலில் நீர் இருப்பதுபோலவும், வெட்ட வெளியில் ரூபம் இருக்கின்றதென்று சொல்வதுபோலவும் இருக்கின்றது. சங்கல்ப விகல்பங்களில்லாமல் நிர்விகல்பமாயிருக்கும் பரப் பிரம்மத்திற்கு ரூபம் இல்லாவிட்டால் குரானை எழுதி தேவதூதர்களிடம் கொடுத்தனுப்பினாரென்பதை எப்படி நம்பலாம்? எள்ளுக்குள் எண்ணையைப்போலவும், பாலில் நெய்யைப்

போலவும் கலந்திருப்பதுபோல் எங்கும் நிறைந்திருக்கும் பரப்பிரம்மம், எந்த ஸ்தலத்தில் உட்கார்ந்து குரானை எழுதி தேவதூதர்களிடம் கொடுத்து மஹம்மதுக்குக் கொண்டுபோய் கொடுக்கும்படிச் சொல்லிற்று. ஆகாசத்திலிருந்து உத்தரவுசெய்து அனுப்பினாரென்றால் பூமி ஒன்று இருக்கவேண்டியதாய் ஏற்படுகின்றதல்லவா? மஹம்மது இருக்குமிடத்தில் பிரம்மம் இல்லாமற்போயிற்றா? ரூபமில்லாவிட்டால் இந்திரியங்களில்லை என்றல்லவா ஒப்புக்கொள்ளவேண்டும். இந்திரியங்களில்லாவிட்டால் "குரானைக் கொண்டுபோய் மஹம்மதிடம் கொடுங்க" ளென்று தேவதூதர்களுக்கு எப்படிச்சொல்லும்? பரப் பிரம்மமே எழுதினது வாஸ்தவமாயிருந்தால் துராபிப்பிராயங்களை எல்லாம் அதில் எழுதியிருப்பாரா? இப்ராஹீம் பயகம்பர் குமாரர்களில் ஒருவனாகிய இசாக் என்பவன் அவைகளில் சிலவற்றை அனுசரித்து வருவதற்குக் காரணமென்ன? அந்தக் குரான் பகவானால் ஏற்பட்டு அதில் யாதொரு குற்றங்களும் இல்லாமலிருந்தால் எல்லோருக்கும் காட்டலாமல்லவா? அதை யேன் வெளியில் காட்டுவதில்லை? மஹம்மது மதத்திற்கு மூலபுருஷனாகிய இப்ராஹீம் பயகம்பர், தன் வாக்கைப்போல் நடந்துகொள்ளவேண்டுமென்று தன் இரண்டாவது குமாரனாகிய இசாக் என்பவனுக்கு எவ்வளவுதூரம் சொல்லியபோதிலும் அதற்கு இசாக் என்பவன், கெட்ட நடவடிக்கையுள்ள உன்பேச்சை என்னிடம் சொல்லவேண்டாமென்று எதிர்த்துக்கொள்ளவில்லையா? உலகத்திலுள்ள ஜனங்களில் அநேகர்கள் தாம் கௌரவம் சம்பாதித்துக்கொண்டு பெருமை அடைவதற்காக அநேக காரியங்களைச் செய்துகொண்டு வருகின்றார்கள். அதுபோல் மஹம்மதியர்கள் பெருமை அடைவதற்காக அயுக்தமாகிய விஷயங்களையெல்லாம் சேர்த்து ஓர் கிரந்தமாய்

உண்டாக்கி அதற்குக் குரான் என்று பெயர்வைத்து இது நமக்கு பகவானால் அனுப்பப்பட்டதென்றும், இதுவே சத்தியவேதமென்றும், இதில் விதிக்கப்பட்டிருக்கும் விதிகளுக்குச் சிறிதாகிலும் லோபத்துவம் வாராமல் நடந்து கொள்ளவேண்டுமென்றும் இவ்வாறு நானாவிதங்களாய்ப் போதித்துப் புத்தியைப் பிரமிக்கச்செய்து மானவர்களை வேறெதிலும் நிலை நிறுத்தாதபடி செய்தார்களேயொழிய, அந்த மதகர்த்தர்களில் மோக்ஷமார்க்கம் இப்படிப்பட்டதென்று ஸ்திரமாய்த் தெரியப்படுத்தின மஹானுபாவன் ஒருவனுமே இல்லை? இந்த பேதபுத்தியினால் படிப்படியாய் துராபிமானம் உயர்ந்துகொண்டேவந்து தர்மங்களையெல்லாம் பாழ்செய்துகொண்டு வருகின்றதேயொழிய ஞானவிருத்திக்குச் சிறிதாகிலும் சகாயப்படுவதில்லை. மோக்ஷாபேக்ஷையுடையவர்கள் புருஷர்களைச்சேவைசெய்வதேன்? சர்வகால சர்வாவஸ்தைகளிலும் பகவத் பாதாரவிந்தங்களில் திடமாய் மனதைநிறுத்தி பூததயையுண்டாய் பக்தி செய்யவேண்டும். துர்க்கதிக்குக் காரணபூதமாயிருக்கும் பாபகர்மங்களுக்கு உட்பட்டு உபய பிரஷ்டர்களாய் இருக்கப்பட்டவர்களுக்கு பகவத் பிரசாதம் எவ்விதமாய்க் கிடைக்கும்?

காஜீ :—சகல பிரபஞ்சத்திற்கும் உபாதான காரணமாயிருக்கும் பரப் பிரம்மத்தைவிட்டு விக்கிரகங்களைப் பூஜிப்பது மூடத்துவமல்லவா?

கபீர் :—மனுஷ்யனான மானவனை மஹம்மது என்று அவனைப் பூஜிப்பதைவிட திரிமூர்த்திகளைப் பூஜிப்பதே மிகவும் முக்கியமானது, அவர்களின் மகிமை உனக்கேதாகிலும் தெரியவருமா?

காஜீ :—ஹா! அவ்வளவுமாத்திரம் தெரியாதா? விஷ்ணுமூர்த்தி லோகரக்ஷகனாய் இருந்தபோதிலும் ராவ

ணாசுரனை சம்மாரம்செய்ய மானவரூபம் எடுத்தாரென்று கேட்டபோதே அவர் யோக்கியதை இப்படிப்பட்டதென்று தெரியவந்தது.

கபீர்:—இவ்வளவேயல்லவா உனக்குத் தெரிந்தவிஷயம்! சரி சரி: துராபிமான பிசாச கிரகஸ்தர்களுக்கு இதைவிட அதிகமாய்த் தெரியப்போகின்றதா என்ன?

காஜீ:—அப்படியானால் 'அதிலுள்ள ரகஸ்யமென்னமோ, அதைச் சற்றே தெரியச்சொல் பார்ப்போம்.

கபீர்:—ஆஹா! சொல்லுகின்றேன் கேள்! பூர்வம் ராவணாசுரன் அகோரமாகிய தவம் பிரமதேவன் மெச்சும்படிச்செய்து, தேவதைகளால் மரணம் உண்டாகாதபடி அவரால் வரம்பெற்று, மானவர்களைத் தமக்கு ஆகாரபதார்த்தமாய்ச் செய்துகொண்டுவந்தான். பிரமதேவன் வாக்கிற்கு லோபத்துவம் வரக்கூடாதென்று நடத்தவேண்டியபாரம் பகவானுடையதாயிருப்பதனால் மஹாவிஷ்ணுவானவர் மானவரூபம்தரித்துக் காரியத்தை முடித்து லோகத்தை உத்தரித்தார். இதனால் தோஷமென்ன?

காஜீ:—லோகரக்ஷணை செய்யப்பட்டவன் சம்மாரம் செய்வது தோஷமல்லவா?

கபீர்:—தேசத்தைப் பரிபாலனம் செய்வது ராஜனுடைய கடமையாயிருந்தாலும் துஷ்டர்களையும் சிக்ஷிப்பதுபோல் மஹாவிஷ்ணுவானவர் லோகத்தில் சோகத்தை உண்டாக்கும் துஷ்டர்களாகிய ராக்ஷஸர்களை சிக்ஷித்தனர். இது யுக்தமானதல்லவென்று யார் சொல்லுவார்கள்?

காஜீ:—நல்லது; திரிமூர்த்திகளின் ரூபத்தை கருங்கல்லில்செய்து ஆலயத்தில் வைத்துப் பூஜைசெய்வது புத்தியில்லாததனாலல்லவா?

கபீர்:—அது, புத்தியில்லாததல்ல. அப்படிச் செய்யக்கூடாதென்பதே புத்தியில்லாதது. எங்கும் நிறைந்திருக்கும் பகவான் கல்லில் இல்லாமற்போவாரா? பகவானைப் பூஜிக்கவேண்டிய கிரமம், இரண்டுவிதங்களாய் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளில், கண்களால் பார்த்து பூஜிப்பது ஒன்று. மனக்கண்ணால் பார்த்து பூஜிப்பது மற்றொன்று. முதல் சொல்லியபூஜை, அஞ்ஞானமென்னும் இருளில் அழுந்தி இந்திரிய நிக்கிரகம்செய்ய சக்தியில்லாமல் மனம்போன போக்கெல்லாம் போய்க்கொண்டிருப்பவர்கள் செய்யவேண்டிய பூஜை. இந்திரிய நிக்கிரகம் செய்து நிச்சல சித்தமுண்டாய் ஆனந்தரஸத்தை பானம் செய்து சொக்கி இருக்கப்பட்டவர்கள் செய்யவேண்டியது இரண்டாவதுபூஜை. மனம் பரிபக்குவமில்லாத மந்தபுத்தியுடையவர்களுக்கு ஈசுவரபக்தி பிடிபடுவதற்காக ஏற்படுத்திய விக்கிரக ஆராதனை முக்கியமானதேயொழிய நிரார்த்தமல்ல. ஆயிரமேன்! பூர்வம் உங்கள் வம்சத்தில்வந்த 'ஹஸேங்' 'ஹுஸேங்' என்பவர்கள் மிகவும் அக்கிரமங்களைச் செய்துகொண்டு வந்தபோது இவர்களின் சேஷ்டைக்குத் தேவதைகள்சகிக்காமல் இவர்களைக்கொல்ல பிரயத்தனப்பட்டபோது அதைத் தப்பித்துக்கொள்ள சக்தியில்லாமல் கடைசியில் ஏரியில்விழுந்து பிராணனைவிட்ட ஹஸேங் ஹுஸேங் கைகளை வைத்துப் பூஜிப்பவர்களைவிட மூடர்கள் யார் இருக்கின்றார்களோ அதை நீயே சற்று ஆலோசித்துப்பார்.

காஜீ:—நல்லது: உங்கள் வேதத்தில் மானவர்கள் எப்படி வந்தார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது?

கபீர்:—பிரமதேவனால் மனுவும், மனுவினால் மானவர்களும் உண்டானார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

காஜீ:—இதற்கு திருஷ்டாந்தமென்ன?

கபீர்:—மனுவினால் உண்டானவர்களாதலால் மனிதர்களென்றும், மானவர்களென்றும் இவர்களுக்காக ஏற்

படுத்தப்பட்ட நீதி மனுநீதி யென்றும் இப்பொழுதும் உலகத்தில் வழங்கிக்கொண்டுவருகின்றது. இதுவே முக்கிய திருஷ்டாந்தம்.

காஜீ:—இந்த திருஷ்டாந்தம் அவ்வளவாய் நம்பத்தகுந்ததல்ல. இஃதொரு கற்பனைக் கதையாயிருக்கின்றது. எங்கள்வேதத்தில்சொல்லப்ப்ட்டிருப்பதுபோல் ஆதிபுருஷன் 'ஆதா' மேயொழிய மற்றொருவனில்லை.

கபீர்:—பகவானுக்கு ரூபம் இல்லையென்று இதுவரையில் நீ வாதித்தது ஞாபகமில்லையா? ரூபமில்லாத பகவான், அரூபமுடைய ஆதாமை எப்படி சிருஷ்டிசெய்தார்; அரூபத்திலிருந்து சரூபம் உண்டாகுமென்பது அனுபவ சித்தாந்தமல்ல. ஆனால், சொல்லுகின்றேன் கேள். இதைக் கேட்டபிறகாகிலும் உனக்குப்புத்தியுண்டாகும். அரூபமா (ரூபமில்லாமல்) யிருக்கும் பகவான் பூதங்களால் நிர்ணயம் செய்யப்பட்ட ஓர் விக்கிரகத்திற்கு பிராணனை விட்டானென்றும் அந்த விக்கிரகம் ஆதாமாய்வந்து பகவான் சொன்னபடி கேளாமற்போனதால் பகவான் ஆதாமை ஆகாசத்திலிருந்து கீழேதள்ளினதாயும், ஆதாம் பகவானுடன் விரோதித்துக்கொண்டானென்று உங்கள் சாஸ்திரத்தில் சொல்லவில்லையா? இவைகளையெல்லாம் யோசித்துப் பார்க்குமளவில் கற்பனைக் கதைகளென்று புத்திமான்களுக்கு விசிதமாய்த் தெரியவரும். நிராகாரமாகிய (ரூபமில்லாத) பகவான் ஆதியில் எந்தஸ்தலத்தில் எந்தரூபமாயிருந்தார்? விக்கிரகத்திற்கு எவ்விதமாய் பிராணனை விட்டார்? எந்தலோகத்திலிருந்து ஆதாமை கீழேதள்ளினார்? சர்வசக்தனான பகவானுடைய ஆஞ்ஞையை புருஷன் எவ்விதமாய்க் கேளாமற்போவான்? உதவாத விக்கிரகம் பரமேசுவரனிடம் எவ்வாறு விரோதித்துக்கொள்ளும்? பரமேசுவரனாகிய பகவானுக்கு நடக்கப்போகும் விஷயம்

எப்படித் தெரியாமற்போயிற்று. ரூபமில்லாத பரப்பிரம்மத்திற்கு எந்தலோகம் நிவாச ஸ்தலமாயிருக்கின்றது? நரகமோக்ஷங்கள் எந்தஉலகத்திலிருக்கின்றன? எதோ இவைகளுக்கெல்லாம் பதில் சொல்பார்ப்போம். இப்பொழுது உன்பவுஷ்யம் தெரியப்போகின்றது.

காஜீ:—பதில் கிதில் எனக்குத் தெரியாது. இப்படிப்பட்ட குயுக்திகள் சிலது கற்றுக்கொண்டு எங்களிடம் வாதாடவந்தாய். நல்லது நரக மோக்ஷமில்லையென்று இப்போது சொன்னையல்லவா? நரக மோக்ஷமென்பன எப்படிப்பட்டவைகள்?

கபீர்:—நான் உன்னைக்கேட்டால் நீ என்னைக்கேட்கின்றாயா? நல்லது சொல்லுகின்றேன் கேள்! ஜன்மமே நரகம். ஜன்ம நாசமே மோக்ஷம். (இவைகளெல்லாம் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய" த்தில் உபநிஷத்துகளின் திருஷ்டாந்தங்களுடன் சொல்லப்பட்டிருக்கின்றன).

காஜீ:—ஆஹா! இப்போது நன்றாயிருக்கின்றது. கறந்தபால் மறுபடியும் எப்படி மடியில் ஏறும்? கடைந்தெடுத்த வெண்ணை மருபடியும் மோரில் எவ்விதமாய்ச் சேரும்? சென்றநாட்கள் மறுபடியும் எவ்விதமாய் வரும்? சுட்ட இரும்பு, குடித்தநீரை மறுபடியும் எவ்விதமாய்க் கக்கும்? இதுபோல் பஞ்சபூதங்களால் உண்டாகிய தேகம் பஞ்சபூதங்களுடன் சேர்ந்தபிறகு அதன் சம்பந்தமான தேகம் மறுபடியும் எப்படி உண்டாகும்? இதுவரையில் வாதித்த வாதங்களைவிட இந்தவாதம் மிகவும் நன்றாயிருக்கின்றது! சபாஷ்! சபாஷ்! என்று காஜீ சொல்லினர்.

கபீர்:—அதைக்கேட்ட கபீர் ஏதோ மஹா சர்வஞ்ஞனைப்போல் பரிகாசம் செய்ய ஆரம்பித்தாய்? க்ஷண சிருஷ்டி க்ஷணப் பிரளயம், தினசிருஷ்டி தினப்பிரளயம்,

தேகசிருஷ்டி தேகப்பிரளயம், ஜீவசிருஷ்டி ஜீவப்பிரளயம், பிரமசிருஷ்டி பிரமப்பிரளயம் என்கிற இவ்வைந்தும் சிருஷ்டிப்பிரளயங்கள். இந்தவிஷயம் நீ அறிந்திருந்தால் அவ்வாறு பரிகாசம் செய்வாயா ?

காஜீ:—ஆனால் இதன் விவரத்தைச் சற்றே சொல் பார்ப்போம்.

கபீர்:—க்ஷண சிருஷ்டிஎன்றால் சங்கல்பம் (நினைப்பு); க்ஷணப்பிரளயமென்றால் விகல்பம் (மறப்பு); தினசிருஷ்டி என்றால் ஜாக்கிரதை ; தினப்பிரளயமென்றால் சுஷுப்தி ; தேகசிருஷ்டி என்றால் ஜனனம் ; தேகப்பிரளயமென்றால் மரணம் ; ஜீவசிருஷ்டி என்றால் தேகயோகம், ஜீவப்பிரளயமென்றால் தேக வியோகம் ; பிரமசிருஷ்டி என்றால் ஜகத்து உற்பத்தி ; பிரமப் பிரளயமென்றால் ஜகத்து லயம். இந்த விஷயங்களை உங்கள் குரானில் (கிரந்தத்தில்) எவ்விடமாகிலும் பார்த்திருக்கின்றாயா ?

காஜீ:—எங்கள் குரானில் இதுவிஷயம் இருக்கின்றதோ இல்லையோ அதைக்குறித்து உனக்கென்ன. நீ சொல்லிய விஷயங்களெல்லாவற்றையும் ஓர்விதமாய் ஒப்புக்கொண்டாலும், ஜீவன் சென்றபிறகு மறுபடியும் பிறக்கின்றானென்பதுமாத்திரம் ஒப்புக்கொள்ளத் தக்கதல்லவென்று மற்றொரு முறையும் சொல்லுவேன்.

கபீர்:—ஓஹோ ! உன் புத்திமந்தத்திற்கு என்னவென்று சொல்லலாம் ! ஜனன மரணங்கள் ஜீவனுக்கா உண்டென்று சொன்னேன் ; ஜனன மரணங்கள் சரீரத்திற்கேயொழிய ஜீவனுக்கல்ல. இதுவிஷயம் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம் 2-சுலோகம் 17-18-ல் சொல்லுகின்றது.

"அவிநாஶி து தத்வித்தி யேந ஸர்வமிதம் ததம்
விநாஶ மவ்யய ஸ்யாஸ்ய நகஶ்சி த்கர்த்து மர்ஹதி."

நான் இதுவரையில் சொல்லிவந்த பஞ்ச பூதங்களினாலுண்டாகிய சரீரம்நசித்தபோதிலும், அந்தச் சரீரத்தைத் தரித்திருந்த ஆத்மாவானது எப்பொழுதும் நாசமில்லாமல் இருக்கும். நாசமில்லாத இந்த ஆத்மாவை வேறு எந்தப்பதார்த்தங்களும் நசிக்கச்செய்யமாட்டாது. ஒரு தேகம் மரணமடைந்தால், அந்த தேகத்திலுள்ள ஆத்மாவும் மரணமடைகின்றதென்று எண்ணுகின்றாயா ? அப்படி எண்ணவேண்டாம். அதற்குக் காரணம் என்னவென்றால், அ.2-ச.18, சொல்லுகின்றேன் கேள் :—

"அந்தவந்த இமே தேஹா நித்ய ஸ்யோக்தா ஶரீரிண:
அநாஶிநோ ப்ரமேயஸ்ய தஸ்மாத்யுத்யஸ்வ பாரத."

மரணமடைவதென்றால், சாஸ்வதமாய் இருக்கப்பட்ட ஆத்மா ஒருதேகத்தினின்று மற்றொருதேகத்தில் பிரவேசிப்பதாம். ஆதலால், எந்தத் தேகத்தினின்று ஆத்மா கிளம்பிவிடுகின்றதோ அந்தத் தேகம்மாத்திரம் மரணமடைந்ததாகின்றது. அதிலிருந்த ஆத்மா அத்தேகத்தை விட்டு மற்றொருதேகத்தில் பிரவேசிக்கும். அதில்சிலநாள் குடியிருந்து அந்தத்தேகத்தை விட்டு மற்றொருதேகத்தில் பிரவேசித்து இப்படியே எப்பொழுதும் எதையோ ஓர் தேகத்தை ஆசிரயித்துக்கொண்டேயிருக்கும். ஆகையால், அசத்தாகிய தேகாதி சர்வப் பிரபஞ்சமும், கானல் ஜலத்தை முதல்பார்த்தவுடன் அது நிஜமாகிய ஜலம்போல் தோன்றி பிறகு அது ஜலமல்லவென்று அறிந்த ஒருவன் மற்றொருவனை நம்பும்படிச் சொல்லியும், சமீபத்தில் அழைத்துப்போய்க் காட்டியும் அவன் சம்சயம் எப்படி நசிக்கப்படுகின்றதோ அதுபோல் நசிக்கப்படவேண்டும். ஆத்மாவின் நிஜசொரூபமடைந்து ஜனனமரணாதி ரூபமாகிய தேகதாரணை விசர்ஜனங்கள் (நீக்குதல்) இல்லாத அவஸ்தைகளை அடைந்தால், அப்பொழுது அந்த

ஆத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாகுமேயன்றி, பஞ்ச பூதங்களால் உண்டாகிய தேகத்தைப்போல் சொரூப நாச மாகப்பட்டதல்ல. என்றால், பஞ்சபூதங்களினால் உண்டாகிய தேகம்மாத்திரம் நாசமடையத் தக்கதென்றும், ஆத்மா நித்யமாகிய வஸ்துவென்றும் அறியவேண்டும் (மற்ற விஷயங்களையெல்லாம் இந்தக் கீதையில் விரிவாய்த் தெரிந்து கொள்ளலாம். இவ்வளவு அந்தரார்த்தமாய் மற்றகீதைகளில் இராது.)

காஜீ:—இப்பொழுது நீ சொல்லுவது மிகவும் நன்றாயிருக்கிறது! இறந்த தேகமே மறுபடியும் வருகின்றதா?

கபீர்:—இறந்த தேகமே மறுபடியும் வருவதல்ல; அவரவர்கள்செய்த கர்மானுசாரமாய் ஜீவர்கள், பஞ்ச பூதங்களினாலுண்டாகிய மற்றொரு சரீரத்தை அடைகின்றார்கள். (இதன் ரகஸ்யங்களையெல்லாம் ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸயம், மனோலயத்தால் சகலமும் சித்தியடைதல், சஞ்சித பிராரப்த ஆகாம்ய கர்மங்கள் என்பதைப் பார்த்துத் தெரிந்துக்கொள்வீர்களாக.)

காஜீ:—ஜீவகோடிகள் தாம் செய்துகொண்ட பாப புண்ணியங்களுக்குத்தக்கபடி பரலோகத்தில் நகரமோக்ஷங்களை அடையவேண்டியதேயொழிய மறுபடியும் ஜன்மமெடுப்பதற்கு நியாயமில்லை.

கபீர்:—அப்படியானால், பாபகாரியங்கள் செய்தவர்களை நரகத்தில் போட்டபிறகு மறுபடியும் அவர்களுக்கு விமோசனம் எப்பொழுதுஉண்டாகும்?

காஜீ:—மறுபடியும் அவர்களுக்கு விமோசனமேயில்லை? எப்பொழுதும் அவர்கள் துக்கத்தையே அநுபவித்துக்கொண் டிருக்கவேண்டும்.

கபீர்:—ஆஹா! இது, மிகவும் யுக்தமான தீர்ப்பாயிருக்கின்றது! உலகத்தில் பூரணமாய்ப் பாபம்செய்தவர்கள் சில ரிருப்பார்கள்; புண்ணியபாபங்கள் சமமாய்ச் செய்தவர்கள் சில ரிருப்பார்கள்; புண்ணியம் அதிகமாயும் பாபம் சொல்பமாயும் செய்தவர்கள் சில ரிருப்பார்கள்; மற்றும் சிலர் பாபம் அதிகமாயும் புண்ணியம் சொல்பமாயும் செய்தவர்களா யிருப்பார்கள். இவர்களுக்கெல்லாம் கதி என்ன?

காஜீ:—பாப கிருத்தியங்களைச் செய்தவர்களுக்கு அதோகதியேயொழிய சத்கதி எப்போதுமில்லை.

கபீர்:—இது, உங்கள் கற்பனைக் கதையா? அல்லது சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றதா?

காஜீ:—இது என் கற்பனைக் கதையாகின்றது? எங்கள் சாஸ்திரத்தில் இப்படியே சொல்லப்பட்டிருக்கின்றது. எங்கள் பெரியோர்களெல்லாம் இதையே சத்தியமென்று நம்பியிருக்கின்றார்கள்.

கபீர்:—அப்படியானால் சாஸ்திரத்தின் கர்த்தர்கள் மிகவும் புத்திசாலிகளே. அந்த சாஸ்திரத்தை நம்பப்பட்ட நீங்களும் மஹா புத்திசாலிகளே. குருட்டெருது சோளக்கொல்லையில் விழுந்ததுபோல் நீங்கள் விழுந்திருக்கின்றீர்கள். ஆஹா! பாபத்திற்குத் தக்கபடி தண்டனை விதிக்காமல் எப்போதும் நரகத்திலேயே இருப்பார்களென்று சொல்வது எவ்வளவு பக்ஷபாதமான தீர்ப்பா இருக்கின்றது. நமது தேசத்தை அரசாண்டுவரும் ராஜாதி ராஜர்கள், ஓர் சிறிய குற்றஞ்செய்தவனை அதற்குத்தக்கபடி தண்டனைசெய்ய சட்டங்களை ஏற்படுத்தினார்களா! அல்லது அவன் மரணகாலம்வரையில் அநுபவிக்கத்தக்க தண்டனை செய்யும்படிச் சட்டம் ஏற்படுத்தினார்களா? சாமான்னியமான மனிதர்களே உசித அநுசிதங்களை யோசித்து விவேகத்தினால் யுக்தமாகிய நியாயங்களைக் கண்டுபிடித்து அதற்குத்தக்க தீர்ப்புச் செய்யும்படி சட்டங்களை ஏற்படுத்தி

யிருக்க சர்வஞ்ஞனும் சர்வ காருண்யனுமான பகவான், அநியாயத்திற்கு உட்பட்டு சொற்ப குற்றத்திற்காக ஜீவர்களை எப்பொழுதும் நரகத்தில் போட்டுவைப்பாரென்று சொல்வது புத்தியில்லாததன்மையே? பகவான் அவ்வாறு செய்வாராகில் அவரைவிட கடின இருதயமுடையவன் எவனும் இருக்கானென்று திடமாய் நம்பவேண்டியதே திண்ணம். ஆதலால், இப்போது நீ சொல்லிவந்த நியாயம் சிறிதேனும் நம்பத்தக்கதல்ல. நரகமென்றால் ஜனன மெடுத்துத் துக்கத்தை அனுபவிக்கவேண்டுமென்றும், மோக்ஷமென்றால் மறுஜனனமில்லாமல் எப்பொழுதும் நித்தியானந்தத்தை அனுபவிப்பதென்றும் சொல்லியிருக்கும் எங்கள் வேதமே சத்தியமானது.

காஜீ:—நல்லது, இறந்தவர்கள் மறுபடியும் பிறப்பார்களென்பதற்குத் தகுந்த காரணங்கள் ஏதாகிலும் காட்டுவாயா?

கபீர்:—ஆஹா! சந்தேகமில்லாமல் காட்டுவேன். சிலர் தாயின் கர்ப்பத்திலிருக்கும்போதே கூன் குருடு செவிடு ஊமை முதலாகிய வியாதிகளுடன் பிறப்பதே முக்கியமான திருஷ்டாந்தம்.

காஜீ:—இஃதெப்படி முக்கியமான திருஷ்டாந்தமாகும்? தாய் தந்தைகளினுடைய சுக்கில சுரோணித தோஷம் காரணமேயொழிய பூர்வஜன்ம கர்மமல்ல.

கபீர்:—பூர்வ ஜன்மத்தில் பாபகர்மமே செய்யாத நிர்த்தோஷியாயிருந்த ஜீவர்கள் நிர்நிமித்தமாய் தாய் தந்தையர்களுக்கு துக்கத்தை ஏன் உண்டாகச்செய்தது? பாப கர்மங்கள்செய்யாத ஜீவன் நிர்நிமித்தமாய் வியாதிகளையுடைய தாய்தந்தைகளின் கர்ப்பத்தில் ஏன்போய்ச் சேரவேண்டும்? சதாகாலமும் அனேக வியாதிகளால் துக்கித்துக்கொண்டிருக்கும் தாய் தந்தையர்களுக்கு, மிகவும்

ஆரோக்கியமுடைய குழந்தைகள் பிறப்பதற்கும், மிகவும் ஆரோக்கியமாயிருக்கப்பட்ட தாய் தந்தையர்கள் விசேஷ ரோகமுடைய குழந்தைகளைப் பெறுவதற்கும் காரணமென்ன?

காஜீ:—அது பகவான் சங்கல்பம்; அதற்கு விரோதமாய்ச்சொல்ல யாவரால்*சாத்தியமாகும்.

கபீர்:—யாதொரு பாபமும் அறியாத குழந்தைகளுக்கு அப்படிப்பட்ட வியாதிகளை உண்டாக்கிய பகவான் அதர்மவானும் கடின இருதய முடையவனும் இருக்கவேண்டுமல்லவா?

காஜீ:—பகவான் அப்படிச் செய்யாவிட்டால் ஜீவர்கள் இன்னும் பாபகர்மங்களை அதிகமாய்ச் செய்துவருவார்கள்.

கபீர்:—ஓர் ஜீவாத்மாவிற்கு அப்படி சிக்ஷை விதித்த மாத்திரத்தில் மற்ற ஜீவாத்மாக்களெல்லாம் பாபம் செய்யாமலிருப்பார்களா? தயாநிதியாகிய பகவான் இப்படிப்பட்ட அக்கிரமத்தில் பிரவேசிப்பாரென்பது எவ்வளவேனும் நம்பத் தகுந்ததல்ல. சாமான்யனை நியாயாதிபதியே குற்ற மில்லாமல் தண்டிக்கமாட்டான். அப்படியிருக்க, உலகத்தாரால் துதிக்கப்படும் சர்வ லோகேசுவரனை பகவான் இப்படிப்பட்ட அநியாயத்திற்கு உட்பட்டால் அவரை நிந்திப்பதற்குச் சொல்லவும் வேண்டுமோ?

காஜீ:—எங்கள் வேதத்தில் ஜீவனுக்கு புனர் ஜன்மமிருப்பதாய் எழுதியிருக்கவில்லை. மஹா பிரளயத்தில் பகவானே வந்து இறந்தவர்களையெல்லாம் எழுப்பி அவரவர்களின் புண்ணிய பாபங்களை விசாரித்து புண்ணியாத்மாக்களை சுவர்க்கத்திற்கும், பாபாத்மாக்களை நரகத்திற்கும் அனுப்புவாரென்று எழுதியிருக்கின்றது. ஆதலால், இது சத்தியம். இதற்குச் சந்தேஹமில்லை.

கபீர்:—இதுவே சத்தியமென்று நீ எப்படிச் சாதிப்பாய்? யுக்தா அயுக்தமில்லாத விஷயங்களை சத்தியமென்று சொல்வதாயிருந்தால் நீ அந்த விஷயங்களை பிரத்தியக்ஷமாய்ப் பார்த்திருக்கவேண்டுமல்லவா?

காஜீ:—பார்த்தவர்கள் எவரிருக்கின்றார்கள்? பூர்வம் நமக்காக சிரமப்பட்டு எழுதிவைத்த விஷயங்களையெல்லாம் நிச்சயமாய் நம்பவேண்டியதென்பதே முக்கியமானது. நல்லது, நீ இதுவரையில் சொல்லிவந்த சித்தாந்தப்பிரகாரம் ஜீவர்கள் பூர்வஜன்மங்களில் செய்துவந்த புண்ணியபாபங்களை ஏதாகிலும் பார்த்தாயா?

கபீர்:—யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்துவரத்தக்க விஷயங்களெல்லாம் பிரத்தியக்ஷமாயிருக்கப் போய்ப் பார்க்கவும் வேண்டுமோ? பார்த்ததுபோலவேயில்லையா? எங்கள் சாஸ்திரத்தில் நியாயமிருப்பதுபோல் உங்கள் சாஸ்திரத்தில் ஏதாகிலும் நியாயமிருக்கின்றதா? ஏதோ சற்றே எடுத்துச்சொல்லும் பார்ப்போம்.

காஜீ:—பூர்வஜன்மம் இருந்தது வாஸ்தவமாயிருந்தால். நாம் அப்போது செய்த காரியங்களில் ஒன்றாகிலும் ஞாபகமில்லாமற் போவதற்குக் காரணமென்ன?

கபீர்:—நம்மைப் பல தடவைகளில் மாயை மூடிக்கொண்டு வருவதனால் பூர்வஜன்ம கர்மவிஷயத்தில் மறப்பு வந்திருக்கின்றது. நாம் தாயின் கர்ப்பத்தில் ஒன்பது மாதங்கள் இருந்தது நிச்சயமாயிருந்தாலும் அந்தக் காரியத்தில் இப்போது ஒன்றாகிலும் ஞாபகமிருக்கின்றதா? தாய்ப்பாலை நாம் குடித்திருந்தபோதிலும் அதன் ருசி இப்படிப்பட்டதென்று நமக்கு இப்போது தெரியவருகின்றதா? நாம் சிறு பிள்ளைகளாயிருந்தபோது செய்தகாரியங்கள் அனேகமுண்டு. அவைகளில் ஒன்றாகிலும் இப்போது ஞாபகமிருக்கின்றதா? அவைகள் எதுவும் ஞாபகமில்லா

மற் போவதனால் தாயின் கர்ப்பத்தில் நிவாசம் செய்யவில்லையென்றும், தாயின்பாலைக் குடிக்கவில்லையென்றும், பால்யாவஸ்தை இல்லையென்றும் சொல்லலாமா? நாம் தாயின் கர்ப்பத்திலிருந்து பிறந்ததுமுதல் நாளதுவரையில் கிரமக்கிரமமாய் புத்திகள் மாறிக்கொண்டு வந்தவைகளையெல்லாம் சொல்வதற்குச் சாத்தியமாகாமலிருக்க மாயையால் மூடப்பட்டிருக்கும் பூர்வ ஜன்மங்களைச் சொல்ல எவர்களால் சாத்தியமாகும். (இதுவிஷயம் விவரமாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் தாயின்கர்ப்பத்தில் பிண்டம் தரிப்பது என்பதைப் பார்க்க.)

காஜீ:—பூர்வஜன்மத்தில் செய்த சுகிருத துஷ்கிருதங்கள், இந்த ஜன்மத்தில் எவ்வாறுசேரும்.

கபீர்:—சிறுபோதுமுதற்கொண்டு நல்ல காரியங்களிலாகிலும் அல்லது, கெட்டக் காரியங்களிலாகிலும் நாம் மனதை பிரவர்திக்கச்செய்து அதையே அப்பியாசம்செய்து வருவோமாகில், அது மனதில் வேரூன்றிக் கடைசியில் அதை விட்டுவிட அசாத்தியமாய்விடுகின்றது. அற்ப ஆனந்தத்தை அனுபவிக்க பழக்கப்படுத்தினவர்களுக்கு மஹதானந்தத்தை அனுபவிக்க இடங்கொடாமல் பாமரத்துவத்தில் மூழ்கியிருக்கச்செய்வதே பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாயிருக்கின்றது. அதுபோல், பூர்வ ஜன்மங்களின் வாசனா விசேஷத்தினால் அந்தந்த ஜன்மத்தில் சுகிருத துஷ்கிருதங்கள் பற்றிவருகின்றன.

காஜீ:—நீ சொல்லப்பட்டவைகளெல்லாம். புத்திக்கு எட்டாத விஷயங்களாயிருக்கின்றன. எங்கள் வேதத்திலுள்ள விதிகளே யுக்தமானவைகளாயிருக்கின்றன.

கபீர்:—உங்கள் வேதத்தில் பாபாத்மாக்களுக்கு நரகமென்றும், புண்ணியாத்மாக்களுக்கு சுவர்க்கமென்

றும் சொல்லப்பட் டிருக்கின்றதல்லவா? அப்படியிருக்க பிறந்த ஐந்தாறு மாதத்திற்கெல்லாம் மரணமடைந்த குழந்தைகளுக்கு என்னகதி உண்டாகும்? சற்றே தெரியச் சொல் பார்ப்போம்.

காஜீ:—அவர்களுக்கு எந்தக்கதியும் விதிக்கப்பட் டிருக்கவில்லை.

கபீர்—எந்தக் கதியும் விதிக்கப்படாவிட்டால் அந்த ஜீவாத்மா எங்கு போகவேண்டியது? பிரபஞ்சமென்றால் அதில் சுவர்க்க நரகங்களும் சம்பந்தப் பட்டேயல்லவா இருக்கவேண்டும்? அப்படிக்கில்லாமல் சிலவிஷயங்களில் வித்தியாசப்பட்டிருப்பதற்குக் காரணமென்ன? சுவர்க்க நரகங்களுக்கு சம்பந்தப்படாத பிரபஞ்சத்தை பகவான் ஏன் சுருஷ்டி செய்தார்?

காஜீ:—சமஸ்த பிராணிகளுக்கும் மரணமுண்டென்று அறிந்து பயப்பட்டு நல்லநடவடிக்கையாய் நடத்தவேண்டுமென்றும் அநித்தியமாகிய பதார்த்தத்தை எப்போதும் அபேக்ஷிக்கக் கூடாதென்றும் தெரிந்து நடப்பதற்காக பிரபஞ்சத்தை சிருஷ்டிசெய்தார்.

கபீர்:—ஆஹா! இப்போது மிகவும் நன்றாயிருக்கின்றது! பிறந்தபோதும், ஜீவித்திருக்கும்போதும், இறந்தபோதும் குழைந்தைகளுக்குத் துக்கமேயல்லவா சம்பவிக்கின்றது? பூர்வ ஜன்மங்களின் கர்மமே இல்லாவிட்டால் பிறந்து இறக்கவேண்டிய குழந்தைகள் வியாதியினால் பிடிக்கப்பட்டு மரணம் அடையவேண்டியதேன்? சிசுக்கள் பாதைப்படும்தோஷம் யாரைச்சேரும்?

காஜீ:—அது ஈசுவர விலாசமாதலால் எவர்களின் மீதும் சொல்லலாகாது.

கபீர்:—அப்படியானால், நாமும் ஜனங்களை வேடிக்கையார்த்தமாய் பாதித்து இதுவும் ஓர் விலாசமே என்று சொல்லலாமல்லவா?

காஜீ:—அப்படிச் சொல்லலாகாது. தாய்தந்தையர்களின் துஷ்கிருத்தியங்களினாலேயே சிசுக்களுக்குக் கெட்ட வியாதிகளும் சம்பவிக்கின்றதென்றே சொல்லலாம்.

கபீர்:—இப்பொழுது நீர் சொல்லுவது மிகவும் நன்றாயிருக்கின்றது; நீர் சொல்லியதுபோல் தாய்தந்தையர்கள் செய்யப்பட்ட கர்மங்கள் பிள்ளைகளைச் சேருகின்றதென்று சொன்னால், பாபிகளின் கர்ப்பத்தில் புண்ணியாத்மாக்களும், புண்ணியாத்மாக்களின் கர்ப்பத்தில் பாபாத்மாக்களும் பிறப்பதற்குக் காரணமென்ன? அநேக இடங்களில் குமாரன் அதிகாரஸ்தனையும் தந்தை சேவகனையும் இருப்பதை பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கின்றோமல்லவா? நீர் சொல்லியது நியாயமாயிருந்தால் இவ்வாறுவதற்குக் காரணமென்ன? அவரவர்செய்த கர்மத்தை அவரவர் அநுபவித்தே தீரவேண்டுமே யொழிய ஒருவர் செய்த கர்மம் மற்றொருவரைச் சேருமென்பது நியாயமல்ல. ஒருவனுக்கு அநேக குமாரர்களிருக்கின்றார்கள்; அவர்களில் ஒருவன் அவிவேகியாயும், ஒருவன் விவேகியாயும், ஒருவன் ஜாரனையும், ஒருவன் சோரனையும், ஒருவன் ரோகியாயும், ஒருவன் ரோகமில்லாதவனையும், ஒருவன் தனவானையும், ஒருவன் தரித்திரனையும், ஒருவன் குரூபியாயும், ஒருவன் போகியாயும், ஒருவன் யோகியாயும், இவ்வாறு வித்தியாசப்பட்டிருப்பதற்குக் காரணமென்ன? இவைகளெல்லாம், அவரவர்கள் பூர்வ ஜன்மங்களில் செய்த கர்மத்தினால், அந்தந்தக் குணங்களும் ரூபங்களும் ரோகங்களும் வருகின்றதேயொழிய இவைகளெல்லாம் ஈசுவர விலாஸம் அல்லவென்று அறியக்கடவாய். சர்வகாருண்ய

னை சர்வேசுவரனுக்குப் பக்ஷபாதம் எப்போதும் இராது.
ஜீவாத்மாக்கள் அநுபவிக்கும் துக்கம் ஈசுவர விலாச
மென்று சொல்லுவதைவிட விருத்தமானது மற்றொன்
றில்லை. ஆதியில் நான்முகன், மனு என்பவரைச் சிருஷ்டி
செய்தார். அவர் மனுஷ்யர்களைச் சிருஷ்டிசெய்து, வேத
விதிப்படி தர்மங்களுக்கு உட்பட்டு நடப்பவர்களுக்கு சத்
கதி உண்டாகுமென்றும், இதற்கு விரோதமாய் நடந்து
கொள்ளப்பட்டவர்களுக்கு துர்க்கதிகள் உண்டாகுமென்
றும் விதிகள் ஏற்படுத்தி சுருதி சம்மதமாகிய ஸ்மிருதியும்
ஒன்று எழுதினார். இப்பொழுதும் அது மனுஸ்மிருதி
என்று விவகரிக்கப்பட்டிருக்கின்றது. அந்த ஸ்மிருதியில்
சொல்லப்பட்டிருக்கும் விதிகளை அநுசரித்து தேஹாதிப்
பிரபஞ்சம் அநித்தியமென்றும், பரப் பிரம்மம் ஒன்றே
நித்தியமானதென்றும் சிலர் திடமாய்த் தெரிந்துகொண்டு
சதாசார சம்பன்னர்களாய்ச் சத்துவகுண விசிஷ்டர்களாய்
பிரம்மநிஷ்டா கரிஷ்டர்களாய் ஞானதிருஷ்டி சம்பாதித்
துக்கொண்டு, கண்கள் மூக்கு வாய் கைகள் கால்கள் முதலா
னவைகளினால் உண்டாகும் துர் சேஷ்டைகளையெல்லாம்
நஷ்டப்படுத்தி மனதைஜயித்து பிரம்மானந்தத்தில் மூழ்கிப்
பெரியோர்களைச் சேவித்துக்கொண்டு மோக்ஷ சாம்ராஜ்
ஜியத்தை அடைந்து நித்தியானந்தத்தை அநுபவித்துக்
கொண் டிருப்பார்கள். ஸ்மிருதியில் சொல்லப்பட்ட
விதிப்படி நடவாமல் விஷய சுகங்களுக்கு ஆசைப்பட்டு
ராகத் துவேஷங்களில் அகப்பட்டு பூததயை முதலாகிய
சுகுணங்களையெல்லாம் விட்டு சத்காரியங்களிலிருந்து நீங்கி
அழிந்துப் போகத்தக்க தேகத்தை நிச்சயமென்று எண்ணி
தேஹ போஷணார்த்தமாய் இதர ஜீவாத்மாக்களை இம்
சித்து அனேக அக்கிரமங்களைச் செய்து பாவத்தைச்
சம்பாதித்துக்கொண்டு அனேக தடவைகளில் நானாவித

யோனிகளில் பிறந்துகொண்டும் இறந்துகொண்டும்
மாயாந்தகாரத்தில் அகப்பட்டு வழிதெரியாமல் தடுமாடித்
துக்க சாகர (சமுத்திர)த்தில் மூழ்கி பலவிததுக்கங்களை
அநுபவித்துக்கொண் டிருப்பதனால் இவர்களை அடிக்கடி
சிருஷ்டிசெய்ய பிரமதேவனுக்கு விசேஷமான கஷ்டத்
தைக் கொடுத்துக்கொண்டுவருகின்றார்கள். பிரபஞ்சத்தை
சிருஷ்டிசெய்து, ஜீவாத்மாக்கள் கோரியவைகளையெல்
லாம் கொடுக்கும்படி பகவான் வாக்தானம் செய்திருப்
பதனால், ஜீவர்கள் நித்தியானந்தபதவியைக் கோராமல்
துக்கசுக விஷயங்களை அநுபவிக்க இச்சைகொண்டு
மோஹாந்தகாரத்தில் அகப்பட்டு கேவல விஷயானந்த
பரர்களாய் கடைசியில் பசு பக்ஷ்யாதி ஜீவஜந்துகளின் ஜன்
மங்களை அடைந்து யுக்தமான ஸ்திதிக்குவராமல், அதி
லேயே அனேககாலம் இருந்து அநுபவிக்கவேண்டியதா
யிருக்கின்றது. பரமேசுவரர் அநுக்கிரகம் சம்பாதித்துக்
கொள்ளாமல் மாயையில் அகப்பட்டு, சுந்தரி சுகந்த சந்தன
புஷ்பதாம்பூலாதி போகங்களில்சொக்கி, பவசாகரத்தில்
மூழ்கி ஜனன மரணமென்னும் அலைகளில் அகப்பட்டுக்
கொண்டு அதிலிருந்து தப்பித்துக்கொள்ள உபாயம் தெரி
யாமல் தத்தளித்துக்கொண் டிருப்பார்கள். இவர்களின்
கர்மத்தினால் இவ்வாறு அவதிபட்டுக்கொண் டிருக்கின்றார்
களேயொழிய ஈசுவரனிடத்தில் சிறிதேனும் பக்ஷபாதமே
யில்லை. ஒருவனுக்கு இரண்டு குமாரர்களிருந்தால் அவர்க
ளில் ஒருவனைப் பல்லக்கில் உட்காரவைத்து மற்றொரு
வனைப் பல்லக்குச் சுமக்கும்படிச் செய்விக்க அவனுக்கு
மனம்வருமா? துன்மார்க்கனுக்கு புத்திசொல்லி சன்மார்க்
கத்திற்கு வரும்படிச் செய்விக்கும் தந்தையைப்போல்,
ஈசுவரனும் ஜீவாத்மாக்களை சத்கர்ம துஷ்கர்மங்களுக்குத்
தக்கபடி சுகதுக்கங்களை உண்டாக்கினாரேயொழிய நிர்

நிமித்தமாய் ஜீவர்களுக்கு ஜனனமரண முதலாகிய துக்கத்தை உண்டாக்கவில்லை. இப்போது நான் சொல்லிய விஷயங்களையெல்லாம் சற்றே யோசித்துப்பார்.

காஜீ—நீ சொல்லியது சரியல்ல; சம்போககாலத்தில் தாய் தந்தைகளின் சங்கல்பப்பிரகாரமே அந்தந்தக் குழந்தைகள் பிறக்கின்றன.

கபீர்:—நீர் சொல்லுவது யுக்தமானதல்ல. அந்தந்த ஜீவாத்மாக்களின் கர்மத்திற்குத்தக்கபடி கர்ப்பந்தரிக்கும் நாட்கள் நல்லசமயமோ அல்லது கெட்டசமயமோ நேரிடுகின்றதேயொழியே, தாய்தந்தைகளினுடைய சங்கல்பத்தினாலல்ல அதாவது, பூர்வஜன்மங்களின் புண்ணிய பாப விசேஷங்களால் நல்லசமயமும் கெட்டசமயமும் தனக்குத் தானாகவேவந்து ஒத்துக்கொள்ளும். பாபிகளுக்குப் பிறந்தவர்கள் பாபிகளாகவும், புண்ணியவான்களுக்குப் பிறந்தவர்கள் புண்ணியவான்களாகவும் இரார்கள். தாய் தந்தைகளினுடைய சுகுண துர்க்குணங்களுக்குத்தக்கபடி குமாரர்களுக்கும் சுகுண துர்க்குணங்கள் காரணமாயிருந்தால், துன்மார்க்க நடவடிக்கையுடைய குமாரனைத் தாய்தந்தையர்கள் தண்டிப்பதற்குக் காரணமேயில்லாமலிருக்கும். ஆதலால், இது எவ்வளவேனும் நியாயமல்ல. அவரவர்களின் கர்மானுசாரமாய் அவரவர்களுக்கு நடக்கின்றதென்பதற்குச் சந்தேகமில்லை. ஒருவன் பல்லக்கில் ஏறுகின்றான். மற்றொருவன் பல்லக்கைச் சுமக்கின்றான். இன்னொருவன் ராஜ்ஜியபாரஞ் செய்கின்றான். சிலர் சேவகாவிருத்தி செய்துகொண்டிருக்கின்றார்கள். இவைகளெல்லாம் பகவத் சங்கல்பமென்றால், ஈசுவரனிடத்தில் பக்ஷபாததோஷம் இருப்பதாய் எண்ணவேண்டும். ஈசுவரன் எப்போதும் பக்ஷபாதமுடையவனல்லன், சமஸ்த ஜீவர்களும் அவருக்குச்சமமேயாம். அவர், வெய்யில் நிலவு மழை

அக்கினி முதலாகிய சமஸ்த பதார்த்தங்களையும் ஜீவகோடிகளுக்கெல்லாம் சமமாய் பிரசாதித்திருக்கின்றாரேயொழிய, வித்தியாசமாய் ஒன்றும்செய்யவில்லை. ஈசுவரனுக்கு ராஜன் செய்த உபகாரமென்ன? சேவகன்செய்த அபகாரமென்ன? அரசனாய்ப் பிறப்பதற்கும் சேவகனாய்ப்பிறப்பதற்கும் காரணம், பூர்வஜன்மங்களில் அவரவர்கள் செய்த கர்மமேயாம். ஈசுவரனுக்கு பக்ஷபாதம் இருக்கும்பக்ஷத்தில் அவருக்குச் சர்வசமரஸனென்றும், சர்வ காருண்யனென்றும் சொல்லும் பெயர்களெல்லாம் வியர்த்தமே. அந்தர்திருஷ்டி விசிஷ்டர்களுக்கு நிர்க்குணப் பிரம்மமாயும், பஹிர்திருஷ்டி விசிஷ்டர்களுக்கு சகுணப் பிரம்மமாயும் பிரசன்னமாய் ரக்ஷிப்பவன் ஒருவனேயொழிய மற்றொருவனில்லை. இனி, உன் அவிவேகத்தை இதனுடன் விட்டுவிட்டு, சகுணோபாசனைசெய்து கிருதார்த்தனாயிரு. எட்டாத கனிக்கு எட்டிஎட்டி ஏன் ஆசைப்படுகின்றாய் என்றுசொல்லினர்.

காஜீ:—அதற்குக் காஜீ சரியடா கபீர்! நல்லபேச்சு சொன்னாய்! சகுணோபாசனை செய்பவனுக்கு சிக்ஷை தப்பாதென்றும், நிர்க்குண பிரம்மத்திற்கு ரூபமிருக்கின்றதென்றும் சொல்லப்பட்டவனை நறுக்கிவிட்டபோதிலும் பாபமில்லையென்று எங்கள்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. நீ பரப்பிரம்மத்திற்கு ரூபமுண்டென்று வாதிக்க வந்தபடியால் இப்போது உன்னை சிக்ஷிக்கவேண்டியதாயிருக்கின்றது.

கபீர்:—ஓஹோ! இது, விசித்திரமாயிருக்கின்றது. உலகத்தையெல்லாம் ஜாலவித்தையினால் பிரமிக்கச்செய்து தான் கௌரவம்பெற எண்ணங்கொண்டு கெட்ட எண்ணமுடைய ஓர் மனுஷ்யனால் ஏற்படுத்தப்பட்ட புஸ்தகத்தில் இதைவிட வேறே என்னவிசேஷமிருக்கப்போகின்றது.

முதலும் நுனியுமில்லாமல் இவ்விதமாய் எழுதிவைத்த கற்பனைக்கதைகள் அனேகமுண்டு அறியாத்தன்மையினால் அவைகளையெல்லாம் சத்தியமென்று எண்ணி பிரஷ்டர்களானபேர்கள் அனேகர்கள் உண்டு; அது அவ்வாறிருக்கட்டும்; "இப்ராஹீம் பயகம்பர்" பிறப்பதற்குமுன் இந்த உலகத்திலுள்ளவர்களெல்லாம் சகுணோபாசனம் செய்துகொண்டிருந்தார்களா இல்லையா?

காஜீ:—ஆம் செய்துகொண்டிருந்தார்கள். பகவதாஞ்ஞானுசாரமாய் "இப்ராஹீம் பயகம்பர்" அவதரித்து, அதற்குமுன் அவிவேகதசையிலிருந்தவர்களுக்கெல்லாம் நல்ல உபதேசம்செய்து, அதுவரையில் அனுஷ்டித்துக்கொண்டுவந்திருந்த துராசாரங்களையெல்லாம் நிர்மூலம் செய்து, நிர்க்குண பிரம்மோபாசனமே முக்கியமாய்ச் செய்யவேண்டியதென்று நிபந்தனைச்செய்தார். அப்போதிருந்து எல்லோரும் சகுணோபாசனத்தைவிட்டு நிர்க்குணோபாசனத்தை அனுஷ்டித்துவந்தார்கள்.

கபீர்:—"ஐயா! நீ இவ்வாறுசொல்லியதனால், உங்கள் 'இப்ராஹீம் பயகம்பர்' லக்ஷணங்களில் சிலவற்றையெல்லாம் நான் இப்போது சொல்லவேண்டியதாய் நேரிட்டது. அதைச்சொல்லுகின்றேன்கேள். உங்கள் இப்ராஹீம் பயகம்பர் தந்தை, ஆதியில் விக்கிரகங்களைச்செய்து இதரர்களுக்கு விக்கிரயம்செய்துகொண்டு தானும்விக்கிரகஆராதனையைச் செய்துகொண்டிருந்ததுமேயல்லாமல், விக்கிரக ஆராதனமேபிரதானமானதென்றும், பாமரர்களுக்கு இதைவிட சுலபமானஉபாயங்கள் வேறொன்றுமில்லையென்றும் உபதேசம் செய்துகொண்டு வரவில்லையா? பிறகு உங்கள் இப்ராஹீம் பயகம்பர் பிறந்து தன் தந்தையுடன் விக்கிரக ஆராதனைகள் செய்யக்கூடாதென்றுசொல்லி வாதாடி எதிர்த்தபோது ஊர் ஜனங்களால் உதையுண்டு துரவஸ்தை

கள்பட்டுக் கடைசியில் அவர்களின் இம்சைகளுக்குச் சகிக்காமல், இவன், நல்ல விஷயங்களைப் போதித்து ஜனங்களைத் துன்மார்க்கவிஷயத்தில் போகவிடாமல் சன்மார்க்கவிஷயத்தில் கொண்டுவரப்பட்ட வமிசத்தில் பிறந்திருந்தும், ராஜகுமாரத்தியைத் தன்குமாரத்தியாய்எண்ணாமல், அவ்வூர் அரசகுமாரத்தியைத் திருட்டுத்தனமாய் அழைத்துக்கொண்டு தன் தேசத்தைவிட்டு ஓடிப்போய், மற்றொரு தேசத்தில்பிரவேசித்து அதனுடன் சும்மாவிராமல், அந்தத் தேசத்தை ஆண்டுவந்த அரசனது குமாரத்தியாகிய 'ஸாரா, என்பவள் மிகவும்சௌந்தரியவதியாயிருந்தபடியால், அவள்மீது அதிகமோஹங்கொண்டு, அவளை விவாகம் செய்து அவள்மீதிருந்த மோஹத்தினால் அவள், தன் சக்களத்தியின்மீது சொல்லிய துஷ்டகாரியங்களுக்கு ஒப்புக்கொண்டு "தாய்தந்தையர்களிடம் சுகமாயிருந்தவளை துர்ப்போதனைச்செய்து அழைத்துக்கொண்டுவந்தோமே,இவளை மோசம்செய்யலாகாதென்று" கொஞ்சமாகிலும் கனிகரம் உண்டாகாமலும், தர்மத்தையும்கூட எண்ணாமலும், பூரண கர்ப்பத்துடனிருந்த தன் பெரியபார்யாளைக் காட்டிற்கு ஓட்டிவிட்டு, அவள் கதி என்னமாயிற்றென்றும் விஜாரிக்காமல், நிர் விசாரமாயிருந்து கடைசியில் அவள் ஆண் குழந்தையைப்பெற்று சுகமாயிருந்த சங்கதியை இப்ராஹீம் பயகம்பர் கேள்விப்பட்டுத் தனது சிறியபாரியாளுக்குத் தான்செய்துகொடுத்த பிரமாணத்தைமீறி மறுபடியும் பெரியபாரியாளைத் தன்னிடம் வரவழைத்துக்கொள்ளவில்லையா? இந்தக் குற்றத்தினால், 'ஸாரா' தகப்பனாகிய அரசன், இப்ராஹீம் பயகம்பரை மொட்டைஅடித்து தோலை அறுத்து பெறுத்த சிக்ஷை செய்யவில்லையா? கடைசியில் பெரியபாரியாள் 'மஜரா' வின் குமாரன் 'இஸ்மாலும்' சிறியபாரியாள் 'ஸாரா' வின் குமாரன்

'இஸாக்' என்பவர்கள் பிரசித்தியடைந்து தகப்பனை நிர்லக்ஷியம்செய்து தமக்கு உத்தமமானதென்று தோன்றிய மற்றொருமதத்தில் பிரவேசித்ததைத் தகப்பன் பார்த்து, அவர்களை மெதுவாய்த் தன்வழிக்குக் கொண்டுவர சக்தியில்லாமல் 'நம்ருத்பாச்சா' முதலானவர்களால் அந்தத் தேசத்தைவிட்டு துரத்தியபோது தீவாந்தரம் போய்ச் சேர்ந்து, அவ்விடம் மிருகத்திற்குச் சமானமான புருஷர்கள் காட்டில் திரிந்துகொண்டிருக்கும் வேடர்களைத் தன் ஜாலவித்தையினால் வசப்படுத்தி, தான்கெட்டதுமல்லாமல் அவர்களையும் கெடுக்கத்தலைப்பட்டு தன்னை ஆசிரயித்துக் கொண்டிருந்த வேடர்களையெல்லாம் பாபகர்ம ஆசாரங்களுக்குப் பிரவேசிக்கும்படிச்செய்து, அவிவேகமென்னும் ஆழமுள்ள பாழுங்கிணற்றில்தள்ளி, மறுபடியும் மேலிளமபாவண்ணம் தன்னிஷ்டம்போல் எழுதிவைத்த புஸ்தகத்திற்கு வேதமென்று பெயர்வைத்து பாழ்செய்துவைக்கவில்லையா? கடைசியில், ஸநாதன மதத்தை அனுஷ்டித்துவந்த புத்திமான்கள் அந்தப் புஸ்தகத்தைப் பரீக்ஷித்தபோது விரோதவிஷயங்கள் அதில் இருந்தபடியால், அது உலகத்தைக்கெடுக்க முக்கியசாதனமா யிருக்கின்றதென்று எண்ணி, அந்தப் புஸ்தகத்தைச் சமுத்திரத்தில் போடவில்லையா? அப்போது, இப்ராஹீம் பயகம்பர் சிஷ்யர்கள் துராசாரமதத்தை அனுஷ்டித்துவந்தபடியால், ஹிந்து மதத்தில் பிரவேசிப்பதற்குச் சாத்தியமாகாமல் துஷ்டர்களென்றும் மிலேச்சர்களென்றும் வழங்கப்பட்டு அனேக கஷ்டங்களைப் படவேண்டியதாய் நேரிட்டது. கடைசியில் இஸ்மாலுடன் கூடிக்கொண்டு அஜரா என்னும் ஸ்தலத்தைத் தமக்கு முக்கியஸ்தானமாய்ச் செய்துகொண்டு அதற்கு 'மக்கா' என்று பெயர்வைத்து இதுவே பரம பவித்திரமான திவ்விய க்ஷேத்திரமென்று எண்ணி யிருந்தார்கள்.

அதன்பிறகு பிறந்த மஹம்மது என்பவரால் புதிதாய் ஏற்படுத்திய புஸ்தகத்தையே வேதமென்றும் குருவென்றும் பெயர்வைத்து அவரையே ஆசாரியரென்று எண்ணியிருந்தபடியால் அந்த ஆசாரியர், 'நம்ருத் பாச்சா' வினால், 'இப்ராஹீம் பயகம்ப' ருச்கு மொட்டைஅடிப்பித்து தோலை அறுத்து சிக்ஷையாய் விதித்திருந்தவைகளையே கௌரவித்து, அதுவே ஆசாரமானதென்றும் எல்லோரும் அதுபோல் அனுஷ்டித்துவரவேண்டுமென்றும் சொன்னபடியால் எல்லோரும் அவர்சொல்லியதுபோல் அனுஷ்டித்து வந்தார்கள். இப்போது நீங்கள் அனுஷ்டித்துவருவது அந்த மதமேயல்லவா? 'இஸாக்'குடன் சேர்ந்தவர்கள், தாங்கள் பகவானுடைய குமாரர்களென்றும் தம்மை ஆசிரயித்தவர்களுக்கே பாபவிமோசனமேயொழிய இதரர்களுக் கில்லையென்றும் உலகத்தாரைப் பிரமிக்கச் செய்யவில்லையா? இவைகளுக்கெல்லாம் காரணம், விக்கிரக ஆராதனையை விட்டுவிட்ட 'இப்ராஹீம் பயகம்ப' ருடைய அவிவேகமேயொழிய வேறல்ல. நல்ல மார்க்கத்தைவிட்டு தன்மார்க்கத்தில் பிரவேசித்தவர்களுக்கு, மத்தியில் எழுதிவைத்த புஸ்தகமே வேதமென்றுசொல்லி ஜாலவித்தையினால், அவர்களை மயக்கச்செய்த மஹானுபாவனையே குருவாய் வைத்துக்கொண்டது, எவ்வளவு ஆச்சரியகரமானதா இருக்கின்றது. இப்போது மிகவும் பெருமையாய்ச் சொல்லிக்கொண்டுவந்த மஹம்மதுக்குமுன் குருவாயிருந்தவர்கள் யார்? அப்போதிருந்த வேதம் எது? இதை நீங்கள் அறிவீர்களா? ஜீவஹிம்சை செய்யப்பட்டவர்களுக்கு ஹிம்சைசெய்வது பாவமென்று போதித்தால், அந்தப்போதனைப் பெறுத்த குற்றமாய் ஏற்பட்டு, அதனால், துவேஷம் உண்டாவதுபோலும், துராசாரமுடையவனுக்கு சதாசாரமும், வியபிசாரிக்குப் பதிவிரதா தர்மங்களைச்

சொன்னால் அவை, அவர்களுக்கு வெகுட்டலாகவேயிருந்து கடைசியில் விரோதமாய் வந்துமுடியும். எவரெவர்களுக்கு எதையெதைப் போதிக்கவேண்டுமோ அவரவர்களுக்கு அதையதைப் போதிக்கவேண்டுமேயொழிய, இதரர்களுக்குப் போதிப்பதனால் தொண்டைக்குக் கஷ்டமேயொழிய, மற்றொன்றில்லை"யென்று சொல்லிமுடித்தவுடனே, அவ்விடமிருந்த துலுக்கர்களுக்கெல்லாம் கோபாவேசமுண்டாய் கபீர்மேல் விழுந்து இவனை இப்போதே நறுக்கிவிடவேண்டுமென்று எல்லோரும் கூச்சலிட்டு கபீர் மீது விழத்தலைப்பட்டார்கள். அப்போது கபீர் அவர்களைப்பார்த்து, "நிஜம்சொல்வதனால் நிஷ்டூரமுண்டாகுமென்பது இப்போது நிச்சயமாய்த் தெரியவந்தது. ஆத்திரப்படவேண்டாம். கொஞ்சம்பொறுங்கள். பூர்வம் பரம பக்தனாயிருந்த பிரகலாதன், விஷ்ணுமூர்த்தி சர்வ வியாபகனென்று சொல்லியபோது, அவன் வார்த்தையை ஹிரண்யகசிபன் சகிக்காமல் எரிந்துவிழுந்து இந்த ஸ்தம்பத்தில் ஹரியைக் காட்டுவாயாவென்று கோபித்து ஸபா மண்டப ஸ்தம்பத்தைத் தன்கையால்குத்தினவுடனே, பகவான் நரசிம்மாவதாரமாய் ஜகத் பயங்கரத்துடன் ஸ்தம்பத்திலிருந்து புறப்பட்டு, அந்ததுஷ்டனைச் சிக்ஷித்ததுபோல், இப்போது உங்களுக்கு சம்பவித்திருக்கின்றது. ஏன் துள்ளி விழுகின்றீர்கள்? வாயைமூடிக்கொண்டு சும்மாய்ப் போங்கள்" என்று சொல்லினர்.

அப்போது துலுக்கர்களுக்கெல்லாம் இன்னும்கொஞ்சம் கோபம் அதிகமுண்டாய் விசேஷமாய்க் கூச்சலிட்டு "அடே! உங்கள் பகவானை இப்போது வரவழைத்தால் சரி. இல்லாவிட்டால் உன்னை இங்கேயே பலியிட்டு விடுகின்றோம்" என்று பற்களைப் படபடவென்று கடித்துக் கண்கள் சிவந்து தடிகளைக் கையில்வைத்துக்கொண்டு "இதோ

போடுகிறோம் பார்" என்று கபீர் எதிரில் நின்றவுடனே கபீர் மந்தகாசஞ்செய்து "ஐயா காஜீயாரே! இவர்களெல்லாம் உன் உபதேசத்தினால் கடைத்தேறினவர்களே. ஆதலால், இவர்களுக்கு இப்படிப்பட்டகுணங்கள் உண்டாயிருப்பது மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது. இப்போது என்னை பரீக்ஷிக்கவேண்டுமென்னும் இச்சை உங்களுக்கிருக்கும்பக்ஷத்தில் சற்றேபாருங்க" ளென்றுசொல்லி துளசிமணியை எடுத்துக் கையில்பிடித்து ராமமந்திரத்தினால் மந்திரித்து அதை விசிறிப்போட்டு "இப்போதல்லவா உங்கள் பயகம்பர் மஹிமை தெரியப்போகின்றது, ஏதோ இதை தப்பித்துக்கொள்ளுங்கள் பார்ப்போம்" என்று சொல்லி சற்றே தூரமாய் விலகிநின்றார்.

அப்போது துளசிமணி மிகவும் பயங்கரமாகிய பெரிய உருவம்தரித்து வாயில் நெருப்பைக் கக்கிக்கொண்டு துலுக்கர்களின்மீது வந்துகொண்டிருப்பதை துலுக்கர்கள் பார்த்து விசேஷ பயப்பிராந்தியடைந்து அக்கினி ஜ்வாலைக்குப் பொறுக்கமுடியாமல் உயிர்பிழைத்தால் போதுமென்று நினைத்துத் தப்பித்துக்கொண்டு மூலைக்கொருவராய்ச் சிதறியோடி பிராணன்களைத் தப்பித்துக்கொண்டு அப்பப்பா! இவனிருக்குமிடத்திலேயே இனி நாம் குடியிருக்கலாகாது. இவன் சகவாசமே நமக்குத்தகாது. எவ்வளவு ஜாக்கிரதைப் படுகின்றோமோ அவ்வளவும் நன்மையென்று யோசித்துக்கொண்டு, உடனே எல்லோரும் கபீர் இருக்கும் வீதியைவிட்டு மற்றொருவீதியில்போய்ச் சேர்ந்தார்கள். அது முதல் கபீரென்று பேர் சொன்னமாத்திரத்தில் அதிகபயங்கொண்டு அவரைத் தங்களுக்கு ஒரு மிருத்யுதேவதையாய் நினைத்து எந்தச்சமயத்தில் யார்மீது என்னசெய்கின்றானோவென்று அதிகமாய்ப் பயந்திருந்தார்கள். துஷ்டசகவாசம் தூரமாய்ச்சென்றதனால் கபீர் மிகவும் சந்தோஷித்துத் தன்

வீட்டுச் சுற்றிலும் துளசிதோட்டம் அமைத்து நிச்சல பக்தியுடனிருந்து இராமமந்திரத்தின் மகிமையால் யோக சாதனம் செய்துவந்தனர்.

கபீர் கோரக்கை ஜயித்தல்.

சித்தர்களே ! கேளுங்கள் இவ்விதமாய்க் கபீர் மிகவும் பக்தியுடனிருந்து பிராணவாயு உள்ளுக்கும் வெளிக்கும் நடக்கும்போதெல்லாம் தாரகமந்திரத்தை சுவாசத்துடன் சேர்த்துச் ஜபம் செய்துவந்தார். அதாவது, சுவாசம் உட்செல்லும்போது 'ரா' என்னும் மந்திரத்தை அந்த சுவாஸத்துடன் சேர்த்து உள்ளுக்கிழுத்தும், மறுபடியும் சுவாசம் வெளியில் வரும்போது 'மா' என்னும் மந்திரத்தை அந்த சுவாசத்துடன்சேர்த்து வெளியில்விட்டும் வந்தார். இவ்வாறுசெய்யும்படி கற்றுக்கொடுப்பதே 'குரு' உபதேசமென்றுசொல்லப்படும். இதை வாசிக்கும் அன்பர்கள்யாவரும் ராமதாரக மந்திரத்தை கர்மவாக்கினால் உச்சரிக்காமல் சுவாசத்துடன் முன்சொல்லியதுபோல் சேர்த்து உச்சரித்துவரவேண்டும். ஷை கபீர் இவ்விதமாய்ச் சாதனம்செய்துகொண்டு இதன் மூலமாய் சுவாசத்தை வெகுநேரம் நிறுத்தி பிராணாயாமாப்பியாசம் செய்ய ஆரம்பித்து அதைப் படிப்படியாய் உயர்த்திக் கொண்டுவந்தார். அதனால், அவருக்குப் பிராணாயாமம் சித்தியாய் பரகாயப்பிரவேசம்செய்யவும் சக்திஉண்டாயிற்று. (இந்தப் பிராணாயாமம் செய்யவேண்டியமுறை "ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்ய"த்தில் காணலாம்.) இவ்வாறு அப்பியாசம் செய்துவரும்போது அவருக்குண்டாகிய சந்தோஷம் இவ்வளவென்று சொல்லமுடியாது. ஆனால், இராமானந்தர்சேவை கிடைக்கவில்லையே என்னும் மனோவியா

கூலமாத்திரம் எப்போதும் அவரைப் பாதித்துக் கொண்டேயிருந்தது.

சில்காலம் சென்றபிறகு சித்தநாதனென்று பிரசித்தியடைந்த மச்சேந்திரநாதனுடைய சிஷ்யர்களில் மஹாஸமர்த்தனென்றுபெயர்பெற்ற கோரக்நாதனென்னும்சித்தபுருஷன் அணிமாதி அஷ்டசித்திகளில் மிகவும்தேர்ந்து மரணமில்லாத யோகசித்தியைச்செய்து, உலகத்தில் தன்னைவிட மற்றொருவர்களில்லையென்று கர்வித்து பிரசித்திபெற்ற நவசித்தர்களையும் லக்ஷியம்செய்யாமல் சத்தியநாதன், ஸகோதரநாதன், ஆதிநாதன், அனாதநாதன், மஙங்கநாதன், மச்சேந்திரநாதன், வகுளநாதன், கடேந்திரநாதனென்னும் சிஷ்யர்களைத் தன்னோடழைத்துக்கொண்டு இரசகுளிகைகளை வாயில் போட்டுக்கொண்டு ஆகாசமார்க்கமாய்க் கிளம்பித் தங்கள் கண்களுக்குக் காணப்படும் முனிவர்களையும் மஹரிஷிகளையும் ஆசாரியர்களையும் நானாவிதங்களாகிய மாயா உபாயத்தினால் அவர்களைஜயித்துக் கடைசியில் அவர்களைத் தனக்குச் சிஷ்யர்களாய்ச் செய்துகொண்டுவருவது வழக்கம். இவ்வாறு செய்துகொண்டே வந்து கடைசியில் ஒருநாள் காசிநகரம் வந்துசேர்ந்தான்.

அப்போது, காசியிலுள்ளவர்களெல்லாம் இராமனந்தர் மகிமையை பிரசித்தியாய்ச் சொல்லக்கேட்டான். பிறகு அவரை அவமானம்செய்யநினைத்து அப்போதே புறப்பட்டு இராமானந்தரிருக்கும் மடத்திற்குக் கோரக் போய்ச்சேர்ந்து, அவ்விடம் நடந்துகொண்டிருக்கும் வேதாந்த விஷயங்களையெல்லால் கேட்ட பக்தஜனங்களெல்லாம் ஜயகோஷம் செய்துக்கொண்டிருப்பதைக்கேட்டு வீராவேசங்கொண்டு மடத்துக்கெதிரில் ஓர் சூலத்தை நட்டு அதன்நுனியில் ஓர் வஸ்திரத்தைவிரித்து அதன் மேல் தான் வீராசனத்துடன் உட்கார்ந்து கம்பீரமான

கண்டசுரத்துடன் "அடே ராமானந்தா! விருக்ஷங்களில்லாத ஊரில் ஆமணக்குச்செடியை (முத்துக்கொட்டைச் செடியை) விருக்ஷமென்று சொல்வதுபோல் உலகத்தாரை ஏமாற்றி அவர்களிடமிருந்து பணம்பறித்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் சில சாப்பாட்டுராமன்களைச் சேர்த்துக்கொண்டு குருட்டுப் பலகரைக்கும் உதகாத நீ குரு என்னும் ஓர் பெயர் பெற்று மடமொன்று கட்டிக்கொண்டு மஹா கீர்த்தியைப்பெற்று உட்கார்ந்திருக்கின்றாயல்லவா? ஏதோ வெளியில்வந்து உன்தபசின் சக்தியைக்காட்டுப் பார்ப்போம். ஒருவனுக்கு உபதேசம்செய்யும்சக்தி உனக்குண்டா? உன் குருத்துவமும் உன் மந்திரசாமர்த்தியமும் இப்போதல்லவா பார்க்கப்போகின்றேன். நீயாகிலும் அல்லது உன் சிஷ்யர்களாகிலும் என்எதிரில் மற்றொரு சூலம் நட்டு அதன்மீது என்னைப்போல் உட்கார்ந்தால் சரி; இல்லாவிட்டால் இப்போதே உங்களை பஸ்மம்செய்துவிடுவேன்; என்னடா! கூப்பிட்டுக்கொண்டிருந்தாலும் அசையாமல் உள்ளே உட்கார்ந்திருக்கின்றாய் எழுந்துவா" என்று ஆகாசம் பிளக்கும்படிக் கூச்சலிட்டுச்சொல்லினன்.

அந்தக்கூச்சலைக்கேட்டு இராமானந்தரின் முக்கிய சிஷ்யர்களெல்லாம் கோபாவேசங் கொண்டு, யாரவன்? நமது சுவாமிகளை நிர்லக்ஷியமாய் ஏகவசனத்தினால் கூப்பிடுகின்றான். இப்பேதே அவனுக்குத்தக்க சிக்ஷைசெய்து எமலோகத்திற்கு அனுப்பவேண்டுமென்று தீர்மானித்து யானைகளைப் பார்த்து கர்ஜ்ஜனைசெய்யும் கோரமாகிய சிங்கம்போல் கர்ஜ்ஜித்து மூன்றுமயிர்களையுடைய குடுமிகள் எகிரிக்கொண்டும் கோவணம் அவிழ்ந்துக்கொண்டும் குடுகுடுவென்றோடி வெளியில்வந்து சூலத்தைநாட்டி அதன்மேல் வீராசனத்துடன் உட்கார்ந்து அட்டகாசம் செய்துகொண்டிருக்கும் கோரக்கைப்பார்த்து உடல் நடுங்கி

நாவறண்டு "சுவாமீ! தாங்கள்யார்" என்று விசாரித்தார்கள்.

அப்போது கோரக், அவர்களை குரூர திருஷ்டியுடன் பார்த்து "பார்ப்பாரநாய்களே! அவக்ர விக்கிரகனாகிய கோரக்கென்று என்னை அறியீர்களா? ஓர்நிமிஷத்தில் உங்கள் பிராணனைக் கொண்டுபோகும் யமதேவதையென்று அறியமாட்டீர்களா? எதோ உங்கள் குரு இராமானந்தன்? எங்கு ஒளிந்துக்கொண்டிருக்கின்றான்? சிக்கிரமாய் வெளியில்வரச்சொல்?என்று சிங்கம்போல் கர்ஜ்ஜித்துச்சொன்னான்.

அவ்வார்த்தைகளைக்கேட்ட பிராமணர்களெல்லோரும் உள்ளேஓடி சுவாமிகளைக்கண்டு மிகவும் ஆத்திரத்துடன் "சுவாமீ! கோரராக்ஷஸனாகிய கோரக் வந்திருக்கின்றான்: நம்முடைய ஆயுர்ப்பாகம் இன்றோடேமுடிவுதான்; இதற்கென்ன செய்வோம்!" என்று சொல்லி அங்கு நிற்கப்பயந்து மூலைக்கொருவராய் ஓடி ஒளிந்துக்கொள்ளத் தலைப்பட்டார்கள்.

அப்போது இடிபோன்ற அந்தச்சொற்களை இராமானந்தர் கேட்டவுனே கருடனைக்கண்ட சர்ப்பம்போல் பூமியில் பதுங்கி வார்த்தையாட வாய்வராமல் சிலநேரம் மூர்ச்சையாயிருந்து சற்றுநேரம் சென்றபிறகு மூர்ச்சைத் தெளிந்து அறிவை அறிந்து "கோரக் வந்திருக்கின்றானா? ஐயையோ, மஹா துன்மார்க்கனாயிற்றே! அவன் நம்மைச் சும்மாய் விடுவானா? இதுவரையில் அவன்கண்களுக்குத் தென்பட்ட எத்தனையோ மஹானுபாவர்களெல்லாம் நாமரூபமில்லாமல் நிர்மூலமானார்களே! இப்போது நாம் இவனிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஏதாகிலும் உபாயம் செய்யாவிட்டால், நாமெல்லோரும் அநியாயமாய் நாசமாக வேண்டியதே; இதற்குத் தக்கஉபாயம் தேடுங்கள்" என்று

சிஷ்யர்களுக்குச் சொல்லினர். அப்போது விசேஷபக்தியுடைய பிரிய சிஷ்யர்களைப்போல் நடித்துக்கொண்டு பக்தஜனங்கள் மடத்திற்குக் கொண்டுவரும் பதார்த்தங்களையெல்லாம் கொள்ளையடித்துத்தின்று தங்களைவிட வேறொருவவருமில்லையென்று சொல்லிக் கொழுத்திருந்த பிராமணர்களெல்லாம் இராமானந்தரைப்பார்த்து "ஸ்வாமீ! தாங்களே இவ்வாறு பயப்படும்போது எங்களைப் போன்றவர்களின் கதி சொல்லவும் வேண்டுமா? அவனை ஜயிக்க தங்களுக்கே சாத்தியமாசாமலிருக்க, எங்களுக்கெப்படிச் சாத்தியமாகும்? இனி நாம் ஒருநிமிஷமாகிலும் இங்கு நிற்கலாகாது. ஆலசியம்செய்தால் அவனால் சாகவேண்டியதே; மடத்தின்பின்புற வாசற்படிவழியாய்த் தப்பித்துக்கொண்டு ஓடிவிடுவோம் வாருங்கள்" என்று இராமானந்தரைத் தொந்தரவுசெய்யத் தலைப்பட்டார்கள்.

அதைக்கேட்ட இராமானந்தர் "ஐயா! நீங்களெல்லோரும் பெறுத்த தபஸ்விகளல்லவா? ஆபத்திற்கு உதவாத சக்தியிருந்தால் என்னபிரயோஜனம்? உங்கள் மந்திர தந்திர பிரதாபங்களினால் ஹோமம்செய்து அந்த கோரராக்ஷஸனை பஸ்மம் செய்யமாட்டீர்களா! இதுவரையில் எவ்வளவோகீர்த்தியுடன் பிழைத்திருந்த நாம் சொல்லாமல் ஓடிப்போவது அவமானமல்லவா? பிராணனையாகிலும் விட்டுவிட்டு மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்னும் நீதிவாக்கியங்களைமறந்து அவமானத்திற்கு உட்பட்டு பிராணனைக் காப்பாற்றிக்கொண்டு ஜீவித்திருப்பதனால் லாபமென்ன" என்று சொல்லினர்.

அதற்கு மந்தமதியுடைய பிராமணர்கள் "சுவாமி! நீர் சொல்லும்வார்த்தை மிகவும் விசித்திரமானதாயிருக்கின்றது! விராடராஜனது குமாரன் உத்தரனென்பவன் கௌரவர்களின் சைன்யபலத்தை அறியாமல் அவர்களையெல்லாம் நிமிஷத்தில் நீறாய்ச்செய்துவிடுவேனென்று சபதம் கூறி, யுத்தரங்கம்சேர்ந்து கௌரவ சைன்னியங்களைப் பார்த்து பயந்து, ஓடிவிட்டதுபோலல்லவா நீர் பயப்படுகின்றீர். அஃதெப்படியென்றால், நீர் இதுவரையில் எங்கள்முன் அனேகதடவைகளில் "என்னைவிட பிரசித்தியடைந்த ஆசாரியன் எங்குமில்லையென்றும், சகலசித்திகளும் எனக்கு சித்தியாயிருக்கின்றனவென்றும் சொல்லவில்லையா? இப்பொழுது விரோதிவந்து எதிரில்நின்றபோது உமது க்ஷாத்திரத்தைவிட்டு தலையைத் தப்பித்துக் கொள்ளப்பார்த்துக் கடைசியில் உதரபோஷணார்த்தமாய் வந்து சேர்ந்திருக்கும் எங்களை கோரராக்ஷதனுக்குப் பலி கொடுப்பதற்காக யோசித்திருக்கின்றீர்களா என்ன? உங்கள் ஜீவகாருண்யம் இதிலேயே தெரிந்தது. சரி சரி! இனி நாங்கள் இங்கு நிற்கோம் நிற்கோம்: இனி எவ்விடத்திற்காகிலும் சென்றுவிடுகின்றோம். பிராணனிருந்தால் உங்களைப்போன்ற குருக்கள் அநேகர்களைச் சம்பாதித்துக் கொள்வோம்" என்று பின்புறமாய்ப் போகத் தலைப்பட்டார்கள்.

இராமானந்தர் அதைக்கேட்டு மிகவும் மனம்நொந்து "ஹா! குருத்துரோகிகளே! அனேககாலமாய் மிகவும் பக்தர்களைப்போல் நடித்துக்கொண்டு வந்தவிஷயம் இன்றல்லவோ தெரியவந்தது. மேல்வேஷத்திற்காக மிகவும் பக்தர்களைப்போலிருந்து இவ்விடத்திற்குவந்த சத்புருஷர்களையெல்லாம் கிட்ட நெருங்கவிடாமல்செய்து குருபக்தியிலும் சுவானுபவத்திலும் எங்களைவிட மற்றொருவரில்லையென்று புகழ்ந்துகொண்டு "அதிவிநயம் தூர்த்தலக்ஷணம்" என்பதுபோல் இருந்து, கடைசியில் சமயம்வந்தபோது என்னை சத்துருவினிடம் காட்டிக்கொடுத்து நீங்கள்

மெதுவாய்த் தப்பித்துக்கொண்டுபோகப் பார்க்கின்றீர்களல்லவா? யுத்தரங்கத்தில் அரசனைவிட்டுத் தங்கள்பிராணன் மீது ஆசைவைத்து ஓடிப்போகும் பயங்கரமுடைய சேவகர்களைப்போல், இதுவரையில் மிகவும் அந்தரங்க பக்தர்களைப்போல் நடித்துக்கொண்டிருந்து ஆபத்துவந்தபோது மோசம்செய்து ஓடிப்போகின்றீர்கள். இவ்வாறு செய்வீர்களாகில் உலகத்தார் உங்களை நிந்திக்கார்களா? யுத்தத்தில் முதுகைக்காட்டி ஓடுவதைவிட யுத்தத்தில் மரணமடைவது யுக்தமானதல்லவா? ஆதலால், நீங்கள் இதுவரையில் கௌரவமாய் இருந்ததுபோல் இருந்து உங்கள் சாமர்த்தியத்தினால் கோரக்கை ஜயித்தாலும்சரி அல்லது அவனை சரணமடைந்தாலும் சரி. அப்படிச்செய்வதைவிட்டு, சொல்லாமல் ஓடிப்போவது நியாயமல்ல. சற்றே யோசித்துப்பாருங்கள்'' என்று சொல்லினர். அதற்குப் பிராமணர்களெல்லாம் “போபோ ஐயா! மஹா நியாயம் சொல்லவந்தாய். உயிர் ஒன்றிருந்தால் உப்புவிற்றாகிலும் ஜீவனம்செய்யலாம். நாமெல்லோரும் இந்த மடத்துடன்கூட ஒரேமுறையாய் பஸ்மமாய் போகக் காலம்சம்பவித்தது. உமக்கு இஷ்டமிருக்கும்பக்ஷத்தில் நாங்கள்சொல்வதுபோல் ஒப்புக்கொண்டு எங்களுடன்கூட புறப்பட்டு வந்துவிடுங்கள். நாங்கள் சொல்லவேண்டியதைச் சொன்னோம். அதற்குமேல் உங்களிஷ்டம். கஷ்டம் அநுபவிக்கவேண்டிய பிராரப்தம் உங்களுக்கிருக்க; சொல்லும் சொற்கள் உங்கள்காதில் நுழையுமா? இந்த துன்மார்க்க காரியத்தில் எவ்வளவேனும் நாங்கள்பிரவேசிக்கோம்'' என்று சொன்னார்கள். அப்போது இராமனந்தர் எவ்வளவு சொல்லியபோதிலும் கபட பிராமணர்கள் காதில் போட்டுக்கொள்ளாமல் மடத்திற்கு பின்புறமாயிருக்கும் கொல்லை வாசற்படிவழியாய்ச்சென்று மூலைக்கொருவராய்

ஓடிவிட்டார்கள். எப்பொழுதும் கோலாகல தொனியுடன் நிறைந்திருந்த மடம் ஒரு நிமிஷத்தில் நிஸ்சப்தமாய் விட்டது. வெளிவேஷத்துடனிருந்த துன்மார்க்கர்கள் ஓடிப்போகாமல் இதைவிட வேறு என்னசெய்வார்கள்?

அப்போது இராமானந்தர், தன் முக்கிய சிஷ்யர்களெல்லாம் ஓடிவிட்டதைப்பார்த்து சிலநேரம் மனவருத்தமடைந்து “ஆஹா! எப்படிப்பட்ட ஆபத்துவந்து சம்பவித்தது; இவைகளுக்கெல்லாம் என் அவிவேகமேயல்லவா மூலமாயிருக்கின்றது! எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் முதலில் பரீக்ஷிக்காமல் சிஷ்யனாகச்செய்வது எவ்வளவு அநுசிதமானது. சிஷ்யனுடைய மன பரிபாகத்தை அறியாமல் அவசரப்பட்டு துன்மார்க்கருக்கு உபதேசித்த ஆசாரியன் அதோகதி அடையவேண்டியது நிஸ்சயம். சந்துஷ்டி அடையாத களத்திரமும், இஷ்டமில்லாத புத்திரனும், ஆபத்திற்கில்லாத சிநேகிதனும் பிராண சத்துருக்களென்னும் வாக்கியம் இன்றல்லவோ எனக்கு நிச்சயமாய்த் தெரியவந்தது. தனக்குத்தானாய் சம்பவித்த கஷ்டத்திற்கு விசாரப்படுவதனால் லாபமொன்றுமில்லை. சாக்ஷிகளின் காலைப்பிடித்துக்கொண்டு சகாயம் செய்யுங்களென்று வேண்டிக்கொள்வதைப்பார்க்கிலும், கக்ஷிக்காரன் காலைப் பிடித்து சமாதானப்படுத்திக்கொள்வது மிகவும் உத்தமமானது. இவ்வளவுநேரமாய் இந்த ஆஷாடபூதிகளை வேண்டிக்கொண்டும் கேளாமற்போய்விட்டார்கள். இனி சித்தநாதனிடம் சென்று சரணாகதி, ரக்ஷிக்கவேண்டுமென்று பிராத்திப்பது மிகவும் உத்தமம்; சரணமடைந்தவனுக்கு சங்கடங்கள் உண்டாகமாட்டா? எவ்வளவு கடினசித்த மனமுடையவனாயிருந்தபோதிலும் சரணமென்று சொன்னவுடனே நல்லதென்றுச்சொல்லி கையைப்பிடித்து ரக்ஷிக்காமல் போகான்'' என்று மனதில் நிச்சயித்துக்

கொண்டு மடத்தைச்சுற்றிலும் கோட்டைக் கட்டினது போல் சுற்றிக்கொண்டிருக்கும் ஜனங்களையெல்லாம் இராமானந்தர்பார்த்து மிகவும் பயந்து உடல்நடுங்கி பகவானைத் தனது இருதயத்தில் நினைத்துப் பக்திபூர்வகமாய் நமஸ்கரித்து "ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! இப்பொழுது மிகவும் ஆபத்தில் அகப்பட்டுச்கொண்டிருக்கும் என்னை ஆபத்திலிருந்து தப்பிப்பதற்கு நீரன்றி வேறுகதி யாருமில்லை. நீர் இச்சமயத்தில் அடியேனுடைய ஆபத்தை ரக்ஷிக்காவிட்டால் அநியாயமாய்க் கெட்டுப்போவேன். எவ்விதத்திலாகிலும் அடியேனை ரக்ஷிக்கவேண்டும்" என்று கண்களில் நீர் பெருக அழுது பலவிதங்களாகப் பிரார்த்தித்து "ஆஹா! இப்போ தென்செய்வேன்! கோரக்முன் எவ்விதமாய்ச் செல்வேன்? சென்றபோதிலும் எவ்விதமாய் வார்த்தையாடுவேன்?" என்றுசொல்லி பெருமூச்சு விட்டுப் பலவிதங்களாய்த் துக்கித்துக்கொண்டிருந்தார்.

அப்போது மடத்திற்கு கோரக் வந்ததும், முக்கிய சிஷ்யர்களெல்லாம் பயந்து இராமானந்தரைத் தனியாய் விட்டு ஓடிவிட்டதும், குருவானவர் துக்கித்துக்கொண்டிருப்பதும் முதலாகிய சங்கதிகளைக் கபீர்கேட்டு மிகவும் மனம்நொந்து தத்தளித்து குருவிற்கு சகாயம்செய்ய யோகம் கொஞ்சம் சித்தியாயிருக்கின்றதல்லவா என்று சந்தோஷித்து தான் வேலைசெய்வதற்காகக் கையில் வைத்துக்கொண்டிருந்த பட்டுநூலைக் கையில் பிடித்துக்கொண்டே மிகவும் வேகமாய் மடத்திற்குஓடி துக்கத்துடன் நின்றுகொண்டிருக்கும் தன்குருவைப் பிரதக்ஷணம் வந்து நமஸ்கரித்துநின்று மிகவும் பக்தி விசுவாஸத்துடன் "ஸ்வாமீ! துரபிமானங்களை யெல்லாம் தூரப்படுத்திய மாஹாத்மாவாகிய நீர் இந்த அற்ப விஷயத்திற்காகப் பயப்படுவதேன்? தேவரீருடைய பாதசேவகன் இங்குக் கார்த்துக்கொண்டிருக்கும்போது தங்களுக்குப் பயமேன்? இந்தக்கோரக்சுல்ல இவன்பாட்டன் முப்பாட்டன்கள் வந்தபோதிலும் தங்கள் சந்நிதானத்தில் நிற்பது மிகவும் கஷ்டம். தாங்கள் அடியேனுக்கு அனுக்கிரகித்த தாரக மந்திரமென்னும் மஹாகட்கம் என்னிடம் இருக்கும்போது இந்தச் ஜாலவித்தை செய்யப்பட்டவனுக்குப் பயப்படுவதேன்? இவனை அதோகதிச்செய்வது ஓர்பெரிய கஷ்டமா? இப்போது அவனை ஜயிக்கவேண்டுமென்று ஓர் வாக்களித்தால் போதும். ஓர் நிமிஷத்தில் கோரக்கை யமலோகத்திற்கு அனுப்பிவிடுகிறேன். சீக்கிரமாய் அடியேனுக்கு அனுக்கிரகம் செய்யவேண்டும்" என்று மிகவும் பிரார்த்தித்தனர்.

அப்போது இராமானந்தர் கபீரைப்பார்த்து, "அடா! இந்தச்சமயத்தில் நீ எங்கேஇருந்துவந்தாய்? அகடவிகட சமர்த்தனான கோரக்எங்கே? அல்பனாகிய நீ எங்கே? மலையுடன் ஆடு யுத்தம்செய்வதுபோலிருக்கின்றது. இப்போதே அவன் மிகவும் ஆவேசங்கொண்டிருக்கின்றான். நீ சென்று சித்தனுக்கெதிரில் நிற்பாயாகில் ஹோமத்தில் நெய்விட்டதுபோல் எரிந்து நம்மை மடத்துடன் பஸ்மம் செய்துவிடுவான். அவன் ஜோலிக்குப் போகவேண்டாம். நீ அவனெதிரில்சென்று வாதாடினால் நகத்தால் கிள்ளுவதைவிட்டுக் கோடாலியால் வெட்டுவதுபோலாகும். ஆதலால், நாம் மிகவும் வணக்கமாய்ச்சென்று சரணமடைவதே உத்தமம். அவர் மிகவும் தயாளகுணமுடையவர்; நம்மை ஆதரித்து ரக்ஷிப்பவர்; மானாவமானங்கள் தேகத்திற்கேயொழிய ஆத்மாவிற்கு இல்லை. நாம் சென்று சரணாகதி அடைதனால் நமக்கு ஓர் கௌரவ ஹானியுமில்லை.

உபாயத்தினால் சாதிக்கத்தக்க காரியம் பராக்கிரமத்தினால் எப்போதும் கைகூடமாட்டாது. கோரக் இவ்

விடம் வந்திருப்பதை யோசித்தால் நானேசென்று சமாதானம் செய்துகொள்ளவேண்டியதாய் ஏற்படுகின்றதேயொழிய, இதரர்கள் இதில் பிரவேசிப்பதனால் யாதொரு பிரயோஜனமும் உண்டாகுமென்று தோன்றவில்லை. சிம்மத்துடன் யானையும், புலியுடன் பூனையும் எதிர்ப்பதனால் எவ்வளவு பிரயோஜனம் உண்டாகுமோ அவ்வளவு பிரயோஜனம் நீ எதிர்ப்பதனால் உண்டாகும். நீயோ சிறுபிள்ளை. விளையாட்டாய்ப் பேசுகின்றாயேயொழிய கொஞ்சமாகிலும் தாரதம்மியத்தை யோசிக்கவில்லை. சம்பந்தமில்லாத காரியத்தில் நிர்நிமித்தியமாய் பிரவேசித்தவன் வியர்த்தமாய்த் தான்கெடுவதுமேயல்லாமல், இதரர்களுக்கும் கஷ்டத்தை உண்டாக்குவான். ஆதலால், நீ இந்த விஷயத்தில் பிரவேசிக்காமல் வந்தவழியே சென்றுவிடு. என் எதிரில் நின்று தற்கவாதங்களைப்பேச இது சமயமல்ல. நித்தியம் குரூரமான கோரயிம்சைசெய்வது உனக்கு வழக்கம். ஆதலால், நீ எவ்வளவு துணிந்தாலும் துணியலாம். யுக்தா அயுக்தங்களை விசாரிக்கத்தக்க புத்தி உனக்கில்லை. நீ சொல்லிய சங்கதியைக் கோரக் கேட்பானாகில் இப்போதே மடத்துடன் நம்மை எரித்துவிட்டுப்போவான். நீ செய்ய வந்த சகாயம் போதும்போதும். கலகத்தை உண்டுபண்ணாமல் மெதுவாய்ச் சென்றுவிடுவதே நீ செய்த சகாயமென்று நினைப்பேன். இனி போய்விடு'' என்று சொல்லினர்.

கபீர் அதைக்கேட்டு பரமபக்தியுடன் குருவின் பாதத்தை நமஸ்கரித்து மிகவும் விநயத்துடன் நின்று ‘‘ஸ்வாமீ! தேவரீருடைய பாதசேவகனிருக்க தேவரீர் அந்த அற்பனிடம்சென்று சரணமடையவேண்டிய அவ்வளவு அவசியமென்ன? அந்த நீசன் தங்களைவிடப் பெரியவனா? தாங்கள் கொஞ்சம் உத்தரவு கொடுத்தால்போதும்.

ஓர் நிமிஷத்தில் அந்தத்துன்மார்க்கனுடைய விருதுகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டு காசிதேசமெல்லாம் தங்கள் கௌரவம் பிரசித்தியடையும்படிச் செய்வேன். என்னமோ இவன் சிறுபையனென்று நிர்லக்ஷியம் செய்யவேண்டாம். தேவரீருக்கு அபகீர்த்திவரும்படியான விஷயம் நான் எப்போதும் செய்யமாட்டேன். ஓர் நிமிஷத்தில் அவன் எலும்புகளையெல்லாம் பொடிசெய்து ‘இராமானந்தர்’ என்று சொன்ன மாத்திரத்தில் அவன், கனவிலும் பயப்படும்படிச் செய்வேன். மறுபடியும் அவன் எங்கும் தலைக்காட்டமாட்டான். உங்கள் சேவகன் சமீபமாயிருக்க எவனையோ நீசனை மஹானுபாவனென்று புகழுகின்றீர். இவ்வளவேன்? கொஞ்சம் உத்தரவு கொடுத்துப்பாருங்கள், பின்னால்தெரியவரும்'' என்று மிகவும் உருக்கத்துடன் கேட்டனர்.

அவ்வார்த்தைகளையெல்லாம் இராமானந்தர் கேட்டு மிகவும் கோபங்கொண்டு ‘‘அடே மூடா! கையாலாகாத பேச்சுக்களை ஏன் பிதற்றுகின்றாய்? தன்சக்தியும் இதரர்களின் சக்தியும் விசாரிக்காமல் ஆத்திரப்பட்டுத் துணிந்தவன் வியர்த்தமாய்க் கெட்டுப்போவான். இத்தோடே வாயை மூடிக்கொண்டு போ. மறுபடியும் வாயைத்திறப்பாயாகில் பற்களைத் தட்டியனுப்புவேன். எனக்கு நீ வந்து சகாயம் செய்யாவிட்டால் தீராதென்று உன்னைக்கூப்பிட்டேனா? ஏன் வந்தாய்? அறியாதவனல்லவா! போகட்டுமென்று நல்லவார்த்தையாய்ச் சொல்லச்சொல்ல ஏதோ மஹா சாமர்த்தியனைப்போல் துள்ளிவிழுகின்றாய். மெதுவாய்ப்போய்விடு; போகாவிட்டால் உன் பிராணன் உன் உடலில் இராது'' என்று பயமுறுத்தினார்.

அதற்குக் கபீர் ‘‘ஸ்வாமீ! தேவரீர் என்னசெய்தாலும் செய்யலாம்; தேவரீருடைய ஆஞ்ஞைக்குப் பத்தனாய்

சர்வவிஷயங்களுக்கும் சித்தமாயிருக்கின்றேன். ஆனால் கோரக்கைமாத்திரம் சும்மாய் விடேன். என் பிராணன் உள்ளவரையில் தாங்கள் அந்தநீசனை சரணமடையலாகாது. என்வார்த்தையை அங்கீகரிக்காவிட்டால் என்பிராணனை இப்போதே தங்கள் பாதத்தினிடம் விட்டுவிடுவேன் ; இது நிச்சயம் '' என்று சொல்லினர்.

இராமானந்தர் அதைக்கேட்டு "அடே மந்தமதி ! ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகின்றாய் ? அவர்சங்கதி உனக்குத்தெரியாது. கோரக்குக்குச் சமானமானவர்கள் இந்த உலகத்தில் எங்குமில்லை. அவரைச் சாமான்னியனாய் எண்ணாதே ; அயோனிசம்பவர் ; சித்த சிம்மமென்று பிரசித்தி பெற்றவர் ; நிர்ப்பயமாயிருந்து சங்கரனுடன் வாதாடினவர்? சர்வசித்திகளிலும் கடைத்தேறினவர். அவரை விரோதித்தால் பிறகு தப்பித்துக்கொள்ள பிரம்மாதிகளாலும் சாத்தியப்படமாட்டாது. அவரிடம்போய் சில்மிஷம் செய்தால் காசிப்பட்டணமெல்லாம் ஒரேமுறையாய்ப் பஸ்பமாகும்படிச் செய்துவிடுவார். நீ பொங்கிவிழுவதெல்லாம் அவரிடம் சாயாது. என்பேச்சைக்கேட்டு வீடுபோய்ச் சேர் '' என்று சொல்லினர்.

பிறகு கபீர் "சற்குருநாதா ! உமக்கேன் இப்படிப் பட்ட பிரமை உண்டாயிற்றோ தெரியாமலிருக்கின்றேன். நரியைப்பார்த்து சிம்மம் மெச்சிக்கொண்டதுபோல், அவனைப்பார்த்து நீங்கள் மெச்சிக்கொள்ளுகின்றீர்கள். கோரக்கு. கிரக்கு முதலானவர்கள் இன்னும் ஒரு நிமிஷத்தில் எப்படி யாகப்போகின்றார்களோ அதை நீரே சற்றுப் பார்க்கப்போகின்றீர்கள். அதுவரையில் சற்றுநேரம் சாந்தமாயிருங்கள்'' என்றுசொல்லி இராமானந்தரை நமஸ்கரித்து மெதுவாய் வெளியில்வந்து கோரக்கை சூழ்ந்துகொண்டிருக்கும் ஜனங்களையெல்லாம்நீக்கிச் சந்துசெய்துகொண்டு

கோரக்கெதிரில் நின்று கம்பீரமான பெருங்குரலுடன் "அடே ! இந்திர ஜாலவித்தையைக்கற்றவனே ! நீ எவ்வளவோ கஷ்டப்பட்டு கற்றுக்கொண்ட உன்ஜாலவித்தைகளையெல்லாம் எங்கள் குருநாதனிடம் காட்டவந்தாயா ? ஏதோ உன்வித்தையெல்லாம் காட்டுப் பார்ப்போம். அவரை நீ ஜாலவித்தையினால் ஜயிக்கவேண்டுமென்று துரபிப்பிராயம்கொண்டு வந்திருந்தால் என்வார்த்தையைக் கேட்டு அவர்ஜோலிக்குப்போகாமல் சும்மாய்ப்போய்விடு; அவ்வாறு போகாமல் துள்ளி விழுவாயாகில் உனக்குத் தக்க சாந்திநடக்கும்; சிம்மத்தைப் பங்கப்படுத்த நரியினால் முடியுமோ ? அதற்குத் தப்பாமல் சாந்திநடக்குமல்லவா? அதுபோல் உன் உத்தண்டமாகிய ஜாலவித்தை இங்குச் செல்லாது. இதுவரையில் என்பெயரைக்கேட்டதில்லையா; உன் ஈரலைப்பிடுங்கி பருந்துகளுக்கு இரையாக்குவேன் பார் ! மரியாதையாகச்சென்றுவிடு'' என்று சிம்மம்போல் கர்ஜ்ஜித்துச்சொல்லினர்.

அந்தச் சொற்களெல்லாம் இடிபோல் கோரக் காதிற்பட்டவுடனே, மிகவும் கோபமுண்டாய் கண்கள் சிவந்து மீசைகள் படபடவென்றுதுடித்து "அடே ! மொட்டைப்பையா ! இதுவரையில் எவர்களும்கேளாத கேள்விகளையெல்லாம் நீ கேட்கின்றாயா ? யோகீஸ்வரர்களுக்கெல்லாம் அதீசுவரனென்று என்பேரைக்கேட்டதில்லையா? என்னுடன்வாதாடி ஜீவனோடு தப்பித்துக்கொண்டுபோன ஓர் மனிதனையும் நான் இதுவரையில் பார்க்கவேயில்லை. நீ என்னெதிரில்வந்துநில். உன்சக்தியைச் சற்றே காட்டுப் பார்ப்போம்?'' என்று மிகவும் பயங்கரமான குரலுடன் கோரக் கர்ஜ்ஜித்தான்.

அதற்குக் கபீர் சிறிதேனும் பயப்படாமல் "அடே புத்தியில்லாதவனே ! உன் ஜாலவித்தைக்கு நான் பயப்

படுவேனென்று எண்ணாதே! நான் யாரென்று அறிய மாட்டாயடா? இராமானந்தர் சிஷ்யனல்லவா? உன்னைப் போன்ற மூடக்கழுதைகளுக்குப் புத்திசொல்லி நல்லவழிக்குக் கொண்டுவரப்பட்டவனல்லவா? இராவணனுக்கு விநாசகாலம் வந்ததுபோல் உனக்கும் இப்போது விநாச காலம்வந்து இராமானந்தரிடம் அகப்பட்டுக்கொண்டாய். இனி நீ இவ்விடமிருந்து தப்பித்துக்கொண்டுபோவது மிகவும்கஷ்டமே. இன்றோடே உன் ஆயுர்ப்பாகம் முடிந்ததென்று எண்ணிக்கொள். விருதாவாய் ஏன்கெட்டுப் போகின்றாய்? இப்போதே இராமானந்தரை சரணமடைந்து அவரால் ஆசீர்வாதம்பெறுவாயாகில் க்ஷேமப் படுவாய்; இல்லாவிட்டால் கெட்டுப்போவாய்'' என்று மிகவும் கோபமாய்ச் சொல்லினர்.

அவைகளைக் கேட்டவுடன் கோரக் கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள்பறந்து காசியை பஸ்பம்செய்துவிடுகின்றேனென்று மிகவும் ஆர்ப்பாட்டஞ்செய்தான். அப்போது ஜனங்களெல்லாம் நடுநடுங்கி மிகவும்பயந்து கபீர் மேல்விழுந்து "அடே துராத்மா! நீ கெடுவதுமல்லாமல் காசிப்பட்டணத்தையும் தஹிக்கச்செய்யப்பார்க்கின்றாயா?'' என்று சொல்லிக் கபீரை கோரக்முன் கொண்டுபோய் நிறுத்தி "ஸ்வாமி இவனை நாசம்செய்யுங்கள்; காசிப் பட்டணத்தை நாசம்செய்யவேண்டாம்'' என்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொண்டார்கள்.

அப்போது மஹா சூரனைப்போல் கோரக்கெதிரில் நின்றுகொண்டிருக்கும் கபீரை கோரக் பார்த்து "அடே! நீ மிகவும் சிறுபிள்ளையா யிருப்பதனால் இளங்கன்று பயந் தெரியாததுபோல் தாரதம்மியம் அறியாமல் இவ்வாறு உளறினாய். நீ அறியாத சிறுபிள்ளையென்று உன்னை மன்

னித்தேன். மெதுவாய் வீட்டிற்குச்செல்'' என்று கோபம் தணிந்து மிருது வசனமாய்ச் சொன்னான்.

அதற்குக் கபீர் சிரித்து "அடே! உன்னுடைய டம்பத்தை இதோடே நிறுத்து. உன்னால் என்ன ஆகும்? அஞ்ஞானமென்னும் இருளடைந்த பாழுங்கிணற்றில் வீழ்ந்து சாந்தமென்பது கனவிலும் இல்லாமல் மிகவும் அஹங்காரங்கொண்டு உன்னிஷ்டம்போல் திரிந்து கண்ட சாதுக்களையெல்லாம் கஷ்டப்படுத்திக்கொண்டுவருகின்றாய்.

யாரை ஜயிப்பதற்காக இப்போது இங்கு வந்திருக்கின்றாய்? எல்லோரிடத்திலும் காட்டும் உன் ஜாலவித்தை என்னிடத்தில் சாயுமென்று எண்ணாதே! அதிகப் பிரசங்கத்திற்குத் தலைப்படுவாயாகில் விருதாவாய்க் கெட்டுப் போவாய். நீ இதுவரையில் எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சம்பாதித்துக்கொண்ட கௌரவத்திற்குக் கெடுதிவந்து சம்பவிக்கும். நான் இராமானந்தரின் முக்கிய சிஷ்யன்; அவர் உத்தரவின்மீதே உன்னை ஜயிக்கவந்தேன். இப்போது உன்னைச் சும்மாய்விடேன். ஏதோ உன் சாமர்த்தியத்தைக் கொஞ்சம் காட்டுப் பார்ப்போம்'' என்று உரத்த சப்தத்துடன் கூவிச்சொல்லினர்.

அந்த வார்த்தைகளையெல்லாம் இராமானந்தர் கேட்டுத் திங்க்கிட்டு முகத்தைச் சுளித்து "அடே, துலுக்கப் பையா! உன் துடுக்குத்தனத்தை விடமாட்டாயல்லவா? சித்தநாதனுடன் எதிர்க்கும்படி உன்னிடம் சொன்னேனா? அவருக்கு விருதாவாய்க் கோபத்தை உண்டுபண்ணுகிறாய். சீ சீ! இங்குவா'' என்றுசொல்லி இராமானந்தர் கோரக்கெதிரில் நின்று நமஸ்கரிக்கப்போனார். உடனே கபீர் குரு எதிரில் சென்று "ஸ்வாமீ! என் சிஷ்யனான கோரக்கை நமஸ்கரிப்பது யுத்தமா? ஓஹோ! இது தர்ம, விருத்தமாயிருக்கின்றது. இன்னுமொரு நிமிஷத்தில் இவனை

தேவரீருடைய பாதங்களைப் பிடித்துக்கொள்ளப்போகின்றான். இதற்குள் நீங்கள் அவசரப்பட வேண்டியதேன்? சற்றே வேடிக்கைப் பாருங்கள்" என்று பிரார்த்தித்தார்.

அவ்வார்த்தையை இராமானந்தர்கேட்டு கோபாவேசபராய் "அடே துன்மார்க்கா! விருதா கலகம்செய்து பட்டணத்தைப் பாழாக்க ஏற்பட்டாயா? சித்தநாதனை நமஸ்கரிக்கப்போகும் என்னை குறுக்கிடுகின்றாயா? தூரமாய்ச் சென்றுவிடு" என்று காலினால் உதைத்துத்தள்ளினார். கபீர் உதையைப்பட்டுக்கொண்டு பரமானந்த பரிதராய் இராமானந்தருக்கு வந்தனம்செய்து "ஸ்வாமி! இப்போது உங்கள் பாதம் பட்டபடியால்தான் சந்தேகமின்றி இந்தத் துன்மார்க்கனைச் ஜயிக்கப்போகின்றேன்" என்றுசொல்லி பார்க்கப்பட்டவர்களெல்லோரும் அதிசயப் படும்படியாய் கபீர் ஆகாசத்தில் எகிறி கோரக்கை பூமியின்மேல் உதைத்துத் தள்ளி மறுபடியும் கீழ்க்கிறங்கி தன்கையிலிருந்த பட்டுநூல் சுருணையின்முனையைக் கீழேநட்டு சுருணையை ஆகாசமார்க்கமாய் எகறவிட்டு "ஜயராமானந்த ஜயராமானந்த" என்று நூலைப்பிடித்து ஏறி ஆகாசத்தில் நின்றிருக்கும் பட்டுநூலின் நுனியில் பத்மாசனம்போட்டு உட்கார்ந்து "அடே சித்தநாதா! கீழே நின்று என்ன செய்கின்றாய்? என்னுடன் சமமாய்வந் துட்கார்ந்து வாதஞ் செய்வாய் வா! உன் சாமர்த்தியம் இப்போதல்லவா தெரியப் போகின்றது; வாயில்லாத பூச்சிகளைப்போன்ற ஏழை சாதுக்களைப் பயப்படுத்தி பாதைசெய்ததுபோலல்ல! இது, பிரசித்திபெற்ற இராமானந்தர் சந்நிதானமென்று அறிந்துகொள். உன் பூடக நாடகங்கள் இங்கு செல்லமாட்டா? ஏன் அப்படிப்பார்த்து நின்றுகொண்டிருக்கின்றாய்? மேலே ஏறி வா; ஓர்கை பார்ப்போம்; அப்படிவரச் சக்தியில்லாதபக்ஷத்தில் எங்கள் குருவை சரணமடையக்

கடவாய். உன்னை ரக்ஷிப்பார். நீ என்கையில் அகப்பட்ட பிறகு உன்னை சும்மாய்விடேன். புலிவாயில் அகப்பட்ட மிருகம் மறுபடியும் பிழைக்குமா? அதை நீயே யோசித்துப்பார். நீ எதெதில் சித்தியடைந்திருக்கின்றாயோ அவைகளையெல்லாம் இந்தக் காசிபட்டணத்தில் காட்டாவிட்டால் நீ சித்தனாதனல்ல. என் சொல்லச்சொல்ல தலையை மேல்தூக்கி ஆகாசமார்க்கத்திலிருக்கும் என்னைப் பார்க்கின்றாய்?" என்று கூக்குரலிட்டுச்சொன்னார். அப்போது கோரக் பெருத்த யோகியாயிருந்து சகலசித்திகள் அடைந்திருந்தும், இதுவரையில் கண்டும்கேட்டுமிராத கபீர்செய்த ஆச்சரியமான வித்தையைக்கண்டு ஆச்சரியப்பட்டு தலைக் குனிந்து தனக்குள்தான் "ஓஹோ! இவனை இவ்விதமாய் ஜயிக்க நம்மால் சாத்தியமாகமாட்டாது. மெதுவாய் மாயைசெய்து வசப்படுத்தவேண்டும். இவனைப்பார்த்தால் மிகவும் தைரியசாலியா யிருக்கின்றான். இராமானந்தனே இவனை உற்சாகப்படுத்தி என்மீது அனுப்பினதாய்க் காணப் படுகின்றது. ஒருவேளை நான் இவனுக்குத் தோல்வியடைந்தால் ஓர் சிறுபையனால் கோரக் தோல்வியடைந்தானென்று உலகப் பிரசித்தியாய்விடும். ஒருவேளை நான் இந்தச் சிறுபையனை ஜயித்தால் இவ்வளவு பெரியவன் சிறுபையனைச் ஜயித்தது ஆச்சரியமா வென்றுசொல்லி பரியாசம் செய்வார்கள். ஆதலால், இவர்கள் இருவரையும் ஜயிக்க வேண்டும்" என்றுநிச்சயித்துக்கொண்டுக் கபீரைப்பார்த்து "அடே! மேலேநின்று நாம் வாதமாடினால் ஜயாபஜயம் ஜனங்களுக்கு எவ்விதமாய்த் தெரியவரும்! கீழே வா! உன் சக்தியும் என் சக்தியும் ஜனங்கள் கண்டுகொள்வார்கள்" என்று சொன்னான்.

கபீர் அதைக்கேட்டு "அடே! மூடா! கபீருக்குச் சமமாய்நிற்க சாத்தியமாகாதென்று சொல்லக்கூடாதா!

நல்லது நீ சொன்னபடிக்கே கீழே வருகின்றேன், என்ன மாயவித்தைச் செய்யப்போகின்றாயோ, அதையும் சற்றே அறியலாம்'' என்று சொல்லி நூலைப்பிடித்துக்கொண்டு நழுவிக் கீழேயிறங்கி இராமானந்தருக்கு வந்தனம்செய்து கோரக்கைப்பார்த்து "கோரக் என் சும்மாய் நிற்கின்றாய்? ஏதோ உன் சாமர்த்தியத்தைக் காட்டு பார்ப்போம்?'' என்று சொல்லினர்.

அப்போது கோரக் கபீரைப்பார்த்து "அடே! நீயா என்னை ஜயிக்கப் போகின்றாய்?'' என்று இராமானந்தருடைய ரூபத்தைத் தரித்து கபீர்எதிரில் நின்றான். அதைக் கண்ட ஜனங்களெல்லாம் மிகவும் ஆச்சரியப்பட்டு "ஓஹோ இதென்ன இராமனந்தர்கள் இருவ ரிருக்கிறார்கள்.'' இதில் உண்மையான இராமானந்தர் யாரோ தெரியவில்லையே யென்று அவர்க ளிருவர்களையும் பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்கள் அப்போது இராமானந்தர் மிகவும் ஆச்சரியப்பட்டு. "ஆஹா? இந்த கோரக் மிகவும் அசாத்தியன். இன்னும் என்னென்ன மாயைகளை உண்டாக்குவானோ தெரியவில்லை. கபீர் சிறுபிள்ளையாயிருப்பதனால் மாயையில் கடைத்தேரிய இந்த மோசக்காரன் தந்திரங்களைக் கண்டுபிடிக்க சக்தியில்லாமல் ஒருவேளை தோல்வி அடைந்தாலும் அடையலாம். அதனால் காசிபட்டணம் இன்று சந்தேகமில்லாமல் நாசமாகவேண்டியதே யென்று நிச்சயிக்க வேண்டும் என்று விசனப்பட்டு அந்தரங்கமாய்ப் பகவானை நினைத்து "அநாதரக்ஷகா! ஆபத்பாந்தவா! கரிராஜவரதா! காமிதார்த்தப் ப்ரதாபா' கோரக்கை ஜயிக்கத்தக்க சக்தி கபீருக்குப் பிரசாதித்து காசிப்பட்டணத்தை இரக்ஷிக்கக் கடவாய்'' என்று பிரார்த்திக்கத்தொடங்கினர்.

இவ்வாறு இராமனந்தர் பகவானை துதிசெய்தவுடனே கபீருக்கு முன்னைவிட அதிகதைரியமும் யுக்தி சமத்காரங்

களும் அதிகமாய் உண்டாயின. பிறகு மிகவும் ஆனந்தத்துடன் கபீர் இராமானந்தரை நமஸ்கரித்து கோரக்கைப் பார்த்து "என்னடா மூடா! நீ என்னை ஏளனம்செய்கின்றாயா? நீயா என்னை கெலிக்கத்தக்கவன்?'' என்று கோபித்து உடனே கோரக்கின் குருவாகிய மச்சேந்திர நாதர் ரூபங் கொண்டு கோரக் முன் வந்துநின்றார்.

அப்போது கோரக் ப்க்கென்று சிரித்து "கபீர்! உனக்கிஷ்டமாகிய விஷ்ணுமூர்த்தி நானே! என்னை ஜயிக்க மாட்டாய்'' என்று சொல்லிக்கொண்டே சங்குசக்கரங்களுடன் சதுர்புஜங்களைத் தரித்து விஷ்ணுமூர்த்திரூபமாய் நின்று "அடே! இந்த சக்கரத்தினால் உன்னையும் உன் குருவையும் சம்மாரம்செய்வேன்'' என்று சொல்லி மிகவும் அட்டகாசஞ்செய்தான். "அடே கோரக்! உன் ஜாலவித்தைகளெல்லாம் என்னிடம் சாயாது'' என்று கபீர் சொல்லி ஜகத் பயங்கரமாகிய காலருத்திர சொரூபத்தைத் தரித்து "அடே! நீ மிகவும் பரமபக்தியுடன் 'பிரதிதினம் ஆராதிக்கும் ருத்திரமூர்த்தியாய் இதோ வந்திருக்கின்றேன்பார். இந்த பாசுபதாஸ்திரத்தினால் உன் சிரசைக் கண்டிக் கின்றேன் பார். ஏதோ சற்று சமீபமாய் வா பார்ப்போம்'' என்று அதிக பயங்கரமாகிய தொனியுடன் கபீர் சொல்லினர்.

அப்போது கோரக் உடனே சிம்மரூபங்கொண்டு கர்ஜித்துக்கொண்டே கபீர்முன்பாய் நடந்துவந்தான். அப்போது கபீர் சரபரூபங்கொண்டு சிம்மத்தின் எதிரில் வந்து நின்றார். அப்போது கோரக் திசைகளெல்லாம் அக்கினிச்சுவாலை வீசும்படிச்செய்து சமீபத்திலிருந்த ஜனங்களையெல்லாம் தகிக்க ஆரம்பித்தான். உடனே கபீர் பிரளயகால மேகரூபத்தைத் தரித்து மின்னல் இடிகளுடன் தோண்டியிலிருந்து கொட்டும் ஜலம்போல் மழை

பொழிந்தார். அதனால் அக்கினிச்சுவாலை தலைகாட்டாமல் போய்விட்டது. உடனே கபீர் சூரியன் ரூபங்கொண்டு தன்கிரணங்களால் கோரக் சரீரத்தையெல்லாம் எரிக்கச் செய்தார். அப்போது கோரக்குக்கு, அந்த மாயையிலிருந்து தப்பித்துக்கொள்ளத் தெரியாமற்போனதனால் கோரக் சரீரமெல்லாம் தீயத் தலைப்பட்டது. அந்த பாதைக்கு கோரக் சகிக்கமுடியாமல் இராமானந்தரிடம் ஓடி "இராமானந்தகுருவே! சரணம் சரணம், இதுசமயம் என்னைக்காக்கவேண்டும்" என்று கோரக் இராமானந்தரை சரணமடைந்தான். அவ்விடமிருந்த ஜனங்களெல்லாம் தகத்தகாயமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கும் சூரிய கிரணங்களினால் எல்லோருடைய கண்களும் இருளடைந்திருந்ததனால் இவன் கபீரென்றும் இவன் கோரக்கென்றும் தெரிந்துக்கொள்ள சக்தியில்லாததனால், கபீர் கோரக்குக்குத் தோல்வியடைந்து இராமானந்தரிடம் வந்து சரணமடைகின்றானென்றெண்ணி, ஐயையோ! காசிபட்டணம் இன்றோடே நாசமாய்விட்டதல்லவா? என்று சொல்லி எல்லோரும் துக்கித்துக்கொண்டிருக்கையில் "நான்கெலித்தேன், நான்கெலித்தேன்" என்று சொல்லிக் கபீர் தனது கிரணங்களையெல்லாம் சுருக்கிக்கொண்டு "அடே கோரக்! இப்போது என்னடாசொல்லுகின்றாய்?" என்று கபீர் கேட்டனர். அதை ஜனங்களெல்லோரும் கேட்டு பரமானந்தங்கொண்டு கைகொட்டிக் கொல்லென்று சிரிக்கத்தொடங்கினார்கள். அப்போது இராமானந்தருக்கு உண்டாகிய சந்தோஷம் இவ்வளவென்று சொல்ல முடியவில்லை.

கோரக்கின் ஜபம் கபீர்முன் சாயாததனால் கோரக் மிகவும் மனவருத்தமடைந்து இராமானந்தர் சந்நிதானத்திற்குச்சென்று "என்னை ரக்ஷிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். இதற்குள் கபீர் தன் மாயாரூபத்தை

நீக்கி நிசரூபத்தைத் தரித்து குரு சந்நிதானத்திற்குவந்து மிகவும் பயபக்தியுடன் நமஸ்கரித்து "ஸ்வாமி! தேவரீர் ஓர் வாக்களித்தால் இந்தக்கோரக்கை இப்போதே பஸ்மம் செய்துவிடுகின்றேன்" என்று சொன்னவுடனே கோரக்கன் திடுக்கிட்டு, கபீர்! இதற்குள்ளே என்னை ஜயித்தேனென்றெண்ணி சாமர்த்தியம்பேச ஆரம்பித்தாயோ? மற்றொருவிஷயமிருக்கின்றதென்று எண்ணாமற் போனாயல்லவா? அதில் என்னை ஜயித்தாலல்லவோ உனக்கு ஜயம் ஸ்திரப்படும். இதற்குள் ஏன் துள்ளிவிழுகின்றாய்?" என்று சொன்னான்.

கபீர் அதைக்கேட்டு "மற்றொருவிஷயம் என்னமோ அதைத் தெரியச்சொல் பார்போம்? அதிலும் சந்தேகமில்லாமல் உன்னைக்கெலிப்பேன்" என்று சொல்லினர். அதற்குக் கோரக் "நான் கேட்கப்போகும்அம்சங்களுக்குச் சரியானபதில் சொல்லாவிட்டால், உன்னை பஸ்மம் செய்துவிடுவேன்" என்று சொல்லி அடியில் சொல்லப்போகும் பிரஸ்னைகளைக் கேட்டான்.

கோரக்:—இப்போகு உனக்கென்ன வயது!

கபீர்:—என் கண்முன்பாக இதுவரையில் எத்தனையோ ஹரி ஹர பிரமாதிகள் போயிருக்கின்றார்கள்; இனியும் எத்தனையோ ஹரி ஹர பிரமாதிகள் போகயிருக்கின்றார்கள். ஆதலால், என் வயது பிரமாணம் எவ்விதமாய்ச் சொல்லமுடியும்?

கோரக்:—நான் அனேகதடவைகளில் இந்த காசிக்கு வந்திருந்தேன். அப்போது, உன்னைப் பார்க்கவில்லை: அது சமயம் நீ எங்கிருந்தாய்?

கபீர்:—உன்னை நீயே அறியாமலிருக்க இனி நீ என்னை எப்படிஅறிவாய்? சச்சிதானந்த பரமாத்மாவே நானென்று அறிந்துகொள். இந்த ரகஸ்யத்தைத் தெரிந்துகொள்ளாமற்

போனால் உனக்கு முக்தி யுண்டாகமாட்டாது. தேகத்தையே நானென்றெண்ணி தாபிமானத்தினால் அனேக காலங்கள் ஜீவித்திருப்பதனால் பெரியவனாகமாட்டாய்!

கோரக்:—சரீரத்திற்கு அபாயம் வராதபடி காப்பாற்றிக்கொள்ளும் வித்தை பிரம்மவித்தையேயொழிய, மற்ற வித்தைகளெல்லாம் வித்தைகளல்ல. எத்தனை தினங்களாய் நீ காயசித்தி செய்துகொண்டு வருகின்றாய்?

கபீர்:—ஆஹா? நீ இப்போது சொல்லிய விஷயம் மிகவும் நன்றாயிருக்கின்றது. பிறந்தவன் இறப்பது சகஜமேயொழிய பிறவாதவன் எப்படி இறப்பான்? ஜனனமில்லாவிட்டால் மரணமில்லை; மரணமில்லாவிட்டால் ஜனனமில்லை. இந்த ரகசியத்தை நன்றாய் அறிந்தவர்களுக்கே பிரம்மவித்தை சாத்தியமேயொழிய உன்னைப்போன்ற புத்தியீனனுக்கு எப்போதும் சாத்தியமாகமாட்டாது. இந்த ரகஸ்யத்தில் ஏதாகிலும் கொஞ்சம் உன் குருவினிடம் கற்றுக்கொண்டிருக்கின்றாயா?

கோரக்:—புண்ணிய பிரபாவத்தினால் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்னும் பஞ்சபூதங்களால் உண்டாகிய சரீரத்தை ஸ்திரமாய் நிறுத்திக்கொள்ளப் பழகும் வித்தையே பிரம்மவித்தையன்றி மற்றவைகளல்ல. உலகத்தில் பிறந்து தேகத்துடன் இருப்பதை பிரத்தியக்ஷமாய்ப் பார்த்திருந்தும் பிறக்கவேயில்லையென்று நீ சாதிப்பது எவ்வளவு நன்றாயிருக்கின்றது. ஓஹோ! உனக்கு பைத்தியம் பிடித்திருக்கின்றது. இல்லாவிட்டால் அப்படி சொல்லமாட்டாய். ஐயோ! சிறு பிராயத்திலேயே உனக்கு இப்படிப்பட்ட கதி சம்பவித்ததனால் மிகவும் விசனப்படுகின்றேன். நல்லவயித்தியர்களைப்பார்த்து இந்தப் பைத்தியத்திற்கு மருந்துசாப்பிடு. இது முதிர்ந்தால் பின்னிட்டு மிகவும் கஷ்டமுண்டாகும்.

கபீர்:—ஆஹா! இப்போதல்லவோ! உன் சங்கதி தெரியவந்தது; நான்கேட்ட கேள்வியைக் கிரகித்து அதற்குத் தகுந்த சமாதானம்சொல்ல உனக்குச் சக்தியில்லாமற்போனபடியால் அதை மறைப்பதற்காகஎண்ணி என்னைக் கேலிசெய்ய ஆரம்பித்தாய். போதும்போதும், நிறுத்து. நீ இப்படிப்பட்ட குயுக்திகள்செய்து என்னைச்செயிக்க எப்போதும் சாத்தியமாகமாட்டாது. பிரம்மானுசந்தானமே பிரம்மவித்தையென்றும், காயசித்தி முதலானவைகள் அவித்தையென்றும் வித்தியார்த்திகள் சொல்லுவார்கள். பிரம்மமாய் நின்றவனுக்கு துக்ககரமாகிய ஜனனமரண விவகாரங்களேது? உன்னைப்போன்ற ஞானஈனர்களுக்கு இந்தவிஷயம் என்னதெரியப்போகின்றது?

கோரக்:—தாரணாயோக மகிமையினால் தேகத்திற்கு அபாயம் வராதபடி ஸ்திரமாய் நிறுத்திக்கொண்டபிறகல்லவோ பிரம்மானுசந்தானம்செய்து பிரம்மத்தை தரிசிக்கவேண்டும். எப்பொழுதோ அழிந்துபோகத்தக்க தேகத்தை நம்பி மோக்ஷத்தை சாதிக்க வேண்டுமென்றால், அது சாத்தியமாகுமா? சுஷ்கவேதாந்தங்களை உபந்நியசித்து "அஹம் பிரம்மாஸ்மி" என்று சொன்னமாத்திரத்தில் பிரம்மாணந்தம் லபிக்குமா? கஷ்டசாத்தியமாகிய அணிமாதி அட்ட சித்திகளில்லாமல் பிரம்மஞ்ஞானம் சும்மாய்க்கிடைக்குமோ?

கபீர்:—பிரம்மம் ஒன்றே நித்தியமானதேயொழிய அட்டாங்கயோகங்கள் நித்தியமானதல்ல. தானென்னும் வஸ்துவே பிரம்மமேயொழிய தேகமல்ல; தேகாதி பிரபஞ்சத்தைத் தானென்று எண்ணுவதே அஞ்ஞானம். பரப்பிரம்மத்தை பக்தியுடன் உபாசனைசெய்யப்பட்டவர்களுக்கே பரமார்த்தங்களெல்லாம் கைக்கூடுமேயொழிய

இதரர்களுக்குக் கைக்கூடாது. காயசித்தி முதலானவைகள் மாயா சம்பந்தமேயொழிய வேறல்ல.

கோரக்:—யோகதாரணையில்லாமலே பிரம்மஞானம் சித்திக்குமென்று எண்ணலாகாது. பிரம்மமாய் பிரகாசித்துக்கொண் டிருக்கப்பட்டவர்கள் எவ்வளவு சித்தி அடைந்திருக்கவேண்டும். அது, சாமான்னியர்களுக்குச் சித்திக்கத்தக்கதல்ல.

கபீர்:—குருமுகமாய்த் தெரிந்துகொண்டு நிச்சல மனதுடன் இருந்து, தானே பிரம்மமென்னும் "ஸோஹம்" மந்திரத்தை சதாகாலமும் அணுவேனும்சோராமல் ("ஜீவப்பிரம்மைக்க வேதாந்த ரஹஸ்ய" த்தில் சொல்லியதுபோல்) ஜபித்துக்கொண்டு மௌனமாயிருப்பதே பிரம்மமாவதற்குச் சாதனமேயொழிய, மற்றவைகள் சாதனமல்ல.

கோரக்:—பிரம்மமேதானென்று குருமூலமாய்த் தெரிந்துகொண்டமாத்திரத்தில் பிரம்மம் எப்படியாவான்?

கபீர்:—குருமூலமாய் அறிவதற்குமுன்னும் பிரம்மமாகவே யிருந்தான்; அறிந்துகொண்டபின்னும் பிரம்மமாகவே யிருக்கின்றான். ஜீவித்திருந்தபோதும் ஜீவித்திராதபோதும் தேகம் பிரேதமேயல்லவா? கிணறு வெட்டுவதற்கு முன்னும் வெட்டியபின்னும் கிணற்றில் ஆகாசமிருக்கின்றதல்லவா? கடம் செய்வதற்கு முன்னும் செய்தபின்னும் மண்ணாய் இருந்ததல்லவா? அதுபோல் பிரம்மமாயிருக்கும் தன்னைத் தெரிந்துகொள்ளும் படிச் சொல்லுவதே பிரம்மோபதேசமென்றும், பிரம்மமே தானென்றும் திடமாய்த் தெரிந்துகொள்ளுவதே பிரம்மஞானமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

கோரக்:—பிரம்மமேதானென்று தெரிந்துகொள்வதனால் என்ன பிரயோசனம்?

கபீர்:—பிரம்மமே தானென்று தெரிந்துகொண்ட பிறகு ஜனனமென்னும் சமுசயமும், மரணமென்னும் பயமும், சமுசார சமுத்திரத்தில் முழுகோம் என்னும் சந்தேஷமும், அணிமாதிசித்திகள் பெறவேண்டுமென்னும் எண்ணமும், நரகத்தில்விழோம் என்னும் தைரியமும், மானாவமானங்களினால் உண்டாகும் மனோ விகாரங்களில்லாமல் நாசமாகுமென்றும், காமக்குரோதாதி துர்க்குணங்கள் உண்டாகமாட்டாதென்றும் தெரிந்துக்கொண்டு மௌன நிஷ்டையுடன் இருப்பதே பிரயோசனம். இதைவிட விசேஷமாய் வேண்டியது என்னஇருக்கின்றது?

கோரக்:—அப்படியானால், காய கல்பங்களால் சரீரத்திற்கு நாசம் உண்டாகாமல் அநேகதினங்கள் வைத்துக் கொண்டிருப்பதனால் பிரயோசனமென்ன?

கபீர்:—அதனால் சிறிதேனும் பிரயோஜனமில்லை. மல மூத்திரங்களால் நிறைந்திருக்கும் பாண்டத்தை, அல்ப சுகங்களுக்காக ஆசைப்பட்டு அநேகதினங்கள் வைத்துக் கொண்டிருப்பதனால், மோக்ஷம் உண்டாகமாட்டாது. பிரமாதி தேவதைகளுக்கும் ஆயுள் பிரமாணம் இவ்வளவென்று ஏற்பட்டிருக்கின்றது. ஆதலால், சர்வரோகங்களுக்கும் ஆதாரமாயிருக்கப்பட்ட சரீரம் அனேக தினங்கள் இருபத்தனால் யாதொரு பிரயோஜனமும் இல்லை. இந்த சரீரம் இப்போதில்லாவிட்டாலும் இன்னும் எப்போதாகிலும் ஒருநாளைக்கு விழுந்துபோவது நிச்சயம். இவ்வளவு மாத்திரத்திற்காக அவ்வளவு சங்கடப் பட வேண்டியதேன்?

கோரக்:—யோகசாதனத்தினால் உண்டாகும் நாதானந்தத்தைக்கேட்டு அகண்ட ஜோதியை தரிசித்துக் கொண்டு பரமானந்தத்தை அனுபவித்துக்கொண்டு பரகா

யப்பிரவேசம் முதலாகிய அசாத்திய வித்தைகளையெல்லாம் சுலபமாய் அப்பியாசித்து இருக்கலாமா?

கபீர்:—தேகத்தைவிட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசித்தபோது அந்த தேகமும் முன்தேகத்தைப்போன்றதே. அத்தேகத்திலிருந்துகொண்டு முன் அனுபவித்த துக்கத்தைப்போன்ற துக்கமே மறு தேகத்திலும் அடையவேண்டியதேயொழிய சுகமென்பதேயிராது. இப்படிப்பட்ட துக்க நிவாரணைக்காகவே பெரியோர்கள் தவம்செய்கின்றார்கள். அஹங்கார மமகாரமுடைய மூடர்கள் ராசபோகங்களுக்காக அனேகவிரதங்களை அனுஷ்டித்து வருகின்றார்கள். இப்படிப்பட்ட ஞானஈனர்கள் கோடி ஜன்மமெடுத்தபோதிலும் உத்தமகதியை அடையமாட்டார்கள். ஞானமில்லாதஜன்மம் வீணாகும். பிரம்மஞான சம்பந்நர்களாகிய சத்புருஷர்கள் சர்வமும் பிரம்மமாய் அறிந்து அஹங்கார மமகாரங்களைத் தூரப்படுத்தி மனச் சந்தேகங்களை நிவர்த்திசெய்துகொண்டு சச்சிதானந்தமயமாய் சதானந்தத்தை அனுபவித்துக்கொண்டு வருவார்கள். அஹங்காரமென்பது பிரமதேவனுக்கே விடாமலிருக்க, சாதாரணமாகிய நர மனுஷ்யர்களுக்குஇருப்பது சொல்லவும் வேண்டுமோ! இந்த பிரமதேவர் விஷயம் சொல்லுகின்றேன்கேள்:—

சகல பிரபஞ்சத்தையும் நிர்மாணம்செய்யும் சதுர் (நான்) முகன் தனக்கிருக்கும் நெடுநாள் ஆயுர்பாகத்தை நினைத்து என்னைப்போல் இவ்வளவுகாலம் யார் ஜீவித்திருக்கின்றார்களென்று நிச்சயித்து அஹங்காரங்கொண்டு, அம்சவாகனத்தின்மீதேறி மெதுவாய் வைகுண்டம்போய்ச் சேர்ந்து விஷ்ணுமூர்த்தியை தரிசித்து வெகுவிதங்களாய்த் துதிசெய்து முடிந்தபிறகு "அனாதரக்ஷகா! நான் ஜீவித்திருக்கும் காலவரையில், ஜீவித்திருக்கும் புருஷன் யாராகி

னும் உலகத்தில் இருக்கின்றார்களா?" என்று பிரமதேவர் கேட்டார். "நீ சகல பிரபஞ்சத்தையும் சிருஷ்டித்த மஹானுபாவன்; உனக்குச் சமானமானவர்கள் உலகத்தில் யாருமில்லை; யாதொரு வியாதிகளுமில்லாமல் அநேககாலம் ஜீவித்திருப்பாய்: உன்மஹாமஹிமை இப்படிப்பட்டதென்று நான் ஒருவனே வர்ணித்துச்சொல்வது ஒருபெரிதானதல்ல; இன்னும் சிலபெரியோர்களை விசாரித்தாலேயன்றி உன்பிரபாவம் தெரியவராது" என்று விஷ்ணுமூர்த்தி பதில்சொல்லினர். "அப்படியானால் போய் விசாரித்து வரலாம் வருகின்றீர்களா" என்று பிரமதேவர் விஷ்ணு மூர்த்தியைக்கேட்டனர். அதற்கு விஷ்ணுமூர்த்தி சம்மதித்து கருடவாகனரூடராய் பிரமதேவரை அழைத்துக்கொண்டு ஓர் ஆரண்ணிய மத்தியில் வசித்துக்கொண்டிருக்கும் ரோமச, மஹரிஷியைக்கண்டார். அப்போது அகஸ்மாத்தாய் விஷ்ணுமூர்த்திதரிசனம் ரோமச மஹரிஷிக்குக் கிடைத்தவுடனே அவருக்குஉண்டாகிய பரமானந்தத்தினால் விஷ்ணுமூர்த்தியை மிகவும் ஸ்துதிசெய்து "சுவாமி தேவரீர் இவ்வளவுதூரம் வரக் காரணம் என்னமோ அறியாமலிருக்கின்றேன். தயைசெய்து அதை அனுக்கிரகிக்கவேண்டும்" என்று ரோமச மஹரிஷி வேண்டிக்கொண்டனர். அப்போது விஷ்ணுமூர்த்தி,முனீசுவரைப் பார்த்து "ஐயா! முனிபுங்கவா! உன் ஆயுர்பாகத்தைத் தெரிந்துகொள்ள நாங்கள்இருவரும் வந்தோம். அதுவிஷயம் இந்த பிரம தேவருக்குச் சற்றே தெரியச்சொல்லவேண்டும்" என்று விஷ்ணுமூர்த்தி சொல்லினர். அதைக் கேட்ட முனீசுவரர் விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரித்து தேவா! ஸர்வக்ஞனை உனக்குத் தெரியாத விஷயம் ஒன்றிருக்கின்றதோ? ஆயினும் அடியேனைக் கௌரவித்து கேட்டதனால் சொல்லுகின்றேன் கேளுங்கள். இப்படிப

பட்ட சதுர்முகன் ஒருவன் மரணமடைந்தால் என் சரீரத்திலிருக்கும் ஒருமயிர் விழுந்து விடும். இப்படிப்பட்ட மயிர்கள் மூன்றுகோடி ஐம்பது லக்ஷம் மயிர்கள் என்சரீரத்திலிருக்கின்றன; அவைகளெல்லாம் விழுந்தவுடன் அடியேன் தேவரீருடைய பாதாரவிந்தம் வந்துசேர்ந்து சதானந்தத்தை அனுபவிப்பேன்'' என்று ரோமச மஹரிஷி சொல்லினர்.

அதற்கு விஷ்ணுமூர்த்தி ரோமச மஹரிஷியைப் பார்த்து "ஐயா! மூன்றுகோடி ஐம்பதுலக்ஷம் சதுர்முகர்கள் மரணம் அடையும்வரையில் உன் தேகத்தை ரக்ஷிப்பதற்காக கிருகம் ஒன்று இருக்கவேண்டியது அவசியமல்லவா? அதுபோல் ஏன் நிர்ணயம்செய்துகொள்ளவில்லை?'' என்று கேட்டனர். அதற்கு ரோமசமஹரிஷி மந்தஹாஸஞ் செய்து "தேவா! இந்தத்தேஹம் நீர்க் குமிழியைப் போன்றது என்று யதார்த்தமாய்த் தெரிந்த பிறகு இதை அவ்வளவு பத்திரமாய்க் காப்பாற்றவேண்டியதேன்? தேவரீருடைய பாதாரவிந்த சேவையில் இருக்கப்பட்டவர்களுக்கு தேகாபிமானம் ஏது? தேகாபிமானம் இருக்கும்வரையில் துக்கமேயொழிய சுகமில்லை'' என்று சொல்லினர் அதற்கு விஷ்ணுமூர்த்தி மிகவும் சந்தோஷித்து மகா வாக்கிய தத்துவங்கள் சிலவற்றைச்சொல்லி, ரிஷிசொல்லிய விஷயமே வாஸ்தவமென்று ஒப்புக்கொண்டு "போய்வருகின்றோம்'' என்று விஷ்ணுமூர்த்தி சொல்லினர். அப்போது ரிஷியானவர் மிகவும் பக்தியுடன் விஷ்ணு மூர்த்திக்குச் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று இருகைகளையும் குவித்து அஞ்சலியஸ்தராய் நின்று "தேவா மறுபடியும் தேவரீருடையசேவை அடியேனுக்கு எப்பொழுதுலபித்து தன்னியனாவேனோ தெரியவில்லை'' என்று சொல்லி மிகவும் விசாரப்பட்டு அவருடன் கூட சிலதூரம் வந்து வழிவிட்டு மறுபடியும்சென்றார்.

பிறகு விஷ்ணுமூர்த்தி பிரமதேவரை அழைத்துக்கொண்டு மற்றொரு ஆரண்யமத்தியில் நிர்மலபிரதேசத்தில் பிரம்மானுசந்தானம் செய்துகொண்டு உட்கார்ந்திருக்கும் அஷ்டவக்கிரனென்னும் ரிஷியினிடம்சென்று தரிசனம் கொடுத்தார். அந்தரிஷி பகவானைக்கண்டவுடன் மகதானந்தமடைந்து விஷ்ணுமூர்த்தியை வெகுவிதங்களாய்த் துதிசெய்து "தேவதேவோத்தமா! தேவரீர் இவ்வளவு தூரம் விஜயம்செய்து அடியேனுக்குத் தரிசனம்கொடுத்ததைப்பார்க்க மிகவும் ஆச்சரியகரமாயிருக்கின்றது. அடியேனால் ஆகவேண்டியவேலை ஏதாகிலும் இருக்கும்பக்ஷத்தில் ஓர் வார்த்தை சொல்லியனுப்பினால் அடியேன் தலையால் நடந்துவரேனா? தேவரீருடைய பக்தவாத்சல்யம் என்னவென்றுசொல்வேன்? தேவரீருடைய சந்நிதானத்திற்கு வரவழைத்தால் தாசனுக்கு மார்க்காயாசம் உண்டாகுமென்றெண்ணியல்லவோ தேவரீரே இங்குவந்தீர்கள். அடியேன் தன்னியனானேன். வந்தகாரியம்எதுவோ அதைத் தயவுசெய்து சொல்லவேண்டும்!'' என்று மிகவும் பக்தியுடன் கேட்டுக்கொண்டனர்.

அப்போது அரவிந்தநயனனாகிய பகவான் புன்சிரிப்பாய்ச்சிரித்து அஷ்டவக்கிரரிஷியைப்பார்த்து "ரிஷிகுலதிலகமே! உன் ஜீவிதகாலம் இவ்வளவென்று தெரிந்துகொள்ளவந்தோம். நீர் எவ்வளவுகாலம் ஜீவித்திருப்பீரோ அந்தவிஷயம் இந்த பிரமதேவருக்குச் சற்றே சொல்லவேண்டும்'' என்று கேட்டனர். அதற்கு ரிஷியானவர் "பரமேஸ்வரா! சகல லோகரக்ஷகனாகிய உமக்குத் தெரியாத விஷயமும் ஒன்றுண்டோ! ஆயினும் உமது ஆஞ்ஞையை மீறிநடப்பது அடியேனுக்குத் தகுதியல்ல. என் சரீரத்தில்

எட்டுக் கோணல்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் நிமிர்ந்தால் என் ஆயுர்பாகம் முடியும். மூன்றுகோடி ஐம்பதுலக்ஷம் பிரமதேவர்கள் மரணமடைந்தால் ரோமசமஹாரிஷி ஆயுர்பாகம்முடியும், அப்படிப்பட்ட ரோமசமஹாரிஷி எட்டுத்தடவைகளில் பிறந்து மரணமடைந்தால் என் தேகத்திலிருக்கும் எட்டுக் கோணல்களும் நிமிர்ந்துவிடும்; கோணல்கள் நிமிர்ந்தவுடனே என் ஆயுர்பாகம் முடியும். அப்போது அடியேன் சுத்தப்பிரம்மமாய்விடுவேன்" என்று சொல்லினர்.

அப்போது விஷ்ணுமூர்த்தி அவரைப்பார்த்து "ஐயா அதுவரையில் சரீர ரக்ஷணார்த்தமாய் கிருகம் ஒன்று இருக்கவேண்டுமல்லவா? அது ஏன் இல்லாமலிருக்கின்றீர்?" என்றுகேட்டனர். அதற்கு ரிஷியானவர் "தேவா! என் மனதைச் சோதிக்க இவ்வார்த்தையைக் கேட்கின்றீர் போலத் தோன்றுகின்றது. ஆயினும் சொல்லுகின்றேன் கேளுங்கள். இந்த சரீரம் நீர்மேல் எழுதிய எழுத்தைப் போன்றது என்று எண்ணாமல் நித்தியமென்றெண்ணி இத்தேகரக்ஷணார்த்தத்திற்கு குடிசையும் ஒன்றுவேண்டுமோ? குடிசையிருந்தால் உம்மைத் துதிசெய்ய லோபம் உண்டாகாதோ? சகல பிரபஞ்சத்தையும் சிருஷ்டிக்கவும், ரக்ஷிக்கவும, சம்மாரஞ்செய்யவும் நீர் கர்த்தராயிருக்க, இதில் அடியேனுக்கு என்னசம்பந்தமிருக்கின்றது? தேஹாபிமானம் உள்ளவரையில் அஞ்ஞானம் நசிக்காதல்லவா? பூர்வ ஜன்ம கர்மங்களினால் அபிமானமுண்டாகின்றது. அப்படிப்பட்ட அபிமானத்தை நிவர்த்திசெய்வதே ஞானமென்று முன்புஒருமுறை நீரேசொல்லியிருக்கின்றீர்கள். ஆதலால், தேகத்திற்குப் போஷணார்த்தம் அனுவசியமென்று தோன்றியபடியால் அதன்விஷயமாய் பிரயத்தனம் ஒன்றும்செய்யவில்லை" என்று சொல்லினர்.

அதற்கு விஷ்ணுமூர்த்தி மிகவும் சந்தோஷித்து பரதத்துவமான உபதேசங்கள் சிலவற்றை ரிஷிக்கு உபதேசித்து, ரிஷிசொல்லியவாக்கியமே சத்தியமானதென்று நிரூபித்து நான் சென்றுவருகின்றேனென்று ரிஷியினிடம் சொல்லினர். அதற்கு ரிஷியானவர் மிகவும் விசனமுற்று "தேவருடையசேவை இனி எப்பொழுதுலபிக்குமோ, எப்பொழுது யான் கிருதார்த்தனாவேனோ?" என்று சொல்லிக்கொண்டே சிலதூரம்சென்று வழிவிட்டுப் பிறகு தன் இருப்பிடம்சேர்ந்து பிரம்மானந்தம் அனுபவித்துக்கொண்டிருந்தார். பிறகு விஷ்ணுமூர்த்தி பரமபதம்சேர்ந்து மாணிக்க மண்டபத்திலுள்ள திவ்விய சிங்காசனத்தின்மீது எழுந்தருளி நான்முகனைப்பார்த்து.

"ஐயா! பிரமதேவனே! நான் சொல்லப்போகும் விஷயங்களைச் சாவதானமாய்க்கேட்கக்கடவாய். இந்திரியங்களை ஜயித்து அஞ்ஞானமென்னும் இருளை ஞானமென்னும் சூரிய பிரபையினால் நிக்கிரகித்து அகண்ட ஜோதியை ஆனந்தமாய் தரிசித்த, பரமபக்தி யுக்தர்களான ஜீவன் முக்த சத்புருஷர்களைச் சேவித்து அவர்களின் வசனாமிருதங்களைக் காதுகளினால் கேட்டாயல்லவா? உன் புண்ணிய விசேஷத்தினால் அந்த மஹானுபாவர்களின் சேவை உனக்கு லபித்ததேயொழிய மற்றபடிக்கு வேறல்ல. இனியாகிலும் பக்தியுடன் இருக்கக்கடவாய். உலகத்தில் அஹங்காரத்துடன் இருந்தவர்கள் இதுவரையில் யாராகிலும் கடைத்தேறியவர்களிருக்கின்றார்களா? அப்படிப்பட்டவர்களுக்கு அதோகதியேயொழிய சத்கதி உண்டாகமாட்டாது. எப்படிப்பட்டவர்களாயிருந்தபோதிலும் கர்வம் கெடுத்துவிடும். ஆதலால், நீ கர்வத்தை விட்டுவிடுவதே மிகவும் சிரேஷ்டமானது" என்று அஹங்கார நிராகரணங்களைக் குறித்துச் சற்றுநேரம் உபந்நியசித்தார்.

பிரமதேவர் அவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே அறிவுண்டாய், விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரித்து, “தேவா! தேவரீருடைய கடாக்ஷ வீக்ஷண்ணியமென்னும் பிரகாசத்தினால், என் இருதயாகாசத்தை மூடிக்கொண்டிருந்த அஹங்கார மமகார விகார காடாந்தகாரங்களெல்லாம் நீங்கி யான் ஞானோதயமடைந்தேன். போகாபிமான பாசத்திலிருந்து விடுபட்டு முமுக்ஷுவானேன்” என்று விஞ்ஞாபனஞ் செய்துகொண்டு பகவானிடம் செலவு பெற்றுக்கொண்டு தன் லோகத்திற்குச் சென்றுவிட்டார். கோரக்! நீ இதைக்கேட்டிருக்கின்றாயா! உன்னையும் என்னையும் சகல பிரபஞ்சத்தையும் சிருஷ்டிசெய்த நான்முகனுக்கே அஹங்காரமிருக்க மற்றவர்களின் விஷயத்தில் சொல்லவும்வேண்டுமோ? ஆதலால், நீ இதுமுதல் அஹங்காரத்தைவிட்டு ஞானவான்களாகிய சத்புருஷர்களை சரணமடைந்து அவர்களின் அனுக்கிரகத்திற்குப் பாத்திரனாய் நித்தியானந்த சாம்ராஜ்ஜியபதவியை அனுபவிக்கக் கடவாய். உனக்கு சகல நன்மையும் உண்டாகும்” என்று பற்பல விதங்களாய் நல்லவார்த்தையைப் போதித்தார்.

கோரக் அதைக்கேட்டு கபீரைத் திரஸ்கரித்து “கபீர்! நீ எனக்கு போதிக்கத்தக்க புத்திமானாய்விட்டாயா? பிரபஞ்சமெங்கும் மஹா பிரசித்தியடைந்த என்முன், பாலிய தசையிலிருக்கும் நீ யுக்தாயுக்த பரிஞ்ஞானமில்லாமல் ஏளனஞ்செய்ய ஆரம்பித்தாய்! இது, எப்படியிருக்கின்றதென்றால், முட்டைக்குள்ளிருந்து புறப்பட்ட குஞ்சு, முட்டையைப்பார்த்து பரிகாசம்செய்வதுபோல், நீ என்னிடம் வாதிப்பது எவ்வளவு விந்தையாயிருக்கின்றது!” என்று சொன்னான்.

கபீர் அதைக்கேட்டு பக்கென்று சிரித்து “கீழ்வீழ்ந்த போதிலும் மீசையில் மண்படவில்லை என்பதுபோல்

வீணாடம்பம் ஏன்பேசுகிறாய்? பிரபஞ்சமெங்கும் மஹா பிரசித்தயடைந்தவனென்று துரகங்காரத்துடன் மற்றொருமுறை சொல்வாயாகில், உன்னை சும்மாய்விடேன். சமஸ்த வித்தையிலும் சமர்த்தர்களென்று பிரசித்தியடைந்த நவகோடி சித்தர்கள் இருக்கின்றார்கள். பிரம சிருஷ்டிக்குப் பிரதி சிருஷ்டிசெய்த மஹாரிஷிகளும் இருக்கின்றார்கள். உன்னைப்போன்றவர்கள் கோடிபேரானாலும் அவர்களின் பாததூளிக்குச் சமானமாகமாட்டார்கள். இதை நீ அறியமாட்டாயா? பூர்வம் விஸ்வாமித்திரன் தேவசபையில் கொஞ்சம் கர்வித்தபடியால் மறுபடியும் தேவசபையில் சென்று தேவேந்திரனைப்பார்க்க வெட்கப்பட்டு அநேககாலம்வரையில் தேவசபைக்குப்போகாமல் வருத்தமடையவில்லையா? எப்படிப்பட்டவர்களா யிருந்தபோதிலும் குற்றம்செய்தால் பகவானிடத்தில் சிக்ஷைக்குப்பாத்திரர்களாவார்கள். நீ மஹாசித்தனென்று துரஹங்காரமடைந்து கண்ணும் மண்ணும்தெரியாமல் அனேக தபோதனர்களை அவமானப்படுத்தி விசேஷ தோஷங்களைச் சம்பாதித்துக் கொண்டாய். அந்ததோஷ பரிகாரார்த்தமாய் என்குருவாகிய இராமானந்தர் பாதத்தைப்பணிந்து பன்னிரண்டு வருஷங்கள் விசேஷ பக்தியுடன் சிசுருஷை செய்வாயாகில் அவரது கடாக்ஷத்தினால் கிருதார்த்தனாய் அவித்தை யென்னும் இருளிலிருந்து நீங்கி சுஞானமுண்டாய் சுகமனுபவிப்பாய்” என்று கபீர் சொல்லினர்.

இராமானந்தர் அவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் கபீரைப்பார்த்து “நாயனா! மானமுடையவர்களுக்கு அவமானகரமாகிய வார்த்தை ஒன்றே போதுமானது. ஆதலால், நீ இவ்வளவு திரஸ்காரமாய்ச் சொல்லலாகாது” என்று கபீரை சமாதானஞ் செய்தார். அதற்கு கோரக் தன்கருவத்தைவிடாமல் கபீரைப்பார்த்து “கபீர்! நல்

லது ஆகட்டும் : இதற்குள் தப்பித்துக்கொண்டேனென்று எண்ணுதே ; நான் உன்னை சும்மாய் விடப்பட்டவனல்ல ; மறுபடியும்வந்தபோது உன்னை விசாரித்துக் கொள்ளுகின்றேன்'' என்றுசொல்லி ரசகுளிகையை வாயில் போட்டு சிஷ்யர்களை அழைத்துக்கொண்டு ஆகாசமார்க்கமாய்க் கிளம்பி தன் ஆசிரமம்போய்ச்சேர்ந்து எவ்விதத்திலாகிலும் கபீரை ஜயிக்கவேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டு அதற்குவேண்டிய சாதன சதுஷ்டயங்களைச் செய்துவந்தான். அப்போது, கோரக்கினுடைய போராட்டத்திற்குப் பயந்திருந்த முனிவர்களெல்லாம் பயம்நீங்கி சந்தோஷித்திருந்தார்கள்.

பிறகு இராமானந்தர் பரமானந்தமடைந்து கபீரை ஆலிங்கனஞ்செய்துகொண்டு ''ஜயீபவ சுகீபவ'' என்று ஆசிர்வதித்து ''குமாரா ! உனது சுகுண சம்பத்து சத்பிரவர்த்தனை முதலாகிய மஹாமஹிமையைத் தெரிந்துகொள்ளாமல் உன்னைச் சாமான்னியமானவனாய் எண்ணி திரஸ்கரித்தேன். என் அபாரதத்தை க்ஷமிக்கவேண்டும். மிகவும் பிரசித்திபெற்ற கோரக் நாதனை நிமிஷமாத்திரத்தில் ஜயித்து எனக்கு மிகவும் கௌரவத்தை உண்டாக்கினாய். உன்னைப்போன்ற சத்புருஷனைப் பிரியசிஷ்யனாய்ப்பெற நான் என்ன புண்ணியஞ்செய்தேனோ தெரியவில்லை, நீ வந்து கோரக்கை ஜயிக்காவிட்டால் காசிப்பட்டணம் இதுவரையில் நாமரூபமில்லாமல் நாசமாயிருக்கும். இப்படிப்பட்ட ஆபத்திலிருந்து என்னைத் தப்புவித்த உனக்கு என்ன பிரதியுபகாரம் செய்யப்போகின்றேன்'' என்று பலவிதங்களாய்த் துதிசெய்தனர்.

அதைக்கேட்ட கபீர் தேசிகசுவாமி பாதகமலங்களைப் பலமுறை நமஸ்கரித்து அஞ்சலி அஸ்தராய்நின்று ''சுவாமி! தேவரீருடைய ஆசிர்வாத மகிமையினாலேயே கோரக்கை

ஜயித்தேனேயொழிய மற்றப்படிக்கது வேறல்ல. சத்
குருநாதன் அனுக்கிரகம்பெற்றவர்களுக்கு சாத்தியமாகாத
காரியமும் ஒன்றுண்டோ ? இதுவரையில் நடந்தவைகளுக்
கெல்லாம் தேவரீருடைய மகிமையே பிரதானகாரண
மென்று எண்ணுமல் என்னைச் சும்மாய்ப் புகழ்கின்றீர்கள்.
தேவரீருடைய கிருபாகடாக்ஷத்தினால் அடியேனுடைய
அபராதங்களை க்ஷமித்து ரக்ஷிக்கவேண்டிய பாரம் தேவரீ
ருடையதே யல்லவா ?'' என்று சொல்லிக்கொண்டனர்.
பிறகு காசிதேசத்திலுள்ள ஜனங்களெல்லோரும் கபீர்
நடத்திய அற்புத காரியங்களுக்கெல்லாம் ஆச்சரியப்பட்டு
இவர் மஹானுபாவரேயென்று வெகுவிதங்களாய்த் துதி
செய்து கோரக்கை நிந்தித்து கபீர்மேல் மல்லிகை முல்லை
புஷ்பங்களை இறைத்துப் பரமானந்தத்துடன் கைகொட்டி
''ஜயஜய கபீர் ஜயஜய கபீர்.'' என்று திக்குகள் அதிரும்
படி உரத்த சப்தத்துடன் கூச்சலிட்டார்கள்,

அப்போது இராமானந்தர் மகானந்தத்துடன், கபீர்
தாய்தந்தையர்களை கௌரவமாய் வரவழைத்து, அவர்களை
உசிதாசனத்தின்மீது உட்காரும்படிச்செய்து. கபீர் கங்கை
யில் அகப்பட்டதுமுதல் அதுவரையில் நடந்தவர்த்த
மானங்களை யெல்லாம் தாய்தந்தையர்களால் இராமானந்
தர் சவிஸ்தாரமாய்க்கேட்டு, இவர் மஹானுபாவரே
யென்றெண்ணி, தமாலைப்பார்த்து ''ஐயா ! உன் அதிருஷ்
டத்திற்குச் சமானமானது ஏதுமில்லை ; இப்படிப்பட்ட
பரம பாகவத சிரோன் மணியாகிய குமாரன் சாதாரண
மானவர்களுக்கு லபிக்கமாட்டான். பன்றி பத்துக்குட்டி
களைப் போடுவதுபோல் பத்து குமாரர்களைப் பெறுவத
னால் லாபமென்ன ? யானை ஓர் குட்டியே போடுகின்றது.
அது, உதாரமாகிய கௌரவத்தையே அடைகின்றது.
ஆகாசத்தில் அநேக நக்ஷத்திரங்கள் இருந்தபோதிலும் சிறி

தேனும் பிரகாசம் உண்டாகமாட்டாது. ஓர் சந்திரன் உதயமானவுடன் பிரமாண்டமெல்லாம் பிரகாசிக்கின்றது. அநேகர்கள் அநேகபுத்திரர்களைப் பெற்றோமென்று சந்தோஷத்தை அடைவதைவிட இப்படிப்பட்ட சத்புருஷன் ஒருவனைப்பெற்றால் போதுமானது. இப்படிப்பட்ட பரம பவித்திரனை சிஷ்யனைப் பெற நான் என்ன புண்ணியம் செய்தேனோ தெரியவில்லை'' என்று பலவிதங்களாய் கபீரை ஸ்துதிசெய்து. அன்றுமுதல் ஓர் நிமிஷமாகிலும் கபீரை இணைபிரிய மனம்வாராமல் பிரதிதினமும் உதயாஸ்தமனங்களில் தப்பாமல் வந்து தன்னைக்கலந்து பேசிவிட்டுப் போகும்படி கபீருக்கு ஆஞ்ஞாபித்து, தாய்தந்தையர்களுடன் கபீரைக் கூட்டியனுப்பினார்.

தமாலும் ஜிஜ்ஜாபீபியும் இராமானந்தரிடம் செலவு பெற்றுக் குமாரனை அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்று பரமானந்தத்தை அனுபவித்துவந்தார்கள். பிறகு கபீர் பிரதிதினம் காலைமாலைகளில் தவறாமல் இராமானந்தர் சந்நிதானத்திற்குச்சென்று தரிசனம் செய்துகொண்டு வருவதுண்டு. அப்போது இராமானந்தர் கபீர்விஷயத்தில் மிகவும் பிரீதியுடையவராயிருந்து பகவத்விஷயமாய் கபீருடன் சம்பாஷணை செய்துகொண்டுவந்தார்.

தமால் கபீருக்கு விவாஹம் செய்யப் பிரயத்தனப் படுதல்.

இவ்வாறு சிலநாட்கள் சென்றவுடன் கபீருக்குப் பதினாறு வருஷங்கள் பூர்த்தியாய்விட்டன. அப்போது பகவான் கபீருக்கு விவாகஞ் செய்விக்க நிச்சயித்து ஓர்நாள் இரவு தமாலின் கனவில் பகீர்ரூபமாய்வந்து "தமால்! நீ

என்ன இவ்வளவு அஜாக்கிரதையாயிருக்கின்றாய்? பூர்வம் பேசிய கன்னிகையை பிரயத்தனப்பட்டுப் பேசி சீக்கிரமாய் உன் குமாரனுக்கு விவாகஞ் செய்யலாகாதா? என் சும்மா இருக்கின்றாய்? எழுந்திரு எழுந்திரு'' என்றுசொல்லி அந்தர்த்தானமானார். உடனே தமால் விழித்துக்கொண்டு தன்பாரியாளை எழுப்பி "ஓ நாயகிரத்தினமே இப்பொழுது பகவான்வந்து கபீருக்கு முன்பேசிய கன்னிகையைப்பேசி சீக்கிரமாய் விவாகஞ்செய்யும்படிச் சொல்லிவிட்டு அந்தர்த்தானமானார். ஆதலால், நீ காலையில் அக்கன்னிகையின் தாய்தந்தையர்களிடஞ்சென்று விவாகவிஷயத்தை அவர்களிடஞ்சொல்லி அவர்களின் அபிப்பிராயத்தை அறிந்துவா'' என்றுசொல்லினர். பொழுது விடிந்தவுடன் ஜிஜ்ஜாபீபி புருஷனது ஆஞ்ஞையைப்போல் சுந்தராவின் தாய்தந்தையர்களிடம்சென்று க்ஷேமலாபங்களை விசாரித்து அனேக சம்பாஷணைகள் நடந்தபிறகு சந்தர்ப்பானுசாரமாய் விவாக சங்கதியைக்குறித்து பிரஸ்தாபஞ் செய்தாள். அதற்கு சுந்தராவின்தந்தை "ஆம் நீ சொல்லியவிஷயம் வாஸ்தவமே; உன்குமாரன் நமது மதாசார தருமங்களுக்கு விரோதமாய் நடந்துகொள்ளுகின்றான்; யார் எவ்வளவெவ்வளவு சொல்லியபோதிலும் சுன்னத்தாகிலும் செய்துகொண்டவனல்ல. அப்படிப்பட்டவனுக்கு பெண்ணைக் கொடுவென்றால் எவ்விதமாய்க் கொடுப்போம். நீங்களும் உங்கள் குமாரனுடன்சேர்ந்து பந்துக்களுடன் விரோதம் செய்துகொண்டீர்கள். உங்களுக்கு பெண்கொடுக்கும் பக்ஷத்தில் நம்முடைய ஜாதியாரெல்லாம் சும்மாயிருப்பார்களா? நீங்கள் எவ்விதமாகிலும் கபீருக்குச் சுன்னதது மாத்திரஞ் செய்துவிட்டால் போதுமானது; எங்கள்கன்னிகையை அவனுக்கேகொடுத்து விவாகஞ்செய்விக்கின்றோம். இல்லாவிட்டால் நீங்கள் இனி

எவ்விடமாகிலும் பெண்பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு ஜிஞ்ஜாபீபி பதில்சொல்ல நாவெழாமல் விசாரப்பட்டு வீட்டிற்குவந்து அங்கு நடந்த விஷயங்களையெல்லாம் தன் நாயகனிடம் சொல்லினள். இதற்கு நாமென்னசெய்வோம் என்று தமால் பச்சாத்தாபப்பட்டு பகவதாஞ்ஞானுசாரமாய் எல்லாம் நடக்குமென்று நிச்சயித்துப்பகவான்மீது பாரத்தைப்போட்டுச் சும்மாயிருந்தார்.

பிறகு சுந்தராவின் தாய்தந்தையர்கள் தன் குமாரத்திக்கு யௌவனவயது வந்தபடியால், இனி வீட்டில் பெண்ணை வைக்கலாகாதென்று எண்ணி தன் பந்துக்களிலேயே ஓர் நல்ல சம்பந்தம்பார்த்து விவாகஞ்செய்ய நிச்சயித்து, விவாகத்திற்குவேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரிக்க ஆரம்பித்தார்கள். அப்போது பகவான், பகீர்ரூபத்துடன் சுந்தராவின் தாய்தந்தையர்களின் கனவில் காணப்பட்டு "உங்கள் குமாரத்திக்குத் தக்கபுருஷன் கபீரேயொழிய மற்றொருவனல்ல. ஆதலால், அவனுக்கே கொடுத்து விவாகஞ்செய்விக்கவேண்டும்; அவனுக்குக்கொடுத்து விவாகஞ் செய்விக்காமல் வேறொரிடத்தில் கொடுப்பீர்களாகில் உங்கள் வமிசம் நிர்மூலமாய்விடும்'' என்று சொல்லி மறைந்தனர். அப்போது உடனே தம்பதிகள் இருவரும் திடுக்கிட்டெழுந்து தாங்கள் கண்ட கனவை ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு தாங்கள் பேசிமுடித்த மாப்பிள்ளைக்குத் தம் குமாரத்தியைக் கொடுக்க இஷ்டமில்லாமல், தங்கள் குலத்திற்கு கௌரவமாயிருக்கும் சில பெரிய மனிதர்களை வரவழைத்து, தாம்கண்ட சொர்ப்பனத்தை அவர்களிடம்சொல்லி இதற்கு என்ன செய்யலாமென்று அவர்களின் அபிப்பிராயத்தைக்கேட்டார்கள். அதற்கு அவர்கள் "தமாலுடன் சம்பந்தஞ்செய்ய எங்களுக்கு இஷ்டமில்லை.

பகவானே பிரத்தியக்ஷமாய்வந்து சொன்னாலுஞ்சரி, அல்லது வம்சம் நிர்மூலமானாலுஞ்சரி குலப்பிரஷ்டத்துவம் அடைந்தவனுக்குப் பெண்ணைக் கொடுக்கலாகாது'' என்று எல்லோரும் ஒரேவாக்காய்ச் சொல்லினர்கள்.

அப்போது கபீரைத்தவிர இதரர்களை விவாகம் செய்துகொள்வதில்லையென்று மனதில் நிச்சயித்துக்கொண்டு சதாகாலமும் பகவானையே பிரார்த்தனை செய்துகொண்டிருக்கும் சுந்தராதேவி இவ்வார்த்தைகளையெல்லாம் கேட்டு தாய்தந்தையர்களைக் கூப்பிட்டு "கபீரைத்தவிர அன்னியர்களை நான் விவாகஞ் செய்துகொள்ளமாட்டேன். என்னிஷ்டத்திற்கு விரோதமாய் நடத்துவீர்களாகில் பிராணத்தியாகஞ் செய்துகொள்ளுவது நிச்சயம். முதல் என்னைக் கபீருக்கேகொடுப்பதாய் சொன்னதுமுதல் எனக்கு கபீரேநாயகனென்று நிச்சயித்துக்கொண்டேன். நான் சங்கல்பித்தவண்ணம் நடவாமல் விகல்பமானால் பதிவிரதா தருமத்திற்குப் பங்கமுண்டாகும். முதல் ஒருவனுக்கு வாக்குத்தானஞ்செய்து தப்பிப்போவதும், மனதில் ஒருவனை நாயகனாய் நினைத்து மற்றொருவனைக்கைபிடிப்பதும் பாபத்திற்குமூலகாரணமாயிருக்கின்றது. சிறுபோதிலிருந்து கபீரையே விவாகஞ்செய்துகொள்ளவேண்டுமென்னும் இச்சை பூர்த்தியாயிருந்தபடியால் அவரைத்தவிர மற்றொருவன்மீது மனம் நாடாது. ஆதலால், பகவானுடைய ஆஞ்ஞைப்போல் என்னைக் கபீருக்கேகொடுத்து விவாகஞ் செய்விப்பது மிகவும் உத்தமம்'' என்று சொல்லினள்.

அப்போது அங்கிருந்த பெரியமனிதர்களெல்லோரும் சுந்தராவின் கருத்தைஅறிந்து மிகவும்ஆச்சரியப்பட்டு "என்ன காலகர்மதோஷமோ தெரியவில்லை. இவ்வளவு சிறியபெண்ணுக்கு மாப்பிள்ளையென்னும் ஆசை மண்டைக்கேறி இருக்கின்றது. இவளை விவாகம் செய்துகொண்டவன்

சீக்கிரமாய்க் கடைத்தேரிவிடுவான். இப்படிப்பட்ட உத்பாதமானவிஷயம் இதுவரையில் கண்டதுங் கேட்டதும் இல்லை'' என்று சொல்லினர்கள். இதைக்கேட்ட சுந்தராதேவி தன் குலத்தாரைப்பார்த்து "ஐயா! நான் இப்போது சொல்லிய வார்த்தைகளில் ஏதாகிலும் பிசகுண்டோ! முதல்முதல் மனப்பூர்வகமாய் நாயகனென்று நினைத்த புருஷனைவிட்டு மற்றொருபுருஷனை மணம்புரிந்த ஸ்திரீயிடம் ஜலபானமும் செய்யலாகாதென்று பெரியோர்கள் சொல்லவில்லையா? திரிகாணசுத்தியாய் முதல்முதல் எவனைப்புருஷனென்று மனதில் நினைத்தேனோ, அவன் புருஷனேயொழிய மற்றொருவன் புருஷனல்ல. எண்ணங்கொண்டவனை விட்டு நிர்ப்பந்தமாய் மற்றொருவனைச் சேருவது உத்தமமானதன்று. தன் பிராணன் போகுமவ்வளவு ஆபத்து வந்தபோதிலும் பதிவிரதைகள் பரபுருஷனைக் கனவிலும் நினையார்கள். பரபுருஷன் இச்சையுடைய ஸ்திரீகளுக்கு பரலோகத்திலுஞ்சுகம் உண்டாகமாட்டாது. விருதாவாய் உங்களுடன் வாதாடிக்கொண்டிருப்பது காலதாமதமேயொழிய மற்றப்படிக்கு வேறல்ல. கபீரைத்தவிர இதரர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தபோதிலும் நான் அவர்களை விவாகஞ் செய்துகொள்ளமாட்டேன். அவருக்கு நானே பாரியாள்; எனக்கு அவரே நாயகன். உங்களுக்கிஷ்டம் இருக்கும்பக்ஷத்தில் என்னை அவருக்கே கொடுத்து விவாகஞ் செய்விக்கவேண்டும். இல்லாவிட்டால் என் ஜீவிதகாலபரியந்தம் கன்னிகா விரதம் அனுஷ்டித்துக்கொண்டிருக்கின்றேன்'' என்று சொல்லினள்.

அப்போது குல பந்துக்களெல்லாம் அதிசயித்து சுந்தராவைப்பார்த்து "அம்மா சுந்தரா! அவ்வாறு சொல்லவேண்டாம். தாய்தந்தையர்களும் பந்துக்களும் சம்மதித்து எவனுக்குக் கொடுக்கின்றார்களோ, அவனையே

நாயகனாய் எண்ணுவது கன்னிகைகளுக்கு முக்கியமான தர்மமேயொழிய, அவர்களின் சம்மதமில்லாமல் தாம்இஷ்டப்பட்டவர்களை பர்த்தாவாய் நினைப்பது யுக்தமானதல்ல. கன்னிகைகள் பந்துக்களின் இஷ்டம்போல் நடந்துகொள்ளவேண்டுமேயொழிய அவர்களின் வார்த்தையைமீறி நடக்கலாகாது. நீ இன்னும் சிறியபெண்ணாய் இருப்பதனால் தாரதம்மியம் தெரியாமல் பேசுகின்றாய். பெரியோர்கள் சொல்லும்புத்தியை நீ கேட்கவேண்டும்'' என்று சொல்லினார்கள்.

அதற்கு சுந்தரா பந்துக்களைப்பார்த்து "ஐய்யமார்களே! என் தாய்தந்தையர்கள் என்னைக் கபீருக்குக் கொடுத்து விவாகஞ்செய்விப்பதாய் என்று வாக்குத்தானஞ் செய்தார்களோ அன்றே நான் கபீருக்கு பாரியாளானேன். மனப்பூர்வகமாய்ச் செய்துகொண்ட விவாகம் விவாகமேயொழிய மனதிற்கு விரோதமாய்ச் செய்துகொண்ட விவாகம் விவாகமல்ல. முதலில் எவன்மீது தன்மனம் நாடிற்றோ அவனையே நாயகனென்று நிச்சயித்து பதிபக்தி செய்துவருவதே ஸ்திரீகளுக்கு முக்கியமான தர்மம். அந்தத்தர்மத்திற்கு விரோதமாய் நடந்துகொண்டால் பதிவிரதாதர்மத்திற்குக் கெடுதிசம்பவிக்கும். பதிவிரதா தர்மம் கெட்டபிறகு ஜீவித்திருப்பதனால் பலனென்ன? ஆதலால், நீங்களெல்லோரும் அடியாள்மீது பரிபூரண கடாக்ஷம் வைத்து என்வார்த்தையை அங்கீகரித்து விரதத்திற்கு பங்கம் வராமல் ரக்ஷிக்கவேண்டும்'' என்று வெகுவிதங்களாய்ப் பிரார்த்தித்தனள்.

அவள் பிடித்த பிடிவாதத்தையே சாதித்து வருவதனால் பந்துக்கள் யாதொன்றும்சொல்ல யோசனைபிரியாமல் மிக்வும் மனவருத்தமடைந்து "ஓஹோ! கபீர் மிகவும் மாந்திரீகன். பூர்வம் நம்மீது துளசிமணியை மந்திரித்து பிர

யோகித்தபோதும்; கோரக்கை எதிர்த்து அவனுடன் வாதாடி அவனை ஜயித்தபோதும் அவனுடைய சக்தியைப் பார்த்திருக்கின்றோமல்லவா? ஆதலால், இப்பெண் சௌந்தரிய சாதுரியங்களுக்குக் கபீர் மோகித்து இவளைத்தன் வசப்படுத்திக்கொள்ள அவனே ஏதோ பிரயோகஞ் செய்திருக்கவேண்டும். அப்படிஇல்லாவிட்டால் இவள்நம்மெதிரில்வந்து இவ்வளவு வாதாடுவாளா? அவன்மீது திரும்பிய இவள்மனது நம்மீது திரும்பமாட்டாது. இனியார் என்ன சொன்னபோதிலும் லக்ஷியம்செய்யமாட்டாள். ஒருவேளை யாருக்கும் தெரியாமல் ரகசியமாய் அவனிடம் ஓடிவிட்டாலும் ஓடிவிடுவாள்'' என்று தங்களுக்குள் தாங்கள் ஆலோசித்துக்கொண்டு சுந்தராவினுடைய தாய்தந்தையர்களை ரகசியமாய்க் கூப்பிட்டு இந்த விஷயங்களைச்சொல்லி ''இனி சுந்தரா விஷயத்தில் ஜாக்கிரதையாயிருங்கள் என்னமோவென்று அசட்டை செய்வீர்களாகில் தப்பாமல் மோசம் வந்து சம்பவிக்கும். யாரையாகிலும் மாந்திரீகனை வரவழைத்து இவள் மயக்கம் நீங்க மந்திரிக்கவேண்டும்'' என்று சொல்லிவிட்டு அவரவர்களின் வீட்டிற்குச்சென்றார்கள்.

பிறகு சுந்தராவின் தாய்தந்தையர்கள் குமாரத்தியைப் பார்த்து ''அடி! நீ எவ்வளவு? உன் விவேகமெவ்வளவு? கொஞ்சமாகிலும் வெட்கமில்லாமல் பெரியோர்களென்னும் மரியாதையுமில்லாமல் நிற்பயமமாய் வந்து, சுயமதத்தைவிட்டு துர்மதத்தில் பிரவேசித்து குல பிரஷ்டத்துவம் அடைந்தவன்மீது இஷ்டப்பட்டு வாயிற்கு வந்தபடியெல்லாம் ஏதேதோ அவர்களின்முன் உளர ஆரம்பித்தாய். உன்னால் எங்கள் குலத்திற்கெல்லாங் கெட்டபேர் உண்டாயிற்று. இதையாராகிலும்கேட்டால் சிறிப்பார்கள். இனியாகிலும் புத்தியுடனிருந்து எங்கள் வார்த்தையைக்கேட்டு நமது மதாசாரதருமப்படி நடக்கக்கடவாய்; அப்படி

நடக்காவிட்டால் உன்னைத் துண்டந்துண்டமாய் வெட்டிப் போடுவோம். நிர்மலமாகிய மஹம்மது வமிசத்தில் பிறந்த உனக்கு இப்படிப்பட்ட துர்ப்புத்தியிருப்பது உத்தமமானதல்ல'' என்று பலவிதங்களாய்ப் புத்திசொல்லி அவளை ஓர் அறையில்போட்டுக் கதவைச்சாற்றி வெளியில் காவல் வைத்தார்கள். தனக்கிஷ்டமில்லாத தர்மபிரஷ்டனை விவாகஞ்செய்துகொண்டு 'அவனுடன் கஷ்டப்படுவதைவிட இப்படியிருப்பதே பரமோத்கிருஷ்டமானதென்று சுந்தரா எண்ணி அன்னபானாதிகளில்லாமல் படுத்து இராப்பகலாய் கபீரே நாயகனாக வரவேண்டுமென்று பகவானைத் தியானித்துக்கொண்டுவந்தாள்

சுந்தரா ஸ்ரீ பகவானை இவ்வாறு தியானித்தவுடனே பகவான் பகீர்வேஷத்துடன் அனேக சிஷ்யர்களை அழைத்துக்கொண்டு சுந்தராவின் தகப்பனாரிடம்வந்து அவரால் நமஸ்கரிக்கப்பட்ட நமஸ்காரங்களுக்கு மிகவும் சந்தோஷித்து ''நாயனா! நமது வமிசத்தில் இந்தகாசிப் பட்டணத்தில் விசேஷ தருமவானும் பக்திவானும் தமால் ஒருவனே என்று இதுவரையில் அனேகர்களால் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால், இன்று உன்னைப்பார்த்ததனால் எந்த விஷயத்திலும் தமாலைவிட குறைந்தவனாய்க் காணப்படவில்லை. அப்படிப்பட்டவனுடன் நீ சம்பந்தம் செய்வதனால், உன் குணங்களைச்சொல்லவும் வேண்டுமோ? வரும் பகீரிகளுக்கு இல்லையென்னாமல் அன்னங் கொடுத்தும் தனசகாயஞ்செய்தும் ஆதரித்துவரும் உங்கள் ஜன்மமே ஜன்மம். அப்படி தருமசிந்தனை இல்லாதவர்களின் ஜன்மம் ஜன்மமல்ல'' என்று சிலநேரம் புகழ்ந்தனர்.

அவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே சுந்தராவின் தந்தைக்கு மிகவும் அசங்கியமாய் ''ஐயா! பகீரிகளே! குலப்பிரஷ்டனானவனுடன் சம்பந்தஞ்செய்ய எனக்கு சம்மத

மில்லை. தாங்கள் என்னிடம் இருக்கும்வரையில் அவன் பேரை நினைத்தாலுமாகாது. அவன் மிகவும்நீசன்'' என்று திரஸ்காரமாய்ச் சொன்னான். அதற்குப் பகவானானபகீர் தமால் விஷயமாய் ஒன்றும் தெரியாதவரைப்போல் சில நேரம் நடித்து நீர் தமாலை அவ்வாறு சொல்வதற்குக் காரணமென்ன? தமால் மிகவும் பரிசுத்த மனமுடையவனென்று யாவராலும் கேள்விப்பட்டிருக்க, நீர்மாத்திரம் நீசனென்று தூஷிப்பதற்குக்காரணமென்ன? இதற்கு ஏதாகிலுமிருந்தால் தயைசெய்து எனக்குச் சொல்லக்கடவாய்'' என்று கேட்டனர்.

அதற்குச் சுந்தராவின் தந்தை பகீரைப்பார்த்து "ஐயா! பகீரிகளே! நமது மதாசாரதர்மத்தை திரஸ்கரித்து சுன்னத்துஞ் செய்துகொள்ளாத தன்குமாரனது துர்போதனைக்கு உட்பட்டு, இந்துமதமே நல்லதென்று அதை அனுஷ்டித்துவந்தபடியால் நமது ஜாதியாரெல்லோரும் அவர்களை ஜாதிக்குப்புறம்பாய் நீக்கிவிட்டார்கள். ஆதலால், அவனை நீசனென்று சொல்லநேர்ந்தது'' என்று சொன்னான்.

பகீர் அதைக்கேட்டு "ஐயா! பூர்வம் நாம் இவ்விடம் வந்திருந்தபோது தமாலைப்பார்த்தேன். அப்போது நீர் சொல்லியதுபோல் தப்பாமல் நடந்துகொண்டிருந்தது வாஸ்தவமே. நேற்றையதினம் நாம் தமாலிடம் போயிருந்தபோது வீசமாகிலும், வித்தியாசமில்லாமல் மஹம்மதிய மதாசாரப்பிரகாரமே நடந்ததை என் கண்களால் பார்த்தேன். அவருக்கும் உங்களுக்கும் விரோதம் நேர்ந்திருந்தபடியால், இதுமத்தியில் அவர்களின்விஷயம் உங்களுக்குத் தெரிந்ததில்லை. இப்போது நீங்கள் தமாலுடன் சம்பந்தம் செய்வதனாலாகிலும் அல்லது உமது குமாரத்தியை அவர் குமாரனுக்குக் கொடுப்பதனாலாகிலும்

யாதொரு சந்தேகமும் எண்ணவேண்டியதில்லை. மற்றொரு விஷயமும் சொல்லுகின்றேன்கேளுங்கள்: கபீர் மிகவும் பெருத்த மாந்திரிகனென்னும் விஷயம் உங்களுக்குத் தெரிந்தே இருக்கின்றதல்லவா? ஆதலால், நீங்கள் நல்லதனமாகவே உங்கள் குமாரத்தியை கபீருக்குக் கொடுத்து விவாகஞ் செய்விப்பது எவ்வளவோ உத்தமமானது. இல்லாவிட்டால் கபீர் தன் மந்திரபலத்தினால் எவ்விதமாகிலும் உன் குமாரத்தியை வரவழைத்துக்கொள்வான். அப்போது உங்கள் வமிசத்தார்களுக்கெல்லாம் பெருத்த அவமானம் உண்டாகும். அவன் மந்திரசக்தியை நான் கொஞ்சம் பரீக்ஷித்துப்பார்த்தேன். உலகத்தில் இவனைப்போன்ற மாந்திரீகன் ஒருவருமில்லை. இவ்வளவேன்? சிலநாளைக்கு முன் கோரக்கை ஜயித்தவிஷயம் நீங்களெல்லோரும் அறிந்த விஷயமேயல்லவா? இந்தவிஷயத்தில் நீங்கள் ஏதாகிலும் அஜாக்கிரதையாய் இருப்பீர்களாகில் சந்தேகமில்லாமல் உங்களுக்கு அவமானம் வந்துநேரிடும். எவ்வளவு ஜாக்கிரதைப் படுகின்றீர்களோ அவ்வளவும் நன்மை'' என்று வெகுவிதங்களாய்ப் போதித்து தன்னுடன் கூடவந்த பகீரிகளால் தான்சொல்லிய வார்த்தைகளெல்லாம் யதார்த்தமென்று சொல்லுவித்து சுந்தராவின் தகப்பனுடைய மனசமுசயத்தை நிவர்த்திசெய்து "இதற்கு இப்போதே தக்க ஏற்பாடு செய்யவேண்டும்'' என்று சொல்லினர்.

இவ் வார்த்தைகளையெல்லாம் சுந்தராவின் தந்தை கேட்டுப்பயந்து தக்கவர்களை அனுப்பி காஜீ மௌலி முதலிய அநேக பெரியமனுஷ்யர்களை வரவழைத்து, பகீர் சொன்ன விஷயங்களையெல்லாம் எல்லோருக்கும் தெரியச் சொல்லி "இதற்கு உங்கள் அபிப்பிராயமென்ன?'' என்று அவர்களைக்கேட்டான்.

அப்போது மௌலீ பகீரைப்பார்த்து "ஐயா! நமது மதத்தை திரஸ்காரஞ்செய்து காபர்மதத்தை அவலம்பித்து மறுபடியும் நமதுமதத்தில் பிரவேசித்தவர்களுடன் நாம் சம்பந்தம் செய்யலாமா? தயைசெய்து சற்றேசொல்ல வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள்.

அதற்குப் பகவானான பகீர் மௌலீயைப்பார்த்து "அதனால் தோஷமில்லை; எப்படியாகிலும் நமது மதத்தை அனுஷ்டித்துவந்தால் போதும்" என்று சொல்லினர்.

அதற்கு மௌலீ "அப்படியானால் கபீர் சுன்னத் செய்துகொண்டானா? தாங்கள் ஏதாகிலும் பார்த்தீர்களா சொல்லுங்கள்" என்று கேட்டார்.

அதற்குப் பகவானான பகீர் "சுன்னத் சுன்னத் என்ற விஷயமே பலதடவைகளில் சொல்லிக்கொண்டு வருகின்றீர்கள்? சுன்னத்தினால் நமக்கு ஆகவேண்டியதென்ன? நமது வமிசத்திற்கு மூலபுருஷனாகிய ஆதாமுக்கு சுன்னத்தாயிருக்கின்றதா? சொல்லுங்கள் பார்ப்போம்" என்று கேட்டனர்.

அதற்கு மௌலீ "ஆதாமுக்கு இல்லாதது வாஸ்தவமாயிருந்தாலும், இப்ரஹிம் பயகம்பர் காலத்திலிருந்து நம்முடையவர்கள் எல்லோருக்கும் அனுஷ்டானமாய் வந்துகொண்டே இருக்கின்றதல்லவா? என்ன நீங்கள் அவ்வாறு சொல்லுகின்றீர்களே?" என்று கேட்டார்.

அதற்குப் பகீர் "மௌலீ! நமது வமிசத்தார்கள் எல்லோருக்கும் வாஸஸ்த்தானமாகிய காபூல், கந்தஹார், கோகண்ட், போகாரா, ஸாமர்கண்ட், டாமாஸ்கஸ், அரேபியா, பஞ்சாப் முதலாகிய தேசங்களுக்கெல்லாம் முக்கிய பூஷணமாயிருக்கும் ரூம் தேசத்திலுள்ள சிம்மாசனத்தில் ஏறி வந்தவர்களெல்லோரும், சுன்னத்து என்று பெயர் வைத்து ஆண்குறி மீதிருக்கும் தோலைக் கத்தியினால் அறுப்

பது மிகவும் தோஷமென்றெண்ணி, அவைகளையெல்லாம் நிவர்த்திசெய்து ராஜாங்கபரிபாலனஞ்செய்துவரவில்லையா? நம்முடைய மர்மத்தை நாமே வெளிப்படுத்திக்கொள்ள வேண்டுமா? மத்தியில்வந்த இப்ரஹிம் பயகம்பர் தன் சிறிய பாரியாளுக்குச் செய்துகொடுத்த சத்தியம் தவறிவிட்டபடியால் அவனுக்கு சிக்ஷையாய் ஏற்படுத்திய சுன்னத்தை நம் வமிசத்திலுள்ளவர்களையும் செய்யும்படி துர்ப்போதனை செய்து அநியாயமாய் நமது பெரியோர்களையெல்லாம் பாழ்செய்து வந்தான். அது பரம்பரைவிருத்தியாய் வந்து கொண்டேயிருக்கின்றது. இந்த ஆசாரம் நமக்கு ஈசுவராஞ்ஞானுசாரமாய் வந்ததல்ல. இது, மத்தியில் இப்ரஹீம் பயகம்பர் காலத்திலிருந்து வந்துகொண்டிருக்கின்றது, ஆதலால், கபீர்மீது குற்றம்சாட்டி தமாலை நிந்திப்பது நமக்கு தருமமல்ல. நாமேன் வியர்த்தமாய் துர்விவாதத்தில் பிரவேசிக்கவேண்டும்" என்று சொன்னவுடனே மௌலீ மறுவார்த்தையாட வாய்வராமல் சற்று நேரம் சும்மா இருந்து, பகீரியைப்பார்த்து "ஐயா! தாங்கள் பெரியவர்கள். ஆதலால், தங்கள் வார்த்தையைமீறி நடவாமல் கபீருக்குக் கொடுக்கவேண்டுமென்று சம்மதித்தாலும், தாய்தந்தைகள் பந்துக்களுடைய இஷ்டமில்லாமலே தன் மனம்போனபடி சுதந்திரமாய் புருஷனை நியமித்துக்கொண்ட துர்மார்க்கியாகிய சுந்தராவின் விவாகத்திற்குவர எங்களுக்கு இஷ்டமில்லை. இனி, தங்களிஷ்டம்" என்று சொன்னார்கள்.

பகீர் அதைக்கேட்டு "என்ன நமது மதத்திற்கு வித்தியாதிகாரிகளில் பிரதானமான இஸ்மாயில் பயகம்பர் தாய் ஆகிய அஜரா என்பவள், தன் தாய்தந்தையர்களும் பந்துக்களும் எவ்வளவு சொல்லியும் கேளாமல் கடைசியில் யாருக்கும் சொல்லாமல் தான் மோகித்த இப்ராஹிம்

பயகம்பரை இட்டுக்கொண்டு போகவில்லையா? அவளிடத்தில் மாத்திரம் தோஷமில்லாமல் போவதென்ன? இவள் மீது மாத்திரம் தோஷம் உண்டாவதென்ன? ஈசாக் பரம்பரையில்வரும் ஸ்திரீகள், இஷ்டம்போல் புருஷர்களை மணம்புரியலாமென்று ஏற்பாடுசெய்துகொண்டு அந்த ஏற்பாடுபோல் நடந்துவரவில்லையா? ஸ்திரீகளுக்கு இஷ்டமில்லாத புருஷர்களை பலவந்தமாய் அவர்களின் கழுத்தில் கட்டிவைத்தால் சம்சாரம் நடக்கமாட்டாது. இருதயத்தில் ஒருவனை நினைத்திருக்க நிர்பந்தப்படுத்தி மற்றொருவனுக்கு விவாகஞ் செய்துகொடுப்பது நன்மையானதல்ல. அப்படிச் செய்வதனால் சந்தேகமில்லாமல் தோஷமே வந்துசிந்திக்கும். இவைகளெல்லாம் புத்திமான்களாகிய உங்களுக்கு தெரியாததல்ல'' வென்று நியாயங்களை யெல்லாம் இரண்டுமணிநேரம்வரையில் உபந்நியாசஞ் செய்து தன்மாயையால் அவர்களை மோஹிக்கச்செய்து, கடைசியில் தாம்சொன்னதுபோல அவர்களை ஒப்புக்கொள்ளும்படிச் செய்து மறுநாள் விவாகத்தை நடத்தும்படியும் நிச்சயிக்கச் செய்வித்தார்.

கபீருக்கு விவாகஞ் செய்தல்.

பிறகு பகவானான பகீர் தன் சிஷ்யர்களையெல்லாம் சுந்தராவீட்டில் இருக்கச்செய்து தான் ஒருவரே புறப்பட்டு தமால் வீட்டிற்குச்சென்று தமாலைப்பார்த்து "ஐயா! உமது குமாரனுக்கு விவாகம் செய்விக்க வேண்டுமென்று நீங்கள் நிச்சயித்திருந்த சுந்தராவிற்கு நாளையகாலை விவாகம் நடத்த நிச்சயித்திருக்கின்றது. ஆதலால், உங்கள் குடும்பத்துடன் இன்றே அழைத்துப்போகவந்தேன்; நான் சுந்தராவின் பெரியதகப்பன். தயைசெய்து சீக்கிரமாய்ப் புறப்படுங்கள். உங்கள் வரவிற்காக எல்லோரும் எதிர்பார்த்துக்கொண் டிருக்கின்றார்கள்'' என்று மாயாவேஷதாரியாகிய பகீர் சொல்லினர். எவ்விதத்திலாகிலும் சுந்தரா தன்குமாரனுக்கே வாய்ப்பாளென்று இதுவரையில் நிச்சயித்திருந்த கபீருடைய தாய்தந்தைகள், பகீர் சொன்ன வார்த்தைகளையெல்லாம் கேட்டவுடன், யாதொன்றும் தோன்றாமல் சிலநேரம் ஸ்தம்பம்போல் பிரமித்துநின்று, பிறகு அறிவுண்டாய், ஆஹா! ஜகன்மோஹினி தப்பிப் போய்விட்டாளா? அப்படிப்பட்ட கன்யா ரத்தினம் இனி நமக்கு எங்கு கிடைக்கப்போகின்றாள்! நமது குமாரன் துரதிஷ்டத்திற்கு என்னவென்று சொல்லலாம்!'' என்று மனங்கலங்கி, ஜிஜ்ஜாபீபி தன்கண்களில் நீர் ததும்பத் துக்கப்பட்டுநின்றாள்.

அப்போது மாயாவேஷதாரியாகிய பகவானான பகீர் ஜிஜ்ஜாபீபியைப்பார்த்து, "அம்மா! உங்களைச் சுபகாரியத்திற்காக அழைத்துப்போக வந்திருக்கின்றேன். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கண்களில் நீர்ததும்ப மிகவும் துக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றாய்! சுந்தரா உங்கள் குமாரனுக்கு வாய்க்கவில்லையென்றெண்ணி நீ துக்கப்படுவதாய்த் தெரியவருகின்றது. பிரமதேவன் ஏற்படுத்திய ஏற்பாடு தவறிவிடுமா! நான் இந்தக்காரியத்தில் பிரவேசித்த பிறகு இதற்கு விக்கினமும் உண்டாகுமோ! அந்தப்பெண்ணை நீங்கள் விவாகம் செய்துகொள்வதாயிருந்தால், இந்த முகூர்த்தத்திலேயே உங்களுக்கு அந்தப் பெண்ணையே நடப்பிக்கின்றேன். உங்களிஷ்டம்போல் இந்த முகூர்த்தத்தில் உங்களுக்கே நடப்பித்தால் எனக்கென்ன கொடுக்கின்றீர்கள்? சொல்லுங்கள். பிரமதேவன் எழுதியது தவறினாலும் தவறும்; என்வார்த்தை மாத்திரம் தவறுதலாக

மாட்டா? நீங்கள், இதைத் திடமாய்நம்புங்கள்'' என்று பகீர்சொல்லினர்.

அவ்வார்த்தைகளையெல்லாம் ஜிஜ்ஜாபீபியும் தமாலும் கேட்டவுடனே மிகவும் ஆத்திரத்துடனே, "ஐயா? அவ்வளவுமாத்திரம் உபகாரஞ்செய்வீராகில், நாங்கள் எங்கள் உயிருள்ளவரையில் உங்களைச் சேவைசெய்துகொண்டிருப்போம். இதற்குச் சிறிதேனும் சந்தேகமில்லை'' என்று சொல்லினர்கள். அதற்குப் பகீர் "நீங்கள் சொல்லிய வார்த்தை வாஸ்தவந்தானோ? அப்படி வாஸ்தவமாயிருந்தால் இன்றுமுதல் இராமநாம ஸ்மரணை ஜபிக்காமல் விட்டுவிடுங்கள்'' என்றுசொல்லினர்.

கபீர் அவ்வார்த்தையைக் கேட்டவுடன் மிகவும் கோபங்கொண்டு "ஐயா! அப்பெண் எங்களுக்கு வேண்டாம். நீங்கள் எங்களுடன் வீண் சபதஞ்செய்யாதீர்கள். நாங்கள் ராமநாமஸ்மரணை ஜபிக்காமல் இருக்கவும்மாட்டோம். நீர்செய்யவந்த உபகாரம் இதுவரையில் போதும் போதும். அப்பெண்ணை நீங்கள் இனி யாருக்காகிலும் கொடுத்துக்கொள்ளுங்கள்; எங்களுக்குவேண்டாம். இனி எழுந்திருந்துபோம்'' என்று கபீர் சொல்லினர்.

அதற்குப் பகீர் "என்ன! இப்பொழுது நீங்கள் சொன்னவார்த்தை இதற்குள்ளே தப்பிவிட்டீர்கள். நீங்கள் எல்லோரும் எனக்கு சேவைசெய்வதாய் இப்பொழுது வாக்குத்தானம் செய்யவில்லையா? வாக்குத்தானஞ் செய்ததை அழிப்பது தோஷமல்லவா? உம்மைப்போன்ற யோக்கியர்களுக்கு இப்படிப்பட்ட விருத்தி யுக்தமானதல்ல. நீங்கள் இப்போது சொல்லியதுபோல் இன்றுமுதல் என் ஆஞ்ஞைக்கு உட்பட்டிருக்கவேண்டும். அபபடி இருப்பீர்களாகில் நான் வாக்குத்தானஞ் செய்ததுபோல் சுந்தராவை உங்களுக்கே விவாகஞ் செய்விப்பேன். சுந்தராவைக்

கொடுப்பதற்குமுன்னமே நான் சொல்லிய வார்த்தையைக் கேளாதவர்கள் விவாகம் முடிந்தபின் உங்கள் ஜீவிதகாலம் வரையில் எனக்கு சேவை செய்வீர்களென்று எப்படிநம்பலாம்'' என்று பகீர் சொல்லினர்.

அதற்குக் கபீர் "ஐயா! என் தந்தை சொல்லியது போல் உங்களுக்குத் தப்பாமல் சேவை செய்வோமேயொழிய ராமநாம ஸ்மரணையை மாத்திரம் விடோம்'' என்று சொல்லினர்.

அதற்குப் பகீர் புன்னகையுடன் சிரித்து, "கபீர்! சேவகாவிருத்திஎன்றால் என்னவென்றுஎண்ணினாய்! எஜமானுடைய இஷ்டப்பிரகாரம் சகலவிஷயங்களிலும் வித்தியாசம்வராமல் நடந்துகொள்வதேயொழிய, சில விஷயங்களில் வித்தியாசமாய் நடந்துகொள்வதல்ல'' என்று சொல்லினர்.

அதற்குக் கபீர் பகீரைப்பார்த்து, "ஐயா! சேவகாவிருத்திக்கு ஒப்புக்கொண்டபின், தேகத்தை யஜமானுக்கு சுவாதீனம்செய்து அவர் நியமிக்கும் காரியங்களையெல்லாம் நிர்விக்கினமாய் நடத்தவேண்டியதேயொழிய, பகவானை நினைக்கவேண்டாமென்று நிர்ப்பந்தப்படுத்தினால் அதற்கு எவ்வாறு சம்மதிக்கலாம் என்றுசொல்லினர்.

அதற்குப் பகீர் "பகவானை நினைக்கவேண்டாமென்று சொன்னேனோ? நிராகாரமாகிய பரப்பிரம்மத்தை ஸ்மரிப்பதை விட்டு, ஓர் ராஜகுமாரனை ஸமரிப்பது உத்தமானதல்ல; அதை விட்டுவிடு. பரப்பிரம்மத்தைத் தவிர இதரமான தெய்வங்களை ஸ்மரிப்பவர்களுக்கு துர்க்கதியுண்டாகும். ஆதலால், ராமத்தியானம் செய்யவேண்டாம்; விட்டுவிடு; என்று சொன்னேன்'' என்று சொல்லினர். கபீர் அதைக்கேட்டு மிகவும் கோபித்து "இன்னொரு முறை எங்

கள் பகவானை நிந்திப்பாயாகில், உன் நாக்கை அறுத்துவிடுவேன். ஜாக்கிரதையாயிரு" என்று சொல்லினர்.

அதற்குப் பகீர் "ஓஹோ! தன்பாரியாளை ஓர் ராக்ஷதன் அபகரித்துக்கொண்டுபோனபோது சீதா! சீதா! வென்று காடெல்லாம்அலைந்து திரிந்துக் கஷ்டப்பட்ட நர மனிதனைத் தெய்வமென்று நம்பியிருப்பது எவ்வளவு புத்தியில்லாத்தனமாயிருக்கின்றது! இதை நீயே சற்று ஆலோசித்துப்பார்; நிசத்தைச் சொன்னால் நிஷ்டூரம்பேச ஆரம்பித்தாய்; போதும்போதும். இனி வாயைமூடிக் கொள்" என்று சொல்லினர்

அவ்வார்த்தைகளைக்கேட்டு கபீர் திடுக்கிட்டு "அடே புத்தியில்லாத கிழப்பிணமே! நீ இங்கு நிற்பாயாகில் உன் பிராணனை வாங்கிவிடுவேன்; சீக்கிரமாய் எழுந்து ஓடிப் போ" என்று சொல்லினர்.

அதற்குப்பகீர் "அடா நன்றிகெட்டபயலே! நன்மை செய்ய வந்தவனுக்குத் தீங்குசெய்ய ஆரம்பித்தாய்? சுந்தரா ரத்தினத்துடன்கூடி சதானந்த மனுபவிக்கப் பட்டவன் நீயா? நானா? என்தலைகீழாய்விழுந்து பொங்கிப் போகின்றாய்" என்று சொல்லினர்.

அதற்குக் கபீர் " அந்த ஆனந்தம் என்ன அவ்வளவு பெரிதா எனக்கா சொல்லவந்தாய்; அதற்காக உன்னை வேண்டிக்கொள்ளவில்லை. மெதுவாய் எழுந்து நீ வந்த வழியே செல்" என்று சொல்லினர்.

அதற்குப் பகீர் "ஹா! இது நிஜமா? அப்படியானால் என் சாமர்த்தியத்தைப்பார். சுந்தராவிற்காக என் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக்கொள்ளும்படிச் செய்விக்காமற் போனால், இது மீசையல்ல" வென்று தன் இடதுகையால் இடது மீசையை முறுக்கி நிறுத்தினார்.

கபீர் அதைப்பார்த்து பக்கென்று சிரித்து "ஆஹா! உன் முகத்தைப்பார்த்தால், அவ்வாறு செய்விப்பவனாகவேயிருக்கின்றாய்? அவள்யார்? நான்யார்? அவளுக்காக நான் உன்காலில் விழவேண்டியதற்குக் காரணமென்ன? வியர்த்தமாய் என் பதறுகின்றாய்? எழுந்திருந்துபோ" வென்று சொல்லினர்.

அதற்குப் பகீர் கபீரைப்பார்த்து "அடே! என்சாமர்த்தியத்தைச்சற்றேபார்" என்று மீசையைஉருவிக்கொண்டே நாரதரை நினைத்தார். அவர் நினைத்தவுடனே, சுந்தராவீட்டில் மாறுவேஸமாய் பகீர் ரூபத்துடனிருக்கும் நாரதர் உடனே எழுந்து கபீர்வீட்டிலிருக்கும் பகீரிடம் வந்துசேர்ந்து அடியேனால் ஆகவேண்டியகாரியம் என்னவென்று சைகைசெய்தார். அதற்குப் பகீர் அவரைத் தனது சமீபமாய்க்கூப்பிட்டு, நீ இராமானந்தர் ரூபம் தரித்து சிஷ்யர்களுடன்கூட சீக்கிரமாய் இங்கு வரக்கடவாயென்று நாரதர்காதில் ரகசியமாய் ஓதினார். அப்போது பகவதாஞ்ஞானுசாரமாய் நாரதர் ஓர்நிமிஷத்தில் இராமானந்தர் ரூபந்தரித்து சிஷ்யர்களுடன், தமால் வீட்டுத் தெருவில் நின்று, "கபீர்! கபீர்!" என்று ஓயாமல் கூப்பிடத் தொடங்கினார். அப்போது கபீர், கண்டத்தொனியைக்யைக்கேட்டு இராமானந்தரென்று தெரிந்துகொண்டு, சீக்கிரமாய் வெளியில்ஓடி மிகவும் பயபக்தியுடன் அவரை நமஸ்கரித்து, உள்ளேஅழைத்துவந்து உயர்ந்த ஆசனத்தின்மீது உட்காரும்படிச் சொல்லி அகஸ்மாத்தாய் தனக்கு குருதரிசனங்கிடைத்ததற்காக மிகவும்சந்தோஷித்துத் துதி செய்துநின்றார்.

அப்போது இராமானந்தர் ரூபம்தரித்திருக்கும் நாரதர் தமாலைப்பார்த்து, "ஐயா! நமது கபீருக்கு நாளைக்கு விவாகமென்று கேள்விப்பட்டேன். இது, நிச்சயமா? அப்

படியானால், விவாகத்திற்காக வேண்டிய சாமக்கிரியைகள் சேகரிக்குங்காரியங்கள் யாதொன்றுஞ்செய்வதாய்க்காணப் படவில்லையே? ஏன் சும்மாயிருக்கின்றீர்கள்?” என்று கேட்டனர்.

அப்போது தமால் பகீரிபை தன் விரலால்காட்டி, “இவர் சுந்தராவின்பெரியதந்தை; இவர் அக்கன்னிகையை நமதுகபீருக்குக் கொடுப்பதாய் வாக்களித்திருக்கின்றார். ஆனால், இவர் சில ஆசார விவகாரங்களை ஆக்ஷேபணை செய்தபடியால், அவைகளுக்குக் கபீர் ஒத்துக்கொள்ள வில்லை. அதனால், இவர் சும்மாய் உட்கார்ந்திருக்கின்றார். இவர் எங்கள்விஷயத்தில் மனம்வைத்தால் காரியம் சித்தி யாவதற்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை” என்று தீன சுரமாய்ச் சொல்லினர்.

அதற்குக் கபட இராமானந்தர் “சீ சீ! இது, நியாய மல்ல? வாக்களித்தபின் தப்பலாகாது. எவ்விதத்திலாகி லும் காரியத்தை நிறைவேற்றவேண்டியதே” என்று சொல்லி இராமானந்தர் பகீரைப்பார்த்து “ஏனையா! பகீரியே! நீர் சொல்லியதுபோல் காரியத்தை நிறைவேற்ற மாட்டுவிர்களா? என்றுகேட்டார்.

அதற்குப் பகீர் கொஞ்சம் அசங்கிய மடைந்தவரைப் போல் அபிநயித்து “இவர்களின்சகவாசம் போதும் போதும். இதுவரையில் இவர்களை மிகவும்யோக்கியர்க ளென்று எண்ணியிருந்தேன்; இவர்களின் யோக்கியதை இன்றல்லவோதெரியவந்தது. இனி இவர்களின்ஜோலிக்கே வரமாட்டேன். தங்களுக்கு இஷ்டமிருக்கும்பக்ஷத்தில் இந்தக்காரியத்தை தாங்களே நிறைவேற்றலாம். இதில் நான் எவ்வளவேனும் பிரவேசிக்கமாட்டேன்” என்று சொல்லி கோபித்துக்கொண்டவரைப்போல் நடித்து, திடீ ரென்று எழுந்துசென்றுவிட்டார்.

அப்போது இராமானந்தர் தமாலைப்பார்த்து “இந்தக் கிழவனைப்பார்த்தால் மிகவும் கோபக்காரனாயிருக்கின் றான்.” போனால்போகட்டும். அவர்சகர்யத்தினால் நமக் கென்னவேண்டும்? பெண்ணின் தந்தையுடன் நானேபேசிக் காரியத்தை முடித்துக்கொண்டுவருகின்றேன்” என்று சொன்னார். அதற்குத் தமால் “ஸ்வாமீ! தாங்கள் இவ்வாறு சென்றால் துர்மார்க்கராகிய துலுக்கர்கள் சும்மாயிருப் பார்களா. தங்கள்வார்த்தையைக்கேட்பார்களா?” என்று கேட்டபோது, இராமானந்தர் புன்னகையுடன் சிரித்து “அதற்கென்ன சமயோசிதமாய் மாறுவேஷம்போட்டு நமதுகாரியத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம்” என்று பிரதியுத்தரவுசொல்லி சிஷ்யர்சமேதராய் தாம் பகீர் வேஷந்தரித்து தம் சிஷ்யர்களில் ஒருவரை அழைத்து “நீ காசி தேசாதிபதியிடம் சென்று நான்அழைப்பதாய்ச் சொல்லி சீக்கிரமாய் அவரை இங்கு அழைத்துக்கொண்டு வா” என்று சொல்லியனுப்பினார். சிஷ்யன்சென்ற சில நேரத்திற்கெல்லாம் விஷ்ணுமூர்த்தியானவர் காசிதேசாதி பதி வேஷந்தரித்து மஹா ஆடம்பரத்துடன் தமால் வீட்டிற்குவந்து பகீரிக்கு மிகவும் மரியாதையுடன் வந்தனம் செய்து, “தன்னை வரவழைத்தகாரியமென்ன”வென்று கேட்டார். அதற்கு மாயாவேஷதாரியாகிய பகீர், சுந்தரா தேவியை கபீருக்குக்கொடுத்து விவாகஞ்செய்விக்க வர வழைத்தேனென்றுசொல்லிக் கபீரை மாப்பிள்ளையாய் அலங்கரித்து, பகீரிகளையும் அரசனையும் அநேக பெரிய மகம்மதியர்களையும் மிகவும் மகதானந்தத்துடன் அழைத் துக்கொண்டு, சுந்தராவீட்டில் பிரவேசித்தார்கள்.

அப்போது அங்கிருந்தவர்களெல்லாம் வந்தவர்களைத் தக்க மரியாதையுடன் அழைத்துச்சென்று உசிதமான திண்டு திவாசிகள்இருக்கும் ஸ்தலத்தில் உட்காரச்செய்தார்

கள். பிறகு இராமானந்தர் ரூபமாயிருந்து பகீர்வேஷத்தைத்தரித்த நாரதரும், காசிதேசாதிபதி வேஷத்தைத் தரித்த மஹாவிஷ்ணுவும், சுந்தராதேவியைக் கபீருக்கு விவாகஞ்செய்விக்கவேண்டுமென்று, அங்குள்ள மகம்மதியர்களுக்கெல்லாம் சொன்னவுடனே, அவர்களெல்லோரும் பரமானந்தமடைந்து சுந்தராதேவியை கலியாணக்கோலமாய்ச் சிங்காரித்து மகம்மதியர்களின் ஆசாரம்போல் அருணோதயத்திற்கு முன்பே சாங்கியம்போல் மாங்கல்யந் தரித்து விநோத விருந்துகளால் ஆனந்திக்கச்செய்து அவரவர்களின் வீட்டிற்கு அனுப்பினார்கள். மறுநாள் தமால் மிகவும் சந்தோஷத்துடன் மகனையும் மருமகளையும் அழைத்துக்கொண்டு தன்வீடுசேர்ந்து விருந்து விநோத உச்சவங்களினால் பந்துக்களையெல்லாம் சந்தோஷித்து ஆனந்திக்கச்செய்தனர்.

அன்றுமாலை கபீர் குருதரிசனத்திற்கு போகப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கும்போது, சுந்தராதேவித் தன் நாயகனைப்பார்த்து நமஸ்கரித்து, "சுவாமீ! வெகு நாளாய் இராமானந்தரைச் சேவிக்கவேண்டுமென்னும் இச்சை அதிகமாயிருப்பதால், அடியாளின்மீது பரிபூரண கடாக்ஷம் வைத்து அவர்தரிசனத்திற்கு அழைத்துச்செல்ல வேண்டும்" என்று மிகவும்இரக்கமாய்க் கேட்டுக்கொண்டனள். அதற்குக் கபீர் மிகவும் ஆனந்தமடைந்து சுந்தராவைப் பார்த்து "சுந்தரா! நீ துஷ்டர்களாகிய துலுக்க வம்சத்தில் பிறந்திருந்தும், எங்கள் குருவினிடம் பரிபூரண பக்தியிருப்பது மிகவும் ஆச்சரியகரமாயிருக்கின்றது. இதுபோல் நடந்துகொள்ள உனக்கு இஷ்டமிருக்கும்பக்ஷத்தில், எந்தச்சமயத்திலும் எந்தவிஷயத்திலும் என்வார்த்தைக்குக் குறுக்குப்பேசாமல் நடந்துகொள்ளவேண்டும்; இப்படியிருக்க உனக்குச் சம்மதந்தானா?" என்று கபீர் கேட்ட

னர். அதற்குச் சுந்தராதேவி "பிராணேஸ்வரா! பதிவாக்கியம் மீறலாகாதென்னும் விதி ஸ்திரீஜனங்களெல்லோருக்கும் விதித்திருக்கின்றது; பதியின் அனுமதிப்பிரகாரம் நடக்கப்பட்டவளே பதிவிரதையென்றும், பதிஅனுமதியை மீறிநடப்பவள் பதிவிரதைஅல்லவென்றும், சத்கதியை அடையவேண்டுமென்று கோரப்பட்டஸ்திரீ, பதியின் வாக்கியம்போல் நடக்கவேண்டுமென்றும், தர்மசாஸ்திரத்தில் சொல்லவில்லையா? பதிவார்த்தைக்குப்பதில் சொல்லலாகாதென்று, பார்வதீதேவியை பரமசிவன் இராவணனுக்குக் கொடுத்தபோது அவனுடன்கூடவே செல்லவில்லையா! பாக்யவதியாகிய சீதாதேவி இரண்டாவதுவிசை பதிவாக்கியப்படி அக்கினிக்குண்டத்தில்பிரவேசித்தாளென்று புராணங்களில் எழுதியிருக்கவில்லையா? இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம் பெரியோர்களால் தெரிந்துகொண்ட உமது அடியாள், பதிவாக்கியத்திற்குமீறி வேறுவிதங்களாய் நடந்துகொள்வாளென்று எண்ணவேண்டியதில்லை. எப்போதும் பகவதனுக்கிரகத்தினால் என நியமங்களுக்கு பின்னமுண்டாகாதென்று இருதயத்தில் திடமாய்நம்பியிருக்கின்றேன். ஒருவேளை பகவதனுக்கிரகந் தவறி என விரதத்திற்கு பின்னம்உண்டானால், உடனே அக்னிப்பிரவேசஞ்செய்து உயிரைமாற்றிக்கொள்வேன்." என்று சொல்லினள்.

கபீர் அவ்வார்த்தைகளைக்கேட்டு புன்னகையுடன் சிரித்து "சுந்தரா! உன் குணாதிசயங்களை முன்பே கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆயினும், உன் வாக்கினால் தெரிந்துகொள்ளவேண்டுமென்று அவ்வாறுகேட்டேனேயொழிய மற்றப்படிக்கு வேறல்ல. இனி குரு தரிசனத்திற்காகப் போவோம் வா! என்று சுந்தராதேவியைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு புறப்பட்டு மெதுவாகச்சென்று இரா

மானந்தர் சந்நிதானம்சேர்ந்து, முதல் கபீர் இராமானந்தர் பாதத்தில்விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்றார். பிறகு சுந்தராதேவியும் இராமானந்தர் பாதத்தில்விழுந்து நமஸ்கரித்து, சிலநேரம்வரையில் எழுந்திராமலிருந்தாள். அப்போது இராமானந்தர் மிகவும்அதிசயித்து, “அம்மா! எழுந்திரு எழுந்திரு” என்று சொல்லியபிறகு சுந்தரா எழுந்து நமஸ்கரித்து நின்றாள். பிறகு இராமானந்தர் கபீரைப்பார்த்து “இந்தக்கன்னிகை யார்? இங்கு அழைத்து வருவதற்குக் காரணமென்ன?” என்றுகேட்டனர்.

அதற்குக் கபீர் “தேவா? தாங்கள் நேற்றுமாலை சிஷ்ய பரிவாரங்களுடன் அடியேன் கிருகத்திற்கு விஜயஞ் செய்து அடியேனுக்குத் தேவரீர் விவாகஞ் செய்வித்த கன்னிகை இவள்தான். தேவரீருடைய தரிசனார்த்தமாய் இப்போது இங்குவந்திருக்கின்றாள்” என்றுசொல்லினர். இராமானந்தர் அதைக்கேட்டவுடனே மிகவும் ஆச்சரியப்பட்டு ஒன்றும்தோன்றாமல் சிலநேரமிருந்து, மறுபடியும் தெளிவுண்டாய் கபீரைப்பார்த்து “நாயனா! நேற்றுமாலை உனக்கு விவாகம் நடந்தசங்கதியும், இக்கன்னிகை உனக்கு பாரியாளாய்வாய்த்தவிஷயமும் எனக்கொன்றும் தெரியாதே. இக்கன்னிகையை நானே விவாகஞ்செய்வித்தேனென்று எவ்விதமாய்ச் சொல்லுகின்றாய்? நீ சொல்லும் விஷயத்தின் தாத்பரியம் என்னமோதெரியவில்லை, சற்றே தெரியச்சொல்பார்ப்போம்” என்றுகேட்டனர். அதற்குக் கபீர் குருவைப்பார்த்து “சுவாமி! தாங்கள் சிஷ்ய பரிவாரங்களுடன் அடியேன்கிருகத்திற்கு எழுந்தருளியதுமேயன்றி காசிதேசாதிபதியையும் அங்குவரவழைத்து இக்கன்னிகையின் பந்துக்களையெல்லாம் சமாதானப்படுத்தி, நேற்றியிரவு அடியேனுக்கு விவாகஞ்செய்துவைக்கவில்லையா? இதற்குள் இந்தவிஷயம் எவ்வாறுமறந்துவிட்

டீர்கள்? தாங்கள் கேட்பதைப்பார்த்தால் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது” என்றுசொல்லினர்.

அதற்கு இராமானந்தர் கபீரைப்பார்த்து, கபீர்! நீ மிகவும் பொய்யனாயிருக்கின்றாய்! நான் உங்கள் வீட்டிற்கு வந்தது எப்போ? காசிராஜனை வரவழைத்தது எப்போ? விவாகம்நடத்தியது எப்போ? சரி, சரி! நன்றாயிருக்கின்றது! ஏன் விருதாவாய் பொய்சொல்லுகின்றாய்?” என்றுசொல்லிமுடித்து, சுந்தராதேவியைப் பார்த்து “அம்மா! நான் உங்கள் விவாகத்திற்கு வந்தேனா? என்னையேதாகிலும் அங்குபார்த்தாயா? வாஸ்தவமாய்ச் சொல்” என்றுகேட்டார். அதற்குச் சுந்தராதேவி தன் பர்த்தாவை நமஸ்கரித்து “பிராணநாதா? நமதுகுருவானவர் வாஸ்தவமாய்ச் சொல்லவேண்டுமென்று ஆஞ்ஞாபிக்கின்றார். சொல்லட்டுமா” என்றுகேட்டவுடன் கபீர் “குருவுடன் பொய்சொல்லலாமா? வாஸ்தவமே சொல்லவேண்டும்” என்று சொல்லினர். பிறகு சுந்தராதேவி இராமானந்தரைப்பார்த்து “சுவாமி! மகாதேஜஸுடன் ஓர் பகீர் அனேக சிஷ்யவர்க்கங்களுடன் எங்கள் கிருகத்திற்குவந்து, அதுவரையில் விவாககாரியத்திற்கு பங்கம் செய்யவேண்டுமென்று வாதித்துக்கொண்டிருந்த எங்கள் பந்துஜனங்களுக்கெல்லாம் வெகுவிதங்களாய் சமாதானஞ்செய்து, எங்களுக்கு விவாகஞ்செய்வித்தார்கள். அந்தச்சமயத்தில் காசிதேசாதிபதியும் அங்கு வந்திருந்தார். இது நிச்சயம்; இதைவிட அதிகம் எனக்குத்தெரியவராது” என்றுசொல்லினள்.

பிறகு கபீர் குருவைப்பார்த்து “சுவாமீ! துலுக்கர்களைச் சமாதானப்படுத்த பகீர்வேஷம்தரித்தவர் நீரல்லவா? என் சிரசைகண்டித்தாலும் பொய்சொல்லேன்.

சாற்றுகவி.

இது,

நீலகிரி உதகமண்டலம் திருக்காந்தல்

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி கார் ஆலயம்,

ஓம் அசலபீட உலகோபகார வித்யாதன சபை

ஸ்ரீ ஓம் ப்ரகாச சுவாமிகள்

இயற்றியது.

அருசீர்க் கழிநெடி லடி யாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட மதிகண்ட பெரியர்வாழ் கடப்பையார்
    தேசம் வந்தோர்
நீர்கொண்ட புவியாளர் நலமோட்ச மின்னதென
    நேர்ந்து கொள்ளப்
பேர்கொண்ட பிரபல சாஸ்திரம் ஜீவப் பிரம்மைக்யப்
    பெட்பு நூலைத்
தார்கொண்ட பரமாம்ஸ ஸச்சிதாநந்தன் தமிழிற்
    சாற்றி னானே.

பெங்களூர், ஞானாஸ்ரமம் (?)

ஸத் குஹாசிரம்

ஸ்ரீ ப்ரஹ்ம வித்யாதன சபை

ஸ்தாபகர்

ஓம் அசலபீடம் நிச்சல ப்ரகாசரென்னும்

ச மு நாராயணசுவாமிகள்

அபிப்ராயம்.

ஸர்வாதிஷ்டான ப்ரத்யக் ப்ரஹ்ம ஸத்தையே ஸ்வபாவ ஸத்தெனக் கூறி, நிரம்பவும் விசாலமான கௌமுதியாய் விளக்கும் வேதோபநிஷத்தின் பிரமாணங்களை, அதிக சூக்ஷ்ம புத்தியுடையோர்களுக்கே யல்லாது மற்றும் ஏனையோர்களும், அறியும்படி ஆசார்ய பிரசாதம் போல்வதான "ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" என்னும் இந்த கிரந்தமானது, கடப்பை ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவர ரவர்களால், தமிழில் சுலோகமும் அழகிய வியாக்கியானத்துடன் எழுதி, வெளி வந்துள்ளது. வேதாந்த விசாரணைசெய்ய முற்படும் ஒவ்வொருவரும் இதனை ஆசிரயித்து ஆனந்த முறுவார்களாக.

தத்துவ பரிசோதனை,

அன்னதான பலன்.

ஓ ஸஹோதரர்களே, கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வர ரவர்களால் எழுதிய தத்துவ பரிசோதனை, அன்னதான பலன், வெளிவந்திருக்கின்றது.

மறுஜன்மத்தில் நல்லகதி யடையவேண்டுமென்று நினைக்கப்பட்ட ஸ்திரீ புருஷர்க ளனைவரும், இந்நூலில் சொல்லியிருக்கும் மிகவும் சிறிதாகிய இவ்வொரு அன்ன

தான தர்மத்தையே செய்து வந்தால் அது, மிகவும் மஹத்தாகிய பரம பதமென்று சொல்லும் பெறுத்த மோக்ஷ சாம்ராஜ்ய பதவியை யுண்டாக்கும். ஆயிரக் கணக்காகவும், லக்ஷக்கணக்காகவும் செலவு செய்து பெருந் தர்மங்களைச் செய்துவந்த போதிலும், அவைகள் யாவும் இச்சிறிய அன்னதான தர்மத்திற்கு இணையாக மாட்டாது. காட்டில் வசித்திருந்த வேடன், ஓரிரவு, காட்டில் அகப்படும் மிகவும் ருசிகரமாகிய சுட்டக்கிழங்குகளையும், தேன் தினைமாவுகளையும் ஒரு, பிராமணச் சிறுவனுக்குக் கொடுத்து அவன் பசியைத் தணிக்கும்படிச் செய்தான். இப்புண்ணிய விசேஷத்தினால், அவவேடன் மறுஜன்மத்தில் அரசன் வீட்டில் போய்ச் ஜன்மித்தான். இதன்

தேவரீரேவந்து எனக்குவிவாகஞ் செய்ததாய் மற்றொரு முறை திடமாய்ச்சொல்லுவேன்” என்றுசொல்லினர்.

அதற்கு இராமானந்தர் மந்தகாசஞ்செய்து, “கபீர்! ஏன் புளுகுகின்றாய்! இந்த சுந்தரீரத்தின சௌந்தரியத்திற்கு மோகித்து இக்கன்னிகையை விவாகஞ் செய்துக் கொண்டாய். நீ இவ்வாறு செய்துகொண்டவிஷயம் யாராகிலும்கேட்டால் பரிகாசஞ்செய்யப்போகின்றார்களென்று இவ்விதமான கற்பனைக்கதை உண்டுபண்ணினாய்ப் போல் காணப்படுகின்றது. விவாகஆரம்பத்திலேயே மோகாந்தகாரத்தினால் இப்பேர்ப்பட்ட ஸ்திதிக்கு வந்துவிட்டாய். இனி சம்சாரம் அதிகமானால் இன்னும்சொல்லவுவேண்டுமோ? வனத்தில் நிவாசஞ்செய்துகொண்டு சருகுகளைப் புசித்து கௌபீனத்தைஇழுத்துக்கட்டிய மஹாத்மாக்களையே காமம்விடாமலிருக்க, ருசிகரமாகிய பதார்த்தங்களைப் பிரதிதினம்புசித்து உலகத்தாருடன் சேர்ந்து திரிந்து யௌவனத்திலிருக்கும் உனக்கு ஸ்திரீகளின்மீது மோகம் உண்டாவது ஓர் ஆச்சரியமல்ல? உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் சாதாரணமாய் கிருகஸ்தாசிரம தர்மம் அனுஷ்டித்துவரவேண்டியதுதான், இதில் தோஷமொன்றுமில்லை. இதற்காக உன்னையார் ஆக்ஷேபனைசெய்கின்றார்கள். இவ்வளவுமாத்திரத்திற்காக இத்தனைபொய்களைக் கல்பித்துக்கொள்ளவேண்டுமா?” என்றுகேட்டனர்.

அதற்குக் கபீர் குருநாதனை மறுபடியும் நமஸ்கரித்து “சுவாமீ! தேவரீருடைய சந்நிதானத்தில் இல்லாத பொய்க்கற்பனைகளைக்கற்பித்து சாதிக்கவேண்டுமென்று வந்தவனல்லன். நிச்சயமாய் தேவரீரேவந்து எனக்குவிவாகஞ் செய்வித்திருக்கின்றீர்கள். நேற்றியமாலை தேவரீர் அடியேனுடைய கிருகத்திற்குவந்தபோது, இக்கன்னிகையின் பெரியதந்தை எங்களுடன் வாதஞ்செய்து உட்கார்ந்திருந்த

போது, வார்த்தை கொடுத்தபின் தப்பலாகாதென்று தேவரீர்சொன்னபோது, அதற்கு அவர், நான் இதில் எள்ளளவேனும் பிரவேசிக்கமாட்டேனென்று கோபித்துக் கொண்டு போகவில்லையா? பிறகு அவர் போனால்போகட்டும் நானே அந்தக்காரியத்தை நிறைவேற்றுகின்றேனென்று நீர் சொல்லவில்லையா?” ஏன் இவ்விதமாய்என்னை தொந்தரவுசெய்து நிந்திக்கின்றீர்கள் என்று சொல்லினர்.

அதற்கு இராமானந்தர் பக்கென்றுசிறித்து? “ஓஹோ! தெரிந்ததுதெரிந்தது! இக்கன்னிகையின் மோஹம் தலைக்கேறியிருப்பதனால் இந்தவிஷயங்களையெல்லாம் கனவில் கண்டிருக்கலாம்? நல்லது வந்தவேலையை பார்த்துக் கொண்டு சீக்கிரமாய் வீடுபோய்ச்சேர். இந்த விவாதங்களினால் என்னபிரயோஜனம்?” என்று சரசமாய்ச்சொல்லினர்.

கபீர் அதைக்கேட்டு மிகவும் வருத்தமடைந்து தனக்குள்தான் “என்ன? இந்தவிஷயம் மிகவும் விநோதமாயிருக்கின்றது? இவரேவந்து காரியத்தை நிறைவேற்றியது வாஸ்தவமாயிருந்தால், தனக்கொன்றும் தெரியாதென்று சாதிப்பதற்குக்காரணமென்ன? இந்தவிஷயத்தில் இவர் அசத்தியமாடவேண்டிய அவ்வளவு அக்கரையென்ன? இதையெல்லாம் யோசித்துப்பார்த்தால் ஏதோ ஓர் மாயையாயிருக்கின்றது. அன்று கோரக்கன் விரோதம்செய்துகொண்டு ஆகட்டும் மற்றொருமுறை பார்க்கின்றேன் என்று சபதம் கூறிவிட்டுப் போகவில்லையா? அவன் ஏதாகிலும் இப்படிப்பட்ட மாயையை உண்டுபண்ணி என்னை ஜயிக்க நினைத்தானோ என்ன? இந்த சுந்தரா அவனுடைய மாயையாயிருப்பாளா என்ன! எதையும் சற்றே ஆலோசித்துப் பார்க்கலாம்; அவசரப்படுவதனால் பிரயோஜனமில்லை” என்று ஆலோசித்துக்கொண்டு மறுபடியும்

இராமானந்தரைப்பார்த்து "சுவாமீ! இப்பொழுது நான் சொல்லியவிஷயங்களெல்லாம் சொப்பனமல்ல. நிச்சமாய் நடந்ததேயொழியவேறல்ல. மற்றொருமுறையும் சத்தியமாய்ச்சொல்வேன். தாங்கள் எனக்காக பகீர்வேஷம் போட்டு விவாகஞ்செய்வித்தவிஷயம் உலகத்தார் அறிந்தால், ஏளனஞ்செய்வார்களென்றெண்ணி இவ்விஷயந் தெரியாதவர்போல் சாதிப்பதாய்க் காணப்படுகின்றது. அப்படிப்பட்ட சந்தேகம் உங்களுக்கிருக்கும்பக்ஷத்தில், இது விஷயம் யாரிடமும் சொல்லாமல் ஜாக்கிரதையாயிருப்பேன். நீங்கள்வந்து எனக்கு விவாகஞ்செய்வித்தீர்களாயில்லையா, வாஸ்தவமாய்ச் சொல்லுங்கள்?" என்று கபீர் கேட்டார்.

இவைகளையெல்லாம் இராமானந்தர் கேட்டவுடன் கொஞ்சம் சந்தேகப்பட்டு "இதென்ன மாயையாயிருக்கின்றது. கோரக் ஏதாகிலும் கபீர்வேஷம்போட்டு என்னை மோசம்செய்து அவமானம் செய்யவந்தானோ என்னமோ தெரியவில்லை. இவன் வாஸ்தவமான கபீராயிருந்தால், இப்படிப்பட்ட பெருத்த பொய்சொல்லி சாதிப்பதற்குக் காரணமென்ன? ஒருவேளை கபீர் விவாகஞ்செய்துகொள்வதாயிருந்தால், எனக்குச் சங்கதி தெரிவிக்காமல் போவானோ? அவன் வந்துசொல்ல வெட்கப்பட்டாலும் அவன் தாய்தந்தையர்களாகிலும் வந்துசொல்லாமற்போவார்களா? நேற்றுகாலை கபீர் இவ்விடம்வந்தபோதும் விவாகசங்கதி ஒன்றும்பிரஸ்தாபஞ் செய்யவில்லையே? இவைகளையெல்லாம் யோசித்துப்பார்த்தால், கோரக் மாயையாகவேயிருக்கின்றது என்றுஎண்ணி, இனி இவன் நம்மை பாதாளலோகத்தில் அழுத்திவிடுவான்" என்று மிகவும்பயந்து உள்ளேயிருக்கும் சிஷ்யர்களில் ஒருவனைக் கூப்பிட்டு "அடே! சீக்கிரமாய் கபீரிடம்போய் முன்

தோற்றுப்போன கோரக்வந்து உன் குருவைப் பாதை செய்கின்றானென்றுசொல்லி அழைத்துவா" என்று மிகவும் பயத்துடன்கூச்சலிட்டுச்சொல்லினர்.

அதை கபீர் கேட்டவுடன் திக்பிரமையடைந்து "ஓஹோ! இதெல்லாம் கோரக் காரியமாகவேயிருக்கின்றது. இல்லாவிட்டால் இவர் இப்படிப் பயப்படுவாரா! இந்தமாயைக்கு இப்போது என்ன செய்யவேண்டுமோ ஒன்றும் தோன்றாமலிருக்கின்றதே" என்று துக்கித்து ஸ்ரீராமமூர்த்தியைத் தனது இருதயகமலத்தில்நிறுத்திப் பின்வருமாறு துதிசெய்ய ஆரம்பித்தார். "சகலலோக ரக்ஷகனை உன்சரண கமலங்களை சதா என் இருதயகமலத்தில்நிறுத்தி தியானித்துக்கொண்டிருக்கும் அடியேனை இவ்வாறுசங்கடப்படுத்துவது நியாயமல்ல. இப்பொழுது அகஸ்மாத்தாய் நடந்தேறியவிஷயம் தெரிந்துகொள்ளாமல் திக்பிரமையடைந்து மூழ்கியிருக்கின்றோம். இப்படிப்பட்டசமயத்தில் நீர்வந்து எங்கள்சந்தேகத்தைத் தீர்க்காவிட்டால் நாங்களெல்லோரும் அனியாயமாய்ப்போவோம். நீர் தீனதயாளன்; பரமகாருண்யமுடையவன்; அனாதரர்களை ஆபத்காலத்தில் ரக்ஷிப்பவன்; நீர் ஒருவரேயென்று பெரியோர்களெல்லாம் ஒரேவாக்காய்ச் சொல்லியிருக்கின்றார்கள். முன் கோரக்குடன் எதிர்த்தபோது தைரிய சாதுரியங்களைத் தந்து ஜயத்தை அடையும்படிச்செய்து ரக்ஷித்த பரமபுருஷன் நீரல்லவா? இப்போது இப்படிப்பட்ட பெருத்த ஆபத்திலிருந்து ரக்ஷிக்க ஏன் தடைசெய்கின்றீர்! ஓ புராணபுருஷா! சர்வலோகேஸ்வரா! சர்வாபந்தநிவாரகா! ஆனந்தா! ஆதிமத்தியாந்தரகிதா! அப்பிரமேயா! அகண்டசொரூபா! கரிராஜவரதா! கபீதார்தப்பிரதாபா! தீனபந்தோ! தயாசிந்து! இந்தசமத்தில் எங்களை ரக்ஷிக்க நீர்தவிர மற்றொருவரில்லை; இந்த மாயையை ஜயிப்

பதற்குத் தகுந்தஉபாயம் சீக்கிரம் அநுக்கிரகம் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

இவ்வாறு பிரார்த்தித்தவுடன் லக்ஷ்மீபதியாகிய பகவான், இராமானந்தர் கபீர் சந்தேகங்களை நிவர்த்திசெய்ய எண்ணி, தன் நிஜசொரூபசேவைதந்து "இராமானந்தா! இவன் கிரகத்திற்கு உன்னைப்போல் நாரதரை வரவழைத்தும் நான் காசிதேசாதிபதிபோல் வேஷம்தரித்தும் இவனுக்கு விவாகஞ்செய்வித்தோம். நீ இதற்காக சந்தேகப்படவேண்டாம்" என்றுசொல்லித் தன்னுடன், தேவஸ்திரீகளால் கோர்க்கப்பட்ட சுகந்த பாரிஜாத மலர்களின் ஆரங்கள் கொண்டுவந்ததை சுந்தரா கபீர்களின் கண்டத்தில் போட்டு இவர்களின்மீது தனக்கிருக்கும் பிரீதியை எல்லாம் எடுத்துச்சொல்லி "இவன் என் பிராணனுக்குச் சமானன்" என்று இராமானந்தரிடம் பகவான்சொல்லி அந்தர்த்தானமானார்.

அப்போது இராமானந்தர் இந்த அதிசயங்களெல்லாம் கண்டு, அற்புத ஆனந்தமடைந்து "நான் இன்று தன்னியனானேன். இந்தப் பரமபவித்திர மஹானுபாவனால் மிகவும் துர்லபமான மஹாவிஷ்ணுவின் தரிசனம் எனக்கு இன்று வெகுசுலபமாய்க்கிடைத்தது" என்று கபீரை துதிசெய்து பரமானந்தமடைந்து "புராண புருஷா! புண்டரீகாக்ஷா! சகலலோகேஸ்வரா! சச்சிதானந்தசொரூபா! உன்பக்தன் வாக்கை நிலைநிறுத்த பரமானந்தகாரமாகிய தரிசனம்தந்தாய். ஆஹா! நான் எவ்வளவு மந்தமதியையுடையவன். உன் திவ்வியமங்கள விக்கிரகசொரூபத்தைக் கண்களால் தரிசித்தும் உன்னைத் துதிசெய்யாமல் ஸ்தம்பம் போல்நின்று வாயைமூடிக்கொண் டிருந்தேனல்லவா? என் மந்தபுத்திக்கு என்னவென்று சொல்லுவேன்" என்று மிகவும் மனவருத்தமடைந்து கபீரைப்பார்த்து "ஓ தரும

புருஷா! உன் மகிமையை அறிய நான் எவ்வளவு மாத்திரன். நீ எனக்கு சிஷ்யனாவதற்கு நான் என்ன தவம் செய்துகொண்டேனோ தெரியாமலிருக்கின்றது. இன்று உன்னால் என் ஜன்மம் கடைத்தேரியது. அஞ்ஞானத்தினால் உன்னை தூஷித்த தூஷணைகளுக்கெல்லாம் மன்னிக்க வேண்டும்" என்று பலவிதங்களாய்க் கபீரை வேண்டிக்கொண்டனர். அப்போது கபீர் குருவின் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்துநின்று "சுவாமீ! தங்கள் பாதகமலங்களையே நம்பிஇருக்கும் அடியேனை இவ்விதமாய்த் துதிசெய்வது தருமமல்ல. பகவானே இவ்வாறு செய்விததாரென்று தெரிந்துகொள்ளாமல் தேவரீரே இந்தக்காரியத்தை நிறைவேற்றினதாய் நிச்சயித்து இதுவரையில் உம்மிடம் வாதாடினதற்காக அடியேன் விஷயத்தில் மன்னித்து ரக்ஷிக்கவேண்டும்" என்று மிகவும் தீனஸ்சுரத்துடன் வெகுவிதங்களாய் வேண்டிக்கொண்டனர். பிரம ருத்ராதி தேவதைகளுக்கும் கிடைக்கத்தகாத துர்லபமான சேவை தனக்கு இவ்வளவு சுலபமாய்க் கிடைக்குமென்று சுந்தரா கனவிலும் நினைத்தவனல்ல. இப்படிப்பட்டவர்களுக்கு அகஸ்மாத்தாய் பகவத்தரிசனம் கிடைத்தவுடன் "பூர்வஜன்மத்தில் நான் என்ன புண்ணியஞ் செய்தேனோ தெரியவில்லை. இம் மஹானுபாவனை மணம்புரிந்து இப்படிப்பட்ட ஆசாரியர் அநுக்கிரகத்தைப்பெற்று ஸ்ரீ ராமமூர்த்தியை நேத்திரோத்சவமாய் தரிசித்து தன்னியாளாயினேன். என் புண்ணியமே புண்ணியம்; என் அதிர்ஷ்டமே அதிஷ்டம்" என்று பரமானந்த சாகர (சமுத்திர)த்தில் மூழ்கி பரவசமடைந்திருந்தாள். பிறகு இராமானந்தர் தம்பதிகளிருவர்களுக்கும் ஆசீர்வாதம் செய்து இன்றுமுதல் நீங்கள்இருவரும் தம்பதிசமேதராய் வந்து பிரதிதினம் தரிசனம்தந்து போகவேண்டுமென்று

சுந்தராவையும் கபீரையும் வேண்டிக்கொண்டு அவர்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, கபீரினுடைய திவ்விய பிரபாவத்திற்கு மிகவும் ஆச்சரியப்பட்டு பகவத்தியானம் செய்துகொண்டிருந்தார். பிறகு சுந்தராவும் கபீரும் தன் வீடு சேர்ந்து ஜிஜ்ஜாபீபிக்கும் தமாலுக்கும் நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் சொல்லி, அபரிமிதமான ஆனந்தத்தில் மூழ்கி எல்லோரும் சொக்கியிருந்தார்கள் என்று நாபாஜி சித்தர் விருத்த வசிஷ்டாதி முனிசிரேஷ்டர்களுக்குச் சொன்னவுடன் அவர்கள் மிகவும் சந்தோஷித்து பிறகு நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் சவிஸ்தாரமாய்ச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்கள்.

கபீர் கோயிம்சையை நீக்குதல்.

பிறகு சதுர்முகாம்ச ரூபமாய்வந்த நாபாஜிசித்தர் விருத்தவசிஷ்டாதி முனிசிரேஷ்டர்களைப்பார்த்து சொல்லுகின்றார் :—

கபீரும்சுந்தராவும் சந்தோஷமாய் சமஸ்த்த போகங்களையும்அனுபவித்து ஆனந்தித்துக்கொண்டு வரும்சமயத்தில் காசியிலுள்ள பல பெரியோர்கள் கபீரை ஆசிரயித்து அவர் அனுக்கிரஹம்பெற்று, அஹிம்சா பரர்களாயும் (உயிர்வதை செய்யாதவர்களாயும்) அஹங்கார மமகாரங்கள்இல்லாதவர்களாயும் சன்மார்க்கத்தில்பிரவேசித்து (நல்லொழுக்கமாய் நடந்துக்கொண்டு) வந்தார்கள். கிரகங்களில் சூரியனும், நக்ஷத்திரங்களில் சந்திரனும், பசுக்களில் காமதேனுவும், விருக்ஷங்களில் கல்பவிருக்ஷமும், தேவர்களில் மஹாவிஷ்ணுவும், வஸ்திரங்களில் சுப்பிரமான வஸ்திரமும், ருதுக்களில் வசந்தருதுவும், புஷ்பங்களில்

மல்லிகை புஷ்பமும், ஸ்திரீகளில் பதிவிரதாஸ்திரீகளும் விரதங்களில் அஹிம்சாவிரதமும், சமுத்திரங்களில் க்ஷீர (பால்) சமுத்திரமும், பூஜைகளில் மானசபூஜையும், குணங்களில் சாந்தகுணமும், மானவர்களில் தருமாத்மனும், தநுர்வித்தையில் ஸ்ரீராமரும் பிரசித்தியடைந்தது போல் பிரம்மஞ்ஞானத்தில் பிரசித்திப்பெற்றவர் கபீரேயென்று எல்லோரும்புகழ்ந்திருந்தார்கள் இவ்வாறிருக்க ஒருநாள் கபீரினுடைய சிறியதகப்பன் வீட்டில் ஏதோ ஓர் காரியார்த்தமாய் தன்வீட்டில் பெரியவிருந்து செய்ய நிச்சயித்து தனக்குவேண்டிய சிநேகிதர்களுக்கெல்லாம் தக்கவர்களை அனுப்பி விருந்துண்ண வரச்சொல்லி, தமால் வீட்டிற்குத்தானாகவேவந்து ஜிஜ்ஜாபீபியையும் சுந்தராவையும் அழைத்துக்கொண்டு கபீரைமாத்திரம் எதினாலேயோ கூப்பிடாமல்போய்விட்டான். அதனால் கபீர் பரவசமடைந்து “என் சிறியதகப்பன் என்னை ஏன் அழைக்காமற் போனார்? அவர்விஷயத்தில் நான் என்ன அபராதஞ் செய்தேன்? காரியசம்பிரமத்தில் என்னிடம்சொல்ல ஒருவேளை மறந்துவிட்டாரோ! அல்லது என்மீதில் ஏதாகிலும் அசூயை உண்டாயிற்றோ என்னமோதெரியவில்லையே என்று அநேகவிதங்களால் நினைத்துத் தன்மனதிற்கு யாதொன்றும்தோன்றாமல் கடைசியில் “நல்லது; நானே போய்ப்பார்த்துவருகின்றேன்” என்று சொல்லி, தன் வீட்டிலிருந்துப் புறப்பட்டுச் சிறியதந்தையின்வீட்டிற்குச் சென்றார்.

அப்போது சிலமனிதர்கள் கும்பல்கூடி ஏதோ சில விஷயங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது கபீர் “இவர்கள் இங்கு என்னசெய்கின்றார்கள் பார்க்கலாம்” என்றுஎண்ணி. ஜனங்களை நீக்கிக்கொண்டு மெதுவாய் உள்ளேசென்றார். அப்போதுநான்குபேர்கள்

சேர்ந்து ஓர் பசுவின் கன்றைப் பிடித்துக்கொண்டு அதை அறுக்கப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது அந்தக்கன்று கண்களில் தாரைதாரையாய் ஜலம் விட்டு அழுதுகொண்டு, ஐயையோ! என்விதிக்கு என்னவென்றுசொல்வேன். இந்ததுராத்மாக்களிடம் அகப்பட்டுத் துர்மரணம்அடைய கதி சம்பவித்ததா? என்னைக் கொன்று என் மாமிசத்தைப் புசித்து மிகவும் சந்தோஷிப்பதற்காக என்னை இவ்வாறுசெய்யப்போகின்றார்கள். நல்லது "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்" என்னும்வாக்கிய ரீதியாய் கர்மத்தினால்வந்த இந்த சரீரம் யாருக்காகிலும் உபயோகப்படுவது உத்தமமேயல்லவா? என்பூர்வ ஜன்ம கர்மபலன் இவ்வாறிருக்க ஒருவரை நிந்திக்கவேண்டியதேன்? இவர்களின்கையில் அகப்பட்டபிறகு சாகாமல் தப்பித்துக்கொள்வது இனி துர்லபமே? இதற்காக விசனப்படுவதேன் என்று துக்கித்து பகவானை மனதில் ஸ்மரித்துக் கொண்டு நின்றிருந்தது. அப்போது துடுக்கர்களாகிய துலுக்கர்கள் கத்திகளைத்தீட்டி கன்றைஅறுக்கத் தயாராயிருந்தார்கள்,

இவைகளையெல்லாம் கபீர்கண்டு, மிகவும் விசனப்பட்டு "ஐயோ! இதுமிகவும் அநியாயமாயிருக்கின்றது" என்றுசொல்லி அந்தக்கன்றைத் தன்கையால் தடவி "பயப்படாதே" என்று அதற்கு அபயம்கொடுத்து, துலுக்கர்களில் மிகவும் யோக்கியனைப்போல் நின்றிருக்கும் இப்ளிஷ் என்பவனைப்பார்த்து மிகவும் கோபங்கொண்டு "அடே துன்மார்க்கா! இந்தப் பாபகாரியத்திற்கெல்லாம் நீ யல்லவோ மூலகாரணமாயிருக்கின்றாய்? கோஇம்சை செய்து அதன் மாமிசத்தைப்புசிப்பித்து எல்லோரும் நரகத்தில்விழும்படிச் செய்யப்பட்டவன் நீ யல்லவா? உன்னை மகாதுரோகி என்பதற்குச் சந்தேகமேயில்லை.

நீசெய்துவரும்குற்றத்திற்காக உன்னை அக்கினிக்குண்டத்தில்போட்டுப் பஸ்பம் செய்தபோதிலும் பாபமில்லை" என்றுசொல்லிக் கண்களில் நெருப்புப்பொரி பறக்கக் கோபங்கொண்டு அவன்சமீபமாய்ச்சென்று நோக்கிஓர் அறை அவன்கன்னத்தில்அறைந்தார். அந்த அறைபட்டவுடன் இப்ளிஷ்கண்களில் மின்னும்பூச்சிபறந்து கீழே விழுந்து தேகஸ்மரணையில்லாமல் பிரஞ்ஞைதப்பி சற்றுநேரம் பிணம்போலிருந்து மறுபடியும்தெளிவுண்டாய் திடுக்கிட்டெழுந்து சில நிமிஷங்கள்நின்றிருந்து பிறகு கபீரைப் பார்த்து "ஏனையா! கபீருகளே! என்னை வியர்த்தமாய் அடித்தீர்கள்" என்றுசொல்லி துலுக்கர்களைப்பார்த்து "ஐயா! தீரர்களே! எதிரில் கன்றைநிறுத்திக்கொண்டு சும்மாய்ப் பார்த்துக்கொண்டு இருக்கின்றீர்கள்; சீக்கிரமாய் அதன்வேலையைமுடியுங்கள்; பூர்வம் இதுசெய்துகொண்ட கர்மபலன் அவசியமாய்அநுபவித்தே தீரவேண்டும்" என்றுசொல்லி காஜியைப்பார்த்து "ஐயா! காஜீயே! என்னசெய்கின்றீர். மந்திரத்தைச் சீக்கிரமாய்ச் சொல்லி கன்றின்கழுத்தை அறுங்கள்" என்றுசொன்னான். அப்போது நீண்டசொக்காயும் பொட்டைக்குல்லாவும்போட்டு தன்வெண்மையான நீண்டதாடியை இடதுகையால் உருவிக்கொண்டுநின்று கெம்பீரமான கண்டத்துடன் காரியத்தைப் பூர்த்திசெய்யத் தயாராயிருக்கும் கிழவனையும் மற்றுமுள்ளவரையும் தமால்கண்டு "மித்திரர்களே! இந்தக் கிழவனைப்பார்த்தால் பூதம்போல் தோன்றுகின்றது. இதன் நிஜஸ்திதியை அறியும்வரையில் இந்தக்கன்றைக் கொல்லாமல் சற்றுநேரம் பொறுக்கவேண்டும்" என்று எல்லோரையும் கேட்டுக்கொண்டார். அதற்கு அந்தக் கிழவன் மிகவும்கோபங்கொண்டு "தமால்! நீ என்ன அவ்வாறுசொல்லுகின்றாய்? நீ அசல் துலுக்கனாயிருந்து கப

வான் ஏற்படுத்திய கட்டளைக்கு விரோதமாய்ச்சொல்லு கின்றாய். சகலஜந்துக்களையும் பகவான்சிருஷ்டிசெய்து அதில் ஆடு, கோழி, பசுக்கள் முதலானவைகளைப்புசிக்க வேண்டுமென்றும், அவைகளைப் புசிப்பதனால் பாபமில்லை யென்றும், அவைகள் நமக்காகவே அனுப்பப்பட்டதென் றும் நமதுவேதத்தில் தெளிவாய் எழுதியிருக்கவில்லையா? இந்தக்காஜியும் மௌலியும் அந்த வேதங்களை நன்றாய் அறிந்திருக்கின்றார்கள். நீயும் உன்குமாரனும் நமது வேத மாகிய குரானில் சொல்லியிருக்கும் விஷயங்களையெல்லாம் இவர்களைக்கேட்டாகிலும் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் இதைத்தடுப்பது யுக்தமானதல்ல''வென்று கிழவன் சொல் லினான்.

கபீர் அதைக்கேட்டு "பூதமே! இப்படித்துர்மார்க்க மாய்ப்பேசுவதனால் பலனென்ன? ஆசிரயித்தவர்களையெல் லாம் அதோகதிசெய்விக்கக் கங்கணங்கட்டிக்கொண்டிருக் கும் உன்பேச்சையும் நம்பலாமா? நீ விசுவாசவீனன்: மஹாதுரோகி; உன்னைப்போன்ற மூடர்களிடம் உன் மாயைப்பேச்சுசெல்லுமேயொழிய எங்களிடம்செல்லாது. உன் துன்மார்க்கத்திற்குத்தக்கபடி சிக்ஷைசெய்து அனுப்பு வேன். என்னையாரென்றுநினைத்தாய்? உன்னை ஒருநிமி ஷத்தில் பஸ்பம்செய்துவிடுவேன்'' என்று மிகவும்கோபித் துச்சொல்லி கன்றின்சிரசில் தன்அஸ்தத்தைவைத்து "குழந்தாய்! பயப்படாதே; இன்னொருநிமிஷத்தில் இந்த இப்ளிஷை என்னசெய்கின்றேன்பார். நீ பூர்வஜன்மத்தில் விவேகசூனியத்தினால் செய்துகொண்ட பாபகர்மபலனே இந்த ஜன்மத்தில் துர்மரணத்திற்குக் காரணம் சம்பவித் தது. இப்போதாகிலும் உன்இருதயத்தில் திரிகரணசுத்தி யாய் ஸ்ரீராமமூர்த்தியை ஸ்மரித்துக்கொண்டிரு; இதனால் உனக்கு சம்பவித்த ஆபத்துகளெல்லாம் நீங்கும்'' என்று

கன்றுக்குச்சொல்லி கிழவன்பக்கமாய்த்திரும்பி கீழே விழுந்துகிடந்த ஓர் குச்சியையெடுத்து இப்ளிஷைப் பார்த்து "அடேதுர்மார்க்கா! நீ இன்னும் இங்குநின்று துர்வாதம்பேசிக்கொண்டிருக்கின்றாயா?'' என்றுசொல்லி குச்சியைவிசிறி இப்ளிஷ்மீதுபோட்டார். அப்போது அந் தக்குச்சி கிருகிருவென்று சுழன்று இப்ளிஷ்மீதுசெல்ல இப்ளிஷ் நடுநடுங்கி மௌலிபின்நின்று "முஸல்மான்களே! நீங்கள் யாராகிலும் இந்தக்குச்சியை என்மேல் வராதபடி பிடித்துக்கொள்ளுங்கள்''என்று உரத்தசப்தத்துடன் கூச்ச லிட்டான். அப்போது அந்தக்குச்சி அவர்கள் கைகளுக்கு அகப்படாமல் கிருகிருவென்று சுழன்றபடியால் அங்கிருந் தவர்களெல்லோரும் மூலைக்கொருவராய் ஓடி ஒளித்து கொண்டார்கள். அப்போது அந்தக்குச்சியாருக்கும் அகப் படாமல் ஆகாசமார்க்கமாய்க்கிளம்பி மறைந்துவிட்டது.

துலுக்கர்களெல்லோரும் அதைப்பார்த்து கபீர்மேல் மிகவுங்கோபங்கொண்டு "அடேதுர்மார்க்கா! நமது வமி சத்திற்கெல்லாம் பிரசித்தியடைந்த இப்ளிஷை அவமானப் படுத்தித் துரத்திவிட்டதுமேயல்லாமல் கன்றையும் ஹலால் செய்விக்காமல் வாதாடிக்கொண்டிருக்கின்றாய். குலபிரஷ்ட னானஉன் முகத்தைப்பார்த்தாலும் அனிஷ்டம்வந்துசம்ப விக்கும்; நீஇப்போது இங்குஏன்வந்தாய்? வந்தவன் சும்மாயிராமல் துர்வாதஞ் செய்துகொண்டிருக்கின்றாய்; சீ சீ! இங்கிருந்துஓடிப்போ'' என்று கோபித்தார்கள்.

அப்போது கபீர் அவர்களைப்பார்த்து "பாபாத்மாக் களே! ஏன் துள்ளிவிழுகின்றீர்கள்? ஜீவஹிம்சைசெய்வது மானவதருமமா! இதரர்கள் உங்கள் குழந்தைகளைக் கொன்றால் நீங்கள் சும்மாஇருப்பீர்களா? இதர ஜந்துக் களுக்கும் அவ்வாறேஎன்று ஏன் எண்ணலாகாது! பல வந்தமாய் ஜந்துக்களை இம்சிப்பதைவிட பெறுத்தபாபம்

வேறொன்றில்லையென்று உங்களுக்குத் தெரியாமல்போய்விட்டதல்லவா? ஜீவஇம்சைசெய்யும் பாபிகளைவிட வேறே பாபிகள் யாரிருக்கின்றார்கள். பூததயையுடையவனுக்கே மோக்ஷம்சித்திக்கும். முமுக்ஷுவிற்கு முக்கியமாய் வேண்டியது பூததயை ஒன்றேயாம். ஜிஹ்வா சாபல்யத்திற்காக (நாருசிக்கா) ஜீவஇம்சை செய்யப்பட்டவர்கள் பரலோகத்தில்போய் சுகத்தை அனுபவிக்காமல் நரகத்தையே அவசியமாய் அனுபவிப்பார்கள். நீங்கள்வாசித்த வாசிப்பெல்லாம் சமுத்திரத்தில்போடவா? வாசித்தபலன் என்னவென்றால், தான் சன்மார்க்கனாய்நடந்துகொண்டு இதரர்களையும் சன்மார்க்கத்திற்குக் கொண்டுவருவதற்கேயொழிய, யுக்தா அயுக்த விவேகமில்லாமல் அனேகர்களைப் பாபகர்மத்திற்குப் பாத்திரர்களாகச்செய்து ஈசுவரனிடத்தில் சிக்ஷை அனுபவிப்பதற்கல்ல; இந்தவிஷயம் உங்களுக்குத் தெரியாமற்போனதென்ன? கொஞ்சம் சாந்தகுணம் வஹித்து நான் சொல்லியவிஷயங்களையெல்லாம் சற்றே ஆலோசித்துப் பாருங்கள். எல்லாம்தெரியவரும்'' என்று சொல்லினர். அதற்கு மௌலீ கபீரைப்பார்த்து பின்வருமாறு சொல்லத் தொடங்கினான் :—

மௌலீ :—கபீர் எங்கள்வேதத்தில் பசு இம்சை பரமதர்மமேயென்றும், பாபமல்லவென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தவிஷயத்தில் நீ எங்களுக்கு உபதேசம் செய்யவேண்டியதில்லை. ரத்தமே க்ஷீரமா (பாலா) யிற்றென்று அறியாமல் க்ஷீரத்தைமாத்திரம் பானம்செய்யலாமென்று க்ஷீரத்திற்கு முக்கியகாரணமாயிருக்கும் ரத்தத்தைப் பானஞ்செய்யலாகாதென்று சொல்லும்நியாயம் என்னநியாயம்? உன் நியாயம் உனக்குச்செல்லுமேயொழிய இதரர்களுக்குச்செல்லாது என்றுச் சொன்னான்.

கபீர்:—மௌலீ! நீ இப்பொழுது சொல்லியதுபோல் ரத்தமே க்ஷீரமாயிற்றென்னும் நியாயரீதியாய் தாயின் முலைப்பாலைக்குடிப்பதற்குப் பதிலாய் தாயைக்கொன்று அவள் ரத்தத்தைப் பானம்செய்யலாமல்லவா?

மௌலீ:—இது, நன்றாயிருக்கின்றது! மனுஷ்யர்களுக்கும் மிருகங்களுக்கும் பேதமில்லையா? மிருகத்திற்கிருப்பதுபோல் மனுஷ்யர்களுக்கு நான்கு கால்களும் தலையில் இரண்டுகொம்புகளும் வால் முதலாகிய அவயவங்களும் இருக்கின்றதா; மனிதர்களுக்காகவே சிருஷ்டிசெய்த ஜந்துக்களை வதைசெய்துப் புசிப்பதனால் தோஷமென்ன?

கபீர்:—நீ சொல்வதைப்பார்த்தால் பகவான் பக்ஷபாதமுடையவனென்றே எண்ணவேண்டியதாயிருக்கின்றது. பிரபஞ்சத்திற்கெல்லாம் தந்தையாயிருக்கும் பரமாத்மா ஒருகண்ணில் சுண்ணாம்பும் மற்றொருகண்ணில் வெண்ணையும் வைப்பாரென்று எண்ணுவது சரியல்ல. விசாரித்துப் பார்க்குமளவில் சாமான்ய மிருகங்களுக்கு இருக்கும் அறிவு நரமிருகங்களுக்கு இல்லையென்றே சொல்லலாம். யுக்தி சக்தி முதலானவைகள் நமக்குக் கொடுத்திருப்பது போல் மிருகங்களுக்கும் கொடுத்திருக்கும்பகவான் தயையில்லாதவனால் மிருகங்களைக் கொன்று பக்ஷிக்கலாமென்றும் நரர்களுக்கு விதித்திருக்கின்றாரென்றும் சொல்லும் மிருகபுத்தியுடைய மனிதனை என்னவென்றுசொல்லலாம் பகவான் பசுக்களை ஏன்சிருஷ்டித்தாரென்றால் நமக்காக பால் தயிர் மோர் வெண்ணை முதலானவைகளைக் கொடுப்பதற்கும், அவைகளின் சகாயத்தினால் கிருஷிகாரியங்களைச் செய்துகொண்டு நானாவிதங்களாகிய தானியங்களைப்பயிரிட்டு களஞ்சியங்களில்சேகரித்து அதைப் புசித்துவர சிருஷ்டிசெய்தாரேயொழிய அறுத்துப் புஜிப்பதற்கல்ல. இப்படிப்பட்ட ஜந்துக்களுக்கு பிரத்தியுபகாரம்செய்வதற்குப்பதி

லாய் அவைகளைக்கொன்று புசிப்பது மானவதருமமல்ல. ஈஸ்வரன் நமக்கு சக்தியைக்கொடுத்திருக்கின்றார் என்று துர்மார்க்கத்திற்கு உடன்பட்டு வாயில்லாஜந்துக்களைக் கொல்வது ஞாயமல்ல. ஹலால் செய்துவதுதான் குலாசார தர்மம்போலிருக்கின்றது. ஔரா! மிகவும்நன்றாயிருக்கின்றது! சகலஜந்துக்களையும் தன்னுயிரைப்போல்நினைக்க போதிக்காத உங்கள் வேதம் என்னவேதம்? சிலகல்பனா கதைகள் நிறைந்திருக்கும்புஸ்தகத்தை முக்கியபிரமாணமாய் எடுத்துக்கொண்டு பசுக்களை வியர்த்தமாய்க்கொன்று பாபத்திற்குப் பாத்திரராகின்றீர்கள்! நீங்கள்இவ்விதமாய் வாதிப்பதனால் லாபமில்லை; பிரத்தியக்ஷ பிரமாணத்துடன் எனக்கு சமாதானம்சொல்லும்வரையில் இந்தக்கன்றை நீங்கள் கொல்லலாகாது'' என்று சொல்லிக் கன்றைஅறுக்க விடவில்லை.

மௌலீ:—பகவன்நாம ஸ்மரணைசெய்து பசுவை அறுத்தால் பாபமில்லை.

கபீர்:—திரிகரணசுத்தியாய் பாப நிவாரணைக்காகவே பகவானை ஸ்மரணைசெய்யவேண்டியது ஞாயமேயொழிய அதற்கு விரோதமாய் பாபகாரியங்களைச்செய்ய பகவானை ஸ்மரிப்பது ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. இப்படிச் செய்வதனால் தோஷம் சம்பவிக்குமேயொழிய புண்ணியம் உண்டாகமாட்டாது.

மௌலீ:—பகவன்நாம ஸ்மரணைசெய்து அறுத்த பதார்த்தங்களைவிட மற்ற எந்தபதார்த்தங்களையும் மகம்மதியர்கள் புசிக்கலாகாது.

கபீர்:—நல்லது; ஹலாலான ஜந்துக்களின் கர்ப்பத்திலிருக்கும் குட்டிகள் முட்டைகள் ஹலாலாகவில்லையல்லவா! அப்படி ஹலாலாகாதவைகளை எப்படிப் புஜிக்கலாம்?

மௌலீ:—கருப்பைக்குள் அடங்கியிருக்கும் குட்டிகளாகிலும் அண்டத்தில் அடங்கியிருக்கும் பிண்டத்தையாகிலும் ஹலால் செய்யவேண்டுமென்று எங்கள்சாஸ்திரத்தில் எழுதியிருக்கவில்லை. ஆதலால், அதை புஜிப்பதனால் யாதொருதோஷமும்இல்லை.

கபீர்:—நீ சொல்லும்விஷயம் ஞாயமானதல்ல. தயாள குணமுடைய பகவான் தன்னால் சிருஷ்டிசெய்த ஜந்துக்களின்மீது நிர்தயையாயிருந்து இவைகளைக்கொல்லும்படி எப்பொழுதும் ஆஞ்ஞாபிக்கமாட்டான். ஜீவ இம்சை செய்யப்பட்டவனை எப்பொழுதும் ஈசுவரன் மன்னிக்கமாட்டான். ஜீவஇம்சை செய்யப்பட்டவர்களுக்கு சத்கதி உண்டென்று பகவான்சொல்லும்பக்ஷத்தில் அவருக்கு தயா பூரணமென்னும்பெயர் எவ்வாறுநிலைநிற்கும். அவ்வாறிருந்தால் அவரை மிகவும் கடின சித்தமுடையவனென்றே நிச்சயிக்கவேண்டும். பரமாத்மா கடினசித்தமுடையவனாயிருந்தால் அவரிடம் இனி என்னஞாயம் இருக்கப்போகின்றது? பசு பக்ஷியாதிஜந்துக்களுக்கு வேண்டிய புல் வைக்கோல் முதலாகிய வஸ்துக்களை சிருஷ்டிசெய்த பகவான் அந்தப் பசு பக்ஷியாதிகளை மனுஷ்யர்கள் புசிக்க வேண்டுமென்று பகவான் சிருஷ்டித்தார் என்று சொல்வது மிகவும்ஆச்சரியகரமாக இருக்கின்றது. அப்படி மிருகங்களை பக்ஷிக்க சிருஷ்டிசெய்திருந்தால் ஜடபதார்த்தமாகிய காய்கனிகிழங்குகளை ஏன்சிருஷ்டிசெய்தார். அனியாயமாய் பகவான்மீது குற்றம்சுமத்தி துஷ்டகாரியங்களில் பிரவேசித்து ரௌரவாதி நரகங்களை அடைகின்றீர்கள்.

மௌலீ:—உலகத்தில் எல்லாவற்றையும் சாதுஜந்துக்களாய் சிருஷ்டிசெய்யாமல் சில ஜந்துக்களை குரூரஜந்துக்களாய் சிருஷ்டிசெய்தார்? குரூரஜந்துக்கள் சாதுஜந்துக்களை ஜீவஇம்சை செய்யவில்லையா?

கபீர்:—உசித அனுசித விவேகமில்லாமல் நடக்கும் மிருகங்களுக்கும் அயுக்தா யுக்த பரிஞ்ஞானமுடைய மனிதர்களுக்கும் தாரதம்மியமில்லையா? தாரதம்மியம் இல்லை என்றால் நீங்களெல்லோரும் குரூரமான மிருகங்களே என்று நிச்சயிக்கவேண்டியதே! சரி சரி: அவைகள் சதுஷ்பாத ஜந்துக்கள் (நான்குபாத ஜந்துக்கள்), நீங்கள் துவிபாத ஜந்துக்கள் (இரண்டுபாத ஜந்துக்கள்). ஐயோ! அவிவேகமுடையவர்களே? சராசர பதார்த்தங்களுக்கெல்லாம் தாரதம்மியங்கள் உண்டு. அது உங்கள் புத்திக்குப் பிடிபடவில்லையல்லவா?

மௌலீ:—நல்லது; நீ சொல்லியதுபோல் ஜீவ இம்சைசெய்வது பாபமாயிருந்தால் இந்துக்கள் தேவதைகளுக்குப் பலிகொடுப்பது பாபமல்லவா?

கபீர்:—அது, பாபமென்பதற்கு லேசமாகிலும் சந்தேகமேயில்லை. பாமரஜனங்கள் காமியார்த்தமாய் துஷ்டதேவதைகளின் அனுக்கிரகம்பெற எருமைக்கிடா, ஆடு, கோழி முதலானவைகளை பலி கொடுக்கின்றார்களேயொழிய, அது சத்விஷயமென்று ஒருவரும்சொல்லமாட்டார்கள். இப்படிப்பட்ட துஷ்டகாரியங்கள் செய்யப்பட்டவர்களுக்கெல்லாம் துர்க்கதியேயொழிய, நற்கதியில்லை.

மௌலீ:—அப்படியானால், சிஷ்ட தெய்வமென்றும் துஷ்ட தெய்வமென்றும் இரண்டுதெய்வங்கள் இருக்கின்றதா, என்ன?

கபீர்:—ஆம், பிரம ருத்திராதிகள் சிஷ்டதெய்வங்களென்றும், காளி, மாரி முதலானவைகள் துஷ்டதெய்வங்களென்றும் சொல்லப்படும். இந்த துஷ்டதெய்வங்கள் பலி முதலாகியவைகளை அபேக்ஷிப்பதுபோல், சிஷ்ட

தெய்வங்கள் அபேக்ஷிக்காமல், தூபதீப பல நைவேத்தியங்களினால் சந்துஷ்டி அடையும்,

மௌலீ:—எக்கியங்களென்றும், யாகங்களென்றும் பெயர்கள்வைத்து வெள்ளாடுகளைக்கொன்று, அக்கினியிலிட்டுக்கொளுத்தி, அதன் மாமிஷங்களை அவிர்ப்பாகமென்று சொல்லி, சிஷ்டதேவதைகளுக்கு ஆராதனை செய்து பக்ஷிக்கவில்லையா?

கபீர்:—இந்துக்களின் வேதத்தில் பிரம்மயக்கியம், தேவயக்கியம், பூதயக்கியம், பிதுர்யக்கியம், மனுஷ்யயக்கியம் என்று ஐந்துவித யக்கியங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் அத்தியாபனாத்தியாப யக்கியம் பிரமயக்கியமென்றும், ஹோமாதிக்கிரியை யக்கியம் தேவயக்கியமென்றும், ஜந்துக்களைப் பலிகொடுக்கும் யக்கியம் பூதயக்கியமென்றும், அன்னோதகங்களால் தர்ப்பணம் செய்யும் யக்கியம் பிதுர் யக்கியமென்றும், அதிக அப்யாகதிகளை ஆதரிப்பது மானுஷயக்கியமென்றும் சொல்லப்படும். பூதயக்கியம் ஒன்றிற்கே பலி முதலானவைகள் பிரதானமானதென்றும், மற்றவைகளுக்கு இல்லையென்றும், இதனால் தெளிவாய் ஏற்படுகின்றதல்லவா? மந்திரசக்தியினால் ஆடுகளை மரணமடையும்படிச்செய்து அந்தமாமிசத்தை ஜோதிஷ்டோமத்தினால் பஸ்பம்செய்து, அந்தப் பஸ்மத்தை அன்னபானாதிகளுடன் சேர்த்து, பிரமாதி தேவதைகளுக்கு அக்கினி மூலமாய் அவிர்ப்பாகங் கொடுத்து அவர்களைத் திருப்தி அடையச்செய்து அதன் சேஷத்தைத் தாம் சுவீகரிக்கவேண்டும் (சாப்பிடவேண்டும்). இவ்வாறு செய்து முடிந்தபிறகு முன் மந்திரத்தால் இறந்த ஆட்டை மறுபடியும் அந்த மந்திரபலத்தினாலேயே பிழைப்பிக்கவேண்டும்; அவ்வாறு செய்யாவிட்டால் அதற்குப் பரலோகத்தில் உத்கிருஷ்டமான பதவியைக் கொடுப்

பிக்கவேண்டும்; ஆதலால், இப்படிப்பட்ட சாமர்த்திய
முடைய மஹானுபாவர்களே, இந்தப் பூதயாகஞ் செய்ய
வேண்டியவர்களேயொழிய, சாமான்னியர்கள்செய்யலா
காது. இவ்வாறு செய்யாமல், ஆட்டைக்கொன்று யக்கியம்
செய்வார்களாகில், அவர்களுக்குக் கோரநரகம் தப்பாது.
யக்கியத்திற்குப் பிரயத்தனப்பட்டவன் யக்கியம் முடியும்
வரையில் நித்திரை ஆஹாரங்கள் இல்லாமல் இருக்கவேண்
டும். கேவலம் மது மாமிசங்களில் இச்சையுடையவர்
களுக்கும், புத்திர பௌத்திர தனதான்னிய வாகனாதிக
ளாகிய காமியவஸ்துக்களைக் கோரப்பட்டவர்களுக்கும்
பூதயக்கியம் அவசியமேயொழிய, மற்றவர்களுக்கு அவசிய
மில்லை. பூதயக்கியம் செய்யப்பட்டவர்கள் பாமரர்க
ளென்றும், முமூக்ஷுக்களுக்கு இது விசர்ச்சனமானதென்
றும், அந்த வேதத்திலேயே நிஷேதித்துச் சொல்லப்பட்
டிருக்கின்றது. உங்கள் வேதத்திலோ, அகண்ட சச்சிதா
னந்தமயமாகிய பரப்பிரம்மத்தையே ஸ்மரித்து ஜீவஇம்சை
செய்யவேண்டுமென்றும், அப்படிச்செய்வதனால், பாபம்
இல்லையென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. உங்களைப்
போன்றமூடர்கள் இப்படிப்பட்ட துர்விஷயங்களை நம்பி
பிரதிதினம் அனேக பசுக்களை இம்சித்து அனேக பாபங்
களைச் சம்பாதித்துக்கொள்ளுகின்றீர்கள். இந்துக்களின்
வேதத்தில்சொல்லியிருக்கும் விதிப்படி ஓர் யக்கியஞ்செய்ய
பிரயத்தனப்பட்டால், அதுபோல் முடிவது ஆயிரவருஷத்
திற்கு ஒன்றேயாகும். அப்படியிருக்க, நீங்களோ ஒரு
நிமிஷத்தில் நிர்லக்ஷியமாய் கணக்கில்லாத ஆயிரக்கணக்
கான பசுக்களைக்கொன்று யக்கியங்களைப்பூர்த்திசெய்து
பாவங்களைப்பர்வதம்போல் சேகரித்து வைத்துக்கொள்ளு
கின்றீர்கள். தெரிந்திருந்தும் பசுக்களையே கொன்று
தின்னவேண்டும் எண்ணுகின்றீர்கள். அசுவமேதாதியாகங்

கள் செய்வதனால்,நசித்துப்போகத்தக்க சுவர்க்காதிபோகங்
கள்மாத்திரம் கிடைக்குமேயொழிய, மோக்ஷசாம்ராஜ்ஜிய
பதவி உண்டாகமாட்டாது. பசுக்கள் பயிரைமேய்ந்தால்,
அவைகளை அதட்டி ஓட்டிவிடவேண்டுமேயொழிய, அவை
களைத் தடியால் அடித்து ஓட்டலாகாது. அவ்வாறு
அடிப்பார்களாகில், அந்தஅடியினால் எத்தனை ரோமங்கள்
(மயிர்கள்) விழுந்துவிடுகின்றனவோ, அத்தனை வருஷங்கள்
கோர நரகத்தை அனுபவித்தே தீரவேண்டும் என்று,
இந்துக்களின் வேதத்தில் சொல்லப்பட் டிருக்கின்றது.
சாமான்னியமான ஓர் விருட்சத்தில் உண்டாகும் பழத்
தையே புசிக்கலாகாதென்று ஆதாமுக்குப் போதித்த தயா
ரசனாகிய பகவான் கடைசியில் தயா சூன்னியனாய் பசுக்
களை இமிசிக்கவேண்டுமென்றும் இமிசிக்கும்போது என்னை
நினைத்து இமிசியுங்களென்றும் சொல்லுவாரா? வாயில்லாத
ஜந்துக்களின்மீது அவருக்கு துவேஷம் உண்டாவதற்குக்
காரணமென்ன? உங்கள் வமிசத்தில் வந்த ஒருவன் நாரு
சிக்காக உங்கள்சாஸ்திரத்தில் இவ்வாறு எழுதிவைத்தா
னென்று நன்றாய்த் தெரியவருகின்றது. இது எப்படிப்
பட்ட நியாயமென்று நீங்களே சற்று ஆலோசித்துப்பாருங்
கள். ஜந்துக்களைப் பகவானுக்குப் பலிகொடுப்பதனால்,
மனிதர்கள் பரிசுத்தர்கள் ஆவார்களென்பது எவ்வளவு
விசித்திரமாயிருக்கின்றது பாருங்கள். புத்திமான்கள் இதை
எவ்வளவேனும் நம்பார்கள். காளிமுதலாகிய பேய் பிசா
சங்களுக்கு ஆனந்தமாகிய இந்ததுஷ்டகாரியத்திற்காக
பகவான் சம்மதிப்பாரா? தானே சிருஷ்டிசெய்த ஜந்துக்
களைத் தனக்கே பலிகொடுக்கவேண்டுமென்று பகவான்
உத்தரவு செய்தாரென்று சாதிப்பது எவ்வளவேனும்
தகுதியல்ல. பரமபவித்திரனை பகவானுக்கு அபவித்திர
மாகிய ரத்த மாமிசாதி பதார்த்தங்கள் எப்படி சஹிக்கும்!

இம்ஸைகாரியங்களைச் செய்யப்பட்ட மனிதர்களுக்குத் தக்கசிக்ஷைசெய்யாமல் விடான். இவைகளுக்கெல்லாம் தக்கநியாயம்சொல் பார்ப்போம்'' என்று கபீர் கேட்டனர்.

மௌலீ:—இந்த ஜீவஹிம்சை பகவானுடைய ஆஞ்ஞையேயொழிய, மனுஷ்யர்கள் கற்பித்ததல்லவென்றும், இது இப்ராஹீம்பயகம்பர்காலத்தில் வெளிவந்ததென்றும் சொல்வதற்கு அனேக திருஷ்டாந்தங்கள் எங்கள் குரானில் இருக்கின்றன.

கபீர்:—ஆம், நீசொன்னது வாஸ்தவமே. இப்ராஹீம் பயகம்பர்காலத்தில்தான், இந்த துஷ்டகாரியங்களை உங்கள் மதஸ்தர்கள் அதிகமாய்ச்செய்து வந்தார்கள். சாரா குமாரனை இஸாக்கை எனக்குப் பலிகொடுக்கவேண்டுமென்று பகவான் கேட்டபோது அதற்கு அவன் தந்தையாகிய இப்ராஹீம் தன் குமாரனுக்குப் பதிலாய் ஓர் ஆட்டைப் பலிகொடுத்து அதைத் தன்னுடன்கூட இருந்தவர்களுக்கெல்லாம் விருந்துசெய்வித்து, அவர்களைத் தர்மப்பிரஷ்டர்களாய்ச்செய்வித்தான். அதுமுதல் இஸாக் தன் மதத்தில்சேர்ந்தவர்களைஎல்லாம் பகவானுக்கு ஆடுகளைப் பலிகொடுக்கவேண்டுமென்னும் ஓர் கட்டுப்பாட்டைச் செய்துவைத்தான். பகவானைநினைத்து ஓர் ஜந்துவைக் கொன்றால், அது பகவானுக்கே பிரீதியாகுமேயொழிய. நிஷ்பிரயோஜனமாகாதென்று ரகசியமாய்ப் போதித்தான், "பகவானே உனக்கு பலிகொடுக்கின்றேன்'' என்றுபகிரங்கமாய்ச்சொன்னாலும், ரகசியமாய்ச் சொன்னாலும் விஷயம் ஒன்றேயல்லவா? இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம் திட்டமாய்ச்சேர்த்து அதில்நுழைத்து இஸாக் எழுதிவைத்திருக்கும் கிரந்தமே இதற்குவேண்டிய திருஷ்டாந்தமாயிருக்கின்றது. இப்ராஹீம் பயகம்பரினுடைய சிறிய பாரியாளாகிய சாரா என்பவள் தன் பிராணனுக்குச்

சமானமாய் எண்ணி வளர்த்துவைத்திருந்த பசுங்கன்றைப் பலிகொடுத்து இஸாக்கைப்பெற்றாளல்லவா? பிறகு இஸாக் என்பவனுக்கு யுக்தவயது வந்தபிறகு, சிலமந்தமதியுடையவர்களுக்கு ஆசாரியனாயிருந்து, தன்தாய்செய்த அனுஷ்டானத்தையே தன் சிஷ்யர்களுக்குப்போதித்து, ஜந்துக்களை பகவானுக்கு பலிகொடுக்கவேண்டுமென்று அவர்களைப் புரோச்சாகப்படுத்தவில்லையா? பலிகொடுக்கும்போது மந்திரங்களைக் கெட்டியாய்ச் சொல்லாமல், மனசிலேயே நினைக்கவேண்டுமென்று இஸாக்கும் இஸ்மாயீலும் நிபந்தனைகள் செய்யவில்லையா? சிலதுஷ்டர்கள் தங்கள் காரியசித்திக்காக நிகிருஷ்ட தேவதைகளின் அனுக்கிரகம் பெற பலிகளைக் கொடுக்கின்றார்கள். எள்ளுக்குள் எண்ணெயைப்போலும், பாலில் கெய்யைப்போலும், சகல பதார்த்தங்களிலும் வியாபித்திருக்கும் ஸச்சிதானந்த பரப் பிரமத்திற்கு, அவரால் சிருஷ்டிக்கப்பட்ட ஜந்துக்களை அவருக்கேபலிகொடுப்பது எவ்வளவுநன்மையாயிருக்கின்றது. இதை நீங்களேசற்றுஆலோசித்துப்பாருங்கள்; இப்படிப்பட்ட அக்கிரமங்களெல்லாம் உங்களால் ஏற்பட்டதென்று சுலபமாய்த் தெரியவருகின்றது. சிஷ்ட தேவதைகளுக்காகிலும் துஷ்டதேவதைகளுக்காகிலும் பலிகொடுப்பதனால், பாபம் சம்பவிக்குமென்பதற்கு லேசமாகிலும் சந்தேகமில்லை. விரதங்களில் அஹிம்சையைவிட, இதரவிரதங்கள் வேறொன்றுமில்லை. அஹிம்சையைக் குறித்து உங்கள் குரான் நான்காவதுஅத்தியாயத்தில் விசேஷமாய் போதித்திருக்கின்றது. அந்த அத்தியாயத்தை மற்றொருமுறை வாசித்துப்பார்'' என்று கபீர்சொல்லினர். அப்போது மௌலீ கபீரைப்பார்த்து "கபீர்! அப்படியானால், ஓர் திருஷ்டாந்தம் சொல்பார்ப்போம்'' என்றுகேட்டான் அதற்குக்கபீர் பின்வருமாறு சொல்லுகின்றார்.

பசுங்கன்று தன் விருத்தாந்தங்களைக் கபீரிடஞ் சொல்லுதல்.

கபீர் தன்அஸ்தத்தை பசுங்கன்றின் சிரசில்வைத்து "ஓ வத்ஸா (பசுவின்கன்றே)? பகவானை ஸ்மரித்தாகிலும் அல்லது வேறு எந்தவிதத்தில்ாகிலும் ஜீவஇம்சை செய்யப்பட்டவர்களுக்கு நரகம் தப்பாதென்னும்வார்த்தை சத்தியமா அல்லது அசத்தியமா? அதைச் சற்றேதெரியச் சொல்பார்ப்போம்" என்று அந்தக்கன்றைக்கேட்டார். அதற்கு அக்கன்றானது மிகவும் வணக்கமாய் கபீரினுடைய பாதங்களில் தன்சிரசைவைத்து, நமஸ்கரித்து எழுந்து நின்று, கண்களில் ஜலம் ஆறாய்ப்பெருகஅழுது, தன் சரித்திரத்தைப் பின்வருமாறு சொல்லத்தொடங்கிற்று:—

"ஐயா! தயைசெய்து என் சரித்திரத்தைக் கேழ்ப்பீராகில், தாங்கள் கேட்ட கேள்விக்கு இதுவே திருஷ்டாந்தமாயிருக்கும். நரகமென்பது பூலோகத்திலுமில்லை, பாதாளலோகத்திலுமில்லை. நரகம் எங்கேயோ இருக்கின்றதென்று நினைக்கின்றோம். சற்று ஆலோசித்துப்பார்க்குமளவில் நரகம் எவ்விடமிருக்கின்றதென்பது தெரியவரும். அதாவது, அஸ்திகள் சர்மம் நரம்புகள் மாமிசம் கொழுப்பு ரத்தம் முதலாகிய அசஹ்யவஸ்துக்களுடன்கூடி எப்போதும் துர்க்கந்தங்களுடன் இருக்கும் இத்தேகமே பிரத்தியக்ஷ நரகமென்பதற்குச் சந்தேகமேயில்லை. வாத பித்த சிலேஷ்மாதி விகாரங்களினால், அப்போதைக்கப்போது இந்த தேகத்திற்குச் சம்பவிக்கும் நானாவிதவியாதிகளே யமபாதையென்று சொல்லலாம். இவைகளெல்லாம் தங்களுக்குத் தெரியாதவிஷயமல்ல. இனி என் விருத்தாந்தத்தைச் சற்றே சொல்லுகின்றேன் தயைசெய்து கேளுங்கள். நான்

பூர்வஜன்மத்தில் சமஸ்தவித்தைகளும் கற்றிருந்த பிராமணன். ஓர் காரியார்த்தமாய் இமயபர்வதப்பிராந்தியமாய் இருளடைந்த காட்டில்புகுந்து சென்றுகொண்டிருக்கும்போது, வழியில் ஓர் பெரிய பாராங்கல்லின்மீது சில வேடர்கள் உட்கார்ந்து, அப்போதே கொன்று எடுத்து வந்த ஓர் மானைத் துண்டுதுண்டாய்அறுத்து நெருப்பில் போட்டுச் சுட்டுத் தின்றுகொண்டிருந்தார்கள். அதை நான் பார்த்தவுடன், அதில் எனக்கும் இச்சையுண்டாய் அங்கிருந்து முன்செல்ல கால்வராமல் அங்கேயேநின்று இதற்கென்ன செய்யலாமென்று யோசித்துக்கொண்டே நின்றிருந்தேன். இதற்குள் என் புத்திமாறி "ஓ பாழும் மனமே! உன் தேகத்தின்மீது எவ்வளவு அபிமானம் வைத்திருக்கின்றாயோ, அதுபோல் சகல ஜந்துக்களுக்கும் தம்தம் தேகத்தில் அபிமானமுண்டென்று அறியமாட்டாயா? ஜந்துக்கள் வெலவெலவென்று உதைத்துக்கொண்டு சங்கடப்படும்படியாய்க்கொன்று நாவிற்கு ருசியாய் அதன் மாமிசத்தைத்தின்று, சரீரத்தை எவ்வளவு காலம் வைத்துக்கொண்டிருப்பாய்? பரர்களுக்குத் தீங்கு செய்யாமல், பகவானாலுண்டாக்கிய புல் பூண்டுகளை மேய்ந்து தன்னிஷ்டம்போல் திரிந்துகொண்டிருக்கும் ஜந்துக்களை, அநியாயமாய்க்கொன்று அளவில்லாத பாபகர்மங்களைச் சம்பாதித்துக்கொண்டு இந்த பாபபலன்களையெல்லாம் மறுஜன்மங்களில் வியாதிரூபமாய்ச் சம்பவித்து அனுபவிக்கவேண்டியதேன்? "ஆத்மவத் ஸர்வபூதானி" என்னும் சுருதிவாக்கியத்தை வாசித்திருந்தும், மறுபடியும் ஜீவஇம்சையில் பிரயத்தனப்படுவது எவ்வளவு அவிவேகம்! ஜீவ இம்சைசெய்யப்பட்டவனுக்கு பாபம் ஒருபங்காயிருந்தாலும், அதைச் சாப்பிடப்பட்டவனுக்கு எட்டுப்பங்கு பாபம் சம்பவிக்குமென்றும், இது, பிராமணர்களுக்கு

முக்கிய தருமமென்றும், லேசாய் அறிந்தவனாயிருந்தும் மறுபடியும் மாமிசத்தைத்தின்ன நீ எண்ணினாயா? மனமே! உனக்கு இது தகுமா? மாமிசத்தைத் தின்னவேண்டுமென்று மனதில் நினைத்தவுடனே, அதைத் தின்றவனாகினாயல்லவா? துர்க்கந்தமாகிய மாமிசத்தை அசங்கியமென்றெண்ணாமல் பக்ஷிக்கப்பட்டவர்களுக்கு பகவதனுக்கிரகம் உண்டாகுமா? எந்த ஜந்துக்களையும் இம்சிக்காமலும், மாமிசம் மச்சம் முதலானவைகளைப் பக்ஷிக்காமலும் பரிசுத்தனாயிருந்தால், அநேகராஜசூயயாகங்கள் செய்த பலன்களைவிட அதிகபலன் உண்டாகுமென்றும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கவில்லையா? மனமே! உனக்கேன் இன்று இப்படிப்பட்ட துர்ப்புத்தி பிறந்தது; இதனால், முன்னுக்கு ஏதோ ஓர்கெடுதி சம்பவிக்காமல் போகாது என்று எனக்குள் நான் சொல்லிக்கொண்டவைகளையெல்லாம் என் சமீபமாய் மானைக்கொன்று தின்றுகொண்டிருந்தவர்கள் கேட்டு அவர்களுக்கு நல்லபுத்தியுண்டாய் "ஐயோ! இதுவரையில் நமக்கு இதுவிஷயம் தெரியாமல்போய்விட்டதல்லவா? இம்மைக்கு கர்மமே முக்கியமானதென்றெண்ணி அநேக பாபகர்மங்களைச் சம்பாதித்துக்கொண்டோம். இந்த மஹா பாபத்திலிருந்து எவ்வாறு தப்பித்துக்கொள்வோம்" என்றுசொல்லி பச்சாத்தாபப்பட்டு என்னைப்பார்த்து "ஐயா? பிராமணரே! நீர்புசிக்க ஆசைப்பட்ட இம்மாமிசத்தை நீரேபெற்றுக்கொள்ளும்" என்றுசொல்லி அந்தமாமிசங்களையெல்லாம் என்மீதெறிந்துசென்றார்கள். மாமிசம் என்மீது விழுந்தவுடனே நான் மிகவும அசங்கியப்பட்டு கண்களைமூடிக்கொண்டு அவ்விடமே உட்கார்ந்துகொண்டேன். இதற்குள் ஓர் ஆண்மான் ஓடிவந்து என்னிடம்விழ்ந்துகிடக்கும் மாமிசங்களையெல்லாம் முகர்ந்துபார்த்து தன்நாயகியை

நானே கொன்றேனென்றெண்ணி அதிககோபங்கொண்டு தன்கொம்புகளால் என்மார்பில்குத்திக் கீழேதள்ளி, விடாமல் மறுபடியும் மார்பில் நன்றாய்ஊன்றும்படி குத்தி அதிக காயப்படுத்திச் சென்றுவிட்டது. அது குத்தின குத்துக்களால் மார்பில் அதிககாயப்பட்டு மூர்ச்சையாய் வீழ்ந்திருந்தேன். பிறகு, மூர்ச்சைத் தெளிந்துபார்த்தபோது தேகமெல்லாம் ரத்தப்பிரவாகம் ஓடித்தோய்ந்து அங்கங்கு கட்டிவிட்டது. அதனால், மிகவும் பலங்குறைந்து மார்பில் அதிக பாதையுண்டாய் நடப்பதற்குச் சக்தியில்லாமல் மெதுவாய்எழுந்து அவ்விடமிருந்த ஓர் குகைக்குள் நுழைந்தேன். அந்தக் குகையில் வசித்துக்கொண்டிருந்த யோகீஸ்வரர் என்சமீபமாய்வந்து எனக்குச் சம்பவித்திருக்கும் கஷ்டத்தைப்பார்த்து மிகவும் பச்சாதாபப்பட்டு, நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் என்னால் கேள்விப்பட்டு, மிகவும் கோபங்கொண்டு என்னை முறைத்துப்பார்த்து "நீ பிராமணனாயிருந்தும் மாமிசத்தைப் பக்ஷிக்க இச்சைகொண்டாய்! நீ மிகவும் பாபாத்மனானாய். உன் காற்று என்மீதுபட்டாலும் எனக்கும் பாபம் சம்பவிக்கும்" என்றுசொல்லி, தன்கையிலிருந்த சூலத்தினால்குத்தி என்னை வெளியில் தள்ளினவுடனே, நான் ஓர் பெரிய பள்ளத்தில் விழ்ந்து தத்தளித்து வேதனை பொறுக்கமாட்டாமல் "ஓ, யோகீஸ்வரரே! எனக்கு உண்டாயிருக்கும்பாதை பொறுக்க முடியவில்லை. எப்படியாகிலும் தயைசெய்து என் பிராணனை இந்தச்சரீரத்திலிருந்து விடும்படிச்செய்து புண்ணியம்கட்டிக்கொள்ளுங்கள்" என்று அநேக விதங்களாய் அந்தயோகீஸ்வரரைப் பிரார்த்தித்தேன். பிறகு அவர் எதனாலேயோ என்மீது கொஞ்சம் கனிகரமுண்டாய் நல்ல வார்த்தைகளினால் என்னைச் சந்தோஷப்படுத்தி என்னைப் பார்த்து "ஐயா! என்குற்றத்தை மன்னிக்கவேண்டும்.

தபத்திற்கெல்லாம் பூததயையே முக்கியமானதென்று தெரிந்திருந்தும் மஹாபாபம்செய்த உன்காற்று என்மீது பட்டவுடனே, என்ஞானங்கெட்டு அதிககோபமுண்டாய் உசித அனுசித விவேகமில்லாமல், உனக்குத் தீங்கு விளைவித்தேன். இதனால், உன்பாபத்தில் பாதி எனக்குச் சம்பவித்தது. பாபவிமோசனத்திற்காக இனி நான் கங்காநதி ஓரமாய் கோரதபம் செய்யப்போகின்றேன். இப்போது உனக்கு ஏதாகிலும் நன்மைசெய்யநினைத்தால் உன் மற்றைப் பாதிபாபத்தையும் நான் அடையவேண்டியதாய் நேரிடும். ஆதலால், உன்னிடம் இனி ஓர்நிமிஷமாகிலும் சம்பாஷணைசெய்யலாகாது இனி நான் செல்லுகிறேன்'' என்று பரமேசுவரனைத் தியானம் செய்துகொண்டே சென்றுவிட்டார். அவர் பரமேசுவரனைக் குறிப்பிட்டு ஜபித்துக்கொண்டே சென்றபடியால் ஓஹோ! இதுவே உபதேசமென்று அதையே சிந்தித்துக்கொண்டு பிராணனை விட்டுவிட்டேன். அந்தச் சமயத்தில் நான் பரமேசுவரனைச் சிந்தித்ததனாலேயோ, அல்லது யோகீஸ்வரரது தரிசனம் கிடைத்ததனாலேயோ, பரமபவித்திரமாகிய கோ கருப்பத்தில் நுழைந்து இந்த ஜன்மமெடுத்தேன். பூர்வ ஜன்மத்தில் மாமிசத்தைப் புஜிக்க நினைத்ததோஷத்தால், இந்த ஜன்மத்தில் துலுக்கர்களின் கையில்அகப்பட்டு மஹாதுக்கத்தை அனுபவிக்கநேர்ந்து கடைசியில் மஹானுபாவனாகிய உன் அஸ்தபரிசத்தினால் என்பாபங்களெல்லாம் ஒழிந்து பூர்வஞானமுண்டாய் பகவன் நாமஸ்மரணைசெய்தேன். உமது அஸ்தம் என்மீது பட்டவுடனே பரமபவித்திரனானேன். பூர்வஜன்மத்தில் ஆத்மா சரீரத்தை விட்டு நீங்கும்போது யோகீஸ்வரரைத் தரிசனம்செய்து ஈஸ்பரனை நினைத்துப் பிராணனைவிட்ட புண்ணியவிசேஷத்தினால், இந்தஜன்மத்தில் சர்வசங்கபரித்தியாகப்பிரம்ம

ரிஷியாகிய உமது தரிசனம் எனக்குக்கிடைத்து, அதனால், பரமபதத்தில் சதா ஆனந்தத்தை அனுபவிக்கப்போகின்றேன். நீர் எனக்கு உபதேசித்த தாரகமந்திர பிரபாவத்தினால், விமுக்தனாய் பரிசுத்தனானேன். ஜந்துக்களை இம்சிப்பவர்களிடம் நீர்சகவாசம்செய்யவேண்டாம். தயையில்லாதவர்களுக்கு எப்போதும் தரிசனம் கொடுக்கவேண்டாம். கடின இருதயமுடையவர்களை எப்போதும் மன்னிக்கவேண்டாம். என்று சில ஞானமார்க்கங்களை கபீருக்கு உபதேசம்செய்து எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே கண்களுக்குத் தெரியாமல் அதிருசியமாய் விட்டது.

இந்த விநோதங்களைப்பார்த்து நின்றுகொண்டிருந்த காஜீ, மௌலீ மற்றுமுள்ள யாவத்திராளும் மிகவும் ஆச்சரியப்பட்டு, கபீரைப் பலவிதங்களாய்ப் புகழ்ந்தார்கள். அப்போது கபீர் பரமானந்தமடைந்து, தன் குருவை நினைத்து நமஸ்கரித்து துலுக்கர்களையெல்லாம் பார்த்து "ஐயமார்களே! பூததயை விஷயமாய் மற்றொருவிசேஷம் பூர்வம் நடந்திருக்கின்றது. அதை இப்போது உங்களுக்குச் சொல்லுகின்றேன், சாவதானமாய்க்கேளுங்கள்'' என்று சொல்லிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்:-

இம்சை பாபமென்று புராணரூபமாய் உபதேசித்தல்.

"ஐயா! சொல்லுகின்றேன்கேளுங்கள். நேபாள தேசத்திற்குச் சிரோபூஷணமாகிய பட்டணமொன்றுண்டு. அதில், தர்மம் தவறாமல் ராஜ்ஜியபரிபாலனம் செய்து வந்த அரசன் ஒருவனிருந்தான். அவன் பிரதிதினம் தன்

பிரதானமந்திரியை அழைத்துக்கொண்டு, தன் பட்டணத்திற்கு இரண்டு காதவழிதூரத்தில் உள்ள கானகத்திலிருக்கும் பத்திரகாளி ஆலயத்திற்குப் பிரதிதினஞ்சென்று, அந்தத் தேவியை பக்தி பூர்வகமாய்ப் பூஜித்து, தன்னிஷ்டத்தை பூர்த்திசெய்விக்கவேண்டுமென்று பிரார்த்தித்து வருவதுண்டு. இவ்வாறு பன்னிரண்டு வருஷங்கள் பிரார்த்தித்தபிறகு ஓர்நாள்இரவில் பூஜாசமயத்தில் பத்திரகாளி பிரத்தியக்ஷமாய் "எனக்கு நரபலி கொடுப்பாயாகில், உன்னிஷ்டம் சித்தியாகுமென்று" சொன்னாள். உடனே அரசன் மந்திரியைப்பார்த்து இந்த விஷயத்தைத் தெரியச்சொல்லி "இதற்கென்னசெய்யலாம்" என்று கேட்டான். அதற்கு மந்திரி "தேவா! நான் இப்போது பட்டணத்திற்குள்சென்று ஓர்மனிதனை சம்பாதித்து அழைத்து வருவதற்குள் பூஜைவேளை தவறி பொழுதுவிடிந்துவிடும். அதனால், தங்கள்காரியத்திற்கு பின்னமுண்டாகும். ஆதலால், தாங்கள் முன்பின் ஆலோசிக்காமல் என்னை இந்தக்காளிக்கு பலிகொடுத்து உன்னிஷ்டசித்தியை நிறைவேற்றிக்கொள்ளலாம்" என்று மந்திரிசொல்லினன். ராஜன் மந்திரியைப் பார்த்து "ஐயா! நாம்இருவரும்சேர்ந்து சுகம் அனுபவிப்பதற்காகவல்லவோ உத்தேசங்கொண்டு இத்தனை வருஷங்கள் கஷ்டப்பட்டு பூஜித்துக்கொண்டுவந்தது. நம்மிருவரில் ஒருவர்சென்றபிறகு உண்டாகும் இந்தச்சுகம் என்ன பிரயோஜனம்! எவ்விதத்திலாகிலும் இந்தச்சமயத்தில் வேறொருவரை சம்பாதித்து வரவேண்டியதேயொழிய, உன்னைப்பலியிடேன். இதற்காக நீ கொஞ்சம் பிரயத்தனம்செய்யவேண்டும்" என்று அரசன்சொன்னான். மந்திரி சற்று ஆலோசனைசெய்து "இவ்விராத்திரியில் எவனும் அகப்படான்; கஷ்டப்பட்டுச்சென்றபோதிலும் காலதாமதமேயொழிய, லாபமொன்றுமில்லை; நான் சொல்லியது

போல் செய்வீராகில் சீக்கிரமாய் காரியம் சித்தியாகும். இதற்காக நீங்கள் எவ்வளவேனும் ஆலோசிக்கவேண்டாம்" என்று மந்தரிசொல்லினன். அதற்கு அரசன் மந்திரியைப் பார்த்து "நீ சொல்வது நியாயமல்ல உத்தேசத்திற்குப் பங்கம்நேரிட்டால் மனதிற்குச் சிறிதேனும் சந்தோஷம் உண்டாகமாட்டாது. யாரும் அகப்படாவிட்டால் இந்தக் காரியத்தை விட்டுவிடவேண்டியதேயொழிய, நீ சொல்லியதுபோல் செய்வது சரியானதல்ல" என்றுசொல்லினன். மந்திரி "தேவா! இந்த இருளடைந்தகாட்டில் நடு இரவில் இங்கு யார்அகப்படப்போகின்றார்கள்? எவனும் அகப்படாததனால், இந்த பெருங்காரியத்தை விட்டுவிடலாகாது. இத்தனைவருஷங்கள் பட்ட பிரயாசையெல்லாம் நிஷ்ப்பிரயோஜனமாய்விடும். ஆதலால், நான் சொல்லியதுபோல் செய்யவேண்டும்" என்றுசொல்லினன். அரசன் கொஞ்சம் ஆலோசித்து "இவ்வளவேன்? இதோபடுத்துக்கொண்டிருக்கும் அர்ச்சகனைப்பலிகொடுத்து நமதுகாரியத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம்" என்றுசொல்லினன். மந்திரி அதைக்கேட்டவுடன் "ராமராமா" என்று காதுகளைமூடிக்கொண்டு அரசனைப்பார்த்து "தேவா! ஸ்திரீ ஹத்தியைவிட சிசுஹத்தியும், சிசுஹத்தியைவிட கோஹத்தியும், கோஹத்தியைவிட குருஹத்தியும், குருஹத்தியைவிட பிரம்மஹத்தி மிகவும் மஹாபாபமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்; இவ்வளவுகாலம் தேவியை மிகவும் பக்தியுடன் ஆராதித்து கடைசியில் மஹாபாபத்தைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டுமா? இது யுக்தமானதல்ல. நமது இஷ்டம் நிறைவேறாமற்போனாலும் போகட்டும்; நாம் இப்படிப்பட்ட துஷ்டகாரியத்தில் பிரவேசிக்காமலிருந்தால், சர்வகாரியமும் சித்தியாகும்" என்றுசொல்லினன். அரசன் சற்று ஆலோசித்து "நீ சொல்வது வாஸ்தவமேயொழிய,

இந்தக்கிழவனைப் பலிகொடுத்தபோது, பத்திரகாளி நமக்குக் கொடுக்கும் வரத்தில் பாதிவரம் இவனுக்குத் தத்தம் செய்தால், நல்ல கதியடைவானல்லவா? இதற்காக விசனப்படுவதேன்'' என்று அரசன் சொன்னான். அவ்வார்த்தையை மந்திரிகேட்டு அதற்குச்சம்மதித்து "நல்லது'' என்று அர்ச்சகனிடம்வந்து அவனை நித்திரையிலிருந்து எழுப்பி "உன்னை'' இப்போது பத்திரகாளிக்குப் பலிகொடுக்கவேண்டுமென்று அரசன் அபிப்பிராயப்பட்டிருக்கின்றார். உன் அபிப்பிராயம் என்னவென்று'' பிராமணனை மந்திரிகேட்டான். பிராமணன் அதைக்கேட்டவுடனே நடுநடுங்கி ஓஹோ! அரசனும் மந்திரியும் ஒரே வாக்காய்ப் பேசிக்கொண்டபடியினால், இனி இவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்வது மிகவும் கஷ்டமே! இனி இதற்கு என்னசெய்யலாமென்று பயந்து அதற்குப் பதில் சொல்ல வாய்வராமல் சும்மாயிருந்தான். இதற்குள் அரசன் பிராமணனிடம்வந்து "சுவாமி! தாங்கள் பரிபூரண அனுக்கிரகம்வைத்து மந்திரிசொல்லியவிஷயத்திற்குச் சம்மதிக்கவேண்டும். நீர் எங்களுக்கு இந்தஉபகாரம் செய்வீர்களாகில் உங்கள்குமாரனுக்கு அர்த்த ராஜ்ஜியம்கொடுப்பதுமே யல்லாமல், பத்திரகாளிகொடுக்கும்வரத்தில் பாதி வரம் உமக்குத் தத்தம்செய்கின்றேன். அதனால் நீர் நல்ல கதி அடைவீர். எவ்விதமாகிலும் எங்கள் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்விக்கவேண்டும்'' என்று பிராமணனைப் பிரார்த்தித்தான். அப்போது அந்தப்பிராமணன் ஓஹோ! இனி எனக்கு காலம்சமீபித்தது. இதிலிருந்து தப்பித்துக் கொள்வது மிகவும்கஷ்டமே. விசேஷ பக்தியுடன் தன்னை வெகுகாலமாய் பூஜைசெய்துகொண்டு வருகின்றேனென்று சற்றாகிலும் கனிகரமில்லாமல் என்னையே பலிக்கு ஆளாக்கினாளென்று மிகவும்கோபங்கொண்டு திடீரென்று

எழுந்து பத்திரகாளியிடம்சென்று தன்பலம் கொண்டவரையில்நோக்கி ஓர்அறை காளியின்கன்னத்தில் அறைந்து "அடீநன்றிகெட்டவளே! யான் பால்யமுதல் கிழத்தனம்வரையில் உன்னை விசேஷபக்தியுடன் பூஜித்துவந்ததற்காக கடைசியில் என்னையே பலிவாங்கசம்மதித்தாயா? இப்படிப்பட்ட துஷ்டகாரியத்தில் பிரயத்தனப்பட உனக்கு மனம் எவ்விதமாய்த்துணிந்தது?'' என்று துக்கம் அதிகரித்து மற்றொரு தவடையில் நோக்கி ஓர் அறை அறைந்தான். அந்தஅடிக்குப் பத்திரகாளி தத்தளித்துத் தடுமாறி அர்ச்சகனுக்குப் பிரத்தியக்ஷமாய் "ஐயா! அவசரப்படாதே; பூர்வஜன்மத்தில் நீ ஓர் சூத்திரனாயிருந்தாய்; அப்போது என்னை மிகவும்பக்தியுடன் பூஜித்துவந்து உன்னிஷ்டசித்திக்காகக் கொழுத்த இரண்டு கிடாக்களைக்கொண்டுவந்து ஒரேவெட்டாய்வெட்டி எனக்குப் பலிகொடுத்தாய். நீ பலியிட்ட கிடாக்கள் இரண்டும் சுகிருத புண்ணியவிசேஷத்தினால் இந்த ஜன்மத்தில் அரசன் மந்திரிகளாய்ப் பிறந்து என்னை ஆராதித்து பூர்வஜன்மத்தில் நீ செய்த உபகாரத்திற்காக இப்போது அவர்கள் உனக்கு பிரதியுபகாரம் செய்யப்போகின்றார்கள்; இப்போது இவர்களிருவரும் சேர்ந்து உன்னை ஒரேவெட்டாய் வெட்டாமல் போய்விடுவார்களாகில் இன்னொரு ஜன்மத்திலாகிலும் இவர்களால் நீ மரணமடையவேண்டியதாய்நேரிடும். இந்தக் காரணத்தினாலேயே நீ எனக்கு பலியாகவந்தாய். என்னிடத்தில் தோஷம் சிறிதேனும்இல்லை. இந்த ரகசியத்தை நீ அறிந்துகொள்ளாமல், விருதாவாய் என்மீது கோபித்துக் கொள்ளுகின்றாய். அதனால், சார்தகமென்ன'' வென்று சொல்லி யதாரீதியாய்ப் பிரதிமையாய்விட்டாள். பத்திரகாளிசொல்லிய விஷயங்களையெல்லாம் பிராமணன்கேட்டு மெதுவாய் வெளியில்வந்து அரசன் மந்திரிகளைப்பார்த்து

"ஐயா! நீங்களிருவரும் சேர்ந்து கத்தியைப்பிடித்து ஒரே வெட்டாய் வெட்டிவிடுவதற்குச் சம்மதித்தால், இப்போதே நான் பத்திரகாளிக்கு இரையாகின்றேன்" என்றுசொன்னான். அப்போது மந்திரி ராஜனைப்பார்த்து "தேவா! நான் இவரை பலிகொடுக்க கேட்டவுடன் இவர் காளியின்மேல் மிகவும் கோபங்கொண்டு ஆலயத்திற்குள்சென்றபோது இவரிடம் பத்திரகாளிசொன்னவிஷயங்களை நீர் கேட்கவில்லை. அது என்ன விஷயமென்றால், பூர்வஜன்மத்தில் நாம் இருவரும் கிடாவாயிருந்தோமென்றும் அப்போது இவர் சூத்திரனாயிருந்து தன்இஷ்டசித்திக்காக நம்மிருவரையும் கொண்டுவந்து ஒரேவெட்டாய் தனக்குப் பலிகொடுத்தாரென்றும், அந்த புண்ணியவிசேஷத்தினால், இந்தஜன்மத்தில் நாம் இருவரும் அரசன் மந்திரிகளாய் அவதரித்தோமென்றும்; பலிகொடுத்ததனால், இவர் பிராமணராய்ப் பிறந்து வெகுகாலமாய்த் தன்னைப் பூஜித்து வந்தாலும் ஜன்மாந்தர கர்மபலத்தை அவசியமாய் அநுபவிக்கவேண்டியதே; இப்பொழுது தப்பினாலும் மறுஜன்மத்தில் இவர் நம்மால் பலியாவது தப்பாதென்றும் சொன்னாள். இதைச் சற்றுயோசித்துப் பார்க்குமளவில், கிடாவைக் கொன்றதினாலேயே இவருக்கு இப்படிப்பட்ட சிக்ஷை உண்டாகும்போது ஞானமுடையவனும் பக்தனுமாகிய பிராமணனைப் பலிகொடுப்பதனால் நாம் என்னகதி அடையவேண்டுமோ, அதை நீரே சற்று ஆலோசித்துப் பாருங்கள். நாம் இந்தப் பிராமணனைக் கொல்லவும் வேண்டாம், நமக்குக் காளி வரம்கொடுக்கவும்வேண்டாம்; வந்தவழியே சும்மாய்ச் சென்றுவிடுவதே மிகவும்நன்மை" என்று மந்திரி அரசனுக்கு உபதேசித்தான். ராஜன் அதைக்கேட்டு சிலநேரம் மனவருத்தமடைந்து "நாம் ஒருவேளை பரபூத்திற்குப் பயந்து இந்தப்பிராமணனை பலி

கொடாமல் விட்டுவிட்டால், இவருக்காக மறுஜன்மமெடுத்து இவரை நாம் பலிகொடுக்கவேண்டுமேயல்லவா? அதற்காக இப்போதே துணிந்து பலிகொடுத்துவிடுவது நன்மையல்லவா? மறுபடியும் இவர் நம்மை பலிகொடுக்காமலிருக்கத்தக்க உபாயத்தைத் தேடிக்கொள்ளலாம்" என்றுசொல்லி மந்திரியை சமாதானப்படுத்தினார் பிறகு மந்திரி அக்காரியத்திற்கு உடன்பட்டு இருவருமாய் கத்தியை கையில்பிடித்து பிராமணன் சிரசை ஒரேவெட்டாய் பத்திரகாளிக்குப் பலிகொடுத்தார்கள். அப்போது பத்திரகாளி அவரிருவர்களின் பக்திக்குமெச்சி உடனே பிரசன்னமாய் "உங்களுக்கு வேண்டியவரத்தைக் கேளுங்கள்" என்றுசொன்னாள். அப்போது ராஜன் அந்த தேவியை நமஸ்கரித்து, "தாயே? இந்த விப்பிரனைப் புனர்ஜீவிதனாய் செய்யவேண்டுமென்றும் மந்திரியின் இஷ்டார்த்தங்களையெல்லாம் பூர்த்திசெய்விக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அப்போது பத்திரகாளி ராஜன்புத்திக்குமெச்சி மிகவும்சந்தோஷப்பட்டு "உன்னிஷ்டம்போல் வரம் கொடுத்தேன்" என்று சொல்லி, பிராமணனைப் பிழைப்பித்து "மற்றொருவரமும்கேள்" என்றுசொன்னாள். அப்போது அரசன் மிகவும் சந்தோஷப்பட்டு காளியை நமஸ்கரித்து "லோகமாதாவே! எங்கள் மூவருக்கும் நித்தியானந்த பதவியை அநுக்கிரகிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான் "அதுபோல் அநுக்கிரகித்தேன்" என்று சொல்லி பரம பவித்திரமாகிய தாரக மந்திரத்தை மூவருக்கும் காளிகாதேவி உபதேசஞ்செய்து "இந்த மந்திரத்தை பக்திபூர்வகமாய் நிரந்தரம் அநுஷ்டித்துவருவீர்களாகில் சந்தேகமில்லாமல், நீங்களெல்லோரும் சத்கதியை அடைவீர்கள்" என்றுசொல்லி அந்தர்த்தானமானாள்.

இம்மூவரும் உபதேசம்பெற்று பரமானந்தமடைந்து தன் ராஜ்ஜியம்போய்ச் சேர்ந்து "இன்றுமுதல் தமது தேசத்தில் யாராகிலும் ஜீவ இம்சைசெய்வார்களாகில், அவர்களைப் பத்திரகாளிக்குப் பலிகொடுக்கப்படும்" என்று தேசமெங்கும் பறைபறைவிக்கும்படிச் செய்வித்து ஜீவகாருண்யவிரதம் மிகவும் நீதியுடன் அனுஷ்டித்துக்கொண்டு தர்மம் தவறாமல் ராஜ்ஜியபரிபாலனம் பரிபாலித்துவந்து கடைசியில் தாரகமந்திர பிரபாவத்தினால், அம்மூவரும் பரமபதத்தை அடைந்தார்கள். ஆதலால், அஹிம்சையை விட பரமோத்கிருஷ்டமான தர்மம் வேறொன்றில்லை, நிஷ்டையுடன் இந்தவிரதத்தை அனுஷ்டித்து வரப்பட்டவர்களுக்கு மோக்ஷசித்தி சுலபமாய்லபிப்பதற்கு யாதொரு சந்தேகமேயில்லை என்று பூததயையைக்குறித்து பல விதங்களாய் உபந்நியாசஞ்செய்தார். அப்போது தமால் மிகவும் பரமானந்தமடைந்து கபீரை ஆலிங்கனஞ்செய்து "நாயனா! உன் மிருதுவசன வாக்கியங்களைக் கேட்டபிறகு சன்மார்க்கத்திற்கு வராத துன்மார்க்கர்களும் இருக்கின்றார்களா" என்றுசொல்லிக் குமாரனையும் மருமகளையும் பாரியாளையும் அழைத்துக்கொண்டு தன் வீடுசேர்ந்து அஹிம்சா விரதம்பூண்டு பகவன் நாமஸ்மரணை செய்துகொண்டு காலங்கழித்துவந்தார்கள். அப்போது, அனுக்கர்களெல்லாம் கபீர் சொல்லிய வாக்கியங்களெல்லாம் சத்தியமானதென்று நம்பி ஜீவஇம்சை செய்வதைவிட்டு சகல பூதங்களிடம் தயையுண்டாய் தருமத்தை அனுஷ்டித்து வந்தார்கள்.

பகவான் கபீரை பரீக்ஷித்தல்.

பிறகு கபீர் எப்பொழுதும் சாதுஜனங்களை சேவை செய்து, அவர்களுக்காகத் தன்தந்தை எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சம்பாதித்துவைத்த திரவ்வியங்களையெல்லாம் செலவுசெய்து, மிகவும் ஏழையாய் பிறகு அன்றன்று நெய்துவரும் வேஷ்டிகளின் லாபத்தால் அன்றன்று ஜீவனம்செய்து வந்தார். பிறகு ஓர்நாள் வேஷ்டிகள் விற்காமல்போனதனால் அன்றிரவு வீட்டிலுள்ளவர்களெல்லோரும் பட்டினியாயிருந்தார்கள். அப்போது பகவான் கபீரினுடைய மனதைச் சோதிப்பதற்காக நூறுபேர் சாதுக்களைத் தன்னுடன்கூட அழைத்துக்கொண்டு அவர்களுக்கெல்லாம் தான் நாயகனாயிருந்து புறப்பட்டு "ஜய சீதாராம், ஜயசீதாராம்" என்று சொல்லிக்கொண்டே கபீர்வீட்டிற்குவந்து "ஐயா! நாங்களெல்லோரும் இன்று காலையிலிருந்து தாகசாந்தியும்செய்யாமல் உபவாசமாயிருக்கின்றோம். இது, இராக்காலமாயிருப்பதால், யாரையும் யாசகம்கேட்க சரிப்படவில்லை. இவ்விடத்திலுள்ள ஜனங்களெல்லோரும் உன்னை மிகவும் தருமப்பிரபுவென்று புகழ்ந்தபடியால், கேள்விப்பட்டு உன்னிடத்திற்கு வந்தோம். ஆதலால், நீ தயைசெய்து இப்பொழுது எங்கள் பசியைத்தணித்துப் புண்ணியம் சம்பாதித்துக்கொள்ள வேண்டும்" என்று மாயா வேஷதாரியாகிய பகவான் கேட்டனர். அப்போது கபீர் மிகவும் சந்தோஷத்துடன் சாதுக்களையெல்லாம் ஆதரித்து வீட்டில் ஓரிடத்தில் அவர்களையெல்லாம் உட்காரச்செய்து தான் உள்ளேசென்று தன் பாரியாளைக்கூப்பிட்டு "சுந்தரா! இன்று பகவான் நம்மைப்பரீக்ஷிக்க எண்ணினார்போல் காணப்படுகின்றது;

ஜனனீ ஜனகர்களும் பசியுடன் துரவஸ்தைப்பட்டுக்கொண்டிருப்பதுடன்கூட இந்த சந்தர்ப்பத்திலேயே வழிநடந்து மிகவும்களைத்த அனேக சாதுக்கள் பசியுடன்வந்திருக்கின்றார்கள். இப்படிப்பட்டசந்தர்ப்பத்தில் அவர்களைச் சும்மாய் அனுப்பிவிடுவது கிருகஸ்த்தாசிரம தருமமல்ல. பஞ்ச பக்ஷண பாயாசங்களுடன் அவர்களை ஆதரிக்க சக்தியில்லாவிட்டாலும் கொஞ்சம் ரொட்டியாகிலும்கொடுத்து சந்தோஷப்படுத்தி அனுப்பவேண்டும். பசியுடன் தன் கிருகத்திற்குவந்த அதிதிகளை ஆதரித்து அனுப்பாத கிருகஸ்தர்களுக்கு நல்லகதியில்லை என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், உன்னிடத்தில் ஏதாகிலும் ஓர் நகை இருக்கும்பக்ஷத்தில் அதை விக்கிரயம் செய்து இந்த சாதுக்களுக்குச் சந்தர்ப்பணைச் செய்து சந்துஷ்டியை உண்டாக்கலாம்” என்று கபீர் சொல்லினர். அதற்குச் சுந்தரா, நாயகனைப்பார்த்து “பிராணேஸ்வரா! தங்களுக்குத்தெரியாமல் ஓர்நகையும் ஒளித்துவைத்திருக்கின்றேனா? வீட்டையாகிலும் கொதுவைவைத்து யாரிடமாகிலும் வாங்கலாமென்றாலும் இது அதுவரையிலேயே கொதுவையிலிருக்கின்றது. மாங்கல்யத்தையாகிலும் விற்பனைச் செய்யலாமென்றால் அது, முன்பே விற்றாய்விட்டது. ஒரு சாதுவிற்கு வேண்டிய பதார்த்தங்களைச் சம்பாதிக்கும் அவ்வளவு நகையும் என்னிடத்திலில்லை. இதற்கு நான் என்னசெய்வேன்” என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டு சிலநேரம் யோசித்து நின்று பிறகு நாயகனைப் பார்த்து “பிராணநாதா! நான் பிரதிதினம் கடைக்குச் சென்று வரும்போதெல்லாம் ஒருவர் என்மீது கண்வைத்து நகசிகபரியந்தம் ஏற இரங்கப்பார்த்து சிறித்துக்கொண்டு சிறுகல்லால்போட்டு சைகைசெய்வதுண்டு. இந்தச்சமயத்தில் என்னை அவருக்கு விற்பனைச் செய்வீராகில் சாது

சந்தர்ப்பணைக்கு வேண்டிய சாமான்களை நிர்ப்பயமாய்ச் சம்பாதிக்கலாம்” என்றுசொல்லி, மறுபடியும் பிராணவல்லபா! பூர்வம் நவகண்டத்தை ஆண்டுவந்த அரிச்சந்திரன் விஸ்வாமித்திரனுக்குச் சமர்ப்பிக்கவேண்டிய நிமித்தம் தன் புத்திர களத்திரங்களை விற்பனைசெய்து தானும் ஓர் பறையனுக்கு அடிமையாகவில்லையா? இப்படிச் செய்வதனால் தருமத்திற்கு லோபத்துவம் உண்டாகமாட்டாது. இப்பொழுது இதைவிட வேறு உபாயமொன்றுமில்லை. இதற்குமேல் தங்களிஷ்டமென்றுசொன்னாள்.

கபீர் தன் பாரியாளை துளஸீதாஸனிடம் கொண்டுபோய் விடுதல்.

கபீர் அதைக்கேட்டவுடன் மிகவும் சந்தோஷித்து பாரியாளின் நற்குணத்திற்காக மிகவும்மெச்சி “சுந்தரா! சமயத்திற்குத் தக்கபடி நல்ல உபாயமேசொன்னாய், இப்பொழுது நேர்ந்திருக்கும் ஆபத்திற்கு இதைவிட வேறே உபாயம் காணவில்லை. ஜனனீ ஜனகர்களும் சாது சிகாமணிகளும் பொறுக்கமுடியாத பசியினால் வருந்துகின்றார்கள். இப்பொழுது அவர்களின் பசியைத்தணித்து ஆதரிப்பது முக்கியமானதர்மம். நீ இப்பொழுது சொல்லிய வர்த்தகனிடம் சென்றுபேசி காரியத்தைப் பூர்த்திசெய்து கொண்டுவருவோம் வா” என்று பாரியாளை அழைத்துக் கொண்டு கடைக்குச்சென்றார். அப்போது கடைகளெல்லாம் மூடப்பட்டதுகள். ஆனால், சுந்தராவை மோகித்தவன் கடைமாத்திரம் மூடப்படவில்லை. அப்போது சுந்தரா தன் நாயகனைப்பார்த்து “பிராணவல்லபா! என்னைமோகித்தவர் இவரே” என்று அந்தக் கடைவர்த்தகனை குறிப்பிட்டுக்

காட்டினாள். அப்போது கபீர் வர்த்தகனிடம் சுந்தராவை
அழைத்துக்கொண்டுபோய் வர்த்தகன் சமீபமாய் நின்று
வர்த்தகனை நமஸ்கரித்து "ஐயா! இவள் என் பாரியாள்;
இவள்மீது நீர் ஆசைப்பட்டதாய்க் கேள்விப்பட்டேன்.
நூறுபேர் சாதுக்களுக்கு வேண்டிய பதார்த்தங்கள்
கொடுப்பீராகில் இன்றைய இரவெல்லாம் உமது சுவா
தீனம்செய்கின்றேன். உம்மிஷ்டத்தைப் பூர்த்திசெய்துக்
கொள்ளலாம். இதற்கு உமது அபிப்பிராயமென்ன?"
என்று கபீர் கேட்டனர். அவ்வார்த்தையை வர்த்தகன்
கேட்டவுடனே கும்பிடப்போனதெய்வம் குறுக்கே
வந்ததுபோலாயிற்று என்றெண்ணி அந்தவர்த்தகன் மிக
வும் சந்தோஷித்து அதுவரையில் அவள்மீதிருந்த மோகத்தி
னால் கண்கள் காணாமல் யுக்தா அயுக்தங்களையும் விசாரிக்க
அவகாசமில்லாமல் துரிதப்பட்டு கபீரைப்பார்த்து "ஐயா!
இந்த சுந்தரீரத்தினம் ஒருமுறை என்னுடன் போகித்தால்
போதுமானது; நீங்கள் கோரியதற்குப் பதின்மடங்கு
அதிகமாய்க் கொடுக்கின்றேன்" என்றுசொன்னான். காமத்
திற்குக் கண்ணில்லை; காமிகளுக்குப் பயம் வெட்கம் நாணம்
இல்லை யென்னும் வசனம் சத்தியமே! அதற்குக் கபீர்
வர்த்தகனைப்பார்த்து "ஐயா! ஒருமுறை என்பதேதென்ன
இவளை இரவெல்லாம் உம்மிடத்திலேயே வைத்துக்கொண்டு
உம்மிஷ்டம்போல் இருக்கலாம்; காலையில் மெதுவாய்
அனுப்புங்கள். இதற்காகநீங்கள் சந்தேகப்படவேண்டாம்"
என்றுசொல்லி சாதுக்களுக்கு வேண்டுமானவரையில்
சாமக்கிரியைகளைப் பெற்றுக்கொண்டு, "இன்னும் சற்று
நேரத்திற்குள் இவளை அழைத்துக்கொண்டு வருகின்றே"
னென்று, வாக்குத்தானஞ்செய்து வர்த்தகனைச் சமாதானப்
படுத்தி பாரியாளை அழைத்துக்கொண்டு வீட்டிற்குவந்து
சீக்கிரமாய் சமையல்செய்வித்து, சாதுக்களுக்கெல்லாம்

வட்டித்து அவர்களெல்லாம் நன்றாய்ப் புசித்துத் திருப்தி
யடைந்தபிறகு, தான் மறுபடியும் வரும் வரையில் தாய்
தந்தைகளை அவர்களுக்குச் சேவைசெய்யும்படிச் சொல்லி
விட்டு, சாதுக்களிடம் செலவுபெற்றுக்கொண்டு, புருஷ
னது அனுமதியின்படி ஸ்நானம்செய்து, நல்ல சேலையைக்
கட்டி தயாராயிருக்கும் பாரியாளைக் கபீர் அழைத்துக்
கொண்டு, மிகவும் சீக்கிரமாய் வர்த்தகன் வீட்டிற்குச்
சென்றார். இதற்குள் வர்த்தகனும் அதிசீக்கிரமாய்ச் சாப்
பிட்டு தன் படுக்கை வீட்டை மிகவும் சுத்தமாய் அலங்
கரித்து, சம்பங்கி மல்லி முல்லை இருவாக்ஷி ரோஜா குருவேர்
கதிர்பச்சை தவனம் மருவு முதலாகிய புஷ்பங்களும்,
அத்தர் புனுகு,ஜவ்வாது முதலாகிய சுகந்த வாசனைத் தினுசு
களும், குங்குமப்பூ பச்சைக்கர்ப்பூரம் பச்சைஅத்தர்பில்லை
களுடன் கலந்த சந்தனமும் தயார்செய்து குளோப் வால்
ஷேட்டுடன் விளக்குகளைப் பிரகாசிக்கச்செய்து தயாராய்
வைத்து மிகவும் சுகந்தமான பாக்குத்தூள் நல்லவெற்றிலை
களையும் கிழித்துமடித்துவைத்துத் தானும் நன்றாய் அலங்
காரஞ்செய்துகொண்டு சுந்தரா வரவிற்காக எதிர்பார்த்
திருந்தான். இந்தவர்த்தகன்பெயர் துளசிதாஸ் ஐஸ்வரி
யத்தில் இவனுக்குச் சமானமானவர்கள் அவ்வூரில் யாரு
மில்லை. அவ்வூரிலுள்ள வர்த்தகர்கள்எல்லோரும் எல்லா
வஸ்துக்களையும் இவனிடமிருந்து வாங்கிக்கொண்டுபோய்
லாபத்திற்கு விற்பதுண்டு. இப்படிப்பட்டவனிடம் கபீர்
தன் பாரியாளை அழைத்துக்கொண்டுபோனவுடன், வர்த்த
கன்பார்த்து சந்தோஷத்தினால்பொங்கி தன் பெட்டியைத்
திறந்து அனேகஆயிரம்விலையுள்ள ஓர் பெரிய ஆரத்தை
எடுத்துக் கபீர்கழுத்தில் போடச்சென்றான். அதைப்
பார்த்து, கபீர் திடுக்கிட்டு பின்னுக்கு நாலடிச் சென்று
"ஐயா! இது, எனக்கேன்? சாதுசந்தர்ப்பணை விஷயமாய்

இதுவரையில் நீர் எனக்குச்செய்த உபகாரமே சுமக்கத் தகாத பாரமாயிருக்கின்றது, இந்தருணம் எப்பொழுது தீர்த்துக்கொள்வேனோவென்று துக்கப்பட்டுக் கொண்டிருக்க அதுபோதாதென்று இந்தப் பாரத்தையும் என்மீது சுமத்த யோசிக்கின்றீர். அப்பப்பா! என் ஆயுள் உள்ள வரையில், உமக்கு சேவைசெய்தாலும் நீர் இப்பொழுது செய்த மஹோபகார ருணம் தீராது. இதையும் பெற்றுக் கொண்டால், இன்னும் சொல்லவும்வேண்டுமோ? இது எனக்குவேண்டாம். நான் சொல்லியதுபோல் என் பாரியாளை உனக்கு ஒப்புவித்தேன்; அவசரப்படாமல் உம் மனோபீஷ்டத்தை பூரணமாய்நிறைவேற்றிக்கொள்ளு'' என்று சொல்லி பாரியாளைப்பார்த்து "ஸ்திரீரத்தினமே! இன்று இராத்திரி நீ இவர்இஷ்டம்போலிருந்து நடந்துகொள்ள வேண்டும்; எந்த விஷயத்திலும் லோபமில்லாமல் மிகவும் ஜாக்கிரதையாயிருந்து இவரை சந்தோஷிக்க வேண்டு''மென்று உத்தரவுசெய்து வர்த்தகனிடம் செலவு பெற்றுக் கொண்டு தன்வீடுசேர்ந்து ஜனனீ ஜனகர்களை நமஸ்கரித்து சாதுக்களைச் சேவைசெய்துகொண்டு சந்தோஷமாய் உட்கார்ந்து பகவந்நாம சங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டிருந்தார். இங்கு இப்படியிருக்க,

வர்த்தகன்வீட்டில், வர்த்தகன் மன்மதபாணங்களுக்குச் சகிக்காமல் சுந்தராவுடன் சம்போகஞ்செய்ய நினைத்திருந்தானேயொழிய பதிவிரதா சிரோன்மணியாகிய சுந்தராவின் சத்பிரவர்த்தனைகளைக்குறித்து மனதில் நினைத்தவனல்ல. சர்வபோகத்திற்கு துப்தனும், பரமபத சாம்ராஜ்ஜியத்திற்கு ராஜனும், திரௌபதிதேவிக்கு கீசகனும், தமயந்திக்கு வேடனும், புரூரவன்பத்தினிக்கு வர்த்தகனும் மோஹித்ததுபோல் இந்த வர்த்தகன் சுந்தராதேவியை மோஹித்து நின்றான். பதிவிரதாதேவியாகிய சுந்தரா

தேவியை வர்த்தகன் கண்டவுடன் மிகவும் ஆனந்தமடைந்து அவள்மீதிருக்கும்பிரேமையையெல்லாம் வெளிப்படுத்த எண்ணி மிருது மதுரவசனங்களால் "சுந்தரீரமணீ! உன் பொற்பாதகமலங்கள்நோகும்படி ஏன் அங்கு நின்றிருக்கின்றாய்? தயைசெய்து கட்டிலின்மேல்வந்து உட்காருவா'' என்று சொல்லிக்கொண்டே எழுந்திருந்து சென்று தெருக்கதவைத் தாள்போட்டு பின்னுக்குத்திரும்பினான். இதற்குள் பகவான் கிராமாதிகாரியாகிய கொத்தவால் வேஷம்போட்டுக்கொண்டுவந்து கம்பீரமான கண்டசுரத்துடன் "யாரடா! கதவைச்சாத்தினவன்? சீக்கிரமாய்க் கதவைத்திற; திறக்காவிட்டால் உன்னை என்ன செய்கின்றேனோபார். மானமாயிருக்கப்பட்டவளை உள்ளே வைத்துக்கொண்டு அவளை மானபங்கஞ்செய்ய ஏற்பட்டாயா? இப்படிப்பட்ட துர்மார்க்ககாரியத்தைச்செய்து தப்பித்துக்கொள்ள இது ராமராஜ்ஜியமென்று அறியாயா'' என்று ஓவென்றுகூச்சலிட்டுக் கதவுபிளக்கும்படி தன் கையினால் தபதபவென்று கதவைத்தட்டினார்.

இதைக்கேட்டவுடன் வர்த்தகன் மிகவும்திகிலடைந்து சுந்தராதேவியைக் கட்டிலின்கீழ் புகும்படிச் சைகை செய்து தான்சீக்கிரமாய்ச் சென்றுக் கதவைத்திறந்து வெளியில்சென்று நான்கு பக்கங்களிலும்பார்த்து வெளியில் யாருங்காணாததால், மிகவும்அதிசயப்பட்டு, மறுபடியும்உள்ளேசென்று கதவைத்தாள்போட்டுச் செல்லும்போது, மறுபடியும் பகவான் முன்னைவிட அதிகமாய் கூச்சலிட்டுக் கதவை விசேஷமாய்த்தட்டினார். உடனே வர்த்தகன் அவசரப்பட்டு ஓடி கதவைத்திறந்து வெளியே சென்று நான்கு பக்கங்களிலும் பார்த்தான். அங்கு தன் கண்களுக்கு யாருந்தென்படவில்லை. அப்போது வர்த்தகன் முன்னைவிட அதிகஆச்சரியப்பட்டு, "இரண்டுமுறை

கள் இவ்விதமாய் ஆவதற்குக்காரணம் என்னமோதெரியவில்லை'' என்று தனக்குள்தான் எண்ணிக்கொண்டு காமவிகாரம்தலைக்கேறி இருப்பதனால், விஷயத்தைச் சரியாய் விசாரிக்க அவகாசமில்லாமல், மிகவும்ஆசையுடன் சுந்தராதேவியை ஆலிங்கனஞ்செய்யப்போனான். இதற்குள் பகவான் முன்போலவே வந்து தெருக்கதவைக் காலினால் உதைத்துத்தள்ளி, உள்ளேநுழைந்து வர்த்தகன்மீது விழுந்து, தவடையில் ஓர்அறைஅறைந்து, காலினால் உதைத்து, ''அடேதுன்மார்க்கா! உனக்கெவ்வளவு கொழுப்புப் பிடித்திருக்கின்றதடா! குருபாரியாளும், தமயன் பாரியாளும், சத்புருஷர்களின் பாரியாளும் மாதாவிற்குச் சமானமென்று அறியாயா? ஆஹா! மாத்ருகாமீ! பதிவிரதா திலகத்தைக் காமவிகாரப்பார்வையினால் பார்த்த உன்கண்களைப்பிடுங்கிவிடுகின்றேன்; ஆலிங்கனஞ்செய்யச் சென்ற உன்புஜங்களைக் கண்டித்துவிடுகின்றேன்; சுந்தரீ ரமணி என்றுசொன்ன உன்நாக்கை அறுத்துவிடுகின்றேன்; பார்'' என்றுசொல்லிக் குடுமியைப்பிடித்துக் கீழேகுனியவைத்து முதுகில் தபதபவென்றுகுத்தஆரம்பித்தார். அப்போது, அந்தவர்த்தகன் அடிகளாலும் பயத்தாலும் ஸ்மரணைதப்பி மூர்ச்சையாய்க் கீழேவிழுந்தான். பகவான் கட்டிலின்கீழிருந்த சுந்தராதேவியின்கையைப் பிடித்து வெளியில்இழுத்துவந்து நிமிஷமாத்திரத்தில் கபீர் வீட்டினிடம்விட்டு மாயமாய் மறைந்துவிட்டார். அவர் சென்றவுடனே பகவானது ஆஞ்ஞையினால் பெருத்தகாற்று மழையுண்டாய் பயங்கரமாகிய மின்னல் இடியுடன் வெளியில் தலைகாட்டவிடாமல், மிடாவில்மொண்டுக் கொட்டுவது போல் மழைப்பெய்யஆரம்பித்தது. அப்போது சுந்தரா மிகவும்வருத்தப்பட்டு ''ஐயோ! நல்லசமயத்தில்சகாயம் செய்து நம்முடைய இச்சையை நிறைவேற்றிய வர்த்தகனுக்கு இப்படிப்பட்டதுரவஸ்தை விருதாவாய்ச் சம்பவித்ததேயல்லவா? ஆஹா! இதற்கென்னசெய்வேன்! இந்த விஷயத்தை என்னவென்று நான் எனதுநாயகனிடம் சொல்லுவேன்! இதைக்கேட்டபோதிலும் அவர் என்ன சொல்வார்'' என்று அச்சமடைந்து பிறகு தைரியத்துடன் மெதுவாய் உள்ளேசென்றாள். அப்போது சாதுக்களுக்கு உபசாரணைசெய்துகொண்டு மிகவும் சந்தோஷமாய் உட்கார்ந்திருக்கும் கபீர், சங்கோசப்பட்டுக்கொண்டுவந்த தன் பாரியாளைப்பார்த்து மிகவும்கோபத்துடன் வெளியே அழைத்துச்சென்று ''அடி! வர்த்தகனைமோசஞ்செய்து நீ இவ்வாறுவருவது தர்மமா? ஆஹா! என்னைப் பொய்யனாய்ச்செய்ததுமல்லாமல், உன் பதிவிரதா தர்மத்தையும் போக்கடித்துக்கொண்டாயல்லவா! இப்படிப்பட்ட துர்மார்க்கியென்றறியாமல், இந்தக் காரியத்தில் நான் பிரவேசித்துக் கோரமாகியபாபத்தைச் சம்பாதித்துக்கொண்டேன். பஞ்சமஹா பாபங்களுக்குப் பிராயச்சித்தம் உண்டேயொழிய, அசத்தியத்தினால்உண்டாகும் பாபத்திற்குமாத்திரம் பிராயச்சித்தம் உண்டென்று எந்தசாஸ்திரத்திலும் சொல்லவில்லை. ஓர் சத்தியத்தை நிறுத்திக்கொள்வதற்காகவேயல்லவா பூர்வம் அரிச்சந்திரன் படாத கஷ்டங்களையெல்லாம் பட்டு, கடைசியில் பாரியாளின் கழுத்தையும் வெட்டத்துணிந்தான். ஓர் சத்தியத்திற்காகவேயல்லவா தசரதனும் கர்ணனும் பிராணன்களைவிட்டார்கள். பரமசிவன் பத்மாசுரனுக்குப்பயந்தோடினதும், பிராணமித்திரனாகிய கிருஷ்ணமூர்த்தி அர்ஜுனனுடன் யுத்தசன்னத்தனானதும் ஓர் வார்த்தைக்காகஅல்லவா? வாக்குத் தப்பியபிறகு ஜீவிப்பதனால் லாபமென்ன? அடி பாபீ! இவைகளையெல்லாம் கேட்டவளாயிருந்தும் கடைசியில் துர்மார்க்கத்திற்கு மடிகட்டினாய். சீ! சீ! இனி உன்

முகதரிசனமுஞ்செய்யலாகாது. இங்கிருந்தோடிப்போ; இனி என்முன்னில்லாதே'' என்றுநிந்தித்தார்.

அப்போது சுந்தராதேவி மிகவும்பயத்துடன் பதிபாதத்தில்விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று "சுவாமி! தயைசெய்து சாந்தம்வகித்து என்வாக்கைச் சற்றே கவனித்துக் கேழ்ப்பீர்களாக; சத்புத்திரர்களுக்கு ஜனனீ ஜனகர்களே முக்கியதெய்வமென்றும், சத் சிஷ்யர்களுக்கு ஆசாரியரே முக்கிய தெய்வமென்றும், சத்தியமுடைய ஸ்திரிகளுக்கு பர்த்தாவே தெய்வமென்றும், சத் புருஷர்களுக்கு பிதுர் வாக்கியமே சத்தியமென்றும், சத்தியமுடைய ஸ்திரீகளுக்குச் சத்தியமே பிரதானமானதென்றும் திடமாய் அறிந்தவளா யிருந்தும், தங்கள் ஆஞ்ஞையை மீறிநடப்பேனோ? தாங்கள் என்னை அந்தவர்த்தகனிடம் ஒப்பிவைத்து வந்தவுடன் ஓர் நிமிஷத்திற்கெல்லாம் எவ்விதத்தினாலேயோ இந்த ரகசியங்களை எல்லாம் கொத்தவால் அறிந்து, மிகவும் கோபத்துடன் வர்த்தகனைப்பிடித்து அடித்து எலும்புகளையெல்லாம் நுறுக்கி மூர்ச்சையாகும்படிக் கீழே தள்ளி என்கையைப்பிடித்து இழுத்துக்கொண்டுவந்து நம்வாசற்படியில்விட்டுச்சென்றுவிட்டார். இதற்கு நான் என்செய்வேன். நமது நியமத்திற்கு அனியாயமாய்ப் பங்கம்நேரிட்டது'' என்று கண்களில் ஜலம் ஆறாய்ப்பெருக அழுதுநின்றாள்.

அவ்வார்த்தைகளைக் கபீர்கேட்டவுடன் உள்ளே சென்று ஓர்பெரியதடியை எடுத்துக்கொண்டு மிகவும் கோபத்துடன் புறப்பட்டு "என் பாரியாளை நான் யாரிடமாகிலும் அனுப்புகிறேன். இதில் கொத்தவாலுக்கு என்ன சம்பந்தமிருக்கின்றது. இனி இப்படிப்பட்ட காரியங்களில் பிரவேசிக்காமல் தக்க தண்டனையைச் செய்யவேண்டும்'' என்றுசொல்லிக்கொண்டே பாரியாளைத் தன்னுடன் கூட

அழைத்துக்கொண்டு மழையில் நனைந்துகொண்டே சீக்கிரமாய்க் கொத்தவால்வீட்டிற்குச்சென்று வாசற்படியில் நின்று தடியால்கதவைப்பிளந்து "அடே துன்மார்க்கா! உனக்குக் கொத்தவால் வேலையைக் கொடுத்தவன் யாரடா! வெளியேவா; நான் மனப்பூர்வகமாய் என் பாரியாளை வர்த்தகனுக்கு ஒப்பிவித்திருக்க நீ நிர்நிமித்தமாய்ச்சென்று தடுத்து அவரைப் பிராணன் போகும்படி அடித்து வருவதற்குக்காரணமென்ன? சீக்கிரமாய் நீ வெளியில் வந்தாலாயிற்று, இல்லாவிட்டால் இந்தத்தடியால் உன்னைச் சூரணஞ்செய்துவிடுகிறேன்'' என்று கெட்டியாய்க் கூச்சலிட்டார். அப்போது காடாந்தநித்திரையிலிருக்கும் கொத்தவால் கபீரினுடைய கூச்சலினால் திடுக்கிட்டெழுந்து, கண்களை நிமிட்டிக்கொண்டு வெளியில்ஓடிவந்து தோள்மீது தடியுடன் வாசற்படியில் நின்றிருக்கும் கபீரை ஏற இறங்கப் பார்த்து, கபீரென்று தெரிந்துகொண்டு மிகவும் பக்திபூர்வகமாய் அவர் பாதத்தில்வீழ்ந்து "சுவாமீ! நிர்ஹேதுவாய் நீர் என்மீது இவ்வளவுகோபம்செய்வதேன்? எனக்கு யாதொருசங்கதியும் தெரியவராது; மன்னிக்கவேண்டும். தங்களுக்குச் சந்தேக மிருக்கும்பக்ஷத்தில் அந்த வர்த்தகனை விசாரித்துவருவோம் வாருங்கள்'' என்று சொல்லி உள்ளேசென்றுஉடுப்புகளைப்போட்டுக்கொண்டு கபீருடன் கூட துளஸீதாஸ் வீட்டிற்குச்சென்று மூர்ச்சையாய் கீழே விழுந்துகிடக்கும் வர்த்தகனைச் சைத்தியோபசாரங்களால் மூர்ச்சை தெளிவித்து "சங்கதிஎன்ன'' வென்று கொத்தவால்கேட்டான்.

அப்போது வர்த்தகன் கண்களைத் திறந்துப்பார்த்து உடுப்புகளுடன் வந்திருக்கும் கொத்தவாலைக்கண்டு மிகவும் பயந்து தன்னை நியாயாதிபதியிடம் அழைத்துச்செல்ல வந்தானென்று திகிலடைந்து "ஐயா! என்னை மன்னிக்க

வேண்டும்; அவிவேகத்தினால் இப்படிப்பட்ட துஷ்டகாரியத்திற்குப் பிரயத்தனப்பட்டேன். இனி என் தேகமிருக்கும்வரையில் இப்படிப்பட்ட துஷ்டகாரியத்திற்குப் பிரயத்தனப்படமாட்டேன். தயைசெய்து இந்தமுறை மன்னித்து ரக்ஷிக்கவேண்டும். இப்பொழுது இந்த ஆபத்திலிருந்து என்னைத் தப்பித்தால் நீர் கேட்ட அவ்வளவு பொருள் கொடுக்கின்றேன்'' என்று மிகவும் தீனசுரமுடன் வேண்டிக்கொண்டான். பிறகு கொத்தவாலைப்பார்க்கப் பார்க்க பயம் அதிகரித்தபடியால், ஸ்மரணைதப்பி மறுபடியும் கீழேவிழுந்தான். அப்போது கபீர் காலாந்தருத்திரனைப்போல் கோபித்துக் கொத்தவாலைப் பார்த்து "அடே துன்மார்க்கா! இதுவரையில் என்னிடம் இந்த விஷயம் எனக்கொன்றும் தெரியாதென்று உளரினாயல்லவா! நீ முன் வந்திருந்து இந்தவர்த்தகனை அவ்வாறுசெய்திராவிட்டால் இப்போது உன்னைப்பார்த்தவுடன் இவ்வாறு பயப்படுவதேன்? நீ செய்ததப்பிதத்திற்கு இதோ இவர்களிருவர்களே சாக்ஷியாயிருக்கின்றார்கள் ஆதலால், உன்னை இந்தத்தடிக்கு இரையாக்காமல்விடேன்'' என்றுசொல்லி மிகவும்கோபாவேசனாய் தோள்மேலிருந்த தடியை நோக்கித் தன்பலம் கொண்டமட்டும் சிரசின்மீது போடச் சென்றான். இதற்குள் தயாசமுத்திரனான ஸ்ரீ ராமபத்திரன் பிரசன்னனாய் நடுவேநின்று தடியைப்பிடித்துக்கொண்டு "கபீர்! அதிக ஆத்திரத்துடன் நிர்தோஷியாயிருக்கும் கொத்தவாலை ஏன் அனியாயமாய் அடித்துக் கொல்லுகின்றாய்? இவனிடத்தில் தோஷம் எவ்வளவேனும் இல்லவேயில்லை. அடிக்கவேண்டுமென்று இஷ்டமிருந்தால் என்னையடித்து உன் விரோதத்தைத் தீர்த்துக்கொள்'' என்று கபீர்முன் குனிந்து முதுகைக்காட்டினார்.

அப்போதுகபீர் தன்முன் குனிந்திருக்கும் பகவானைப்பார்த்து சகல லோககர்த்தனாகிய ஸ்ரீராமமூர்த்தி என்று தெரிந்துகொண்டு கையிலிருந்த தடியை எறிந்துவிட்டு பக்திபூர்வகமாய்ப் பிரதக்ஷிணம்வந்து சாஷ்டாங்கமாய்விழுந்துநமஸ்கரித்து எழுந்துநின்று இருகைகளையும் குவித்து அஞ்சலிஅஸ்தராய்நின்று "புராணபுருஷோத்தமா! உன்மாயை உனக்கேயன்றி இதரர்கள் அறிய சாத்தியமாகுமோ? ஆஹா! எவ்வளவு அதிசயத்தை உண்டாக்கினாய்! அடியேனுக்காக கொத்தவால்ரூபத்தைத் தரித்தாயா! கொத்தவால்ரூபத்தைத்தரித்து வர்த்தகன்மீது மிகவும் கோபித்து அவனைசிக்ஷித்து சுந்தரர்மானத்தை ரக்ஷித்தாயல்லவா? உன் தயாரசம் என்னவென்றுசொல்லலாம். பூர்வம் நீ திரௌபதீதேவியின் மானத்தைக்காப்பாற்றினதாய் இதுவரையில் புராணங்களில் கேட்டதேயொழிய பிரத்தியக்ஷமாய்க்கண்டதில்லை. அது விஷயம் இப்போது பிரத்தியக்ஷமாய்க் கண்டோம். உன்கிருபாகடாக்ஷம் எங்கள்மீது எப்போதும் இவ்வாறிருக்க இனி எங்களுக்குக் குறைவென்னஇருக்கின்றது. உன்கையினால் அடியும், காலினால்உதையும் படுவதற்கு இந்தவர்த்தகன் பூர்வஜன்மத்தில் என்ன புண்ணியஞ்செய்தானோ தெரியவில்லை. சராசர பிரபஞ்சத்தையெல்லாம் சிக்ஷிக்கத்தக்க நீ, என்னை சிக்ஷிக்கவேண்டுமென்று என்முன் குனிந்துநின்று முதுகைக்காட்டினாய். இதைப்பார்த்தால் மிகவும் ஆச்சரியகரமாயிருக்கின்றது. உலகத்தில் உன்னை சிக்ஷிக்கத்தக்க அவ்வளவு தீரனும்இருக்கின்றானோ? என் குற்றத்தை மன்னித்து என்னை ரக்ஷிக்கவேண்டும்'' என்று வெகுவிதங்களாய்ப் பிரார்த்திக்கத்தொடங்கினார். அவ்வார்த்தைகளுக்கு ஸ்ரீ ராமமூர்த்தி மந்தஹாஸம்செய்து "கபீர்! நீ இவ்வளவு விவேகமுடையவனாயிருந்தும் நீச காரியங்க

ளுக்கெல்லாம் அதி நீசகாரியமாகிய இப்படிப்பட்டவிஷ
யத்தில் நீ பிரவேசித்ததைப்பார்த்தால் மிகவும்ஆச்சரிய
கரமாயிருக்கின்றது. உலகத்தில் எவனாகிலும் தன்பாரி
யாளைத் தீண்டியதைப்பார்த்தால் சஹித்துக்கொண்டு
சும்மாயிருப்பானா? அப்போதே அவனை வெட்டப்பார்ப்
பானல்லவா? உன்னைப்போல் மானாவமானங்களில் கொஞ்ச
மேனும் பற்றில்லாமல் தன் பாரியாளைக் கூட்டிக்கொடுக்
கும் பௌரஷமில்லாத புருஷனும் ஒருவனிருக்கின்றானா?
ஆனால் பரமசிவன் தன் பாரியாளை அந்நியனுக்குக்கொடுக்க
வில்லையாஎன்று யோசிக்கின்றாயாஎன்ன? அவர் தன் பத்தி
னியைக்கொடுக்கும்படி பிரார்த்தித்தபடியால் கொடுத்தாரே
யொழிய, உன்னைப்போல் தன்பாரியாளை ஒருவன் இச்
சித்தானென்னும் சங்கதியைக் கேள்விப்பட்டு அவளை
பலவந்தமாய்க்கொண்டுபோய் போகிக்கவேண்டுமென்று
அந்நியனுக்கு ஒப்பித்து வந்தவரல்ல. ஆஹா! பரமபதி
விரதா ரத்தினத்தை ஒருநிமிஷத்தில் பாழாக்கஇருந்தா
யல்லவா? ஔரா! உனக்கு நல்லபக்தி முதிர்ந்தது. உல
கத்தில் இதுவரையில் இப்படிப்பட்ட அதிசயம் எப்போ
தும் நடந்ததில்லை. இப்படிப்பட்ட விஷயத்தில் மிகவும்
திட்டமானவனென்னும் கீர்த்தியை நீஒருவனேபெற்றாய்.
ஓஹோ? உன்யோக்கியதை எவ்வளவு பரிமளிக்கின்றதோ
பார்'' என்று பலவிதங்களாய் சிந்திக்கஆரம்பித்தார். அப்
போது கபீர் பகவானை நமஸ்கரித்து "பரமேஸ்வரா!
மானாவமானங்கள் அஹங்கார மமகாரங்கள் உச்ச நீச்சங்
கள் முதலாகிய விகல்பங்களெல்லாம் மாயா சம்பந்தங்கள்.
ஆதலால், அஞ்ஞானமென்னும் இருளில் மூழ்கியிருக்கும்
மூடர்களுக்கு அவைகள் உண்டேயொழிய உமது சேவகர்க
ளுக்குமாத்திரம் எப்பொழுதும்முன் நீர்சொன்னவர்களைப்
போல் இராது. பூர்வம் நீர் கிருஷ்ணாவதாரமெடுத்த

போது உம்சகோதரியாகிய சுபத்திராதேவியை பலபத்திர
ருக்குத் தெரியாமல் அர்ஜுனனுக்குக் கூட்டிகொடுக்கவில்
லையா? அது, உமக்கு அவமானகரமல்லவா? மானாவமா
னங்களெல்லாம் சரீரத்திற்கேயொழிய பரமாத்மாவிற்கு
இல்லை. தேஹாபிமானம் உள்ளவரையில் உமது திவ்விய
தேஜோமயமாகிய தரிசனம் லப்யமாகாது. அதற்கென்ன
இருக்கட்டும். இப்போது சந்தர்ப்பணைக்காக சகாயம்
செய்த இந்த புண்ணியாத்மாவை நிர்நிமித்தமாய் சிக்ஷித்து
என்வார்த்தையை வியர்த்தமாகச்செய்வதற்குக் காரண
மென்ன? அதை சற்றே தயைசெய்து சொல்லவேண்டும்''
என்று பிரார்த்தித்தவுடனே பகவான் கபீரைப்பார்த்து,
"கபீர்! உன் பத்தினி பதிவிரதாரத்தினம். அவளை யாரா
கிலும் காமவிகாரத்தில் தீண்டினால் அவர்கள் உடனே
பஸ்பமாய்விடுவார்கள். நல்லசமயத்தில் உனக்கு எவ்வ
ளவோ உபகாரம்செய்த இந்தவர்த்தகன் அநியாயமாய்
பஸ்பமாய்ப் போவதுமல்லாமல் யமதண்டனைக்கும் பாத்
திரனாகின்றானல்லவா என்று இவன்மீது உண்டாயிருக்கும்
கனிகரத்தினால் இவ்விதமாய்ச்செய்தேன். இது, இவனுக்கு
உன்னாலுண்டாகிய மஹோபகாரமென்று அறிந்துகொள்
ளக்கடவாய்'' என்று சொன்னவுடனே கபீர் பகவானை
நமஸ்கரித்து "தேவா? இந்தவர்த்தகன் என்பாரியாளைப்
பிடித்து பலாத்காரம் செய்தாலல்லவோ தோஷத்திற்குப்
பாத்திரனாவான் நான் மனப்பூர்வகமாய் கொடுத்தபோது
இவன் தோஷி எப்படியாவான்?'' என்று கேட்டவுடன்
பகவான் சொல்லுகின்றார் "கபீர் அவிவேகத்தினால் இந்த
வர்த்தகன் உன் பாரியாளின் சௌந்தரியத்தைப்பார்த்து
இதுவரையில் மோகித்திருந்தபடியினாலல்லவோ அந்த
சங்கதி உனக்குத்தெரிந்து சுந்தராவை இவனிடம் அனுப்ப
எண்ணங்கொண்டாய்? ஆதலால், இவன் இப்போது அதிக

பிரீதியுடன் சுந்தராவைத்தீண்டினால் அந்ததோஷம் இவனைத்தஹிக்காமல்விடாது? வீட்டின்விளக்கென்று முத்தம் வைத்தால் அது சுடாமலிருக்குமோ? (பரஸ்திரீ சம்போகம் பாபத்திற்கெல்லாம் மூலம். பரஸ்திரீ சம்போகம் செய்தவர்களுக்குப் பரலோகஹானி உண்டாவதுமல்லாமல் இகத்திலும் துஷ்டனென்று பெயர்பெற்று துக்கத்தை அநுபவிக்கவேண்டியதாய் நேரிடும். தாசி சங்கத்தினால் மானஹானியும், விதவை சங்கத்தினால் ஆயுர்க்ஷீணமும், பரஸ்திரீ சேர்க்கையினால் சர்வஹானியும் உண்டாகுமென்று பெரியோர்கள்சொல்வதை நீ எப்போதும் கேட்டதில்லையா? பரஸ்திரீ, அதிககாமத்தினால் தானேமோஹித்து வந்தபோதிலும் அவளைத் தடுத்துவிடவேண்டுமேயொழிய அவளுடன் சேரலாகாது. காமவிகாரத்தினால் பரஸ்திரீகளைப்பார்த்தவர்கள் அந்தகர்களாய்ப் பிறப்பார்கள். பரதாரத்தை ஆலிங்கனஞ்செய்தவர்கள் புஜங்களில்லாமல்பிறந்து பாதைப்படுவார்கள். பரஸ்திரீகளைச் சேர்ந்தவர்கள் நபும்ஸகனாய்ப் பிறப்பார்கள். பரதாரத்திற்குத் தனம்கொடுத்து பதிவிரதா தர்மத்தைப் பாழ்செய்தவர்கள் சிரச்சேதமாய் துர்மரணத்திற்குப் பாத்திரர்களாகின்றார்கள். பரர்களின் சம்சாரத்தைப் பாழ்செய்வது ஞாயமல்ல மானம் சென்றபிறகு மானமுடையஸ்திரீகள் பிராணனுடன் இருந்தபோதிலும் பலனென்ன? மானமுடையவர்களுக்கு மானமே பூஷணம். நீ நிர்மலசித்தத்துடன் வர்த்தகனுக்கு உன் தர்மபத்தினியை ஒப்பித்துச் சாமக்கிரியைகள் கொண்டுவந்து சாதுக்களுக்குச் சமர்ப்பித்துப் புண்ணியம்சம்பாதித்துக்கொண்டாய். வர்த்தகனே உன்பாரியாளின்மீதிருந்த மோகத்தினால் பதார்த்தங்களைக்கொடுத்து துஷ்காரியததிற்கு உட்பட்டு அபரிமிதமானபாபத்தைச் சம்பாதித்துக் கொண்டான். சர்வதர்மங்களையும் அறிந்த நீயே மஹாப

காரஞ்செய்த வர்த்தகனுக்கு உன்பாரியாளைக்கொடுத்து நரகத்தில் விழும்படிச்செய்வது உனக்குத் தர்மமல்ல" வென்று பகவான் சொல்லினர்.)

கபீர் அதைக்கேட்டு சத்பக்தி பூர்வகமாய் ஸ்ரீராமமூர்த்தியை நமஸ்கரித்து "ஸ்வாமி! பிரம ருத்திராதி தேவதைகளுக்கும் கிடைக்கத்தகாத அதிக துர்லபமாகியசேவையைத்தந்து உன் அஸ்தங்களால் அடித்தபின் இந்தவர்த்தகனுக்கு மறுபடியும் நரகமும் சம்பவிக்குமோ? இவர் மிகவும் பரம பவித்திரனாய் நித்திய சூரிகளுடன் கூடி அவர்களின் சஹவாசத்தினால் நித்தியானந்தப்பதவியை அநுபவித்து நிரந்தரம் உமது சந்நிதானத்தில் பரிசாரம் செய்ய அருகனானான். ஆனால், தேவா! எனக்கு இப்போது உண்டாகிய அசத்தியதோஷ பரிஹாரமாவதற்குத் தக்கவுபாயம் ஒன்று தெரிவித்து என்னை ரக்ஷிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தார். அதற்குப் பகவான் கருணாகடாக்ஷத்துடன் கபீரை வீக்ஷித்து "கபீர்! புஷ்பத்துடன் கூடிய நாரும் மணம்பெற்றதுபோல் உன் சேர்க்கையினால் இந்த துன்மார்க்கனாகிய வர்த்தகனும் புண்ணியவானானான். உன் தோஷம் பரிஹாரமாவதற்காக இந்த வர்த்தகனுக்கு முக்தி காந்தாவை பிரசாதித்து ஆனந்திக்கும்படிச் செய்யக்கடவாய். சாதுக்களின்விஷயமாய் விரோதம் சாதித்தவர்களும் கூட சத்கதி அடைவார்கள் என்னும் சத்தியவசனம் இப்போது உனக்குப் பிரத்தியக்ஷமாயிற்று" என்று சொல்லி பகவான் அந்தர்த்தானமானார்.

இந்தவிஷயங்களையெல்லாம் மிகவும் பக்தி சிரத்தைகளுடன் அஞ்சலிஹஸ்தனாய்நின்று கேட்டுக்கொண்டிருந்த வர்த்தகனுக்கு விவேகமுண்டாய் மிகவும் பய விநய சம்பிரமங்களுடன் கபீர்பாதத்தில்வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, "மஹாத்மா! தேவரீருடைய மஹாமஹிமை

இப்படிப்பட்டதென்று தெரியாமல் அவிவேகத்தினால் நான் செய்த அபராதத்தை மன்னித்து என்னை ரக்ஷிக்க வேண்டும்'' என்று வெகுவிதங்களாய்ப் பிரார்த்தித்து பிறகு சுந்தராதேவியின் பாதங்களில்வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்துநின்று இருகைகளையும்குவித்து, "தாயே! நீ பரம பதிவிரதையென்று அறியாமல் பாபகாரியத்திற்கு உட்பட்டு மஹா அபராதத்திற்குப் பாத்திரனானேன். உன்னைப் போன்ற பதிவிரதைகள் உலகத்தில் இல்லாவிட்டால் சமுத்திரம் கரை புரண்டுவாராதா? சூரிய சந்திரர்களாய்த்திரியும் சக்கரங்கள் புரண்டுபோகாதா? நீ பூமிதேவிக்குச் சமானமானவள். நான் உன்குழந்தை. நீ என்தாய். உன்னை சரணமடைந்தேன். அஞ்ஞானத்தினால்செய்த என்குற்றத்தை மன்னித்து ரக்ஷிப்பது உன்பாரம்'' என்று மிகவும் தீனசுரத்துடன் சுந்தராதேவியைவேண்டிக்கொண்டான். அப்போது சுந்தரா தேவி வர்த்தகனுக்கு அபயங்கொடுத்து தன் நாயகனைப் பார்த்து "சுவாமீ! சரணமடைந்தவன் சத்துருவா யிருந்த போதிலும் அவனைக் கைப்பிடித்து ஆதரிக்கவேண்டியது தருமமாதலால், இந்தவர்த்தகன் செய்த துஷ்ட நடவடிக்கைகளைப் பாராட்டாமல் எவ்விதத்திலாகிலும் இவரைக் கடைத்தேரும்படி ரக்ஷிக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தனள். அப்பொது கபீர் அதற்குச் சம்மதித்து வர்த்தகன் நாக்கின்மீது பரம பவித்திரமாகிய தாரகமந்திர பீஜாக்ஷரங்களை எழுதி முக்திகாந்தாவுடன் நித்தியானந்தம் அனுபவிக்கும் மார்க்கத்தை உபதேசித்தார். அப்போது வர்த்தகன் இருதயாகாசத்தில் மூடிக்கொண்டிருந்த அஞ்ஞானமென்னும் இருளெல்லாம் நீங்கி சுஞ்ஞானமென்னும் படவின் மீதேறி பிரம்மானந்தமென்னும் சமுத்திரத்தில் மிதந்துத் தெப்பலாடும்ஸ்திதிக்கு வந்துவிட்டான். உடனே கபீர் வர்த்தகனையும் சுந்தராவையும் சந்தோஷமாய் அழைத்துக்கொண்டு தன் வீடு சேர்ந்தார்.

அப்போது நாரதாதிமுனிபுங்கவர்களுடன் கொலுவில் வீற்றிருக்கும் பகவானை தன்வீட்டில்கண்டு நேத்திரோச்சவமாய்த் தரிசித்து "இதென்ன ஆச்சரியம்! ஓர் க்ஷணத்திற்குமுன் வர்த்தகன் வீட்டிலிருந்தீர். இதற்குள் இங்குவந்து திவ்விய வைபவங்களுடன் தரிசனம்தந்து பிரம்மானந்தத்தை பிரசாதித்தீர். ஓஹோ! உன்தந்திரம் இப்போதல்லவா எனக்குத் தெரியவந்தது; என்னைப் பரிசோதிப்பதற்காகவே ஸாதுவேஷம் போட்டு முநீஸ்வரர்களையெல்லாம் சாதுக்களாய்ச்செய்து கொண்டுவந்தீர் போல் காணப்படுகின்றது. நான் மஹா புண்ணியம்செய்தவன். அப்படிக்கில்லாவிட்டால் இப்படிப்பட்ட மஹாத்மாக்களும், தேவரீரும் அடியேனுடைய குடிசைக்கு எழுந்தருளுவீர்களா! அடியேனை பரிசோதிக்கப் பிரயத்தனப்பட்டபோது அதை நிர்வகிக்க நான்எவ்வளவுமாத்திரன்? உமக்கு உமது அடியார்களின்மீதிருக்கும் பரிபூரணகடாக்ஷ கருணையை நான் என்னவென்று ஸ்துதிசெய்வேன்! ரக்ஷிக்க வேண்டுமென்றாலும் சிக்ஷிக்கவேண்டுமென்றாலும் நீரே கர்த்தன்'' என்று வெகுவிதங்களாய் ஸ்துதிசெய்து மனம் பொங்கி சந்தோஷம் அதிகரித்து தாண்டவமாடினார். அப்போது பகவான் மிகவும் சந்தோஷப்பட்டு கபீர் கையைப் பிடித்து "கபீர்! நீ சொன்ன வார்த்தை வாஸ்தவந்தான். கிருஹஸ்தாசிரமதருமத்தில் நீ எப்படியிருக்கின்றாயோ வென்றெண்ணி உன்னைப் பரீக்ஷிப்பதற்காகவந்தேன். நீ பரமபாகவதசிகாமணி! உன் சத்பிரவர்த்தனங்களுக்கும் மனோ நிச்சயத்திற்கும் மிகவும் சந்தோஷமானேன். நீ மஹானுபாவனாதலால் என் தரிசனம் உனக்கு அப்போதைக்கப்போது வெகுசுலபமாய்க் கிடைக்கின்றது'' என்று சொல்லி தமால்ஜிஜ்ஜாபீபி இவர்களைத் தன் சமீபமாய்க்

கூப்பிட்டு "இனி நீங்கள் இந்தப்பட்டணத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை ஆரண்ணியத்திற்குச்சென்று நிர்மலமாய் தவம்செய்துகொண்டிருந்து என் பாதாரவிந்தம் சேரலாம்" என்று உபதேசித்து முனிபுங்கவர்களுடன் அந்தர்த்தானமானார்.

தமாலும் ஜிஜ்ஞாபீபியும் சத்கதி அடைதல்.

பிறகு தமால் பகவத் வாக்கியத்திற்குச் சம்மதித்து "பக்தர்கள், முக்தர்கள், விரக்தர்கள், சித்தர்கள், சுத்தர்கள் முதலானவர்களின் வாக்கைவிட குருவாக்கே சிரேஷ்டமானதென்றும், குருவாக்கைவிட பகவத் வாக்கியமே மிகவும் சிரேஷ்டமானதென்றும் பெரியோர் சொல்வார்கள். ஆதலால், பகவத்வாக்கியப்பிரகாரம் நடந்துகொள்ள வேண்டியது மிகவும்முக்கியமானது" என்று மனதில் நிச்சயித்துக் கபீரை அழைத்து ஆலிங்கனஞ்செய்து சமீபமாய் உட்காரும்படிச் சொல்லி தருமோபதேசஞ்செய்ய ஆரம்பித்து சொல்லத் தொடங்கினார்:—

"குமாரா! நான் இப்போது சொல்லப்போகும் விஷயத்தை மிகவும் சிரத்தையுடன் கேட்கக்கடவாய். நினைத்த போதெல்லாம் பகவான் வருகின்றாரென்றெண்ணி அஜாக்கிரதையுடன் இருக்கவேண்டாம். எப்பொழுதும் பகவத் ஸ்மரணையை மறக்கவேண்டாம். குருகடாக்ஷத்தினாலாவது பகவத்கடாக்ஷத்தினாலாவது மோக்ஷமார்க்கம் உண்டாக வேண்டியதேயொழிய, மந்திர தந்திர ஜப தப யோக யாக தியான மௌனாதி காரியங்களினால் சித்திக்குமென்று எண்ணவேண்டாம். குரு அனுக்கிரஹமில்லாமல் தத்வோபதேசம் உண்டாகமாட்டாது. மந்தபுத்தியுடையவனும் குருவாக்கைப்போல் நடந்துவந்தால்மேலானஸ்தானத்தை

சுலபமாய்ப்பெறுவான்; தீவிர பக்குவமுடையவனாயிருந்த போதிலும், அப்பியாசஞ்செய்யாவிட்டால் சகஜானந்த சம்பத்தை அடையமாட்டான். இப்படிப்பட்டவன் தத்வஞ் ஞானசூனியனாய் அஞ்ஞானமென்னும் பாழுங்குகையில் வீழ்ந்து அதிலிருந்து மேல்கிளம்பச் சக்தியில்லாமல் அனேக பாதைகளைப்பட்டுக்கொண்டு, "புனரபிஜநநம் புனரபிமரணம், புனரபிஜநநீ ஜடரே ஶயநம் ஶயநம்" என்னும் வசன ரீதியாய் அனேகதடவைகளில் இறந்துகொண்டும் பிறந்துகொண்டுமாயிருப்பான். தனக்கு இன்னும் ஆயுட்பிரமாணம் விசேஷமாய் இருக்கின்றதென்றும் இவ்வளவு சீக்கிரமாய் மோக்ஷத்திற்காக ஏன் பாடுபடவேண்டுமென்றும் எண்ணி இதுவிஷயமாய் யாதொன்றும் பிரயத்தனம் படாமலிருப்பான். அவ்வாறிப்பது யுக்தமானதல்ல; இவர்கள் மிகவும் ஜாக்கிரதையுடன் இருந்து காலத்தை சத் விநியோகத்தில் போக்கவேண்டுமென்று மனதில் சிறிதேனும் எண்ணார்கள். இப்படிப்பட்ட அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கப்பட்டவர்களுக்கே ஆயுர்பாகம் அனேகவருஷங்கள் இருப்பதாய்க் காணப்படும்; சுட்க வேதாந்தத்தை உபந்நியசிக்கப் பட்டவர்களுக்கு ஆயுர்பாகம் வருஷக்கணக்காகவும், முமுக்ஷுக்களுக்கு மாதக்கணக்காவும், அப்பாசிகளுக்கு நாழிகைக்கணக்காகவும், ஆரூட ஞான சம்பன்னனுக்கு இமைக்கொட்டுமவ்வளவு மாத்திரமாய்க் காணப்படும். ஆதலால் மாயை எப்பொழுதும் தன் நிழலைப்போல் இருந்துகொண்டு, உலகத்தைச் சுவாதீனஞ்செய்துகொண்டு, பிரபஞ்சத்தின் இச்சையை அதிகமாயுண்டாக்கி, ஜனன மரணமென்னும் அலையில் அகப்படுத்தி, சதாசாரமென்னும் சமுத்திரத்தில் மூழ்கச் செய்து, நானாவித அவஸ்தைகளை உண்டாக்கும். இதையே மாயாபூதமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். ஆத

லால் மாயா சம்பந்தமாகிய விவகாரங்களையெல்லாம் நிவர்த்தி செய்துகொள்ளத்தக்க உபாயம் சீக்கிரமாய்த் தேடவேண்டும, சத்குரு உபதேசமில்லாமல் மாயையை ஜயிப்பது மிகவும்அசாத்தியம். பொய்க் குருக்கள் அதாவது, காரியக் குருக்கள் பாதகாணிக்கை என்றும்,சன்மானமென்றும் பெயர்வைத்துப் பணம்பறிப்பதுபோல் நிச்சலமுடைய காரணாசாரியர் பணம் பறிக்காமல், ஞானோபதேசம் செய்வார். இஹலோக சுகங்களை எல்லாம்விட்டு கேவல பாரமார்த்திக சிந்தையுண்டாய் பரமானந்தத்தை அடைந்திருப்பவனே காரணாசாரியனென்று தத்துவஞானிகள் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட ஆசாரியன், இஷ்டதேவதா அனுக்கிரக மில்லாத மனுஷ்யனுக்கு லபிக்க மாட்டான். அப்படிப்பட்ட ஆசாரியனுக்கு திடபக்தியுடைய சிஷ்யன் தனது உடல், பொருள், ஆவி, இம்மூன்றையும் தத்தஞ்செய்து நிமிஷமாத்திரம் அவரை இடைவிடாமல் அவருடன்கூடவே இருந்து அவருக்கு வேண்டிய சிசுருஷைகளைச்செய்துகொண்டு குரு நாமமென்னும் திவ்வியரத்தினத்தை மனச்சூத்திரத்தில் (நூலில்) கட்டி, இடைவிடாமல் விஷயபோகங்களில் ஓடிக்கொண்டிருக்கும் மனதை அடக்கிக் கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் பஞ்சேந்திரியங்களையும் ஜெயித்து ஜிதேந்திரியனாய் இருக்கவேண்டும். நிஸ்ஸங்கல்பமாய் நிர்விகல்பமாய், அவாங் மனோகோசாரமாய், அத்துவிதியமாய், அகண்டமாய், ஆனந்தமாத்திரமாய் இருக்கப் பிரசாதிக்கும் ஆசாரியருக்கு பிரதியுபகாரம் என்னசெய்ய முடியும். பிரம்ம நிஷ்டையைவிட குருசேவையே பரமோத்கிருஷ்டமானதென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். கீழே விழுந்துகிடக்கும் உச்சிஷ்ட அன்னத்திற்காக காகங்கள் ஒன்றுகூடி கா! கா! வென்று கூவுவதுபோல, மந்தமதி

யுடையவர்கள் விஷயானந்தத்திற்கு ஏமாந்து சரீரசுகத்தைவிட இந்திரிய சுகங்களே விசேஷமானதென்று நினைத்து எவ்வளவோ சந்தோஷிக்கின்றார்கள். ஆத்மவேத்தர்கள் எப்பொழுதும் அப்படிக்கெண்ணாமல், இந்திரியசுகங்களைவிட மனதின்சுகம் விசேஷமானதென்றும், மனதின் சுகத்தைவிட ஜீவசுகமே சிரேஷ்டமானதென்றும், மற்றவைகளெல்லாம் நிஷ்ப்பிரயோஜனங்களென்றும் நிச்சயித்து ஆநந்திப்பார்கள். ஜீவசுகமே பிரம்மாநந்தமென்று சொல்லப்படும் விஷயபோகத்தில் விசேஷ ஆசையுடையவர்களுக்கு எப்போதும் ஜனனமரணதுக்கங்கள் சம்பவித்துக்கொண்டே இருக்கும். பிரம்மானந்த போகபரர்களுக்குத் துக்க நிவர்த்தியாய் விஸ்ராந்தி அடைந்திருப்பார்கள். பிரம்மாநந்தத்தை பிரசாதிக்கும் பரமாசாரியருக்கு சிசுருஷை செய்வதனால், சமஸ்தபாபங்களும் நிவாரணையாகும். சரீரசுகம் ஸ்மரணைதப்பும்வரையிலும், இந்திரியசுகம் சொக்கும்வரையிலும், மனதின் சுகம் மறக்கும் வரையிலும், ஜீவசுகம் மரணம் வரையிலும் இருக்கும். ஆதலால், ஜீவசுகம் அவசியமாய்ச் சம்பாதிக்கவேண்டும். ஜீவசுகம் ஒன்றுதவிர மற்றச்சுகங்களெல்லாம் அவசான (மரண) காலத்தில் பிரயோசனப்படமாட்டாது. சுழுப்தியில் உண்டாகும் பரமசுகமே பிரம்மானந்தசுகமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட பிரம்மாநந்தத்தை முன் சாதிப்போமென்று எண்ணி இருக்கலாகாது. தேஹமும் இந்திரியங்களும் நன்றாயிருக்கும் போதே சம்பாதிக்கப் பிரயத்தனப்படவேண்டும். சங்சல்ப விகல்பங்களே ஜனனமரணமென்றும், சங்கல்ப விகல்ப நாசமே ஜனனமரண நாசமென்றும், ஜனனமரண நாசமே சாஸ்வதகைவல்யமென்றும், பெரியோகள் சொல்லுவார்கள். கைவல்யத்திற்கு முக்கியசாதனமாகிய சச்சிதானந்தவஸ்துவை விசித

மாய்த் தெரிந்துகொள்வதற்கு சதாசாரியர் அனுக்கிரகம் அவசியமாய் வேண்டும். திரிகரணசுத்தி உண்டாய் இந்திரியங்களை ஜயித்து காமக்ரோதாதி அரிஷட்வர்க்கங்களை நிக்கிரஹித்து நிச்சலசித்தத்துடன் இருப்பதற்குமுக்கியசாதன சூஷ்மமார்க்கத்தைப் போதித்து மோக்ஷஸாம்ராஜ்ஜிய பதவியை அனுபவிக்பச்செய்பவர் ஆசாரியரே. அப்படிப்பட்ட ஆசாரியரே இப்போது நமக்கு பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்டு காட்டுக்குச்சென்று தவம்செய்யவேண்டுமென்று எனக்குப்போதித்தவர். அந்த மஹாத்மா இதோ உன்பின் நிற்கின்றார்பார்'' எள்று தன் ஆள்காட்டும் விரலால் பகவானைக் காட்டினார்.

கபீர் அவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே, பின்புறமாய்த்திரும்பி சீதா சமேதனாய் நின்றிருக்கும் ஸ்ரீ ராமமூர்த்தியை தரிசித்து அற்புத ப்ரமோத மக்ந மானஸனாய்த் தந்தையைப்பார்த்து ``ஐயா! நீர் சொல்லியவிஷயங்களெல்லாம் வாஸ்தவமே! இதுவரையில் என்மனதிலிருந்த சந்தேகமெல்லாம் நீங்கிற்று. இப்போது கிருதார்த்தனானேன். இந்த மஹானுபாவனைத்தவிர பிரம்மானந்தத்தை அனுக்கிரகிக்கப்பட்டவர்கள் மற்றொருவர் யார் இருக்கின்றார்கள்? இங்கும் அங்கும் எங்கும் நிறைந்திருக்கும் மஹானுபாவன் இவரேயல்லவா! இப்படியிருக்க நீர் காட்டுக்குச்சென்று தவம் செய்யவேண்டுமென்பது நிஷ்ப்பிரயோஜனமென்று எனக்குத்தோன்றுகின்றது. ஆதலால், இவ்விடத்திலேயே சுகமாயிருந்து காலம்கழிக்கலாம்'' என்று தீனசுரத்துடன் கபீர் மிகவும்வேண்டிக்கொண்டனர். அதற்குத் தமால் கபீரைப்பார்த்து ``குமாரா! சர்வவியாபகனாயும் சர்வாந்தர்யாமியாயும் இருப்பது, எந்த மஹானுபாவனாயிருந்த போதிலும இஹலோகத்திற்கும் பரலோகத்திற்கும் எவ்வளவு தாரதம்மியமுண்டோ அதுபோல், பட்டணத்திற்கும்

வனத்திற்கும் அவ்வளவு தாரதம்மியம் உண்டு. நான் இப்போது ஆரண்ணியத்திற்குச்சென்று தவம்செய்துகொள்வது மிகவும் உத்தமமானது. பகவானது ஆஞ்ஞையை மீறி நடக்கலாகாது. இனி என்னைத்தடுக்காதே சந்தேகமில்லாமல் நீ பிரம்மானந்தத்தை அனுபவிப்பாய் எங்களைக் குறித்து நீ விசாரிக்கவேண்டாம்'' என்று பலவிதங்களாய்த் தமால் தேறுதலைச்சொல்லி ஆசீர்வாதஞ்செய்து ஜிஜ்ஜாபீபியுடன் காட்டிற்குப்போக புறப்பட்டாரோயொழிய புத்திர வாச்சல்லியத்தினால் கபீரைவிட்டுப்போக மனம்வராமல், அவருடன் பேசிக்கொண்டு மெதுவாய் ஒவ்வொரு அடி வைத்துப் போகச்சென்றார். எவ்வளவு விரக்திஅடைந்தவராயிருந்தபோதிலும் புத்திரவாஞ்சை விடாது. அப்போது கபீர் தமாலையும் சுந்தராதேவி ஜிஜ்ஜாபீபியையும் கட்டிக்கொண்டு ஓவென்று அழ ஆரம்பித்தார்கள்.

பிறகு பரம தயாசமுத்திரனாகிய ஸ்ரீராமமூர்த்தி அவர்களைப்பார்த்து மிகவும் பரிதாபப்பட்டு பகவான் கபீரையும் தமாலையும் கட்டிக்கொண்டு அழுதார். அவர்கள் அழுவதால் சீதா பிராட்டியாளுக்கு சகிக்கக்கூடாத துக்கம் மேலிட்டு, சுந்தரா ஜிஜ்ஜாபீபிகளைக் கட்டிக்கொண்டு அழுதாள். இவ்வாறு எல்லோரும்கூடி அழுததினால் காசிப்பட்டணத்திலுள்ள ஜனங்களுக்கெல்லாம் இருந்தாப்போலிருந்து துக்கம் அதிகமாய்ப்பொங்கி அழத்தொடங்கினார்கள். அவர்கள் எவ்வாறு அழுதார்களென்றால், இருந்தாப்போலிருந்து ஹா! வென்று கூச்சலிட்டு படுத்தவர்கள் படுத்தபடியும் உட்கார்ந்தவர்கள் உட்கார்ந்தபடியும் நின்றவர்கள் நின்றபடியும் நடந்தவர்கள் நடந்தபடியும் இவ்வாறு காசிப்பட்டணத்திலுள்ளவர்களெல்லோரும் அழுதுகொண்டிருந்தகர்கள். பட்டணத்திலுள்ளவர்களெல்லோரும் இவ்வாறு அழுது கொண்டிருந்தால், இனி கபீர் முதலானவர்

களைச் சமாதானப்படுத்துபவர்கள் யாரிருக்கின்றார்கள்? அந்தசமயத்தில் காசீ விஸ்வநாதர் விசாலாக்ஷிசமேதராய் மிகவும் சீக்கிரமாய் கபீரிடம்வந்து அங்கு நடக்கும் கந்தரகோளமெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டு சிலநேரம் ஒன்றுந்தோன்றாமல் நின்றிருந்து, மறுபடியும் அறிவைஅறிந்து ஸ்ரீராம தம்பதிகளுக்கு வந்தனஞ்செய்து "புராண தம்பதிகளே! இது, என்னமாயை. இது எப்படிப்பட்ட விநோதம்! உமது மாயை உமக்குத்தவிர மற்றவர்கள் யார் அறிவார்கள்? தேவதைகள் மெச்சுவதற்கா! உலகம் மெச்சுவதற்கா! கபீர் மெச்சுவதற்கா! அல்லது நான் மெச்சுவதற்கா! யார் மெச்சுவதற்கா இந்தமாயாவேஷம் தரித்துக்கொண்டீர்? காசிப்பட்டணமெல்லாம் துக்கத்தில் மூழ்கச்செய்து வேடிக்கை பார்க்கின்றீர்கள்போல் காணப்படுகின்றது!" சரி, சரி! நன்றாயிருக்கிறது!" என்று அநேக விதங்களாய்ச் சொல்லியபோதிலும் பகவான் கேளாதவரைப்போல் இருந்தபடியால் கபீரைப்பார்த்து பரமசிவன் சொல்லுகின்றார் "ஐயா! பரமபாகவத சிகாமணீ! இதென்ன? சர்வம் அறிந்த சத் புருஷனான உனக்கு லோகவாசனை பிடித்துக்கொண்டு தொந்தரவு செய்வதைப்பார்த்தால், மிகவும் ஆச்சரியகரமாயிருக்கின்றது. புத்தியீனர்களுக்கு இது தகுமேயொழிய, உன்னைப்போன்ற மஹானுபாவனுக்குத் தகுதியல்ல. உனக்காக பகவானும் துக்கப்பட்டுக்கொண்டிருக்க அவரை ஏன் கண்ணெடுத்துப் பாராமலிருக்கின்றாய்?" என்று எச்சரிக்கைச் செய்தார்.

உடனே கண்களைத் திறந்து பார்த்து தன்னைக்கட்டி அழுதுகொண்டிருந்த தாய்தந்தைகளைக் காணாமல்போனதால், அவர்கள் கானகத்திற்குச்சென்றுவிட்டார்களென்று நிச்சயித்துக்கொண்டு வயிற்றிலிருந்து பொங்கி வழிந்து வரும் துக்கத்தைப் பொறுக்க முடியாமல் மறுபடியும் ஓவென்று கூச்சலிட்டு முன்னைவிட அதிகமாய் அழ ஆரம்பித்தார். உடனே பகவான் கபீரைச் சமாதானப்படுத்தி "கபீர்! உன் தாய் தந்தைகள் இப்போது காட்டுக்குச் செல்லவில்லை; அவர்கள் இருவரும் என்னில் ஐக்கியமானார்கள். நீ அவர்களை யாரென்று எண்ணிக் கொண்டாய்? உன்னைப் போஷிப்பதற்காகவே நாங்களிருவரும் இங்கு அவதாரமானோம். என் அம்சமே தமால்; சீதை அம்சமே ஜிஜ்ஜாபீபி; உன் சங்கதியே நீ அறியாமலிருக்க உன் தாய் தந்தைகளினுடையவும் உன் பாரியாளினுடையவும் சங்கதி எவ்விதமாய்த் தெரிந்துகொள்வாய்? நான் சொல்லியதில் உனக்கு ஏதாகிலும் அனுமானம் இருக்கும் பக்ஷத்தில் மற்றொரு முறைபார்" என்று சொல்லி சீதா ஜிஜ்ஜாபீபிரூபமும், பகவான் தமால் ரூபமும் தரித்து கபீர் எதிரில் நின்றார்கள்; அப்போது பார்வதீ பரமேஸ்வரன், பராத்பரனான விஷ்ணுமூர்த்தியின் லீலாவிநோதங்களைப் பார்த்து அற்புத ஆச்சரியமடைந்து சும்மாய்ப்பார்த்து நின்றுகொண்டிருந்தார்கள். பிறகு இவ்விதமாய் சீதாராமன் கபீருக்குச் ஜனனீ ஜனகர்போல் தரிசனம்தந்து அந்தர்த்தானமானார்கள்,

அப்போது லக்ஷ்மீ நாராயணர்கள் தன் ஜனனீஜனகர்களென்று கபீருக்கு தெரியவந்ததனால் முன்னிருந்த துக்கம் நிவாரணையாய் தைரியத்துடனிருந்து பார்வதி பரமேசுவரர்களுக்கு பக்திபூர்வசமாய் நமஸ்கரித்து பற்பல விதங்களாய் ஸ்துதிசெய்து "மோஹமென்னும் பிரவாஹத்தில் வீழ்ந்து அடித்துக்கொண்டுபோகும் இந்த துராத்மாவுக்கு பரமானந்தகரமாகிய தரிசனத்தைப் பிரசாதித்து ரக்ஷிக்க வந்த உமது தயா விசேஷத்தை வர்ணிப்பதற்கு நான்எவ்வளவுமாத்திரன். ஓ புராண தம்பதிகளே! இதுபோல் எப்பொழுதும் என் மீது கருணைகடாக்ஷம் வைத்து ரக்ஷிக்க

வேண்டும்'' என்று அநேக விதங்களாய்க் கபீர் பிரார்த்தித்தபோது, பார்வதீ பரமேஸ்வரர்கள் மிகவும் சந்தோஷித்து ''உனக்குப் பிரம்மானந்தம் சித்திக்கக் கடவது'' என்று ஆசீர்வதித்து அந்தர்த்தானமானார்கள். பிறகு கபீர் தாய் தந்தைகள் தன்னைவிட்டுப் பிரிந்தபடியால் அன்றெல்லாம் மிகவும் விசனமாயிருந்து மறுநாள் காலையில் இராமானந்தர் தரிசனத்திற்குச்சென்று அவரிடம் தன்தாய் தந்தைகளின் விருத்தாந்தங்களையெல்லாம் சொல்லினர். அப்போது இராமானந்தர் உபதேசித்த மதுரவாக்கியங்களினால் மனோவியாகூலம்நீங்கி ஆனந்தத்தில் மூழ்கியிருந்தனர்.

பகவான் கபீர் சங்கீதத்திற்கு நர்த்தனம் புரிதல்.

இவ்வாறு சிலநாட் சென்றபின் ஒருநாளிரவு பௌர்ணமிதினத்தில் சந்திரப்பிரகாசம் பகலைப்போல்பிரகாசித்துக்கொண்டிருந்தபடியால் தன் மனதிற்கு மிகவும்சந்தோஷமுண்டாய் தன் தோட்டத்திலிருக்கும் துளசிபிருந்தாவனமேடையின்மீது உட்கார்ந்து ராமநாம கீர்த்தனங்களைப்பாடி ஆனந்தித்துக்கொண்டிருந்தார். அந்தச்சமயத்தில் ஓர் கிழபைராகி வீணையைஎடுத்துக் கையில்பிடித்து அவருடன்கூட மிகவும்அழகுடைய பன்னிரண்டு வயதுடைய சிறுபிள்ளையைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு, கபீர் இருக்கும்இடத்திற்கு ''ஜயசீதாராம், ஜயசீதாராம்'' என்றுசொல்லிகொண்டே வந்துநின்றார். அவர்களைக் கபீர் பார்த்தவுடனே ''ஜயசீதாராம்' என்று சொல்லிக்கொண்டேஎழுந்து, அவர்களுக்கு மரியாதை செய்து உட்காரும்படிச்சொல்லி மிகவும்வினயபூர்வகமாய் அவர்கள் வந்தவிஷயத்தைக்குறித்து விசாரித்தார். அப்போது

கிழபைராகி ''எங்கள்வாசஸ்தலம் கோசலதேசம்; காசியாத்திரை செய்யவேண்டும் என்னும் எண்ணத்தினால் புறப்பட்டு இன்றுகாலை இந்த காசிப்பட்டணம் வந்துசேர்ந்தோம்; இந்தக் காசியிலுள்ள பலர் உன்னை அநேகவிதங்களாய்ப் புகழ்ந்து சொன்னபடியால், பார்த்து விட்டுப் போகலாமென்று இங்குவந்தேன்'' என்றுசொல்லி ''இப்போது நீ தத்துவ விஷயமாய்ச் சொல்லிவந்த கீர்த்தனங்களில் சிலவற்றைப்பாடி எங்களை ஆனந்திக்கச் செய்யவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். ''ஓ மஹாரிஷிகளே! அவர்கள் யாரோவென்று எண்ணிக்கொள்ளவேண்டாம். கிழபையிராகி வேஷத்துடன் இருப்பவர் நாரதரென்றும், சௌந்தரிய காம்பீர்யத்துடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சிறுவன் ஸ்ரீராமமூர்த்தியென்றும் அறியவேண்டும். இவர்கள் இருவரும் தத்துவவிஷயத்தில் கபீரைப் பரிசோதிக்க இந்த வேஷங்களுடன் வந்தார்கள்'' என்று நாபாஜிசித்தர், விருத்தவசிஷ்டாதி மஹாரிஷிகளுக்குச் சொல்லினர்.

அதற்குக் கபீர் கிழபைராகி வார்த்தைகளுக்கு மிகவும் சந்தோஷித்து ''மஹாத்மாக்களே! இன்று உங்கள் தரிசனத்தால் என் ஜன்மம் கிருதார்த்தமாயிற்று (பவித்ரமாயிற்று). தங்களுடைய பாதம் தேவரீருடைய நந்தவனத்தில்பட்டதனால், அடியேனுடைய ஆசிரமும், பவனமாயிற்று. அடியேன் பாமரன்; உதவாதவன்; தத்துவவிஷயத்திற்கும் அடியேனுக்கும் வெகுதூரம். ஆதலால், அடியேனை மன்னிக்கவேண்டும்'' என்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொண்டனர். அதற்கு அந்தக்கிழப்பைராகி மந்தகாசஞ்செய்து ''கபீர்! உன விஷயமெல்லாம் விசாரித்துத் தெரிந்துகொண்டேன்; ஏன் ஒளிக்கின்றாய்? நீ பக்திரசமாய் எழுதிய கீர்த்தனைகளைக்கேட்டு ஆனந்திப்பதற்கு

எவ்வளவோ தூரத்திலிருந்து வந்த எங்கள் மனதை சந்தோஷப்படுத்தாமல், தப்பித்துக்கொள்ளப் பார்க்கின்றாய்; நீ பாடுவதனால் எங்கள்மனோரதம் தீரும். ஏதோ கொஞ்சம் பாடு பார்ப்போம்: நான் வீணைவாசிக்கின்றேனென்று வீணையை சுருதிசெய்து, இந்தச் சிறுவன் அதி அற்புதமாய் நர்த்தனஞ்செய்வான்'' என்றுசொல்லி மாயாபைராகி வேஷத்தைத்தரித்த நாரதர் ஒருராகத்தை வீணையில் பாடினார். அந்த அற்புதமானராகத்தைக் கபீர்கேட்டவுடன் சொக்கிமயங்கிக் கரதாளம்போட்டு, தான் நூதனமாய்ச்செய்த கீர்த்தனைகளை அத்தியந்த சிரவணானந்தமாய்ப் பாட ஆரம்பித்தார். பகவானை சிறுவன் பாட்டிற்குத் தக்கபடி சித்திரமான நர்த்தனம் நடித்தார். அப்போதிருந்த ஆனந்தத்தை என்னவென்று சொல்லலாம். அந்த சமயத்தில் பிரம ருத்திராதி தேவர்களெல்லாம் அதிக ஆனந்தப்பட்டு தம் தம் வாகனங்களின்மீதேறி [illegible]ாசமெ[illegible]கும் நிறைந்துநின்று கபீரினுடைய பாட்டிற்கும், ஸ்ரீராமமூர்த்தியினுடைய நர்த்தனத்திற்கும், நாரதருடைய வாத்தியத்திற்கும் சொக்கிமயங்கி பரமஆச்சரியப்பட்டு அம்மூவர்களின் மஹிமையைச்சொல்ல நாவெழாமல் சித்திரப்பதுமைபோல்நின்றிருந்தார்கள்.

பிறகு அம்மூவரும் மிகவும் சந்தோஷமாய் அவ்விடமிருந்து புறப்பட்டு காசிப்பட்டணவீதியெல்லாம் நர்த்தனம்செய்துகொண்டே நடக்கஆரம்பித்தார்கள். அப்போது காசிப்பட்டணத்திலுள்ளவர்களெல்லோரும் வெளிவந்து பார்த்ததுமேயல்லாமல் அந்தப்புரத்திலுள்ள ராஜஸ்திரீகளும் வெளிவந்து, அந்தப்பிரம்மானந்தத்தில்சொக்கி, மானாவமானமும் மறந்து, தாங்களும் நர்த்தனம்புரிய ஆரம்பித்தார்கள். அப்போது பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லோரும் அவர்களுடன் சென்றுகொண்டே ஆஹா! இந்த

ராகம் எவ்வளவு மதுரமாயிருக்கின்றது! இந்த கீர்த்தனைகள் எவ்வளவு ஆனந்தமாயிருக்கின்றது! கீர்த்தனைகளிலுள்ள அர்த்தம் எவ்வளவு திருப்தியாயிருக்கின்றது! இந்த நர்த்தனம் எவ்வளவு அற்புதமாயிருக்கின்றது! இந்த வாத்தியம் எவ்வளவு மனோஹரமாயிருக்கின்றது! 'நிருத்த கீத' வாத்தியத்தில் அதிசமர்த்தர்கள் எத்தனையோபேர்களை இதுவரையில்பார்த்திருக்கின்றோமேயொழிய, இப்படிப்பட்ட சுகத்தை எப்பொழுதும் அனுபவித்ததேயில்லை. ஓஹோ! இந்தச் சிறுவன் சௌந்திரயத்தைப் பார்த்தால், ஜகன்மோகினியே இச்சிறுவனாய் அவதரித்து வந்தது போல் காணப்படுகின்றது. இவர் சுந்தரத்தை எவ்வளவு வர்ணித்தாலும் தீராது. இந்தப் பரமபுருஷர்களினால் இன்று காசிப்பட்டணத்திலுள்ளவர்களெல்லாம் பிரம்மானந்தம் அனுபவிக்க நேர்ந்தது என்றுப் பலவிதங்களாய்ச் சொல்லி அவர்களை விட்டுப்போக மனம்வராமல் பசுக்களுடன் கன்றுகள் செல்வதுபோல் நடந்துகொண்டே சென்றார்கள்.

கோதுமை அரைப்படுவதைப் பார்த்து கபீர் துக்கப்படுதல்.

இவ்வாறு அவர்கள்மூவரும்கூடி, கீதாமிருத வாத்திய நர்த்தனங்களினால் காசிப்பட்டணத்திலுள்ள ஜனங்களை எல்லாம் பிரம்மானந்தத்தில் மூழ்கச்செய்துவரும்போது கடைசியாய் ஓர் வீதியில் தாசிவீட்டிற்கெதிரில் வந்துநின்றார்கள். அப்போது அவ்வீட்டிலுள்ள தாசி எந்திரத்தில் கோதுமைப்போட்டு அரைத்துக்கொண்டிருந்தாள். கீர்த்தனங்களைப்பாடி ஆனந்தித்துக் கொண்டிருந்த கபீர், அப்

போது அகஸ்மாத்தாய்க் கண்களைத்திறந்தவுடன் எந்திரத்தில் கோதுமைப்போட்டு அரைத்து அக்கோதுமை மாவாய் விழுவதைக்கண்டார். அதைக்கண்டவுடன் அபாரமான துக்கத்தில் மூழ்கி அதை சகிக்கமுடியாமல் அழ ஆரம்பித்தனர். அப்போது அதுவரையில் நாதபிரமத்துடன்கலந்து சொக்கி பரவசமடைந்திருந்த ஜனங்களெல்லோரும் இராகம் எதுவோ ஆரம்பிக்கின்றாரென்றெண்ணி மனம்கரைந்து சிலநேரம் ஒன்றுந்தோன்றாமல் நின்றிருந்தார்கள். பிறகு கபீருக்குத் துக்கம் அதிகரித்துக் கீழே விழுந்து புரண்டுஅழ ஆரம்பித்தவுடனே, ஜனங்களெல்லோரும் ஓஹோ! இது ராகமல்ல, அழுகையென்று தெரிந்து, மிகவும் ஆச்சரியப்பட்டு, என்ன, என்னவென்று ஜனங்களெல்லோரும் கபீரைக்கேட்டார்கள். அவ்வாறு அவர்கள் கேட்கக்கேட்க இன்னும் துக்கம அதிகரித்து அழுதுக்கொண்டிருந்தாரே யொழிய, வாய்த்திறந்து ஒரு வார்த்தையும் சொன்னவரல்ல. அப்போது ஜனங்களெல்லோரும் கபீரைப்பார்த்து "ஐயா ஏன் அழுகின்றீர்கள்? உமக்கு வந்த ஆபத்தென்னமோ? சீக்கிரமாய்த் தெரிவிக்க வேண்டும்; எங்களால் இயன்றவரையில் அவசியமாய் சகாயம் செய்வோம்" என்று பலவிதங்களாய்ச் சமாதானப்படுத்தினார்களே யொழிய, அவர்களின் சமாதானத்திற்குத் திருப்தியடையவில்லை. மோசாபாச பக்தர்களாய் அபரிசுத்தர்களாய் குடும்ப விஷயத்தில் அதிக ஆசைவைத்து இருக்கப்பட்ட புருஷர்களிடம் தன்மனோபீஷ்டத்தைத் தெரிவிப்பதனால் லாபமொன்றுமில்லை என்னும் அபிப்பிராயத்தினால் எவர்கள் எத்தனை விதங்களாய்ச் சொல்லிய போதிலும் தன் மனோவேதனைக்குக் காரணபூதமாகிய விஷயங்களைச் சிறிதேனும் கபீர் சொல்லினவரல்லர். சதா துக்கத்தை அனுபவித்துக்கொண் டிருக்கப்பட்டவர்க

ளுடன் தன் துக்கத்தைச் சொல்லிக்கொண்டமாத்திரத்தில் அதை அவர்கள் எவ்வாறு சாந்திசெய்வார்கள்? மதுபானஞ் செய்யப்பட்டவர்களுக்கு நல்லபுத்தி உரைத்தால் அவர்களின் குணம் எவ்வாறு நீங்கும்? வியாதியஸ்தனிடம் வைத்தியன் ஔஷதம்பெற்றுக்கொண்டால், வியாதி எவ்விதமாய் நிவாரணையாகும்? அதன்பிறகு கபீரைச்சூழ்ந்துகொண்டிருந்த ஜனங்களெல்லோரும் விரக்தியடைந்து "ஐயோ! இவருக்கு புத்தி ஸ்திரமில்லாமல் தப்பிப்போய் பயித்தியம் பிடித்ததுபோலிருக்கின்றது! அப்படிக்கில்லாவிட்டால் எத்தனையோ பேர்கள் எத்தனை விதங்களாய்க் கேட்டபோதிலும் பதில்சொல்லாமல் நடுவீதியில் படுத்துப் புரண்டு அழுவாரா? இவரது விபரீதபக்தியே கடைசியில் இந்தஸ்திதிக்குக் கொண்டுவந்துவிட்டது! பக்தியாகிலும் புக்தியா (போஜனமா) கிலும் சந்தோஷமாகிலும் விரக்தியாகிலும் மிதமாய் இருக்கவேண்டும். அதிகமாயிருந்தால் அவசியமாய்க் கேடுசம்பவிக்கும்" என்று பச்சாத்தாபப் பட ஆரம்பித்தார்கள்.

அப்போது மஹா தேஜசையுடைய ஓர் யோகீஸ்வரர் அங்குவந்து ஜனங்களையெல்லாம் விலகிக்கொண்டு கபீர் சமீபமாய்நின்று "ஐயா! ஏன் இவ்வாறுஅழுகின்றாய்? எழுந்திரு எழுந்திரு; உன் சங்கடம் என்னமோ சற்றே தெரியச்சொல்பார்ப்போம்" என்றுகேட்டார். கம்பீரமானகண்டசுரத்துடன் இந்தக் கேள்வியைக்கேட்டவர் யாரோ மஹானுபாவராய் இருக்கலாமென்று கபீர்யோசித்துக் கண்களைத் திறந்துபார்தது திடீரென்று எழுந்து நின்று, தன் எதிரில் நின்றிருக்கும் மஹா புருஷனுடைய பாதத்தில்வீழ்ந்துநமஸ்கரித்து அஞ்சலிஹஸ்தராய் நின்று ரோகி தன் வியாதியை வைத்தியனிடம் ஒளிக்காமல் சொல்லுவதுபோல், தன்மனோவேதனையை அவரிடம்

சொல்லும்பக்ஷத்தில், அதற்குத்தக்கஉபாயம் ஒன்றுசொல்லுவாரென்று நிச்சயித்து, மிகவும் விநயபூர்வமாய் "சுவாமி அடியேன்மீது பரிபூரணானுக்கிரகம் வைத்து இப்போது சொல்லப்போகும் சொற்களை சற்றே கேட்கவேண்டும். அதோ தாசி எந்திரத்தில்போடும் கோதுமைகளெல்லாம் எவ்வாறு மாவாகின்றதோ, அதுபோல் சம்சார சாகரத்தில்வீழ்ந்து சுழன்றுகொண்டிருக்கும் நான் சந்தேகமில்லாமல் நாசமடையவேண்டியவனேயல்லவா? என்னும் விசனம் அதிகமாய்விட்டபடியால், தைரியம்போதாமல் துக்கம் அதிகரித்துப் புரண்டு அழ ஆரம்பித்தேன். இதற்கு ஏதாகிலும் ஓர் உபாயம்சொல்லி அடியேனைக்காத்து ரக்ஷிக்கவேண்டும்" என்று மிகவும் பிரார்த்தித்தார். அப்போது பரமஹம்சர் கபீரைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

ஐயா, கபீர்! நீர்சொல்லியவார்த்தை வாஸ்தவமே; ஜனனமரணதுக்கத்திற்கு ஜன்மஸ்தானமாகிய அஞ்ஞானமென்னும் மஹா பிரவாகத்தில்மூழ்கி அஹங்கார மமகாரமென்னும் சுழலில் அகப்பட்டு மிதியுண்டுகிடக்கும் மூடர்கள் தெரிந்துகொள்ளமாட்டார்கள். நமது தேகமென்னும் பட்டணத்தில் ஒன்பது வாசற்படிகள்உண்டு. அவைகள் எதுவென்றால், கண்கள் இரண்டு, மூக்குத்துவாரங்கள் இரண்டு, வாய் ஒன்று, இவைகள் பூர்வத் துவாரமென்றும், வலதுசெவி தக்ஷிணத்துவாரமென்றும், இடதுசெவி உத்தரத் துவாரமென்றும், ரகசிய ஸ்தலங்கள் இரண்டும் பஸ்சிமத் துவாரமென்றும் சொல்லப்படும். இப்படிப்பட்ட பட்டணத்தில் இந்திரியங்களென்னும் சிநேகிதர்களும், விஷயமென்னும் சிநேகிகளும் புத்தியென்னும் சுந்தரீ ரத்தனத்துடன் கூடிக்கொண்டிருப்பார்கள். பிராண அபான வியான உதான சமானனென்னும் ஐந்து சிரசையுடைய சர்ப்பங்கள் அந்தப்பட்டணத்தை அதிக ஜாக்

கிரதையுடன் நித்தியம் காப்பாற்றிக்கொண்டு வருகின்றன. இப்படிப்பட்ட பட்டணத்தில் ஜீவன் என்னும் அரசன் சுந்தரீ என்னும் ரத்தனத்துடன் கூடி ராஜ்ஜிய பரிபாலனம் செய்துகொண்டு, சாக்கிரம் சொப்பனம் சுழுத்திகளில் உண்டாகும் தாபத்திரய சம்பந்தமாகிய துக்கங்களை அனுபவித்துக்கொண்டு, தான் நிற்குணனாயிருந்தும் பிராணேந்திரிய மனோ தர்மங்களையெல்லாம் தன்னில் கற்பித்துக்கொண்டு மாயையால் கட்டப்பட்டு தான் இப்படிப்பட்டவனென்று தெரிந்துகொள்ளாமல் அநேக கர்மங்களைச் செய்து அந்தந்தக் கர்மங்களுக்குத் தக்கபடி உண்டாகும் தேவ மனுஷ்யாதி ஜன்மங்களில் ஆண் பெண் அலிரூபமாய்ப்பிறந்து க்ஷுத்பாதையினால் (பசியினால்) நாய், அந்தந்த வீடுகளில்புகுந்து தடியடியாகிலும் அல்லது எச்சிற்சோற்றையாகிலும் சம்பாதித்துக்கொள்வதுபோல், அவரவர்களின் கர்மத்திற்குத்தக்கபடி சுகதுக்கங்களைச் சம்பாதித்துக்கொள்ளுகின்றார்கள். மனதிற்கு உட்பட்டிருக்கும் இந்திரிய விகாரங்களுக்கு பலவந்தமாய் இந்திரியங்கள் இழுக்கும் இடங்களுக்கெல்லாம், மனம் சென்றுகொண்டு சுந்தரீ ரமணிகளைக்கண்டு மோகித்து, சுகந்தவஸ்துக்களை வாசனைப்பார்த்துக்கொண்டு ஷட்வித (அறுவித) ரசங்களுடன் பஞ்சபக்ஷண பாயசங்களுடன் புசித்துவஸ்திர பூஷணாதி அலங்காரங்களைச் செய்துகொண்டு ஞானசூனியர்களாய்க் காமபோகத்தில் இருப்பார்களேயொழிய, ஓர் நிமிஷமாகிலும் புத்தியை ஆத்மவிசாரணையில் கொண்டுவந்து யுக்தா அயுக்தங்களை விசாரிக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ஞானம் எப்பொழுதும் உண்டாகமாட்டாது. தன்னைத்தான் அறிவதே யதார்த்த ஞானமேயொழிய, மற்றவைகளல்ல. சாதாரணமாய் உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் தாம், மனுஷ்யர்களென்றும் ஸ்திரீக

ளென்றும் புருஷர்களென்றும் பிராமணர்களென்றும் க்ஷத்திரியர்களென்றும் வைசியர்களென்றும் சூத்திரர்களென்றும் பிரம்மசாரிஎன்றும் கிருகஸ்தனென்றும் வானப்பிரஸ்தனென்றும் சந்நியாசிஎன்றும் ஆந்திரனென்றும் திராவிடனென்றும் கர்னாடகனென்றும் மஹாராஷ்டிரனென்றும் சைவனென்றும் வைஷ்ணவனென்றுந் சத்துவவாதனென்றும் பாகவதனென்றும் பௌராணிகனென்றும் சாஸ்திரி என்றும், இப்படிப்பட்டவர்களுக்கு ராமகிருஷ்ணர்களே தந்தை என்றும் சொல்லுகின்றார்களே யொழிய, ஆத்மாவினுடைய யதார்த்த சொரூபத்தை மாத்திரம் தெரிந்துகொள்ளாமலிருக்கின்றார்கள். தாம் மனுஷ்யர்களாய் இருப்பது வாஸ்தவமாயிருந்தால் பூர்வஜன்மத்திலும் வருகிற ஜன்மத்திலும் மனுஷ்யர்களாகவே இருக்கலாம். இந்த ஸ்திதி வாஸ்தவமென்று தெரிந்துகொள்வது மிகவும் கஷ்டமாயிருக்கின்றது. பூர்வஜன்மத்தில் தேவதையாகவோ கந்தர்வனாகவோ கின்னரனாகவோ கிம்புருஷனாகவோ அக்ஷதனாகவோ ராக்ஷதனாகவோ பூதமாகவோ பிசாசமாகவோ ருஷபமாகவோ எருமையாகவோ நரியாகவோ நாயாகவோ அல்லது மற்ற எதுவா யிருந்தார்களோ தெரியவராது? மனுஷ்யாதி ஜன்மங்களை அடைந்து வரப்பட்டவனுக்கு, தேவதா சரீரத்தை அடையவேண்டுமென்று இச்சையுண்டாய், இந்தஜன்மத்தில் எக்கியாதி கிருத்தியங்களைச்செய்ய எண்ணமுண்டாகும். தேவபோகங்களுக்காக எக்கியாதி கிரியைகளைச் செய்துவருவதனால், தமக்கு மனுஷ்யஜன்மம் உண்டாகமாட்டாதென்று வெளியாய்த் தெரியவரும். பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திராதி ஜன்மங்களினால் தம்மைத் தாம் அறிந்துகொள்ளமாட்டார்கள். சில லௌகீகர்கள் தாம் ஜீவர்களென்று சொல்லுவார்களேயொழிய, ஜீவசொரூபம் எப்படிப்பட்டதென்று கேட்டபோது இப்படிப்

பட்டதென்று திடமாய்ச்சொல்ல மாட்டார்கள். மனிதர்களல்லாத தம்மை மனிதர்களென்று நினைக்கப்பட்டவர்கள் எப்படி விவேகிகளல்லவோ, அதுபோல் ஜீவர்களல்லாத தம்மை ஜீவர்களென்று நினைக்கப்பட்டவர்கள் விவேகிகளல்லர். அதாவது, பூர்வத்தில் மிருகமாயிருந்தவன் ஏதோ புண்ணிய விசேஷத்தினால் மானிடஜன்மத்தையடைந்தான். மனிதனாய்ஜன்மித்தபோதிலும் அவன்மனிதனல்ல, இப்படிப்பட்டவர்கள் சாஸ்திரங்களை வாசிப்பதனால் சாஸ்திரவேத்தர்களேயொழிய ஆத்மவேத்தர்களல்லர்.

வேதாந்தசாஸ்திரங்களை நன்றாய்ப் பரிசோதித்தவர்களில், முமுக்ஷுக்களென்றும் அமுமுக்ஷுக்களென்றும் இரண்டுவிதங்களாய் இருக்கின்றார்கள். முமுக்ஷுக்களில் பிரதிபந்தமுள்ளவர்களென்றும் பிரதிபந்தமில்லாதவர்களென்றும் இரண்டுவிதங்களாய் இருக்கின்றார்கள். வருங்காலம் நிகழ்காலம் செல்லுங்காலங்களும் பூர்வவாசனை விசேஷத்தினால் அறிந்துகொள்வது பிரதிபந்தமென்று சொல்லப்படும். இப்பந்தத்திற்கு உட்பட்டு வேதாந்த சாஸ்திரங்களை வாசிப்பவர்கள் அனேகஜன்மங்களுக்குப்பின் பந்தம்நீங்கி யதார்த்தமாகிய ஆத்மசொரூபத்தை அறிந்து முத்தியைஅடைவார்கள். பிரதிபந்தமில்லாமல் வேதாந்த சாஸ்திரங்களை வாசித்தவர்கள் இந்த ஜன்மத்திலேயே ஆத்மசொரூபத்தைஅறிந்து மோக்ஷத்தைஅடைகின்றார்கள். சிலமுமுக்ஷுக்கள் தனம் சம்பாதிப்பதற்காக வேதாந்தசாஸ்திரங்களை வாசிக்கின்றார்கள். சிலர் கீர்த்திக்காக வாசிக்கின்றார்கள். சிலர் கௌரவத்திற்காக வாசிக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களெல்லாம் ஆத்மவேத்தர்களல்லர். வேதாந்தத்தை தூஷிக்கவேண்டுமென்று வாசிக்கப்பட்டவர்களுக்கு ரௌரவாதி நரகமும் மிருக ஜன்மமும் பிராப்திக்கும். முன் சொன்ன மற்றவர்களுக்கெல்லாம்

இந்த ஜன்மத்தில் உண்டாகிய தன் கீர்த்தி கௌரவாதி பிரயோஜனங்களினால் ஜன்மாந்திரங்களில் அவரவர்களின் புண்ணியத்திற்குத்தக்கபடி சுவர்க்காதிபோக பல பிராப்தி உண்டாகும். அஞ்ஞானம் நசிக்கும் வரையில் ஆத்மஞானம் உண்டாகமாட்டாது. உலகத்திலுள்ள ஜனங்களுக்கெல்லாம் ஜன்மாந்தரங்கள் தோறும் அஞ்ஞானம், அமாவாஸ்யை இருளில் கருமேகங்கள் மூடிக்கொண்டால் இருள் எப்படி அதிகரிக்கின்றதோ அதுபோல் அதிகரித்து விருத்தியடைகின்றது. இப்படிப்பட்ட அமாவாஸ்யை இருளில் வழி நடக்கும் புருஷனுக்கு எதிரில் மற்றொரு புருஷன் எதிர்ப்பட்டால் அவன் பிராமணனென்பதும் சூத்திரனென்பதும் சண்டாளனென்பதும் தெரியாவிட்டாலும் எவனோ ஒரு புருஷன் வருகின்றானென்றும், நாற்கால் மிருகங்கள் எதிர்ப்பட்டால், அது ருஷபமென்றும் பசுவென்றும் கிடாவென்றும் தெரியாமற் போனபோதிலும் ஏதோ ஓர் ஜந்து எதிரில் வருகின்றதென்றும், தெரியவரும். அந்தச்சமயத்தில் இன்னும் கொஞ்சம் இருள் அதிகரித்தால் அதுவரையில் காணப்பட்ட வஸ்துக்களும்கூட காணப்படாமல் செய்விக்கும். இதுபோல், அஞ்ஞானம் கர்மத்தை அதிகப்படுத்திக்கடைசியில் ஆத்ம சொரூபத்தைப் பூர்த்தியாய் காணப்படாமல் செய்விக்கும். இருளுடன்கூட மேகங்கள் மூடிக்கொண்டால் அந்த சமயத்தில், வேதசாஸ்திரமோ கௌசயோ ரத்தினமோ ஏகமுகமோ ஷண்முகமோ என்று மனசில் சம்சயம் உண்டாவதுபோல் அஞ்ஞானத்திற்குக் கர்மம்தொடர்ச்சியானபோது ஆத்ம விஷயத்தில், பிராணனோ தேகமோ என்னும் சந்தேகம் உண்டாகும். சூரியோதயத்தினால் இருள் நீங்கியவுடனே இரவில் கண்டெடுத்த பதார்த்தங்களின் நிஜஸ்திதியைக் கண்டறிவதுபோல் கர்மத்தினால் அதிகரிக்கும் அஞ்ஞானம்

ஞானத்தினால் நசித்தவுடனே ஆத்மதத்வம் இப்படிப்பட்டதென்று தெரியவரும். வேதசாஸ்திரம் முதலாகிய வஸ்துக்களைப் பூர்த்தியாய் காணப்படாமற் செய்வித்த இருள் சூரியோதயத்தினால் நீங்கி மேகங்கள் மாத்திரம் இருந்து வஸ்துக்களின் ரூபத்தை சூரியப்பிரகாசத்தினால் தெரிந்துகொள்வதுபோல், ஞானோதயத்தினால் அஞ்ஞானம் நீங்கியபோதிலும் அதன் சம்பந்தமான தேகாதிப் பிரபஞ்சம் மாத்திரம் இருக்கும். ஆத்மஞானம் ஆத்மவிசாரணையினால் தெரிந்துக்கொள்ள வேண்டுமேயொழிய மற்றவைகளால் தெரிந்துக்கொள்ளத் தக்கதல்ல. ஸ்நான சந்தியாவந்தனம் ஜபதபங்கள் தேவதாபூஜை உபவாசங்கள் தீர்த்தஸ்னானங்கள் க்ஷேத்திரதரிசனம் முதலானவைகளெல்லாம் கர்மங்களென்று சொல்லப்படும். இந்த கர்மங்களையெல்லாம் நாம் எப்பொழுதும் அனுஷ்டித்துக்கொண்டு வருகின்றோமேயொழிய அவைகளினால் இதுவரையில் சிறிதேனும் ஆத்ம சொரூபம் தெரியவந்ததில்லை. ஓர் புருஷன் மற்றொரு புருஷனை இன்றையதினம் என்னதிதி என்னவாரம் என்ன நக்ஷத்திரம் என்று கேட்டால், அந்தப்புருஷன் அதுவரையில் அவைகளைத் தெரிந்துகொண்டிருந்தால் மாத்திரம் இன்று இன்னதிதியென்று சொல்வானேயொழிய, தெரிந்துகொண்டிராமலிருந்தால் தெரியாதென்று சொல்லிவிடுவான். அதுபோல் உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் தமக்குத்தெரிந்த விஷயங்களை மாத்திரம் சொல்லுவார்களேயொழிய, தெரியாத விஷயங்களைத் தெரியாதென்று சொல்லிவிடுவார்கள். ஆதலால் எப்போதும் குருமுகமாய் ஆத்மதத்துவம் இப்படிப்பட்டதென்று விசாரணை மூலமாய்த் தெரிந்து கொள்ளத்தக்கதேயொழிய, சாதாரண கர்மத்தினால்பிடிபடாதென்று இதனால் வெளியாய்த் தெரியவருகிறது. சத்கர்மங்களினால் நிர்மலஞானம் உண்டாகு

மென்று சுருதி ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்க, அதற்கு விரோதமாய் சத்கர்மங்களினால் ஞானம் உண்டாகாதென்று சொல்வது சரியல்ல. சுருதி ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கும் கர்மங்களெல்லாம் லௌகிகமென்றும் வைதிகமென்றும் இரண்டுவிதங்களாய் இருக்கின்றன. லௌகிக கர்மங்களெல்லாம் ஜீவனத்திற்குச் சாதனமேயொழிய ஞானத்திற்குச் சாதனமல்ல வைதிக கர்மமோ நித்திய நைமித்யககாம்ய நிஷித்தபிராயச்சித்தமென்று ஐந்து விதங்களாய் இருக்கின்றது. இவைகளில் காம்ய கருமங்களை அனுஷ்டித்து வருவதனால், ஞானம் உண்டாகாவிடினும் சுவர்க்காதி போகங்கள் மாத்திரம் சித்திக்கும். நிஷித்த கர்மங்களால் நித்திய துக்க ரௌரவாதிநரகங்கள் சம்பவிக்கும். பிராயச்சித்தகர்மங்களை அனுஷ்டித்துவந்தால், கர்மத்திற்கு அதிகாரமுண்டாய் சர்வதோஷங்களும் நசிக்கும். ஆதலால், இந்தமூன்றுவித கர்மங்களும் ஞானத்திற்குச் சாதனமல்லவென்று வேதங்களில் நிஷேதிக்கப்பட்டது. நித்திய நைமித்ய கர்மங்கள், சாத்விக ராஜச தாமசங்களென்றும் மூன்றுவிதங்களாய் இருக்கின்றன. இவைகளில், ராஜச தாமச கர்மங்களினால், சுகதுக்கஜன்மங்கள் வந்து கொண்டேயிருக்கும். சாத்விக கர்மத்தினால் சித்தசுத்தி உண்டாகும். சித்தசுத்தியினால் நித்தியா அநித்தியவஸ்து விவேகமும், நித்தியா அநித்தியவஸ்து விவேகத்தினால், சமாதிசம்பத்தும், சமாதிசம்பத்தினால் முமுக்ஷுத்துவமும், முமுக்ஷுவத்தினால் சத்குருதரிசனமும், சத்குரு தரிசனத்தினால் சிரவணமும், சிரவணத்தினால் மனனமும், மனனத்தினால் நிதித்தியாசனமும், நிதித்தியாசனத்தினால் நிச்சயாத்ம தத்வமும், கிரமக்கிரமமாய்ச் சித்திக்கும். இவைகளை எல்லாம் பரமாசாரியரிடம் விசாரித்துத் தெரிந்துகொண்டவர்களே, பிரமவேத்தர்களென்று சுருதி ஸ்மிருதி

களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் குடும்ப சவரக்ஷணைக்காக இரவும்பகலும் தனஆசையினால் பீடிக்கப்பட்டு தானதரும பரோபகார விஷயங்களில் இச்சையில்லாமல், அனேக அவஸ்தைகளை அனுபவித்துக்கொண்டு காலத்தை விருதாவாகக்கழிக்கின்றார்களேயொழிய, நித்தியம் மரணம் நிழலைப்போல் இருந்துகொண்டு எப்பொழுது விழுங்கிவிடலாமோவென்று வாய்திறந்து காத்துக்கொண்டிருப்பதை எவ்வளவேனும் அறியமாட்டார்கள். எப்பொழுதும் தர்மகாரியங்களைச் செய்துகொண்டு சகலவிஷயங்களையும் நாராயணார்ப்பணமென்றுசெய்து நிஷ்காமிகளாயிருந்து நாராயணனே கதியென்றுநம்பி சதாகாலமும் நாராயணனை ஸ்மரித்துக்கொண்டுஇருக்கப்பட்டவர்களுக்கு சிறிதேனும் பயமில்லை. அதோபார் எந்திரத்தில்விழும் கோதுமைகளெல்லாம் மாவாய்விழுந்தபோதிலும், எந்திரத்திலுள்ள அச்சை ஆசிரயித்திருக்கும் கோதுமைகள் மாத்திரம் மாவாகாமலிருக்கின்றன. அதுபோல், அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கும் ஜனங்களெல்லோரும், சமுசாரமென்னும் சக்கரத்தில் அகப்பட்டு சூரணமாகின்றார்கள்; பக்தியினால் ஆத்மவிசாரணைசெய்து பகவதனுக்கிரகம் சம்பாதித்து நித்தியானந்தத்தை அனுபவித்து வரப்பட்டவர்கள் மாத்திரம், மிகவும் அரிதாயிருக்கின்றார்கள். நீயோ சத்வகுண விசிஷ்டன்; சன்மார்க்க பிரவிஷ்டன்; சுத்தவிரக்தன்; சதானந்தயுக்தன்; வைஷ்ணவ உத்தமன்; ஆதலால், உனக்கு எந்தவிஷயத்திலும் பயமில்லை. சொப்பனத்தில் கண்ட ஆபத்தை சாக்கிராவஸ்தையில் கலவரப்படுவது போல், ஏன் விருதாவாய்க் கலவரப்படுகின்றாய்?'' என்று போதித்தனர்.

அந்த உபந்நியாசங்களைக் கபீர்கேட்டவுடனே பரமஹம்சரைப்பார்த்து இந்த மஹானுபாவர் யாரோ தெரியவில்லை. என் இருதயத்திலிருந்த சமுசயங்களையெல்லாம் மிகவும் சுலபமாய்நீக்கி என்னைத் தன்யனாய்ச்செய்தார் என்று எண்ணி அவர் சங்கதியை விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணத்தினால், அவரைப் பார்த்தபோது அந்த பரமஹம்சர் ஸ்ரீ ராமமூர்த்தியாயும் கிழவைராகி நாரதராயும் தன் சமீபமாய்நின்று தரிசனம் தந்தபடியால் அப்போது கபீருக்கு உண்டாகிய ஆனந்தம் சொல்லவும்வேண்டுமோ? கபீர் சிலநேரம் ஆனந்தத்தில் மூழ்கியிருந்து பிறகு அறிவுண்டாய் மிகவும்பயபக்தியுடன்.

"புராணபுருஷோத்தமா! உன் மஹாமஹிமையை வர்ணிக்க ஆயிரம்சிரசையுடையவனுக்கும் சாத்தியமாகுமா? நீர் சர்வவியாபகனாயிருந்தும், பக்தஜனங்கள் செய்யும் பூஜைகளைப் பரமானந்தத்துடன் அங்கீகரித்துத் தரிசனந்தருகின்றீர். சமுசார விஷயத்தில் இருக்கப்பட்டவனுக்கு நீர்சுலபமாய்த் தரிசனங்கொடுக்கமாட்டீர். பரமேசுவரனாயும் பரமபுருஷனாயும் பிரகிருதிபுருஷ வியதிரிக்தனாயும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் உம்மை, நாமரூபங்களுடன் நானாவித விவகாரங்களைச்செய்துகொண்டிருக்கும் ஜீவசமூகங்களெல்லாம், உமது பிரபாவத்தைச்சொல்ல சாத்தியமாகாது. சமஸ்த ஜீவர்களையும் ஆசிரயித்துக்கொண்டிருக்கும் பாபங்களையெல்லாம் போக்கடித்து ரக்ஷிக்கப்பட்ட உன் அனந்த கலியாணகுணங்களை பிரமாதி தேவதைகளும் தம் சக்திக்குத் தக்கபடி வர்ணிப்பார்களேயொழிய, பூரணமாய் வர்ணிக்கமாட்டார்கள். உமது பக்தர்கள் அதிகபிரீதியுடன் உமக்குச் சமர்ப்பிக்கும் பத்திர, புஷ்ப, பல, ஜல நைவேத்தியங்களினால், சந்தோஷிப்பதுபோல் வெகுவித பதார்த்தங்களுடன் விதி விஹிதங்களாய்ச் செய்யும் அசுவமேத

யாகாதி சத்கர்மங்களினால் சந்தோஷிக்கமாட்டாய். நீர் பரமானந்த தரிசனந்தந்து பக்தர்களின் இஷ்டார்த்தங்களைப் பூர்த்திசெய்விக்கின்றீர். நீர் பக்தவச்சலன்; பவரோகவைத்தியன்; சர்வஞ்ஞன்; சச்சிதானந்தன். உம்மை மெய்ப்பித்து உமதுகிருபை சம்பாதித்துக்கொள்ள பக்தியோகம் ஒன்றே பிரதானமேயொழிய, மற்றவைகள் பிரதானமானதல்ல; உன் மஹாமஹிமையைப் புகழ நான் எவ்வளவு மாத்திரன். மந்தமதியாகிய அடியேனுக்குப் பரமானந்தகரமாகிய பிரசாதத்தைத்தந்து ரக்ஷிக்கக்கடவாய்" என்று பிரதக்ஷணபூர்வகமாய்வந்து நமஸ்கரித்துநின்றார்.

அப்போது ஸ்ரீராமமூர்த்தி கபீரைவீக்ஷித்து "கபீர் நீ பக்தியோகத்திலும் ஞானயோகத்திலும் உன் இருதயம் பூர்த்தியாய் பக்குவமாய்விட்டது. உனக்கு எந்தவிஷயத்திலும் குறைவில்லை. இனி உனக்கு நித்தியானந்தபதவி வெகு சுலபமாய்க்கிடைக்கும்" என்றுசொல்லி ஆசீர்வதித்து அந்தர்த்தானமானார். அப்போது நாரதர் கபீரை ஆலிங்கனஞ்செய்து "ஸ்ரீராமமூர்த்தியே நர்த்தனம் புரிந்தவர்" என்று தெரியச்சொல்லி "பிரம்மானந்தத்தை அடையக்கடவாய்" என்று ஆசீர்வதித்து விடைபெற்றுச் சென்றார். அப்போது அந்த விநோதங்களையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஜனங்களெல்லாம் அற்புத ஆச்சரியமடைந்து கபீர் பாதத்தில்வீழ்ந்து அநேகவிதங்களாய்த் துதிசெய்தார்கள்.

"அப்போது கோதுமை அரைபடுவதைப் பார்த்துத் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் கபீரைப்பார்ப்பதற்காக, தாசி கோதுமை அரைப்பதைநிறுத்தி வெளியில்வந்து வேடிக்கைப் பார்த்துநின்றவள், பகவான்சொல்லிய வாக்கியங்களையெல்லாம்கேட்டு விவேகமுண்டாய் தன்குலவிருத்தியை நினைத்துத் தனக்குள்தான் கீழ்வருமாறு

நினைத்து விரக்தியடையப்போகின்றாள்; "சீசீ! என் ஜன்மமேன்? பூர்வஜன்மத்தில் எவ்வளவோ பாபம்செய்து தாசியாய்ப் பிறந்தேன். விருக்ஷமாயாகிலும் பர்வதமாயாகிலும் நாய் நரிகளாயாகிலும் பிறக்கலாமேயொழிய, எப்போதும் தாசியாய்ப் பிறக்கலாகாது. தாசிஜன்மத்தைவிட மிகவும் தாழ்ந்தது மற்றொன்றில்லை. ஐயோ! பாவம். மாயா உபாயங்களினால் வீட்டிற்குவந்த மாப்பிள்ளைகளையெல்லாம் மயக்கித் தனத்தைச் சம்பாதித்து ஜாதிநீதிகளையும் பாராமல் போகித்து வியாதிகளை அநுபவித்து பாபத்திற்குஆளாய் குடும்பசவரக்ஷணையைச் செய்துவருகின்றோம். ஐயோ! இந்தப்பாழும் ஜாதிக்கு சிறிதாகிலும் நியாயமில்லை. தனவான்களின் தனங்களைஎல்லாம்கொள்ளையடித்துக் கடைசியில் ஓடுகொடுத்து மறுபடியும் அங்கு வராதபடி செய்விப்பதே தாசிஜாதி தர்மமாயிருக்கின்றது. அவனிடம் பணம்பறிக்கும்வரையில் இந்திரனென்றும் சந்திரனென்றும் புகழ்ந்து அவன் பிக்ஷுகனானபோது சிறிதேனும் கனிகரமில்லாமல், திரஸ்கரிப்பார்கள். ஆஹா! ஜன்மாந்தரங்களில்செய்த பாபகர்மங்களெல்லாம் பழுத்து இந்த ஜன்மத்தில் தாசியாய்ப்பிறந்து தர்ம, சத்திய, குணங்களில்லாமல் ரௌரவாதி நரகத்தை அநுபவிக்கும்படிச் செய்விக்கின்றது. துச்சமானவேலைகளைச்செய்து ஜீவனம் செய்து பாபத்தைச் சம்பாதிப்பதைவிட பாழுங்கிணற்றில் வீழ்ந்து பிராணனைவிடுவதே மிகவும்நன்மை. ஐயோ! இதுவரையில் அஞ்ஞானத்தினால் துஷ்டகாரியங்களையெல்லாம் நற்காரியமென்று நிச்சயித்துக்கொண்டு வாழ்நாட்களையெல்லாம் விருதாவாய்ப் போக்கடித்தேனல்லவா? பூர்வஜன்மத்தில்செய்த பாபகர்மத்திற்குத்தக்கபடி இந்த ஜன்மத்தில் செய்த துஷ்கிருத்தியங்களும் சேர்ந்து சஞ்சிதமென்னும் மூட்டை அதிகரித்து எப்பொழுதும் கடைத்

தேராதவழியை சம்பாதித்துக்கொண்டேன். ஆஹா! நான் செய்த ஆகாத்தியங்களையெல்லாம் இப்பொழுதுநினைத்துக்கொண்டால், வயிறு பற்றிஎரிகின்றது. ஒருவனுடன் சரசமாடுவதும் ஒருவனுடன் ரகசியம்பேசுவதும் ஒருவனுடன் போகிப்பதும் இப்படி எல்லோர்மீதிலும் ஆசையுடையவளைப்போல் நடித்துக்காட்டி கடைசியில் எவன்மீதும் ஆசையில்லாமல் அசத்தியமாடி அப்பிரமாணங்கள் செய்து மருந்துகள்வைத்து மாயைசெய்து வரிசைகளில்லாமல் அகப்பட்டவர்களையெல்லாம் வலையில்போட்டு, நோன்புகளென்றும் விரதங்களென்றும் மதுரவசனங்களினால் அவர்களைப் பூரிக்கச்செய்து பணம்பறிப்பதற்காகவே பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தேன். ஐயையோ! என் துன்மார்க்கத்தினால் அநேகர்கள் புனர்கதிக்குஆளாகாமல் போய்விட்டார்களல்லவா? விவாகமானஸ்திரீகள் எத்தனைபெயர்கள் என்னால் மனம்நொந்து துக்கித்துநின்றார்கள். சந்தானமுடைய ஸ்திரீகள் எத்தனைபேர்கள் சங்கடப்பட்டார்கள். பந்துமித்திரர்களுடன் விரோதித்து எத்தனைபேர் பாழானார்கள். எத்தனைபெயர்கள் பலரால் அவமானப்பட்டார்கள். வியாதியஸ்தர்களாய் எத்தனைபேர்கள் நாசமானார்கள். கண்டவிடங்களிலெல்லாம் கடன்பட்டு எத்தனைபேர்கள் செறுப்படிப் பட்டார்கள். தனத்தைக் கொடுத்துவிட்டு எத்தனைபேர்கள் தேசாந்தரம்சென்றுவிட்டார்கள். போகராகங்களுக்கு ஆசைப்பட்டு எத்தனைபேர்கள் ஜோகிகளானார்கள். வீண் ஆண்மையினால் எத்தனைபேர்கள் சிக்ஷையடைந்தார்கள். தர்மவிரக்தர்களாய் துர்விஷய சக்தர்களாய் எத்தனைபேர்கள் துர்க்கதியை அடைந்தார்கள். ஐயோ! இதனால்உண்டாகிய பாபத்திற்குத் தக்க சிக்ஷை நான் அநுபவித்தே தீரவேண்டுமல்லவா? யௌவனம் குறைந்துவரவர தேஹம் பலயீனமாகின்றது.

மிருத்யுதேவதை நித்தியம் சமீபமாயிருந்துகொண்டு குடுக்கென்று விழுங்குவதற்குச் சமயம்பார்த்துக்கொண்டிருக்கின்றது. அறிவுஉண்டானபோதே சாக்கிரதைப்படாமல் யோசித்துக்கொண்டிருந்தால் அநியாயமாய்க் கெட்டுப்போகவேண்டியதாய் நேரிடுகின்றதல்லவா?" என்று அனேகவிதங்களாய் தாசி வருத்தப்பட்டு தன் ஜீவனத்தில் அசங்கியப்பட்டு சீக்கிரமாய் ஓடி கபீர்பாதங்களில்விழுந்து "சரணமடைந்தேன் ரக்ஷிக்கவேண்டும்" என்று தைரியத்துடன்வேண்டிக்கொண்டாள்.

அப்போது கபீர் மிகவும் கனிகரத்துடன் அவளை சந்தோஷப்படுத்தி அவளுடைய மனபரிபாகத்தைப் பரிசோதித்து தாரக மந்திரத்தை உபதேசித்து "சமுசார சமுத்திரத்திலிருந்து நீங்கக்கடவாய்" என்று ஆசீர்வதித்து அங்கிருந்து புறப்பட்டு தன்வீடுசேர்ந்து, விசேஷசிரத்தை பக்தியுடன் ஸ்ரீராமமூர்த்தியை சேவித்துக்கொண்டு, துரபிமானங்களையெல்லாம் தூரப்படுத்தி விஷயானந்தங்களை யறுத்து நிர்மலமனதுடன் சாதுசந்தர்ப்பணைகள் செய்து கொண்டு சிஷ்யர்களுக்கு ஸ்ரீராமநாம பிரபாவங்களைப் போதித்து பிரம்மானந்தத்தை அனுபவித்துக்கொண்டு வந்தார்.

துஷ்டர்கள் கபீரைப்பார்த்து குட்ரயுக்தி செய்தல்.

இவ்வாறு சிலநாட்கள்சென்றபிறகு சகல தேசங்களிலும் கபீரினுடையபெயர் பிரக்கியாதியடைந்தது. அப்போது சில துர்மார்க்கர்கள் கபீருக்குஉண்டாகிய கௌரவத்தைப்பார்த்து சகிக்கமுடியாமல் எல்லோரும் ஓரிடத்தில்கூடி "ஆஹா! பார்த்தீர்களா! இவன் எவ்வளவு! இவன் யோக்கியதை எவ்வளவு; பட்டுநூலைநெய்து ஜீவனம்செய்யும் தமானுக்கு, இவன் காட்டில் எங்கேயோகிடைத்தவன். இவனது, குலகோத்திரங்களை அறிந்தவர்கள் யாருமில்லை. இவன் சுய வமிசமாகிய மகம்மது பீஜத்திற்குப் பிறந்திருந்தால் சுயதர்மத்தைவிட்டு இதரதர்மத்தில்பிரவேசிப்பானா? இப்படிப்பட்ட குலபிரஷ்டனுக்கு இவ்வளவு கௌரவம் உண்டாவது யுக்தமாயிருக்கவில்லை. இவ்வளவேன்! நம்முடையவர்கள் மிகவும்புத்தியில்லாதவர்கள். உலகத்தில் மஹாபுருஷர்கள் எத்தனையோபெயர்களில்லையா? இவன் அவர்களின் பாததூளிக்குச்சமானமும் ஆகமாட்டான் என்று எண்ணாமற்போனார்கள். இவன், நாம்பார்க்காத கபீரா? இவனிடத்தில் விசித்திரமான மகத்துவம் என்னயிருக்கின்றது? இராமா ராமாவென்று வாயினால் உளறிக்கொண்டிருந்தால், இவன் மஹாத்மாவாய்விடுவானா? ஜனங்களின் பயித்தியம் என்னவென்றுசொல்லலாம்! இந்தப் பயித்தியம்பிடித்தவர்கள் மேல்விழுந்து கௌரவம்செய்யச் செய்ய, அவன் இன்னும்கொஞ்சம் அதிக நிஷ்டனைப் போல் நடித்துக்கொண்டுவருகின்றான். இந்தசுட்கவேதாந்தங்கள்பேச யாருக்குத்தான்தெரியாது. இந்தஆஷாடபூதி இந்தவேஷத்தினால் ஜனங்களைமோகிக்கும்படிச்செய்து

தனத்தை சுலபமாய்ச் சம்பாதிக்கலாமென்றெண்ணி தன் தந்தை எவ்வளவோகஷ்டப்பட்டு சம்பாதித்துவைத்த திரவியத்தையெல்லாம் தானதர்மங்களினால் பாழ்செய்து கடைசியில் பிக்ஷுகனானேயொழிய, நிஜமாகிய பக்தியுடன் செலவுசெய்தவனல்லன். தான தர்மத்தினால் பணம் விரயம்செய்தால், உலகத்தார் தன்னை மஹானுபாவனென்றுஎண்ணி பக்தியுடன் தனக்கு விசேஷமாய்த் திரவ்வியம் சமர்ப்பிப்பார்களென்று நிச்சயித்துக்கொண்டு மஹா விரக்தனைப்போல் நடித்துக்கொண்டுவருகின்றான். இவன் செய்யும் தந்திரத்தினால் உலகத்தார் பூர்த்தியாய்முழுகிப் போகவேண்டியதேயொழிய, மற்றப்படிக்கு வேறல்ல. 'பாபிசொத்துப் பலருக்கு' என்னும் வசனம் இவனிடம் பலித்திருக்கின்றது. கடைசியில் இப்பொழுது இவனுக்கு ஒருவேளைக் கழிப்பது ஒருயுகமாயிருக்கின்றது. பலரைக் கெடுக்கநினைத்தவன் தானே கெட்டுப்போவான்; இவனென்னமோ சம்பாதிக்கச் சக்தியில்லாதவன். கடைசியில் அப்பிரயோஜகர்களின் பிழைப்பு இவ்வளவேயல்லவா? கஷ்டப்பட்டு தனத்தைச் சம்பாதித்தவனுக்கல்லவா வருத்தம்தெரிந்து அதைக் காப்பாற்ற புத்தியுண்டாகும். திரவ்வியம் உண்டானால், சகலமும் உண்டாகும். திரவ்வியம் சென்றால் சகலமும்சென்றுவிடும். திரவ்வியத்தை அதிக ஜாக்கிரதையாய்க் காப்பாற்றாமல் பாழ்செய்துகொண்டபடியினாலல்லவோ, இப்போது இவனுக்கு இவ்வளவு கஷ்டங்கள்உண்டாயிற்று. வட்டிக்காசைப்பட்டு முதலைப் போக்கடித்துக்கொண்டதுபோல், உலகத்தார்சொத்திற்கு ஆசைப்பட்டுத் தன்சொத்தைஎல்லாம் போக்கடித்துக் கொண்ட விவேகயீனத்தினால், தனக்கு இப்போது பச்சாதாபமுண்டாயிருக்கலாம்'' என்று பலபலவிதங்களாய்த் தூஷிக்க ஆரம்பித்தார்கள். சந்திரனைப்பார்த்து கள்ளர்கள்

சங்கடப்படுவதுபோலும், தாதாவினுடைய கீர்த்திக்கு லோபிகள் பொறாமைகொள்வதுபோலும், பதிவிரதை நடவடிக்கைகளுக்கு பரபுருஷகமனமுடைய ஸ்திரீகள் பரிதாபப்படுவதுபோலும், வேதாந்த சாஸ்திரங்களைப் பார்த்து வீரபாஷாண்டிகள் விசாரப்படுவதுபோலும், ஸஜ்ஜனர்களுடைய கௌரவத்தைத் துர்ஜனர்கள்பார்த்துச் சகிக்காமல்போவது உலகவழக்கம்.

இந்தத் துர்மார்க்கர்கள் கபீரை விசேஷமாய்த் தூஷித்தும் அதனுடன்திருப்தியடைந்திராமல், அவரை எவ்விதமாகிலும் அவமானப் படுத்தவேண்டுமென்றெண்ணி, இதற்கென்னசெய்யலாமென்று ஆலோசித்து, இவனைக் கொன்றுவிடலாமென்றுநினைத்தால் அதனால் நமக்குக் கெடுதிவந்துசம்பவிக்கும், ஜனங்களெல்லோரும் அவன் விஷயத்தில் மிகவும் அபிமானமுடையவர்களாயிருக்கின்றார்கள். அவன்எப்பொழுது வெளிப்புறப்பட்டாலும் அவனை ஜனங்கள் ஆட்டுமந்தையைப்போல்சூழ்ந்துகொண்டுவருகின்றார்கள். கெட்டியாய்ப்பிடித்து எலும்பை உடைக்கலாமென்றாலும், சமயம் கிடைக்கவில்லை. வீட்டில் புகுந்து உதைக்கலாமென்றாலும் பலபேர்கள் எப்போதும் அங்கேயே வீழ்ந்திருக்கின்றார்கள். இவைகளினாலெல்லாம் நம்எண்ணம் ஈடேராது. எதாகிலும் ஒரு உபாயம் செய்து அவமானம்செய்வித்தால் அதனால் அவன் இங்கிராமல் தேசாந்தரம்சென்றுவிடுவான். பிறகு நாம் நிச்சிந்தையாயிருக்கலாம் என்றுஎண்ணி சிலநேரம் ஆலோசித்து, ஓஹோ! இப்பொழுது ஒருநல்லஆலோசனை உண்டாயிற்று. இந்தஆலோசனையினால் நமக்கு எந்தஅபாயங்களுமில்லாமல் கபீரே சொல்லாமல்ஓடிப்போவான். இப்பொழுது இவனை சாதுவென்றல்லவோ ஜனங்கள் விசேஷமாய் கௌரவிக்கின்றார்கள். அந்தக்கௌரவத்திற்கு ஓர் கெடுதியுண்டா

னால் போதும். அப்போது நமது மனோபீஷ்டம் சுலபமாய் நிறைவேறும். இப்போது மற்றொன்றும் செய்ய வேண்டியதில்லை. தேசதேசங்களிலுள்ள சாது ஸஜ்ஜனர்களுக்கெல்லாம் ஓர் நாளைக்குறிப்பிட்டு அந்நாளில் சாது சந்தர்ப்பணைசெய்ய நிச்சயித்திருப்பதால், தாங்கள் எல்லோரும் சிஷ்யவர்க்கங்களுடன் விஜயஞ்செய்யவேண்டுமென்று ஓர்கடிதம் கபீர் எழுதியதுபோல் எழுதி அனுப்பினால், அன்றையதேதிக்கு சாதுஜனங்களெல்லோரும் சமுத்திரம்போல்புரண்டுவருவார்கள். அப்போது தரித்திர தேவதா அனுக்கிரகத்தினால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் இந்ததுஷ்டன் அவர்களை சந்துஷ்டிசெய்து ஆதரிக்க தனக்கு சக்தியில்லாமற்போவதனால், அவர்களைத் தான் கடிதம் எழுதிவரவழைக்கவில்லை என்றுசொல்வான். அதனால் சாதுக்களுக்கெல்லாம் கோபமுண்டாய் அவனை நிந்தனைசெய்ய ஆரம்பிப்பார்கள். பிறகு இந்த விஷயங்கள் காசியிலுள்ளவர்களுக் கெல்லாம் தெரிந்து சாதுசந்தர்ப்பணையென்று கடிதம்எழுதி சாதுக்கள்வந்தபிறகு அவர்களை ஆதரிக்கச் சக்தியில்லாமல் அவமானப்படுத்தினானென்னும் காரணத்தினால், மனம்முறிந்து இவனை இங்கிருந்து கிளப்ப எல்லோரும் பிரயத்தனப்படுவார்கள். அவர்கள் கிளப்புவதற்குமுன்பே ஜனங்களுக்கு கபீர் மீதிருந்த கௌரவம்குறைந்து, விரோதம் உண்டானதற்குச் சகிக்காமல், தான் ஒருவருடனும்சொல்லாமல் தப்பித்துக்கொண்டு ஓடிப்போவான். இதனால் நமக்கு எந்த கஷ்டங்களுமில்லாமல் காரியம்நிறைவேறும். இதைவிட வேறேஉபாயம் ஒன்றுமில்லைஎன்று நிச்சயித்து, அப்போதே கடிதங்களைக் கொண்டுவந்து தாம் எண்ணியது போல் அனேக கடிதங்களைஎழுதி தேசதேசங்களுக்கெல்லாம் அனுப்பிவிட்டு இப்பொழுது நாம்செய்தரகசியம் மிக

வும்கோப்பியமாயிருக்கவேண்டும். இந்தவிஷயம் எவ்வளவேனும் கபீருக்குத்தெரியக்கூடாது. அவனுக்குத்தெரிந்தால் காரியம் கெட்டுப்போகும். அவன் அசாக்கிரதையாயிருக்கும்போதே சாதுஜனங்களெல்லாம் புரண்டுவரவேண்டும். ஒரேகாலத்தில் அவ்வளவு சாதுக்களையும் ஆதரிக்கச் சக்தியுடையவனல்ல; கபீர் தரித்திரனென்று யாவருக்கும் தெரிந்திருக்கிறபடியால், அவனைநம்பி ஒருவரும் ஒருகாசும் கடன் கொடார்கள். இதனால் அவனுக்கு நாம்எண்ணியது போல் அவமானம்உண்டாகாமற்போகாது. தேவர்களுக்குள் கலகம்விளைத்து வேடிக்கைபார்த்து சந்தோஷிக்கும் நாரதரைப்போல், சாதுக்களுக்கும் கபீருக்கும் கலகத்தை மூட்டி நாம் தூரமாயிருந்து வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கலாம் என்றெண்ணி சந்தோஷித்திருந்தார்கள்.

இவர்கள் எழுதிய கடிதங்களெல்லாம் அந்தந்த தேசங்கள்போய்ச்சேர்ந்து சாது ஜனங்களெல்லோரும் பரமானந்தமடைந்து ஆஹா! இப்போது நமது ஜன்மங்களெல்லாம் கிருதார்த்தமடைந்தது. சாதுசந்தர்ப்பணமூலமாய் சர்வோத்தமமான கபீரை நேத்ரோச்சவமாய் தரிசித்து தன்னியர்களாகலாம். பரமபாகவத சிகாமணி என்று பலர் புகழ்ந்துபேச நாம் கேட்டிருக்கின்றோம். அவரது திருஷ்டி பட்டாலும் பவித்திரர்களாவோம் என்றுசொல்லித் தம்முடன் கூடியிருக்கும் சாதுக்களுக்கெல்லாம் சங்கதியைத் தெரிவித்து அவர்களையெல்லாம் வரவழைத்து அந்தந்த தேசத்திலுள்ளவர்களெல்லாம் கூடிப் புறப்பட்டார்கள். அதாவது அயோத்தியா மதுரா மாயா காஞ்சீ அவந்திகா துவாரகா பிருந்தாவனம் பண்டரிபுரம் முதலாகிய திவ்விய ஸ்தலங்களிலிருந்து லக்ஷக்கணக்காய்ப்புறப்பட்டு கெடுவுதினத்தில் காசிவந்துசேர்ந்தார்கள். அப்போது காசியில் எந்தவீதியிலும் ராமநாமஸ்மரணைசெய்துகொண்டு எள்

இரங்க இடமில்லாமல் காசிப்பட்டணமெல்லாம் நிறைந்திருந்தார்கள். ஏககாலத்தில் சாதுஜனங்களெல்லாம் வெள்ளம்போல் புரண்டு வந்ததைக் காசிப்பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லாம் கண்டு அதிக ஆச்சரியப்படத்தலைப்பட்டார்கள். அப்போது சாது ஜனங்களெல்லாம் கபீர் வீட்டை விசாரித்துச்சென்று அவரை தரிசித்து பரமானந்தமடைந்தார்கள். அகஸ்மாத்தாய் அவ்வளவு சாதுக்களும் ஏககாலத்தில் கபீருக்கு தரிசனம் கொடுத்தபடியால், கபீர் மிகவும் சந்தோஷித்து அதிக விநயத்துடன் எழுந்து அவர்களை பலமுறையாய் நமஸ்கரித்து, ஆஹா! இன்று மிகவும் நல்லநாள்; இத்தனைச்சாதுக்களும் அடியேனுக்குத் தரிசனந் தந்து என்னைத் தன்னியனாய்ச்செய்தீர்கள். எந்த புண்ணிய பிரபாவத்தினால் இந்த பரமபாகவத சிகாமணிகளின் தரிசனம் அகஸ்மாத்தாய்ச் சம்பவித்ததோ தெரியாமலிருக்கின்றது என்று பரமானந்த மடைந்து குதித்துக் கூத்தாடிச் சாதுக்களுடன் கூடிக்கொண்டு விநோதமாய் ராமபஜனைகளைச் செய்ய ஆரம்பித்தார்.

அப்போது குட்ரயுக்தி செய்தவர்களெல்லாம் தம் எண்ணம் ஈடேறிற்றென்று மிகவும் சந்தோஷித்துக் கபீருடைய தெருவாசற்படியில் நின்று கபீருடன் பேசிவிட்டு வரும் சாதுக்களால் சங்கதி அறிந்துகொண்டு, இன்னும் சில நேரத்தில் கபீருக்கு, அவமானம் சம்பவிக்குமென்றெண்ணி இங்குமங்குமாய்த்திரிய ஆரம்பித்தார்கள். அப்போது சாதுக்களெல்லோரும் கபீர்வீட்டிற்குள் சென்று க்ஷேமலாபத்தை விசாரித்து வந்தார்களே யொழிய, தம்மை வரவழைத்த காரணத்தை ஒருவரும் கேட்டவர்களல்ல. சாதுக்களைக்கண்ட சந்தோஷத்தினால் இவ்வளவு சாதுக்களும் ஏககாலத்தில் இங்கு வந்ததற்குக்காரணமென்னவென்று கபீரும் அவர்களைக் கேட்டவரல்லர்.

பகவான் கபீர் ரூபமாய்வந்து சாதுசங்கத்தை ஆதரித்தல்.

அப்போது பக்தவத்ஸலனாகிய பகவான் தன்பக்தனை சிலதுர்மார்க்கர்கள் குட்ரயுக்தி செய்வதை அறிந்து "ஓஹோ! நான் இப்பொழுது சும்மாயிருந்தால் கபீருக்குத் தப்பாமல் ஆபத்துவந்து சம்பவிக்கும்; இப்போது காசியில் வந்திருக்கும் மஹாத்மாக்களுக்கு ஏதாகிலும் குறைவுபட்டால் காசியை பரசுராமபிரீதியாய்ச் செய்துவிடுவார்கள். இப்படிப்பட்ட சமயத்தில் நான் கபீருக்கு அவசியமாய் சகாயம் செய்யவேண்டும். இனி ஆலசியம் செய்யலாகாது", என்று நிச்சயித்துக்கொண்டு சாதுவேஷம் தரித்து கபீர் வீட்டிற்கு மெதுவாய் வந்து "கபீர்! என்ன செய்கின்றாய்? நல்லபுத்திமான்தான்! இவ்வளவு சாதுக்களும் இன்னும் போஜனமில்லாமல் உட்கார்ந்திருக்க, நீ அவர்களை விசாரிக்காமல் சும்மாய் உட்கார்ந்திருக்கின்றாய்! எழுந்திரு, எழுந்திரு அவர்களுக்கு வேண்டியபதார்த்தங்களை சித்தப்படுத்து" என்று சொல்லிவிட்டுச்சென்றார். கபீர் அதைக்கேட்டவுடனே திடுக்கிட்டெழுந்து "ஓஹோ! இப்பொழுது என்ன செய்யலாம், நான் எவ்வளவு துர்மார்க்கன்? தூரதேசத்திலிருந்து மிகவும்சிரமப்பட்டு வந்த பாகவதோத்தமர்களுக்குத் திண்டிஎன்ன தீர்த்தமென்னவென்று விசாரிக்காமல் இங்கு தடியனைப்போல் உட்கார்ந்திருக்கின்றேனே. இனி இவர்களுக்குவேண்டிய ஆகாரவஸ்துக்களை சம்பாதிப்பது எப்போ? இப்போதே இரண்டு ஜாமங்களாய்விட்டது. ஆஹா! நான் இவர்கள் விஷயத்தில் எவ்வளவு அபசாரஞ் செய்தேன். கடைசியில் மந்தபுத்தியுடையவர்களின் கதி இவ்வளவே?" என்று விசாரமடைந்து வீட்டிற்குள் சென்று பாரியாளைக்கூப்பிட்டு

சங்கதிதெரிவித்து 'இதற்கு இப்போதென்ன செய்யலாம்?' என்று அவளுடன் யோசித்தார். அதற்குச் சுந்தராதேவி மிகவும் வருத்தமடைந்து பதில் சொல்ல யாதொன்றும் தோன்றாமல் சும்மாய் நின்றிருந்தாள். அப்போது கபீர் மிகவும் வருத்தப்பட்டு "இவ்வளவு சாதுக்களுக்குவேண்டிய சாமக்கிரியைகள் எங்கிருந்து கொண்டுவரப்போகின்றோம்? கையில் ஒருகாசும் இல்லை; இவர்களுக்கு வேண்டிய பதார்த்தங்களுக்காக பொருள் உதவி செய்யப்பட்டவர்களும் ஒருவருமில்லை. சாதுக்களெல்லாம் பசியினால் அவஸ்தைப்படுகின்றார்கள். இப்படிப்பட்ட சமயத்தில் இதோ வாங்கிக்கொள் என்று பத்துரூபாயும் கொடுக்கப்பட்டவர்களில்லை" என்று பலவிதங்களாய் எண்ணி கடைசியில் ஒன்றும் தோன்றாமல், ஸ்ரீராமமூர்த்தியை தன் இருதய கமலத்தில் நிறுத்தி "சீதாபதே! நான் தீனன்; நீர் அபய பிரதாபன்; நான் யாசகன்; நீர் தாதா; நான்பாபி; நீர் க்ஷமாயகன்; நான் துராத்மா; நீர் ரக்ஷகன்; இந்தச் சமயத்தில் நீர்தவிர என்னை ரக்ஷிக்கும் சமர்த்தன் மற்றொருவருமில்லை சரணமென்று சொன்னவுடன் சத்துருவினுடைய தம்பியைக்கைபிடித்து லங்கைகையப்பட்டாபிஷேகம் செய்துவைத்தாய். ஆசிரயித்த சுக்ரீவனுக்கு அபயம் கொடுத்து வாலியைக்கொன்று சுக்கிரீவனை ரக்ஷித்தாய். ரக்ஷிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்ட சமுத்திர ராஜனை ஆதரித்தாய். பக்தியுடன் பிரார்த்தித்த விசுவாமித்திருடைய யாகத்தைப் பூர்த்திசெய்வித்தாய். பாதபரிசத்தினால், பாஷாணரூபமாய் வீழ்ந்திருந்த அகல்லியை பரமபவித்திரமாகச் செய்வித்தாய். புத்திரசோகத்தினால் பிரார்த்தித்த பிராமணனுக்குப் புத்திரனைக்கொண்டுவந்து கொடுத்தாய். முதலையினால் அகப்பட்டுக்கொண்ட கஜ ராஜனை காப்பாற்றினாய். மானபங்கம் செய்யும்போது

உம்மைத் திரௌபதை மனதில் நினைத்தமாத்திரத்தில் அக்ஷய வஸ்திரங்களைத்தந்து ரக்ஷித்தாய். தந்தையை திரஸ்காரஞ்செய்து உன் பிரபாவத்தை வர்ணித்த பிரஹலாதன் வார்த்தையை ஊர்ஜிதஞ் செய்வித்தாய். உச்சிஷ்ட பழங்களைக்கொடுத்த சபரிக்குப் பரமபதம் பிரசாதித்தாய். பிடி அவல் கொடுத்த குசேலனுக்குப் பெரும்பாக்கியத்தைத்தந்தாய். பக்தியுடன் சேவித்த பாண்டவர்களை ரக்ஷித்தாய். பரமசிவனைப் பிடித்துக்கொண்டு பாதித்த பிரம அத்தியை போக்கடித்தாய். தேவதைகளின் பிரார்த்தனையை அங்கீகரித்து, பலிச்சக்கரவர்த்தியை யாசித்து, ஜகத்திரயங்களையும் சம்பாதித்து இந்திரனை அனுக்கிரகித்தாய். பக்தர்களின் இஷ்டானுசாரம் பிரசன்னமாய் பரமார்த்தங்களையெல்லாம் செய்வித்தாய். எப்போதும் உம்மை நம்பியிருக்கும் பக்தர்களுக்கு லோபம் உண்டாவதில்லை. கீர்த்தியானாலும் அபகீர்த்தியானாலும் உம்முடையதே. சிக்ஷிக்கவேண்டுமென்றாலும் அல்லது ரக்ஷிக்க வேண்டுமென்றாலும் நீயே கர்த்தன். புராணபுருஷா! பரமேசுவரா! பரந்தாமா பராத்பரா! பக்தஜந ரக்ஷகா! பவபந்த விமோசனா! ராஜீவ குலோசனா! ராக்ஷசகுல வித்வம்ஸா என்னை ரக்ஷிக்கவேண்டும் என்று பலவாறாகப் பிரார்த்தித்துக் கண்களில் பாஷ்பஜலம் ஆறாய்ப்பெருக்கி சிலநேரம் மெய்மறந்து, மறுபடியும் அறிவையறிந்து தன் பாரியாளையாகிலும் விக்கிரயஞ்செய்து சாதுசந்தர்ப்பணைச் செய்ய நிச்சயித்து, தன் அபிப்பிராயத்தை சுந்தராதேவிக்குத் தெரிவித்து பகவான்மீது பாரம்போட்டு வெளியில் வந்தார்.

அப்போது குட்ரயுக்தி செய்தவர்களெல்லாம், கபீரைத்தம்மிடம் நிறுத்திக்கொண்டு காலக்ஷேபஞ் செய்துவந்தால், தம்மை ஆதரிக்க ஒருவருமில்லையென்று சாதுக்கள்

கோபங்கொண்டு ஜபிப்பார்களென்றும், அதனால், தம் எண்ணம் பூர்த்தியாகுமென்றும் எண்ணிய துர்மார்க்கர்களெல்லோரும் சாது வேஷம்போட்டு, ஓர் ரகசியமானவிடத்தில் உட்கார்ந்து கபீரை அழைத்து வருவதற்காக தம்மில் சிலரை அனுப்பினார்கள். அப்போது அவர்களால் போதிக்கப்பட்டு அனுப்பிய துர்மார்க்கர்கள் மெதுவாய்க் கபீர் வீட்டிற்குவந்து, அப்போதே உள்ளிருந்துவரும் கபீரை துர்மார்க்கர்கள் பார்த்து வினய பூர்வகமாய் நமஸ்கரித்து "ஐயா! தங்கள் தரிசனார்த்தமாய் பதரிகாஸ்ரமத்திலிருந்து வந்த எங்கள் குருவானவர் தங்களிடம் பேசவேண்டிய முக்கியவிஷயம் ஏதோ ஒன்றிருப்பதனால், தயவுடன் உம்மை அழைத்துவரச்சொன்னார். ஆதலால், தயைசெய்து எங்கள் குரு இறங்கியிருக்கும் இடத்திற்குத் தங்கள் பாதங்களுக்குக்கொஞ்சம் சிரமம்கொடுக்க நாங்கள் இப்போது இங்குவந்தோம்; தயவுசெய்புங்கள்" என்று மஹா பயபக்தியுடன் கேட்டுக்கொண்டார்கள். கபீர் அவர்களின் வார்த்தைகளைக் கேட்டவுடனே மிகவும்சந்தோஷித்து 'நல்லது' என்றுசொல்லி அவர்களுடன்கூடவே புறப்பட்டுச்சென்றார். அப்போது கபடசாதுக்கள் பரமானந்தத்துடன் கபீரைஅழைத்துக்கொண்டு தாம் இறங்கியிருக்கும் இடத்திற்குச்சென்று உள்ளேயிருக்கும் சாதுக்களுக்குச் சங்கதிச் சொல்லியனுப்பினார்கள். அப்போது துவாதசோர்த்துவ புண்டரங்களும் கழுத்தில் துளசிமாலைகளும் கையில் ஜபமாலையும் பிடித்துக்கொண்டு ராமநாமத்தை உச்சரித்துக்கொண்டு பெரியசாதுக்களைப்போல் நடித்து, வெளியில்வந்து மிகவும் பயபக்தியுடன் கபீரை உள்ளே அழைத்துச்சென்று, உசிதாசனத்தில் உட்காரும்படிச்செய்து, எல்லோரும் நமஸ்கரித்து யோகக்ஷேமங்களை விசாரித்து, ஏதோ மஹா தெரிந்தவர்களைப்போல், கட்க வேதாந்தங்

களை உபந்நியாசித்து புராணக்கதைகளைப்பேச ஆரம்பித்தார்கள். அவர்களின் இருதயத்திலிருக்கும் வஞ்சனைகள் கபீருக்குத்தெரியாமல் அவர்களை பரம பாகவதோத்தமர்களென்று நிச்சயித்து பரமபக்தியுடன் அவர்கள் உபந்நியசிக்கும் விஷயங்களை எல்லாம் மிகவும்சிரத்தையுடன் கேட்டு சந்தோஷ சாகரத்தில்மூழ்கி சகலமும்மறந்து ஸ்ரீ ராமமூர்த்தியை ஸ்மரணைசெய்துகொர்ண்டிருந்தார். இது நடுவில். அந்தத் துர்மார்க்கர்கள் சாதுக்களிடஞ்சென்று சங்கதிகளை அப்போதைக்கப்போது விசாரித்துக்கொண்டு வருவார்கள்.

அப்போது ஸ்ரீராமமூர்த்தி எத்தனை சாதுக்கள் வந்தார்களோ, அத்தனை கபீர்ரூபங்களைத்தரித்து அவரவர்களின் இஷ்டானுசாரமாய் சேவைசெய்துகொண்டிருந்தார். அவர் மகிமையை அறிந்து புகழத்தக்கவர்கள் யாரிருக்கின்றார்கள்? ஓரிடத்தில் ஸ்நானஞ்செய்விப்பதும், ஓரிடத்தில் வஸ்திரங்களைக்கொடுப்பதும், ஓரிடத்தில் தேவதா அர்ச்சனைக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக்கொடுப்பதும் ஓரிடத்தில் நமஸ்காரஞ்செய்வதும், ஓரிடத்தில் பஞ்சபக்ஷ்ணபாயசங்களுடன் பரிமாரச்செய்வதும், ஓரிடத்தில் சுத்தஜலம் கொடுப்பதும், ஓரிடத்தில் கையலம்பச்செய்வதும், ஓரிடத்தில் படுக்கைகளைப் போடும்படிச் செய்வதும், ஓரிடத்தில் தாம்பூலங் கொடுப்பிப்பதும், ஓரிடத்தில் சந்தனபுஷ்பங்களைக் கொடுப்பதும், ஓரிடத்தில் விசிரியினால் விசுருவதும், ஓரிடத்தில் ஆலிங்கனம் செய்துகொண்டும், ஓரிடத்தில் கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டும், ஓரிடத்தில் நர்த்தனம் செய்துகொண்டும், ஓரிடத்தில் தத்துவவிசாரணை செய்துகொண்டும், ஓரிடத்தில் கோரியவஸ்துக்களையெல்லாம் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டும், ஓரிடத்தில் படுக்கும்படிச் சொல்லிக்கொண்டும், ஓரிடத்தில் உட்கா

ரும்படிச் சொல்லிக்கொண்டும், ஓரிடத்தில் அவர்களுடன் கூடச் சென்றுகொண்டும், ஓரிடத்தில் நின்றுகொண்டும், ஓரிடத்தில் கஞ்சா நிமிட்டிக்கொடுத்துக்கொண்டும், ஓரிடத்தில் சிலும்பியில் நெருப்புவைத்துக்கொண்டும், ஓரிடத்தில் பிரார்த்தித்துக்கொண்டும், ஓரிடத்தில் தத்துவ உபதேசஞ் செய்துகொண்டும், ஓரிடத்தில் துளசி மாலைகளைப் போட்டுக்கொண்டும், ஓரிடத்தில் பல்லக்குச் சுமந்துகொண்டும், ஓரிடத்தில் ஹரிகதைகளைச் செய்துகொண்டும், ஓரிடத்தில் இராமநாமஸ்மரணை செய்துகொண்டும், ஓரிடத்தில் சாஸ்திரங்களை உபந்நியாசித்துக்கொண்டும், ஓரிடத்தில் ரகசியம் விசாரித்துக்கொண்டும், ஓரிடத்தில் சாதுக்களை எல்லாம் சந்தோஷிக்கச்செய்துகொண்டும், ஓர் சூரியனை அனேக நீர்க்குடங்களில் பிரதிபலித்து அனேக சூரியர்களாய்த் தோன்றுவதுபோல், பக்த ரக்ஷணார்த்தமாய் ஓர் பகவானே அனேக கபீர் ரூபங்களைத்தரித்து பரமானந்தகரமாகிய அனேக விநோதங்களைச் செய்துகொண்டு வந்தார். முன் கிருஷ்ணாவதாரத்தில், கோபிகைகள் கோபித்துப் பகவான்மீது குற்றங்களைச்சுமத்தி அடிக்கடி யசோதையினிடம் கோள்சொல்லி வந்ததுபோலும், பிரமதேவர் அவரைப் பரிசோதிக்கப்பதற்காகஎண்ணி கோக்களையும் கோபாலர்களையும் ஒளித்துவைத்ததுபோலும், நாரதர் இவரைப் பரீக்ஷிப்பதற்காக பதினாயிரம் கோபஸ்திரீ வீடுகளில் கண்டபோதும் அநேக ரூபங்களைத்தரித்து லீலைகளைச் செய்ததுபோலும், இப்போது இவர் கபீரினுடைய பக்திக்குமெச்சி கபீரைப்போல் அனேக ரூபங்களைத்தரித்து சாதுக்களை சந்தோஷப்படுத்துவது, ஓர் பெரிதாகிய காரியமா யிராவிட்டாலும், கலியுகத்தில் நினைத்த காரியங்களுக்கெல்லாம் ஓடிவந்து நிறைவேற்றும்படியாகத் தனக்குள் ஐக்கியம்செய்துகொண்ட கபீரினுடைய பக்திக்கே மிகவும்

ஆச்சரியப்படவேண்டும். எங்கும் நிறைந்திருக்கும் சாதுக்களுக்கெல்லாம் விருந்துமுதலாகிய விநோதங்களைப் பிரபலமாய் நடத்திவைத்ததைப்பார்த்தால், இது, இரண்டாவது பரமபதம்போல் நேத்திரோச்சவமா யிருந்தது. பிறகு கபீரை ஜாக்கிரதைப்படுத்துவதற்காக ஸ்ரீராமமூர்த்தி சாதுவேஷந்தரித்து வேண்டுமான வரையில் போஜனபதார்த்தங்களை, ஆள்களால் எடுப்பித்துக்கொண்டு. கபீரைத் தங்களிடம் வைத்துக்கொண்டிருந்த வஞ்சகர்களிடம் வந்து, அவைகளையெல்லாம் அந்தத் துர்மார்க்கர்களிடம் கொடுத்து "சீக்கிரம் சமைத்துப் போஜனஞ்செய்யுங்கள்" என்றுசொல்லிக் கபீருக்கு வந்தனஞ்செய்துச் சென்றனர். அதற்கு முன்னமே சாது சந்தர்ப்பணை நடக்குமிடத்திற்குச்சென்று சங்கதிகளைத் தெரிந்துகொண்டதற்குத் திருஷ்டாந்தமாய் தாமிருக்கும் இடத்திலேயே போஜனபதார்த்தங்கள் வந்ததைப் பார்த்தவுடனே அதிகஆச்சரியப்பட்டு யாதொன்றும் தோன்றாமல் ஸ்தம்பம்போல் நின்றிருந்தார்கள்.

இந்தக் கள்ளசாதுக்களுக்குப் பதார்த்தம் கொண்டுவந்துகொடுத்த சாதுவை, கபீர்பார்த்து திக்பிரமையடைந்து, தான்வந்தகாரியத்தை நினைத்துக்கொண்டு சாதுக்களின்கதி என்னமாயிற்றோவென்று வருத்தமடைந்து, திடீரென்றெழுந்து கபட சாதுக்களிடஞ் செலவுபெற்றுக்கொண்டு மெதுவாய் வீடுசேர்ந்து, அங்கு இராசி இராசிகளாய்க் குவித்திருக்கும், கோதுமைமா கடலைமா உப்பு பருப்பு பாதம்பருப்பு வெள்ளைச்சர்க்கரை கற்கண்டு திராக்ஷை ஏலக்காய் குங்குமப்பூ பதார்த்தங்கள் வெண்ணெய் நெய் பால் தயிர் முதலாகிய வஸ்துக்களையெல்லாம் பார்த்து, அதிசயப்பட்டு இப்படிப்பட்ட சமயத்தில் இவ்வளவு சாமக்கிரியைகளைக் கொண்டுவந்து கொடுத்தவர்கள்

யாவரா யிருப்பார்கள்? கேட்காதமுன்னமே இவைகளையெல்லாம்கொண்டுவந்து கொடுக்கும் பரம ஆப்தர்கள் யாரிருக்கின்றார்கள்? இவைகளையெல்லாம் பார்த்தால் ஸ்ரீ ராமமூர்த்தி அனுக்கிரகமேயென்று சந்தேகமில்லாமல் தோன்றுகின்றது. ஆனபோதிலும் விசாரித்துச் சங்கதியைத் தெரிந்துகொள்ளலாம் என்றுஎண்ணி சுந்தராதேவியைக் கூப்பிட்டு "சுந்தரா! இந்த சாமக்கிரியைகள் ஏது? இவைகளையெல்லாம் கொண்டுவந்துகொடுத்தவர்கள் யார்? சீக்கிரமாய்ச்சொல்!" என்றுகேட்டார். அதற்குச்சுந்தராதேவி மிகவும் ஆச்சரியப்பட்டு, சொல்ல நாவெழாமல், சில நேரம் சும்மாயிருந்து பிறகு, "பிராணநாதா! இப்பொழுது நீர் கேட்கும் விஷயம் பார்த்தால் மிகவும் சந்தேகமாயிருக்கின்றது! இவைகளை எல்லாம் வாங்கியனுப்பினவர் நீரல்லவா? வாங்கியனுப்பினவர் நீராயிருந்தும், மறுபடியும் இவ்வாறு கேட்பதேன்? இராமநாம பஜனையினால் சொக்கியிருப்பதனால், ஒருவேளை இதை மறந்தீரோ என்னமோ தெரியவில்லை, சற்றே யோசித்துப்பாருங்கள்" என்று மிகவும் வணக்கமாய்ச் சொல்லினள். அப்போது கபீர் கலவரப்பட்டு "என்ன! நான் வாங்கியனுப்பினேனா? நானா வாங்கி யனுப்பினேன்? நான் வாங்கியனுப்பினேனென்று உன்னிடம் சொன்னவர்கள் யார்? அதை சற்றே தெரியச் சொல் பார்ப்போம்?" என்றுகேட்டனர். அதற்குச் சுந்தராதேவி "தாங்கள் என்னுடன் ஆலோசித்து இங்கிருந்து சென்ற சிலநேரத்திற்கெல்லாம் ஓர் சாது இந்த சாமக்கிரியைகளை யெல்லாம் வண்டியில் ஏற்றிக்கொண்டு நம் வீட்டில் இறக்கினர். இவைகளெல்லாம், ஏது என்று நான் கேட்டதற்கு தங்கள் பெயரைச்சொல்லித் தாங்களே வாங்கிக்கொடுத்ததாகவும் சாதுக்களுக்கெல்லாம் யதேஷ்டமாய்ச் சமைத்துப் போடும்படியாகவும், இதற்குள் தாங்களும் வரு

வீர்களென்றும், சாதுக்களை விசாரிக்கத் தன்னை ஏற்படுத்தியிருப்பதனால், தான் சீக்கிரமாய்ப்போகவேண்டுமென்று சொல்லி சாதுக்களுக்குப் பதார்த்தங்களைக் கொடுக்க சில மனிதர்களை இங்கு நியமித்துத் தாம் சென்றுவிட்டார்" என்று சொல்லி "இந்த விஷயங்கள் ஒன்றும் தங்களுக்குத் தெரியாதா?" என்று விசாரித்தனள்.

அவ்வார்த்தைகளைக் க்பீர் கேட்டவுடன் மிகவும் ஆச்சரியப்பட்டுப் பாரியாளைப்பார்த்து "நல்லது, இந்த பதார்த்தங்களையெல்லாம் கொண்டுவந்துக் கொடுத்த சாது எவ்விதமாயிருந்தாரோ? சற்றே தெரியச்சொல் பார்ப்போம்" என்றுகேட்டனர். அதற்குச் சுந்தராதேவி சொல்லுகின்றாள். "அவர்முகலக்ஷணத்தைப்பார்த்தால், உலகத்தையெல்லாம் காப்பாற்றப்பட்ட சார்வபௌமனென்று தோன்றியது. அவர் வாக்கோ அமிருதவசனமாயிருந்தது. அவரது சரீரசாயை நீல மேகம்போல் பளபளவென்றிருந்தது. முகம் சந்திரபிம்பம்போலிருந்தது. கண்கள் வெண்தாமரை ரேகைபோல் விசாலமாயிருந்தது. மார்பு மிகவும் விசாலமாய் லக்ஷ்மிவாஸஸ்தலமா யிருந்தது. சுந்தரமாகிய கைசள் முழங்கால்வரையில் நீண்டிருந்தன. எதனாலேயோ முழங்கைகள் காய்காய்த்திருந்தன" என்று சொல்லினள்.

சுந்தரா சொல்லியலக்ஷணங்களையெல்லாம் கேட்டவுடனே கபீர் மிகவும் வருத்தமடைந்து "ஹா! நான் எவ்வளவு புத்தியில்லாதவன்! அனியாயமாய் மோசம் போனேன்; சாதுக்களை நான் கவனிக்காமல் உட்கார்ந்திருந்தபோது, சாதுக்களை விசாரிக்காமல் சும்மாயிருக்கின்றாயென்று முன்வந்து சொல்லிவிட்டுச்சென்றாய்! மறுபடியும் பதரிகாசிரமத்திலிருந்து வந்திருந்த சாதுக்களிடம் உட்கார்ந்திருந்தபோது, அவர்களுக்குப் பதார்த்தங்களைக்

கொண்டுவந்துகொடுத்து எனக்கு வந்தனம்செய்து கம்பீரமாய்ச்சென்றுவிட்ட மஹாபுருஷனே, இப்போது இத்தனைக் காரியங்களையுஞ்செய்திருக்கின்றார், அறிவீனத்தினால் அவர் இப்படிப்பட்டவரென்று அடையாளம் பிடிக்காமல்போனேன். இந்த ஆபத்துக்காலத்தில் என்னை ரக்ஷிப்பதற்காக இந்த வேஷத்துடன் வந்தவர் பக்தவச்சலனான ஸ்ரீராமமூர்த்தியேயொழிய, மற்றொருவரல்ல'' என்று நிச்சயித்துக்கொண்டு அபாரமாகிய சந்தோஷத்தில் மூழ்கி "ஹா! தந்தையே! உன் கிருபாகடாக்ஷத்தை வருணிக்க நான் எவ்வளவுமாத்திரன்? ஆர்த்தஜந சரண்யனென்னும் பட்டம் உமக்கேதகும். ஆசிரியிப்பவர்களைப் போஷிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டவரென்னுஞ் சங்கதி இன்று தெளிவாய்த்தெரியவந்தது. ஓ, தீனபந்தோ! உன் குமாரர்களிடம் உனக்கு எவ்வளவு கனிகரம்உண்டாயிருக்கின்றது! சர்வ அந்தர்யாமியாய் சர்வசக்தனாய் ஆதியந்தரகிதனாயிருந்தும், உன் பக்தர்களின்மேலிருக்கும் கருணாகடாக்ஷத்தை யானென்னவென்றுரைப்பேன்? நீ பாபபரிகாரகன்; பக்தவச்சலன்; பவபந்தவிமோசனன்; கலியாணகுணமுடையவன்; தேவதாமௌனி; உன் மகிமையை அறிய பிரமாதிதேவதைகளுக்கும் சாத்தியமில்லை'' என்று பற்பல விதங்களாய்ப்புகழ்ந்து, அவரை ஜாதுஜனக் கூட்டத்தில் கண்டுபிடிக்க ஆரம்பித்தார்.

அங்கு துர்மார்க்கர்களாகிய சாதுக்கள் தங்களுக்குக் கொண்டுவந்துகொடுத்த வஸ்துக்களைஎல்லாம் பார்த்து, அதிசயப்பட்டு கபீர் அதிரகசியமான இடத்திலிருந்த சங்கதி எவ்விதமாய் அறிந்துகொண்டார்களோவென்று பயந்து அங்கிருந்து புறப்பட்டுச் சாது சந்தர்ப்பணைச் செய்யுமிடத்திற்குவந்து, அங்கு நடக்கும் வினோதங்களையெல்லாம்பார்த்து வெட்கப்பட்டு, இது மிகவும் விசித்திர

மாயிருக்கின்றது! 'தான் ஒன்றுநினைத்தால் தெய்வமொன்று நினைக்கும்' என்னும் வாக்கியம் இப்போது நிச்சயமாயிற்று. தன் கிருக கிருத்தியங்களையே சமாளிக்கக்கூடாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த கபீர், ஏககாலத்தில் இத்தனை சாதுக்களுக்கு வேண்டிய பதார்த்தங்களை சம்பாதித்தானென்பது நம்பத்தகுந்ததல்ல. இதன் ரகசியத்தைக் கண்டறிய நமது புத்திக்கு எட்டாததாயிருக்கின்றது. இவ்வளவு சொற்பநேரத்தில் இப்படிப்பட்ட மகத்தான சாமான்களைச்சேகரிக்க கோடீஸ்வரனாலும் சாத்தியமாகமாட்டாது! இவைகளையெல்லாம் யோசித்துப்பார்த்தால், ஏதோ மாயையாயிருப்பதுபோல் தோன்றுகின்றது. ஏதோ பூதம் இவனுக்கு வசப்பட்டிருக்கவேண்டும். அல்லது ரசவாத வித்தையாகிலும் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். இவ்விரண்டில் ஏதாகிலும் ஒன்றில்லாவிட்டால், இப்போது இந்தக்காரியம் நடந்திராது'' என்று வருத்தப்பட்டு சாதுஜனங்கள் இருக்கும் இடங்களுக்கெல்லாம் திரிந்து திரிந்து பார்த்துக்கொண்டு அங்கு நடக்கும் வினோதங்களையெல்லாம் மிகவும் ஆச்சரியமாய்ப் பார்த்துக் கொண்டுவந்தார்கள்.

சாமான்களைக் கொண்டுவந்துகொடுத்த சாதுவைக் கபீர் கண்டுபிடிப்பதற்காக நித்திரை ஆஹாரமில்லாமல், அங்கங்குள்ள சந்துகளில் இறங்கியிருக்கும் சாதுக்களின் கூட்டங்களிலெல்லாம் நுழைந்துநுழைந்துப் பார்த்து எதிர்ப்பட்ட சாதுக்களையெல்லாம் நமஸ்கரித்துக்கொண்டு, தான் தேடிக்கொண்டிருக்கும் சாதுவினுடைய அடையாளங்களையெல்லாம் சொல்லி, அவர் எங்கிருக்கின்றாரென்று கேட்டுக்கொண்டே ஓரிடத்திலும் கால்நில்லாமல் வலை போட்டுத் தேடுவதுபோல்தேடியும் எங்கும்காணவில்லை. இப்படி இரவும்பகலும் மூன்றுதினங்களாய்த் தேடியும்

தன்னிஷ்டம் பூர்த்தியாகாததனால், நான்காம்நாள் ஓரிடத்தில் நின்று வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது, சாதுக்களெல்லாம் தங்களிருப்பிடம் செல்லுகின்றார்கள் என்னும்வார்த்தை கபீர்காதில்கேட்டவுடனே, அளவில்லாததுக்கம்உண்டாய் நான் எவ்வளவுதுஷ்டன்! பக்திபூர்வகமாய் பாகவதோத்தம கைங்கரியஞ்செய்ய எனக்குப் பிராரப்தமில்லாமல்போயிற்று? சீ! இனி, இந்தத் தேகம் இருப்பதனால் பலனென்ன? பகவான் சேவை கிடைக்காமல்போனதுமேயல்லாமல், பாகவதர்களின் பாததூளியும் கிடைக்காமற்போயிற்றல்லவா? என்று மனதில் மிகவும்வருத்தப்பட்டு தைரியம்போதாமல், ஓவென்று பெருத்தகூச்சலுடன் அழ ஆரம்பித்தார். அப்போது சாதுக்களெல்லாம் ஓடிவந்து கபீரைச் சமாதானப்படுத்தி "ஐயா! ஏன் அழுகின்றீர்? நீர் பரமபாகவதர்; உமதுபாததூளி பட்டஇடமெல்லாம் திவ்யஸ்தலம். இந்தக் காசியில்உள்ளவர்கள் எவ்வளவுபுண்ணியவான்களோ தெரியவில்லை. சதா உன் தரிசனஞ் செய்துகொண்டு ஆனந்தத்தை அநுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட மகாநுபாவனை நீர், இப்படி அழுவதேன்? சற்றே தெரியச்சொல்லவேண்டும்" என்றுகேட்டார்கள். அப்போது கபீர் சாதுக்களெல்லோரையும் நமஸ்கரித்து "சத்புருஷர்களே! அடியேனுடைய குற்றத்தை மன்னித்து ரக்ஷிக்கவேண்டும். சாதுக்களுக்கெல்லாம் எவ்வளவோ விசுவாசத்துடன் பதார்த்தங்களைக் கொண்டுவந்து கொடுத்து சந்தோஷிக்கச்செய்த பரமசாதுவைக் கண்டு பிடிக்கவேண்டுமென்றுஎண்ணி பிரக்ஞையில்லாமல் திரிந்துகொண்டிருந்தபடியினால், தங்கள் பாதசேவைசெய்ய மறந்தேன். மூன்று தினங்களாய் அந்தச்சாதுவை தேடினேனேயொழிய, அவர்ஜாடை எங்கும் அகப்படவில்லை. இதற்

குள், நீங்களெல்லோரும் உங்கள்தேசம் போகின்றீர்கள் என்று கேட்டவுடனே, அதிகதுக்கம்உண்டாயிற்று" என்று சொல்லி பரிதாபப்படஆரம்பித்தார். அவ்வார்த்தையைக்கேட்டவுடனே சாதுக்களெல்லாம் அதிக ஆச்சரியப்பட்டு "ஓஹோ! இதென்ன? நீர்சொல்லும் வார்த்தையைக்கேட்டால், மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது! நாங்கள் இங்கு வந்ததுமுதல் இதுவரையில், ஒருநிமிஷமாகிலும் எங்களை இணைபிரியாமல், எங்களுடன்கூடவேயிருந்துகொண்டு எங்களுக்குவேண்டிய பதார்த்தங்களெல்லாங் கொடுத்து, சகலவுபசாரங்களும் லோபமில்லாமல் நடத்திச் சந்தோஷப்படுத்தினீர். உம்மால் மிகவும்கௌரவமாய் உபசரிக்கப்பட்டு, சந்துஷ்டிஅடைந்தவர்களெல்லோரும் இதோயிருக்கின்றோம் பாருங்கள். எங்களுக்குச் சேவை செய்யவில்லை என்று நீர் துக்கப்படுவதற்குக் காரணமென்ன? அவரவர்கள் கோரிய பதார்த்தங்களையெல்லாம் அவரவர்களுக்கு இப்போதேகொடுத்தீரல்லவா? இதற்குள் அந்தவிஷயங்களை எப்படிமறந்துவிட்டீர்?" என்றுசொல்லி, இதுவரையில் பகவான் கபீர்ரூபமாய்வந்து உபசரித்துக் கொடுத்த வஸ்திர பூஷணங்களையெல்லாம் கபீருக்குக் காட்டி, "இவைகளையெல்லாம் நீர் எங்களுக்கு இப்போது கொடுக்கவில்லையா?" என்று எல்லோரும் ஒரேவாக்காய்ச் சொல்ல ஆரம்பித்தாகள்.

அப்போது கபீர் சாதுக்களைப்பார்த்து "ஐயமார்களே! தங்களுக்கு என்மீதிருக்கும் பிரமையினால், இவ்வாறு சொல்லுகின்றீர்களேயொழிய, நிச்சயமாய்த் தங்களுக்கு நான் எந்த வுபசாரங்களுஞ் செய்தவனல்ல. முக்கிய நாயகனைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று அங்குமிங்குமாய் ஓடித்திரிந்துகொண் டிருந்தேன். நான் இப்பொழுது யாரைத் தேடிக்கொண்டிருக்கின்றேனோ, அந்த மகாநு

பாவனே தங்களுக்கு உபசாரகௌரவங்களையெல்லாம் நடப்பித்தவர். இது வாஸ்தவமானசங்கதி'' என்றுசொல்லினர். அதைக்கேட்டவுடன் சாதுக்களெல்லோரும் கல்லென்று சிரித்து ''ஓஹோ! நீரல்லாமல் மற்றொருகபீரும் இருக்கின்றார்போல்காணப்படுகின்றது! அவரேவந்து இதுவரையில் எங்களை ஆதரித்திருக்கவேண்டும். சரி சரி; நன்றாயிருக்கின்றது! இப்போது எதனாலேயோ நீர் பிரமை அடைந்தவர்போல் இருக்கின்றீர். சமஸ்த உபசாரங்களும் செய்தவர் நீரே என்று நாய்கள் வாஸ்தவமாய்ச்சொல்லியும், எங்கள் பேச்சைக்கேளாமல், பயித்தியம்பிடித்தவரைப்போல் சொல்லி விருதா விசனப்படுகின்றீர். நாங்களெல்லோரும் இவ்வளவு சீக்கிரமாய்ச் சென்றுவிடுகின்றோமென்னும் எண்ணத்தினால், இவ்வாறு சொல்லுகின்றீரோ என்னமோ தெரியவில்லை. நாங்கள் சென்றுவிடுவதே உம் விசனத்திற்கு முக்கியகாரணமாயிருக்கின்றது. நாங்கள் இங்குவந்து மூன்று நாளாயிற்று. இந்த மூன்றுநாளும் நீர் எங்களை இடைவிடாமல் உபசரித்துவந்தபடியால் மிகவும் சந்தோஷமடைந்தோம். அதனால், எங்களுக்கு மிகவும் திருப்தியாயிற்று. இதைவிட விசேஷம் எங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று மிகவும்வணக்கமாய்ச்சொல்லினர்கள். அதற்குக் கபீர் மிகவும் விசனத்துடன் மறுபடியும் சாதுக்களை நமஸ்கரித்து ''சுவாமிகளே! நான் இதுவரையில் உங்களிடஞ்சொல்லிய விஷயங்கள்பொய்யல்ல. இவ்வளவு சாதுக்களின் இஷ்டத்தைப்பூர்த்திசெய்ய நான் எவ்வளவு சக்தியுடையவன். என்னிடத்தில் அதிகதயையுடையவராய் இவ்வளவுகாரியங்களையும் நடப்பித்து என்னை ரக்ஷித்த மஹானுபாவன், இந்தச் சாதுக்கள்கூட்டத்தில் எங்கேயோ ஒளிந்திருக்கின்றார். நான் எங்கெங்கு தேடியும் என் கண்களுக்கு அகப்படாமலிருக்கின்றார்.'' என்றுசொல்லினர்.

அப்போது சாதுக்களெல்லாம் சந்தேகப்பட்டும், இவ்விஷயத்தைச் சற்றேவிசாரித்து இதன்நிஜஸ்திதியை அறிய வேண்டுமென்று நிச்சயித்து ''அந்தச் சாது யாரோ! தேடிக்கண்டுபிடிப்போம் வாரும்'' என்று கபீரைக்கூட அழைத்துக்கொண்டு, சாதுக்கள் இறங்கியிருக்கும் இடங்களெல்லாம் தேட ஆரம்பித்தார்கள். அப்போது ஸ்ரீராமமூர்த்தி இனி, கபீருக்குத் தரிசனங்கொடாவிட்டால், பிராணத்தியாகஞ் செய்துகொள்வானென்றெண்ணி, முன் கபீருக்குக்காணப்பட்ட சாதுவைப்போல், வேஷம்தரித்து தன் சிஷ்யவர்க்கங்களுடன் ஓரிடத்தில் மஹா வைபவத்துடன் வீற்றிருந்தார். சாதுக்களெல்லாம் கபீருடன் கூட சந்துகளிலெல்லாம் திரிந்துத் திரிந்து, கடைசியில் பகவான் கொலுதீர்ந்து உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு வந்து ''நீ சொல்லியசாது இவர்தானா? பார்'' என்று பகவானைக் காட்டினார்கள். கபீர் அவரைப்பார்த்தவுடனே பரமானந்தமடைந்து, ஓடி அவர்பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து, ''புருஷோத்தமா! என்னை மிகவும்கஷ்டப்படுத்த இந்த மூன்றுதினங்களாய் எங்கு ஒளித்துக்கொண்டிருந்தீர்? அனேகதடவைகளில் நான் இங்குவந்து பார்த்தேன்! அப்போது நீர் இங்குஇல்லாமலிருந்தீரே! இதற்குள் எங்கிருந்துவந்து இங்குஉட்கார்ந்துகொண்டீர்? இப்படிப்பட்ட மாயைகள் செய்யாவிட்டால், உமக்கு கௌரவம் உண்டாகமாட்டாதுபோல் காணப்படுகின்றது. உமக்கு என்னிடத்திலிருக்கும் பிரேமை என்னவென்றுசொல்வேன்! இவ்வளவு சாதுக்களுக்கும் ஏககாலத்தில் எவ்வளவு மாத்திரமும் லோபம்வாராதபடி என்னைப்போன்ற அனேக ரூபங்களைத்தரித்து உபசரிக்கஆரம்பித்தீர்! இலங்கையில் மூலபலசைன்னியத்தில் ஓர் இராமபாணத்தைப் பிரயோகஞ் செய்து, ஒருவன் கண்ணுக்கு மற்றொருவன் இராமனாய்க்

காணும்படி மூலபல சைன்னியங்களுக்கெல்லாந்தோன்றும்படிச் செய்து அவர்களையே ஒருவரோடொருவர் யுத்தஞ் செய்வித்து, ஒரு நிமிஷமாத்திரத்தில் நிர்மூலஞ்செய்வித்தவுமக்கு என்னைப்போன்றரூபம் அனேகமெடுத்து லீலைசெய்வது பெரிதோ! சர்வலோகபூஜிதனாகிய உம்மால் கௌரவப்படுத்தி பூஜிக்கப்பட்ட இந்தசாதுக்கள் எவ்வளவு பரிசுத்தர்கள்! பக்தி பிரபாவத்தை பாமரர்களுக்கு காட்ட எண்ணி இப்படிப்பட்டமகத்தாகிய காரியத்தைச் செய்வித்திரேயொழிய, என்னைப்போன்ற துராத்மாவிற்காக அல்ல. ஐயோ! நான் எவ்வளவு பாபாத்மன்? புராண புருஷனை உன்னைப் பரிசாரவேலைக்கு அனுப்பி நான் விருதாவாய்த் திரிந்துகொண்டிருந்தேனல்லவா! ஆஹா! எப்படிப்பட்ட பாபகாரியத்தில் பிரவேசித்தேன்! உன் நாமத்தை உச்சரித்தமாத்திரத்தில் என்பாபகர்மங்களெல்லாம் நீங்கும்படி வரம் அனுக்கிரகிக்கவேண்டும்'' என்று வெகுவிதங்களாய்ப் பிரார்த்தித்தனர்.

அப்போது, கபீர் புகழ்ந்துகொண்டிருக்கும் பகவானை சாதுவை, மற்ற சாதுக்களெல்லாம் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு, "இந்தச் சாதுசிரோன்மணி யாரென்பதுந்தெரியவில்லை. இவர் விஷயம் நாம் இதுவரையில் கண்டதும் கேட்டதும் இல்லை. இவர் வேஷத்தைப் பார்த்தால், கோசலதேசவாசியாய்க் காணப்படுகின்றது; இவர் தேஜசு மிகவும்அற்புதமாயிருக்கின்றது. இவர் சாமான்யமானவரல்ல. தேவதா புருஷனாயிருக்கலாமென்று எல்லோரும்நிச்சயித்து, இவரே இதுவரையில் கபீர் ரூபமாய் வந்திருக்கலாம்என்று தீர்மானித்து, இவர் சரீர லக்ஷணங்களைப்பார்த்தால், ஸ்ரீராமமூர்த்திக்குச் சொல்லப்பட்ட லக்ஷணங்களெல்லாம் காணப்படுகின்றது'' என்று பலவிதங்களாய்ச்சொல்லஆரம்பித்து மயிர் சிலிர்த்து சாது

வின்சௌந்தரிய வைபவத்தைப்பார்க்கப்பார்க்க ஆசை தீராமல், இமைகொட்டாதபடிப்பார்த்து நிச்சேஷ்டர்களாய் நின்றுகொண்டிருந்தார்கள். அட்போது பகவானை சாது, சாது கூட்டங்களைஎல்லாம் குளிர்ந்த பார்வையுடன்பார்த்து, சாதுவேஷத்தைநீக்கி தன் நிஜசொரூபத்துடன் வீற்றிருந்தார். பகவானுடன் கூடியிருந்த சாதுக்களெல்லாம் தண்ட கமண்டலங்களுடன் ரிஷிரூபமாய்த் தரிசனம்கொடுத்தார்கள். அப்போது கபீரும் சாதுக்களும் "ஜய ஸீதாராம்'' "ஜய ஸீதாராம்,'' என்று கைத்தாளம்போட்டு ஆனந்தநர்த்தனம் ஆடஆரம்பித்தார்கள். சுரர்கள் புஷ்பமழைப் பெய்வித்தார்கள். தும்புரர் நாரதர்கள் மிகவும் சம்பிரமமாய் வீணைகளைமீட்டி இராமநாம மகிமையை கீதாரூபமாய்ப்பாடினார்கள். அப்போது ஸ்ரீராமமூர்த்தி கபீரை ஆலிங்கனஞ்செய்துகொண்டு "பிரம்மானந்தத்தைஅடைவாய் என்று ஆசீர்வதித்து முனிவர்க்கங்களுடன் அந்தர்தானமானார்கள். அப்போது சாதுக்களெல்லாம் பரமானந்தமடைந்து கபீரை காடாலிங்கனம் செய்து "மஹாத்மா! இன்று உமது அனுக்கிரகத்தினால் பிரமாதி தேவர்களுக்கும் துர்லபமாகிய பகவத்தரிசனம் செய்து தன்னியர்களானோம். எங்கள்ஜன்மம் கடைத்தேறியது. உம்மைப்போன்ற பரமபாகவதர்கள் யாரும் இவ்வுலகத்தில்இல்லை. சத்குண சத்பிரவர்த்தனையுடைய சத்புருஷர்கள் பலர் இருக்கின்றார்களேயொழிய, உம்மைப்போல்பகவானை வசப்படுத்திக்கொண்டவர்கள் யாருமில்லை. உமதுசரித்திரம் அதிகபவித்திரம். உமது ஜென்மம் அதிகதன்னியம். உமது சகவாசத்தினால், நாங்களெல்லோரும் கிருதார்த்தர்களானோம். ஸ்ரீராமமூர்த்திக்கு உம்மிடத்திலிருக்கும் கருணைபோல், மற்றொருவரிடம் இராதென்று எங்கள்புத்திக்குத் தோன்றுகின்றது. நீர் பரம

புண்ணியாத்மா ; நீர் நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் கண்களுக்கு இரப்பையைப்போல் இருந்து உமது காரியத்தையெல்லாம் பகவான் செய்து வருகின்றார். நீர் தர்மரக்ஷணார்த்தமாய் அவதரித்த சுகயோகியேயொழிய, அன்னியமானவரல்ல. உமதுமகிமையை வர்ணிக்க நாங்கள் எவ்வளவுசக்தர்கள்'' என்று பலவிதங்களாய்க் கபீரைப் புகழ்ந்து "ஜயஜய கபீர்'' "ஜயஜய கபீர்,'' என்று சொல்லிக் கூத்தாடினார்கள்.

அப்போது குட்ரயுக்திசெய்த துர்மார்க்கர்கள் தங்கள் கண்களின் முன்பாய் நடந்த விஷயங்களை யெல்லாம் பார்த்து முகம்வெளுத்து தேகம்வியர்த்து "ஆஹா! நாம் எவ்வளவு பாபத்திற்கு ஆளானோம். விவேக சூன்யத்தினால் எவ்வளவுகாரியத்திற்கு உட்பட்டோம். இவர் இப்படிப்பட்ட மஹானுபாவரென்று கொஞ்சமாகிலும் யோசிக்காமல், அவசரப்பட்டோம். ஸ்ரீராமமூர்த்தியே இவருக்கு இவ்வளவு சகாயம்செய்யும்போது இனி இவருக்குக் கெடுதிசெய்யும் தீரர்கள் யாரிருக்கின்றார்கள். பொறாமைக்குணம் நம்மை இக்கதிக்குக் கொண்டுவந்து விட்டது. நடந்தேறிய விஷயங்களைக்குறித்து, இனி யோசிப்பதனால், பலனென்ன? நாம் இப்போது இவரைச் சரணமடைவதே உத்தமம்; இல்லாவிட்டால், கெடுதிவந்து சம்பவிக்காமல்போகாது என்று பலவிதங்களாய் எண்ணி கடைசியில் ஓர்விதமாய் மனதைத் திடப்படுத்தி, மெதுவாய், கபீரிடஞ்சென்று சாஷ்டாங்கமாய்விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று, "நாங்களெல்லோரும் சரணமடைந்தோம்; எங்களைக் காத்துரக்ஷிக்கவேண்டும். அஞ்ஞானத்தினால், நாங்கள் தங்களுக்கு பெறுத்த அபசாரத்தைச்செய்தோம். தாங்கள் தயாபூரண இருதயமுடையவராதலால், எங்கள் குற்றங்களை யெல்லாம் மன்னித்து, எங்களை தன்

னியர்களாகச் செய்யவேண்டும்'' என்றுபிரார்த்தித்து எல்லோரும் கேட்கும்படி தாங்கள் செய்த துஷ்டகாரியங்களை யெல்லாம் ஒன்றையும் ஒளிக்காமல் சொல்லித் துக்கப்பட ஆரம்பித்தார்கள்.

துஷ்டர்களுக்குக் கபீர் தத்துவோபதேசஞ் செய்தல்.

அப்போது கபீர் மிகவும் பிரீதியுடன் அந்தத் துஷ்டர்களை ஆதரித்து "பயப்படவேண்டாம்'' என்று அபயம் தந்து 'புண்ணியாத்மாக்களே! உங்கள் நல்ல பிரயத்தனத்தினால் தான், இந்த துர்மார்க்கனுக்கு பரம பாகவதர்களினுடையவும், பகவானுடையவும் தரிசனம் இவ்வளவு சுலபமாய் லபித்தது. நீங்கள் மஹாவுபகாரஞ்செய்தவர்களே யல்லாமல், அபகாரஞ்செய்தவர்களல்ல. நீங்கள் செய்த உபகாரத்திற்கு, நான் என்ன பிரதியுபகாரஞ் செய்யப் போகின்றேன்? மிகவும் சந்தோஷத்துடன் உங்களை நமஸ்கரிக்கின்றேன். உங்களை ஸ்ரீராமமூர்த்தி ரக்ஷிப்பாராக'' என்று சந்தோஷ மனதுடன் ஆசீர்வதித்தார். அப்போது துஷ்டர்களெல்லாம் அவரது மனோநிடத்தை அறிந்து, ஆஹா! இப்படிப்பட்ட பரிசுத்த மனமுடையவரென்று அறியாமல், துரோக காரியத்திற்கு மடிபிடித்துப் வியர்த்தமாய்ப் பாபத்தைச் சம்பாதித்துக்கொண்டோமல்லவா? என்று பச்சாதாபப்பட்டு, மறுபடியும் கபீர் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து, "நாங்கள் கடைத்தேறுவதற்காக ஏதாகிலும் உபதேசித்துக் கிருதார்த்தர்களாகச் செய்யவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார்கள். பிறகு கபீர் மந்தகாசஞ்செய்து "ஐயமாரே! உங்களுக்குத்தெரியாத ரகசியங்களிருக்கின்றனவா! ஆயினும் என்னைப் பெருமைப்

படுத்திக் கேட்கின்றீர்கள். ஆதலால், எனக்குத்தெரிந்த வரையில் உங்களுக்குச் சொல்லுகின்றேன், அதைச்சாவதனமாய்க் கேளுங்கள் என்று சொல்லி பின்வருமாறு சொல்ல ஆரம்பித்தார். உலகத்தில் சிருஷ்டிசெய்திருக்கப் பட்ட எல்லா ஜந்துக்களிலும், மானவஜன்மமே மிகவும் சிரேஷ்டமானது. ஜன்மாந்திரங்களில் செய்துவந்த புண்ணிய விசேஷத்தினால் இந்த மானவஜன்மம் உண்டாக வேண்டியதேயொழிய, மற்றவைகளினால் உண்டாகத்தக்கதல்ல. அப்படிப்பட்ட துர்லபமாகிய ஜன்மம் கிடைத்த போதிலும்; யதார்த்தஞானம் இல்லாவிட்டால், இந்த தேகம் வியர்த்தமாய்விடும். ஆதலால், மானவர்களுக்கெல்லாம் யதார்த்தஞானம் அவசியமாய் இருக்கவேண்டும். தேஹேந்திரியாதி பிரபஞ்சங்களுக்கெல்லாம் விலக்ஷணமாயிருக்கும் ஆத்மசொரூபத்தைத் தெரிந்துகொள்வதே யதார்த்தஞானமென்று சொல்லப்படும். தேஹேந்திரியாதி பிரபஞ்சமெல்லாம் அநித்தியமென்றும் அசுத்தமென்றும் ஜடமென்றும் துக்கமென்றும் திருசியமென்றும் விகாரமென்றும் சங்கல்பமென்றும் சஜாதிய விஜாதியமென்றும் சொல்லப்படும் ஆத்மா நித்தியமாய் சுத்தமாய் சத்தாய் சுகமாய் நிர்விகாரமாய் அபரிச்சின்னமாய் சுயம்பிரகாசமாய் நிச்சங்கற்பமாய் ஆதாரமாய் நிரவயவமாய் ஆதியந்தரகிதமாய் காரணமாய் ஸஜாதீய விஜாதீய சுவகதபேதங்களில்லாததாய் நிர்க்குணமாய் இருக்கும். சரீரத்ரயங்கள், பஞ்சீகிருத பஞ்சமஹாபூதங்களால் உண்டாய் பிராரப்தகர்மத்தின்படி சுகதுக்கங்களை அநுபவிக்கவந்ததே தூலதேகமென்றும், பஞ்சமஹாபூதங்களினால் உண்டாகிய ஞானேந்திரிய கர்மேந்திர்ய பஞ்சபிராண மனோபுத்திகளுடன் கூடியிருப்பதே சூக்ஷ்மசரீரமென்றும், தூலசூக்ஷ்ம சரீரங்களுக்கு அஞ்ஞானமே காரணமென்றும் சொல்லப்படும்.

இந்த அஞ்ஞானமே சஞ்சிதமென்று சொல்லப்படும். இனி பஞ்சகோசங்களைக்குறித்து விசேஷமாய்க் கபீர் சொல்லிக் கொண்டுபோகின்றார். அது விஷயம் எழுதினால் உங்கள் மனதிற்குப் பிடிப்படமாட்டாது. இவைகளைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்ய" த்தில் விரிவாய்த் தெரிந்துகொள்ளலாம். எவரெவர்களுக்கு எந்தெந்த தேவதைகளின்மீது பிரீதியோ அந்தந்தத் தேவதையை உபாசனாமூர்த்தியாய் நினைத்து அந்த விக்கிரகத்தைத் தன் இருதயத்தில்நிறுத்தி காலை பகல்மாலைகளில் மானசபூஜையாய்ச் செய்துவரவேண்டும். இந்தமானசபூஜை எவ்வாறு செய்துவரவேண்டுமென்றால், ஓர் பூஜையறைக்குள் உட்கார்ந்து கண்களைமூடி ஓர் பிராமண அர்ச்சகரை மனதில் நினைத்து அவருக்கு ஓர் பெயர் வைத்து அவரைக்கூப்பிட்டுத் தன் இருதயத்தில் நிறுத்தி வைத்திருக்கும் தன் உபாசனாமூர்த்தியாகிய பகவானுக்கு அர்ச்சனை செய்யச் சொல்லி பகவானுக்குச்செய்யும் அர்ச்சனைகளை மனக்கண்ணினால் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். அர்ச்சனை முடிந்தவுடன் மூன்றுத் தங்கத்தட்டுகளில் புளியோரை ததியோதனம் சித்திரான்னம் கதம்பம் முதலாகிய பிரசாதங்களை நினைத்து, அவைகளை மனக்கண்ணால் பார்த்து அதை அர்ச்சகனால் பகவானுக்கு ஆராதிக்கும்படிச்செய்து, அதுமுடிந்தவுடன் அப்பம் வடை தோசை தேன்குழல் சொஜ்ஜி முதலானவைகளெல்லாம் வெவ்வேறு தங்கத்தட்டில் இருப்பதாய் மனதில் நினைத்தவுடனே அவைகள் அங்கு மனக்கண்ணுக்குப்புலப்படும். அப்போது அவைகளையும் அர்ச்சகர் மூலமாய் ஆராதிக்கும்படிச் செய்துமுடித்தபின், மற்றும் சிலதங்கத்தட்டுகளில் செவ்வாழை பச்சைவாழை பலா முதலாகிய பழதினுசுகளை ஆராதிக்கும்படிச் செய்யவேண்டும். இந்த ஆராதனைகள்

முடிந்தவுடன் காமதேனுவினால் கொடுக்கப்பட்ட பாலைச் சிவக்கக்காய்ச்சி ஏடாக்கித் தங்கவட்டிலில்விட்டு கற்கண்டு பாதம்பருப்பு கிராக்ஷை குங்குமப்பூ முதலானவைகளைத் தங்க வட்டிலிலிருக்கும் பால் ஏட்டில்போட்டுத் தங்கக் கரண்டியால்கலந்து பகவானுக்கு ஆராதனைச்செய்து முடித்தபின், காமதேனுவினால் கொடுக்கப்பட்ட திவ்வியமான வெண்ணையை ஆராதனைச்செய்துமுடித்து பிறகு, ஏட்டுடன் தோய்ந்திருக்கும் தயிருடன் சீனிக்கற்கண்டுகள் போட்டு தங்கக்கரண்டியால் கலந்து பகவானுக்கு ஆராதிக்கும்படிச் செய்யவேண்டும். இவைகளை எல்லாம் ஆராதித்தபின், மூன்று சிறியதங்கவட்டில்களில் வைத்திருக்கும் மிகவும் சுத்தமான ஜலத்தைத் தங்க உத்தரணியால் எடுத்து, மூன்றுமுறை பகவானுக்குக் காட்டவேண்டும். அப்போது பகவான் அவைகளையெல்லாம் ஆஹாரஞ்செய்துகொள்வார். என்றால், அதன் சத்தை எல்லாம் இழுத்துக்கொள்வார். இந்த மானசபூஜை அப்பியாச முதிர்ச்சியினால் அப்பியாசியின் மனக்கண்ணிற்கு நன்றாய்ப்புலப்படும். இந்த பூஜைமுடிய ஒருமணிநேரம்செல்லும். பூஜை முடிந்தவுடன் முன்பு பகவானுக்குச்சமர்ப்பித்த பிரசாதங்களை அர்ச்சகர் மூலமாய்ப்பெற்று புசித்துத் தங்கமணிகளுடன் கோத்திருக்கும் மூலஸ்தான தங்கக்கதவுகளை அர்ச்சகரால் மூடும்படிச் செய்து சாவியைப்பெற்றுக்கொண்டதாய் மனதில் நினைக்கவேண்டும். இது காலைபூஜை. மறுபடியும் பகலில் பூஜை வீட்டில் உட்கார்ந்து கண்களைமூடி மனசினால் அர்ச்சகரை நினைக்கவேண்டும். அவர்உடனேவந்து மனக்கண்களுக்குத் தென்படுவார். அப்போது, சாவியை அவரிடம் கொடுத்து மூலஸ்தானத்தின் தங்கக்கதவைத் திறக்கச்செய்து, காலையில் அர்ச்சனைசெய்த பத்திரபுஷ்பங்களையெல்லாம் களைந்து, சுத்தஜலத்தினால் அபிஷேகஞ்செய்து பிறகு காமதேனு

வினால் கொடுக்கப்பட்ட பால் தயிர் நெய்களினாலும், தேன், சுத்தமான பன்னீர்களினாலும் அபிஷேகஞ்செய்து, தளுவத்தால் பகவானைத் துடைத்து, பட்டுபீதாம்பரம் அலங்கரித்து, காலையில் செய்ததுபோல் அர்ச்சனையாதி கிருத்தியங்களைச்செய்து முடிக்கவேண்டும். இவ்வாறு, மாலையிலும் செய்யவேண்டும். இப்படிப் பன்னிரண்டு வருஷங்கள் செய்துவந்தால் அவர்களின் துர்க்குணங்களெல்லாம் தினே தினே க்ஷீணித்து சித்தசுத்தியும் பகவதனுக்கிரகமும் சுலபமாய்ச்சித்திக்கும் அதனால் பிரம்மஞானமும், நித்தியானந்தபதவியும் உண்டாகும். சம்சாரமென்னும் கயிற்றால் கட்டப்பட்டு, மோகப்பிரவாகத்தில் வீழ்ந்துகிடக்கும் மந்தபுத்தியுள்ளவர்கள் கடைத்தேற இதைவிட வேறு உபாயம் ஒன்றுமில்லை. ஆதலால், நீங்கள் நான் முன் சொல்லியதுபோல் மானசபூஜைசெய்து மிகவும் பக்தியுடன் பாகவதர்களைச் சேவைசெய்துவந்தால், சுலபமாய் ஆத்மஞானம்பெற்று நித்தியானந்தத்தைப்பெறுவீர்கள்'' என்று போதித்து இராமமந்திரத்தை உபதேசித்து ''பிரம்மானந்தத்தை அடைவீர்கள்'' என்று ஆசீர்வதித்தார். அப்போது அந்தவஞ்சகர்கள், கபீர் உபதேசித்த வாக்கியங்களையெல்லாம் சரியாய் கிரகித்து, பிரதக்ஷிண பூர்வகமாய்வந்து கபீரை நமஸ்கரித்து பாதத்தில்வீழ்ந்து சேவித்துக்கொண்டும் சாதுக்களுக்கெல்லாம் வந்தனஞ்செய்தும் நின்றார்கள். அப்போது சாதுக்களெல்லாம் கபீருடைய தயாளகுணத்திற்கு மிகவும் சந்தோஷப்பட்டு அவருடைய சுகுணங்களை ஆயிரவாக்குகளினாலும் புகழ்ந்து கபீருடைய வாக்குப்போல் அன்று அங்கு தங்கி, மறுநாள்காலை கபீரிடம் செலவு பெற்றுக்கொண்டு அவரவர்கள் தம்தம்பட்டணங்கள் போய்ச்சேர்ந்தார்கள்.

கபீர் தன்பாரியாளை வர்த்தகனிடம் கொண்டுபோய் விடுதல்.

இவ்வாறு சிலநாட்கள்சென்றபிறகு, பண்டரிபுரத்தில் சாதுகோஷ்டிகளுடன்கூடி தீர்த்தயாத்திரைச் செய்து வரப்பட்ட ஞானதேவ் நாமதேவ் முதலானவர்கள், திவ்விய க்ஷேத்திரம் திவ்விய தீர்த்தங்களைச் சேவித்துக்கொண்டு கடைசியில் ஓர்நாள் இரவு இரண்டாஞ்ஜாமத்தில் காசிப் பட்டணம்சேர்ந்து, கபீர்வீட்டை விசாரித்துவந்து அவர் வீட்டிற்கெதிரில்நின்று கபீரைக்கூப்பிட்டார்கள். அப்போது இராமநாமஸ்மரணை செய்துகொண்டிருக்கும் கபீர், சாதுக்களின் சந்தடியைக் கேட்டவுடனே எழுந்துசென்று கதவைத்திறந்து வெளியில் நின்றிருப்பவர்களைப்பார்த்து, "மிகவும்வணக்கமாய் நீங்கள்யார்?" என்றுவிசாரித்தனர். உடனே ஞானதேவ் கொஞ்சம் முன்னுக்குவந்து மிகவும் பக்தியுடன் கபீரை நமஸ்கரித்து நான் ஞானதேவென்றும் தன் சமீபமாய் நின்றிருப்பவர் நாமதேவென்றும் மற்றவர்களெல்லாம் சாதுக்களென்றும் தெரியச்சொல்லினர். கபீர் அதைக்கேட்டவுடனே பரமானந்தமடைந்து ஞானதேவையும் நாமதேவையும் அதிகபக்தியுடன்நமஸ்கரித்து மற்ற சாதுக்களுக்கெல்லாம் வந்தனஞ்செய்து மிகவும்மரியாதையுடன் "தயவுசெய்யவேண்டும்" என்று உள்ளே அழைத்துக்கொண்டுபோய் உசிதாசனத்தில் உட்காரச்செய்து அவர்களின்க்ஷேமலாபங்களைக்குறித்தும் ஆகமங்களைக்குறித்தும் விசாரித்தார். அப்போது ஞானதேவ் நாமதேவுடன்கலந்து தீர்த்தயாத்திரைச் செய்து வந்தவிஷயங்களையெல்லாம் தெரியச்சொல்லி "உங்கள் தரிசனார்த்தமாய் இங்குவந்தோம்" என்று சொன்னார்கள். கபீர் அதைக்

கேட்டு மிகவுஞ்சந்தோஷித்து "தங்களைத்தரிசனஞ் செய்ய வேண்டுமென்னும் எண்ணம் என்னை அனேகநாளாய்ப் பிடித்துக்கொண்டிருந்தது. பிராரப்தம் இல்லாமல்போனதனால், இதுவரையில் சந்தர்ப்பப்படவில்லை. பகவதனுக்கிரகத்தினால், இன்று தங்கள்தரிசனம் அகஸ்மாத்தாய் கிடைத்தது. என்ஜன்மம் தன்னியமாயிற்று; என்கிருகம் பாவனமாயிற்று" என்றுசொல்லி அவர்களின்மகிமையைப் புகழத் தொடங்கினர். இதற்குள் சுந்தராதேவி மிகவும்பக்தியுடன் சாதுக்களுக்கெல்லாம் வந்தனஞ்செய்து, அவர்களின் தரிசனத்தினால தனக்குஉண்டாகிய பாக்கியவிசேஷத்தை வெகுவிதங்களாய் வர்ணித்துநின்றாள். அப்போது தம்பதிகளினுடைய வினய விதேயங்களுக்கெல்லாம் சாதுக்கள் எல்லோரும் மிகவும் ஆச்சரியப்பட்டு அவர்களின் தரிசனம் தமக்குக்கிடைத்ததற்காக மிகவும்சந்தோஷித்து கபீரையும் சுந்தராதேவியையும் புகழ்ந்தார்கள்.

அப்போது, கபீர் "கொஞ்சம் சிரமம்தீர்த்துக்கொள்ளுங்கள்" என்றுசொல்லி உள்ளேசென்று தன்பாரியாளைக் கூப்பிட்டு "நமது பாக்கியவசத்தினால், நம் குடிசைக்குப் பரம பாகவதர்கள் விஜயஞ்செய்தார்கள்; சக்தியானுசாரம் அவர்களை உபசரிக்கவேண்டும். அப்படி உபசரிக்காத ஜன்மம் வியர்த்தமே? இப்போது, இதற்கென்னசெய்யலாம்" என்று பாரியாளுடன் ஆலோசித்தார். அதற்கு சுந்தராதேவி நாயகனைப்பார்த்து "இப்போது வீட்டில் சுவல்ப தானியமும்இல்லை; அண்டைவீட்டுக்காரர்களோ நம்மைநம்பி ஒருபதார்த்தமும் கொடுக்கப் பட்டவர்களல்ல இனி என்னசெய்வேன்!" என்றுசொல்லி பரிதாபப்பட ஆரம்பித்தாள். அப்போது கபீர் மிகவும்வருத்தமடைந்து யாதொன்றுஞ் சொல்லத் தோன்றாமல் மறுபடியும் தைரியஞ்செய்து பகவானிருக்கின்றாரென்று நிச்சயித்து பாரி

யாளைப்பார்த்து "நீ இப்போது கடைக்குச்சென்று அவ்விடம் யாரையாகிலும் ஓர்வர்த்தகனைக்கண்டுபிடித்து அவருடன்பேசி, நீ கேட்டதைக் கொடுக்கின்றோம் என்று சொல்லிஎவ்விதமாகிலும்இப்போதிற்குவேண்டியபதார்த்தங்களை வாங்கிக்கொண்டு சீக்கிரமாய்வா" வென்றுச் சொல்லியனுப்பினர். சுந்தராதேவி அதற்குச் சம்மதித்து அன்று மிகவும் காடாந்த காரமாகிய இருளாயிருந்தபடியால், அந்தவிருளில் தான் ஒருத்தியே இராமநாமஸ்மரணைச் செய்துகொண்டு கடைவீதிக்கு நிற்பயமாய்ச்சென்றாள். அவ்வாறுசென்று கடைவீதிகளெல்லாம் பார்த்துக்கொண்டுவரும்போது எல்லாக்கடைகளும் சாற்றப்பட்டிருந்தன. அப்போது சுந்தரா மிகவும் வருத்தமடைந்து "அண்ணா! என் நாயகர் சத்யசந்தனர், பரமபாகவதர், அவர் வாக்கிலிருந்து வந்தவசனம் எப்பொழுதும் நிஷ்பிரயோஜனமாகமாட்டாது. அப்படியிருக்க எந்தவர்த்தகனும் இங்கு சகாயஞ்செய்யாவிட்டால், அவர்மனதிற்கு எவ்வளவு ஆயாசமுண்டாகும். இப்போது அவர்வாக்குப் பலிக்காவிட்டால், ஸ்ரீராமமூர்த்தி அனுக்கிரகம் எங்கள்மேல் தப்பிவிட்டதென்றே எண்ணவேண்டும் அப்படித் தப்பிப்போவதற்கு நம்மிடத்தில் ஏதாகிலும் தோஷம் இருக்கவேண்டும். அப்படிப்பட்டதோஷம் இருக்கவேண்டுமானால், என் அஜாக்கிரதையினால் இருக்கவேண்டுமேயொழிய, பரமபாகவத சிகாமணியாகிய என்நாயகர்மீது எவ்வளவு மிராது, இன்னும் கொஞ்சஞ் சிரமப்பட்டு மற்றகடைகளும்போய்ப் பார்ப்போம்; அங்கு யாருமகப்படாவிட்டால் நான் பகவானுக்கு அபராதஞ்செய்தவளேயாகின்றேன். அப்போது அதற்குத்தக்கப் பிராயசித்தஞ் செய்துக்கொள்ள பின்னால் யோசிக்கலாம்" என்று ஸ்ரீராம நாமத்தைச் சிந்தித்துக் கொண்டு மேல்நோக்கிச்சென்றாள். பிறகு நாலடிதூரஞ்

சென்றவுடனே ஓர்பெரிய கிடங்குக்குள் தீபம் எரிந்துக்கொண்டிருப்பது கதவின்சந்தில் காணப்பட்டது. அதைப் பார்த்தவுடனே சுந்தராதேவி மிகவுஞ்சந்தோஷப்பட்டு, அங்குயாராகிலும் வர்த்தகர் இருப்பாரென்றும், அவரிடம் பேசி காரியத்தை எப்படியாகிலும் நிறைவேற்றிக் கொள்ளலாமென்றும் நிச்சயித்து, மெதுவாய்க் கதவின் சமீபத்திற்சென்று உள்ளேஇருக்கப்பட்டவரைக் கூப்பிட அச்சமடைந்திருந்தாள். அப்போது கிடங்கு கணக்குகளையெல்லாம்பார்த்து முடிந்துவிட்டபடியால், வர்த்தகன் புஸ்தகங்களை எல்லாம் கட்டிவைத்து காற்றுக்காக கதவைதிறந்து வெளியில்வந்தான். அப்போது சுந்தராதேவி அங்கு நின்றிருப்பதை வர்த்தகன் பார்த்து அதிக ஆச்சரியப்பட்டு "யார்" என்றுகேட்டான். அப்போது சுந்தராதேவி வர்த்தகனைப் பார்த்து "ஐயா! செட்டியாரே! நான் இந்தக்காசியில் இருக்கப்பட்டவளே? இன்று எங்கள் வீட்டிற்கு ஐந்நூறுசாதுக்கள் வந்திருக்கின்றார்கள். இப்போது அவர்களின் பசியைத் தணிப்பதற்காக அவர்களுக்குவேண்டிய பதார்த்தங்கள் நீர் கடன்கொடுப்பீராகில், அவைகளின் விலையை நாளைதினம தவறாமல் கொடுத்துவிடுவேன். சந்தேகப்படவேண்டாம்" என்றுசொன்னாள். அதற்கு வர்த்தகன் மந்தகாசஞ்செய்து இப்படிப்பட்ட ஸ்திரீ யாராயிருப்பாளென்று சமீபமாய்ச் சென்று முகத்தைப்பார்த்தானேயொழிய, இருட்டில் அவள்முகம் நன்றாய்த்தெரியவில்லை. அப்போது வர்த்தகன் "நீ யார்வீட்டிலிருப்பது? சற்றே தெரியச்சொல்" என்று கேட்டான்; "நான் கபீர் என்னும் பரம பாகவதருடைய பாரியாள்; உம்மிடஞ் சொல்லிய காரியார்த்தமாய் இப்போது இவ்வளவுதூரம் வந்தேன். சாதுக்கள் மிகவும் பசியுடன் இருக்கின்றார்கள். தயைசெய்து சீக்கிரமாய்ச் சாமான்களைக் கொடுப்பீராகில்

உமக்கு மிகவும் புண்ணிய முண்டாகும்'' என்று சுந்தரா தேவி சொல்லினள். அப்போது வர்த்தகன் சுந்தராதேவியைப் பார்ப்பதற்காக உள்ளேவரும்படி அழைத்துச் சென்று தீபவெளிசத்தில் சுந்தராவின் சௌந்தரியத்தைப் பார்த்து மிகவும் ஆச்சர்யப்பட்டு சிலநேரம் பிரமித்து நின்று இந்திரன் அகலிகையையும், பஸ்மாசூரன் அம்பிகையையும், ராவணன் சீதையையும், துரியோதனன் திரௌபதியையும் மோகித்ததுபோல், பரம பதிவிரதையாகிய சுந்தராவை அந்தவர்த்தகன் மோகித்து ''நாயகிரத்தினமே! என்னிஷ்டத்தை பூர்த்திசெய்வாயாகில் நீ இப்போது கேட்ட வஸ்துவேயல்லாமல், வேணுமட்டும் பொருளும் தருகின்றேன். நீ அதற்குச் சம்மதிக்காவிட்டால், வந்த வழியே போகலாம். இதற்கு உன் அபிப்பிராயம் என்னமோ அதைச்சொல்!'' என்று கேட்டான். அப்போது சுந்தராதேவி தனக்குள் தான் எண்ணிநினைக்கின்றாளென்றால் ''இவன் வார்த்தைக்கு உட்படாவிட்டால், இச்சமயத்தில் பதார்த்தங்களைக்கொடுப்பவர்கள் யாருமில்லை என்றும் அதனால், சாதுக்கள் பட்டினியாயிருக்கவேண்டு மென்றும் எண்ணினதுமல்லாமல், வர்த்தகன் எது கேட்டாலும் அதை கொடுப்பதாய்ச்சொல்லி சீக்கிரமாய் சாமான்களைக் கொண்டுவரவேண்டுமென்று ஆஞ்ஞாபித்திருப்பதையும் யோசித்து இப்போது இந்தவர்த்தகன் கேட்டதற்கு யாதொருதடையுமில்லாமல் வாக்குத்தானஞ் செய்யலாமென்று தோன்றுகின்றது. ஆகலால், இவருக்கு வாக்களித்து சாதுக்களுக்குவேண்டிய பதார்த்தங்களையெல்லாம் வாங்கிக்கொண்டுபோவது உத்தமம். அதற்குமேல் சீதாபதி அநுக்கிரகம்போல் நடக்கட்டும்'' என்றுசொல்லி மனதில் தன் நாயகனைநினைத்து மூன்றுமுறை வந்தனஞ் செய்து வர்த்தகனைப்பார்த்து ''செட்டியாரே! உன்னிஷ்

டம்போல் நடந்துகொள்ளுகின்றேன்; இதற்குத் தப்ப மாட்டேன்; இப்போது எனக்குவேண்டிய பதார்த்தங்களைக்கொடுக்கும்பக்ஷத்தில் அவைகளைக்கொண்டுபோய் விடு சேர்ப்பித்து உடனே உன்னிஷ்டம்போல் வருகின்றேன். சாதுக்களெல்லோரும் உபவாசமாயிருக்கின்றார்கள். இப்போதே மிகவும் நாழிபாயிற்று. இவ்விடம் ஆலசியம் செய்துகொண்டிருந்தால், சாதுக்களெல்லாம் நித்திரை செய்துவிடுவார்கள். அப்போது நீர் கொடுக்கும் பதார்த்தம் வியர்த்தமாய்விடும். தயைசெய்து சீக்கிரமாய்க் கொடுக்கவேண்டும்'' என்றுசொல்லினள். அப்போது வர்த்தகன் ''பதார்த்தங்களைக்கொண்டுபோய் மறுபடியும் வராமல் மோசஞ்செய்துவிட்டால் என்னசெய்யலாம்'' என்று எண்ணி ''மறுபடியும் வருவதாகப் பிரமாணஞ் செய்துகொடுத்தால்தான் கொடுப்பேன்'' என்றுசொல்லினன் அப்போது சுந்தராதேவி ஸ்ரீராமமூர்த்தியின்மீது பாரம்போட்டு தன்நாயகனை மனதில் நினைத்து அவன் இஷ்டம்போல் பிரமாணஞ்செய்துக்கொடுத்தாள்.

அப்போது வர்த்தகன் சந்தோஷப்பட்டு ஐநூறு சாதுக்களுக்குவேண்டிய பதார்த்தங்களை எல்லாம் சித்தம் செய்து வைத்தானேயொழிய, அவைகளை எல்லாம் கொண்டுபோய் சுந்தராவீடுசேர்க்க தன்னிடம் மனிதர்கள் இல்லாததனாலும், அந்த அர்த்தராத்திரியில் கூலிக்காரர்கள் கிடைக்காமல் போனதனாலும், இதற்கென்னசெய்லாமென்று வருத்தப்பட்டு சுந்தராதேவியுடன் ஆலோசித்தான். அப்போது சுந்தராதேவி மிகவும்வருத்தப்பட்டு ஸ்ரீராமமூர்த்தியை தன்இருதயத்தில்நிறுத்தி ''தீனபந்தூ! இப்போது நீர் தவிர என்னை ரக்ஷிக்க மற்றொருவருமில்லை. நீர் தயாநிதி, பரமபாவனன், புராணபுருஷன், புருஷோத்தமன், அப்ரமேயன், பக்தவச்சலன், பவபந்தவிமோசனன், உன்

மஹாமஹிமையை அறிய யாவரால்முடியும்! இப்படிப்பட்ட சமயத்தில் நீர் ரக்ஷிக்காவிட்டால் மற்றவர்கள் யார் ரக்ஷிக்கப்போகின்றார்கள்! இவைகளையெல்லாம் வீடுசேர்க்க யாதொரு பிரயத்தனமுஞ் செய்யாமலிருக்கின்றீர். இப்போது அநுக்கிரகிக்காவிட்டால், இக்காரியம் நிறைவேறாது. எவ்விதத்திலாகிலும் எங்களை ரக்ஷிக்கக்கடவாய்'' என்று பற்பலவிதங்களாய்ப் பிரார்த்தித்தனள். அப்போது பக்தவத்ஸலனான பகவான் அந்தவர்த்தகனுக்கு மிகவுஞ் சினேகமாயிருக்கும் வர்த்தகன் வேஷந்தரித்து சிலவண்டிகளை ஓட்டிக்கொண்டு சுந்தராயிருக்கும் வீதிவழியாய் வந்தான். வண்டிகளின் சந்தடி, பதார்த்தங்கொடுத்த வர்த்தகன் கேட்டவுடனே, வெளியில் ஓடிவந்து வண்டிகள் யாருடையதென்றும் இவவளவு அர்த்தராத்திரியில் எங்கு ஓட்டிக்கொண்டு செல்லுகின்றீர்களென்றும் வண்டி ஓட்டுபவனை விசாரித்தான். இதற்குள் வண்டியில் உட்கார்ந்திருந்த கபடவர்த்தகன் வண்டிவிட்டிறங்கி அந்த வர்த்தகனிடம்வந்து ''இவ்வளவு ராத்திரியாயும் இன்னும் தூங்காமல் ஏன் விழித்துக்கொண்டிருக்கின்றாய்'' என்று விசாரித்தார். அவர் குரலோசையைக்கண்டுபிடித்து இவர் தன் சினேகிதனென்று அறிந்து மிகவுஞ் சந்தோஷப்பட்டு, ''அன்பனே! நீ இவ்விராத்திரியில் வண்டிகளை அழைத்துக்கொண்டு எங்குபோகின்றாய்?'' என்றுகேட்டான். அதற்குப் பகவானான செட்டி, ''சிலதானியங்களைச் சேகரிக்கும்படி இன்றுமாலை அரசன் உத்தரவு அனுப்பியபடியால், கிராமத்தில் வைத்திருக்குந் தானியத்தைக் கொண்டுவரப்போகின்றேன்'' என்று சொல்லினன். ''இந்த அர்த்தராத்திரியில் நீ விழித்துக்கொண்டிருப்பதற்குக் காரணமென்ன?'' என்று பகவானானசெட்டியார்க் கேட்டனர். அப்போது, சுந்தராதேவி வந்த விஷயங்களைச்சொல்லி,

இந்த பதார்த்தங்களை எல்லாம் அவள்வீடுசேர்க்க அவளுடன்யோசனை செய்துகொண்டிருந்தேன். நல்லசமயத்தில் நீ வந்ததேபோதும்; மிகவும் சந்தோஷமாயிற்றென்று சொல்லி சுந்தராதேவியைக் காட்டி ''நீ போகும்வழியில் இவர்கள் வீடிருப்பதால் தயைசெய்து இந்தச்சாமான்களை எல்லாம் இவாள் வீட்டிலிறக்கி நீ அப்படியேசெல்லலாம்'' என்று வேண்டிக்கொண்டான். அதற்குக் கபடவர்த்தகனாகிய பகவான் சம்மதித்து ஓர்நிமிஷத்தில் சாமான்களை எல்லாம் வண்டியில்ஏற்றி வர்த்தகனைப்பார்த்து ''இப்பெண்மீது கண்ணோட்டமிட்டாற்போலிருக்கின்றது'' என்று சிரித்தான். அதற்கு அந்தவர்த்தகன் ''இல்லை இல்லை'' என்று புன்னகையுடன் சிரித்தான். ''உன் நடத்தை எனக்கொன்றுஞ் சரிப்படவில்லை'' என்று கபடவர்த்தகன் சொல்லிக்கொண்டே வண்டிகளை அழைத்துக்கொண்டு சென்றான். அப்போது பதார்த்தங்களைக்கொடுத்த வர்த்தகன் சுந்தராதேவியுடன் மெதுவாய் ''சீக்கிரமாய்வரவேண்டும். உனக்காக எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன்'' என்று அனேகதடவைகளில் சொல்லியனுப்பினான். அப்போது சுந்தராதேவி சீக்கிரமாய்நடந்து வண்டிகளுடன்கூடவே மிகவும்வேகமாய்நடந்து வீடுசேர்ந்து, நடந்தவிருத்தாந்தங்களைஎல்லாம் கபீருக்குத்தெரியச்சொல்லினள். அதற்குக் கபீர் மிகவுஞ்சந்தோஷப்பட்டு ''எப்படியாகிலும் காரியம் பூர்த்திசெய்து வந்தாயல்லவா?'' என்று மிகவுஞ் சந்தோஷித்தார். பிறகு கபடவர்த்தகனாகிய பகவானை நமஸ்கரித்து உட்காரும்படிச்சொல்லி, சாமான்களை இறக்கி சாதுக்களுக்கெல்லாம் பங்கிட்டுக்கொடுத்தார். கபடவர்த்தகன் கொடுக்கவேண்டிய வாடகைகளைஎல்லாம் வண்டிக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டு, இப்போது நான் இங்கிருக்கவேண்டிய வேலையிருக்கின்றது. ஆதலால், நீங்கள்

போகலாமென்று அவர்களை அனுப்பிவிட்டு, உள்ளே வந்து ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தார்.

அப்போது சாதுக்களெல்லாம் பரமானந்தமடைந்து கபீர்கொடுத்த பதார்த்தங்களை எல்லாம் பெற்றுக்கொண்டு சமைக்க ஆரம்பித்தார்கள். இதற்குள் சில திருடர்கள் சாதுவேஷம் போட்டு சாதுக்களுடன் கூடிக்கொண்டு அங்குவைத்திருந்த பதார்த்தங்களை எல்லாம் கூடைகளில் நிரப்பிப் பின்வாசற்படி வழியாய் வெளியில் கொண்டு போக ஆரம்பித்தார்கள். அப்போது ஸ்ரீராமமூர்த்தி ராஜசேவகர் வேஷம்போட்டு திருடர்களை மடக்கி "அடா துரோகிகளே! பரமபாகவதனுடைய சொத்தை திருடிக்கொண்டு ஓடுகின்றீர்களா? நில்லுங்கள் நில்லுங்கள்" என்று சொல்லிக்கொண்டே திருடர்களை ஒவ்வொருவராய்ப்பிடித்துக்கொண்டு தலையில் குட்டி அவர்களின் இடுப்பிலுள்ள வஸ்திரத்தை அவிழ்த்து அங்கிருக்கும் செடிகளில் எல்லோரையும் கட்டிவிட்டார். அப்போது அந்தத் திருடர்கள் ஸ்ரீராமமூர்த்தியை ராஜசேவகனென்றெண்ணி நடுநடுங்கி "நிஜமாய் நாங்கள் குற்றஞ் செய்தவர்கள். இதுவிஷயம் ராஜனுக்குத் தெரிவித்தால் சிரச்சேதஞ்செய்விப்பார்; வஞ்சனையில்லாமல் உங்களுக்கு ஏதாகிலும்சமர்ப்பிக்கின்றோம்; எங்கள்குற்றத்தை மன்னித்து எங்களை எவ்விதத்திலாகிலும் காப்பாற்றவேண்டும்" என்று பலவிதங்களாய்ச்சொல்ல ஆரம்பித்தார்கள். அதற்கு ராஜசேவகன் வேஷந்தரித்த ஸ்ரீராமமூர்த்தி மந்தஹாசஞ்செய்து "நீங்கள் செய்த துஷ்டகாரியங்களுக்குத் தக்கசிக்ஷை அனுபவிக்கவேண்டியதாயிருப்பதால், உங்களைச் சும்மாய்விடலாகாது. இப்படிப்பட்ட துன்மார்க்கர்களைக் கண்டால், சும்மாய்விடலாகாதென்று ராஜன் உத்தரவுசெய்திருக்கின்றார். ஆகலால், உங்களை விடமாட்

டேன். எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கொண்டுவந்த பாகவதனுடைய சொத்தை அபகரிக்கவந்த உங்களை தக்க தண்டனை விதிக்காமல் விட்டுவிட்டால், பாபம் உண்டாகும்" என்றுசொல்லி கட்கத்தை கையில்பிடித்துத் தூரமாய் ஓரிடத்தில்நின்றிருந்தார்.

கபீர்வீட்டில் நல்லகூலிகிடைத்தபடியால், பகவானை கள்ளவர்த்தகனை வண்டிக்காரர்கள் மிகவும் கீர்த்தியாய்ப் புகழ்ந்துகொண்டு வண்டிகளைத்திருப்பி பதார்த்தங்கள் கொடுத்த வர்த்தகன் கடைவழியாய்ச் சென்றார்கள். அப்போது சுந்தராதேவி வரவிற்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்த வர்த்தகன் தெருத்திண்ணையில் உட்கார்ந்திருந்தான். அந்தச்சமயத்தில் வண்டிகள் இவன் வீட்டுச் சமீபமாய் வந்தவுடனே, வண்டிக்காரர்களை அழைத்து "கிராமத்திற்குப் போகவில்லையா?" என்றுகேட்டான். அதற்கு அவர்கள் போகவில்லை; நாங்கள் சாமான்களை இறக்கிய வீட்டில்தானே செட்டியார் யிருந்துகொண்டு தனக்கு ஏதோ வேலை அங்கிருப்பதாய்ச்சொல்லி எங்களை அனுப்பிவிட்டார் என்று சொன்னார்கள். அவைகளைக் கேட்டவுடனே வர்த்தகன் திகிலடைந்து "அவர் அங்கேஏன் நின்றார்" என்று அநேகவிதங்களாயெண்ணி நெருப்பை மிதித்த பூனையைப்போல் உள்ளுக்கும்வெளிக்குமாய்த் திரிந்துகொண்டு என்னசெய்யலாமென்று விசனப்பட ஆரம்பித்தான். அப்போது இருந்தாற்போலிருந்து அகஸ்மாத்தாய் பயங்கரமான இடி மின்னலுடன் பெருமழைப் பெய்ய ஆரம்பித்தது.

அப்போது வர்த்தகன் அதைப்பார்த்து "இந்தப்பாழும்மழைஒன்றுஇந்தச்சமயத்தில் வந்துசேர்ந்தது. இனி, என்இஷ்டம் நிறைவேறாதுபோல் காணப்படுகின்றது. இதன்றியும் என் மித்திரன் சத்துருவாய் அங்குபோய்ச்

சேர்ந்திருக்கின்றான். இங்கிருந்து போகும்போதே "உன் நடத்தை எனக்கொன்றுஞ் சரிப்படவில்லை" என்றுசொல்லி ஓர்விதமாய்க் கோபித்துச்சென்றான்; அவனைப் போக வேண்டாமென்று தடுத்திருந்தாலும் தடுத்திருக்கலாம். இல்லாவிட்டால், அவர்போகவேண்டிய பிரயாணத்தை நிறுத்தி, அங்கு நிற்கவேண்டிய காரணம் என்னயிருக்கின்றது; இவர் ஒருவேளை அவர்களுக்குத் தெரிந்தவரோ என்னமோ தெரியவில்லை; இவர் ஒருவேளை அவர்களுக்குத் தெரிந்தவராயிருந்தால் என் காரியம்நிறைவேறமாட்டாது? ஆனால், அவள் செய்தசத்தியம் தப்பிவிடுவாளோ என்னமோ தெரியவில்லை. ஸ்திரீகளை நம்பலாகாது. ஸ்திரீகள் ஒருவனுடன் பேசுவார்கள்; ஒருவனைப்பார்ப்பார்கள்; மற்றொருவனை நினைப்பார்கள்; அத்திப்பூவையாகிலும் வெண்மை காகத்தையாகிலும் மீன்களின் அடியையாகிலும் கண்டுபிடிக்கலாமெயொழிய, ஸ்திரீகளின் இருதயத்தைக் கண்டுபிடிக்கலாகாதென்று ஸ்ரீகிருஷ்ணபகவானே சொல்லியிருக்கின்றாரல்லவா? இப்படிப்பட்ட ரூபமுடையவள் உலகத்தில் இருப்பது மிகவிம்அறிது. அந்தஜகன்மோகினியுடன் போகிக்கப்பட்டவன் ஜன்மமே ஜன்மம்" என்று பலபல விதங்களாய் யோசித்துக்கொண்டிருந்தான்.

இவன் இப்படியாய் யோசித்துக்கொண்டிருக்கும்போது, இவனது சிநேகிதனாகிய வர்த்தகன் அன்றிராத்திரி ஓரிடத்தில் ஹரி காலக்ஷேபனைக்குச் சென்று சாதுக்களுடன்கூடி வெகுநேரம்வரையில் காலக்ஷேபஞ் செய்துகொண்டிருந்து, பிறகு தான் ஒருவனாய் புறப்பட்டு மிகவும் காடாந்தகாரமாயிருந்தபடியால், தன் வீட்டிற்குப்போக சந்தர்ப்பப்படாமல் தன் சிநேகிதன் வீட்டில் படுத்துக் கொள்ளலாமென்று எண்ணித் தன்சிநேகிதன்வீட்டிற்கு வந்தான். அவன் வந்தவுடனே அவனைப்பார்த்து,

ஏனையா! கிராமத்தில் ஏதோவேலையிருக்கின்றதென்று சொல்லி இதுவரையில் வண்டிகளைக்கொண்டுபோனாயல்லவா? இதற்குள் என்வந்தாய்? இதுவரையில் எங்கிருந்தாய்?" என்றுகேட்டான். அதற்கு அவன்சிநேகிதன் பிரமையடைந்து "என்ன! கிராமத்திற்குப் போகின்றேனென்று உன்னிடத்தில் எப்பொழுது சொன்னேன்? ஹரிகதைக்குச்சென்று இப்போதேயல்லவா வருகின்றேன். நீ தூங்காமல் இதுவரையில் விழித்துக்கொண்டிருப்பதனால், உனக்குப் பித்தம் அதிகமாய்விட்டதுபோல் இருக்கின்றது" என்று பரிகாசஞ்செய்தான். அதற்கு வர்த்தகன் "எனக்காபித்தமென்றுசொல்லுகின்றாய்! அரசனுக்குத் தானியம் வேண்டுமென்று இப்போது நீ வண்டிகளை ஓட்டிக்கொண்டுப் போகவில்லையா? நான் கொடுத்த பதார்த்தங்களை எல்லாம் நீ அந்த வண்டியில் ஏற்றிக்கொண்டுபோய் கபீர்வீடு சேர்க்கவில்லையா? இதுவரையில் அங்கிருந்தேயல்லவா வருகின்றாய்? என் புளுவுகின்றாய்? நீ அங்கே தங்கினதாய் உன் வண்டிக்காரர்கள் என்னிடம் வந்து சொன்னார்கள் என்னிடம்வந்துசொன்னார்கள். அந்தப் பெண்ணை இங்குவாராதபடிச் செய்வதற்காக தந்திரஞ் செய்யவில்லையா?" என்றுகேட்டான். சிநேகிதன் அதைக் கேட்டவுடனே பக்கென்றுசிறித்து "அன்பனே! நான் செல்லிய பேச்சு நிஜமே! உனக்குப் பயித்தியம் அதிகமாய் விட்டது. இவைகளை எல்லாம் நீ கனவில் வாஸ்தவமாய்க் கண்டிருக்கலாம். சரி, சரி! தெரியவந்தது. இதனால்தான், கதவைத்திறந்துகொண்டுஉட்கார்ந்திருக்கின்றாய். போதும் போதும். இனி படுத்துக்கொள்" என்று கதவைமூடப் போனான். வர்த்தகன் அப்போது சிநேகிதனைப்பார்த்து "ஐயா! கடினமனதுடையவனே! கொஞ்சமாகிலுஞ் சிநேகிதனென்றும் பாராமல்,நான் மோகித்தகண்மணியை இங்கு

வராதபடிச்செய்து என்னை மூழ்த்திவிட்டாய்'' என்று நிந்தனைசெய்து கதவை மூடவேண்டாமென்றுந் தடுத்தான். அப்போது தன் சிநேகிதன் செய்யுஞ் சேஷ்டைகளையெல்லாம் பார்த்து "இவனுக்குப் பைத்தியம் அதிகரித்து மண்டைக்கு ஏறிவிட்டது'' என்று நிச்சயித்துக்கொண்டு, வைத்தியனை அழைத்துவரச் சீக்கிரமாய் ஓடினான். இவன் ஓடினவுடன் வர்த்தகன் மறுபடியும் வெளியில் வந்துஉட்கார்ந்து, நடந்த விஷயங்களையெல்லாம் நினைத்து நினைத்துத் துக்கித்துக் கொண்டிருந்தான். இப்படியிருக்க, கபீர்வீட்டில் இருந்த சாதுஜனங்கள் எல்லோரும் தமக்கு வேண்டியபதார்த்தங்களை எல்லாம்பெற்று நானாவித பக்குவ அன்னங்களைச்செய்து, பக்திபூர்வகமாய்த் தேவதார்ச்சனைப்புரிய ஆரம்பித்து, சோடசோபசாரங்களுடன் சாவதானமாய்ப் பகவதாராதனைகளைச் செய்து, பகவன்னிவேதனமான பஞ்சபக்ஷ்ய பாயாசங்களுடன் திருப்தியாய்ப் புசித்து, எல்லோரும் ஓரிடத்தில் உட்கார்ந்து, இராம பஜனைசெய்ய ஆரம்பித்தார்கள். அப்போது சுந்தராதேவி தன் நாயகனிடஞ்சென்று அதிகபக்தியுடன் நமஸ்கரித்து வர்த்தகனிடஞ்செல்ல விடைகேட்டனள். கபீர் உடனே பரமானந்தமடைந்து, "ஓ நாயகீரத்தினமே! நமக்கு இந்தச்சமயம் மகோபகாரஞ்செய்த பரம புண்ணியாத்மனாகிய வர்த்தகனுக்கு, நமது பிராணன்களைக் கொடுத்தபோதிலும் பிரதிஉபகாரமாகாது. சாதுக்களெல்லோரும் வயிறாரப்புசித்துச் சந்தோஷமடைந்தார்கள். இதன் பலன் அவருடையதேயன்றி நம்முடையதல்ல. நீ வர்த்தகனிடஞ் சத்தியஞ்செய்து பதார்த்தங்களைப் பெற்றுக்கொண்டபோதே உன் தேகம் அவர் சுவாதீனமாய்விட்டது. ஆதலால், அவரிஷ்டம் பூர்த்தியாகும்வரையில், இந்தத் தேகத்தை அதிகஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கவேண்டும்.

இப்போது மழை அதிகமாய்ப்பெய்திருப்பதால், பாட்டைகளெல்லாம் விசேஷ சேறாயிருக்கும். நீ அந்தச்சேற்றில் நடந்துச் செல்வாயாகில், உன்தேகத்திற்கு சீதளமுண்டாய், அவர் தேகத்தைப்பற்றும். ஆதலால், நீ நடந்துச் செல்வது யுக்தமானதல்ல. உன்னை என்தோள்மேல் சுமந்துகொண்டுசென்று வர்த்தகன்வீட்டில் இறக்கிவிட்டு வருகின்றேன்'' என்றுசொல்லி, பாரியாளைத் தன் தோள் மீது ஏற்றி சுமந்துகொண்டு இராமத்தியானஞ்செய்துகொண்டே வர்த்தகன் வீடுசேர்ந்து, அவ்விடம் மெதுவாய் இறக்கி, வர்த்தகரிடம் அதிஜாக்கிரதையாயிருந்து அவர் சொல்போல் நடந்துகொள் என்று சொல்லிவிட்டுத் தான் தன் வீடுபோய்ச் சேர்ந்து சாதுக்களுடன் கலந்து பஜனை செய்துகொண்டிருந்தார்.

அப்போது வண்டியில் பதார்த்தங்களைக் கொண்டுவந்து வீடுசேர்ப்பித்த மஹாபுருஷன் ஞாபகம்வந்து உடனே எழுந்து சாதுக்களின் கூட்டமெல்லாம் தேடிப்பார்த்தார். தேடியுங் காணாமலிருந்தபடியால் மிகவும் வருத்தமடைந்து "ஐயோ! நான் எவ்வளவுபாபி; மகோபகாரஞ்செய்த புண்ணியாத்மாவை விசாரிக்காமல் பாராமரிக்கைபாய் இருந்துவிட்டேனல்லவா? உட்காரவேண்டுமென்று சொன்னதே யல்லாமல், மறுபடியும் அவரைக் கவனிக்காமல் போனேன். யாரும் தன்னை விசாரிக்காமற்போனதனால் கோபித்து எழுந்து சென்றிருக்கலாமோ என்னமோ தெரியவில்லையே? ஐயோ! மழையில் நனைந்துகொண்டே எங்குசென்றாரோ தெரியவில்லை'' என பரிதபித்துநின்றார்.

அப்போது ஞானதேவ் கபீரிடம்வந்து "நீ யாரைத் தேடுகின்றாய்?'' என்றுகேட்டார். அதற்குக் கபீர் மிகவும் தீனசுரத்துடன் தான் தேடிக்கொண்டிருக்கும் வர்த்தகன் விஷயங்களையெல்லாந் தெரியச்சொல்லி "அவர் சொல்லா

24

மற் சென்றுவிட்டதனால் வருத்தப்படுகின்றேன்" என்று சொல்லினர். அதற்கு ஞானதேவ் "நீர் சொல்லும் வர்த்தகன் சற்று நேரத்திற்குமுன் ஏதோ அவசரமாய் புறக்கடைவழியாய்ச் சென்றார்போல்தோன்றுகின்றது" என்றனர். அதைக்கேட்ட கபீர், உடனே புறக்கடைவழியாய்ச்சென்றுபார்த்தார் அங்கொருவருங்காணாமற்போனதனால், புறக்கடைவழியாகவே தேடிக்கொண்டே வெகுதூரஞ்சென்று கள்ளர்களிருக்குமிடம் போய்ச் சேர்ந்தார். மழையினால்நனைந்து அடிபட்டு நடுக்கமுற்று பயந்திருக்கும் கள்ளர்கள், கபீரைப்பார்த்தவுடன் தைரியங்கொண்டு, "சரணமடைந்தோம். ரக்ஷிக்கவேண்டும்." என்று முறையிட்டார்கள். கபீர் அவர்களைநோக்கி ஏறயிறங்கப் பார்த்து மிகவும்வருத்தமடைந்து "ஐயோ! சாதுக்களை யாரோ விருதாவாய் கஷ்டப்படுத்தினதாய்க் காணப்படுகின்றது; ஆஹா! செடியில் விரியக்கட்டும்படியான குற்றம் இவர்கள் என்னசெய்தார்கள்? இவர்களைக் கட்டினவர்கள் யாரா யிருக்கலாம்?" என்று பலவிதங்களாய் யோசித்து, அவர்களைக் கட்டிலிருந்து விடுவித்து, "உங்களை இவ்விதமாய்க் கஷ்டப்படுத்தினவர்கள் யார்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் 'நாங்கள் திருடர்களென்றும் சாது வேஷம் போட்டு உள்ளேயிருக்கும் சாமான்களைத் திருடிக்கொண்டுபோக எத்தனித்தோம் என்றும் இராஜ சேவகன் எங்களைத் தலையில்குட்டி இச்செடிகளில் கட்டிவிட்டுப் போனான். உண்மையைச்சொன்ன எங்களை ரக்ஷிக்கவேண்டும்" என்று கபீர் பாதத்தில்வீழ்ந்து நமஸ்கரித்தார்கள். அவர்களின் துன்பத்தைக்கேட்ட கபீர் மிகவும் கோபங்கொண்டு அந்த ராஜசேவகன் யார்? அவன் இங்குவந்து உங்களைநிர்நிமித்தமாய் அடித்து இவ்விதமாய்க் கஷ்டப்படுத்துவதற்குக் காரணமென்ன? இங்கிருக்கும் பதார்த்

தங்கள் யாருக்காகிலும் உபயோகப்படவேண்டியதேயல்லவா? இதில் அவன் சொத்து என்னபோய்விட்டது? இப்போது அவன் எங்குசென்றான்? அவன் அடையாளம் உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். அப்போது கள்ளர்கள் மிகவும் தைரியத்துடன் "அந்த ராஜசேவகன், கையில் கட்கத்தைப்பிடித்து இதுவரையில் இங்கு காவலாயிருந்தான். இப்போது நீங்கள் வருவதற்கு ஒருநிமிஷத்திற்குமுன் சென்று விட்டான். தேடிப்பார்த்தால் வெகு சுலபமாய் அகப்படுவான்" என்று சொன்னார்கள். அப்போது கபீர் வீட்டிற்குள் ஓடி ஓர் பெரியதடியையெடுத்து புஜத்தின்மீது வைத்துக்கொண்டு கள்ளர்களுடன் சென்று ராஜசேவகனைத்தேட ஆரம்பித்தார். அப்போது சாதுக்களெல்லோரும் ஒருங்குகூடி "என்ன என்ன? வென்று" கேட்டுக்கொண்டே கபீருடன் சென்றார்கள்.

இது நிற்க, தன்நாயகனால் அழைத்துக்கொண்டுபோய் வர்த்தகன் வீட்டில் விடப்பட்ட சுந்தராதேவி, விசனத்துடன் உட்கார்ந்திருக்கும் வர்த்தகன் எதிரில்போய் நின்றாள். வர்த்தகன் சுந்தராதேவியைப்பார்த்தவுடன், மிகவும் சந்தோஷமடைந்து அதுவரையில் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த துக்கங்களெல்லாம் மறந்து "ஹா! சுந்தரீமணி! வந்தாயா!" என்று திடீரென்று எழுந்து சேற்றை மிதித்துக்கொண்டு வந்திருக்கலாமென்றெண்ணி அவள் கால்களை அலம்ப ஜலம் கொண்டுவந்து கொடுக்கப் போனான். அப்போது சுந்தராதேவி "ஜலம்வேண்டாம்; என் கால்கள் சேறாகவில்லை" என்றுசொன்னாள். வர்த்தகன் சுந்தராதேவியின் கால்களைக் குனிந்துப்பார்த்து அவள் சொல்லிய வார்த்தை உண்மையென்று நம்பி மிகவும் ஆச்சரியப்பட்டு சிலநேரம் யோசித்து "மழைபெய்து பாட்டையெல்லாம் மிகவும் சேறாயிருக்க, கால் நனையாமலும் சேறு

காமனும் இங்கு எவ்விதமாய் வந்தாய்? ஆகாசமார்க்கமாய்ப் பறந்துவந்தாயா? அல்லது எதன்மீதாகிலும் சவாரிசெய்து வந்தாயா? இவ்விஷயங்களைத் தயைசெய்து சொல்லவேண்டும்'' என்று கேட்டான். அதற்குச் சுந்தராதேவி மந்தகாசஞ்செய்து ''ஆகாசமார்க்கமாயாகிலும் சவாரிமீதாகிலும் வந்தவளல்ல. உங்களுக்குப் பிரமாணஞ் செய்துகொடுத்து பதார்த்தங்களைக்கொண்டுபோன சங்கதியை எனது நாயகனிடஞ் சொன்னேன். நீர் செய்த மகோபகாரத்திற்கு அவர் மிகவும் சந்தோஷப்பட்டு உமது மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்யும்வரையில் என்சரீரம் உமதானபடியால், சேற்றில் நடந்துசென்றால் என்தேகத்திற்கு ஒருவேளை சீதளமுண்டாய் அச்சீதளம் உமது சரீரத்திற் பற்றுமென்றெண்ணி, என்னைத் தன் புஜத்தின்மீது ஏற்றிக்கொண்டு இங்கு கொண்டுவந்துவிட்டுச்சென்றார். நீர் மிகவும் புண்ணிய புருஷர்; மிகவும் கனிகரத்துடன் நீர் கொடுத்த பதார்த்தங்கள் யாவையும் சாதுக்களுக்கெல்லாம் சமர்ப்பித்தோம். அவர்கள் அவற்றை மிகவும்நன்றாய்ப் பக்குவப்படுத்தி உண்டு களிப்படைந்தார்கள். அதனாலுண்டாகிய புண்ணியம் உமதேயன்றி, எங்களுடையதல்ல. உங்கள் அனுக்கிரகத்தால், நாங்களும் கிருதார்த்தர்களானோம், தங்களுக்கு எங்கள் பிராணன்களைச் சமர்ப்பித்தபோதிலும், நீர் செய்த உபகாரத்திற்கு இணையாகாது. உங்களுக்கு வாக்களித்ததுபோல், இதோ வந்திருக்கின்றேன். உமது மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம்'' என்று மிகவும் வணக்கமாய்ச் சொல்லினள்.

அவ்வார்த்தைகளையெல்லாம் வர்த்தகன்கேட்டவுடன், அறிவு உண்டாய், 'ஆஹா! நான் எவ்வளவு துன்மார்க்ககாரியத்தில் பிரவேசித்தேன்? எண்பத்துநான்குலக்ஷ ஜீவ

ராசிகளின் கர்ப்பத்திலுள்ள மலமூத்திர நரககூபத்திலிருந்து அனேகபாதைகளை அனுபவித்துக் கடைசியில் தெய்வானுகூலத்தினால், இந்த மானிடஜன்மத்தை அடைந்தேன். இப்படிப்பட்ட சர்வோத்கிருஷ்டமான ஜன்மம் லபித்தும் அறிவில்லாமல், மறுபடியும் மிருகஜந்துக்களைப்போல் துர்விஷயத்தில் பிரவேசித்து துர்மார்க்கவிஷயத்திற்குப் பிரயத்தனப்பட்டேன். அறிவாளினால் துளசிச்செடிகளை அறுத்ததுபோலும், கட்டப்பாறையினால் எக்கியசாலைகளைப் பெயர்த்ததுபோலும், லிங்கத்தை காலினால் உதைத்ததுபோலும், அமிர்தகலசத்தையும் சாளக்கிராமத்தையும் உடைத்ததுபோலும், அரசமரத்தை வெட்டினதுபோலும், பாகவதத்தை நிந்தித்ததுபோலும், பரமபதிவிரதாதேவியை மோகித்தேன். நான் மஹாபாபி; பரமதுர்மார்க்கன்; குருத்துரோகி; நீசன்; வஞ்சகன்; விசுவாசகாதகன்; ஆஹா! மனப்பூர்வகமாய்த் தன்பாரியாளை இதரர்கள் போகிக்க சம்மதித்து பாரியாளைச் சுமந்துகொண்டுவந்துவிட்ட பரிசுத்த மனமுடையவர்களை நான் இதுவரையில் கண்டதுங் கேட்டதுமில்லை. அந்தப்பரம புண்ணியாத்துமனுடைய தாய்தந்தைகளின் புண்ணியமே புண்ணியம்; காமவிகார பார்வையினால், இந்தப் பரம பதிவிரதையை ஏறயிறங்கப்பார்த்த என் பாழுங்கண்களை பிடுங்கிவிட்டாலும் தோஷமில்லை. ஐயோ! எவ்வளவு துஷ்டகாரியத்தில் பிரவேசித்தேன'' என்று அனேகவிதங்களாய்ப் பச்சாத்தாபப்பட்டு பயமுண்டாய் தேகமெல்லாம் நடுக்கலிட்டுக்கொண்டிருந்தது. அப்படியாய் நடுக்கலிட்டுக்கொண்டிருக்கும் இரண்டுகைகளையுங்குவித்து ''தாயே! உன்னிடத்தில் நான் செய்த அபராதத்தை மன்னித்து என்னை ரக்ஷிக்கவேண்டும்; நான் உனது புத்திரன்; நீர் எனதுதாய். நீரென்னிடம் கனிகரம் வைக்காவிட்டால் அதி

யாயமாய்க் கெட்டுப்போவேன். பதிவிரதாதேவியென்று அறியாமல் பாமரத்வத்தினால், உம்மை மோகித்து பாழாய் போக இருந்தேன். உமது கருணைகடாக்ஷத்தினாலேயோ, பூர்வ ஜன்மங்களின் புண்ணிய விசேஷத்தினாலேயோ, பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலேயோ அல்லது பகவதனுக்கிரகத்தினாலேயோ இந்தச்சமயத்தில் எனக்கு அறிவு உண்டாய் நான் செய்தது மிகவும் அக்கிரமமென்று திடீரென்று தெரியவந்தது. அப்படி வராவிடில் தீபத்தில் வீழ்ந்த விட்டில்பூச்சிகளைப்போல் பஸ்மமாயிருப்பேன்" என்று மிகவும் தீனசுரத்துடன் சொல்லி சுந்தராதேவியின் பாதத்தில் சாஷ்டாங்கமாய்விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்றான்.

சுந்தராதேவி பார்த்துக்கொண்டிருக்கும் போதே வர்த்தகனுடைய புத்தி க்ஷணத்திற்குள் மாறிவிட்டதைப் பார்த்து அதிசயப்பட்டு, இவையெல்லாம் ஸ்ரீராமமூர்த்தி திருவிளையாட்டேயென்று நிச்சயித்து, தன் மானத்தைக் காப்பாற்றினதற்காக பகவானைப் பலவிதங்களாய் மனதில் புகழ்ந்து வர்த்தகனைப்பார்த்து, "ஐயா! நீர் யாதுக்கும் பயப்படவேண்டாம்; ஸ்ரீராமமூர்த்தி அனுக்கிரகம் இருக்கும்வரையில் உமக்கு யாதொருகுறைவும் வரமாட்டா. அஞ்ஞானத்தினால், முதல் துஷ்ட எண்ணங் கொண்டபோதிலும் கடைசியில் அறிவுண்டாய் மனப்பூர்வகமாய் பச்சாத்தாபப்படுவதனால், முன் எண்ணியபாபம் நிவாரணமாய்விடும். முதல் விஷம் சாப்பிட்டு, பிறகு அமிருதம் சாப்பிட்டால், விஷதோஷம் அமிர்தத்தினால் ஜீர்ணமாவதுபோல், முதல் துஷ்டகாரியத்தில் பிரயத்தனப்பட்டு, பிறகு மிகவும் வருத்தத்துடன் மனம்நொந்து பச்சாத்தாபப்படும் உன்னைச் சிறிதேனும் முன்செய்த தோஷம்பற்றாது. இப்போது உன்னை எனது நாயகரிடம் அழைத்துச்

சென்று அவர் அனுக்கிரகம் உன்மீது உண்டாகும்படிச் செய்விக்கின்றேன். இதுவிஷயத்தில் நீர் கொஞ்சமாகிலும் சமுசயப்படமேண்டாம் என்று அபயம்தந்து அவனை பலவிதங்களாய்த் தேறுதலைச்செய்ய ஆரம்பித்தாள். அதனால், வர்த்தகன் கொஞ்சம் சாந்தமடைந்து, அதுவரையில் இருதயத்தை மூடிக்கொண்டிருந்த அஞ்ஞானமென்னும் இருளெல்லாம் நீங்கிச்சுத்த விரக்தியுண்டாய் சுந்தராதேவியுடன்கூட கபீரிடஞ் செல்லச்சித்தப்பட்டான். அப்போது சுந்தராதேவி மிகவுஞ் சந்தோஷத்துடன் தன்னுடன்கூட வர்த்தகனையும் அழைத்துக்கொண்டு, தன்வீடுசேர்ந்து, ராஜசேவகனைத் தேடிக்கொண்டிருக்கும் தன்நாயகனிடஞ் சென்று நமஸ்கரித்து, நடந்த விஷயங்களை எல்லாஞ்சொல்லி வர்த்தகனைக்காட்டி "இவரை ரக்ஷிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். அப்போது அந்தவர்த்தகன் மிகவும் பக்தியுடன் கபீர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து நின்று "சரணமடைந்தேன்; ரக்ஷிக்கவேண்டும்" என்று மிகவும் தீனசுரத்துடன் வேண்டிக்கொண்டான். கபீர் மிகவும் ஆச்சரியப்பட்டு தனக்குள் தான் சந்தோஷித்து, வர்த்தகனை ஆலிங்கனஞ்செய்து, மிகவும் கௌரவித்து, சாதுக்களை வதைசெய்த ராஜசேவகன் அக்கிரமத்தை வர்த்தகனுக்குச்சொல்லி, சற்றே நிதானியுங்கள் என்று கபீர் சொல்லினர்.

இதற்குள் வைத்தியனுக்காகச்சென்ற வர்த்தகன், வைத்தியனிடஞ்சென்று தன் சிநேகிதனுக்கு நேர்ந்த சங்கதிகளை எல்லாஞ்சொல்லி, வயித்தியனை அழைத்துக் கொண்டு வர்த்தகன்வீடுவந்துசேர்ந்தான். அப்போது வீட்டின் கதவு திறந்திருந்தும் தன் சிநேகிதனைக் காணாமல் போனதனால் சிலநேரம்யோசித்து "நான் கொடுத்த பதார்த்தங்களை வண்டியில் ஏற்றிக்கொண்டு போகவில்லையா!" என்று வர்த்

கன் சொன்னவிஷயம் தனக்கு ஞாபகத்திற்குவந்தது. பயித்தியம் விசேஷமாகிக் கதவையும் சாற்றாமல், அவ்விடம் போயிருக்கலாமென்று நிச்சயித்து, "ஓஹோ! பிரமாதமான கஷ்டம்வந்து சம்பவித்ததுபோல் காணப்படுகிறது. கபீர் பரமபாகவதர், அவர் பாரியாள் பரமபதிவிரதை. இவன் அவ்விடஞ் சென்று ஏதாகிலுஞ் சேஷ்டைகள்செய்தால், அனேக ஆபத்துகள்வந்து சம்பவிக்கும். இதுவரையில் என்ன தீங்கு சம்பவித்ததோ தெரியவில்லை. வைத்தியன் வீட்டிற்குப்போகும் போதே வெளிக்கதவு சாற்றிக்கொண்டு போகாமல் போனேன். அல்லது யாரையாகிலும் இங்கு காவலாய் வைத்துவிட்டுப் போகாமற் போனேன். இந்த யோசனை முன் தெரியாமற் போயிற்று. இப்பொழுது என்னசெய்யலாம்" என்று தனக்குள் தான் ஆலோசித்துப் பிறகு வைத்தியனை அழைத்துக்கொண்டு மிகவுஞ் சீக்கிரமாய்க் கபீர்வீடுசேர்ந்து அங்கு மிகவும் பயபக்தியுடன் நின்றிருக்கும் தன் சினேகிதனைப் பார்த்து, கொஞ்சம் தைரியமுண்டாய்க் கபீர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து ஓர்புறமாய் நின்றான்.

அப்போது கபீர் நான்குபக்கங்களிலும் தேடிப்பார்த்தும் ராஜசேவகன் தென்படாமற்போனதனால் மிகவுங் கோபங்கொண்டு பூமியைக்காலினால் உதைத்து, கள்ளர்களைப்பார்த்து, 'ஐயமாரே! ராஜசேவகன் உங்களைப்பிடித்துத் தொந்தரவு செய்தபோதே ஓர் கூச்சல்போட்டிருந்தால் நான்வந்து அவனுக்குத்தக்க வேலையைச் செய்திருப்பேனல்லவா? விருதாவாய் இவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளானீர்கள். ஆஹா! இப்பொழுது அந்தத்துரோகி என் கண்களுக்குத் தென்பட்டிருந்தால், இந்தத்தடியால் அவன் மண்டையை இருபிளப்பாய்ப் பிளந்திருப்பேன்" என்று மிகவும் ஆர்ப்பாட்டஞ் செய்தார்.

அப்போது உடனே ஸ்ரீராமமூர்த்தியே பிரசன்னமாய்க் கபீர்முன் குனிந்து, "ஐயா! நானே இந்தக்கள்ளர்களைத் தொந்தரவுசெய்தேன். சாதுசந்தர்ப்பணைவிஷயமாய் உன் பாரியாள் தன்தேகத்தை வர்த்தகனுக்கு விக்கிரயஞ்செய்து எவ்வளவோ கஷ்டத்துடன்கொண்டுவந்த பதார்த்தங்களையெல்லாம் இந்ததுர்மார்க்கர்கள் கொண்டுபோகின்றார்களே என்று பச்சாத்தாபப்பட்டு, உனக்கு நன்மைசெய்ய இவ்வாறுசெய்தேன் என்றுசொல்லி "கடைசியில் நான் செய்த உபகாரத்திற்கு அபகாரம்வந்து சம்பவித்தது. மற்றொருமுறை இவ்வாறு உபகாரஞ்செய்ய வராதபடி எனக்குத் தக்கதண்டனையைச்செய்" என்று தன் முதுகை நன்றாய்க் குனிந்துக்காட்டினார். அப்போதுதிருடர்கள் "இவனே இதுவரையில் எங்களை மரத்தில்கட்டிவிட்டவன்" என்று சொன்னார்கள். தன் எதிரில் குனிந்துநின்ற புருஷன் இலக்ஷணங்களைப்பார்த்து, இவர் ஸ்ரீராமமூர்த்தியே என்று நிச்சயித்து மிகவும்பயந்து கையிலிருந்ததடியைக் கீழேபோட்டு, இருகைகளையுங்குவித்துப் பிரதக்ஷிணம்வந்து நமஸ்கரித்து, "பரமேசுவரா! பரந்தாமா! பரமபுருஷா! பராத்பரா! அஞ்ஞானத்தினால் தேவரீருடையவிஷயத்தில் அபராதஞ்செய்த மஹாபாபியாகிய என்னை மன்னித்து ரக்ஷிக்கவேண்டும். ஆஹா! உமது தீனதயாளத்வம் என்னவென்று வருணிக்கலாம்? சாது சந்தர்ப்பணைக்காகக் கொண்டுவந்த வஸ்துக்களைக் கள்ளர்கள் கொண்டுபோகின்றார்களென்னும் பரிதாபத்தினால், ராஜசேவகன்வேஷம்போட்டு அடியேனுடைய வீட்டிற்கு காவலாயும் வந்திருந்தாயல்லவா? உமது திவ்விய அஸ்தங்களால்அடித்து செடியில்கட்டிவிட்ட இந்தமஹாத்மாக்களின் பாக்கியத்தை என்னவென்று சொல்லலாம்? இந்தப்பரம புண்ணியாத்மாக்களின் அனுக்கிரகத்தினால், பாமரத்வனை அடியேனுக்குத் துர்லபமா

ஜய உமதுசேவை இன்று கிடைத்ததல்லவா? ஆஸ்ரித பக்தவத்ஸலா! உமது மஹாமகிமையை வர்ணிக்க நான் எவ்வளவு மாத்திரன்! உலகத்தில் மனிதர்களில் சிலர் மாயையால், உம்மை உண்டென்றும், சிலர் இல்லையென்றும், சிலர் கிஞ்சிக்ஞனென்றும், சிலர் மாயா பத்தனென்றும், சிலர் மாயா தீதனென்றும், சிலர் சொரூபமென்றும், சிலர் வெகு சொரூபமென்றும், பற்பல விதங்களாய் வாதஞ்செய்கின்றார்கள். அவர்களின் வாதங்களுக்கெல்லாம் நீர் அனுகூலமாயிருக்கின்றீர். ஆஹா! உன் விசித்திர சக்தியை என்னவென்றுசொல்லலாம்! ரூப நாம குணபேதங்களினால் அநேகவித பிரபாவங்களுடன் நடனஞ்செய்துவருகின்றீர். வேதங்களில் விசுவாசமுடையவராயும், சாஸ்திரங்களுக்குச் ஜன்மஸ்தானமாயும் இருக்கின்றீர். மனம் புத்தி சித்த அஹங்காரங்களுக்கெல்லாம் பிரத்தியேகமாய் இருந்து பொய்சொல்லாமலும், இதரர்களை வஞ்சனைசெய்யாமலும், சத்தியம்தவறாமல், உம்மை விசேஷபக்திசெய்து வரப்பட்டவர்களை ரக்ஷித்துக்கொண்டுவருகின்றீர். மனம் புத்தி சித்த அஹங்காரங்களுக்கு மூலமாகிய அந்தக்கரணத்திற்கு விஷய விருத்திகளை உண்டாக்கச்செய்யவும், சத்புருஷர்களை அனுக்கிரகிக்கவும் பிரமன் விஷ்ணு மஹேசுவர சொரூபமாய் அவதரித்துவருகின்றீர். அன்றியும், மனம் புத்தி சித்த அஹங்காரவிருத்திகளினால் அறிபத்தங்க குணத்திரயங்களுக்கு சாக்ஷியாயும் இருக்கின்றீர். இப்படிப்பட்டதென்றும் அப்படிப்பட்டதென்றும் நிரூபிக்கக்கூடாத மகிமையுடையவராயும், எண்ணத்தகாத ஸ்ருஷ்டி ஸ்திதி சம்மாரங்களைச் செய்து வருகின்றீர். மஹா தத்துவ காரியங்களுக்கெல்லாம் ஹேதுபூதமாயும் இருக்கின்றீர். ஹட மந்திர லய ராஜயோகங்களுக்கெல்லாம் ஆத்மாராமனாய் இருக்கின்றீர் தூல சூக்ஷ்ம சரீரங்களைத் தெரிந்து

கொண்டு, ஆகாசம்போல் எதிலும்பற்றாமல், பிரபஞ்சசொரூபமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றீர். சர்வகால சர்வாவஸ்தைகளிலும் பிரபஞ்சத்தினுடைய பாவாபாவங்களைத் தெரிந்துகொண்டு ஞானாஞ்ஞானங்களுக்கு காரணபூதனாய் சர்வத்திற்கும் கர்த்தாவாய்இருக்கின்றீர். பரமேசுவரா! உன்பக்தியினால் ஞானம் உண்டாகவேண்டியதேயொழிய, இச்சா சாந்திராயணாதி தபசுகளால் உண்டாகத்தக்கதல்ல. சத்புருஷர்கள் உன்னை அறிவதற்காக எப்பொழுதும், தாம் செய்யும் கர்மங்களைச் சிறிதேனும் மனதில்நினையாமல்' சர்வமும் உமக்கே அர்ப்பணஞ்செய்து, சகுண நிர்குணமான உன் சரித்திரங்களைக்கேட்டு சத்கர்மானுஷ்டங்களினால் உண்டாகிய விசேஷபக்தியினால். உமதுபாதாரவிந்தம் அடைகின்றார்கள். சர்வேசுவரா! துஷ்டநிக்கிரகமும் சிஷ்டபரிபாலனமும் செய்வதற்காக இந்தஉலகத்தில் நீர்தரித்த மானவசரீரம் கணக்கில்லாமலிருக்கின்றது. அவைகளையெல்லாஞ்சொல்ல ஆயிரஞ் சிரசையுடையவனுக்குஞ் சாத்தியமாகமாட்டாது. நீர்பக்திசுலபன், புராணபுருஷன்; அப்ரமேயன்; அநாதிநித்தியன்; ஆபத்பாந்தவன்; அநாதரக்ஷகன்; உமது அனுக்கிரகத்தினாலேயே, துக்கநிவாரணையாய் சுகமனுபவித்துவருகின்றோம். உமதுகிருபாகடாக்ஷம் எப்பொழுதும் எங்கள்மீது இவ்வாறேஇருக்கவேண்டும்'' என்று பலவிதங்களாய்த் துதிசெய்தனர்.

அப்போது பக்தவத்ஸலனான ஸ்ரீராமமூர்த்தி கபீர் பக்திக்கு மிகவுஞ் சந்தோஷித்து கருணாகடாக்ஷத்தினால் பார்த்து "பக்தசிகாமணி! உன்பக்திக்கு மிகவுஞ் சந்தோஷித்தேன். உன்னைப்போன்ற சத்புருஷன் உலகத்தில் மற்றொருவனில்லை. பாகவதர்களை ஆதரிக்க பக்திகௌரவங்கள் உனக்கே மிகவும் சிலாக்கியமாயிருக்கின்றது. உன்பாரி

யாள் பரம பதிவிரதாசிரோன்மணி; அவள்மனம் மிகவும்
பரிசுத்தமானது. நீங்கள் தம்பதிகள் இருவரும், உயிர்
ஒன்றும் உடல் இரண்டுமாயிருக்கின்றீர்கள்'' என்று அவர்
களின் மீதிருந்த பிரீதியை வெளிப்படுத்தி கைகளைக்குவித்து
அஞ்சலி அஸ்தர்களாய் தன் சமீபத்தில் நின்றிருக்கும்
ஞானதேவ் நாமதேவ்களைக்காட்டி, "கபீர்! இவர்கள்
சாமான்யர்களல்ல! பரயதர்ம சொரூபிகள்; ஞானதேவ்
தருமரக்ஷணார்த்தமாய் என் அம்சத்தில் அவதரித்தவர்.
நாமதேவ் எனக்கு மிகவும்மித்திரனா யுத்தவனேயொழிய
மற்றொருவனல்ல'' என்று சொல்லினர். அப்போது கபீர்
ஞானதேவ் நாமதேவ்களை நமஸ்கரித்து மறுபடியும் பகவா
னைப்பார்த்து "தேவா! பரமானந்தமான உமது சேவை
யும், சாதுக்களின் சந்தர்ப்பணமும், உமது அனுக்கிரகத்
தினால் நடந்தேறினதேயொழிய, வர்த்தகன் வீட்டிலிருந்து
பதார்த்தங்களை எல்லாம் வண்டிகளில் கொண்டுவந்து
இறக்கி எவ்வளவோ உபகாரஞ்செய்த வர்த்தகன் எங்கு
சென்றதும் தெரியாமலிருப்பதால், என்மனதிற்கு மிகவும்
வருத்தமாயிருக்கின்றது'' என்று கபீர் சொல்லினர். அதற்
குப் பகவான் மந்தகாசஞ்செய்து "பதிவிரதாசிரோன்
மணி பக்திக்குமெச்சி, நானே அந்தரூபம்தரித்து, வண்டி
களில் சாமான்களைக்கொண்டுவந்தேன்'' என்று தெரியச்
சொல்லி, சுந்தரா கபீர்களை ஆசீர்வதித்து அந்தர்த்தான
மாயினர். சாதுக்கள் எல்லோரும் பரமானந்தமடைந்து,
குதித்துக் கூத்தாடி, "ஜயஜய கபீர்! ஜயஜய கபீர்'' என்று
ஆகாசம் பிளக்கும்படி கூச்சலிட ஆரம்பித்தார்கள். கபீர்
பரமானந்தமடைந்து சாதுக்களுடன்கூடி சிலநேரம்கூத்
தாடி இராமஸ்மரணை செய்து வீட்டிற்குச்சென்று சரண
மடைந்த வர்த்தகனுக்கும் கள்ளர்களுக்கும் பரமபவித்திர
மான தாரகமந்திரத்தை உபதேசித்து ப்ரம்மானந்தத்தை
அடைவீர்களாகவென்று ஆசீர்வதித்தனர். அப்போது

ஞானதேவ் மிகவுஞ் சந்தோஷத்துடன் கபீரை ஆலிங்
கனஞ்செய்து "பக்தசிகாமணி! உன்பிரபாவத்தை வர்
ணிக்க நாங்கள் எவ்வளவு மாத்திரம்? பூர்வம் பரமபதத்
தில் நாராயணமூர்த்தி சொல்லிய விஷயம் இப்போது ஞாப
கஞ் செய்துகொள்ளும். நீர் சுகப்பிரம்மருஷியல்லவா?
உலகத்தில் எல்லோரும் பக்திஈனர்களாய் சமுசார சமுத்தி
ரத்தில் மூழ்கிப்போய் கரையேற வழிதெரியாமல் தத்த
ளித்துக்கொண் டிருப்பவர்களைக் கரையேற்ற உம்மை
அனுப்பியபோது, சிசுரூபம் தரித்து முத்துச்சிப்பியில்
சயனித்து இவ்வுலகத்திற்கு வந்தீர். இதுவரையில் யுக்தா
அயுக்தங்கள் இல்லாமல் துர்விஷயத்தில் பிரயத்தனப்பட்
டுக்கொண்டிருந்த அனேக பாமரர்கள் உம்மால் சத்கதியை
அடைந்தார்கள். துஷ்டர்களாகிய அநேக துலுக்கர்களின்
துடுக்குத்தனமெல்லாம் உம்மால்ஒழிந்தன. நீர்செய்த காரி
யங்களெல்லாம் அனேக அற்புதமான காரியங்களாகவே
யிருக்கின்றன. இன்னும் உம்மால் நடக்கவேண்டிய விஷ
யங்கள் அனேகம் உண்டு. இந்த நாமதேவும் பகவதாஞ்
ஞானுசாரமாய் உலகத்தை சீர்திருத்த உம்மைப்போல்முத்
துச்சிப்பியில் மிதந்து பூலோகத்திற்குவந்தவர். இவர் செய்
யும் காரியங்களெல்லாம் மிகவும் அற்புதமானவை. இவர்
பக்தி சிரத்தைகள், மிகவும் பரிசுத்தமானவைகள். இவர்
விஷயம் இதுவரையில் பகவானே சொல்லியிருக்கின்றார்?
இனி நான் விசேஷமாய்ச் சொல்லவேண்டியதேயில்லை''
என்று சொல்லினர். கபீர் இவைகளை எல்லாம் கேட்ட
வுடன் மஹா ஆனந்தமடைந்து, அதீதமான ரகசியங்களை
எல்லாம் நாமதேவுடன் கலந்துபேசி தெரிந்துகொண்டு
பரமானந்த மடைந்து ஞானதேவ் சுகுணங்களைப் பல
விதங்களாய்ப்புகழ்ந்து கொண்டாடினர்.

பிறகு ஞானதேவ் கபீரைப்பார்த்து "ஐயா! தக்ஷண
தேசத்தில் பூலோகவைகுண்டமென்று பிரசித்தியடைந்த

பண்டரீக்ஷேத்திரத்தில் பகவான் ஸ்ரீபாண்டுரங்கமூர்த்தியாய்ச் செங்கல்மீதுநின்று பக்தர்களுக்குப் பரமானந்தகரமான சேவையைத் தந்துகொண்டிருக்கின்றார். அவரை நீர் ஒருமுறை அவசியம் சேவிக்காவிடில் இப்போதெடுத்த ஜன்மம் ஜன்மமேயல்ல'' என்று சொல்லினர். அதற்குக் கபீர் மிகவுஞ் சந்தோஷித்து ''உமது வாக்கின்படிச்செல்ல சித்தமாயிருக்கின்றேன். கார்த்திகை மாதம் ஏகாதசி மஹோச்சவத்திற்குச்சென்று அவசியமாய் தரிசிக்கின்றேன்'' என்றுசொல்லி அவரை சந்தோஷிக்கும்படிச்செய்தனர். பிறகு ஞானதேவும் நாமதேவும் காசியில் சில நாளிருந்து, பிறகு கபீரிடம் செலவு பெற்றுக்கொண்டு சாதுஜனங்களுடன்கூட மற்ற க்ஷேத்திரங்களுக்குச்சென்றார்கள்.

கபீர் குடும்பசகிதமாய்ப் பண்டரீபுரம் செல்லுதல்.

சிலநாட்சென்றபின் கார்த்திகை மாதத்தில் பண்டரீபுரம்போக கபீர் நிச்சயித்துக்கொண்டனர்; இவ்விஷயத்தை யறிந்த சுற்றுப்பக்க கிராமங்களிலுள்ள சாதுக்கள் யாவரும் மிகவும் சந்தோஷித்து தாங்களும் அவருடன் சென்று யாத்திரைசெய்ய நிச்சயித்து அவரிடத்தில் தாங்கள் கொண்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்து எவ்விதத்திலாயினும் தங்கள் எண்ணத்தைப் பூர்த்திசெய்விக்கவேண்டுமென்று வெகுவாய்க் கேட்டுக்கொண்டார்கள். அதைக் கேட்ட கபீர், தனக்குச் சாதுசங்க சகாயம் நேரிட்டதைக் குறித்து மிகவும சந்தோஷித்துப் பகவானை அநேகவிதங்களாய்த் துதிசெய்து, அவர்களின் மனம் குளிரும்படி விடைகொடுத்தனுப்பினார். பிறகு நிச்சயித்தநாளைச் சாதுக்

களுக்குத்தெரிவித்து அவர்களைவரவழைத்து அவர்களுடன்கூட தாம் தம்பதிசமேதராய்ப் பண்டரீபுரம் போகப்புறப்பட்டார். இவ்விதமாய் எல்லோரும் புறப்பட்டு வழியில் தங்களுக்குத் தென்பட்ட திவ்விய க்ஷேத்திரங்களெல்லாம் பார்த்துக்கொண்டும், சத்புருஷர்களைச் சேவித்துக்கொண்டும், அங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து சமைத்தும் போஜனஞ்செய்தும், இராமபஜனையுடன் வழி நடந்தார்கள். பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள ஜனங்களெல்லோரும் கபீர் யாத்திரையாய் புறப்பட்டு வருகின்றார் என்னும் சங்கதி கேள்விப்பட்டு அவரை தரிசிப்பதற்காக எறும்பு செல்வதுபோல் தாரைதாரையாய்ச்சென்று, தாங்கள் கொண்டுபோன பழம் தக்ஷிணைகளை கபீருக்குப்பாத காணிக்கையாகச் சமர்ப்பித்து மிகவும் சிரத்தை பக்தியுடன் நமஸ்கரித்து, நேத்திரோச்சவமாய் கபீர் சுந்தராதேவிகளைத் தரிசித்து, மற்றசாதுக்களுக்கு வந்தனஞ்செய்து, அவர்களை மிகவுங் கௌரவமாய் அழைத்துச்சென்று, பரிசுத்தமானயிடத்தில் அவர்களைத் தங்கும்படிச்செய்து, அவர்களுக்கு வேண்டிய போஜனபதார்த்தங்களை எல்லாம் தந்து, சந்தோஷமாய் சாதுசந்தர்ப்பணைகளைச் செய்வித்துக் கிருதார்த்தர்களாய் வந்துகொண்டிருந்தார்கள். அச்சமயம் சாது ஜனங்களுக்கெல்லாம் பகல் பண்டிகையாகவும் இரவு தீபாவளியாகவும் இருந்தன. கிராமங்கள் பட்டணங்கள் முதலாகிய ஊர்களிலெல்லாம் இராமநாமசங்கீர்த்தனம் நிறைந்து பிரம்மானந்தத்தை உண்டாக்கியது.

இவ்வாறு செல்லும்பொழுது ஒருநாள், ஓர் கிராமத்தில் கபீரினுடைய யுத்தண்ட (பெருத்த) மஹிமாதி அதிசயங்களை எல்லாம் வீரபாஷாண்டிகள் கேள்விப்பட்டு, அவர்விஷயத்தில் மிகவும் குரோதமுண்டாய் தம்மில்தாம்

பின்வருமாறு ஆலோசிக்கத்தொடங்கினார்கள்; "இந்தத் தாலுக்கனுக்கு இவ்வளவு கௌரவமென்ன? பாமர மூட ஜனங்களுக்குத் தக்கபடி அவன் நடந்துகொள்ளுகின்றான். அதனால், இவர்கள் அவனை மஹாபுருஷனென்றெண்ணி அவனுக்கு வேண்டிய உபசரணைகள் செய்துவருகின்றார்கள். நாம் ஏதாகிலும் யுக்திசெய்து இவனை அவமானப்படுத்தினால், அப்போது அவன்கௌரவம் குறைந்து பிரஜைகளால் அவமானப்படுவான். இதற்கு என்ன உபாயமென்றால், நமது ஊர் எல்லையிலுள்ள அரசமரத்திலிருக்கும் பிரமராக்ஷதனிடத்தில் அவனை அழைத்துவந்து இறக்கினால், நாம்செய்யவேண்டிய காரியங்களை அந்தப் பிரமராக்ஷதனே செய்துவிடுவான்" என்று எல்லோரும் நிச்சயித்து மஹாபக்தி சிரத்தையுடன் இருப்பவர்களைப்போல் அபிநயித்து கபீரிடஞ்சென்று, தம் கிராமம்வரையில் தயவு செய்துவரவேண்டுமென்று பிரார்த்தித்து, சகல சாதுக்களுடன் மிகவும் மரியாதையாய் அழைத்துவந்து, முன் சொல்லிய அரசமரம் சமீபமாயிருக்கும் மண்டபத்தில் இறக்கி, அவர்களுக்குவேண்டிய போஜன பதார்த்தங்களை எல்லாஞ் சித்தஞ்செய்துகொடுத்தார்கள். அவைகளையெல்லாஞ் சாதுக்கள் மிகவுஞ் சந்தோஷத்துடன்பெற்று, அதன் சமீபமாயிருக்கும் தாமரைத்தடாகத்தினிடம் சமயல் செய்து சந்துஷ்டியாய்ப் போஜனஞ்செய்து மேற்படி மண்டபத்தில் அர்த்தராத்திரிவரையில் இராம பஜனை செய்துகொண்டிருந்தார்கள். அப்போது கபீர் காற்றுக்காக அரசமரம் அடியிலுள்ள திண்ணையின்மீது தர்ப்பாசனம்போட்டு உட்கார்ந்து இராமநாமஸ்மரணை செய்துகொண்டிருந்தனர். அவ்வூர் பாஷாண்டிகள் தூரமாயிருந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அர்த்தராத்திரியில் அரசமரத்துப்பொந்திலிருந்த பிரமராக்ஷதன் சாதுக்

கள் செய்யும் சந்தடிகளுக்குச் சகிக்கமாட்டாமல், கோபாவேசங்கொண்டு விருக்ஷத்தின்கீழிருக்கும் கபீரிடம்வந்து, அவரைப்பார்த்துப் பற்களை நறநறவென்றுகடித்து, கண்களில் நெருப்புப்பொரிகள்பறக்கும்படி விழிகளை கீழ்மேலாய்த்திருப்பிக் கபீரைப்பார்த்து மிகவும் பயங்கரமான கர்ச்சனையை சர்ச்சித்தது; சாதுஜனங்களெல்லாம் அந்தக் கர்ச்சனைக்கு நடுநடுங்கி தத்தளித்து நிச்சேஷ்டிதர்களாய் நின்றிருந்தார்கள். பிரமராக்ஷதன் வாயுமண்டலம்வரையில் உயர்ந்து தன் விஸ்வரூபத்தைக்காட்டிற்று. கபீர் சற்றேனும்பயப்படாமல் இராக்ஷதனைப்பார்த்து "நீயார்?" என்றுகேட்டார். பிரமராக்ஷதனுக்கு இன்னும் அதிக கோபமுண்டாய் "அடே என் மகத்துவம் அறியமாட்டாயா? பக்ஷிகளும் இம்மரத்தடியில் வரப் பயப்படும்; என்காற்றுப் பட்டவுடனே கிராமங்களெல்லாம் தூமமாய் (புகையாய்) விடும். மாந்திரீகர்களெல்லாம் என்பேர் கேட்டமாத்திரத்தில் அவர்களிருக்கும் கிராமத்திலிருந்து சொல்லாமல் அப்படியே ஓடிவிடுவார்கள். என்னையாரென்று நினைத்தாய்? என்மகிமையை அறியாமல் நீங்களெல்லோரும்சேர்ந்து என்செடியின்கீழ்த்தங்கி எனது தடாகத்திலுள்ள நிர்மலமான ஜலமெல்லாம்கலக்கி நிர்ப்பயமாய் இவ்வாறு கூச்சலிடுகின்றீர்களா? இப்போது உங்களை என்ன செய்கின்றேன் பார்" என்று முன்னைவிட இன்னும் அதிகமாய் ஆர்ப்பாட்டம்செய்தது.

கபீர் அதைக்கேட்டு பக்கென்று சிரித்து "உன் அகடவிகட கூத்துகளெல்லாம் எங்களிடம் காட்டினால் என்ன பிரயோஜனம்? எங்கள்வழியாய் நாங்கள் செல்லுகின்றோமேயொழிய உனக்கு ஒருகெடுதியும் செய்யவில்லை. எங்களுக்கு ஸ்ரீராமமந்திரம் தவிர மற்ற எவைகளும் தெரியவாராது, நாங்கள் அன்னியதேசஸ்தர்கள்; யாத்திரை

விஷயமாய் பண்டரீபுரம்போகின்றோம். இன்றிரவு இங்கு தங்கி அதிகாலையில் எங்கள் வழியாய் நாங்கள்செல்லுவோம். இவ்வளவுமாத்திரத்திற்காக நீ என் கோபிக்கின்றாய்? இந்த மரத்தடியில் பக்ஷிகளும்வர பயப்படுமென்று சொன்னாய் நீ அப்படிச்சொல்லுவது தருமமல்ல? ஜடமாகிய விருக்ஷங்களும் ஜனங்களுக்கு எவ்வளவோ உபகாரத்தைத் தருகின்றன. இம்மரத்தை ஆஸ்ரயித்தல்லவா நீயும் இதில் குடியிருக்கின்றாய்? இந்தமரத்திற்கு இருக்கும்குணம் உனக்கில்லாமற் போயிற்றல்லவா? பரோபகாரார்த்திற்கு உபயோகப்படாதசரீரம் நிஷ்பிரயோஜனமே? பூர்வ ஜன்மங்களில் நீ எவ்வளவோ பாபங்களைச் செய்திருந்தபடியால் உனக்கு இந்த ஜன்மத்தில் பிசாசுஜன்மம்வந்தது. இச்சன்மத்திலும் விவேகமில்லாமல் துஷ்டகாரியத்தில்பிரவேசிப்பாயாகில் மறுஜன்மத்தில் உன்கதியைச் சொல்லவேண்டியதேயில்லை. சத்ருவாயிருந்து ஆபத்தில்வந்தவனை ஆதரிக்கவேண்டுமென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படியிருக்க தேசாந்திரியர்களாய் வந்த சாதுக்களை ஆதரிப்பது உன்னுடையகடமையாயிருக்க அதைவிட்டு நிர்நிமித்தமாய் நெருப்பை மடியில்கட்டிக்கொண்டு எங்கள்மீது கிளம்பினாய் ஆஹா உன்விவேகத்திற்கு என்னவென்று சொல்லலாம்” என்று எதிர்த்துப் பேசினார். அவ்வார்த்தைகளையெல்லாம்” பிரம்மராக்ஷதன் கேட்டவுடன் முன்னைவிட அதிககோபங்கொண்டு “ஆஹா! நீயா எனக்குப் புத்திசொல்லப்பட்டவன், உலகமெல்லாம் ஒருமுறை தலைகீழ் செய்யும் பிரம்மராக்ஷசனென்று நீ அறியமாட்டாயா?” என்று மிகவும் கோபித்து கபீர்மேல் விழுந்தான். அப்போது கபீர் துளசிமணியை இராமமந்திரத்தினால் மந்திரித்து ராக்ஷதன்மீது எறிந்தார். அப்போது அது, நாகாஸ்திரம்போல் சீறி ராக்ஷதன்

மீது சென்று அவன் சரீரமெல்லாம் எரியும்படிச்செய்தது. ராக்ஷதன் அதை சகிக்கமுடியாமல் ஓடிவந்து “அபயம் அபய”மென்று கபீர் பாதத்தில் விழுந்து தான் செய்த குற்றத்தை மன்னித்து ரக்ஷிக்கும்படி மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அப்போது கபீர் தயாரசமுடையவராய் பிரம்மராக்ஷதனை ஆதரித்து அவன் மஸ்தகத்தில் தன் அஸ்தம்வைத்து தாரகமந்திரம் உபதேசித்தார். உபதேசித்தவுடன் பிரம்மராக்ஷதன் தன் விகாரரூபம் மாறி தேஜோமயமான திவ்யதேகம்தரித்து இருகைகளையும் குவித்து அஞ்சலி அஸ்தனாய் நின்று “உமது அனுக்கிரகத்தினால் கிருதார்த்தனானேன்” என்று சொல்லி கபீரை பல விதங்களாய் ஸ்துதிசெய்துநின்றது. அப்போது கபீர் மிகவும் ஆச்சரியப்பட்டு “எந்தகாரணத்தினால் உனக்கு பிரம்மராக்ஷஸரூபம் வந்தது?” என்று கேட்டனர். அப்போது அவன் மிகவும் பயபக்தியுடன் நமஸ்கரித்து பின் வருமாறு சொல்லத்தொடங்கினான்:—

“என்ஜன்மஸ்தானம் பண்டரீபுரம்; என்பெயர் பைரவபட்டன். நான் வேதசாஸ்திர வித்தைகளை எல்லாம் நன்றாய் வாசித்துப் பண்டித சிரோமணிஎன்று பிரசித்தியடைந்து அரசனால் பூஜிக்கப்பட்டிருந்தேன். அப்போது என் தந்தை சம்பாதித்துவைத்துப்போன ஆஸ்தியேயல்லாமல்நான் இன்னும் விசேஷ ஆஸ்தி சம்பாதித்து மிகவும் சந்தோஷமாய் காலம் கழித்துவந்தேன். பொருளுக்குத்தக்கபடி விசேஷ வித்தையும் இருந்தபடியால் கர்வம் அதிகரித்து எவரையும் லக்ஷியம்செய்யாமலிருந்தேன். எப்படிப்பட்ட வித்துவான்கள் ராஜசபைக்கு வந்தபோதிலும் அவர்களுக்கு என்ன தெரியுமென்று அவர்களைத் திரஸ்கரித்து என்னை நான் மெச்சிக்கொண்டிருப்பேன். என்னிடம் அறுபதுபேர்கள் சாஸ்திரங்களைக்கற்று வாதங்களில் மிகவும் ஜெயர்பெற்று

எனக்குசிஷ்யர்களாய் இருந்தார்கள். அவர்கள், பிரதிதினம் ராஜசபைக்குச்சென்றுவீற்றிருந்து அங்குவரும் வித்வான்கள் பக்தர்கள் பாகவதர்கள் யோகீசுவரர்கள் முதலானவர்களை தம் கேள்வியினால் தோல்வியடையச் செய்து தாம்மிகவும் கௌரவம்பெற்றுவந்தார்கள். நான் ராஜசபைக்குப் போகாமலிருந்து இவைகளை எல்லாம் கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷித்து வருவதுவழக்கம். இவ்வாறிருக்க, ஒருநாள் பதரிகாஸ்ரமத்திலிருந்த யோகீசுவரர் ஒருவர் இரண்டுசிஷ்யர்களைத் தம்முடன்கூட அழைத்துக்கொண்டு தீர்த்தயாத்திரையாய்ப் புறப்பட்டு பண்டரீபுரம் சேர்ந்து பகவானைத்தரிசனம்செய்து, அங்குள்ள ஜனங்களால், அரசன் மிகவும் பக்திவானென்றும், தர்மவானென்றும் கேள்விப்பட்டு அவரைப்பார்த்துச் செல்வதற்காக அரசன் கொலுமண்டபத்திற்கு வந்தார். அரசன் யோகீசுவரரைக் கண்டவுடன் சிம்மாசனத்திலிருந்து எழுந்து அவரை எதிர்கொண்டழைத்துவந்து வியாக்கிராசனமுடைய (புலித்தோலுடைய) சிம்மாசனத்தின்மீது எழுந்தருளச்செய்து அவர்வந்த விஷயத்தை அரசன் விசாரித்தான். அப்போது யோகீசுவரர் தாம்வந்த யாத்திரை விஷயங்களை எல்லாம் சொல்லி 'நீ மிகவும் பக்தனென்றும், தர்மவானென்றும் இவ்வூர் ஜனங்களால்கேள்விப்பட்டு உன்னைப் பார்த்துச் செல்ல இங்குவந்தேன்' என்றுசொல்லினர். அப்போது முன்சொல்லிய பண்டிதர்கள் தம் வழக்கப்படி "உமக்கு என்னசாஸ்திரங்கள் தெரியும்" என்று அந்த யோகீசுவரரைக்கேட்டார்கள். அதற்கு அவர் வேதாந்த சாஸ்திரம் சுவல்பமாய்த்தெரியுமென்று சொல்லினர். அப்போது அந்தப்பண்டிதர்கள் ஓர் கேள்வியைக்கேட்டு அதற்குப் பூர்வபக்ஷமும், சித்தாந்தமும் சொல்லவேண்டுமென்று யோகீசுவரரை புலவுந்தப்படுத்திக்கேட்டார்கள். அப்-

போது தனக்கு அவ்வளவு மாத்திரம் தெரியாதென்றும் தம்மை மன்னிக்கும்படியாயும் கேட்டுக்கொண்டனர். அவர்கள் அதைக்கேளாமல் தம்மிடம் இனி எந்த விஷயங்களைக் குறித்தாகிலும் சம்வாதம் செய்யவேண்டுமென்றாகிலும் அல்லது தோல்விபடைந்தேனென்றாகிலும் சொல்லவேண்டுமென்று மிகவும் பலவந்தம் செய்தார்கள். பிறகு யோகீசுவரர் பண்டிதர்களைப்பார்த்து அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பூர்வபக்ஷமும் சித்தாந்தமும் சொல்ல ஆரம்பித்து கடைசியில் அவர்களைத் தோல்வி அடையும்படிச்செய்து தாமும் சிலகேள்விகளைக் கேட்டார். அப்போது வித்வாம்சர்களெல்லாம் பயந்து அவர் கேட்ட கேள்விகளுக்கு யாதொன்றும் பதில்சொல்ல நாவெழாமல் ஸ்தம்பம்போல் நின்றிருந்தார்கள். அது விஷயம் நான் கேள்விப்பட்டு ராஜசபைக்குச்சென்று அவருடன்வாதாடினேன். அவர் வேதாந்த சாஸ்திரத்தில் நிபுணராயிருந்தபடியால் அவர் கேள்விக்குப் பதில்சொல்ல சக்தியில்லாமல் தோல்வியடைந்து பிறகு வெவ்வேறு விஷயங்களை குட்ரயுக்திசெய்து வாதாட ஆரம்பித்தேன். அப்போது யோகீசுவரருக்குக் கோபமுண்டாய் "இந்தராஜசபைக்கு வரப்பட்ட பெரியோர்கள் எத்தனைபெயரை இவ்விதமாய் அவர்களுடன் வாதாடி அவர்களை மனம்நோகச்செய்தார்களோ தெரியவில்லை" என்று மிகவும் பரிதாபப்பட்டு என்னைப் பார்த்து "நீ பிராமணனாயும் பண்டிதனாயும் யிருந்தும் இங்கு வரப்பட்ட பெரியோர்களை எல்லாம் உன் சிஷ்யர்களால் கேள்விகளைக் கேட்கும்படிச் சொல்லி அனேகர்களை மனம் நோகச்செய்துவந்தபடியால், நீ பிரம்மராக்ஷசனாய் ஆகக்கடவா" என்றுசபித்து பிறகு சிஷ்யர்களைப்பார்த்து "உங்கள் குருவினுடைய வாக்கைப்போல் எல்லோரையும் அதிக இம்சை செய்து வந்தபடியால் நீங்களெல்லோரும்

தர்ம பிரஷ்டர்களாயிருந்து துர்மரணமடைந்து வீரபாஷாண்டிகளாய்ப்பிறந்து வேதவிசாரணைக்கு அதி தூலவில் இருப்பீர்களாக" என்று அவர்களுக்கும் சாபம் கொடுத்து நீங்களெல்லோரும் ஓரிடத்திலேயே சேர்ந்திருக்கவேண்டுமென்று சொல்லினர். அந்த யோகீசுவரர் மிகவும் கருணையுடையவராதலால், சிலநேரம் சென்றபிறகு கோபம் தணிந்து, பிறகு எங்கள்மீது கருணையுடையவராய் "சிலகாலம்சென்றபிறகு லோகோத்தாரணார்த்தமாய் ஸ்ரீ சுகப்பிரம்மரிஷி மானஸரூபமாய் அவதரிக்கப்போகின்றார்; அவரது தரிசனத்தினால் உங்கள்சாபம் நிவாரணையாகுமென்று அனுக்கிரகித்து உங்கள் முகதரிசனத்தால் தமக்குப் பாபம் சம்பவித்ததென்றும், அந்தப்பாபம்தீர தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமென்றும் அரசனுடன் சொல்லி செலவுபெற்று தம் சிஷ்யர்களை அழைத்துக்கொண்டு தீர்த்த யாத்திரை சென்றுவிட்டார்.

அவர் அங்கிருந்து சென்றவுடனே எனக்குப் பிரமராக்ஷதசரீரம் உண்டாயிற்று. அப்போது நான் மிகவும் வருத்தமடைந்து, இனி என்னசெய்யலாமென்று சில நேரம் ஆலோசித்துப், பிறகு பண்டரீபுரம் மிகவும் பெரிய க்ஷேத்திர பூமியாயிருக்கிறபடியால் சகல தேசத்திலுள்ள சாதுக்களும் பெரியோர்களும் அங்குவருவார்கள் என்று எண்ணி, அதுமுதல் இதுவரையில் இங்கு காத்திருந்து அனேகசாதுக்களை எல்லாம் இம்சைசெய்து வந்தேன். பிறகு எல்லோருக்கும் பயமுண்டாய் இவ்வழி நடப்பதையே விட்டுவிட்டார்கள். என் சிஷ்யர்களெல்லோரும் தர்மப்பிரஷ்டர்களாய் சிலதுநாள்கள் இருந்து பிறகு துர்மரணமடைந்து வீரபாஷாண்டிகளாய்ப் பிறந்து வேதவிசாரணைக்கு அதிகதூலவாய் இவ்வூரிலேயே இருக்கின்றார்கள். இப்பொழுது உங்களை இங்கு அழைத்து

வந்து இறக்கினவர்கள் அவர்களே. இன்றைக்கு என்ஜன்மம் கிருதார்த்தமாகவேண்டியதா யிருந்தபடியால், தேவரீருடைய திவ்வியதரிசனம் எனக்குக்கிடைத்தது. அடியேன்மீது பரிபூரணானுக்கிரகம்வைத்து அடியேனுடைய சிஷ்யர்களின் சாபத்தையும் நிவர்த்திசெய்து அவர்களையும் ரக்ஷிக்கவேண்டும்" என்று வெகுவிதங்களாய்ப் பிரார்த்தித்தான். இதற்குள் தேவலோகத்திலிருந்து தகத்தகாயமான திவ்வியவிமானம் பைரவப்பட்டனெதிரில் வந்துநின்றது. அப்போது பைரவபட்டன், சுந்தரா கபீர் சாதுக்கள் முதலானவர்களுக்கு வந்தனம்செய்து அவர்களிடம் செலவுபெற்றுக்கொண்டு தனக்காக வந்து காத்திருக்கும் விமானத்திலேறி எல்லோரும் ஆச்சரியப்படும்படி ஆகாசமார்க்கமாய்க் கிளம்பி மறைந்துசென்றான்

இந்த அதிசயங்களை எல்லாம் தூரமாய்நின்று பார்த்திருந்த வீரபாஷாண்டிகள் மிகவும்பயந்து சீக்கிரமாய் ஓடி கபீர்பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று "எங்கள்குற்றங்களை மன்னித்து ரக்ஷிக்கவேண்டும்" என்று மிகவும்பிரார்த்தித்தார்கள். அப்போது கபீர் அவர்களை எல்லாம் ஆதரித்து தாரகமந்திரம் உபதேசித்து தன்சிஷியர்களாய்ச்செய்தனர். பிறகு வீரபாஷாண்டிகளின் சாபம் நிவாரணையாயிற்று. நிவாரணையானவுடன் கபீரைப் பிரதக்ஷணம்செய்து நமஸ்கரித்து அவர்களை எல்லாம் அன்று அங்கு தங்கும்படிச்செய்து விசேஷ சாது சந்தர்ப்பணைகளைச் செய்வித்தார்கள். மறுநாள் கபீர் அவர்களிடம் செலவுபெற்றுக்கொண்டு சாதுசங்கத்துடன் பிரயாணப்பட்டு பண்டரீபுரம் எல்லைபோய்ச் சேர்ந்தார்கள். அப்போது பாண்டுரங்கமூர்த்தியாகியபகவான், ஞானதேவ், நாமதேவ் முதலாகிய முக்கிய சாதுக்களை எல்லாம் வரவழைத்து, "பரமபாகவதரான கபீர்தாஸ், சாதுசங்கத்

தடன் என்சந்நிதானத்திற்கு வருகின்றார்! நீங்களெல்லோரும் எதிர்சென்று அவரை மரியாதையுடன் அழைத்துவர வேண்டும்'' என்று ஆஞ்ஞாபித்தார். அப்போது சாதுக்களெல்லாம் பரமானந்தமடைந்து தேவாலயமெங்கும் மாவிலைத் தோரணங்களாலும் நானாவித புஷ்பங்களாலும் அலங்கரித்து கோபுரவாசற்படியினிடம் குலைகளால் நிறைந்திருக்கும் வாழை பலா இளநீர் கொன்றை முதலானவைகளினால் அலங்கரித்து, அனுமான் விக்கிரகம் கருட விக்கிரகம் முதலானவைகளால் த்வஜஸ்தம்பத்தை அலங்கரித்து மிகவும் விநோதம்செய்து, தம்பூர் மிருதங்க தாளவாத்தியங்களுடன் கரதாளம்போட்டு இராமபஜனைகளைச் செய்துகொண்டுபோக ஆரம்பித்தார்கள். அப்போது பண்டரீபுரம் வந்த யாத்திரைவாசிகளும் கிராமஸ்தர்களும், கபீரை அழைத்துவர சாதுக்கள்செல்லுகின்றார்கள் என்று தெரிந்துகொண்டு, இவர்களும் ஹரிபஜனை செய்துகொண்டு அவர்களுடன் சென்றார்கள். இவ்வாறு சாதுக்களெல்லோரும் மிகவும் சந்தோஷமாய் கபீரிடம் சென்று சாஷ்டாங்கமாய்விழுந்து நமஸ்கரித்து கபீருடன் வந்த சாதுக்களை எல்லாம் நமஸ்கரித்து ஆலிங்கனம்செய்து க்ஷேமலாபங்களை விசாரித்தார்கள்.

பிரகு, சாதுக்களெல்லாம் ஒன்றுசேர்ந்து இராமநாம சங்கீர்த்தனைகளைப்பாடி நர்த்தனம்செய்துகொண்டே மெதுவாய் ஆலயத்திற்குள்சென்றார்கள். சென்றவுடன், கபீர் மிகவும் பயபக்தியுடன் பாண்டுரங்கனுக்கும், ருக்மணிக்கும் பிரதக்ஷிணம்வந்து சாஷ்டாங்கமாய்விழுந்து நமஸ்கரித்து பாண்டுரங்கனை ஆலிங்கனம் செய்துகொண்டார். அப்போது பாண்டுரங்கமூர்த்தியும் அதிகப்ரீதியுடன் கபீரை ஆலிங்கனஞ்செய்து கௌரவித்தார். மற்ற சாதுக்களெல்லாம் ஒவ்வொருவராய் பாண்டுரங்கனை ஆலிங்கனம் செய்து

கொண்டார்கள். சுந்தராதேவி, பாண்டுரங்கனையும், ருக்மணியையும் நமஸ்கரித்தவுடன் ருக்மணிதேவி சுந்தராதேவியை ஆலிங்கனம்செய்து மிகவும் ஆதரித்தாள். பிறகு, சாதுக்களெல்லாம் அன்று மஹோத்ஸவத்தை சம்பூர்ணமாய் செய்வித்தார்கள். கபீர் பாண்டுரங்கர் சந்நிதானத்திற்கு வந்தபடியால், சுவாமிகளுக்கு மிகவும் ஆனந்தம் உண்டாயிற்று, அதனால் உத்ஸவத்திற்குவந்த ஜனங்களுக்கெல்லாம் அற்புதமான சேவைகிடைத்து. நேத்ரோத்சவமாய்க்கண்டு ஆனந்தித்தார்கள். பிறகு கபீர், பிரதிதினம் சந்திரபாகா நதியில் ஸ்நானம்செய்து பாண்டுரங்கனைச்சேவித்து அங்குள்ள பெரியோர்களைத் தரிசித்து அவர்களுடன்கலந்து இராமபஜனைகளைச்செய்துவந்தார். இவ்விதமாய் அங்கு ஒருமாதம்வரையில் இருந்து ஓர்நாள் சுவாமி சந்நிதிக்குச் சென்று மிகவும் பயபக்தியுடன் நமஸ்கரித்து "பரமேஸ்வரா! உன் மஹிமையை அறிந்துச்சொல்ல சக்தியில்லாமல் வேதங்களும் மௌனமாய்விட்டது; பிரம ருத்திராதி தேவதைகளும் உமது தத்துவம் அறியாமல் தட்டுத்தம்மாறி விழுந்துகிடக்கின்றார்கள். ஆனால், யார் ஒருவர் உம்மை விசேஷபக்தியுடன் பூஜித்துவருகின்றார்களோ, அப்படிப்பட்டவர்களுக்குமாத்திரம் நீர் மிகவும் சுலபமாய் பக்திஎன்னும் கயிற்றால் கட்டப்படுகின்றீர். லோகரக்ஷணார்த்தமாய் நீர் அனேகலீலைகளைச்செய்து பாமரஜனங்களை ஞானமடையும்படிச் செய்துவருகின்றீர். உமது மஹாமஹிமையை வர்ணித்துச்சொல்ல ஆயிரம் நாவுடையவனுக்கும் சாத்தியமாகமாட்டாது. அபாரமாகிய உன் கிருபை பிரவாகத்தில் மூழ்கி இருக்கப்பட்டவர்களுக்குமாத்திரம், பிரபஞ்ச சம்பந்தமாகிய துக்கங்கள் எதுவும் உண்டாகமாட்டா. எப்போதும் உம்மை ஸ்மரித்துக்கொண்டிருக்கப்பட்டவர்களுக்குச் சதா ஆனந்தத்தைக்கொடுத்துக் கொண்டிருக்

கின்றீர். நீர் சர்வேச்சுவரன்; சர்வஜ்ஞன்; உன் கலியாணகுணங்களைத்தெரிந்து வர்ணிக்க நான் எவ்வளவுமாத்திரன்? கருணாகடாக்ஷம்வைத்து என்னை ரக்ஷிக்கக்கடவாய்' என்று ஸ்துதிசெய்து "காசிக்குச்செல்ல அடியேனுக்கு விடைகொடுத்துஅனுப்பவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அப்போது பண்டரீகவரதன் அதிக பிரீதியுடன் கபீரை ஆலிங்கனம்செய்து, நீ இங்குவந்ததனால் மிகவும் சந்தோஷமடைந்தேன்; நீயோ மஹானுபாவன்; பரமபக்தன்; அனேகபாமரர்கள் உன்னால் கடைத்தேறினார்கள்; இன்னும் உன்னால் நடக்கவேண்டிய காரியங்கள் அனேகம் இருக்கின்றன" என்று கபீர் சுகுணங்களை வர்ணித்துச் சொல்லி, அன்று அவர் பிரயாணத்தை நிறுத்தி ருக்மணி தேவியிடம் சொல்லி கபீருக்காக பெரிய விருந்து செய்வித்தார். மருநாள்காலை கபீர் ருக்மணிதேவிக்கும் பாண்டுரங்கருக்கும் மிகவும்பக்தியுடன் வந்தனங்கள் செய்து அவர்களிடம்செலவுபெற்று ஞானதேவ் நாமதேவர்களை நமஸ்கரித்து மற்றச்சாதுக்களை எல்லாம் ஆதரித்துத் தம் சாதுசங்கத்துடன் காசிக்குச்செல்லப் பிரயாணப்பட்டார். அப்போது ஞானதேவ், நாமதேவ் சாதுக்கள் முதலானவர்கள் கபீர் காசிக்குச்சென்றுவிடுவதற்காக மிகவும் வருத்தமடைந்து எல்லோரும் அனேகதடவைகளில் கபீரை ஆலிங்கனம்செய்து மங்களவாத்தியங்களுடன் இராமபஜனைகளைச்செய்துகொண்டு பண்டரீபுரம் எல்லைவரையில் கொண்டுபோய்விட்டுத் திரும்பிவந்தார்கள்.

பிறகு கபீர் சாதுக்களுடன்கூட இராமபஜனைகளைச் செய்துகொண்டு வரும்வழியில் தம்மை ஆசிரயிக்கும் ஜனங்களை ஆதரித்து வழிநடந்துவந்தார். இவ்வாறு வந்துகொண்டிருக்கும்போது ஒருநாள் விந்தியபர்வதக்காட்டின்வழியாய் வரும்போது சாதுக்கள் சமீபமாய் மிகவும் பயங்கர

மான கர்ஜ்ஜனையைப் புலி கர்ஜ்ஜித்தது. அந்த கர்ஜனையை சாதுக்களெல்லாம் கேட்டவுடன் புலி புலி என்று துள்ளி விழுந்து மூலைக்கொருவராய் ஓடிப்பதுங்கினார்கள். சுந்தராதேவிமாத்திரம் ஓடாமல் கபீர்சமீபமாய் நின்றிருந்தாள். உடனே புலி, கபீருக்கு சமீபமாயிருக்கும் புதரிலிருந்து எகிறிப்பாய்ந்து கபீர்முன் வந்துநின்றது. அப்போது கபீர் மிகவும்தைரியத்துடன் தன் இடதுகையை புலிவாயில் வைத்து "ஐயா நீ மிகவும் பசியாயிருப்பதுபோல் காணப்படுகின்றது; திருப்தியாய் என் தேகத்தைப்புசித்து உன் பசியைத்தணித்துக்கொள்" என்று சொல்லினர் கபீர் அஸ்தம் புலிவாயில் பட்டவுடனே அதற்கு அறிவுண்டாய் கபீர் அஸ்தத்தை தம் வாயிலிருந்து விடுவித்துக்கொண்டு கபீருக்கு மிகவும் கருணை உண்டாகும்படியான ஓர் கர்ச்சனை கர்ச்சித்து கபீரைப் பிரதக்ஷணம்வந்து அவர்பாதத்தில்விழுந்து நமஸ்கரித்தது. அப்போது கபீர் மிகவும் ஆச்சரியமடைந்து கருணையுடையவராய் அதன் மஸ்தகத்தில் தன் அஸ்தம்வைத்து தாரகமந்திரம் உபதேசித்தார், உபதேசித்தவுடன் புலிரூபம் நீங்கி திவ்வியரூபம் தரித்து கபீருக்கு மறுபடியும் பிரதக்ஷணம்செய்து அஞ்சலிஅஸ்தனாய் நின்று கபீருடைய மஹிமைகளையெல்லாம் புகழ்ந்தான். அப்போது தன் எதிரில் நின்றிருக்கும் புருஷனை கபீர் ஆசீர்வதித்து 'நீயார்?' என்று கேட்டார். அதற்குப் புலிரூபமாயிருந்த திவ்வியபுருஷன் சொல்லுகின்றான்.

பூர்வஜன்மத்தில் நான் இந்த விந்தியபர்வத சமீபமாயிருக்கும் கிராமத்திலுள்ள ஓர் வேடன்; துர்ப்புத்தியினால் கோர இம்சைகளைச்செய்து காலங்கழித்துவந்தேன். ஓர் நாள் விந்திய பர்வதத்தின்மீதிருக்கும் பார்வதி பரமேஸ்வரர்களை சேவிக்க சில சாதுக்கள்வந்தார்கள்; அப்போது நான் அவர்களின்சொத்தை அபகரிக்க செடிஓரமாய்

பதுங்கியிருந்தேன். அந்தச் சமயத்தில் நானிருக்கும் இடத்திற்கு அனேக யானைக்கூட்டங்கள் வந்தன. அதைப் பார்த்து மிகவும்பயந்து நான் பதுங்கியிருந்த செடியின் மீதேறி ஓர்கிளைமத்தியில் மூன்று தினங்கள்வரையில் நித்திரை ஆகாரங்களில்லாமல் விழித்திருந்தேன். நான்காவது நாள் யானைக்கூட்டங்களெல்லாம் சென்றுவிட்டன. பிறகு செடியிலிருந்து இறங்கிவந்தேன். பிராணனே பசியினால் எகிறிவிடுவதாயிருந்தது. அந்தச்சமயத்தில் என்சமீபமாய் ஓர் யோகீஸ்வரர் சில பக்ஷணங்களை புசித்துக்கொண்டிருந்தார். அப்போது நான் அதைப்பார்த்து அவர்கையிலிருக்கும் பக்ஷணையைப் பிடுங்கிச்சாப்பிட்டேன். அப்போது அந்தமுனிவர் என்னைப்பார்த்து புன்னகையுடன் சிரித்தார். சிலவருஷங்கள்சென்றபிறகு மரணமடைந்து அனேக குரூர கிருத்தியங்களைச்செய்தபடியால் இந்த கோரமாகிய மிருகஜன்மம் அடைந்தேன். முன்ஜன்மத்தில் யோகீஸ்வரருடைய உச்சிஷ்டம் புசித்தபடியால் இன்று உங்கள் தரிசனம்கிடைத்து, என்ஜன்மம் கடைத்தேறியது. இந்தஜன்மத்தில் எனக்கு இப்படிப்பட்டயோகம் உண்டாகப் போகின்றது என்னும் எண்ணத்தினால்தான் முன்ஜன்மத்தில் முன்சொல்லிய யோகீஸ்வரர் புன்னகையுடன் சிரித்தார்'' என்று தன் பூர்வவிருத்தாந்தங்களைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, ஓர் திவ்வியவிமானம் ஆகாசமார்க்கமாய்ச்சுழன்றுகொண்டு புலிரூபமாயிருந்த புருஷன் எதிரில்வந்துநின்றது. அப்போது அந்தப்புருஷன் சுந்தரர், கபீர் இவர்களைப் பிரதக்ஷணம்வந்து, மிகவும் பக்தியுடன் நமஸ்கரித்து, சாதுக்களிடம் செலவு பெற்றுக்கொண்டு, எல்லோரும்பார்க்க திவ்வியவிமானத்தில் ஏறி உட்கார்ந்தவுடன், அந்தவிமானம் ஆகாசமார்க்கமாய்க்கிளம்பி கிருகிருவென்று சுழன்றுசென்று மறைந்துவிட்டது. அப்

போது சாதுக்களெல்லாம் கபீர் சமீபமாய்வந்து அவர் பாதத்தில்வீழ்ந்து நமஸ்கரித்து அவரை சாக்ஷாத்பகவானென்று எண்ணி அவர்மகத்துவங்களை அனேகவிதங்களாய்ப்புகழ்ந்து பரமானந்தமடைந்து "ஜயஜய கபீர்! ஜயஜய கபீர் !!'' என்று கோஷித்து தாண்டவமாடினார்கள்.

அப்போது கபீர் சர்வசாதுஜனங்களுக்கும் ராமமந்திரம் உபதேசித்தார், அவர்கள் பரமானந்தமடைந்து "ஜயசீதாராம்! ஜயசீதாராம்!'' என்று கோஷித்து கைத்தாளம் போட்டுக் கூத்தாடி நர்த்தனம்செய்ய ஆரம்பித்தார்கள். அப்போது இராமநாமஸ்மரணை பிரதித்தொனியுடன் ஆரணியமெல்லாம் நிறைந்திருந்தன. இவ்விதமாய்ப்பகலெல்லாம் ஆனந்தசாகரத்தில்மூழ்கி அன்றுமுழுமையும் அங்கிருந்து சமைத்துப் போஜனம்செய்து இரவெல்லாம் இராமபஜனைகளைச்செய்து சூரியோதயமானவுடன் எழுந்து காலகிருத்தியங்களைமுடித்து முன்சென்று நடந்தார்கள். இவ்விதமாய் நடந்து புண்ணியதீர்த்தம் புண்ணியக்ஷேத்திரம் புண்ணிய புருஷர்களைச் சேவித்துக்கொண்டே சிலது நாள்களுக்கெல்லாம் க்ஷேமமாய்க் காசிபோய்ச்சேர்ந்தார்கள். அப்போது காசியிலுள்ள ஜனங்களெல்லாம் மிகவும் சந்தோஷத்துடன் கபீரிடம்சென்று சேவித்து மகதானந்தமடைந்தார்கள். பிறகு சாதுக்களெல்லாம் கபீரிடம்செலவு பெற்று தம்தம் கிராமங்களுக்குச்சென்றார்கள்.

பகவான் அனுக்கிரகத்தினால் கபீருக்குச் சந்தான முண்டாகுதல்.

சிலநாள்சென்றபிறகு ஏதோ காரியார்த்தமாய் கபீர் வெளியில் சென்றபோது, அச்சமயத்தில் ஓர் பைராகி கபீர் வீட்டிற்குவந்தார். அவர்வந்தவுடன் சுந்தராதேவி மிகவும் பயபக்தியுடன் நமஸ்கரித்து ஓர் ஆசனத்தின்மீது உட்காரும்படிச் செய்தனள். உட்கார்ந்தவுடன் அவருக்கு அதிகதாகமாயிருந்தபடியால் மோர் கொண்டுவரும்படிச் சொல்லி தாகந்தணிந்து இளைப்பாறி சுந்தராதேவியைப் பார்த்து "சீக்கிரமேவ சுபுத்ராவாப்தி" என்று ஆசீர்வதித்து அவ்வம்மையாரிடம் ஓர் கனியைக்கொடுத்துச்சென்றார். அதை சுந்தராதேவி இரண்டுகைகளாலும் மிகவும் பயபக்தியுடன்பெற்று கண்களில்ஒற்றி அதை ஓரிடத்தில் மிகவும் பத்திரமாய்வைத்தனள். சற்று நேரத்திற்குள் வெளியில் சென்றிருந்த கபீர் வீட்டிற்குவந்து மிகவும் சந்தோஷமாயிருக்கும் தன்நாயகியைப்பார்த்து "சுந்தரா! உன் முகவிலாசத்தைப்பார்த்தால் ஏதோவிசேஷம் ஒன்று இருப்பதாய்க்காணப்படுகின்றது. என்ன விசேஷம்?" என்று கேட்டனர். அப்பொழுது சுந்தராதேவி தன் பிராணநாதனை மிகவும் பயபக்தியுடன்நமஸ்கரித்து பைராகி வந்து தாகம்சாப்பிட்டுத் தன்னை ஆசீர்வதித்து பழம் கொடுத்துப்போன சங்கதியைச்சொல்லி அப்பழத்தைக் கொண்டுவந்து தன் நாயகனிடம்கொடுத்து "இதனாலேயே சந்தோஷமாயிருக்கின்றேன்" என்று சொல்லினள்.

கபீர் அதைக்கேட்டவுடன் மிகவும் வருத்தமடைந்து சற்றுநேரம் ஒன்றும்தோன்றாமல் மறுபடியும் பாரியாளைப் பார்த்து "சுந்தரா! இப்பொழுது எவ்வளவுவேலை நடந்துவிட்டது! இதுவரையில் நமக்கு யாதொன்றுமில்லாமல் நிச்சிந்தையாய் காலங்கழித்துவந்தோம். நமக்கு இனிமேல் இவ்வாறிருப்பது மிகவும்கஷ்டம். தாகந் தணிந்து சிரமை தீர்த்துக்கொண்டு சும்மாய்ப் போகாத புண்ணியாத்மன், நம்விஷயத்தில் இவ்வளவு புண்ணியம் கட்டிக்கொண்டார். உலகத்தில் வேதாந்தசாஸ்திரமறியாத சிலபண்டிதர்களும், பாமரர்களும், சாமான்னிய சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட அர்த்தங்களை எல்லாம்நம்பி சந்ததிஇல்லாதவர்களுக்கு சத்கதிஇல்லையென்று பிரமையடைகின்றார்கள். தத்துவங்களை அறிந்தவர்களுக்குப் புத்திரர்கள்இருந்தபோதிலும், இல்லாமலிருந்தபோதிலும் துக்கமே சம்பவிக்குமென்று நன்றாய்த்தெரியவரும். தத்துவஜ்ஞானசூன்னியர்கள் தமக்கு சந்ததி இல்லையேயென்று ஓர் பிராமணனை வரவழைத்து தம் மனோபீஷ்டத்தைத் தெரிவித்து இதற்கென்ன செய்யலாமென்று கேட்பார்கள். அதற்கு அந்தப் பிராமணன் சிலநேரம் ஆலோசித்துப் பூர்வஜன்மங்களினால்செய்த பாபகர்மத்தினால் இந்த ஜன்மத்தில் உங்களுக்குப் புத்திரசந்தானமில்லாமல்போயிற்றென்றும், க்ஷேத்திர தீர்த்த யாத்திரைகள்செய்வதனால் பாபம்நிவாரணையாய் புத்திரசந்தானமுண்டாகுமென்றும் சொன்னவுடன், அதற்குச் சம்மதித்து அவர்சொல்லியதுபோல் யாத்திரைகள் செய்து வேளைக்கு அன்னபானாதிகள்இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு காயக்கிலேசமடைந்து வீடுவந்துசேருவார்கள். சேர்ந்தபிறகு சந்தானமுண்டாகாமலிருந்தால். மற்றொரு சாஸ்திரவானை வரவழைத்து தமதுகுறைகளைச்சொல்லிக் கொள்வார்கள்.-அதற்கு அவர், பேய்ப்பிடித்துக்கொண்டிருக்கின்றது பேய்ஓட்டினால் சந்தானமுண்டாகுமென்று சொல்லிப்போவார். சொல்லிச்சென்றவுடன் பேய்ஓட்டியும் சந்தானம்உண்டாகாவிட்டால், மிகவும்துக்கமடைந்து எவ்

விதத்திலாகிலும் நமக்குச் சந்தானமுண்டானால் போதுமென்று நிச்சயித்து மற்றொரு சாஸ்திரவானை வரவழைத்துத் தம்குறைகளைச் சொல்லி இதற்கென்னசெய்யலாமென்று கேட்பார்கள். அதற்கு அவன், வாய்த்தாளுடன் திருப்பதிக்குச் சென்று நூறுவராகன் உண்டியில்போட்டுவந்து ஆயிரம் பிராமணருக்குச் சந்தர்ப்பணைச் செய்வாயாகில் சந்தானமுண்டாகுமென்றுசொல்ல, அதுபோல்செய்வார்கள். அதிலும் சந்தானமுண்டாகாவிட்டால் வேறொரு சாஸ்திரவானை விசாரிப்பார்கள். அதற்கு அவன், நாகப்பிரதிஷ்டைசெய்வித்து அரசவேப்பமரங்களுக்கு விவாஹம் செய்வித்தால் சந்தானமுண்டாகுமென்றுசொல்ல, அதுபோல்செய்தும் சந்தானமுண்டாகாவிட்டால் மிகவும் வருத்தப்பட்டு இதரர்களின்குழந்தைகளைப்பார்த்து இப்படிப்பட்ட பாக்கியம் நமக்குக்கிடைக்காமற்போயிற்றே என்று மிகவும் துக்கப்படுவார்கள். ஆதலால், குழந்தைகள் இல்லாவிட்டால் துக்கப்படவேண்டியதாயிருக்கின்றது. ஒருவேளை தெய்வானுகூலத்தினால் கர்ப்பம்நின்று கர்மவசத்தினால் கர்ப்பம் கலங்கி விட்டால், அதனால் தாய்தந்தையர்களுக்கு மிகவும்துக்கத்தையேஉண்டாக்கும். அப்படிப்பட்ட அபாயமில்லாமல் நவமாதங்களும்பூர்த்தியாய்பிரசவவேதனைப்படும் பொழுது அவள் புருஷனிடம் ஏதாகிலும் பிரார்த்தனையிருந்தால் செய்துகொள்ளுங்கள் என்று மருத்துவம் செய்பவள் சொல்ல, அதைக்கேட்டஅவள்புருஷன் "செய்யவேண்டிய பிரார்த்தனைகளெல்லாம் முன்னிட்டே செய்துவிட்டோம் இனி செய்யவேண்டிய பிரார்த்தனை ஒன்றுமில்லை. குழந்தைக்கு ஆசைப்பட்டு பெரியபிராணனுக்கே ஆபத்துவந்துவிட்டது; இதற்கு என்னசெய்வேன் எங்களுக்கு, ஈசுவரன் இப்படிப்பட்ட ஆபத்துக்களையே கொண்டுவந்துவிடுகின்றான்" என்று வருத்தமடைவான்.

இதனாலும் துக்கமேவந்துசம்பவிக்கும். ஒருவேளை குழந்தை சுகமாய்ப் பிறந்தாலும் சிசுவி[illegible] பாலக்கிரகதோஷங்கள் உண்டானால், விபூதிமந்திரித்[illegible]குளிசங்கள்கட்டி திருஷ்டிகழித்து பலவிதகஷ்டங்களையும்அ[illegible] இவைகளும் தாய்தந்தையர்களுக்குத் துக்கத்தையே உண்டாக்கும். அப்படிக்கல்லாமல் சுகமாய் வளர்ந்து பந்துவயதுவந்தவுடன் இதரபிள்ளைகளுடன்சண்டைசெய்து, அவர்களின் தாய்தந்தையர்களுக்கும், இவன் தாய்தந்தையர்களுக்கும் கலகத்தைஉண்டாக்குவான். அதனாலும் தாய்தந்தையர்களுக்குத் துக்கமே உண்டாகும். இது மேலும்போம், தெரிந்துகொள்ள விருப்பமுள்ளோர்; "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" புத்ரேஷணை என்னும் அத்யாயத்தின்கீழ் விரிவாய்க் காணலாம். ஆதலால் புத்திரர்கள் இருந்தாலும் துக்கமே, இல்லாவிட்டாலும் துக்கமேவந்து சம்பவிக்கும். பூர்வம் ஜடபரதர் முதலாகிய மஹானுபாவர்களும் மோகபாசத்தினால் கட்டுண்டு கஷ்டம்அனுபவித்தார்கள்" என்று பாரியாளிடம்சொல்லி வருத்தப்பட்டு ஒன்றும்தோன்றாமல் சிலநேரம் சும்மாயிருந்து திடீரென்றெழுந்து அந்தவைராகியைக் கண்டுபிடிக்கச்சென்றார். அவரை எங்கெங்குத் தேடிப்பார்த்தபோதிலும் அவர்காணப்படவில்லை. இவ்வாறு மாலை வரையில் தேடித்தேடி கடைசியில் வீட்டுக்குத்திரும்பினார். அப்போது சுந்தராதேவி தன் புருஷன்சொன்னவார்த்தைகளை எல்லாம் கேட்டு மிகவும் வருத்தமடைந்து வெளியில் சென்றபுருஷன் இன்னும்வரவில்லையேஎன்று நினைத்து அவரைப்பார்ப்பதற்காக தன் வீட்டு வாசற்படியில்வந்து நின்றாள். அப்போது தன் புருஷன் பின்புறமாய் வந்துகொண்டிருக்கும் வைராகியைப் பார்த்து "இவரே எனக்கு ஆசீர்வாதம்செய்து பழம்தந்தவர்" என்று தன் புருஷனிடம் சொல்லினாள். கபீர் அதைக்

கேட்டவுடன் திரும்பிப் பார்த்துத் தன் பின்புறமாய் வந்துகொண்டிருக்கும் பைராகியைப்பார்த்து அவர் தேஜஸைக்கண்டு இவர் மிகவும் பெரியவரென்றெண்ணி மிகவும் வணக்கத்துடன் நமஸ்கரித்து "சுவாமி! நாங்களுமக்கு என்ன அபராதம்செய்தோமென்று அனியாயமாய் மிகவும் துக்கத்தை அனுபவிக்கத்தக்க சமுத்திரத்தில் மூழ்கும்படிச்செய்தீர்" என்றுகேட்டனர்.

அதற்குப் பைராகி கபீரைப் பார்த்து மந்தகாசம் செய்து "உங்களைத் துக்கசமுத்திரத்தில் மூழ்கும்படி எவ்விதமாய் செய்தேன்? நீ சொல்வது எனக்குஒன்றும் தெரியாமலிருக்கின்றது! என்னை ஏன் அனியாயமாய் தூஷிக்கின்றாய்?" என்றுசொல்லினர். அதற்குக் கபீர் "நான் வீட்டில் இல்லாதசமயத்தில் என் பாரியாளை ஆசீர்வதித்து புத்திர சந்தானம் உண்டாகவேண்டுமென்றுசொல்லி பழத்தைக் கொடுத்துவிட்டுப் போகவில்லையா? இதைவிடகெடுதிவேறு செய்யவும்வேண்டுமோ? நீர்மிகவும் கிருபையுடையவராயிருந்தும் இப்படிப்பட்டகாரியங்களைச்செய்வது உத்தமமானதல்ல; எங்களைமன்னித்து நீர்கொடுத்தவரம் பலிக்காமற்செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். அதற்கு பைராகி பக்கென்று சிரித்து "ஓஹோ! நீ இதற்கா என்னைத் தூஷித்தாய்? நீ சொல்லியகடினமானவார்த்தையைக்கேட்டு மிகவும்பயந்தேன்; சரி, சரி நன்றாயிருக்கின்றது. உங்களுக்கு நன்மையைச் செய்தேனையொழிய கெடுதிசெய்யவில்லை. என் ஆசீர்வாதம்போல் உங்களுக்கு நல்ல புத்திரன்பிறக்கப்போகின்றான்; இதற்குச் சந்தேகமில்லை' அந்தப்புத்திரனால் அதிகஆனந்தத்தை அடைவீர்கள். சந்தானமில்லாமல் இருக்கின்றீர்களேஎன்றெண்ணி உங்களுக்குச் சகாயம்செய்யவந்ததற்காக நல்லபுத்திசொன்னாய்! இந்தநியாயம் யாரிடமாகிலும்சொல்லலாம் வா"

என்றுசொல்லினர். அதற்குக் கபீர் "உங்கள்ஞாயம் உங்களுக்கே பெப்புதலையாயிருக்கின்றதேயொழிய என்புத்திக்கு ஒன்றும்சரியாயில்லை; நல்லது நடங்கள்; உங்களிஷ்டம்போல் யாரையாகிலும்கேட்கலாம்" என்றுசொல்லி கபீர் நாலடி முன்வைத்தார். அப்போது பைராகி 'நடநட' வென்று சொல்லிவிட்டு தான் மாயமாய்விட்டார். அப்போது கபீருடனே பின்புறமாய்த் திரும்பிப்பார்த்தார். பைராகி காணாமல் மாயமாய்ப்போய்விட்டபடியால் மிகவும்ஆச்சரியப்பட்டு இவர் ஸ்ரீராமமூர்த்தியேயென்று நிச்சயித்து மறுபடியும்திரும்பி வீடுசேர்ந்து பகவான்அனுக்கிரகம் இப்படியிருந்தால் நாம் என்னசெய்யலாம் என்று சிலநேரம்வருத்தமடைந்து, மறுபடியும் நல்லபுத்திரன் பிறக்கப்போகின்றான் என்றுசொன்ன வார்த்தையினால் தைரியம்உண்டாய், ஸ்ரீராமமூர்த்தியை தனது இருதயத்தில்நினைத்துத் துதிசெய்து வருத்தம்நீங்கிஇருந்தார்.

பிறகு பகவதனுக்கிரகத்தினால் சுந்தராதேவிக்கு கர்ப்பம்தரித்து நவமாசங்களும்பூர்த்தியாய் நல்லசுபலக்கினத்தில் சர்வலக்ஷணங்கள்உடைய நல்லகுழந்தை பிறந்தான். சித்தர்களே! அக்குழந்தை யாரென்றால், பகவதாஞ்ஞானுசாரமாய் நாரதரே உலகத்தைச் சீர்திருத்தப்பிறந்த மஹாபுருஷனென்று அறியக்கடவீர்களாக. அப்போது தாய்தந்தையர்களிருவரும் அக்குழந்தையின் ரூபத்தைப்பார்த்து அளவில்லாதசந்தோஷமடைந்து பதினோராவதுநாள் சாதுஜனங்களுக்கெல்லாம் பெருத்தவிருந்துகள்செய்வித்து, அக்குழந்தைக்குக் 'கமால்' என்று நாமகரணமளித்து மிகவும் பிரீதியுடன்வளர்த்துவந்தார்கள். அப்போது அக்குழந்தை அதிகபிரகாசத்துடன் மூன்றாம்பிறைச் சந்திரனைப்போல் தினேதினே வளர்ந்துவந்தது, குழந்தைக்கு ஐந்துவயது ஆனவுடனே தனக்குச் ஜதையாயிருக்கும் அண்டை அயல்

வீட்டுப் பக்கங்களிலுள்ள பிள்ளைகளுடன்சேர்ந்து ஆட ஆரம்பித்தது. இவ்வாறு ஆடிக்கொண்டு வரும்நாளில் கமால் அண்டைவீட்டுச் சிறுவனுடன் மிகவும் சிநேகிதமாயிருந்தான். இவ்வாறிருக்க ஒருநாள் அவனுடன் கமால் கழற்காய் ஆடிக்கெலித்து, கெலித்தகாய்களை எல்லாம் அண்டைவீட்டுச் சிறுவனிடம்கொடுத்து இவைகளை நாளையதினம் நான் கேட்டபோது கொடுவென்றுசொல்லி தான் வீட்டிற்குச்சென்றார். அண்டைவீட்டுச்சிறுவன் கமால் கொடுத்த கெச்சக்காய்களை வாங்கிக்கொண்டு தன் வீடு சேர்ந்து அன்றிரவு போஜனமுண்டு சயனித்து அர்த்தராத்திரியில் மார் அடைத்து மரணமடைந்துவிட்டான். அவன் தாய்தந்தையர்களுக்கு அவன் ஒருவனே மகனாயிருந்தபடியால் அவன்மீது விழுந்து அன்றிரவெல்லாம் விசேஷமாய் அழுதுகொண்டேஇருந்தார்கள். பொழுதுவிடிந்தவுடன் கமால் எழுந்ததும் கெச்சக்காயின்மீது ஞாபகம்வந்தபடியால் கண்களை நிமிட்டிக்கொண்டே அண்டைவீட்டுச்சிறுவனிடம்சென்று பிணத்தைப்பார்த்து "என் கெச்சக்காய் கொடு" என்று கேட்டார். கமால் கேட்டவுடன் இறந்து கிடக்கும் சிறுவனுடைய தாய்தந்தைகள் கமாலைப்பார்த்து மிகவும் துக்கித்து "அப்பா, நாயனு! உன் சிநேகிதன் இறந்துவிட்டான். இனி உனக்கு எங்கிருந்து கெச்சக்காய்களைக் கொண்டுவந்துகொடுக்கப்போகின்றான்; சற்றே சும்மாயிரு; பின்னிட்டு உனக்கு வேண்டிய கெச்சக்காய்களைக்கொடுக்கின்றோம்" என்றுசொன்னார்கள். அதற்குக் கமால் "என் கெச்சக்காயை எனக்குக் கொடாமல் இவன் எவ்விதமாய்ச் செத்துப்போகலாம்" என்று சொல்லி அவன் சமீபமாய்ச்சென்று "என்கெச்சக்காயை எனக்குக் கொடடா" என்றுசொல்லி அவன் இரண்டு கைகளையும் பிடித்து இழுக்க ஆரம்பித்தான். அப்போது அச்சிறுவன்

பகவதனுக்கிரகத்தினால்பிழைத்து, தூங்கி எழுந்தவன்போல் எழுந்துஉட்கார்ந்து கமாலைச் சேர்த்துக்கட்டிக்கொண்டான். அப்போது அங்குவந்திருந்த ஜனங்களெல்லோரும் அதைப்பார்த்து அற்புத ஆச்சரியமடைந்து ஒன்றும்தோன்றாமல் சிலநேரம் ஸ்தம்பம்போல் நின்று, மறுபடியும் தெளிவுண்டாய், கமால்மீது அதிகப்பிரீதிகொண்டு அவனை எடுத்துக்கொண்டு முத்தமிட்டு அவன் பாதங்களைக் கண்களில் ஒற்றி, தங்கள் தங்கள் சிரசின்மேல் வைத்துக்கொண்டு, சுந்தராதேவி கபீர்களினுடைய பாக்கியமேபாக்கியமென்று எல்லோரும் புகழ்ந்தார்கள். அப்போது இறந்த சிறுவனுடைய தாய்தந்தையர்கள் அநேக பொன் நாணயங்களால் கமாலுக்குத் திருஷ்டிகழித்து தெருவிலிறைத்தார்கள். சுந்தராதேவியும் கபீரும் இவ்வார்த்தைகளைக்கேட்டு பக்கத்து வீட்டிற்குஓடிவந்து பிழைத்திருக்கும் சிறுவனைப்பார்த்து மிகவும்ஆச்சரியப்பட்டு, பகவான் வாக்கியம் பலித்ததென்று நிச்சயித்து, பரமானந்தமடைந்து பகவானைத்துதிசெய்து குமாரனை அழைத்துக்கொண்டு தம் வீடுசேர்ந்து பகவத்பிரீதியாய் சாதுக்களுக்கு பெருத்த விருந்துசெய்வித்தார்கள்.

கமால் தீர்த்தயாத்திரை செய்தல்.

கமாலுக்கு ஏழுவயதுவந்தவுடன் ஓர்நாள் கபீரிடம் போய் மிகவும் பயபக்தியுடன்நமஸ்கரித்து, "ஐயா! தீர்த்தயாத்திரைச் செய்யவேண்டுமென்று எனக்கு மிகவும்இஷ்டமாயிருக்கின்றது. ஆதலால், கூடியசீக்கிரத்தில் ஒருமுறை பூபிரதக்ஷணம் செய்துவருகின்றேன்; தயவுசெய்து அடியேனுக்கு உத்தரவுகொடுக்கவேண்டும்" என்று மிகவும் தீனசுரத்துடன் வேண்டிக்கொண்டார். கபீர் அவ்வார்த்தைகளைக்கேட்டவுடன் பரமானந்தமடைந்து குமாரனை ஆலிங்கனம்செய்து தொடைமீதுஉட்காரவைத்து கமால் உடலைத் தன்அஸ்தத்தினால் தடவி "நாயனா! நீ மிகவும் சிறுபிள்ளை; ஆதலால், யாத்திரைசெய்ய இது யுக்தமான வயதல்ல; யாத்திரைச் செய்வதனால் மிகவும்கஷ்டங்கள் உண்டாகும்; அந்தக் கஷ்டங்களையெல்லாம் சகிக்க உன்னாலாகாது. இனி சிலவருஷங்கள் சென்றபிறகு தேசசஞ்சாரம செய்துவரலாம். இப்போது நீ எண்ணியிருக்கும் எண்ணத்தைவிட்டுவிடு" என்றுசொல்லினர். கமால் அவ்வார்த்தைகளைக்கேட்டவுடன் தந்தையினது பாதத்தில் சாஷ்டாங்கமாய்விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று இருகைகளையுங்குவித்து அஞ்சலியஸ்தராய்நின்று "ஐயா! தாங்கள் சொல்லியவார்த்தை வாஸ்தவமே. ஆனால், இத்தேகம் நிற்பது ஸ்திரமல்ல. எப்பொழுதுவிழுந்துவிடுமோ அதை யாரறிவார்? இதனாலேயேயல்லவா? தினகண்டம் பூர்ணாயுளென்று உலகத்தில்சொல்லுகின்றார்கள். மந்தமதியுடைய சிலபுருஷர்கள் அவ்வப்பொழுதுச் செய்யவேண்டிய காரியங்களை அவ்வப்போதுசெய்யாமல் பிரதிதினம் இன்றைக்கு, நாளைக்கென்று காலதாமதம்செய்து விருதாகால

க்ஷேபம்செய்துவருகின்றார்கள். புத்திமான்கள் காலத்தை ஒருநிமிஷமேனும் விருதாவாக்கமாட்டார்கள். உலகத்தில் காலத்தைவிட விலையுயர்ந்தபதார்த்தம் வேறொன்றுமில்லை. அப்படிப்பட்ட காலத்தை வியர்த்தம் செய்வது புருஷனுக்கு யோக்கியமானதல்ல. ஆதலால், தாங்கள் அடியேன்மீது கிருபைவைத்து யாதொருதடையும்சொல்லாமல் தீர்த்தயாத்திரைசெய்துவர விடைகொடுத்தனுப்ப வேண்டும்" என்று மிகவும்வருந்திக் கேட்டுக்கொண்டார். அதற்குக்கபீர் குமாரனைநோக்கி "நாயனா! சர்வாந்தர்யாமியாகிய பகவான் எங்கும் நிறைந்திருக்கின்றார்; அவரை நீ இருக்கும் இடத்திலேயே கண்டுதரிசித்துச் சந்தோஷமடையாமல் கஷ்டப்பட்டு தேசங்கள்திரிந்து தேகத்திற்கு விருதா சிரமைகொடுப்பதனால் பிரயோஜனமென்ன? இது விருதாபிரயாசையே; யாத்திரைவிஷயமாய் நீ எண்ணியிருக்குமெண்ணத்தை இதுவரையில் விட்டுவிடுவது மிகவும் உத்தமமென்று எனக்குத் தோன்றுகின்றது" என்று சொல்லினர்.

கமால் அதைக்கேட்டவுடன் தந்தையைப்பார்த்து, "நாயனா! நீர்சொல்லியவார்த்தை சத்தியமானதே. ஆனால் தீர்த்தயாத்திரையினால் பாவங்கள்நசிக்குமென்றும், தெயாத்திரையில்காணும் சாது சத்ஜனர்களால் மனதின்சந்தேகம் தீருமென்னும், தங்களைப்போன்ற பெரியோர்களால் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆதலால், தேசசஞ்சாரம் செய்வதே மிகவும் முக்கியமானதர்மம். கிணற்றிற்குள் இருக்கும் ஆமையைப்போல் இருக்கப்பட்ட புருஷர்களுக்குப் பிரபஞ்சவிவகாரங்கள் ஒன்றும்தெரியமாட்டாது; பிரபஞ்சவிவகாரங்கள் தெரியும்வரையில் பிரமைநீங்காது; பிரமை நீங்கும்வரையில் சித்தசுத்தி உண்டாகமாட்டாது; சித்தசுத்திஉண்டாகாவிட்டால் ஞானம் அடையமாட்டார்

கள். இவைகளெல்லாம் தங்களுக்குத் தெரிந்ததேயொழிய தெரியாததல்ல. இவைகளையெல்லாம் தங்களுக்கு எடுத்துச்சொல்ல நான் எவ்வளவுமாத்திரன்? ஆதலால், அடியேன் பிரயாணத்திற்கு யாதொரு தடையும் சொல்லாமல் அனுப்ப மற்றொருமுறை தங்களைக்கேட்டுக்கொள்ளுகின்றேன்'' என்றுசொல்லினர். கபீர் அவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் குமாரனுடைய தைரியத்திற்கு மிகவும் சந்தோஷமடைந்து, இனி கமால் யாத்திரைசெய்யும் விஷயத்தில் தடைசொல்லலாகாதென்று எண்ணி மனோதிடங்கொண்டு, ''நாயனா! உன்னிஷ்டத்தைத் தடுக்க இனி எனக்கிஷ்டமில்லை. ஆனால் நீ மிகவும் சிறியவனாயிருப்பதனால், நீ ஒருவனே தூரதேசயாத்திரை எவ்விதமாய்ச் செய்துவரப்போகின்றாயென்னும் சந்தேகம்மாத்திரம் எனக்கு உண்டாயிருக்கின்றது. ஆதலால், சில சாதுக்களை உன்னுடன்கூட சகாயமாய் அழைத்துக்கொண்டுபோய் வரக்கடவாய்'' என்று கபீர் சொல்லினர் கமால் அதைக் கேட்டவுடன் புன்னகையுடன் சிரித்து, ''நாயனா! தேவரீருடைய அனுக்கிரகத்தினால் கிடைத்திருக்கும் ஸ்ரீராமநாமமென்னும் சந்திராயுதம் அடியேனிடத்தில் இருக்க மற்றவர்களின் சகாயம் நான்கோரவேண்டியதேன்? நீர் அடியேனுக்கு இவ்விதமாய்ச்சொல்லுவது புத்திரவாஞ்சையினாலேயேயன்றி மற்றப்படிக்கு வேறல்ல'' என்றுசொல்லினர். அதற்குக்கபீர் மிகவும் சந்தோஷமடைந்து, ''விஜயீபவ'' என்று ஆசீர்வதித்து, சொல்லவேண்டிய புத்திகளையெல்லாம்சொல்லி, மார்க்கங்களில் மிகவும்ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்றுச் சொல்லி ''போய்வரவேண்டும்'' என்று விடைகொடுத்தனுப்பினர். அப்போது கமால் மிகவும் சந்தோஷமடைந்து. தன்தாயிடம்சென்று நமஸ்கரித்து தான் யாத்திரை விஷயமாய்த் தன் தந்தையிடம்

சென்று விடைபெற்றுவந்ததைச்சொல்லி, நீரும் விடைகொடுத்து அனுப்பவேண்டுமென்று தாயைக்கேட்டார். அப்போது தாய் குமாரனைக் கட்டித்தழுவி ஆலிங்கனம் செய்து முத்தமிட்டு, ''நாயனா! சத்காரியங்களுக்கு விக்கினம்செய்யும் துன்மார்க்கர்கள் யாரிருக்கின்றார்கள்! ஆனால், இவ்வளவுசிறுவயதில் தீர்த்தயாத்திரைச் செய்ய வேண்டுமென்று உனக்கு எண்ணம்உண்டானதைப்பார்த்தால் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது. ஆயினும், உன் தந்தை விடைகொடுத்தபின் நான் சொல்லவேண்டியது என்னயிருக்கின்றது? கூடியசீக்கிரத்தில் தீர்த்தயாத்திரைச் செய்துவரக்கடவாய்'' என்று ஆசீர்வதித்து அனுப்பினாள். அப்போது கமால் மிகவும் சந்தோஷமடைந்து மறுபடியும் தாய்தந்தையர்களிடம் செலவு பெற்றுக்கொண்டு தாம்ஒருவரே தீர்த்தயாத்திரை செய்ய வடக்குமுகமாய்ச் சென்றனர்.

அப்போது சுந்தராதேவி தன்நாயகனைப்பார்த்து, ''சுவாமி! இது மிகவும் விசித்திரமாயிருக்கின்றது! இவ்வளவு சிறுவயதில் இதுவரையில் யாத்திரையாய்ப் புறப்பட்டவர்கள் யாரிருக்கின்றார்கள். தாங்கள் ஐந்து வயதில் துலுக்கர்மீதுகிளம்பி அவர்களின்கொழுப்பை அடக்கினீர். அதுபோல் தங்கள்குமாரனும் ஏழுவயதில் பரதேசம் சென்று இதரமதங்களைக்கண்டிக்கப் பிரயத்தனப்பட்டனன். தந்தை சுயதேசத்தில் பிரசித்திபடைந்தால் குமாரன் பரதேசத்தில் பிரசித்தியடையச்சென்றான். இப்படிப்பட்ட ஆச்சரியம் இதுவரையில் எங்கும் நடந்திருப்பதாய் நான் இதுவரையில் கேட்டதில்லை'' என்று ஆச்சரியத்துடன் சொல்லினள். அப்போது கபீர் சுந்தராதேவியைப் பார்த்து, ''ஆம், நீ சொல்லியது வாஸ்தவமே. இது மிகவும் ஆச்சரியமாகவேயிருக்கின்றது. ஸ்ரீராமர்கூட பன்னி

ரெண்டுவருஷங்களுக்குப்பின்னிட்டு விஸ்வாமித்திரருடன் கூட யாத்திரைசெய்யப்புறப்பட்டார். நமது குமாரனே ஏழுவயது பூர்த்தியாகாதமுன்னமே யாத்திரைக்குப் புறப்பட்டான். பரமபதிவிரதையாகிய நீ சிறுவனை ஆசீர்வாதம்செய்து அனுப்பியபின் சகலதேசங்களையும் ஜயித்து ஜயசீலனாய்வர ஆக்ஷேபணையும்உண்டோ?" என்றுசொல்லி பகவத்தியானம்செய்து பிரம்மானந்தத்தில் மூழ்கியிருந்தார்கள்.

கமால் தாய்தந்தையர்களிடம் செலவுபெற்று வடக்குமுகமாய்நடந்து கங்காநதி சேர்ந்து மிகவும்பக்தியுடன் பாகீரதியைப் பூசித்து "லோகபவானி! உன்னைநினைத்தமாத்திரத்தில் சமஸ்தபாவங்களும் நீங்குமென்றிருக்க, உன் ஸ்நானத்தால்உண்டாகும் பலனுக்கு விசேஷம்சொல்லவும்வேண்டுமோ! நீ இருக்கும் இடமெல்லாம் பரமபவித்திரமான இடமாகவே இருக்கின்றது. உன் மஹாமஹிமையைப் புகழ யாவரால்தான்முடியும்? பூர்வம் முத்துச்சிப்பியிலிருந்த என்தந்தையை கரைசேர்த்து ரக்ஷித்தவள் நீயல்லவோ?" என்று மிகவும் பிரார்த்தித்து கங்கையில் இறங்கிநடக்க ஆரம்பித்தார்.

அப்போது அங்கிருந்தஜனங்கள் யாவரும் கமால் சொன்ன வார்த்தைகளையெல்லாம்கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு கமாலைப்பார்த்து, "ஐயா! பைத்தியக்காரா! கங்கையில் நடந்து அக்கரைச்சேரும் புருஷனும் இருக்கின்றானா? இதோ அநேகபடவுகள் இருக்கின்றன; இதில் சுகமாய் உட்கார்ந்து அக்கரைப்போய்ச் சேரலாகாதா? கங்கையின் ஆழம் இவ்வளவென்று இதுவரையில் அறிந்தவர்களும் இருக்கின்றார்களோ? பால்யாவஸ்தையினால் இப்படிப்பட்ட கெட்டபுத்தி உனக்கு உண்டாயிற்று; போகாதே; போகாதே; திரும்பிவா; நாங்கள் சொல்லும்பேச்

சைக்கேள்; கங்கையின்சுபாவம் உனக்குத்தெரியாது. மேலுக்கு மெதுவாய்போவதுபோல்காணப்படும்; உள்ளே அதிகவேகமாய்ஓடும். இதன் உருட்டுக்கு மலைகளும் உருண்டு பிறண்டுவரும். எங்கள்பேச்சைக்கேளாமல் செல்லுவாயாகில் அநியாயமாய் மரணமடைவாய்; நில், நில். கங்கையில்நடந்து பிழைத்தவர்கள் ஒருவருமில்லை. திரும்பிவா" என்று எல்லோரும் கூச்சலிட்டார்கள், எத்தனைபெயர்கள் எவ்வளவுகூச்சலிட்டுச் சொல்லியபோதிலும் கமால் அவைகளைக்கேளாமல் மனதில் கங்காதேவியை ஸ்துதிசெய்து மெதுவாய் நடந்துபோக ஆரம்பித்தார். அவரது நிச்சலசித்தத்திற்கு கங்காதேவி மிகவும்மெச்சி, அலைகளென்னும் தன் கைகளில் கமால்பாதத்தைத் தாங்கிக்கொண்டு சுகமாய் அக்கரைகொண்டுபோக ஆரம்பித்தது. கங்காதேவி அவ்வாறுகொண்டுபோவதற்காக கமால் மிகவும்சந்தோஷமடைந்து பின்னுக்குத்திரும்பி முன் தன்னை கூப்பிட்டவர்களைப் பார்த்து, "புண்ணியாத்மாக்களே! யுத்தத்திற்குப் புறப்பட்டபின் சத்துருசைன்னியங்களைப்பார்த்து பின்வாங்கி ஓடுபவன் தீரனாகமாட்டான். அதுபோல கங்கையின் அனுக்கிரகத்தினால் அக்கரைச்சேரவேண்டுமென்று நிச்சயித்து ஆற்றில்இறங்கியபின் ஆழத்திற்குப்பயந்து திரும்பிவரப்பட்டவன் கபீர்குமாரனாவானா?" என்று உரத்தசப்தத்துடன் அவர்களிடம்சொல்லி, கங்காதேவியை மிகவும்வர்ணித்து ஸ்துதிசெய்துகொண்டே நிமிஷத்திற்குள் அக்கரைசேர்ந்து, கங்காதேவிக்கு மிகவும்வந்தனம்செய்து சந்தோஷமாய் முன்நடந்துசென்றார். பூமியின்மீது நடப்பதுபோல் ஜலத்தின்மீதுநடந்து அக்கரைச்சேர்ந்ததற்காக ஜனங்களெல்லோரும் மிகவும்ஆச்சரியமடைந்து கமால் மகிமையைப் பலவிதங்களாய்ப் புகழ்ந்து மிகவும் கொண்டாடினார்கள்.

அப்போது கமால் சிலதூரம்சென்றபோது தன்னை எதிர்நோக்கிவரும் சிலசாதுக்களைப்பார்த்து யாரோ பெரியோர்கள் வருகின்றார்களென்று மிகவும் சந்தோஷித்த, முதல்முதல் இவர்களைத் தரிசித்துப்போவது மிகவும்நல்லதென்று தன்மனதில்எண்ணி, அந்தச் சாதுக்களிடம் சென்று அவர்களுக்கு அதிகாரியாயிருக்கும் பெரியசாதுவையுங்கண்டு மிகவும்பயபக்தியுடன் அவர்களை நமஸ்கரித்தார். அப்போது அந்தசாது கமாலைப்பார்த்து "கமால்! இப்போது நீ எங்குபோக நினைத்து நீ ஒருவனாகவே புறப்பட்டு வந்தாய்?" என்றுகேட்டார். அதற்குக் கமால் "தேவா! நான் கோகுலபிருந்தாவனம், பதரிகாசிரமம், ஹரித்துவார், காஸ்மீர், பாஞ்சாலம், கயா, பிரயாகா, அயோத்தியா, மதுரா, மாயா முதலாகிய புண்ணியஸ்தலங்களெல்லாம்தரிசித்து அங்குள்ள பரம பாகவதர்களையெல்லாம் சேவித்துவர உத்தேசம்கொண்டு புறப்பட்டு வந்தேன்" என்று சொல்லினர்.

சாதுவல்லபன் அதைக்கேட்டவுடன் தன்னுடன்வந்த மற்றசாதுக்களையெல்லாம் பார்த்து, "நீங்கள் இந்தச்சிறுவனை அறிவீர்களா? துலுக்கமதத்தில் பிறந்து துலுக்கமதத்தில் சேராமலும் இந்துமதத்தில்சேராமலும் இகபரங்களுக்கு உபயோகப்படாமல் மத்தியில் தொங்கிக்கொண்டிருக்கும் கபீரினுடைய குமாரன் இவனே. கபீரினுடைய விஷயம் நீங்கள் எப்பொழுதும் கேள்விப்பட்டதில்லை. அவன் சரித்திரம் மிகவும் விசித்திரமானது. கபீர் ஒரு வேஷதாரி. அவன் தாய்தந்தையர்களும் அவன் பாரியாளும் அசல் துலுக்கர்கள். அவன்குரு, இராமானந்தர். அவன் வம்சம் மகம்மதியவம்சம்; மதம் இந்துமதம்; வேஷம் துலுக்கவேஷம்; ஆசாரம் பிராமணஆசாரம்; சொல்வது பிரம்மஞ்ஞானம்; செய்வது பகவத்தியானம்; போதிப்பது

அத்வைதம்: சாதிப்பது துவைதம்; அவன் லக்ஷணம் எப்படிப்பட்டதாயிருக்கின்றதோ அதை நீங்களே சற்று ஆலோசித்துப்பாருங்கள்; அப்படிப்பட்டவனுக்குப்பிறந்த இவன் இலக்ஷணம் இன்னும் எப்படியிருக்கலாம். விதையொன்றுபோட்டால் செடிஒன்றுமுளையுமா? இவன் ஜாணளவுமில்லை; இதற்குள்ளேயே இதரர்களின் சகாயமில்லாமலே தேசசஞ்சாரம்சென்று இதரமதங்களைக்கண்டித்து அத்வைதமதத்தை ஸ்தாபனம்செய்து வருவதற்குப்புறப்பட்டுவந்தான். ஔரா! கலிகால மஹிமையை என்னவென்றுசொல்லலாம்" என்று சொல்லி பக்கென்று சிரித்துப் பரிகாசம்செய்தார்.

கமால் அதைக்கேட்டவுடன் மிகவும் கோபவிகார பார்வையுடன் மந்தகாசம்செய்து "ஐயா! நீ மகாயோக்கியன். பரிகாசம்செய்வதில் நீ மிகவும் பாண்டித்தியமுடையவனாயிருக்கின்றாய். பரதோஷங்களை வர்ணிப்பது சாதுக்களுக்கு லக்ஷணமா? உன் யோக்கியதைக்குத் தக்கபடியே பேசினாய்; சரி சரி நன்றாயிருக்கின்றது. சாதுக்களுக்குச் சாதிபேதங்களால் பிரயோஜனமென்ன? மச்சகந்திக்கும் பராசரருக்கும்பிறந்த வேதவியாசர் மருமகனான அருச்சுனனுக்கு இடையர்வீட்டில் பிறந்த எங்கள் பகவானான ஸ்ரீகிருஷ்ணன் தன்தங்கையைக்கொடுத்து விவாகம்செய்து வைக்கவில்லையா? ஜாதிபேதம் இருக்கும்பக்ஷத்தில் அவ்வாறு ஏன் செய்விப்பார்? ஏதோ மஹாதெரிந்தவரைப்போல் ஜாதிபேதம் எடுத்துச்சொல்லவந்தீர்; போதும் போதும் வாயைமூடும்" என்றுசொல்லினர்.

சாதுவல்லபன் அதைக்கேட்டவுடன் "அடேபயலே! குலத்திற்குத்தக்க குணமென்று சொல்லுவது சரியாய்விட்டது. அசம்பந்தமானசொற்களை என்னிடம் சொல்லவேண்டாம். க்ஷத்திரிய வீரியத்தைவிழுங்கி மீன்வயிற்றில்

பிறந்த மச்சகந்தி செம்படவன்வீட்டில் வளர்ந்ததனாலேயே செம்படத்தியாவாளா? யசோதைவீட்டில் கிருஷ்ணமூர்த்தி வளர்ந்ததனாலேயே இடையனாகுவானா? இப்படிப்பட்ட உத்காதமானவார்த்தையை இனி என்னிடத்தில் பேசவேண்டாம். அப்படிப்பட்ட வார்த்தைகளைப்பேசுவாயாகில் மிகவும் விரோதம் வந்து சம்பவிக்கும்'' என்று சொல்லினர்.

கமால் அதைக்கேட்டு "இப்போது நீர் சொல்லியது நியாயமென்று ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் விரோதம் ஏன் * உண்டாகின்றது? அயோனி சம்பந்தரான என் தந்தை துலுக்கர்கள் வீட்டில் வளர்ந்தமாத்திரத்தில் துலுக்கராய் விடுவாரா? அதை நீரேசற்று ஆலோசித்துப்பாரும். சாதுக்களுக்கு குணத்தினால் பிரயோஜனமேயொழிய, ஜாதியினால் பிரயோஜனமில்லை. ஜாதிபேதங்களை நினைப்பவர்கள் சாதுக்களே ஆகமாட்டார்கள். விஸ்வாமித்திரன் அரிச்சந்திரனை எவ்வளவுகஷ்டப்படுத்தியபோதிலும் அவர் மனம்நொந்து ஏதாகிலும் விஸ்வாமித்திரனைப்பேசினாரா? உலக விவகாரங்களை அனுஷ்டித்துவரும் அரசர்களே இதரர்களைத்தூஷிப்பது உத்தமமானதல்லவென்று இருக்கையில், பரமார்த்தம் அடையவேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கும் சாதுக்கள் இதரர்களைத்தூஷிக்க எண்ணங்கொள்ளுவார்களா? அதை நீரேசற்று ஆலோசித்துப்பாரும். ஜாதிபேதம் முதலாகிய எண்ணங்களெல்லாம் இஹலோகத்திற்கேயொழிய, பரலோகத்திற்கல்ல. மத்தியில் ஏற்படுத்திய ஜாதிபேதங்களினால் பிரயோஜனமென்ன? அபேதஞானசம்பன்னர்களுக்கேமகான்களென்றும், பிரம்மவேத்தர்களென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். பேதபுத்தியுடைய உம்மைப்போன்றலுப்தர்களெல்லோரும்பிரம்மவேத்தர்கள் ஆகமாட்டார்கள். ஸ்ரீகிருஷ்ண

மூர்த்தி அருச்சுனனுக்கு தத்துவங்களை உபதேசித்தபோது, துவைத அத்வைதங்களிரண்டையும் சமமாய் உபதேசித்தாரேயொழிய, ஒன்றைநீக்கி மற்றொன்றைப் போதிக்கவில்லை நீர் எப்போதாகிலும் ஸ்ரீ பகவத்கீதையைப் பார்த்திருப்பீரானால் உமக்கு இப்படிப்பட்ட பேதபுத்தி ஏன் உண்டாகின்றது! அத்வைதமென்று சொல்லியபோதிலும் ஆத்மஞானமுண்டாய் தன்னைத்தான் அறியும் வரையில் துவைதத்தில் இருப்பவனேயாகின்றான். சாக்கிறதா அவஸ்தையில் சுஷுப்தியா அவஸ்தை உண்டானபோதல்லவா அத்வைதம் சித்திக்கும். மஹாபாகவதத்திலும் துவைத அத்வைதங்கள் இரண்டையும் சமமாய்ச் சொல்லியிருக்கவில்லையா? பிரம்மானந்தபதவி உண்டாகும் வரையில் இஷ்டதெய்வத்தையாகிலும் சதாசாரியரையாகிலும் மறக்கலாகாது. அப்படி மறப்பவன் மூடனேயொழிய விவேகியல்ல. அனுபவசித்தியில்லாமல் உபதேசம் செய்யப்பட்டவர்கள் வாசாஞானமுடையவர்களென்றே சொல்லலாம். நீர் வாஸ்தவமான சாதுவாயிருக்கும் பக்ஷத்தில் இவ்விதமாய் நீர் எப்பொழுதும் சொல்லமாட்டீர். திருட்டு வேஷம்போட்டு என்னிடம்வந்து மிரட்டிப்பார்க்கின்றீர். உமது தந்திரங்களெல்லாம் என்னிடம்சாயமாட்டாது. நீர் என் தந்தையை சாமான்னிய மனிதனென்றெண்ணிக் கொண்டீர். அவர் நித்தியமுக்தனான சுகப்பிரம்மருஷியல்லவா? என் தாயாகிய சுந்தராதேவி தேவரம்பையல்லவா? நான் நாரதர் அம்சமல்லவா? நீர் சர்வலோகரக்ஷகனான நாராயணமூர்த்தியல்லவா? உம்முடனிருக்கப்பட்டவர்கள் நாரதர் தவிர மற்றவர்கள் முனிவர்க்கங்களல்லவா? யாரைமோசம்செய்ய இப்படிப்பட்ட வேஷத்தைத்தரித்து வந்தீர்? ஸ்ரீ பகவத்கீதையில் துவைத அத்வைதங்களைப் போதித்தவர் நீரேயல்லவா? மச்ச கச்சப வராக நரசிம்ம

வாமன பரசு ராம ரகுராம கிருஷ்ண பரப்பிரம்மாதி ரூபங்களில் எந்தரூபம் உமக்கு நிச்சயமானதென்று சொல்லலாம்? உலகத்தில் உம்மைவிட அன்னியபதார்த்தமும் வேறொன்றிருக்கின்றதோ? அதைச்சற்றே தெரியச்சொல்லும்பார்ப்போம். மூலபலத்தை நிர்மூலம் செய்யபிரயத்தனப்பட்டபோது ஓர் ராமனாயிருந்தும் அநேக ராமனாய்க் காணப்பட்டவர் நீரல்லவோ? நாரதர் உன் மகிமையை அறியவந்தபோது நீர் ஒருவரே கிருஷ்ணமூர்த்தியாயிருந்து பதினாயிரம்கோபிகாஸ்திரீகளின் கிருகத்தில் பதினாயிரம் கிருஷ்ணமூர்த்திகளாகக் காணப்பட்டவர் நீரல்லவோ? ஏககாலத்தில் அத்தனை ராமர்களும், அத்தனை கிருஷ்ணர்களும் எங்கிருந்துவந்தார்கள்? பாண்டவர்களுக்காக தூது செல்ல துரியோதனன் சபைக்குச் சென்றபோது அவர்களின் குட்ரயுக்தியைத் தெரிந்துகொண்டு நீர் கிருஷ்ணமூர்த்தியாயிருந்தும் உமக்கு விஸ்வரூபமெங்கிருந்துவந்தது? நீர் விஸ்வரூபமெடுத்தபோது கௌரவர்களின் இருதயத்தில் ஆச்சரியத்தை உண்டாக்கினவர் யார்? விஷயபோகங்களில்சொக்கி இருப்பவனைப்போல்நடித்து நித்தியபிரம்மசாரியென்று பிரசித்தியடைந்த மஹாபுருஷன் யார்? பிரம்மாண்டமெல்லாம் உன்னில் அடங்கியிருக்க இலங்கைமாத்திரம் வேறாய் எங்கிருந்துவந்தது! மாயையால் சர்வ பிரபஞ்சத்தையும் மயக்கும்படிச் செய்யப்பட்ட நீர், இராவணன் சீதையை எடுத்துக்கொண்டுபோன போது ஆரணியத்தில் புலம்பினாயென்று சொல்லும் வார்த்தையை எவ்விதமாய்நம்பலாம்? சராசரமெங்கும் நிறைந்து சர்வாந்தரியாமியாய்இருக்கும் உமக்கு அயோத்தியா மதுரா பிருந்தாவன முதலாகிய திவ்விய ஸ்தலங்கள் நிவாஸஸ்தானமென்று எப்படிச்சொல்லலாம்? பரமேஸ்வரா! உன் மகிமை

உனக்கேயல்லாமல் இதரர்களுக்குத் தெரியுமோ? பிரபஞ்சத்தையெல்லாம் பிரமிக்கச்செய்யப் பட்டவர் நீரேயல்லவா?

நிரவயவமாய் நிர்க்குணமாய் நிர்விகாரமாய் நிராகாரமாய் அவாங்மானஸகோசரமாய் ஆதியந்தரகிதமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கும் உனக்கு ரூபநாமபேதங்கள் உண்டாக்கியது உமதுமாயையேயொழிய வேறல்ல; சமயோசிதமாய் அந்தந்த ரூபங்களைத்தரித்து சகலபிரபஞ்சத்தையும் காப்பாற்றும் உன் மாயாமகிமையைத் தெரிந்துகொள்ள சக்தியுடையவர்கள் யாரிருக்கின்றார்கள்? பாலியதசையிலிருக்கும் என்னை பரிசோதிப்பதற்காக இந்தவேஷத்துடன் வந்து மோசம்செய்யப்பார்க்கின்றீர். பிரம்ம ருத்திராதி தேவதைகளும் உமதுமாயையைத் தெரிந்துகொள்ளாமலிருக்க, மாயாவிநோதனை உம்மை நான்தெரிந்துகொள்ள எவ்வளவுமாத்திரன். நீர் பராத்பரன்; பரமபாவனன்; பரந்தாமன், பரமேசுவரன், ஆதிமத்தியாந்தரஹிதன்; அவாங்மானஸகோசரன்; அப்ரமேயன்; ஆநந்தநிலயன்; சர்வஞ்ஞன்; சர்வசக்தன்; சர்வகர்த்தன்; சர்வபோக்தன்; சர்வவியாபகன்: சர்வேசுவரன்; சச்சிதானந்தன்; உமதுகலியாண குணத்தைவர்ணிக்க யாவரால் தான்முடியும்? நீர்பக்தவத்சலன். ஆதலால், எந்தக்காரணங்களில்லாமலே பக்தர்களுக்குத் தரிசனம்தந்து கிருதார்த்தர்களாய் செய்துகொண்டு வருகின்றீர்'' என்றுபலவிதங்களாய்ஸ்துதிசெய்து பிரதக்ஷணம்வந்து நமஸ்கரித்துநின்றார்.

அப்போது பகவான் கமால்செய்த உபந்நியாசத்திற்கு மிகவும்சந்தோஷமடைந்து அவர்மீது கடாக்ஷம்வைத்து தன் நிசசொரூபத்தைப் பிரகாசித்து "கமால்! உன் பக்தி ஞான வைராக்கியங்களுக்கு மிகவும்சந்தோஷித்தேன்; கபீருக்குத்தெரியாத பலரகஸ்யங்கள் நீதெரிந்துகொள்ள வரமும் தந்தேன். தந்தைக்கு உபதேசம்செய்த குமாரசுவாமியைப்

போல் நீ கீர்த்தியடைவாய். இனி உனக்கிஷ்டமான இடங்களுக்குச் செல்லலாம். சந்தேகமில்லாமல் திக்விஜயம்செய்யக்கடவாய். நீ தூரதேசம் போவதனால் அங்கு ஏதாகிலும் அபூர்வமானவஸ்து உனக்கு அகப்பட்டால் அதைமறவாமல் கொண்டுவந்து எனக்குக்கொடுக்கக்கடவாய்'' என்று சொல்லி அந்தர்த்தானமாய்விட்டார். பகவான் தனக்கு சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன அனுமத்சமேதராய் ஸ்ரீ ராமரூபராய்த் தரிசனம்தந்து திக்விஜயம் செய்ய வரம் கொடுத்தவுடன் கமால் பரமானந்தமடைந்து அங்கிருந்து புறப்பட்டு நைமிசாரண்யம் முதலாகிய புண்ணியஸ்தலங்களும், இமாலயமுதலாகிய பர்வதங்களும் ஹரித்வார் முதலாகிய திவ்வியக்ஷேத்திரங்களும் கங்காயமுனை முதலாகிய புண்ணியதீர்த்தங்களும் தரிசித்துக் கொண்டு ஆங்காங்கு காணப்படும் துர்மதஸ்தர்களுடன் வாதம்செய்து, சைவ வைரவ பாசுபத மகாவிரத காளாமுக முதலாகிய அந்தர் மதங்களையும், சமண மீமாம்ச பௌத்தமுதலாகிய பாஹ்ய மதங்களையும்ஜயித்து சுருதியுக்தி அனுபவங்களினால் அத்வைதமதங்களை ஸ்தாபனம் செய்து "ஜீவன் என்பது எது. அது உற்பத்திக்குக் காரணம் எது? ஜீவசொரூபம் எப்படிப்பட்டது? ஜீவனுக்கு பிறப்பு இறப்பு உண்டா? ஜீவர்கள் உண்டாவதற்குக் காரணமென்ன? ஜீவர்களுக்குப் பந்தம் ஏன் உண்டாயிற்று? ஜீவன் முக்தியடைய உபாயமென்ன? எதனால் ஜீவனுக்கு சுகமுண்டாகும்? ஜீவனென்னும்பதத்திற்கு அர்த்தமென்ன? ஜீவன் பிரகிருதிசம்பந்தனா? பரமாத்மசம்பந்தனா? வேறெந்தசம்பந்தம்? ஜீவன் எங்கிருந்து வந்தது? மறுபடியும் எங்குபோய்லயிக்கின்றது? ஜீவன் வந்தது? ஜீவன்போயிற்று என்பதற்கு அர்த்தமென்ன? கைவல்லியமென்பது எது? புண்ணியபாப கர்மங்களினால் உண்டாகிய சுகதுக்கங்களை ஜீவன் அனுபவிக்கின்றதா?

அல்லது தேஹம் அனுபவிக்கின்றதா? இவைகளுக்கெல்லாம் சமாதானம் சொல்லுங்கள் பார்ப்போம். சுத்த சூன்னியமாகிய ஆகாசத்தை வெட்டப் பிரயத்தனப்பட்டவனுக்கு சரீர சிரமை உண்டாவதுபோல் பிரகிருதிசம்பந்தமாகிய பிரபஞ்சகாரியத்தில் பிரவேசித்தவனுக்கு வெகுவித துக்கங்கள் தவிர மற்றொரு பிரயோஜனமும் இல்லை. ஜன்மமே நரகம்; ஜன்மரகிதமே மோக்ஷம்; பிரமையேபந்தம்; பிரமை நிவர்த்தியே பந்தவிமோசனமென்று போதிக்கும் வேதவாக்கியங்களைச் சரியாய்விசாரிக்கவேண்டும். மகாபிரளயம் வந்தபோதிலும் ஜீவனுக்கு ஜன்மம் தப்பாது. அஹங்காரத்தினாலேயே ஜன்மம்உண்டாகின்றது. அஹங்காரமே மாயை. அஹங்காரம் ஒழிந்தால் மாயை ஒழியும். மாயையைக்கடந்தவனே பரப்பிரம்மத்தில் ஐக்கியமாய் பரமானந்தத்தை அனுபவிப்பான். சூரியன் உதயமானவுடன் இருள் நீங்குவதுபோல் தன்னுள்ளிருக்கும் ஜோதியைக்கண்டவுடன் அஹங்காரமாகிய மாயை தனக்குத்தானாகவே விலகிப்போம். அகண்டமாகிய பரஞ்சோதியில் ஐக்கியமானவுடன் அஹங்காரம் மறுபடியும் தலைக்காட்டாது; மாமிசக் கண்களுக்கு மாத்திரம் ரூபங்கள் காணப்படுகின்றதேயொழிய, உள்ளிருக்குங்கண்களுக்கு ரூபங்கள் காணப்படுவதில்லை ஞானக்கண்களைத்திறக்கவிடாமல் மூடிக்கொண்டிருப்பதே மாயையென்றும், திரையென்று சொல்லப்படும். பூர்வம் பிரம்மதேவன் சிரசைப்போக்கடித்துக்கொண்டதும், ஸ்ரீராமமூர்த்தி, வாலி சுக்ரீவர்களை தெரிந்துகொள்ளாமற்போனதும், விஷ்ணுமூர்த்திதரித்த மோகினிரூபத்தைத் தெரிந்துகொள்ளாமல் பரமசிவன் மோகித்ததும், அந்த மாயையென்னும் திரையினாலேயல்லவா? சராசரபிரபஞ்சமெல்லாம் மாயாவிலாசமேயொழிய வேறொன்றில்லை. க்ஷணத்தில் நசித்துப் போகத்தக்க சரீரத்தின்மீது அபி

மானம்வைத்திருக்கப்பட்டவர்களுக்குச் சிறிதேனும் ஆனந்தசுகம் உண்டாகமாட்டாது. அந்தக்கரணத்தில்உண்டாகும் எண்ணங்களை எல்லாம் நிர்மூலம்செய்து க்ஷணமாத்திரம் பிரம்மநிஷ்டையிலிருந்தால், அனேககல்பகோடி சத வருஷங்கள் திரிகரணசுத்தியாய்ச்செய்த தபசும் அதற்குச் சமானமாகமாட்டாதென்று பிரம்ம வேத்தர்கள் சொல்லுகின்றார்கள், சாமான்ய இச்சையுடையவர்கள் ஜாக்கிராவஸ்தையிலும், சம்பூர்ணமாய் இச்சையுடையவர்கள் சொப்பனாவஸ்தையிலும் ஜபம் செய்வார்களேயொழிய, சுஷுப்தியாவஸ்தையில் ஜபம் யாராகிலும்செய்வார்களா? இந்தமூன்று அவஸ்தைகளிலும் 'ஹம்ஸ' (ஸ்வாஸம்) ஒன்றே "ஸோஹம்" என்னும் பரமபவித்திரமான அஜபாகாயத்திரியாகிய மஹாமந்திரத்தை அதிகஜாக்கிரதையுடன் சுவாசம் உட் பிரவேசிக்கும்போது 'ஸோ' என்னும்மந்திரத்துடனும், சுவாசம் வெளிவரும்போது 'ஹம் என்னும்மந்திரத்துடனும் தனக்குத்தானாகவே ஜாக்கிரதை சொப்பன சுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளிலும் ஜபம்செய்து கொண்டிருக்கும்.

இமைகொட்டுமவ்வளவுநேரமும் நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கும் மனதை மந்திரத்தில்சேர்க்காமல் வெறும் வாக்கினால் முண முணவென்று ஜெபித்துவந்தால் மனம் எவ்விதமாய் நிற்கும்? "ஸோஹம்" மந்திரத்தினால் மனதை நிறுத்துவதற்காக "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய"த்தில் யாவரும் நன்றாய்அறியும்படி விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதுபோல் மனதை சுவாசத்துடன் சேர்த்து ஜபம்செய்துவந்தால் யமபாதை நீங்கி மோக்ஷமென்னும்கைவல்யபதியை தப்பாமல் அடையலாம். இதை அப்பியாசம்செய்யாமல் மனம்போகும் போக்குகளுக்கெல்லாம் காமக்குரோதாதி அரிஷ்டவர்க்கங்களுக்கு இடங்

கொடுத்தால் அது துன்மார்க்கமாகிய விஷயபோகங்களில் இழுத்துச்சென்று புருஷனை அதோகதிச் செய்வித்து மாயாசமுத்திரத்தில் மூழ்கும்படிச் செய்விக்கும். மனதைச் சலிக்கும்படிச் செய்விக்கும் அந்தக்கரணங்கள், மௌன நிஷ்டை ஒன்றிற்கே வசமாகுமேயொழிய, மற்றவைகளுக்கு வசமாகமாட்டா. "ஆசாரியன் உபதேசித்த அகண்ட சச்சிதானந்த பரப்பிரம்மத்தை பிரதிதினம் அனுவேனும் சோராமல் அப்பியாசம்செய்துவரப்பட்டவர்களுக்கேமோக்ஷப்பிராப்தி உண்டாகுமேயொழிய இதரர்களுக்கு உண்டாகமாட்டா" என்று பலவிதங்களாய் உபந்நியாசம்செய்து தன்னுடன் வாதம்செய்யவந்த பண்டிதர்களை எல்லாம்ஜெயித்து சம்சாரமென்னும் சமுத்திரத்திலிருந்து தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டவர்களுக்கெல்லாம் கபீர் பாதத்தை ஆசிரயித்து அவர் அனுக்கிரகம் பெற்று கடைத்தேறுங்களென்று, ஸ்ரீராமமூர்த்தி பிரபாவத்தை இராவணனுக்கு உபதேசித்த ஆஞ்சனேயமூர்த்தி போலும், விஷ்ணுமூர்த்தி பிரபாவத்தை இரணியகசிபனுக்கு உபதேசித்த பிரகல்லாதனைப்போலும், கமால் தன்தந்தையாகிய கபீரினுடைய பிரம்மஞான பிரபாவத்தை ஜனங்களெல்லோருக்குந் தெரியச்சொல்லி துன்மார்க்கவிருத்தியிலிருந்த அனேகர்களை சன்மார்க்கவிருத்தியில் திருப்பினார்.

பிறகு, கமால் ரூம்ஷா காபூல் கந்தஹார் மக்கா மதீனா முதலாகிய தேசங்கள் சென்று அங்கு மிகவும் பெரியவர்களென்று பெயர்பெற்றிருந்த மகம்மதுமதஸ்தர்களுடன் வாதம்செய்யஆரம்பித்து "ஐயா! நீங்கள் ஹஜ்ஜுசெய்வதனால் லாபமென்ன? கொசு எறும்பு முதலாகிய சிறிய பிராணிகளின் கால்சப்தமும் தெரிந்துகொள்ளத்தக்க பகவானுக்கு காதுகள் கேட்கமாட்டாதென்று நீங்கள் உங்கள் காதுகளில் அங்குல நீளம்வரையில் விரல்களை நுழைத்து

இதரர்களின் காதுகள் செவுடுபடும்படி கூச்சலிடுகின்றீர்கள்? பகவானை மனதில்ஸ்மரித்தால் உங்கள்பிரார்த்தனையை அங்கீகரிக்கமாட்டார்போல் தோன்றுகின்றதா? பெயரில்லாத வஸ்துவிற்கு பெயர்வைத்தவர்கள் யார்? எள்ளுக்குள் எண்ணெயும், பாலில்நெய்யும் கலந்திருப்பதுபோல் சகலபதார்த்தங்களிலும் கலந்திருக்கும் பகவான் ஏழாவது மண்டலத்தில் நிவசித்துக்கொண்டிருக்கின்றாரென்று எழுதிவைத்தவர்கள் யார்? வாயுமண்டலம், வருணமண்டலம், சந்திரமண்டலம், சூரியமண்டலம், நக்ஷத்திரமண்டலம், வஹ்னி மண்டலம் முதலாகிய ஆறுமண்டலங்கள் கடந்தபின் திரிசங்கு மண்டலமுண்டு. அந்தமண்டலத்திற்கு அதிபதி விஸ்வாமித்திரன். அவரையே பகவானென்றுநினைத்து பூசிக்கின்றீர்கள். அத்விதீய பரப்பிரம்மத்தில் அகண்டமாய் கலந்து ஆனந்தத்தைஅடைய வழி தெரியாமல் விருதாகாலக்ஷேபம்செய்வதனால் மோக்ஷப்ராப்தி உங்களுக்கு எவ்வாறு சித்திக்கும்? மேற்குமுகமாய்த் திரும்பிப் படுத்தும் உட்கார்ந்தும் நீங்கள் பகவானைப் பிரார்த்தனை செய்வதைப்பார்த்தால் பகவான் கிழக்குமுகத்தில் இல்லைபோல் காணப்படுகின்றது! எப்பொழுதும் இருதயகமலத்தில் நிவசித்துக்கொண்டிருக்கும் பரமாத்மா சங்கல்பமென்னும் மாயையுடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றாரென்று தெரிந்துகொள்ளாமலிருக்கின்றீர்கள். குணாதீதமான பகவானுக்கு பலிகொடுக்கவேண்டுமென்று ஓர்விதி ஏற்படுத்திக் கொண்டு கொஞ்சமேனும் பூததயையில்லாமல் வாயில்லாத ஜந்துக்களின் கழுத்தைஅறுத்துக் கொல்வது உங்களுக்கு எப்படிப்பட்ட தருமமாயிருக்கின்றது. இந்த ஞாயத்தை உங்களைப்போன்ற அநியாயஸ்தர்கள் சரி என்று ஒப்புக் கொள்வார்களேயொழிய ஞாயமுடைய பெரியோர்கள் எப்பொழுதும் ஒப்புக்கொள்ளமாட்டார்

கள். நிராகாரமாகிய பரப்பிரம்மத்திற்கு மகம்மது முதலானவர்களிடம் பேச வாய் எங்கிருந்தது? அவர்களுக்குத் தான் எவ்விதமாய் ஆசீர்வாதம் செய்தார்? கண்களுக்குக் காணப்படாமலே காரியங்களை எல்லாம் எவ்விதமாய்ச்செய்தார்? அவருக்கு வாய் இருப்பதாயிருந்தால் நாக்கு ஒன்று இருக்க வேண்டும்; நாக்கும் இருக்கும்பக்ஷத்தில் சரீரத்திற்கு இருக்கவேண்டிய சகல அவயவங்களும் இருக்கவேண்டும். அவயங்களிருந்தால் அதற்குத்தகுந்த ஆகாரம்ஒன்று ஏற்படவேண்டும். ஆகாரம்உண்டானபோது அதற்குஜனனமரணங்களும்வரவேண்டும். நீங்களேன் விருதாவாய் இப்படிப்பட்ட பிரமையில்மூழ்கி பாழாகின்றீர்கள்? ஸ்திரீ, புருஷ, நபும்ஸக ரூபங்களுக்கு அதீதப்பட்ட பரப்பிரம்மத்தில்கலந்து ஆனந்தத்தை அநுபவித்துக்கொண்டிருக்கும் வலீ (ருஷி)களினுடைய அநுபவத்தை நீங்கள் விசாரிக்கும் பக்ஷத்தில், உங்களைப்பற்றியிருக்கும் மந்தபுத்தி நீங்கி விவேகம்உண்டாகும். அநுபவ ஞானமில்லாமல் நித்தியானந்தம் எப்பொழுதும் உண்டாகமாட்டாது. அஹங்காரத்தைவிட கெடுதி வேறொன்றில்லை. அஹங்காரம் உள்ளவரையில் அஞ்ஞானம் நசிக்கமாட்டாது. அஞ்ஞானம்நசிக்கும்வரையில் ஆத்மஞானம்உண்டாகமாட்டாது.

பூர்வம் விசேஷ கர்வம்கொண்டிருந்த ஓர் பாதுஷா ஒருநாள் வேட்டைமார்க்கமாய்ச்சென்று தன்கண்களுக்குக் காணப்பட்ட ஓர்மானைத் துரத்திக்கொண்டே நடுக்காட்டில்நுழைந்துவிட்டான். அந்தமானே புதரில்போய் நுழைந்துவிட்டது. பாதுஷா மறுபடியும் திரும்பிவர வழிதெரியாமல் பலவிடங்களில் சுற்றித் திரிந்துகொண்டிருந்தபோது இதரதேச சைன்னியங்கள் பாதுஷாவைக் கண்டவுடன் அவனைப்பிடித்து இரண்டு இரக்கைகளையும் விரியக்கட்டித் தம்அரசனிடம் கொண்டுபோய்நிறுத்தினார்

கள். அப்போதும் அரசன் பாதுஷாவைக் கள்ளனென்று நினைத்து கைகால்களை அறுத்து அவனைப்பாழுங்கிணற்றில் தள்ளியபோது தன் கர்வத்தினால் தனக்கு இப்படிப்பட்ட ஆபத்துவந்ததென்றெண்ணி தன் கர்வத்தை நிவர்த்திசெய்துகொண்டு சாந்தகுணத்தை வஹித்தபிறகு, பகவதனுக்கிரகத்தினால் மறுபடியும் கைகால்கள் வளர்ந்துவந்ததென்று உங்கள்கிரந்தத்தில் எழுதியிருக்கின்றதல்லவா? அவைகளையெல்லாம் நீங்களேன் தெரிந்துகொள்ளலாகாது. இப்போது நீங்கள் மிகவும் கௌரவமாய் நினைக்கும்புருஷன் மிகவும் கஷ்டதசையில் இருக்கும்போது சில மந்தபுத்தியுடையவர்களைத் தன்குட்ரயுக்தியினால் வசப்படுத்தி, தனக்கு அனுகூலமான அனேகதுர்விஷயங்களை எல்லாம் ஓர்புஸ்தகத்தில் எழுதிவைத்து, அதை பிரசித்திசெய்வித்து, அதுபோல் நடந்துவரவேண்டுமென்று ஏற்படுத்திய விஷயக்களையெல்லாம் நீங்கள் அனுஷ்டித்துவருவது பாபமல்லவா? எல்லா ஜந்துக்களையும் புசிப்பதற்காக பகவான் சிருஷ்டிசெய்திருக்கின்றாரென்று எழுதிவைத்த வாக்கியங்களை நம்பி ஜீவஇம்சைசெய்து பாபத்திற்குப் பாத்திரராகின்றார்கள் இம்சையைவிட மானவர்கள், முக்கியமாய் அனுஷ்டிக்கவேண்டியதர்மம் வேறொன்றில்லை. அத்தியந்த நிஷ்டையுடன் கோடிவருஷங்கள் கோரமாகிய தவம் செய்துவந்தாலும் ஜீவஇம்சை ஒன்றுசெய்தால் அந்தத் தவமெல்லாம் நிஷ்பிரயோஜனமாய்விடுமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். உங்கள்புஸ்தகத்தில் எழுதியிருப்பதுபோல், பூர்வம் மன்சூர்என்னும் மகாபுருஷன் நடந்துகொள்ளவில்லைஎன்று அவர்மீது குரோதம்வைத்து அவர் உச்சரிக்கும் மஹாவாக்கியத்தை உச்சரிக்காமல்செய்யவேண்டும் என்னும் எண்ணத்தினால் அவர்மீது இல்லாத கற்பனைவார்த்தைகளையெல்லாம் அரசனிடம்சொல்லி கழுவில் ஏற்றும்படிச் செய்

வித்தார்களென்றும், கழுவில் ஏற்றியபிறகு அவர் சரீரத்திலிருந்து ஒழுகிய இரத்தமும், அந்த மஹாவாக்கியத்தை உச்சரிக்க ஆரம்பித்ததென்றும், பிறகு சவத்தை இரக்கி அச்சவத்தை பஸ்பம்செய்வித்தபோது அப்பஸ்பமும் அம்மஹாவாக்கியத்தையே உச்சரிக்க ஆரம்பித்ததென்றும் பிறகு அப்பஸ்பத்தை ஒருடப்பியில் மிகவும் பத்திரமாய் அடைக்கலஞ் செய்யப்பட்டதென்றும், ஓர்நாள் தேசாதிபதி குமாரத்தி அதைத்திறந்து முகர்ந்துபார்த்தவுடன் அந்தபஸ்பம் மூக்கின் துவாரமாய்ச்சென்று கர்ப்பத்தையுண்டாக்க, அவளோர் குமாரனைப்பெற்றாளென்றும், அக்குமாரன் மரணமடைந்த தேசாதிபதிகுமாரனைப் பிழைப்பித்தானென்றும், பிழைப்பித்தவுடன் மகம்மதியர்களுக்கு அச்சிறுவன்மீது இன்னும் அதிககோபம்உண்டாயிற்றென்றும், அப்போது அச்சிறுவன் சூரியனை வரவழைத்து மகம்மதுமதம் தப்பிதமென்று சொல்லித்தும் கேளாமல்போனதனால். சூரியன் தன்கிரணங்களினால் அப்பட்டணத்தை பஸ்பம்செய்வித்தாரென்றும் உங்கள்புஸ்தகத்திலேயே எழுதியிருக்கவில்லையா? இவைகளெல்லாம் தெரிந்திருந்தும் பாழும்பள்ளத்தில் ஏன் விழுகின்றீர்கள் என்று பிரத்தியக்ஷ பிரமாணங்கள் அனேகங்களை எடுத்துக்காட்டி லோகாரக்ஷணார்த்தமாய், ஸ்ரீசுகர் கபீர்ரூபமாய் காசியில் அவதரித்திருக்கின்றாரென்றும் அவர் அயோனிசம்பந்தரென்றும், அவருக்குத் தாய்தந்தையர்கள் இல்லையென்றும், பிரம்ம ஞானமுடையவராதலால் அவருக்கு ஜாதிபேதங்கள் மானாபிமானங்கள் யாதொன்றுமில்லையென்றும் அவர் பாதங்களை ஆசிரயித்தவர்களுக்கு மோக்ஷம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காணப்படுமென்றும் இது முதலானவைகளை பிரசித்தப்படுத்தி உலகமெங்கும் இக்

விஜயம்செய்து ஜயபேரிகை செய்வித்து மகதானந்தத்துடன் புறப்பட்டுவந்தார்.

இவ்வாறு புறப்பட்டுவரும்போது கோசலதேசத்தில் மிகவும் பிரசித்திபடைந்த ஓர் பெரியபட்டணம்சேர்ந்தார். அப்போது அங்குள்ளஜனங்களெல்லோரும் கமால் வந்தாரென்னும் வார்த்தையைக்கேட்டவுடன் மிகவும்சந்தோஷித்து பட்டணத்திலுள்ளஜனங்களெல்லாம் கும்பல்கும்பலாய்க் கூட்டங்கூடி அவரைத் தரிசனம்செய்யச்சென்றார்கள். அப்போது இராசவீதியில் மளிகைக்கடைவைத்திருக்கும் ஓர் பெரியவர்த்தகன் அக்கூட்டங்களைப்பார்த்து, நீங்கள் எங்குசெல்லுகின்றீர்களென்றுகேட்க, அப்போது அவர்கள் கமாலைப்பார்க்கப்போகின்றோமென்று சொன்னார்கள். வர்த்தகன் அவர்களைப்பார்த்து, "ஓஹோ! உங்களுக்கென்ன பைத்தியம்பிடித்ததா? கமாலினிடம் அப்படிப்பட்ட மகிமை என்னஇருக்கின்றதென்றுஎண்ணி ஆட்டுமந்தையைப்போல் கூட்டம்கூட்டமாய்க் கூடிப்போகின்றீர்கள்? அவன் எவனோ அன்னியதேசத்துச்சிறுவன்; நம்மைப்போலவே அவனுக்கு இரண்டுகால்களும் இரண்டுகைகளும் காதுகளும் ஓர்தலையும் இருக்கின்றன. அவனுக்கு ஏதாகிலும் கொம்பும் வாலும் முளைத்திருக்கின்றதா? இப்போதே ஆகாசத்திலிருந்து பூமியில் இறங்கினவனைப்போல் எண்ணிக்கொண்டு அவனைப்பார்ப்பதற்காகஓடுகின்றீர்கள். அவனைப்பார்ப்பதனால் நமக்கென்னபிரயோசனம். செய்துகொண்டகர்மம் நாசமாகி தர்மம் உண்டாகுமா? காசிக்குச்சென்றாலும் கர்மம்தொலையாது என்பதை நீங்கள் கேட்டதில்லையா? நமது ஜனங்களுக்குப் பெறுத்த கெட்டகுணமொன்று இருக்கின்றது. அதுஎன்னவென்றால் புத்தியில்லாதஒருவன் மற்றொருவனைப்பார்த்து விசேஷமாய்ப் புகழ்ந்தால் மற்றவர்களும் அவனை அதுபோலவேபுகழ்ந்து

மிகவும் உபசரிப்பது உலகவழக்கமாயிருக்கின்றது. நல்லது நீங்கள் இப்போது அவனிடம்சென்றுவருகின்றீர்களல்லவா? யாருக்கு என்ன அகப்பட்டது? சற்றே சொல்லுங்கள்பார்ப்போம்" என்றுகேட்டான்.

வர்த்தகன்வார்த்தைகளைக்கேட்டவுடன் சில விவேகிகள் அவனைப்பார்த்து, "அவரை ஏன்விருதாவாய் தூஷிக்கின்றாய்? வீட்டில் உட்கார்ந்துகொண்டு தனமே தெய்வமென்றுஎண்ணி விசேஷமாய்த் திரவியத்தைச் சம்பாதித்து அதில் ஒருகாசாகிலும் செலவழிக்காமல் புதைத்துவைத்து பூதங்காப்பதுபோல் காத்துக்கொண்டிருக்கும் உனக்கு அவர்மகிமை என்னதெரியப்போகின்றது? அந்தச்சிறுவன் முகாரவிந்தத்தைப்பார்த்தால் சாக்ஷாத் விஷ்ணுமூர்த்திபோல் காணப்படுகின்றது. அவர்சந்நிதானத்தில் அவர்பெயரைச்சொல்லி, யார் யார் எதை எதை நினைக்கின்றார்களோ அவரவர்களுக்கு அந்தந்தப்பலன் உண்டாகின்றது. இதோ எனக்கு இந்தக்காரியம் கைகூடிற்று, அதோ அவருக்கு அந்தக்காரியம் கைகூடிற்று என்று வர்த்தகனுக்கு நம்பிக்கை உண்டாகும்படி யாவரும் ஒரேவாக்காய் கமால் மகிமையைக் கொண்டாடினார்கள். அப்போது அந்தவர்த்தகன் மிகவும் ஆச்சரியப்பட்டு சற்றுநேரம் ஆலோசித்து அவர்களைப்பார்த்து "நல்லது அநேககாலமாய் என்னைப் பாதைசெய்துவரும் மூலவியாதி நிவாரணையாய்விட்டால் நீங்கள் சொன்னபேச்சு நிசமென்றெண்ணுவேன்; அப்படித்தீராவிட்டால் உங்களை என்னசெய்கின்றது" என்றுகேட்டான். அதற்கு அவர்கள் எல்லோரும் "உன்னிஷ்டம்போல் வியாதி தீரும்பக்ஷத்தில் அவருக்கு என்னகொடுக்கின்றாய்" என்றுகேட்டார்கள். என் வியாதி சௌக்கியமானால் பதினாயிரம்வராகன் விலையுள்ள நற்பச்சையை அவருக்குக் காணிக்கையாய்க் கொடுப்பேன்; இது

தவறமாட்டேன்" என்றுசொன்னான். இவ்வாறு வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போதே இதுவரையில் அவனை வேதனைசெய்துகொண்டிருந்த மூலவியாதிகரைந்து ஆசனத்தின்வழியாய் கெச்சக்காய்ப் பிரமாணம் ஆணி (முளை) வெளி வந்துவிழ்ந்தது; உடனே பாதைநிவாரணையாய் சிறைச்சாலையிலிருந்து விடுபட்டவனைப்போல் பாதையிலிருந்து விடுபட்டு மிகவும்சந்தோஷமடைந்து முன் தான் வாதித்துக்கொண்டிருந்தவர்களைப்பார்த்து, "புண்ணியாத்மாக்களே! உங்கள்வார்த்தை நிஜமே! அநேக வருஷகாலமாய் எப்பொழுதும் என்னை வேதனைசெய்துகொண்டிருந்த மூலவியாதி அவர் பேர்சொன்னமாத்திரத்தில் மூலம் கரைந்துவிழுந்து என்கர்மவியாதி தீர்ந்தது. இவரை மஹானுபாவரென்றே சொல்லலாம்" என்றுசொல்லி தன்னிடமிருந்த உயர்ந்தபச்சையை தங்கத்தட்டில்வைத்து பரிவாரங்களுடன் அநேக வாத்தியத்துடன்புறப்பட்டுக் கமால் சந்நிதிக்குச்சென்று அவரைப் பக்தியுடன்சேவித்து இரு கைகளையும்குவித்துநின்று தன்னில்தான் என்னநினைக்கின்றானென்றால், ஆஹா! உதவாப்பிள்ளைகள் பத்துப் பிறந்தும் பலனென்ன? இப்படிப்பட்டபிள்ளை ஒன்றிருந்தால் போதும். நொட்டுப்பசுக்களும், சினைப்பசுக்களும் அநேகமிருந்தும் பலனென்ன? பால்கொடுக்கும் பசு ஒன்றிருந்தாலும்போதும்; வித்தியா விவேகசம்பத்தால் உலகமெல்லாம் பிரசித்தியடைந்தாலும் இப்படிப்பட்ட ஞானம் இல்லாவிட்டால் பிரயோஜனமென்ன? இப்படிப்பட்ட சத்புத்திரனை பெற்றவர்களின் ஜன்மமே ஜன்மம். அவர்களின் ஆனந்தமே ஆனந்தம் இப்படிப்பட்ட சத்புத்திரன் நமக்குப்பிறவாமல் போய்விட்டதல்லவா? நமது ஆஸ்திகளெல்லாம் காட்டில்பிரகாசிக்கும்நிலாவைப்போல் ஆய்விட்டதே

என்று சொல்லி பெருமூச்சுவிட்டு யாதொன்றும்சொல்ல நாவெழாமல் ஸ்தம்பம்போல் நின்றிருந்தான்.

அப்போது கமால் வர்த்தகனுடைய மனோபீஷ்டத்தைத் தெரிந்துகொண்டு வர்த்தகனைப்பார்த்து, புன்நகையுடன்சிரித்து "ஐயா! உன்னை வேதனைசெய்துகொண்டிருந்த மூலவியாதிநிவாரணையாய்விட்டதல்லவா? இப்போது என்னைப்போன்ற புத்திரன் ஒருவன்இருந்தால் போதுமென்று உன்னை பாதிக்கின்றதல்லவா? நல்லது என்னையே உன்புத்திரனாய்வைத்துக்கொள்" என்றுசொல்லி கமால் அந்த வர்த்தகனை ஆலிங்கனம்செய்துகொண்டு வர்த்தகன் சமீபமாய் உட்கார்ந்து மதுரமான மிருதுவசனங்களால் குழந்தையைப்போல் பேச ஆரம்பித்தார். அப்போது வர்த்தகன் கமால் மிருதுவசனங்களுக்குச் சந்தோஷப்பட்டு தான்பெற்ற பிள்ளையைப்போல்எண்ணி எவ்விதத்திலாகிலும் இந்தச்சிறுவனைத் தான்வளர்த்துக்கொள்ளவேண்டுமென்று கமாலைத் தன்தொடையின்மீது உட்காரவைத்து முத்தமிட்டு உடலைத்தழுவி அவரது சௌந்தரியங்களைப் பார்த்து, மிகவும் ஆச்சரியப்பட்டு சற்றுநேரம் சும்மாயிருந்து கடைசியில் "நாயனா! நமதுவீட்டிற்குச் செல்வோம் வா" என்றுகூப்பிட்டான். அப்போது கமால் யாதொன்றும்சொல்லாமல் வர்த்தகனுடன் சென்றார். இவ்வாறு சென்று வர்த்தகன்வீடுசேர்ந்ததும் கமால் ஓர் இடத்தைக் குறிப்பிட்டுக்காட்டி "இவ்விடம் உங்கள் பிதுரார்ஜ்ஜிதம் இருக்கின்றது; அதை எடுத்துக்கொள்" என்று சொல்லினர். அப்போது வர்த்தகன் கமால்காட்டிய இடத்தைத் தோண்டிப்பார்த்வுடன் அங்கு அளவில்லாத பச்சை நவரத்தின ஆபரணங்களும் இருக்கக்கண்டு மிகவும் ஆச்சரியமடைந்து இவைகளையெல்லாம் தரித்துக்கொள்ளக் குழந்தைகள் இல்லாததனால் பிரயோஜனமென்ன வென்று

அதிகதுக்கம் உண்டாய் அழ ஆரம்பித்தான். அப்போது
கமால் அவன் மனை வியாகூலத்தைத் தீர்க்க உடனே
தான் சிசுரூபம்தரித்து 'க்வா! க்வா'!! என்று வீறிட்டு
அழ ஆரம்பித்தது. அப்போது வர்த்தகன் அதிசயப்பட்டு
நான்கு பக்கங்களிலும் சுற்றிப்பார்த்துத் தன் சமீபமாய்நின்
றிருந்த கமால் காணமல்போனதனல், ஓஹோ; நமது புத்திர
வாஞ்சையைத்தீர்க்க இவரே சிசுரூபம் தரித்தாரென்று
நிச்சயித்து பரமானந்தமடைந்து மிகவும் ஆத்திரத்துடன்
சிசுவை எடுத்துத் தன்பாரியாளைக்கூப்பிட்டு குழந்தையை
அவளிடம்கொடுத்தான். அப்போது வர்த்தகன்பாரியாள்
மிகவும் சந்தோஷமாய் அக்குழந்தையை வாங்கி மார்போ
டணைத்து முத்தமிட்டு குழந்தையின் அழகைப்பார்த்துக்
கொண்டிருந்தாள். அப்போது தெய்வானுகூலத்தினல்
இரண்டு ஸ்தனங்களிலும் பால்சுரந்து ஒழுக ஆரம்பித்தது.
அப்போது அவள் மிகவும்சந்தோஷப்பட்டு குழந்தைக்குப்
பால்கொடுத்து நகைகளால் குழந்தையை அலங்கரித்து
வேடிக்கைபார்த்தாள். வர்த்தகன் அதைப்பார்த்து மிக
வும்சந்தோஷித்து எல்லோருக்கும் சர்க்கரைவழங்க ஆரம்
பித்தான். சர்க்கரை வாங்கினவர்களெல்லோரும் இது
என்னவென்று கேட்க ஆரம்பித்தார்கள். கமால் வர்த்த
கன் வீட்டில் சிசுரூபம் தரித்து லீலை செய்கின்றான் என்று
சொன்னர்கள். அந்தஆச்சரியத்தைச் சனங்களெல்லோரும்
கேட்டு குழந்தையைப் பார்ப்பதற்காக கூட்டம்கூட்டமாய்
வந்து குழந்தையின் அழகைப்பார்த்து மிகவும் சந்தோ
ஷித்துச்சென்றார்கள். இதுவிஷயம் பட்டணமெங்கும்
பிரசித்தியாய்விட்டது. அப்போது அப்பட்டணத்திலுள்ள
அநேக தனவான்களுக்கும் புத்திரசந்தானமில்லாததனல்
அவர்களெல்லோரும் அந்த வர்த்தகன்வீட்டிற்குச்சென்று
சிசுரூபமாயிருக்கும் கமாலைப்பார்த்து எங்களுக்கும்புத்திர

சந்தானமில்லை என்று மிகவும் வருந்தி அச்சிசுவைக் கேட்
டுக்கொண்டார்கள். அப்போது கமால் மிகவும் தயை
யுடையவராகி, அவர்களின் இஷ்டானுசாரமாய் ஏககாலத்
தில் அநேக சிசுரூபம்தரித்து ஒவ்வொரு வீட்டிலும் விளை
யாட ஆரம்பித்தார். இவ்விதமாய் சிலகாலம் அங்கிருந்து,
பிற்கு காசிக்குச்செல்ல நினைந்து எல்லோரிடத்திலும்
செலவுபெற்று போகஆரம்பித்தார்.

அப்போது முதல் வர்த்தகனுடைய வியாதி நீங்கின
தற்காக கமாலுக்கு காணிக்கையாய் கொடுக்கவேண்டு
மென்று வைத்திருந்த பச்சையை கமாலுக்குக் கொடுக்க
நிச்சயித்து ஆஹா! இவரது மகிமையை என்னவென்று
சொல்லலாம்? பூர்வம் நாரதரும் மாந்தாதாவினுடைய புத்
திரசோகத்தைத் தீர்க்காமல்போனர். வசிஷ்டர் தசரத
ருடைய புத்திரசோகம் நிவாரணைசெய்ய சக்தியில்லாமல்
கடைசியில் ருஷ்ய சுருங்கரை வரவழைத்து புத்திர காமேஷ்
டியாகம் செய்வித்தார். அப்படிப்பட்ட துர்லபமான புத்
திரபாக்கியம் நினைத்தவர்களுக்கெல்லாம் நிமிஷமாத்திரத்
தில் தான் அநேக சிசுரூபமெடுத்து அநேகர்களை சந்தோ
ஷிக்கும்படிச்செய்வித்த மஹானுபாவனை ஒருநிமிஷம் விட்
டுப் பிரிந்திருப்பேனுகில் என்பிராணன் பொந்தியில் நிற்
காது. இந்த மஹானுபாவனை ஆசிரயித்து இவரது அனுக்
கிரகம்பெற்றல் பொந்தியுடன் கைலாசம்போவது ஒரு
பெரியதானகாரியமல்ல. ஸ்திரீயாய்ப் பிறந்தவர்களை எவ்வ
ளவோ பிரீதியாய் வளர்த்தபோதிலும் தாய்வீட்டு தனத்தை
யெல்லாம் தன் மாப்பிள்ளைவீட்டிற்குக் கொள்ளையடித்துப்
போக நினைப்பார்கள். இவ்விதமாய் தாய்வீட்டிலிருந்து
தனத்தைக்கொண்டுபோய் பாக்கியவான்களென்று பேர்
பெற்றபோதிலும் கடைசியில் இறக்கும்போது தன்னுடன்
கூட ஒருகாசும் கொண்டுபோவதில்லை. உலகத்திலுள்ள

சனங்களெல்லோரும் தனத்தை துர்விஷயத்தில் செலவு
செய்வது போல் சத்விஷயத்தில் செய்யமாட்டார்கள்.
தனத்தை, துரோகத்திற்கும் தண்டத்திற்கும் கொலைக்
கேசுக்கும் கோர்ட்டுக்கும் வக்கீலுக்கும் ஆயிரக்கணக்காய்
செலவு செய்வார்களேயொழிய தர்மகைங்கரியத்திற்குக்
கேட்டால் ஒருகாசும்கொடுக்க மனம்வாராமல் பிராணனைப்
போக்கடித்துக் கொள்ளுவார்கள். உலகத்திலுள்ள ஜனங்
கள் தம்குடும்ப சவரக்ஷணார்த்தமாய் திரவ்வியம் சம்பா
திக்க மிகவும்கஷ்டப்படுகின்றார்களே யொழிய பகவத்
பக்தர்களின் விஷயமாகவல்ல. தன்தனத்தையெல்லாம்
சாதுக்கள் விஷயமாய்த் தாரைவார்த்து தத்தம்செய்து
இஹலோகசுகத்தில் இச்சையில்லாமல் ஆத்மநிஷ்டையில்
இருப்பவர்களே புருஷோத்தமர்களென்று பெரியோர்கள்
சொல்லுவார்கள். உலகமெல்லாம்செயித்து ஏகசக்கிராதி
பதியாயிருந்தாலும் பகவத் பாகவதோத்தமர்களை ஆரா
திக்காவிட்டால் எப்பொழுதும் கடைத்தேறமாட்டார்கள்.
பகவத்பக்தர்களை ஆராதிக்காத சன்மம் வியர்த்தமானதே.
இப்படிப்பட்டவன் தருமபிரஷ்டனாய் இஹபர சுகங்களுக்
குத் தூரமாயிருந்து கடைசியில் நானாவித நீசஜன்மங்களை
எடுத்து கடைத்தேறாமல் அதோகதிஅடைவான்'' என்று
பலவிதங்களாய் ஆலோசித்து, தன்பாரியாளைக் கூப்பிட்டு,
"நான்கொடுக்கும் தனத்துடன் குழந்தையையெடுத்துக்
கொண்டு உன்தாய்வீடுசேர்ந்து சுகமாய் ஜீவித்துக்கொண்
டிரு; நான் கமாலுடன்சென்று வருகின்றேன்'' என்று
சொல்லி அவளைச் சமாதானப்படுத்தி, மிகுதியாகிய திரவ்
வியங்களை எல்லாம் தானம்செய்து ஒரு பச்சையை மாத்தி
ரம் எடுத்துக்கொண்டு கமால் சந்நிதானத்திற்குச்சென்று
சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று
"நாயனே! என்னைவிட்டு நீ எப்படிப்போகலாம்'' என்று

மிகவும் தீனசுரத்துடன்சொல்லி தைரியம்போதாமல்
ஓவென்று கூச்சலிட்டு அழ ஆரம்பித்தான்.

அப்பொழுது கமால் வர்த்தகனைச்சமாதானப்படுத்தி,
'ஐயா! ஏன் இப்படி அழுகின்றாய்? உன் ஆசைக்குக் குமார
னாய் இருக்கப்பட்ட நான் உன்னிடத்திலேயேஇருக்க,
உன்னை விட்டுவிட்டுப் போகின்றேனென்று எண்ணுவது
சரியானதல்ல. நான் உன்னை விட்டு இருக்கமாட்டே
னென்று சொல்வாயாகில் என் அம்சத்தில்பிறந்த குழந்தை
யைக் காப்பாற்றப்பட்டவர்கள் யார்? ஆதலால், நீ இங்
கிருந்து என் அம்சமாய் வந்திருக்கும் குழந்தையைக் காப்
பாற்றிக்கொண்டு சுகமாயிரு. விருதாவாய் மனைவியாகூலம்
வைத்துக்கொள்ளுவதனால் யாதொரு பிரயோசனமுமில்லை'
என்று அநேகவிதங்களாய்ப்போதித்தபோதிலும் வர்த்த
கன் அவைகளை யெல்லாம்கேட்காமல் "நீ வந்தாலே
யொழிய நான் போகமாட்டேன்'' என்று ஒரே பிடிவாத
மாய் அழுதுகொண்டு நின்றான். அப்போது கமால் புந்
நகையுடன்சிரித்து வர்த்தகனைப்பார்த்து, 'ஐயா! என்
னிடத்தில் உனக்கு எவ்வளவு ஆசையிருக்கின்றதோ அவ்
வளவுஆசை என் தந்தையாகிய கபீருக்கும் இருக்குமல்
லவா? ஆதலால், நான் சீக்கிரம் அவ்விடம்சென்று அவரை
தரிசித்துக்கொண்டு மறுபடியும் உன்னிடம்வருகின்றேன்.
இப்போது நான் சொல்லியதைநம்பி என்னைச் சந்தோஷ
மாய் அனுப்பவேண்டும்'' என்றுசொல்லி ஒருவிதமாய்ச்
சமாதானப் படுத்தினார். அப்போது வர்த்தகன் கமால்
வார்த்தையை நம்பி, "நாயனே! தயைசெய்து இந்தக்காணிக்
கையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்'' என்றுசொல்லி
மேற்படி பச்சையைக் கமாலுக்குச்சமர்பிக்கச்சென்றான்.
கமால் அதைப்பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு "ஐயா!
எல்லாவற்றையும் ஒழித்து எதிலும் ஆசையில்லாமல் திரா

சையாயிருக்கும் 'எனக்கு இந்தப் பச்சைஎன்? இதில் இச்சை வைத்து இதைப்பெற்றுக்கொள்வேனாகில் தப்பாமல் நரகம் அனுபவிக்கவேண்டியதாய்நேரிடும். நீ உன் ஆஸ்திகளையெல்லாம் தர்மகைங்கரிய விஷயமாய்ச் செலவழித்துவிட்டு இப்போது ஏழையாய்விட்டாய். ஆதலால், இதை ஆதாரமாய்வைத்துக்கொண்டு ஜீவனம்செய்துவா. இதற்குள் நான் மறுபடியும் இவ்விடம்வருகின்றேன்'' என்றுசொல்லினர். அப்போதுவர்த்தகன் அந்தப் பச்சையை எவ்விதத்திலாகிலும் கமாலுக்குக்கொடுத்துவிடவேண்டுமென்று நிச்சயித்து கமால்நிஷ்டையில்இருக்கும்போது அவருக்குத்தெரியாமல் அவர்வஸ்திரத்தின் முன்றானையில் பச்சையை மெதுவாய் முடிபோட்டு விட்டான். பிறகு வர்த்தகன் கமாலிடம் செலவுபெற்றுக்கொண்டு தன் மாமனார் வீடுசேர்ந்து கமால் கிருபையால் உண்டாகிய குழந்தையை அலங்கரித்து வைத்திருந்த நகையில் சிலவற்றைவிற்பனைச்செய்து அதை முதலாய்வைத்து மறுபடியும் வர்த்தகம்செய்தான். பகவதனுக்கிரகத்தினால் சிலது நாளைக்குள் முன்னைவிட அதிக ஐஸ்வரியம்சேர்ந்துவிட்டது. அப்போது வர்த்தகன் மிகவும்சந்தோஷப்பட்டு மறுபடியும் முன்னைவிட அதிகமாய் வீடுகளைக்கட்டிக்கொண்டு மிகவும் சுகமாய்வாழ்ந்து கமால் வரவை எதிர்பார்த்திருந்தான்.

கமால் வர்த்தகனிடமிருந்து சென்றபிறகு தன்னை தரிசிக்கவந்தவர்களின் இஷ்டங்களையெல்லாம் பூர்த்திசெய்வித்து சத்புருஷர்களைச்சேவித்து புண்ணியஸ்தலங்களும் புண்ணியதீர்த்தங்களும் சேவித்துக்கொண்டு சிலமாதங்களுக்குள் தாய்தந்தையர்களிடம் போய்ச்சேர்ந்தார். இவர் சதாகாலமும் பிரம்மநிஷ்டையிலேயே இருந்தபடியால் வர்த்தகன் கமால்வேஷ்டியில் முடிந்திருந்த பச்சையை

ஒருநாளும் கவனித்துப்பார்த்ததில்லை. கமால் வீடுசேர்ந்தவுடன் தாய்தந்தையர்களுக்கு மிகவும்பக்தியுடன் வந்தனம் செய்து தான் செய்துவந்த தீர்த்தயாத்திரைகளையெல்லாம் சவிஸ்தரமாய்ச்சொல்லினர்.

அப்போது கபீர் தன் குமாரன்சொல்லும் வார்த்தைகளுக்கெல்லாம் மிகவும்சந்தோஷப்பட்டு குமாரனை தன் தொடையின்மீது உட்காரவைத்து உடலையெல்லாம் தடவிக்கொண்டுவரும்போது கமால்வேஷ்டியில் முடி அகப்பட்டது. அப்போது அம்முடியைப்பார்த்து இது என்னவென்று முடியை அவிழ்த்து அதிலிருக்கும்பச்சையைப் பார்த்து மனம்வெறுத்து உடலெல்லாம்நடுங்கி கண்களில் ஜலம் தாரைதாரையாய்ப்பெருகி விசேஷமாய் அழ ஆரம்பித்தார். அப்போது கமால் வார்த்தைகளையெல்லாம் கேட்டுக்கொண்டு கபீர் பக்கமாய் உட்கார்ந்துகொண்டிருக்கும் சுந்தராதேவி தன்புருஷன் எதனால்அழுவது என்று கேட்டுத் தெரிந்துகொள்ளாமலே புருஷன் அழுவதைப்பார்த்து தானும் அழ ஆரம்பித்தாள். தாய்தந்தையர்கள் இருவரும் அழுவதை கமால் பார்த்து தானும் அழ ஆரம்பித்தார். பிறகு கபடநாடக சூத்ரதாரியாகிய ஸ்ரீராமமூர்த்தி சீதாலக்ஷ்மண பரதசத்ருக்ந அநுமான் சமேதராய் கபீர்வீட்டிற்கு எழுந்தருளி அவர்களின் சமீபமாய் உட்கார்ந்து பெருமூச்சுவிட்டு அவர்களைவிட இவர்கள் விசேஷமாய் அழ ஆரம்பித்தார்கள். இவர்களெல்லோரும் கூடி அழும்சந்தடி ஊரெங்கும்பரவி கடைசியில் இராமானந்தருக்குத்தெரிந்தது. அப்போது இராமானந்தர் மிகவும் துரிதப்பட்டு கபீர்வீட்டிற்கு ஓடிச்சென்று அழுங்கூச்சலைக்கேட்டு "கபீர்! கபீர்! சீக்கிரமாய்க் கதவைத்திற'' வென்றுசொல்லச்சொல்ல அவைகளைக்கேளாமல் அழுதுகொண்டேயிருந்தார்கள். அப்போது இராமானந்தர் மறு

படியும் கதவை தப்தபவென்று கைகளால் தட்டி, "கபீர்! கதவைத்திற" வென்று மிகவும் உரத்தசப்தத்துடன் கூவினார். அப்போது கபீர் இராமானந்தர் கண்டத்தொனியைக்கண்டுபிடித்து தன் குரு வந்திருக்கின்றாரென்று தெரிந்துகொண்டு கண்களைத்திறந்து பார்த்தவுடன் தன் சுற்றிலும் உட்கார்ந்து மாய அழுகையை அழுதுகொண்டிருக்கும் பகவானையும் அவரது பரிவாரங்களையும் மிகவும் பக்தியுடன் நமஸ்கரித்து சீக்கிரமாய் ஓடிக்கதவைத்திறந்து குருவிற்கு நமஸ்காரஞ்செய்து மிகவும் பக்தியுடன் உள்ளே அழைத்துவந்து ஓர் ஆசனத்தின்மீது உட்காரும்படிச் செய்தார். அப்போது இராமானந்தர் சீதாலக்ஷ்மண பரத சத்ருக்க அநுமான் சமேதராய் உட்கார்ந்திருக்கும் ஸ்ரீராமமூர்த்தியை நேத்திரோச்சவமாய்க்கண்டு சாஷ்டாங்கமாய்விழுந்து நமஸ்கரித்து; "தேவா! இந்த விசித்திரமென்ன? நீங்களெல்லோருங்கூடி இவ்விதமாய் அழுவதற்குக் காரணமென்ன? வாக்கிற்கும் மனதிற்குமெட்டாத உமது மகிமையை அறிய யாவரால்தான்முடியும்? நீர் பரமபுருஷன்; பராத்பரன்; பரந்தாமன்; பரமேசுவரன்; மாயாதீதன்; உமது மாயை உமக்குத்தெரியுமேயொழிய, இதரர்களுக்குத் தெரியாது" என்று பலவிதங்களாய்ஸ்துதி செய்து பரமானந்தமடைந்திருந்தார். அப்போது ஸ்ரீராமமூர்த்தி இராமானந்தரைப்பார்த்து "ஐயா! நீர் நல்ல சமயத்தில்வந்துவிட்டீர்; இதோ என் கழுத்தில் இருக்கும் ஆரத்திலுள்ள பதக்கத்திற்கு ஓர் நல்லபச்சைவேண்டும். நீ போகப்பட்டஇடங்களில் எங்கேயாகிலும் அகப்பட்டால்கொண்டுவரும்படிக் கமாலிடம்சொல்லியனுப்பினேன். நான் சொல்லியதைமறவாமல் எனக்குஒருபச்சையை கமால் சம்பாதித்து வந்தார். அதைக் கபீர் பார்த்து சகிக்கமாட்டாமல் மிகவும் விசேஷமாய் அழுதுகொண்டிருந்தார். அவர்

அழுவதை பார்த்து சுந்தராதேவியும் அழுதாள்; தாய் தந்தையர்கள் இருவரும் அழுவதைக் கமால்பார்த்து அவரும் அழ ஆரம்பித்தார். இவர்களெல்லோரும்அழுவதை நாங்களும் பார்ப்பதால் எங்களுக்கும் துக்கமுண்டாய் நாங்களும் அழுகின்றோம்" என்று சொல்லினர்.

அப்போது கபீர் பகவான் வார்த்தையைக்கேட்டு பக்கென்றுசிரித்து இராமானந்தரைப்பார்த்து "சுவாமீ! பகவான் லீலைகளுக்கென்ன, அடியேன் வார்த்தையை சற்று கவனித்துக் கேட்கவேண்டு"மென்றுசொல்லி கமாலைக் காட்டி "இவன் எவ்வளவு விவேகமுடையவன் பாருங்கள். கஸ்தூரியைக்கொடுத்து துர்க்கந்தவாசனையை வாங்கியதுபோலும், வேதாந்தசாஸ்திரத்தைக்கொடுத்து கொக்கோகசாஸ்திரத்தை வாங்கியதுபோலும், கங்காஜலத்தைக்கொடுத்து கள்ளு வாங்கியதுபோலும், சந்தனக்கட்டையைக்கொடுத்து எட்டிக்கட்டையை வாங்கியதுபோலும், குதிரையைக்கொடுத்துக் கழுதையை வாங்கியதுபோலும், அமிருதத்தைக்கொடுத்து விஷத்தை வாங்கியதுபோலும் மிகவும் பிரசித்திபெற்ற ஸ்ரீராமமந்திரத்தை விக்கிரயம் செய்து உபயோகமற்ற இப்பச்சையைக்கொண்டுவந்தான். தான் கெட்டதுமல்லாமல் எங்களையுங்கெடுத்தான். அநியாயமாய் இவனால் நாங்கள் நரகத்திற்குப் பாத்திரர்களானோம். தீபம் எவ்வளவு பிரகாசமாய் எரிந்தபோதிலும் சூரியனுக்குச் சமானமாகமாட்டாது; நட்சத்திரங்கள் எவ்வளவு பிரகாசித்தபோதிலும் சந்திரனுக்குச் சமானமாகமாட்டாது; பசுக்கள் எவ்வளவு பால்கரந்தபோதிலும் காமதேனுவிற்குச் சமானமாகமாட்டாது; பருந்துகள் எவ்வளவு உயரப்பரந்தாலும் கருடனாகமாட்டாது; விருக்ஷங்கள் எப்படிப்பட்ட பழங்களைக்கொடுத்தாலும் கல்பவிருக்ஷத்திற்குச் சமானமாகமாட்டாது. அதுபோல் இவனை

எவ்வளவு தீர்த்தயாத்திரை செய்துவந்தபோதிலும் நிஷ்காமிக்குச் சமானமானவனல்ல. இப்படிப்பட்ட துன்மார்க்கபுத்திரன் இருந்தாலென்ன? போனாலென்ன? இனி இவன் முகத்தைப்பார்க்கலாகாது. இனி எங்களுடனிருக்க அருகனல்ல; ஆதலால், இவனை இங்குவைக்கலாகாது" என்று சொல்லி சுந்தராதேவியைப்பார்த்து "இவனை இப்போதே இங்கிருந்து துரத்திவிடு" என்று உத்தரவுசெய்தார்.

அவ்வார்த்தைகளைக் கமால் கேட்டவுடன் மிகவும் ஆச்சரியப்பட்டு தந்தையைப்பார்த்து "ஐயா! நான் உமது குமாரனாயிருந்தும் இப்படிப்பட்ட அல்பமான கல்லுக்கு ஆசைப்படுவேனென்று எண்ணிக்கொண்டீர்களா என்ன; கனவிலுங்கூட அப்படி எண்ணவேண்டாம். இவ்வளவு அல்பமாகிய வஸ்துவை மோகிக்கத்தக்க அவிவேகனல்ல; [illegible] எவ்வளவு பசித்தாலும் புல்லைமேயுமோ? சிம்மம் பசியினால் எவ்வளவு இளைத்தாலும் நரியைத்தின்னுமோ? விவேகி [illegible] கஷ்டப்பட்டாலும் லோபியை யாசகம்கேட்பானா? [illegible]மாத்மாக்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் வந்தா[illegible]க்குப் பின்வாங்குவார்களா? ஞானி எவ்வள[illegible]சூழ்ந்துகொண்டாலும் முதுகுகாட்டிடுவாரோ? [illegible]தைக்கு எவ்வளவுகாமம் அதிகரித்தா[illegible]டம் சேருவாளா? யோகிக்கு எவ்வளவு [illegible]னாலும் ஸ்திரீபோகத்தை இச்சிப்பானா? அது [illegible]க்கியமுடைய எனக்கு உதவாத இந்தக் [illegible]ன் மோகம் உண்டாகின்றது? இப்பச்சை எப்படி [illegible]தென்றால், ஓர் வர்த்தகன் என்மீது அதிக பிரீதி[illegible] இப்பச்சையைக்கொண்டுவந்து கொடுத்தான்; [illegible] வேண்டாமென்று [illegible] அவனை நற்போதனைகளை[illegible]திருந்தேன். [illegible] நிஷ்டையில் இருக்கும்போது எனக்குத்தெரியாமலே என் அங்கவஸ்திரத்தில் முடிபோட்டுச்சென்றான்போல் தோன்றுகின்றது. இந்தப்பாழுங் கல்லினாலல்லவா இத்தனைபேர்களுக்கும் மனவருத்தமுண்டாயிற்று? ஆதலால், இந்தப் பச்சையை இப்போதே கொண்டுபோய் அந்த வர்த்தகனிடம் கொடுத்துவிட்டு வருகின்றேன்" என்றுசொல்லி தந்தையிடமிருந்த பச்சையை வாங்கிக்கொண்டு வர்த்தகனிடம் சென்று "ஐயா! பாக்கியவானே! என்ன செய்துவிட்டாய்? இந்தப்பாழுங்கல்லை என் முன்றானையிற்கட்டி எனக்குப் பெருத்த அவமானத்தைஉண்டாக்கிவைத்தாய். இக்கல் எனக்குவேண்டாமென்று நான் எவ்வளவுதூரம் தடுத்துச் சொல்லியும் அதைக்கேளாமல் எனக்குத்தெரியாதபடி என் வஸ்திரத்தில்முடிபோட்டுவிட்டாய். நடந்துபோனவிஷயத்தைக்குறித்து இனிப்பேசுவதனால் பலனென்ன? இதோ உன்பச்சையை நீயேபெற்றுக்கொள் என்றுசொல்லி, ப[illegible]ச்சையை வர்த்தகனிடம்கொடுத்துவிட்டு ஓர் விநாடிக்குள் தன் தந்தையிடம்வந்து "நாயனா! என்னை அனா[illegible]க்குக்கொண்டுவந்துவிட்ட பச்சையைக் கொண்[illegible] வர்த்தகனிடம் கொடுத்துவிட்டுவந்தேன். [illegible]பக்தி மீதிருந்தகோபம் நீங்கிற்றல்லவா? [illegible]யுடன்சொல்லினர்.

கபீர் அதைக்கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு "கமால்! நீ இங்கிருந்து இப்போதேயல்லவா வெளியில் [illegible] இதற்குள் அந்தப்பச்சையை எவ்விதமாய்க்[illegible] வந்தாய்? வழியில் எங்கேயாகிலும் போட்[illegible]னையோ?" என்றுசொல்லினர். அப்போது [illegible]ரைப்பார்த்து "[illegible] சந்தேகப்படவேண்டாம் [illegible] இஷ்டப்பட்ட பச்சை[illegible] கொடுத்துவிட்டுவ[illegible]

கள்வைராக்கியம் அதிகமாயிருக்கின்றது'' என்றுசொல்லினர். அப்போது கமால் மிகவும் பக்தியுடன் பகவானுக்கு தெண்டம்சமர்ப்பித்து இருகைகளையுங்குவித்து அஞ்சலி அஸ்தராய்நின்று "தேவா! கடைத்தேங்காயைத் திருடி வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதுபோல், வர்த்தகனிடம் பச்சையைத்திருடி தேவரீருக்குச் சமர்ப்பிப்பதனால் பிரயோஜனமென்ன! உதகாத பச்சையின்மீது உமக்கு வாஸ்தவமாய் இச்சையிருக்கின்றதா?'' என்றுகேட்டார். அப்போது கமால் வார்த்தைகளையெல்லாம் கபீர் கேட்டு குமாரன்மீது மிகவும் சந்தோஷமுண்டாய் "பகவானைப் பார்த்து பரமேசுவரா! அந்தப்பச்சையின்மீது தங்களுக்கு இச்சையிருப்பது வாஸ்தவமென்று தெரிவித்தால் நான் சென்று அந்தவர்த்தகனிடம் ஊழியம்செய்து அதைப் பெற்றுக்கொண்டுவருகின்றேன்; உண்மையைச்சொல்ல வேண்டும்'' என்றுசொல்லினர் அதற்குப் பகவான் புன் சிரிப்பாய்ச்சிரித்து "உங்கள்மனதைச் சோதிப்பதற்காக இவ்வாறுகேட்டேனேயொழிய மற்றப்படிக்கு வேறல்ல. உங்கள் பிரீதியொன்றே எனக்கு விசேஷமான பச்சையாயிருக்கின்றது'' என்றுசொல்லி தன்பரிவாரங்களுடன் அந்தர்த்தியானமானார்.

அப்போது கபீர் மிகவும் சந்தோஷமடைந்து குமாரனை ஆலிங்கனம்செய்து "நாயனே! குமாரனென்றால் நீயே குமாரன்; உன்னைப்போன்ற சுபுத்திரனைப்பெற நாங்கள் என்ன தவம் செய்துகொண்டோமோ தெரியவில்லை; உன்னால் எங்கள்வம்சமெல்லாம் பவித்திரமாயிற்று; நீ மிகவும் பரமபாகவதன்'' என்று சிலநேரம் வருணித்து "நீ தீர்க்காயுளுடன் இருக்கக்கடவாய்'' என்று ஆசிர்வதித்தார். அப்போது இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இராமானந்தர் மிகவும்சந்தோஷித்து இவர்களின் பக்தி வைராக்

யங்களுக்கு மிகவும்மெச்சி அவர்களிடம்செலவுபெற்று தம் மடம்போய்ச்சேர்ந்தார். பிறகு, கமால் கபீர் சுந்தரா முதலானவர்கள் தம்மிருப்பிடத்திலேயே இருந்துகொண்டு வரப்பட்ட சாதுஜனங்களை உபசரித்துக்கொண்டு சதா காலமும் பகவத்தியானம் செய்துவந்தார்கள்.

கமால் தன்சிரசை சாது சந்தர்ப்பணைக்காகக் கொடுத்தல்.

இவ்விதமாய் சிலமாதங்கள்சென்றபிறகு ஓர்நாள் விஷ்ணுவானவர் கமாலினுடைய மனதைச் சோதிப்பதற்காகத் தான் சாதுசங்கத்துடன்புறப்பட்டு இரவு இரண்டு ஜாமத்திற்குக் கபீர் வீடுவந்துசேர்ந்து, தாம் தூரதேச யாத்திரைச் செய்துவரும் சாதுக்களென்றும், தங்களுக்குப் பகலெல்லாம் எங்கும் போஜனம்கிடைக்கவில்லையென்றும், நீங்கள் சாதுசேவை செய்யப்பட்டவர்களென்று கேள்விப்பட்டு உம்மிடம்வந்தோமென்று கபீரிடம்சொல்லி 'ஜயசீதாராம், ஜயசீதாராம்' என்று எல்லோரும் ஒரேசப்தமாய்ச் சொல்லினர்கள். அப்போது கபீர் அவர்களுக்கு வந்தனம்செய்து உள்ளே அழைத்துச்சென்று அவர்களை எல்லாம் உட்காரும்படிச் செய்து "ஓ பாகவதோத்தமர்களே! தாங்களெல்லோரும் அடியேன்மீது அனுக்கிரகம் வைத்து இங்குவந்ததனால் எங்கள்ஜன்மம் பவித்திரமாயிற்று. நாங்கள் பூர்வஜன்மத்தில் என்னபுண்ணியம் செய்துகொண்டோமோ தெரியவில்லை. ஒரே காலத்தில் இவ்வளவு சாதுசேவை எங்களுக்கு உண்டாயிற்று'' என்று பலவிதங்களாய் அவர்களை வர்ணித்து வீட்டிற்குட்சென்று தன் பாரியாளை அழைத்து "தீர்த்தயாத்திரைக்காக புறப்

பட்டுவந்த அனேகபாகவதர்கள் இப்போது நமது வீட்
டிற்கு வந்திருக்கின்றார்கள். இவர்களெல்லோரும் இன்று
பகலெல்லாம் போஜனம்செய்யவில்லை என்று சொல்லுகின்
றார்கள்; பசியுடன் நடந்துவந்தபடியால் மிகவுங்களைத்
திருக்கின்றார்கள். பாகவதர்களின் பசியைத் தணிப்பதை
விட வேறுதர்மம் ஒன்றுமில்லை. இவர்களைப் பசியுடன்
வைத்தால் பாபமுண்டாகும். இவர்களின்பசியைத்தணிப்
பதே கிருகஸ்த்தர்களின் தர்மம். இனி, நாம் எத்தனை
ஜன்மங்களெடுத்தபோதிலும் இப்படிப்பட்டசேவை நமக்
குக் கிடைக்கமாட்டா? ஹா! நமது பாக்கியத்திற்குச்
சமானமானது வேறோர்பாக்கியமும் இல்லை. இப்போது
இவர்களின் பசியைத்தணிப்பதற்கு ஏதாகிலும் ஓர் உபா
யம்தேடவேண்டும். இல்லாவிட்டால் இத்தனை சாதுக்
களும் பசியுடன் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருப்பார்கள்''
என்றுசொல்லினர். அப்போது சுந்தராதேவி சற்றுநேரம்
ஆலோசித்து பிறகு நாயகனை நமஸ்கரித்து "இப்போது
நமதுவீட்டில் எந்தவஸ்துக்களும் எள்ளளவுங்கூடயில்லை.
பதார்த்தங்களைக் கொண்டுவரலாமென்றாலும் கையில் ஓர்
காசுமில்லை. என்னசெய்யலாமென்பதும் புத்திக்குத்
தோன்றவில்லை. நாம் இப்போதிருக்கும் ஸ்திதியைப்பார்த்
துப் பரீக்ஷிப்பதற்காக பகவானே இந்தரூபமாய்வந்திருக்
கின்றார்போல் தோன்றுகின்றது; இதற்கென்னசெய்ய
லாம்'' என்று அவ்வம்மையார்சொல்லினள்

அவ்வார்த்தைகளைக் கபீர்கேட்டவுடன் சிலநேரம்
சித்திரப்பதுமையைப்போல் நின்றிருந்து மறுபடியும் அறி
வுண்டாய் "பரமேசுவரா! இதுவரையில் என்மேல் பரி
பூரண அனுக்கிரகம்வைத்து எவ்விதக்கஷ்டங்களையும் வைக்
காமல் காப்பாற்றிவந்த பரமபுருஷனை நீர், இன்று என்
னை மஹாபாபத்திற்கு ஆளாகச்செய்வதற்குக் காரண

மென்ன? உன்னைவிட இனி என்னை ரக்ஷிப்பவர்கள் யாரி
ருக்கின்றார்கள்? என்னைரக்ஷித்தாலும் அல்லது சிக்ஷித்தா
லும் நீரே எனக்குக்கர்த்தன். இந்தசமயத்தில் இவர்
களை நீர்காப்பாற்றவிட்டால், மற்றவர்யார் காப்பாற்றப்
போகின்றார்கள்? இவர்கள் பசியுடன் இருப்பதை நான்
எவ்விதமாய்ப் பார்த்துக்கொண்டிருப்பேன்? இவர்களைத்
தாகசாந்திசெய்யச்சொல்லவும் சக்தியில்லாதவனாய் இருக்
கின்றேன். பிபீலிகாதி பிரமபரியந்தம் சகல ஜீவராசிகளுக்
கும் லோபம் வாராதபடி காப்பாற்றப்பட்ட மஹாபுருஷ
னை நீர் இன்று இப்பாகவதர்களனைவரையும் பசியுடன்
இருக்கச்செய்வதற்குக் காரணமென்ன? நான் கிருகத்தாச்
சிரம தருமத்திலிருந்து என் கிருகத்திற்குவந்த அதிதிகளை
ஆதரிக்காத என்ஜன்மம் என்னஜன்மம்!'' என்றுசொல்லி
பலவிதங்களாய்த் துக்கித்தனர்.

அப்போது கமால் தந்தையைப்பார்த்து, "நாயனா!
ஏன் இவ்வாறு விசனப்படுகின்றீர்கள்? ஆபத்துக்குதவாத
புத்திர களத்திர மித்திரர்கள் இருந்தும் பலனென்ன? இப்
பொழுது என்னைக்கொண்டுபோய் யாருக்காகிலும் ஓர்வர்த்
தகனுக்கு அடிமைப்படுத்தி அவர்களால் கொடுக்கும்
பதார்த்தங்களைக்கொண்டுவந்து சாதுசந்தர்ப்பணைச் செய்
வித்து அனுப்புங்கள். யாதொரு பிரயத்தனமும் செய்
யாமல் சும்மாய்த் துக்கப்பட்டுக்கொண்டிருந்தால் பிரயோ
சனமென்ன? சீக்கிரமாய்ப்புறப்படுங்கள்; யாரையாகிலும்
ஓர் வர்த்தகனைப்பார்க்கலாம். ஆலசியஞ் செய்துகொண்டி
ருந்தால், சாதுக்களுக்கு ஆயாசம் அதிகமாய் உண்டாகு
மேயன்றி வேறொன்றும் நடவாது. எவ்விதத்திலாகிலும்
இப்போது சாதுக்களின் பசியைத் தணிக்கவேண்டும்''
என்று சொல்லினர். சுந்தராதேவிதன்புருஷனைப்பார்த்து
"சுவாமி எனக்கோர் யோசனை தோன்றுகின்றது, அதைச்

சொல்லும்படிச்சொன்னால் சொல்லுகின்றேன்: அதைவிட வேறுஎந்தஉபாயங்களினாலும் சாதுக்களின் பசியைத் தணிக்கமுடியாது" என்றுசொல்லினள். அதற்குக் கபீர் "அது என்ன யோசனை? சொல் பார்ப்போம்" என்று கேட்டனர். சுந்தராதேவி சொல்லுகின்றாள்:—ஒரு பெரிய வர்த்தகன்வீட்டிற் கன்னம்வைத்து, நமக்குவேண்டிய சாமான்களைக்கொண்டு வந்து, சாதுக்களின் பசியைத் தணிக்கச்செய்வது மிகவும்நன்மையாயிருக்கின்றது. இது விஷயம் தங்களுக்கு எப்படியிருக்கின்றதோ அதை யோசித்துப்பாருங்கள் என்றுசொல்லினள். கபீர் அதைக் கேட்டு "தற்சமயம் நீ சொல்லியவிஷயம் ஒப்புக்கொள்ளத் தக்கதாயிருந்தாலும், இதரர்களின் சொத்தைத் திருடுவது பெருத்தபாபமென்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். நமக்கு பகவான் கொடுத்த அறிவிருக்க திருடிக் கொண்டுவந்து சாதுக்களைச் சம்ரக்ஷணை செய்யவேண்டியதேன்? இவ்வாறுசெய்வது யுக்தமானதாயில்லை. பசுவைக் கொன்று அதன் சர்மத்தினால் பாதரக்ஷைதைத்து பிராமணர்களுக்குத் தானம்கொடுத்ததுபோல் இருக்கின்றது. இப்படிப்பட்ட பாபகாரியத்தில் பிரவேசிக்க மிகவும் பயமாயிருக்கின்றது" என்றுசொல்லினர்.

கமால் தந்தையைப்பார்த்து "நாயனே! நீர் சொல்லிய விஷயம் உண்மையேயாயினும் அதில் கிரகிக்கத்தக்க விஷயம் ஒன்றிருக்கின்றது. ஜீவஹிம்சை பெருத்தபாபமாதலால் அதைச்செய்யலாகாதுஎன்று தருமசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. தேசத்தின் க்ஷேமத்திற்காக துஷ்டமிருகங்களைக் கொல்லப்பட்ட அரசர்களுக்குப் பாபம் எப்படி இல்லையோ, அதுபோல் சாது சந்தர்ப்பணைக்காக இதரர்களின் தனத்தைத்திருடி அதை பாபகாரியத்தில் செலவுசெய்தால்மாத்திரம் பாபம் வந்து சித்திக்

குமேயல்லாமல், அதைச் சாதுக்கள் சந்தர்ப்பணையில் உப
யோகித்தால் பாபம் எள்ளளவும் சித்திக்கமாட்டாது. பூர்
வம் கண்டாகர்ணன் அனேக பிராமணர்களைக்கொன்று
பகவதர்ப்பணம்செய்து பரமபதம்அடையவில்லையா? அது
போல் நாம் இப்போது பகவதாராதனைக்காக திருட்டுத்
தனம்செய்தபோதிலும் தோஷமில்லை. இதற்காக நாம்
பின்வாங்கலாகாது: சீக்கிரம் போய்வரலாம்; வாருங்கள்.
எவ்விதத்திலாகிலும் இப்போது சாதுசந்தர்ப்பணைச்
செய்யவேண்டும்" என்றுசொல்லி துரிதப்படுத்தினர்.

கபீர் சற்றுநேரம் ஆலோசித்துத் தற்காலம் இதை
விட வேறுயோசனை அவருக்குத் தோன்றாமையால், அவ்
வார்த்தைக்கிணங்கி, குமாரனும், தந்தையும் சேர்ந்து கன்
னம் வைப்பதற்காக வேண்டிய ஆயுதங்களையும் மிகவும்
கூர்மையுடைய வெட்டுக்கத்தியையும் எடுத்துக்கொண்டு
புறப்பட்டு, கடைவீதிசென்று ஒரு பெரிய வர்த்தகன் வீட்
டுப்பின்புறச்சுவற்றில் இராமநாமஸ்மரணைச் செய்துக்
கொண்டே கன்னம்வைத்துத் துளைத்து ஆள் நுழையும்
படியான சந்து செய்தார்கள். மாளிகைக்குள் படுத்திருந்த
செட்டியார் காடாந்தமான நித்திரைச்செய்துகொண்
டிருந்தபடியால், கன்னம்வைத்தது அவனுக்குத்தெரிய
வில்லை. பிறகு, கமால் பகவானை இருதயத்தில் நினைத்து,
தந்தையின் பாதங்களை நமஸ்கரித்து, சைதுவாரத்திற்குள்
புகுந்து, உள்ளே சென்று, ஒருபெரியவிளக்கேற்றி ஓரிடத்
தில்வைத்து, அங்குள்ள ஓர் அறைக்குள் நுழைந்துபார்த்
தார். அதில் திவ்வியமான ஆபரணங்களும், திவ்வியமான
வஸ்திரங்களும், அநேக பொன்வெள்ளி நாணயங்களின்
ராசிகளும், ரத்தினங்களும் விசேஷமாய்க் காணப்பட்ட
போதிலும் அவைகளின்மீது மனம்சிறிதேனும்செல்ல
வில்லை, பிறகு, அவ்விடமிருந்து மற்றோர் அறையில்சென்று

பார்த்தபோது, அங்கு கோதுமைமா கடலைமா பருப்பு நெய் நல்லெண்ணெ உப்பு முதலாகிய பதார்த்தங்களெல்லாம் மிகவும்விசேஷமாய் இருப்பதைப்பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டு பகவானை நமஸ்கரித்து மிகவும்சீக்கிரமாய் சாதுக்களுக்குவேண்டிய பதார்த்தங்களைக் கூடைகளில் நிரப்பி வெளியில் நின்றிருக்கும் தன் தந்தையாகிய கபீரிடம் கொடுக்கஆரம்பித்தார். கபீர் அவைகளை எல்லாம் மிகவும் சீக்கிரமாய்க்கொண்டுபோய் வீடுசேர்ந்தார். அன்னப்பட்சி நீரைநீக்கிப் பாலைமாத்திரம் உட்கொள்வது போல், கமால் திவ்யமாகிய வஸ்திராபரணங்களை எல்லாம் விட்டுவிட்டு, தற்காலம் நமது வீட்டிற்குவந்த அதிதிகளுக்கு மாத்திரம் வேண்டிய பதார்த்தங்களை எடுத்து அனுப்பிவிட்டு, பின்வருமாறு ஆலோசிக்கலானார்:—

இந்தவர்த்தகனை மோசம்செய்து இவன்சொத்தை திருடிக்கொண்டு இவனிடம்சொல்லாமல் போவது சரியல்ல. செய்தபாபம், சொன்னால்போகுமென்று பெரியோர்கள்சொல்லுவார்கள். நமக்கு இப்போதுண்டாகிய பெருத்த கஷ்டத்திற்காக இப்படிப்பட்ட துஷ்டகாரியத்தில் பிரவேசிக்கநேர்ந்தது. நாம் திருடினதை இவ்வர்த்தகனிடம் சொல்லிச்சென்றால், நமக்குப பாபமுண்டாக மாட்டாது. ஆகையால் அவனிடம்சென்று நடந்ததைச் சொல்வோம் என்று தீர்மானித்து, வர்த்தகன் நித்திரை செய்யும் இடத்திற்குச்சென்று அவனைத்தட்டிஎழுப்பி "நாங்கள் இரண்டுதிருடர்கள்வந்து உன்வீட்டின் பின்புறமாய்க் கன்னம்வைத்து போஜனபதார்த்தங்களை எடுத்துக் கொண்டுபோகின்றோம். இச்சங்கதி உனக்குத்தெரிவித்தேன்'? என்றுசொல்லிவிட்டு குடுகுடுவென்று ஓடிக்கன்னத்தின் துளையில்புகுந்தார்.

திருடர்கள் என்ற சொல்லைக் கேள்விப்பட்டவுடனே
திடுக்கிட்டெழுந்து ஓடி கன்னத்தில் புகுந்துசென்ற கமால்
பாதங்களைப்பிடித்து உள்ளுக்கிழுக்க ஆரம்பித்தான். அப்
போது, கமால் கபீரைப்பார்த்து "நாயனா! மோசம் வந்
தது; வர்த்தகன் என் கால்களைக் கெட்டியாய்ப்பிடித்துக்
கொண்டு உள்ளுக்கிழுக்கின்றான். அவன்பிடியோ குரங்
குப்பிடிபோல்இருக்கின்றது. அதை விடுவித்துக்கொள்
ளச் சக்தியில்லாமலிருக்கின்றேன்" என்று சொன்ன
வுடன் கபீர் குமாரனது சிரசைப்பிடித்து இழுக்க ஆரம்
பித்தார். இவர்கள் இருவரும் உள்ளுக்கும் வெளிக்குமாய்
இழுக்கும்போது கமால் உடலெல்லாம் காயம்பட்டு அதிக
பாதைக்கு ஆளானதால், கபீரைநோக்கி, "நாயனா! நீர்
வெளிக்கும், வர்த்தகன் உள்ளுக்கும் இழுத்துக்கொண்
டிருப்பதனால் என்உடலெல்லாம் சற்களில் உராய்ந்து நான்
மிகவும் பாதைபட்டுக்கொண்டிருக்கின்றேன். ஒருவேளை
வர்த்தகன் கூச்சலிட்டால் அண்டைவீட்டுஜனங்களெல்
லாம் ஓடிவந்து என்னை உள்ளுக்கிழுத்துப் பார்ப்பார்களா
யில் நமக்குத் தப்பாமல் அவமானம் வந்துநேரிடும், நமது
மானத்தைக் காப்பாற்றிக்கொள்வதே நமக்கு முக்கியமான
தர்மம். ஆதலால், ஸ்ரீராமமூர்த்திமீது பாரம்வைத்து
முன் பின் ஆலோசிக்காமல், உடனே என் சிரசை கண்
டித்து எடுத்துச்செல்; அங்ஙனம்செய்து செல்வீராகில்;
நமதுகாரியம் யாதொருதடையுமில்லாமல் நிறைவேறும்.
முன்பின் ஆலோசிப்பதற்கு இது சமயமல்ல. இனி, ஆல
சியம்செய்யவேண்டாம்" என்றுசொல்லினர். கபீர் அவ்
வார்த்தைகளைக் கேட்டவுடன் ஸ்ரீராமமூர்த்தியின்மீது
பாரம்போட்டு "உன்னை ஸ்ரீராமமூர்த்தி ரக்ஷிக்கவேண்
டும்" என்றுஆசிர்வதித்து கொஞ்சமாகிலும் விசனப்படா
மல், மிகவும்சந்தோஷமாய் தன்குமாரனது சிரசைத் தன்

வாளால்வெட்டி மிகவும் சீக்கிரமாய் அந்தத்தலையை எடுத்துக்கொண்டு தன் வீடுசேர்ந்து பாரியாளை இரகசியமாய்க் கூப்பிட்டு நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் சவிஸ்தாரமாய்ச்சொல்லி, கமால் சிரசை தன் பாரியாளிடம் கொடுத்து, "சாக்கிரதை; இந்தவிஷயத்தை யாரிடமாகிலும் சொல்லப்போகின்றாய். இது சாதுக்களுக்குத் தெரிந்துவிட்டால் காரியம் கெட்டுப்போம். நாம் இவ்வளவுநேரம் கஷ்டப்பட்டவைகளெல்லாம் விருதாவாய்விடும்; ஆதலால், மிகவும் சாக்கிரதையுடன் இரு" என்று சொல்லினர். சுந்தராதேவி நல்லதென்று சம்மதித்து தன் குமாரனுடையவும் புருஷனுடையவும் பக்திக்கு மிகவும்சந்தோஷப்பட்டு சாதுக்களின் பசியைத்தணிப்பதற்காக தன் பிராணனைக்கொடுத்த குமாரனது ஜன்மம் கடைத்தேறிவிட்டதல்லவா? என்று சந்தோஷித்து மிகவும் பிரகாசமாய்ப் பிரகாசித்துக்கொண்டு புன்சிரிப்புடன் கண்களைமூடி தூங்கப்பட்டவனைப்போலிருக்கும் தன் குமாரனது சிரசை தன்கையில்வைத்துக்கொண்டு, வெகு நேரம் பார்த்து, இரண்டுதவடைகளையும்முத்தமிட்டு, "ஹா! குமாரா! சாதுசந்தர்ப்பணை நிமித்தமாய் பிராணத்தியாகம் செய்து சாஸ்வதமான சத்கீர்த்தியைச் சம்பாதித்துக் கொண்டாயல்லவா? உனக்கு இவ்வளவுசிறுவயதில் இப்படிப்பட்ட பக்தி வைராக்கியங்கள் உண்டானதைப்பார்த்தால் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது; இப்படிப்பட்டவன் பூமியில் ஓர் நிமிஷமிருந்தாலும் போதுமே! உதவாத புத்திரர்கள் பதினாயிரம் பேர்கள் இருந்தாலும் என்ன பிரயோசனம்? நான் உன்னைப்பெற்றதனால் எனக்கும் கௌரவமுண்டாயிற்று. ஸ்ரீராமமூர்த்தி உன்னை ரக்ஷிக்கக்கடவது" என்றுஆசீர்வதித்து, அந்தச்சிரசை ஓர் மூலையில் மிகவும் பத்திரமாய்வைத்து, மனம் சஞ்சலமின்றி மிகவும்

சந்தோஷமாயிருந்து, புருஷன்கொண்டுவந்த பதார்த்தங்களை எல்லாம் மிகவும் திவ்வியமாய் ஒருநொடிக்குள் சமைத்து சாதுக்களனைவருக்கும் மிக அன்புடன் பரிமாறினாள்.

சித்தர்களே! கபீருடைய குடும்பத்தார் பக்தி ஞான வைராக்கியங்களை எவ்வளவு வர்ணித்தாலுந்தீராது. கருடனைவிட உத்தமமான பக்ஷியும், பலிச்சக்கிரவர்த்தியைவிட அதிகமாய்த் தானங்கொடுத்தவனும், கங்கையைவிட பவித்திரமான நதியும், விஷ்ணுமூர்த்தியைவிட உயர்ந்த தெய்வமும், கபீரைவிட பரமபவித்திரனை பக்தனும் மூன்றுலோகங்களிலுந் தேடித்தேடித் திரிந்தாலும் அகப்படுவது மிகவும்துர்லபம். புலிவயிற்றில் சிங்கம் பிறந்தது போல், தந்தையைவிட பதின்மடங்கு அதிகமாய்த் தர்மகுணத்தில் பிரசித்தியடைந்த கமாலுடைய பக்தி வைராக்கியங்களை மனதினால் தெரிந்துகொள்ளவேண்டுமேயொழிய, அதை வாக்கினால் சொல்வதற்குச் சாத்தியமாகமாட்டா! பதிவிரதையென்றால் சுந்தராதேவி பதிவிரதையேயொழிய மற்றவர்கள் பதிவிரதைஆகமாட்டார்கள். ஏனென்றால், கபீர் கமாலினுடைய சிரசை அறுத்துக்கொண்டுவந்து தன்கையில்கொடுத்தபோது அவ்வம்மை மஹாபதிவிரதையானபடியால் மறுவார்த்தை யாதொன்றும் சொல்லாமல், சிரசைக்கையிலேந்தி குமாரனது பக்தி வைராக்கியங்களுக்குமெச்சி மிகவும் சந்தோஷப்பட்டிருந்தாளேயொழிய, துன்மார்க்க ஸ்திரீயைப்போல் காதில் விழுந்தவுடன் பெற்ற வயிறு எரிகிறதென்று, ஓவென்று கூக்குரலிட்டழுது புருஷனை வெளியில்இழுத்து அவன் தலைக்குத் தீங்கு கொண்டுவந்து வைக்கவில்லை. புருஷன் சொல்லையே தெய்வவாக்காகக்கொண்டனள். ஆஹா! அவ்வம்மையார் நற்குணத்தை யாவரால்தான்சொல்லமுடியும்? அந்தப்

பரம புண்ணியாத்மாக்கள் செய்துகொண்ட பாக்கியமே பாக்கியம்! இப்படிப்பட்ட வைராக்கிய பாக்கியம் இல்லாவிட்டால் இவர் நினைக்கும்போதெல்லாம் விஷ்ணுமூர்த்தி ஓடி வருவாரா? இவர்களின் மகிமையை ஸ்ரீ ராமமூர்த்தி அறிவாரேயல்லாமல், மற்றவர்கள் அறிவார்களா? என்று நாபாஜிசித்தர்சொல்லினர்.

பிறகு சாதுக்களெல்லோரும் மிகவும் சந்தோஷமாய்ப் போஜனமுண்டு, தம்தம் படுக்கையின்மீது உட்கார்ந்து எல்லோரும் ஒரேவாக்காய் ஸ்ரீராமமந்திரத்தை உச்சரிக்க ஆரம்பித்தார்கள். அப்போது சுந்தராதேவி இன்றல்லவோ நமது ஜன்மம் கிருதார்த்தமாயிற்று என்று மிகவும் சந்தோஷித்து ஒருபுறமாய்உட்கார்ந்து ஸ்ரீராம மந்திரத்தை ஸ்மரணைசெய்துகொண்டு ஆனந்தசாகரத்தில் மூழ்கிச் சொக்கியிருந்தனள். கபீரும் பரமானந்தமடைந்து சகலசாதுக்களையும் நமஸ்கரித்து “ஆஹா! நாங்கள் இன்று தன்னியர்களானோம்; சம்பூர்ணானுக்கிரகத்தினால் ஸ்ரீ ராமமூர்த்தி எங்களை ஆதரித்தார். இந்நாள் மிகவும் சுபமான நாள்; இத்தனை சாதுக்களும் இன்று பசியினால் வருத்தமடையநேர்ந்தது. தயாரசனான பகவானது கடாக்ஷத்தினால் ஓர்விதமாய்த் தப்பிவிட்டது” என்றுஎண்ணி ஓர்புறமாய் உட்கார்ந்து, சாதுக்கள் உபந்நியாசஞ்செய்யும் தத்துவ ரகசியங்களையெல்லாம் மிகவும் சிரத்தையுடன்கேட்டுத் தன் சம்சயங்களெல்லாவற்றையும் நிவர்த்திசெய்துகொண்டார்.

இங்கு இப்படியிருக்க, வர்த்தகன்வீட்டில் கமால் கால்களை, வர்த்தகன் கெட்டியாய்ப்பிடித்து இழுத்தான். கபீர் கமாலினுடையசிரசை கொண்டுபோனவுடனே, கமால் கைகளில் பிடித்திருந்தப் பிடியை விட்டுவிட்டபடியால் பிரேதத்தை இழுத்தவேகத்தினால் வர்த்தகன் திடீரென்று கீழே

விழுந்து சிலநேரம் மூர்ச்சையாயிருந்து சற்றுநேரஞ்சென்ற பிறகு, மூர்ச்சைத் தெளிந்தெழுந்து வெளியேசென்று, ‘திருடன் திருடன்’ என்று கூச்சலிட்டுச் சொன்னான். அப்போது அண்டைவீட்டில் நித்திரைசெய்துகொண்டிருந்தவர்களெல்லோரும் வர்த்தகன்கூச்சலைக்கேட்டு திடுக்கிட்டு கதவைத்திறந்து வர்த்தகன்வீட்டிற்குவந்து ‘விஷயமென்ன’ என்றுகேட்டார்கள். வர்த்தகன் நாவரண்டு வாய்குளறி நடந்த விருத்தாந்தங்களை எல்லாம்சொல்லி ‘அன்னியாயமாய் மூழ்கிப்போனேன்’ என்றுசொல்லி ஓவென்று அழுதான். அப்போது அங்குவந்த வர்த்தகர்களெல்லோரும் ஆச்சரியப்பட்டு “ஐயா! சொத்துபோனால் போகட்டும்; பிராணன் போகாமல் பிழைத்தாயல்லவா? இதுவே போதுமானது; உன் அதிர்ஷ்டம் மிகவும்நல்லதானபடியால், திருடனாலேயே திருடன்கொல்லப்பட்டான். பகவான் கடாக்ஷத்தினால் அவ்வாறுபோனதே மிகவும் நல்லதாயிற்று. ஒருவேளை உன்னையேகொன்றிருந்தால், நீஎன்னசெய்வாய்? நீசெய்துகொண்ட புண்ணியத்தினாலோ அல்லது உங்கள் பெரியோர்கள்செய்த புண்ணியத்தினாலோ உயிர்தப்பிப்பிழைத்தாய். இல்லாவிட்டால் திருடன் உன்னை கொலை செய்வதற்குப்பதிலாய் தூங்கப்பட்டவனை எழுப்பி சொல்லிவிட்டுப்போவானா? திருடவந்தவர்கள் யாரோ, அவர்கள் மிகவும் நல்லவர்களாகவே இருக்கின்றார்கள்; நிஜமாகிய திருடனாயிருந்தால் வஸ்திராபரணங்களை எல்லாம்விட்டு கேவலயாகிய போஜனபதார்த்தங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு போவானா? இதனால் என்ன ஏற்படுகின்றதென்றால், அவர்கள் திருடர்களல்ல மிகவும் நல்லசாதுக்களென்றே ஏற்படுகின்றது. எவ்வளவு தைரியமுடையவனாயிருந்தபோதிலும் தனமிருக்குமிடத்தில் ஒன்டியாய்ப்படுப்பது சரியானதல்ல, தனத்தினாலேயே சத்

துருக்கள் மித்திரர்களாகவும், மித்திரர்கள் சத்துருக்களாகவும் ஆகின்றார்கள், தனம் இருந்தாலும் கஷ்டமே. இல்லாவிட்டாலும் கஷ்டமே. இந்தத்திருடன் தலைபோக்கடித்துக்கொண்டதும் இவன் கால்களை நீ பிடித்து இழுத்ததும் தரையிறைலேயேயல்லவா? திருடன் சிரசு போய்விட்டபடியால் இவனை இன்னானென்றுசொல்லக் கூடாமையாயிருக்கின்றது. எல்லாவிஷயமும் பொழுதுவிடிந்தபிறகு தெரியவரும். போனதுபோகட்டும் இனியாகிலும் ஜாக்கிரதையாயிரு'' என்று அநேகவிதங்களாய் வர்த்தகனுக்குப்போதித்து அவரவர்கள் தம்தம்வீடுபோய்ச்சேர்ந்தார்கள். இதற்குள் சூரியபகவான், சாதுக்களுக்காக கமால் தன் சிரசைக் கொடுத்துவிட்டானே சீக்கிரமாய்ச் சென்று அவனைப் பார்ப்போமென்றுசொல்லி சிவந்த வர்ணத்துடன் தன்கிரண சமூகங்களுடன் கிழக்குத் திசையைநோக்கி உதயகிரியென்னும் பருவதத்தைத்தாண்டி வெளிவந்தனர். வர்த்தகனும் காலையில் ராஜசபைக்குச் சென்று இரவுநடந்த சங்கதிகளையெல்லாம் அரசனிடம் சொல்லினன். அரசன் சற்றுநேரம் யோசித்து, இது திருடனால் நடந்த காரியமல்லவென்று எண்ணி, சவத்தைக் கொண்டுவரச்சொல்லி கழுத்தைப் பார்த்தபோது ஒருதுளிரத்தம் இல்லாமலிருப்பதைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு இதை எப்படியாகிலும் கண்டுபிடிக்கவேண்டுமென்று எண்ணி, அந்தச்சவத்தை கழுவில் ஏற்றும்படிச்சொல்லினன். சேவகர்கள் அரசன் உத்தரவின்படி கழுவிலேற்றினார்கள்.

சவத்தைகழுவிலேற்றியவிஷயம் பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லோரும்கேட்டு வேடிக்கைப்பார்ப்பதற்காக கூட்டம் கூட்டமாய்ச்சேர்ந்து எறும்புசாரையைபோல் நடந்து கமாலினுடைய சரீரபிரகாசத்தைப்பார்த்து மிகவும் ஆச்

சரியப்பட்டு "ஐயோ! இவன்எவ்வளவு அழகுடையவன். இவனைப்பார்த்தால் மிகவும் சிறுபிள்ளைபோல் இருக்கின்றான். இவனுடன்கூட திருடவந்தவன் எவ்வளவு துன்மார்க்கனாயிருக்கலாம். இந்தச்சிறுபாலனைக்கொல்ல அவனுக்குக் கைகள் எப்படித்துணிந்தது? இந்தப்பித்தனும் வாயைமூடிக்கொண்டு வந்தவழியேசெல்லாமல் வர்த்தகனிடம்சென்று தூங்கப்பட்டவனைஎழுப்பி வஸ்துக்களை திருடிக்கொண்டுபோகின்றோம் என்று ஏன்சொல்லவேண்டும்? இவனுக்குப் பிராரப்தகர்மம் இப்படியிருக்க அவன் வாயைமூடிக்கொண்டு சும்மாய்என்போவான்! மிருத்யு தேவதை இவனுக்குச் சமீபித்தபடியால் இப்படிப்பட்ட துர்புத்தி இவனுக்குஉண்டாயிற்று. தாய்தந்தைகள் அண்ணன்தம்பிமார்கள் யாரும் இவனுக்கு இல்லைபோல் காணப்படுகின்றது. அப்படி யாராகிலும்இருந்தால், பகிரங்கமாய் சூலத்தில் ஏற்றியிருப்பதைப்பார்த்து கொஞ்சமாகிலும் துக்கப்படமாட்டார்களா? ஒருவேளை இவனைப்பார்த்துத் துக்கப்பட்டால் அவர்களின்ரகசியம் வெளியாகுமென்று உள்ளேவேதுக்கித்துக்கொண்டு சும்மாயிருந்தாலும் இருக்கலாம். இவனைப்பெற்றவள் எவ்வளவு கடின இருதயமுடையவளாயிருந்தபோதிலும் பெற்றவயிறெரிந்து ஓவென்று கூக்குரலிட்டு அழாமல்இருப்பாளா? இவன் தெரிந்தோ தெரியாமலோசெய்த குற்றத்திற்காகச் சிரோகண்டன சிக்ஷையடைந்திருக்க இதற்குமேல் மிக கடினமான, ராஜ தண்டனையும் ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சவத்தை சிக்ஷைசெய்தஅரசன் எவ்வளவு விவேகமில்லாதவனாயிருப்பான்! பெரியோர்களிடம் வாதிப்பதும், பரதேசத்தில் கலகம்வைத்துக்கொள்வதும், சவத்தை சிக்ஷைசெய்வதும், குலக்ஷயத்திற்குக் காரணமென்று பெரியோர்கள்சொல்லுவார்கள்என்று சிலரும், மற்றும்சிலர் அப்படியல்ல

இவனைச் சூலத்திலேற்றினால் வேடிக்கைப்பார்க்க அனேக ஜனங்கள்வருவார்கள் ; அப்போது இவன் பந்துக்கள் யாராகிலுமிருந்தால் இவனைப்பார்த்துத் துக்கப்படுவார்கள்; அப்போது அவர்களைப்பிடித்து விசாரித்தால் சங்கதி தெரியவருமென்றெண்ணி இந்த தந்திரம் செய்திருக்கலாமென்று தோன்றுகின்றது என்றும், இன்னும் சிலர் நீங்கள் சொல்வது சரியானதல்ல புலம்விசாரித்து சங்கதி தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் எவ்வளவோயிருக்கின்றது ; நமது ராஜன் விவேகசூன்னியனாயிருப்பதால் இப்படிப்பட்ட காரியத்திற்கு உட்பட நேரிட்டது. இந்தச் சிறுவன் கழுத்தை அறுத்தபோது துளி ரத்தமும் கீழே விழவில்லையாம். அன்றியும் அவன் அணிந்திருந்த சட்டையில் ஓர் துளி ரத்தமும படவில்லையாம். இப்படிப்பட்ட ஆச்சரியம் இதுவரையில் கண்டும் கேட்டும் இருக்கவில்லை. இது என்ன மாயையோதெரியவில்லை. இப்படிப்பட்ட மாயை என்று சொல்லவும் புத்திக்குத்தோன்றாமலிருக்கின்றது இதன் ரகசியம் ஈசுவரனுக்கேதெரியவரும்'' என்று பலபல விதங்களாய்ச்சொல்லத்தொடங்கினார்கள். இதுநிற்க,

கபீர் வீட்டிலிருக்கும் சாதுக்களெல்லோரும் இரவெல்லாம் வேதாந்தவிசாரணைசெய்து பொழுதுவிடிந்தவுடனே பிரயாணப்பட்டு கபீரைப்பார்த்து "ஐயா! உமது அநுக்கிரகத்தினால் உங்கள் வீட்டில் இரவு சுகமாய்க் காலங்கழித்தோம். நாங்கள் தீர்த்தவாசிகளானபடியால் ஓர் இரவுக்குமேல் ஒரு கிராமத்தில் இருக்கலாகாது. ஆதலால் தயைசெய்து நாங்கள்போக உத்தரவுகொடுக்கவேண்டுமென்றுகேட்டார்கள். அப்போது சுந்தராதேவியும் கபீரும் சாதுக்களை பக்திபூர்வகமாய் நமஸ்கரித்து அவர்களின் பிரயாணத்திற்குச் சம்மதித்தார்கள். சாதுக்கள் மிகவும் சந்தோஷித்து "பகவத்கடாக்ஷத்தினால் உங்களுக்குச் சர்

வார்த்தசித்தியுண்டாகக்கடவது'' என்று ஆசீர்வதித்து
அவர்களைப்பார்த்து "உங்கள்குமாரனெங்கே? இரவுமுதல்
இதுவரையில் அவனைக்காணோம்'' என்று கேட்டார்கள்.
அப்போது கபீர் "அவன் ஓர் காரியார்த்தமாய் வெளியில்
போயிருக்கின்றான்'' என்றுசொல்லினர். அப்போது
சாதுக்களெல்லோரும் கபீரைப்பார்த்து "உன்குமாரனைப்
பார்க்க எங்களுக்குப் பிராப்தி இல்லாமல்போயிற்று''
என்று சிலநேரம் வருத்தப்பட்டு "அவன் வந்தவுடன், தீர்
காயுள் உடையவனாய் ஆசிர்வதித்தோம் என்று அவனிடம்
சொல்லவேண்டும்'' என்றுசொல்லிவிட்டு அங்கிருந்து
பிரயாணப்பட்டார்கள். சுந்தராதேவியும் கபீரும் அவ்
வார்த்தையைக்கேட்டவுடனே அவர்களுக்கு உண்டாகிய
சந்தோஷம் இவ்வளவு அவ்வளவுஎன்று சொல்லமுடியாது
"இறந்த குமாரன் அப்போதேவந்து அவர்களை ஆலிங்
கனம்செய்துகொண்டதுபோல் எண்ணிக்கொண்டார்கள்.
பிறகு சுந்தராதேவியும் கபீரும் "ஆஹா ! இப்படிப்பட்ட
சத்சாங்கத்தியம் இனி நமக்கு என்றுகிடைக்கப்போகின்
றது ? நமது ஜன்மம் எப்போது கடைத்தேறும்'' என்று
சொல்லிக்கொண்டே சாதுக்களுடன்கூட சுந்தராதேவியும்
கபீரும் புறப்பட்டுச்சென்றார்கள். அப்போது சாதுக்கள்
கமாலைக் கழுவேத்தியிருக்கும் வழியாய்ப்போகும்போது
ஜனங்கள் ஆயிரக்கணக்காய் கமாலிடம் போவதைப்
பார்த்து 'என்ன விசேஷமென்று' கேட்டார்கள். அப்
போது ஜனங்களெல்லோரும் முன்நடந்த விருத்தாந்தங்
களை எல்லாம்முதலிலிருந்து கடைசிவரையில் ஆதியோடந்த
மாய்ச் சொல்லினார்கள். சாதுக்கள் அதைக்கேட்டு மிகவும்
ஆச்சரியப்பட்டு இந்த அதிசயத்தைப்பார்த்துச்செல்வோ
மென்று சொல்லி, கமாலை கழுவேற்றியிருக்கும் மரத்தினி
டம்சென்று கமாலைப்பார்த்து மிகவும் வருந்தயடைந்து

"ஐயா! இது மிகவும் அநியாயமாயிருக்கின்றது. விசுவாசமில்லாதவன் எவனோ குமாரனென்னும் கனிகரமுமில்லாமல் இவன்சிரசை வாளால்வெட்டினான். இந்த துர்மார்க்கன் பசு இம்சை செய்யும் வம்சத்தில் பிறந்தவனாயிருக்கலாம். இதர ஜாதியானாயிருந்தால், எவ்வளவு கடினமுடைய மனதுடையவனாயிருந்தபோதிலும், இப்படிப்பட்ட காரியங்களைச்செய்யமாட்டான். ஆஹா! இந்த துராத்மா எவ்வளவு கடினமான மனதுடையவன்! பெற்ற பிள்ளை என்னுங்கனிகரமுமில்லாமல் இப்படிப்பட்ட துஷ்டகாரியத்திற்கு உடன்பட்ட துன்மார்க்கன் சாமான்னியமான இதரஜந்துக்களை எவ்வளவேனும் லக்ஷியம்செய்வானோ? அவைகளை சுட்டுப்பொசிக்கி உடனே பக்ஷணை செய்துவிடுவான். அப்படிப்பட்ட சண்டாளனது முகம் எப்பொழுதும் பார்க்கலாகாது. பார்க்கும் பக்ஷத்தில் மஹாபாபம்வந்துசித்திக்கும். ஐயோ! இவன் தாய் இந்த சங்கதிகேட்டவுடனே எவ்வளவு வயறெரிந்திருக்கமாட்டாள். இப்போது இவனிருக்கும் ஸ்திதியை அவள் கண்களால் பார்த்தால் எவ்விதமாவாளோ, அதைச்சொல்ல சாத்தியமாகமாட்டாது" என்று பலபலவிதங்களாய்ச் சொல்லி வருத்தமடைந்தார்கள். அவ்வார்த்தைகளை எல்லாம் சுந்தராதேவியும் கபீரும் கேட்டவுடனே வயிர் திகிலென்று எரிந்து கண்களில் நீர் ததும்பிய போதிலும் அவர்கள் சுத்த வைராக்கிய விஷ்ணுபக்தர்களானதால், இவை எல்லாம் மாயா சம்பந்தமான விஷயங்களென்றும், சாது சந்தர்ப்பணைக்காக பிராணனையும் சமர்ப்பித்து சந்தர்ப்பணைச் செய்விப்பதே முக்கியமான தர்மமென்றும் நிச்சயித்து தைரியமுண்டாய் புத்திரசோகத்தைவிட்டு இருந்தார்கள். அப்போது கூலத்தில் ஏற்றிய பிரேதம் சாதுக்கள் இருக்கும் பக்கமாய்த்திருப்பி, இரண்டு கைகளை

யும் குவித்து அவர்களுக்கு நமஸ்காரம் செய்தது. அப்போது அங்குவேடிக்கைப்பார்த்துநின்றுகொண்டிருக்கும் ஜனங்களெல்லோரும் அற்புதமான ஆச்சரியமடைந்து கைகொட்டி சாதுக்களின் மகிமையை பலவிதங்களாய்ச் சொல்ல ஆரம்பித்தார்கள். அப்போது பிரேதம் சாதுக்களுக்குத் தெண்டம் சமர்ப்பிக்கின்றதென்னும் வார்த்தை காசிப்பட்டணமெங்கும் பறவியவுடனே, குழந்தைமுதல் கேள்விப்பட்டு அதிக ஆச்சரியமடைந்து பிரளயகாலத்தில் சமுத்திரம் நான்கு பக்கங்களும்பொங்கிவருவதுபோல், ஜனங்களெல்லோரும் நான்கு பக்கங்களிலிருந்து புரண்டு வந்தார்கள். இச்சங்கதி அரசனும்கேள்விப்பட்டு மந்திரி பிரதானிகளுடன் புறப்பட்டு சாதுக்களிருக்கும் இடத்திற்கு வந்தார்கள். அப்போது இன்னுமுள்ள ஜனங்களெல்லோரும் நீ முன்னே நான் முன்னே என்று ஓடோடி சாதுக்கள் இருக்குமிடம் வந்துசேர்ந்தார்கள். சாதுக்களுக்கெல்லாம் அதிபதியாயிருக்கும் பெரியசாது கபீரைப் பார்த்து "இந்த விநோதம் எவ்வளவு ஆச்சரியமாய் இருக்கின்றது! பிரேதம் நமஸ்கரிப்பதற்குப் பொருந்தியில் பிராணன் இதுவரையில் எங்கு தங்கியிருந்தது? வேர் கிளைந்துவிட்ட விருக்ஷம் எவ்விதமாய்த் துளிர்க்கும்? இறக்கைகள் போனபிறகு பக்ஷிகள் எவ்விதமாய் உயரப்பறக்கும்? தந்தி அறுந்தவுடன் தம்பூர் எவ்விதமாய்ப்பாடும்? பிராணன் போனபிறகு பிரேதம் எவ்விதமாய்த் தெண்டம்சமர்ப்பிக்கும்? இப்படிப்பட்ட அதிசயத்தை நாங்கள் இதுவரையில் கண்டதும் கேட்டதும் இல்லை; இன்றே நூதனமாய்ப் பார்த்தோம். இது எப்படிப்பட்ட இந்திரஜாலமோ மகேந்திரஜாலமோ தெரியவில்லை" என்றுசொல்லினர். அப்போது கபீர் மிகவும் வணக்கமாய் சாதுவத்ஸலனை நமஸ்கரித்து "சுவாமி! எதனால் இது உமக்கு ஆச்சரியமாய்த்

தோன்றியதோ தெரியவில்லை. இது ஒரு ஆச்சரியமானதென்று எனக்குத்தோன்றவில்லை. பூர்வம் பீஷ்மர் அம்புகளின்மீது சயனித்திருந்தபோதிலும் பிராணனை வைத்துக் கொண்டிருக்கவில்லையா? சுபத்திராதேவி புத்திரன் யுத்தத்தில் வீழ்ந்திருந்தபோது தன் துக்கத்தைத் தந்தையுடன் சொல்லப் பிராணனை வைத்திருக்கவில்லையா? ஜடாயுவு இராவணனால் அடிபட்டபோது ஸ்ரீ ராமமூர்த்தி வரும் வரையில் பிராணனை வைத்திருக்கவில்லையா? அது போலவே, நீர் வீரவைஷ்ணவராயிருப்பதால் தேவரீருக்கு நமஸ்காரம் செய்ய இதுவரையில் பிராணனை வைத்துக் கொண்டிருந்தான். இப்போது தேவரீருடைய தரிசனம் ஆனதால் இனி அழியத்தக்கதேகத்தைவிட்டு சாஸ்வதமானபதவியை அடைவான். இவன் ஜன்மம் இன்று சாபல்யமாயிற்று. இவனைப்பெற்றவர்களும் தன்னியர்களானார்கள். ஆதலால், இவன் விஷயமாய் நாம் வியசனப்படவேண்டியதில்லை. பரம பாகவதசேவையினால் பரமபவித்திரனானான்'' என்று சொல்லினர். இவ்வார்த்தை கபீர் வாயிலிருந்து வந்தவுடனே சூலத்திலிருந்த பிரேதம் கீழே குதித்து சாதுவின் பாதங்களையும் கபீர் பாதங்களையும் நமஸ்கரித்து கைத்தாளம்போட்டு சித்திர விசித்திரமான நர்த்தனம் செய்யஆரம்பித்தது.

அப்போது சாதுவல்லபன் கபீரைப்பார்த்து "இந்த மாயாதிருடன்யார்? இவன் சங்கதி உனக்கு ஏதாகிலும் தெரிந்திருந்தால் சற்றேசொல் பார்ப்போம். இப்படிப் பட்ட பரம பக்தனுடைய விஸ்தாரத்தை முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். இதுவரையில் நீ சொல்லியதைப்பார்த்தால் இவன் விஷயம் ஏதோ உனக்குத்தெரிந்திருப்பதாய்க் காணப்படுகின்றது. ஆதலால், தயைசெய்து அதைச் சற்றே சொல்பார்ப்போம்'' என்று கேட்டார்.

அப்போது கபீர் சென்ற இரவுநடந்த சவிஸ்தாரங்களை
எல்லாம் சாவதானமாய்ச்சொல்லி இதனால் நாங்கள் கிரு
தார்த்தர்களானோமென்று தம்பதிகளிருவரும் கைத்
தாளம்போட்டு நர்த்தனம்புரியஆரம்பித்தார்கள். சாது
சனங்கள் அதைக்கேட்டவுடன் மிகவும் வருத்தமடைய
ஆரம்பித்தார்கள். அப்போது சாதுவல்லபன் கபீரைப்
பார்த்து "ஐயா! எவ்வளவு துஷ்டகாரியத்திற்குப் பிரயத்
தினப்பட்டாய்! எங்கள் போஜனத்திற்காக வர்த்தகன்
வீட்டில் கன்னம்வைத்து கடைசியில் குமாரனது சிரசைக்
கொண்டுவந்தாய். ஆஹா! உன் இருதயம் எவ்வளவு
கடினமுடையது! இவன் சிறுவனாயிருப்பதால் அறியாத
தன்மையாய்ச் சிரசை அறுத்து கொண்டுபோவென்று
சொன்னபோதிலும் அவன் வார்த்தைக்கு உட்பட்டு நீ
அகோரமானகாரியத்தை எப்படிச் செய்யலாம்? திருட்டுத்
தனமே மிகவும் பாபகாரியமாயிருக்க அதனுடன்கூட
புத்திரவதையும் துணையாயிற்று. இப்படிப்பட்ட குரூர
கிருத்தியம்செய்யும்போது உன் விவேகம் எங்கு போயிற்
றோ தெரியவில்லை யுக்தா அயுக்தங்களைக் கொஞ்சமாகி
லும் விசாரிக்காமல்போனாயல்லவா! என்றுசொல்லி விய
சனமடைந்தார்.

கபீர் அதைக்கேட்டு சாதுவல்லபனை நமஸ்கரித்து
"சுவாமி! எக்காலம் ஜீவித்திருந்தபோதிலும் ஓர்நாளைக்
குப் போகவேண்டியது தப்பாதல்லவா? நானுவித பாதை
களால் சரீரம் கஷ்டப்பட்டு மரணமடைவதைவிட பகவத்
பிரீதியாய் பிராணனைவிடுவது எவ்வளவுநன்மை? இப்படிப்
பட்டமரணம் யாருக்குக்கிடைக்கும்? இவன் வார்த்தைக்கு
நான் உட்படாமல் இருந்திருந்தால் தங்களைப்போன்ற
பெரியோர்களின் அனுக்கிரகத்தினால் இவன் இவ்வளவு

அகண்டானந்தசம்பத்தை அனுபவிக்கமாட்டானல்லவா?'' என்றுசொல்லினர்.

அவ்வார்த்தைகளை எல்லாம் சாதுவல்லபன்கேட்டயீர், உன்பக்திவைராக்கியங்களுக்கு மிகவும்சந்தோஷமடைந்தேனென்றுசொல்லி, பிறகு சுந்தராதேவியைப் பார்த்து "உன் குமாரனது சிரசைக் கொண்டுவந்து எனக்குக்காட்டும் பார்ப்போம்'' என்றுசொல்லினர். சுந்தராதேவி அவ்வார்த்தையைக்கேட்டவுடன் அதிவேகமாய்ச் சென்று தன்வீட்டில் மிகவும்சாக்கிரதையாய் வைத்திருந்த சிரசைக்கொண்டுவந்து சாதுவல்லபனுக்குக் காட்டினாள். அப்போது அந்தச்சிரசு புன்னகையுடன் சிரித்துக் கண்களை மூடி தூங்குப்பட்டவன்போல் மிகவும் அழகுடன் பிரகாசித்துக்கொண்டிருக்கும் முகத்தைப் பார்த்து எல்லோரும் மிகவும் ஆச்சரியப்படத்தொடங்கினார்கள். அப்போது சாதுவல்லபன் புன்சிரிப்பாய்ச் சிரித்து அந்தச்சிரசை தன்கையில்வாங்கி கமால்கண்டத்தில்வைத்து யோகதண்டத்தை சிரசின்மேல்வைத்து "ஜயசீதாராம்'' என்றுசொல்லித் தன்கையால்தடவினர். சாதுவல்லபன் அஸ்தம்பட்ட மாத்திரத்தில் கமால்பிழைத்து சாதுக்கள் எல்லோருக்கும் நமஸ்காரம்செய்து 'ஜயசீதாராம்' என்றுசொல்லி கூத்தாட ஆரம்பித்தார். அப்போது அங்கிருந்தவர்களெல்லோரும் பரமானந்தமடைந்து கைகளைக்கொட்டி 'ஜயசீதாராம் ஜயசீதாராம்,' என்று எல்லோரும் ஒரேவாக்காய் சப்தம் போட்டு அவர்களும் கூத்தாடினார்கள். அப்போது ஜனங்களெல்லோரும் இராமநாமஸ்மரணைசெய்யும் சப்தம் ஆகாசமெங்கும்பரவி, பிரளயகாலத்தில் சமுத்திரம் நான்குபக்கங்களும் பொங்கி இரைந்துகொண்டுவருவதுபோல் இருந்தது. இந்தச்சப்தம் தேவலோகம்வரையில்வியட்டி தேவர்களெல்லோரும் ஓடிவந்து பார்த்து புஷ்பமாரி வருஷித்

தார்கள். தேவதுந்துபிகளைத் திக்குகள் அதிரும்படி டம
டமவென்று தொனிசெய்தார்கள்.
அப்போது சாதுவல்லபன் சாதுவேஷத்தைநீக்கி
சீதா லக்ஷ்மண பரதசத்ருக்க அநுமான்சமேதராய் ஸ்ரீ ராம
மூர்த்தியாய் தரிசனம்தந்தார். மற்றசாதுக்களெல்லோரும்
தண்ட கமண்டல காஷாயங்களைத்தரித்து ருஷிகளாய்
ஸ்ரீ ராமமூர்த்தியைச் சூழ்ந்துநின்றார்கள். அப்போது சுந்
தராதேவியும் கபீரும் மிகவும்பக்தியுடன் ஸ்ரீராமமூர்த்தி
யையும் அவரது பரிவாரங்களையும் பிரதக்ஷணம்வந்து
நமஸ்கரித்து பலபலவிதங்களாய்த் துதிசெய்தார்கள்.
கமால் மிகவும் வினயத்துடன் கைகளைக்குவித்து ஸ்ரீராம
மூர்த்தியை நமஸ்கரித்து "பரமேஸ்வரா! நீர் மகானு
பாவன்; அமோக சங்கல்பமுடையவன்; அனேக வைபவ
முடையவன்; அப்பிரமேயன்; அவாங் மானசகோசரன்;
ஆதியந்தரஹிதன், சர்வகாரணன்; நிராதாரன்; சிருஷ்டி
திதி சம்மாரங்களுக்குக் கர்த்தன்; சகலபிரபஞ்சமும் உன்
லீலாமாயையே யென்று ஞானமுடைய பண்டிதர்கள்
சொல்லுவார்கள். ஸ்தாவர ஜங்கம ரூபமாயிருக்கும் சகல
பிராணிகளுக்கும், செவிகள்முதலாகிய ஞானேந்திரியங்
களுக்கும், வாய்முதலாகிய கர்மேந்திரியங்களுக்கும், மனது
முதலாகிய அந்தரிந்திரியங்களுக்கும், பஞ்சபிராணன்களுக்
கும், கண்களுக்குக் காணப்படாத வஸ்துவிலிருந்து மகதத்
துவமும், பிரகிருதியும், அதுவே பகவானுடையசக்தியும்
அந்தப் பிரகிருதியிலிருந்து அஹங்காரமும், அதிலிருந்து
உண்டாகிய பஞ்சபூதங்களும், பஞ்சபூதமயமாகிய சகலபிர
பஞ்சத்திற்கும்நீயேபிரபு. ஆதலால், பிரகிருதி சம்பந்தமான
ஸத்வ ரஜ தமோகுணங்களினுடைய விருத்திகளாகிய
கோபம் மூடத்துவம் முதலானவைகளெல்லாம் உம்மை
எப்போதும் பற்றமாட்டா. இவ்விதமாய் நீர், நிர்க்குண

ளையும் நிர்விகாரனையும் நிரஞ்சனனையும் பரிசுத்தனையும்
ஆயுதங்களினல் வெட்டுப்படாதவனையும் மசத்தாகிய சங்
கல்பமுடையவனையும் ஆதியில் உண்டானவனையும் நாச
மில்லாதவனையும் இருக்கும் உமது ரூபத்தை, காமக்
கு[illegible]தராகத் துவேஷ லோப மோஹ முதலாகிய துர்க்
குணங்களையுடைய ஆசைஎன்னும்கயற்ருல் கட்டப்பட்
டிருக்கும் மனுஷ்யர்கள் எவ்விதமாய்க் கிரகிப்பார்கள்
சூரியகிரணங்களினல்உண்டாகிய மேகங்கள் சூரியனை
மறைப்பதுபோல் உன்னல்உண்டாகிய குணவிகாரங்களி
னல் நீயும் மூடப்பட்டு இராம கிருஷ்ண அவதாரங்களில்
சாதாரணமானவஜனங்களைப்போல் அவதரித்து நடித்தா
லும் நீர் மஹானுபாவனையிருப்பதனல், எதிலும்பற்ருமல்
இருப்பீர்,உமதுமஹாமஹிமையை அறிந்து வர்ணிக்க நான்
எவ்வளவு மாத்திரன் ? பக்தவர்சலா ! எங்கள்மீது பரி
பூரணகடாக்ஷம் வைத்து, செவிகள் எப்பொழுதும் உன்
கீர்த்தனைகளைக் கேழ்க்கும்படியும், வாய் உன்நாமத்தை
உச்சரிக்கும்படியும், கைகள் உன்னை பூஜிக்கும்படியும்,
கண்கள் உன் திவ்விய ரூபங்களைத் தரிசிக்கும்படியும், சிரசு
உன்பாதங்களை நமஸ்கரிக்கும்படியும், மனது உன்
ரூபத்தை உள்முகமாய்த் தரிசித்து ஸ்பரிக்கும்படியும்,
புத்தி உன்னை விசாரிக்கும்படியும் அநுக்கிரகம் செய்யக்
கடவீர்'' என்று வெகுவிதங்களாய்ப் பிரார்த்தித்து, பர
மேசுவரனையும் ருஷிகளையும் பிரதக்ஷணமாய்வந்து அனேக
நமஸ்காரங்கள்செய்துநின்ருர்.

பக்தவச்சலனை பகவான், கமாலை அதிக பிரீதியுடன்
ஆலிங்கனம்செய்து, ''நீ மிகவும் பரமபாகவதசிகாமணி:
உன் மனதை சோதிப்பதற்காகஎண்ணி சாதுவேஷம்
தரித்துவந்தேன் ; உன் நடவடிக்கைகளுக்காக மிகவும்
சந்தோஷமடைந்தேன். உங்களுக்கு சதா ஆனந்தம் உண்

டாகும்படி வரமும்கொடுத்தேன் நீங்களெல்லோரும் சுக
மாயிருக்கக்கடவது'' என்று ஆசீர்வதித்துத் தம்பரிவாரங்
களுடன் அந்தர்த்தானமானர். அப்போது காசி தேசத்தி
லுள்ள ஜனங்களெல்லோரும் பரமானந்தமடைந்து கமா
லும் சுந்தராதேவியும் கபீரும் பகவான் அம்சமே என்று
எண்ணி மிகவும் பக்தியுடன் அவர்களின் பாததூளிகளை
எடுத்து சிரசின்மேல்வைத்துக்கொண்டு அவர்களை வெகு
விதங்களாய்ப் பிரார்த்தனைசெய்தார்கள். இவைகளை எல்
லாம் பார்த்துக்கொண்டிருந்த காசிதேசாதிபதி திக்பிரமை
அடைந்து யாதொன்றும் தோன்ருமல் சிலநேரமிருந்து
மறுபடியும் அறிவுண்டானவுடன் யானையின்மீதிருக்கும்
அம்பாரியிலிருந்து இறங்கி மிகவும் பயபக்தியுடன் ஓடி
கபீர்பாதத்தில் சாஷ்டாங்கமாய்விழுந்து எழுந்துநின்று
'சுவாமி ! நான் அவிவேகத்தினல்செய்த குற்றத்தை மன்
னித்து என்னை ரக்ஷித்துக் கிருதார்த்தனைச் செய்யவேண்
டும்' என்றுபிரார்த்தித்தான். அப்போது கபீர் காசி
தேசாதிபதியை கருணைகடாக்ஷ வீக்ஷிண்ய பார்வையினல்
பார்த்து இராம மந்திரோபதேசம்செய்து ''உனக்கு பிரம்
மானந்தம் உண்டாகக்கடவது'' என்று ஆசீர்வதித்தார்.

அப்போது வர்த்தகன் தன் கண்களுக்கு முன்பாய்
நடந்த விஷயங்களைஎல்லாம் கண்டு மிகவும்ஆச்சரியப்பட்டு
இதுவரையில் தத்துவம் இப்படிப்பட்டதென்று கினவிலும்
நினையாமலும், பரோபகாரமில்லாமலும் இருந்தவனையிருந்
தாலும், கமாலினுடைய பாதஸ்பரிசம் இவன்கையில் பட்
டதனல் இவன் சஞ்சித பிராப்த கர்மங்கள் எல்லாம்
நசித்துவிட்டது. அதனல் பரமபாகவதர்களின் தரிசனம்
கிடைத்தது. அவர்களின் தரிசனம் கிடைத்தவுடன் நல்ல
புத்திஉண்டாய் விஷயபோகத்தில் இருந்த திடவைராக்கி
யம்நீங்கி சகலவஸ்துக்களிலும் விரத்தியுண்டாய் பரமபக்தி

யுடன் கமால்பாதத்தில்விழுந்து நமஸ்கரித்து அவரால் தத்துவோபதேசம்பெற்று ஏகானந்தபதவியை அடைந்தான். பிறகு கபீர் தாராபுத்திராதிகளுடன்கூட தன்வீடு சேர்ந்து யதாப்பிரகாரம் பகவன்நாமஸ்மரணைகளைச் செய்துகொண்டு பரமானந்தமடைந்திருந்தார்கள். பிறகு காசிதேசாதிபதி, தனக்கு இப்படிப்பட்ட மஹாநுபாவரே குருவாய்வந்ததற்காக மிகவும்சந்தோஷித்துத், தன் பட்டணமெங்கும்அலங்கரித்து எல்லாசாதுக்களுக்கும் விசேஷமாய்ச் சந்தர்ப்பணைகளைச்செய்வித்து பட்டத்துயானையை உயர்ந்த அம்பாரியினால்அலங்கரித்து அதில் கபீரை எழுந்தருளச்செய்து மங்களவாத்தியங்களுடன் ஊர்கோலமாய், மஹோத்சவம்செய்வித்தான். பிறகு காசியிலுள்ள மூட ஜனங்களெல்லோரும் கபீர் கமால்களை சரணாகதியடைந்து உபதேசம்பெற்று பிரம்மானந்தமடைந்திருந்தார்கள்.

கபீருக்கும் ரோஹிதாசுக்கும் வாதம் உண்டாகுதல்.

இவ்விதமாய்ச் சிலநாள் சென்றபிறகு, காசிநகரத்திற்குச் சமீபமாயிருக்கும் சேரியில் சண்டாள குலத்தில் அவதரித்த ரோஹிதாஸ்என்னும் பரமபாகவதன் சதாசார சம்பன்னனாய் சகுணோபாசனம் செய்து பக்தி வைராக்கியங்களில் மிக சிரேஷ்டனாய் இருக்கும் விஷயத்தைக் கபீர் கேள்விப்பட்டு அவரைப்பார்ப்பதற்காக அங்கு சென்றார். அப்பொழுது, ரோஹிதாஸ் ஸ்நானம்செய்து சரீரமெங்கும் துவாதசோர்த்துவ புண்டரங்களைத்தரித்து கழுத்தில் துளசிமாலையை யணிந்து கிருஷ்ணாஜினத்தின் (மான்தோல்) மீதுட்கார்ந்து ஜபமாலையைக் கையிற் பிடித்துத் தன் இஷ்டதெய்வமாகிய கிருஷ்ணமூர்த்தியை

இருதயகமல கர்ணிகாமத்தியில் நிறுத்தி மிகவும்பக்தியுடன் அர்ச்சனை செய்துகொண்டிருந்தார். கபீர் வந்த சேதியைக் கேட்ட ரோஹிதாஸ் மிகவும் சந்தோஷித்து ஜபம் செய்வதைநிறுத்தி சீக்கிரமாய் எழுந்து வெளியில்வந்து கபீரை எதிர்கொண்டு மிகவும் மரியாதையுடன் அழைத்துவந்து தர்ப்பாசனத்தின்மீது வீற்றிருக்கும்படிச்செய்து 'தேவரீர் இன்று அடியேனுடைய குடிசைக்கு எழுந்தருளியதனால் மிகவும் தன்னியனானேன்; எங்கள் பிதுருக்கள்எல்லோரும் கிருதார்த்தரானார்கள். தேவரீருடைய பாத ஸ்பரிசத்தினால் இந்த அபவித்திரமான ஸ்தலம் பவித்திரமாயிற்று. இன்று மிகவும் சுபநாள்'' என்று வெகுவாய் வர்ணித்தார். கபீர் மிகச்சந்தோஷமடைந்து ரோஹிதாசரை நமஸ்காரஞ் செய்து, அவர் செய்யும் தேவதா அர்ச்சனையை சும்மாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்; ரோஹிதாஸ் "ஓஹோ? இவரென்ன இவ்விதமாய்ச் சும்மாய் உட்கார்ந்திருக்கின்றார்! இவரை பரமபாகவதோத்தமரென்று அநேகர் சொல்லுகின்றார்கள். இப்படிப்பட்டவர் சும்மாயிருப்பதைப்பார்த்தால் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது'' என்று தனக்குள்தான் ஆலோசித்துக் கபீரைப்பார்த்து "ஐயா! நீர் விஷ்ணு பக்தராயிருந்தும் கிருஷ்ணமூர்த்திக்கு ஏன் நமஸ்காரம் செய்யாமல் இருக்கின்றீர்? இப்படியிருப்பது வைஷ்ணவ தர்மமல்லவே! பகவான் ரூபத்தைப் பார்த்தவுடனே பக்தி செய்யவேண்டுமென்று சாஸ்திரங்களில் விசிதமாய்ச் சொல்லியிருக்கின்றதே; அப்படியிருக்க அதற்கு விரோதமாய் நீரேன் நடக்கவேண்டும்'' என்று கோபப்பார்வையாய்ப் பார்த்தார். அதற்குக்கபீர் மந்தகாசம்செய்து, "நீர் சொல்லிய வார்த்தை வாஸ்தவமே. ஆனால், உன் தேவதா அர்ச்சனையைப்பார்க்க மிகவும் அசஹ்யமாகின்றது. இப்படிப்பட்ட துராசாரமான அப்பியாசம் உனக்கு யார்கற்றுக்

கொடுத்தார்களோ? தெரியவில்லை! பூஜா பாத்திரங்களெல்லாம் தோலினால்செய்தஇருப்பதுமேயல்லாமல் விக்கிரகங்களையும் தோலினால்செய்து வைத்திருக்கின்றாய். இப்படிப்பட்ட தோல் பொம்மைகளையா என்னை நமஸ்கரிக்கும்படிச் சொல்லுகின்றாய்? சரி சரி, இது மிகவும் நன்றாயிருக்கின்றது. 'ஜாதிக்குத் தக்கபுத்தி' என்று சொல்லுவது சரியாயிருக்கின்றது; உன் தேவதை எவ்வளவோ உன் பூஜையும் அவ்வளவே" என்று சொல்லினர்.

ரோஹிதாஸ் அதைக்கேட்டவுடன் பக்கென்று சிரித்து "என்ன! நீர் சொல்லுவதைப்பார்த்தால் மிகவும் ஆச்சரியமாய்இருக்கின்றது உலகத்தில் தோலில்லாத பதார்த்தமும் ஒன்றுண்டோ, சற்றுயோசித்துப்பார்? எறும்புமுதல் பிரமதேவன் வரையில் சமஸ்த ஜந்துக்களும் சர்ம (தோல்) மயமாகவே யிருக்கின்றன. அன்றியும் பேரீ மிருதங்க வாத்தியங்களும் தோலாகவே இருக்கின்றன. இதன்றியும், அரிபஜனை செய்யும்போது தோல் கைகளால் தாளம்போட்டு தோல் காதுகளால்கேட்டு ஆனந்திக்கின்றோம். மேலும் கோக்களின்தோல் ஸ்தனங்களிலிருக்கும் பாலைக்கறந்து மிகவும் சிரேஷ்டமானதென்று சொல்லி ஈசுவரனுக்கு அபிஷேகம் செய்கின்றோம். பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் முதலாகிய வருணஸ்தர்களும் தோல் வேஷ்டியினால் மூடப்பட்டிருக்கின்றார்கள். தோல்களையுடைய கைகளினாலேயே பகவானை அலங்கரிக்கின்றார்கள். தோல்களையுடைய சரீரத்திற்குள்ளிருக்கும் இருதய கமலத்தில் சர்வாந்தர்யாமியாகிய பரமாத்மா நிவசித்துக்கொண்டிருக்கின்றார். பூமிபாரம்தீர்ப்பதற்காக விஷ்ணுவானவர் கிருஷ்ணவதாரம் எடுத்தபோது பஞ்சபூத சம்பந்தமாகிய தோல் சரீரத்தையே தரித்துவந்தார். இப்படியிருக்க தோல் விக்கிரகத்தை நமஸ்கரிக்கலாகாதென்று நீர் சொல்

வது சரியல்ல. சர்வாந்தர்யாமியாயும் சர்வ வியாபகனாயும் இருக்கப்பட்ட பரமபுருஷனுக்கு இதுநல்லது இதுகெட்டதுஎன்னும் வித்தியாசம் உண்டோ? பகவதாராதனைக்குப் பக்தி ஒன்றே முக்கியமானது. எவரெவர்கள் எப்படி எப்படி நினைக்கின்றார்களோ அவரவர்களுக்கு அப்படி யப்படியே பலிதமுண்டாகும். பரமபுருஷனான கிருஷ்ணமூர்த்தி லோகா பிராட்டியனே யொழிய மற்றவர்களல்ல. அப்படிப்பட்ட மஹாபுருஷனை அகௌரவம் செய்வது உம்மைப்போன்றவர்களுக்குத் தகுதியல்ல. இவர் சர்வ லோக ரக்ஷகன் சமஸ்த கலியாணகுண பரிபூரணன்; ஆதியந்தரஹிதன்; அவாங்மானஸகோசரன்; நிரஞ்சனன், நிர்விகாரன்; நித்யன்; நிராதாரன்; அவரைவிட சர்வோத்தமன் வேறொருவரில்லை" என்று சொல்லினர்.

அதற்குக் கபீர் மந்தகாசஞ்செய்து "எங்கள் இராமமூர்த்தியைவிட சர்வோத்கிருஷ்டமான பகவான் ஒருவருமில்லை. உங்கள் கிருஷ்ணன் நேற்றைய த்வாபரயுகத்தில் பிறந்தவன். அவரிடம் யாதொரு மஹாத்மியமும் இல்லை. எங்கள் இராமமூர்த்தியின் மஹாத்மியம் உமக்குத் தெரியவாராது; என் விருதாவாய் உளருகின்றீர்; சும்மாயிரும் சும்மாயிரும்" என்று கடுகடுத்துச்சொல்லினர். அதற்கு,

ரோஹிதாஸ்:—ஐயா! எல்லா ஸ்ருதி ஸ்மிருதிகளிலும், எந்த ஜாதிபேதங்களும் இல்லாமல் சுயம்பிரகாசமாய் பரஞ்சோதியாய்இருக்கும் பரப்பிரமம் பூமிபாரம்தீர்ப்பதற்காக மானவரூபம்தரித்து அவதரித்தார். லீலாவினோதமான லீலாகாரியங்களைச் செய்துகொண்டு தன்னை சங்கல்பித்த பக்தஜனங்களின் இஷ்டார்த்தங்களை எல்லாம் ஆசிரயித்த மோக்ஷாபேக்ஷை யுடையவர்களுக்கெல்லாம் நிறைவேற்றி, கீதா சாஸ்திரங்களை உபதேசித்து, சகல பிரபஞ்சத்தையும் ரக்ஷிக்கும் எங்கள் கிருஷ்ணமூர்த்தி ஒருவரே எல்லாமானவர்

வர்களாலும் தேவதைகளாலும் பூஜிக்கப்படுபவரென்றும், அவரைப் பூஜித்தவர்களே முமுக்ஷுக்களென்றும் அப்படிப்பட்ட முமுக்ஷுக்களே மோக்ஷவீட்டை அடைபவர்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

கபீர்:—ஐயா! நீர்சொல்லும் வார்த்தைகளெல்லாம் கேட்பதற்குச் சுகமேயல்லாமல், சாஸ்திர சம்பந்தமானதல்ல. வேதாந்தங்களுக்கு எட்டாதவனும் வேதங்களை உண்டாக்கியவனும் சர்வ வஸ்துக்களிலும் சர்வாந்தர்யாமியாயிருந்து சகலபூதங்களையும் நடத்துகின்றாரென்று சுருதி ஸ்மிருதிகளில் சொல்லப்படும் பரமாத்மா தசரதகுமாரனாகிய இராமனே. அவரைவிட இதரமானதெய்வம் வேறொன்றில்லை. அவரை ஆசிரயித்தவர்களுக்கல்லாமல் இதரர்களுக்கு மோக்ஷமில்லையென்று சுருதி ஸ்மிருதி புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்குத் திருஷ்டாந்தம் என்னவென்றால் சர்வவேத வேதாந்தங்களின் சாராம்சமாகிய இருபத்திநான்கு அக்ஷரங்களையுடைய காயத்திரீமந்திரங்களும் அவரையே போற்றிக் கொண்டாடுகின்றன. வால்மீகிரிஷியால் சொல்லப்பட்டு வால்மீக ராமாயணமென்று வழங்குகின்ற மஹாகாவ்யம் இவ்விருபது அக்ஷரங்களையும் விரித்து இருபத்திநாலாயிரம் சுலோக ரூபத்தைப்பெற்றிருக்கின்றது. இது சம்சாரமென்னும் சமுத்திரத்தில் மூழ்கியிருக்கும் பாமரஜனங்களை உத்தரிப்பதுமேயல்லாமல் பார்வதீ பரமசிவனும் சதாகாலமும் ஸ்மரிக்கத்தக்கதாயும் இருக்கின்றது; இவ்வாறு மஹாமஹிமைதங்கிய காயத்திரீ மந்திரத்தில் அடங்கிய எழுத்துகள் இருபத்துநான்கு என்பதை நீ அறியச்சொல்லுகிறேன் கேள்:—

காயத்ரீ ராமாயணம்.

தபஸ்ஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீ வாக்விதாம்வரம்
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர் முனிபுங்கவம்,

ஸஹத்வா ராக்ஷஸான் ஸர்வான் யஜ்ஞக்நான் ரகுநந்தந:
ருஷிபி: பூஜிதஸ்ஸம்யக்யதேந்த்ரோ விஜயீபுரா.
விஸ்வாமித்ரஸ்ஸ தர்மாத்மா ஸ்ருத்வாஜநகபாஷிதம்
வத்ஸராமதனு: பஸ்ய இதிராவக மப்ரவீத்.
துஷ்டாவாஸ்யததாவம்ஸம் ப்ரவிஸ்ய ஸவிஸாம்பதே:
ஸயநீயம் நரேந்த்ரஸ்ய ததாஸாத்ய வ்யதிஷ்டத.
வநவாஸம்ஹிஸங்க்யாய வாஸாம்ஸ்யா பரணாநிச
பதார்ர மநுகச்சம்த்ய ஸீதாயைஸ் வஸுரோததௌ.
ராஜாஸத்யம்ச தர்மஞ்ச ராஜகுலவதாம்குலம்
ராஜாமாதா பிதாசைவ ராஜா ஹிதகரோ ந்ருணாம்.
நிரீக்ஷ்ய ஸுமுஹூர்த்தம் ததர்ஸபரதோகுரும்
உடஜோர மமாஸீநம் ஜடாவல்கலதாரிணம்.
யதிபுத்தி: க்ருதாத்ரஷ்டு மகஸ்த்யம் தம் மஹாமுநிம்
அத்வைவ கமநேபுத்தியம் ரோசயஸ்வ மஹாயஸ:
பரதஸ்யார்ய புத்ரஸ்ய ஸ்வஸுருணாம் மமசப்ரபோ
ம்ருகரூ பமிதம்வ்யக்தம் விஸ்மயாஜ்ஜி நயிப்யதி.
கச்சஸீக்ரமிதோராம ஸுக்ரீவந்தம் மஹாபலம்
வயஸ்யம்தம் குருக்ஷிப்ரமிதோகத்வாத்யராகவ.
தேஸகாலௌ ப்ரதீக்ஷஸ்வ க்ஷமமாண: ப்ரியா ப்ரியோ
ஸுகது:க ஸஹ:காலே ஸுக்ரீவ வஸகோபவ.
வந்த்யாஸ்தேது தபஸ்ஸித்தா ஸ்தபஸா வீதகல்மஷா:
ப்ரஷ்டட்ட வ்யாஸ்தேபி ஸீதாயா: ப்ரவ்ருத்திர் விநயாந்விதை:.
ஸநிர்ஜித்யபுரீம் ஸ்ரேஷ்டாம் லங்காந்தாம் காமரூபிணீம்
விக்ரமேணமஹாதேஜா ஹநுமாந் மாருதாத்மஜ:.
தத்யாதேவாஸ்ஸகந்தர்வா ஸ்ஸிதாஸ்ச பரமஷர்ய:
மமபஸ்யந்தி யேநாதம் ராமம் ராஜீவலோசநம்.
மங்களாபிமுகீதஸ்ய ஸாததாஸீந்மஹாகபே:
உபதஸ்தே விஸாலாக்ஷீ ப்ரயதாஹவ்ய வாஹநம்.
ஹிதம்மஹாதநம் ம்ருதுபூர்வஸம்ஹிதம்
வ்யதீ திகாலாயதி ஸம்ப்ரதிக்ஷமம்

விமம்ய தத்வாக்ய முபஸ்த்தி தஜ்வா:
ப்ரசங்கவா நுத்தர மேததப்ரவீத்.
தர்மாத்மாரக்ஷ ஸாம்ஸ்ரேஷ்ட ஸம்ப்ராப்தோயம் விபூஷண:
லங்கைஸ்வர்யம் த்ருவம் ஸ்ரீமா நயம் ப்ராப்நோத்ய கண்டகம்.
யோவஜ்ரபாதா ஸநிஸந்நிபாதா ந்த சக்ஷ்பேநாபி சசாலராஜா,
நாரமபாணைபிஹதோ ப்ருஸதர் ஸ்ச சாலசா பஞ்ச முமோசவீர:
யஸ்யவிக்ரமமாஸாத்ய ராக்ஷஸாநிதநம்கதா:
தம்மநே ராகவம் வீரம் நாராயண மநாமயம்.
சதேதத்ருஸிரோராம் தஹர்தமரிவாஹிம்
மோஹிதா: பரமாஸ்த்ரண காந்தர்வேண மஹாத்மநா
ப்ரணம்யதேவதா ப்யஸ்ச ப்ராஹ்மணே ப்யஸ்ச மைதிலீ
பத்தாம் ஜலிபுடாசேத முவாசாக்நி ஸ்மீபத:.
சலநாத்பர்வதேந்த்ரஸ்ய கஹேதேவாஸ்சகம்பிதா:
சசால பார்வதீசாபி ததா ஸ்லிஷ்டா மஹேஸ்வரம்.
தாரா: யுத்ரா: புரம்ராஷ்ட்ரம் போகாச்சாதநபாஜநம்
ஸர்வமேவாவிபக்தம்நோ பவிஷ்யதி ஹரீஸ்வர.
யாமேவராத்ரிம் ஸத்ருக்ந: பர்ணஸாலால் ஸமாவிஸத்
தாமேவராத்ரிம் ஸீதாபி ப்ரஸூதா தாரகத்வயம்.

இப்படிப்பட்ட மஹாமந்திரத்தைச் சதாகாலமும் ஜபித்துக்கொண்டிருக்கும் மஹாத்மாக்களே எங்கள் இராமனிடம் எப்போதும் ரமித்துக்கொண்டிருப்பார்கள். உங்கள் கிருஷ்ணனுடைய காரியங்கள் அப்படிப்பட்டவைகளல்ல; ஆனால், எப்படிப்பட்டவைகளென்றால், பக்தர்களின் மனதை விஷயபோகங்களில் விசேஷமாய் ஓடும்படிச் செய்யப்பட்டவன். ஆகையால், கிருஷ்ணன் இராமனுக்குச் சமானமாகமாட்டான்.

ரோஹிதாஸ்:—சர்வோத்கிருஷ்டமான எல்லாவற்றிற்கும் மேலானதெய்வம் கிருஷ்ணமூர்த்தியே என்பதற்குச் சுகர் முதலான பரமபாகவதர்கள் சொல்வதுமேயல்லாமல் ஸ்ரீ மஹாபாகவதமே பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாயிருக்

கின்றது. உங்கள் இராமனைப்போன்ற பதினாயிரம் இரா
மன்கள் சேர்ந்தாலும் ஒருகிருஷ்ணமூர்த்திக்குச் சமான
மாகமாட்டார்கள். நல்லது, அதிருக்கட்டும். வேதவேத்
தியமாகிய பரபிரம்மமே தர்ம ஸ்தாபநார்த்தமாய் இராம
மூர்த்தியாக அவதரிக்கும்பக்ஷத்தில், வேதபாராயணம்
செய்யும் பிராமணவம்சத்தில் அவதரிக்காமல், க்ஷத்திரிய
வம்சத்தில் அவதரிப்பதற்குக் காரணமென்ன?

கபீர்:—துஷ்டர்களை சிக்ஷிப்பது பிராமணர்களுக்கு
விதியல்ல. ஆதலால், அவர் மிகவும் உத்தமமான க்ஷத்தி
ரியவம்சத்தில் அவதரித்தாரேயொழிய, உங்கள் கிருஷ்ண
னைப்போல் சாஸ்திரங்கள் தெரியாத மூடர்களின் வம்சத்
தில் பிறக்கவில்லை.

ரோஹிதாஸ்:—எங்கள் கிருஷ்ணமூர்த்தி யாதவ வம்
சத்தில் வளர்ந்தபோதிலும், கரித்துணியிலுள்ள மாணிக்கம்
போல் சதுர்புஜங்களுடன் அவதரித்தாரேயொழிய, உங்
கள் இராமனைப்போல் கேவல மனுஷ்யரூபமாய் அவதரித்
தவரல்ல. இவ்விதமாய் அவதரித்து பிரபஞ்சமெல்லாம்
ரக்ஷித்தார். உங்கள் இராமனுக்கு இரக்ஷிக்கும் சக்தி
யுண்டோ? கிருஷ்ணனுக்கும் இராமனுக்கும் விசேஷ தார
தம்மியமுண்டு.

கபீர்:—ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய சுக்கில நீல கேசங்
களின் அம்சமே இராமகிருஷ்ணர்களாய் அவதரித்தார்க
ளென்று பாரதம் முதலாகிய கிரந்தங்களில்சொல்லப்பட்டி
ருக்கின்றன. எங்கள் இராமமூர்த்தி விஷ்ணுவினுடைய அம்
சத்தில் அவதரித்தவரென்றும் அதனாலேயே அவருக்கு
இரண்டுபுஜங்கள் உண்டாயிற்றென்றும், மற்ற இரண்டு
புஜங்களில் ஓர் புஜாம்சம் பரதனென்றும், மற்றொரு புஜாம்
சம் லக்ஷ்மண சத்ருக்கனென்றும் ஸ்ரீ ராமாயணத்தில்
சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், எங்கள் இராம

மூர்த்தி விஷ்ணுமூர்த்தியினுடைய பூர்ணாம்சமென்று சொல்லுவதற்குச் சிறிதேனும் சந்தேகமில்லை.

ரோஹிதாஸ்:—அப்படியானால், மானவஜனங்களுக்கு அசாத்தியமான கோவர்த்தனகிரியை கிருஷ்ணமூர்த்தி மிகவும் சுலபமாய்எடுத்துச் சுண்டுவிரலால் பிடித்தது போல், உங்கள் இராமன் ஏதாகிலும்பிடித்தானா?

கபீர்:—ஆஹா! எவ்வளவு ஆச்சரியமான விஷயத்தைச் சொல்லவந்தாய்! எங்கேயோ கிடக்கும் ஓர் உதவாத சிறியமலையைச் சுமந்தமாத்திரத்தில் என்னவிசேஷம்? எங்கள் இராமமூர்த்தியின் பாதம் பட்டமாத்திரத்தில் கல்லாயிருந்தது ஸ்திரீயாய் எழுந்திருக்கவில்லையா? அவர்சேவகனாகிய அநுமான் பெரிய பருவதங்களையெல்லாம் புஷ்பச்செண்டுபோல் எடுத்து ஜலத்தின்மீது மெதுவாய்வைத்து மிதக்கும்படிச் செய்யவில்லையா? இப்படிப்பட்டவைகள் ஏதாகிலும் உங்கள்கிருஷ்ணமூர்த்தி செய்தானா சொல் பார்ப்போம்?

ரோஹிதாஸ்:—கல்லை ஸ்திரீயாய்ச்செய்த உங்களிராமன், ஸ்திரீஹத்திதோஷமென்று சிறிதாகிலும் எண்ணாமல் குற்றமில்லாத தாடகியை சம்மரித்தானல்லவா? உத்தம க்ஷத்திரியனாயிருந்தும் அப்படிப்பட்ட ஸ்திரீஹத்தியை செய்யலாமா?

கபீர்:—அன்னமிட்டவன் வீட்டில் கன்னமிடுவதுபோல் மிகவும் பிரேமையுடன் முலைகொடுத்த பூதகியை நிஷ்காரணமாய்க்கொன்று உங்கள்கிருஷ்ணன் பாபம்சம்பாதித்துக்கொண்டதுபோல் எங்கள் இராமமூர்த்தி ஏதாகிலும் அப்படிச்செய்தாரா? தாடகி தர்மகாரியங்களைவிட்டு ரிஷிகள்செய்யும் யக்கியாதிகளை நாசம்செய்து அவர்களுக்கு விசேஷபாதையை உண்டாக்கிக்கொண்டிருந்தபடியால், அவளை எங்கள் இராமமூர்த்தி பாணத்தினால் பரமபதத்

திற்குச் செல்லும்படி அனுப்பினாரேயன்றி வேறு காரணத்தாலல்ல.

ரோஹிதாஸ்:—பாபிகளை அவசியமாய்க் கொல்ல வேண்டுமென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பதனால், பூதகி பட்டினத்திலுள்ள எல்லாக்குழந்தைகளுக்கும் பால்கொடுத்துக்கொன்றுகொண்டு வந்தபடியால், அப்படிபட்ட பாதகியை எங்கள் கிருஷ்ணன் கொன்றானேயொழிய, மற்றப்படிக்கு வேறல்ல.

கபீர்:—இடைப்பாளயத்தில் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கும் இடையனுக்கு அவ்வளவு சாஸ்திர ஞானமும் உண்டாயிற்று!

ரோஹிதாஸ்:—சர்வஞ்ஞனை பரப்பிரம்ம சொரூபனுக்குத் தெரியாத விஷயமும் ஒன்றுண்டோ? பரப்பிரம்மமே கிருஷ்ணாவதாரம் எடுத்தபோது

கபீர்:—சர்வஞ்ஞனை சாந்தீயனிடம் வித்தையை அப்பியசிக்கவேண்டியதேன்?

ரோஹிதாஸ்:—உங்கள் இராமன்மாத்திரம் குருசேவைசெய்து வித்தையை அப்பியசிக்கவில்லையா?

கபீர்:—எங்கள் இராமன் விஷ்ணுவினுடைய பூர்ணாம்சமானபடியால் அவர் பூர்வம் விஸ்வாமித்திரனுக்குக் கொடுத்திருந்த பலா அதிபல என்னும் வித்தையை நிமிஷமாத்திரத்தில் அவரிடமிருந்து கிரகித்து சரணமடைந்தவரைக் காப்பாற்றும் மந்திரங்களை சம்பூரணமாய்ப் பெற்றுக்கொண்டார் உங்கள் கிருஷ்ணனுக்கு அப்படிப்பட்ட சக்தி ஏதாகிலுமுண்டா?

ரோஹிதாஸ்:—ஆஹா! எங்கள்கிருஷ்ணமூர்த்தி சர்வசக்தியுடையவனென்பதற்குச் சந்தேகமில்லை. தேவதைகளால் உண்டாக்கிய மந்திரங்களை அக்கினியில் ஓமம்செய்தால் தேவதைகளுக்கு எப்படி பிரீதியுண்டாகின்றதோ

அதுபோல், தன்னால் ஏற்படுத்திய வேதங்களைத் தானே சொல்லிக்கொள்வதனால் தர்மவிதிக்கு அனர்த்த முண்டாகுமென்றுஎண்ணி, குருசேவை செய்து அறுபதுதினத்திற்குள் அறுபத்துநான்கு வித்தைகளையும் மிகவும் சுலபமாய்க்கிரகித்தார். இப்படிக் கிரகித்ததனாலேயே அவரை சர்வஞ்ஞன் அல்லவென்று சொல்லலாமா?

கபீர்:—அப்படிப்பட்ட தர்மவிதி இருப்பதனால் தான் இடையர்களின்வீட்டில் பால் தயிர் வெண்ணைகளைத்திருடினானல்லவென்று பொய்சொல்ல ஆரம்பித்தான்.

ரோஹிதாஸ்:—ஆறு சாஸ்திரங்களையும் நன்றாய் வாசித்தவனே வேதசாஸ்திரங்களிலுள்ள சாராம்சங்களை நன்றாய் அறிவான். இப்படி அறிந்தவன் பகவத்விலாச யதார்த்த குணங்களைக் கிரகிப்பான். ஆதலால், நீ எந்த சாஸ்த்திரங்களையும் வாசிக்காதவனாதலால், இதன் அந்தரார்த்தம்தெரியாமல் வாயில் வந்தபடி உளறுகின்றாய். எங்கள் கிருஷ்ணமூர்த்தி பால் தயிர் வெண்ணை முதலாகிய பதார்த்தங்களைஎல்லாம் இடையர்கள்வீட்டில் நுழைந்து தின்றார் என்பது என்னவென்றால், தேகமென்னும் வீட்டில் போக போக்கிய பதார்த்தங்களே பால் தயிர் வெண்ணை என்றும், இவைகளை குருசேவை செய்து பக்தி ஞான வைராக்கியங்களினால் போக்கடிக்கவேண்டும் என்பதேயொழிய மற்றப்படிக்கு வேறல்ல. எங்கள் கிருஷ்ணன் சர்வஞ்ஞனும் சர்வசக்தனும் சர்வோத் கிருஷ்ணனாயும் இருப்பதனால்தான் மண்ணைத்தின்றான் என்னும் சந்தேகத்தினால் பரிசோதிக்க வாயைத்திறக்கும்படி யசோதாதேவி சொல்லியபோது கிருஷ்ணன் வாயைத்திறந்து விஸ்வரூபத்தைக் காட்டியதே முக்கியமான திருஷ்டாந்தமாயிருக்கின்றது. உங்கள இராமன் அப்படிப்பட்ட காரியங்கள் ஏதாகிலும் செய்தானா?

கபீர்:—பாமரஜனங்களின் இருதயத்தைக்கவரும் இந்திரஜாலம்போன்ற கண்கட்டி வித்தைகளால் பாமர ஸ்திரீகளைக்கவர்ந்தது ஓர் பெரிய காரியமல்ல. ஆதலால், மனது பரிபக்குவமாகாத ஸ்திரீக்குக் காட்டியதனால் கௌரவமென்ன? அனேக வருஷங்களாய் பக்தி வைராக்கியங்களுடன் பூஜைசெய்து பரிபக்குவம்அடைந்த பார்வதீ பரமேஸ்வரர்களுக்குமாத்திரம் எங்கள் இராமமூர்த்தி விஸ்வரூப தரிசனம் காட்டினாரேயொழிய, உங்கள் கிருஷ்ணனைப்போல் கேவல ஸ்திரீக்குக் காட்டினவரல்ல. அன்றியும் உங்கள் கிருஷ்ணனையே எல்லோரும் ஸ்மரணை செய்ய வேண்டுமென்னும்விஷயம் வாஸ்தவமாயிருக்கும் பக்ஷத்தில் அவன் துச்சசுகமாகிய காமபோகத்திற்கு ஆசைப்பட்டுத் தன்னை ஆசிரயித்திருந்த கோபிகாஸ்திரீகளை மோகித்து, மன்மதவிகாரத்திற்காக ஜாரவிருத்திக்கு ஏன் பிரவேசித்தான்?

ரோஹிதாஸ்:—எங்கள்கிருஷ்ணனுக்கு தாமரை இலையில் ஒட்டாமல்இருக்கும் ஜலம்போல், சுலபமாகிய நல்ல கலியாணகுணங்கள் இருப்பதனாலும், விஷயவியாபாரங்களில் இச்சையில்லாமல் ருஷீகேசவனாய் இருப்பதனாலும் தன்னை ஆசிரயித்த கோபிகைகளின் மனது சதாகாலமும் எங்கள் கிருஷ்ணன்மீது ரமிக்கும்படிச் செய்தாரேயொழிய அவர்களை மோகித்தவரல்ல. உங்கள் இராமனுக்கு அப்படிப்பட்ட சக்தி இல்லாததனால், சம்சாரமென்னும் பாழுஞ்சேற்றில் மூழ்கியிருக்கும் பாமரஜனங்களைக்காப்பாற்றச் சக்தியில்லாமல் போனதால், அப்படிப்பட்ட காரியங்களில் பிரவேசிக்கவில்லை. ஆதலால், அவனை சர்வஞ்ஞனென்று சொல்லலாகாது;

கபீர்:—எங்கள் இராமனை ஆசிரயித்திருந்த முமுக்ஷுக்களையெல்லாம், வதைசெய்துகொண்டிருந்த நீச

ராக்ஷசனாகிய மாரீசனை சம்மாரம்செய்ததால் அவர் சர்வசக்தியுடையவரென்று தெரியவில்லையா? கோபிகாஸ்திரீகளின் சிரவண மனன நிதித்தியாசனங்களுக்கு இஷ்டதெய்வமாய் இருந்தவைகளை எல்லாம் உங்கள் கிருஷ்ணன் உச்சிஷ்டம்செய்து அவர்களின் லக்ஷியார்த்தங்களை எல்லாம் கெடுத்ததுபோல் எங்கள் இராமமூர்த்தி ஏதாகிலும் செய்தாரா?

ரோஹிதாஸ:—"சர்வம் கல்விதம் பிரஹ்ம" என்னும் சுருதிவாக்கியரீதியாய் தேவ மனுஷ்ய ஸ்தாவரங்களாகிய சர்வபிரபஞ்சத்திற்கெல்லாம் தானே பரமாத்மசொரூபமாயிருக்க, கோபிகைகள் கிருஷ்ணனைவிட இதரதேவதைகள் உண்டென்றுஎண்ணி அந்தத் தேவதைகளை ஆராதித்து வந்தபடியால், அவைகளை உச்சிஷ்டம்செய்து அவர்களின் லக்ஷியங்களைத் தன்னிடம் நிறுத்துவதற்காகச் செய்தாரேயொழிய மற்றப்படிக்கு வேறல்ல. நல்ல அன்னத்தை விட்டு உச்சிஷ்ட (எச்சல்) அன்னத்தைப் புஜிப்பதுபோல், சர்வத்திற்கும் கிருஷ்ணனே பரமாத்மசொரூபமாயிருக்கத் தன்னைவிட இதரதேவதைகள் உண்டென்று பூஜை செய்யவேண்டியதேன்? இதை நீரே சற்று ஆலோசித்துப்பாரும். அன்றியும், உங்கள் இராமன் பரமாத்மசொரூபமாயிருக்கும்பக்ஷத்தில் ஸ்திரீ லோலனாயிருக்கும விஸ்வாமித்திரனை ஆசிரயித்து ஞானம் சம்பாதிக்கவேண்டியதேன்?

கபீர்:—"தர்மஸம் ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமியுகே யுகே" "ஸ்ருதி ஸ்ம்ருதிர்மை வாஜ்ஞா" என்றிருப்பதனால் எங்கள் இராமமூர்த்தி சந்திரவம்சத்தில் பிறந்தபடியால் யதாவிதியாய் விஸ்வாமித்திரர்மூலமாய் உபநயனாதிகள் நடந்து சாந்தீபரிடம் வேதங்களைவாசித்து நிர்மலசித்தமுடையவராயிருந்தார். இப்படிப்பட்ட கர்மங்களை நடத்தாமலும் பால்யத்தில் வேதங்களை வாசிக்காமலும் துஷ்ட

காரியங்களில் பிரவேசித்த உங்கள் கிருஷ்ணனுக்கு குருத்வம் எங்கிருந்துஉண்டாகும்?

ரோஹிதாஸ்:—"தத்புத்தய ஸ்ததாத்மாந ஸ்தந்நிஷ்டாஸ் தத்பராயணா꞉; கச்சம் தயபுநராவ்ருத்திம் ஜ்ஞாநாநிர்த்தூதகல்மஷா꞉" என்னும் வாக்கியரீதியாய் எங்கள் கிருஷ்ணமூர்த்தி பரமாத்மசொரூபமா யிருப்பதனால், லௌகீகதருமத்தில்இருந்து கோபிகைகளுடன் கூடியிருந்தாலும், அவர்களுடன் பிள்ளைப்பூச்சியைப்போல் பற்றுமவிருப்பார். உங்கள் இராமனுக்கு விஷயபோகங்களில் இச்சையில்லாவிட்டால், பார்யாளுக்காக விஸ்வாமித்திரருடன் ஏன் போகவேண்டும்?

கபீர்:—பெரியோர்களின் ஆதீனத்தில் இருக்கப்பட்டவர்கள், அவர்களின் இஷ்டம்போல் நடந்துகொள்வது முக்கியமானதருமமாதலால், விஸ்வாமித்திரர் இஷ்டம்போல் ததுர் தர்சனார்த்தமாய் விஸ்வாமித்திரருடன் மிதிலாபுரம்சென்றாரேயொழிய பாரியாளுக்காக அல்ல. ஒருவேளை நீ சொல்லிய வார்த்தைக்குச் சம்மதித்தபோதிலும், "ராகவத்வே பகவத்வீதா" என்னும் பிரமாணவாக்கியரீதியாய்த் தன்னுடன்கூட அவதரித்த லக்ஷ்மிதேவி அம்சம் அங்கு நிவசித்துக்கொண்டிருப்பதால், தன்வஸ்துவைத் தான் கொண்டுவர லோபமில்லாமல் சென்றாரேயொழிய உங்கள் கிருஷ்ணன் அம்மானாகிய கம்சனைக்கொல்லச் சென்றதுபோல் செல்லவில்லை.

ரோஹிதாஸ்:—"தாநவாநாம் விநாசாய பாண்டவாநாம் ஹிதாயச" என்னும் பிராமணவாக்கியரீதியாய் அசுரவம்சத்தில்பிறந்து அக்கிரமங்களுக்குஉட்பட்டு முனிவர்களையும் தேவர்களையும் கஷ்டப்படுத்திக்கொண்டிருந்தபடியால் தேவர்க ளெல்லோரும் மஹாவிஷ்ணுவைப் பிரார்த்தனைச்செய்தார்கள். அப்போது மஹாவிஷ்ணு

வானவர் கம்சனைக்கொல்ல கிருஷ்ணாவதாரம் எடுத்தபோது அவரால் தனக்கு மரணம்சம்பவிக்கப் போகின்றதென்று சதாகாலமும் எங்கள் கிருஷ்ணனையே கம்சன் ஸ்மரித்துக் கொண்டிருந்தபடியால், துஷ்ட நிக்கிரகம் சிஷ்ட பரிபாலனம் என்பதுபோல் துஷ்டனாகிய கம்சனை சம்மாரம் செய்து அவன் சதாகாலமும் கிருஷ்ணனையே ஸ்மரித்துக் கொண்டிருந்தபடியால் அவனைத் தன்னில் ஐக்கியம்செய்து கொண்டார். இதுபோல் தாடகியைக்கொன்ற உங்கள் இராமன் அவளைத் தன்னில் ஐக்கியஞ்செய்துகொண்டானா?

கபீர்:—பூர்வம் காலநியமன் என்னும் ராக்ஷதனை மஹாவிஷ்ணுவானவர் சம்மாரம்செய்தபோது, அவன் சிரவண மனன நிதித்தியாசனங்கள் செய்யாததனால், மறுபடியும் கம்சனாய் ஜனித்து சிரவண மனன நிதித்தியாசனங்களைச்செய்து முடித்தபடியால் சாயுஜ்யபதவியை அடைந்தான். அதுபோல், தாடகி முதலானவர்களுக்குச் சாயுஜ்ய பதவி சித்தியாகாமற்போயிற்று. உங்கள் கிருஷ்ணன் அகாசுர பகாசுர திருணாவர்த்த சகடாசுர முதலாகிய இன்னும் அனேகராக்ஷசர்களைக்கொன்றானல்லவா? அவர்களை ஏதாகிலும் தன்னில் ஐக்கியம்செய்துகொண்டானா? இதன்றியும் அவன்செய்த பெருத்தகுற்றமொன்றுண்டு. அது ஏதென்றால், யுத்தத்திற்கு பிரயத்தனப்பட்டு இருவரும் சரிசமமாய் நின்று எதிர்த்தபோதுமாத்திரம் யுத்தம்செய்யவேண்டுமென்று சுருதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு விரோதமாய் உங்கள் கிருஷ்ணன் அம்சதூளிகாமஞ்சத்தில் சயனித்துக்கொண்டிருக்கும் கம்சனைக்கொன்று பாபம்சம்பாதித்துக் கொண்டு தாய் தந்தைகளின் வார்த்தையைமீறி காளிங்கன்என்னும் ஸர்ப்பத்தினிடம் சென்று தன்பந்துஜனங்களுக்கெல்லாம் வியசனத்தைஉண்டாக்கிய உங்கள்கி

ருஷ்ணனைப் போல் எங்கள் இராமன் தாய் தந்தையர்களுக்கு வியசனத்தை உண்டாக்கினரல்ல.

க்கு வியசனத்தை உண்டாக்கும்விஷஜ்வாலையை

ரோஹிதாஸ்:—சர்வ ஜந்துக்களுக்கும்விஷஜ்வாலையை வீசிக்கொண்டிருந்த காளிங்கன் என்னும் சர்ப்பத்தின் கர்வத்தை அடக்கி, எல்லோருக்கும்சுகத்தைஉண்டாக்குவதற்காக அப்படிப்பட்ட லீலையைச் செய்தாரேயொழிய உங்கள்இராமனைப்போல் வனவாசம்சென்று ஜனனீ ஜனகர்களுக்கு வியசனத்தைஉண்டாக்கி அதனால் மரண மடைந்த தன் தந்தையின் முகத்தை மறுபடியும் பார்க்காமல் போன துபோல் எங்கள்கிருஷ்ணன் செய்யவில்லை.

கபீர்:—ஸ்ரீ ராமரை கைகேசி பதினான்குவருஷங்கள் வனவாசம்செய்யவேண்டுமென்று ஆஞ்ஞாபித்தபடியால், மஹாபிரசாதமென்றுஒப்புக்கொண்டு பதினான்குவருஷங்கள்முடியும்வரையில் தன்பட்டணம் பிரவேசிப்பதில்லையென்று பிரதிக்ஞைசெய்துகொண்டபடியால் தசரதர் புத்திரன்மீதிருந்தபிரீதியால், சதாகாலமும் அவரையே ஸ்மரித்துக்கொண்டு பிராணனைவிட்டபடியால் அவர் புண்ணியலோகத்தைஅடைந்தாரேயொழிய உங்கள் கிருஷ்ணன் எட்டாவதுபிள்ளையாய்ப் பிறக்கப்போகின்றான்என்று கம்சன்கேட்டமாத்திரத்தில் கிருஷ்ணன் தாயைச் சிறைச்சாலையி லடைத்துவைத்ததுபோல் எங்கள் இராமமூர்த்திச் செய்விக்கவில்லை.

ரோஹிதாஸ்:—சிஷ்டர்களைக் கஷ்டப்படுத்துவது துஷ்டர்களுக்குச் சகஜகுணமாதலால், நாரதர்வந்து யுக்ரசேன வசுதேவர்கள் தேவாம்சமென்றும் மற்றவர்கள் தானவாம்சமென்றும் சொன்னவுடன் கம்சன் அஹங்காரங்கொண்டு தேவகிதேவியை சிறைச்சாலையில் வைத்தானேயொழிய எங்கள் கிருஷ்ணனாலல்ல; தேவகிதேவி சிலநாள் சிறைச்சாலையில் இருக்கவேண்டுமென்று அவளுக்

குப் பிராரப்தகர்ம மிருந்தது. எங்கள் கிருஷ்ணமூர்த்
திக்கு இதில் யாதொருசம்பந்தமும்இல்லை. துஷ்டனைக்
கொல்ல குற்றம்ஒன்றுஇருக்கவேண்டும். ஆதலால், கம்சன்
செய்யும் அக்கிரமங்களை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்து
சமயம்வரும்வரையில், எங்கள் கிருஷ்ணன் எதிலும்பிரவே
சித்தவரல்ல. இந்திரஜித்துவின் நாகபாசஅஸ்திரத்தினுல்
கட்டுண்டதை விடுவித்துக்கொள்ளச் சக்தியில்லாத உங்கள்
ராமன் பக்தர்களின்பந்தங்களை எவ்விதமாய்விடுவிப்பான்.

கபீர்:—ஜீவன்முக்தர்களைச் சம்சாரமென்னும் பந்தம்
பற்றுமல்இருப்பதுபோல் எங்கள் இராமமூர்த்தியை நாக
பாசம் சுற்றிக்கொண்டபோதிலும் மூர்ச்சையாகாமல்
இருந்தாரேயொழிய காளிங்கனென்னும் சர்ப்பத்தால் கடி
யுண்டு மூர்ச்சையாய்விழுந்துகிடந்த உங்கள்கிருஷ்ணனைப்
போல் எங்கள்இராமன்இருக்கவில்லை.

ரோஹிதாஸ்:—"கருடத்வஜாநு ஸ்மரணாத் விஷவீர்
யம் ப்ரஸாம்யதி" என்னும்வாக்கியரீதியாய் சங்கரன் விஷ
பானம்செய்து எங்கள்கிருஷ்ணனை ஸ்மரித்தமாத்திரத்தில்
விஷதோஷம்நீங்கியிருக்க காளிங்கன்விஷம் எங்கள்கிருஷ்
ணனை என்னசெய்யும்? மாயா மிருகத்தைத் துரத்திக்
கொண்டுமோசம்போன இராமனைப்போல் எங்கள்கிருஷ்
ணன் மோசம்போகவில்லை.

கபீர்:—சீதையைக் கொண்டுபோக மாரீசனை சகாய
மாய்வரும்படி இராவணன் கேட்டுக்கொண்டபடியால்,

"இஹ ப்ரவ்ராஜிதோ யுக்தஸ்தாபஸோஹம் ஸமத:; வருக்ஷே
வ்ருக்ஷே பஸ்யாமி சீரக்ருஷ்ணாஜிநாம்பரம்; ராமபூதமிதம்ஸர்வ
மரண்யம் ப்ரபாதிமே; ராமமேவ ஹிபஸ்யாமி ரஹிதே ராக்ஷஸா
திப; த்ருஷ்ட்வாஸ்வப்ந கதம்ராம முத்ப்ரமாமி விசேதந:; பலிம்
ஸா நமுசிம்வாபி ஹர்யாத்தி ரகுநந்தந;"

மாரீசனுக்குக் காடெல்லாம் இராமமயமாய்த் தோன்
றியதுமேயல்லாமல் சொப்பனத்திலும் இராமனைக்கண்டு
அதிகபயமுடையவனுய் சதாகாலமும் இராமனையே ஸ்ம
ரித்துக்கொண்டு மாரீசன் மாயமான்ரூபமெடுத்தபோது
அவனுக்குச் சாயுஜ்யபதவியைக் கொடுப்பதற்காக அப்
படிப்பட்ட லீலையைச்செய்தாரேயொழிய மோகத்தினுல்
மோசம்போனவரல்ல; உங்கள்கிருஷ்ணனுக்குப் பால்லிய
சினேகிதனுன குசேலன் மிகவும்கஷ்டதசையை அனுப
வித்துக்கொண்டிருந்தபோதிலும் குசேலனை விசாரிக்காம
லிருந்ததனுல் சிலநாட்சென்றபிறகு, அவரே கிருஷ்ணனி
டம்வந்தபோது கிருஷ்ணன் உபசாரங்களால் சந்தோஷப்
படுத்தி அவர்கொண்டுவந்த அவலையும்பெற்றுக்கொண்டு
வெறுங்கையாய்அனுப்பி அவர்அதிருஷ்டத்தினுல் வந்த
ஐஸ்வரியங்களைஎல்லாம் தன்னுல்கிடைத்ததென்று கௌர
வம்பெற்றுனல்லவா!

ரோஹிதாஸ்:—குசேலருக்கு மஹாஐஸ்வரியம் அவர்
அதிருஷ்டத்தினுல்வந்ததல்ல. அவர்பூர்வஜன்மங்களில்
செய்த சத்கர்மங்களெல்லாம் பகவதார்ப்பணமாய்ச்செய்
தாரேயொழிய பலாபேக்ஷையுடன்செய்தவரல்ல. ஆத
லால், அவர் இந்தஜன்மத்தில் மிகவும் தரித்திராய்ப்பிறந்
தார். எங்கள்கிருஷ்ணமூர்த்தி சர்வசக்தன். ஆதலால்,
குசேலன் இப்போது பலாபேக்ஷையுடன் அவல்கொண்டு
வந்தபடியால், அதை அவர் பலாத்காரமாய்வாங்கி ஓர்பிடி
அவல்சாப்பிட்டு இந்தஜன்மத்தில் அஷ்ட ஐஸ்வரியங்களை
அனுபவிக்கச் சங்கல்பித்தார். உங்கள்இராமன் இப்படிப்
பட்டகாரியங்களை ஏதாகிலும்செய்தானு?

கபீர்:—ஏழை பிராமணனுகிய குசேலனிடம் அவல்
லஞ்சம்பெற்று ஐஸ்வரியத்தைக்கொடுத்தது ஓர்பெருமை
யாய்ச்சொல்லவந்தாய்! சரணமடைந்த விபீஷணனை சத்து

ருவினது சகோதரன்என்றும்எண்ணுமல், பரிபூர்ணனுக்கிரகத்துடன் எங்கள்இராமமூர்த்தி ஆசிர்வதித்து இலங்கையை பட்டாபிஷேகம் செய்துவைத்தார். எங்கள் இராமமூர்த்தி பூலோகத்தில்அவதரித்து இருபத்தெட்டு குருதயுகங்களாகியும் அவர் காலத்திலிருந்த இராமடங்கி லக்ஷ்மணடங்கிஎன்னும் நாணயங்கள் இதுவரையிலும் இருந்துகொண்டுவருகின்றன. அன்றியும் அவர் கடலைக் கடப்பதற்காக வானரங்களால்கட்டிவைத்த சேது என்பது இப்போதும் யாத்திரைவாசிகளுக்குப் பெறுத்த க்ஷேத்திரமாய் இருக்கின்றது. உங்கள்கிருஷ்ணன் நேற்றைய துவாபரயுகத்தில்பிறந்திருந்தும் இப்படிப்பட்டதிருஷ்டாந்தங்கள் எதுவும்செய்யவில்லை. இதனால் உங்கள்கிருஷ்ணன் சாமான்ய மனிதனே என்று சொல்லலாம்.

ரோஹிதாஸ்:—எங்கள் கிருஷ்ணமூர்த்திசெய்த லீலைகளுக்கு அநேகதிருஷ்டாந்தங்கள்உண்டு. அது எதென்றால், யமுனாநதிஓரமாய் கோகுலபிருந்தாவனமென்றும், தென்சமுத்திர சமீபமாய், துவாரகை என்றும் பிரசித்தியடைந்த பெரிய புண்ணியக்ஷேத்திரம்உண்டு. அந்த க்ஷேத்திரங்களுக்கு நாளதுவரையில் அனேகர்கள்சென்று யாத்திரைசெய்து வருகின்றார்கள். அங்குள்ள தனவான்கள்எல்லோரும் எங்கள்கிருஷ்ணமூர்த்தி அனுக்கிரகத்தினால்வந்தவர்கள். அங்குள்ளவர்கள் கிருஷ்ணனை பூஜிக்கப்பட்டவர்களுக்குமாத்திரம் பொருள் உதவிசெய்வார்களேயொழிய இதரர்களுக்கு உதவிசெய்யார்கள். அவர் நாமத்தை இப்போதுஉச்சரிப்பது பிரபலமாயிருக்க, அவர் காலத்தில் எவ்விதமாயிருக்குமென்று எல்லோரும் யோசித்தால் தெரியவரும். வைதிக கர்மங்களை அனுஷ்டித்துவரப்பட்டவர்களுக்கு கிருஷ்ணனை ஸ்மரிப்பதே முக்கியமான தர்மம் "ப்ரஹ்மண்யோ தேவகீ புத்ரோ ப்ரஹ்

மண்யோ மதுஸூதநः; ப்ரஹ்மண்யம் புண்டரீகாக்ஷா"
"கஸ்யாஸம் புண்டரீக மிவாஸ்யாக்ஷிணி" என்னும் வேத
வாக்கியரீதியாய் எங்கள்கிருஷ்ணமூர்த்தி சாக்ஷத் பரப்
பிரம்மமென்று சொல்லப்படுகின்றான். உங்கள்இராமன்
பரப் பிரம்மாயிருந்தால் வேதவேதத்தியங்கள் ஏன் இல்லா
மற்போயிற்று.

கபீர்:—"தேவாநாம் பூரயோத்யாத ஸாங்க்யம்
ஜ்யோதிஷா ஹிரண்மய: கோஸ: ஸுவர்கோ லோகோ
வ்ருத:" என்னும் சுருதிப்பிரமாணரீதியாய் அரசன் தன்
தேசங்களைப்பார்க்கச்செல்லும்போது குடாரம் முதலான
வைகளை முன்னிட்டுஅனுப்பி தயார்செய்வித்துப் பிறகு
தான் செல்வதுபோல் எங்கள்இராமமூர்த்தி துஷ்டராக்ஷ
தர்களை சிக்ஷிப்பதற்காக பூலோகத்தில்அவதரிப்பதற்கு
முன்பே தன் பெயருள்ள அயோத்திமாநகரத்தைச்
சிருஷ்டிசெய்துவைத்துப் பிறகு தான் அந்நகரத்தில் பிர
வேசித்தார். வேதங்களில் பிரசித்தியாய்ச்சொல்லப்படும்
அந்நகரத்திற்கு அதிதேவதையாயிருக்கும் எங்கள் ஸ்ரீராம
மூர்த்தியைப் பரப்பிரம்மமென்பதற்குச் சந்தேகமில்லை.

"வால்மீகி ரபவத்ப்ரஹ்மா நாணி வாக்தஸ்ய ரூபிணீ; சகார
ராம சரிதம்பாவநம் சரிதவ்ரதே; காயத்ரியாணிசதவாரி றவேத்
வேத்ரீண்யத ஷட்க்ரமாத்; சத்வாரி ஸப்தகாண்டேஷு ஸ்தாபி
தாந்யக்ஷராணிது; புண்யம் வேதைஸச்ச ஸம்மிதம்; வேத: ப்ராசே
தஸாதாஸீத் ஸாக்ஷாத்ரா மாயணாத்மநா"

வால்மீகியே சதுர்முக பிரம்மதேவனென்றும், அவர் வாக்கே சரஸ்வதிஎன்றும், அவர் பரமபவித்திரமாகிய காயத்திரியிலுள்ள இருபத்துநான்கு அக்ஷரங்களில் மூன்று அக்ஷரங்கள் பாலகாண்டமென்றும், நான்குஅக்ஷரங்கள் அயோத்தியாகாண்டமென்றும், இரண்டுஅக்ஷரங்கள் ஆரண்ணியகாண்டமென்றும், இரண்டுஅக்ஷரங்கள் கிஷ்கிந்தா

காண்டமென்றும், மூன்றுஅக்ஷரங்கள் சுந்தர காண்டமென்றும், ஆறுஅக்ஷரங்கள் யுத்தகாண்டமென்றும், நான்கு அக்ஷரங்கள் உத்தரகாண்டமென்றும் சேர்த்து லோகோபகாரார்த்தமாய் இராமாயணரூபமான வேதத்தைஉண்டாக்கினபடியால், எங்கள்இராமமூர்த்தியே வேதவேத்தியனென்று சொல்லப்படுகின்றான்.

“ராமஏவ பரம்ப்ரஹ்மா ராமஏவபரந்தப:; ராமஏவ பரந்தத்வம் ஸ்ரீராமோ ப்ரஹ்மதாரகம்: ஓம் யோஹவை ஸ்ரீ பரமாத்மா நாராயணஸ்ச பகவாந் தத்பரத பரமபுருஷ: புராண புருஷோத்தமோ நித்யஸுத்த புத்த முக்த ஸத்ய ப்ரமாநம் தாநந்தாத்வய பரிபூரண: ப்ரஹ்மைவாஹம் ராமோஸ்மி பூர் புவஸ்வஸ்தஸ்மைவை நமோ நம:”

இந்த உபநிஷத்துகளுக்கெல்லாம் எங்கள்இராமனே சாக்ஷாத் பரப் பிரம்மமென்று சொல்லப்படுகின்றது. மேலும் இராமகோடிமந்திரத்தைப் பூலோகத்திலுள்ள ஜனங்கள் எழுதி அதற்கு அனேகசந்தர்ப்பணைகளை நாளது வரையில் செய்துவருகின்றார்கள். உங்கள்கிருஷ்ணனிடம் இப்படிப்பட்ட பெருமைஇல்லாமல் சில குட்ரயுக்திகள் செய்து கௌரவர்களை நிர்மூலமாய்ச்செய்வித்து கடைசியில் குலக்ஷயமாகும்படிக் காந்தாரியால் சாபம்பெற்றதுபோல் எங்கள்இராமமூர்த்தி எந்தவுஷ்டகாரியங்களையும் செய்விக்கவில்லை.

ரோஹிதாஸ்:—எங்கள் கிஷ்ணமூர்த்தி அவ்வாறு சாபம்பெருவதற்குக்காரணம் நீ அறியவில்லை. தன் வம்சத்தில் பிறந்தவர்களெல்லோரும் அசுரர்கள். ஆதலால் அவர்கள் யுத்தரங்கத்தில் லக்ஷ்யம்வைக்காமல் ஜயிக்கப்பட்டவர்கள். அவர்கள்இருப்பதனால் உலகத்திற்கு விசேஷ பாதையை உண்டாக்குவார்களென்றும், அவர்களைச் சம்மாரம்செய்ய மறுபடியும் தான்அவதாரம்எடுக்க வேண்டு

மென்று யோசித்து, அவர்களை நாசம்செய்வதற்காக காந்தாரி இருதயத்தில் தானேயிருப்பதனால் அப்படிப்பட்ட சாபம் கொடுக்கும்படிச்செய்வித்தாரேயொழிய, உங்கள் ராமனைப்போல் இராவணனைக்கொன்று பிரம்மஹத்தி தோஷத்தை நிவர்த்திசெய்துகொள்வதற்காக தன் கையிலாகாமல் சேதுவில் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து பாபவிமோசனம் செய்துகொண்டவரைப்போல் செய்யவில்லை.

கபீர்:—துர்மார்க்கனாகிய இராவணனிடத்தில் பிராமணத்துவம் உண்டென்று ஸ்திரப்பட்டாலல்லவோ, பரிசுத்தமாகிய எங்கள்இராமமூர்த்திக்கு பிரம்மஹத்திதோஷம் உண்டாகுமென்று யோசிக்கவேண்டும். இராவணனுக்குப் பிராமணத்துவம் ஆசாரத்தினால் உண்டாயிற்றா? அம்சத்தினால் க்ஷேத்திர மகத்துவத்தினால் உண்டாயிற்றா? பிரம்ம பீஜத்தினால் உண்டாயிற்றா? ஜன்மத்தினால் உண்டாயிற்றா? அல்லது வேறுஎதனால் உண்டாயிற்று? அதை நீயே சற்று ஆலோசித்துச் சொல்பார்ப்போம். ஆசாரத்தினால்உண்டாயிற்றென்று சொன்னாலோ மிருக மனுஷ்ய முதலாகிய மாம்சங்களைச் சதாகாலமும் பக்ஷணை செய்து பரஸ்திரீகளை மோஹித்து சதாகாலமும் பாப கர்மங்களைச்செய்து எப்பொழுதும் துராசாரத்திலிருப்பவனாதலால், ஆசாரத்தினால் பிராமணத்துவம் உண்டாயிற்றென்று சொல்லலாகாது. க்ஷேத்திர மகத்துவத்தினால் உண்டாயிற்றென்று சொன்னாலோ கமாலிஎன்னும் துஷ்டராக்ஷதன் குமாரத்தியாகிய கைகேசிக்குப் பிறந்தவனாதலால், க்ஷேத்திர மகத்துவத்தினால் உண்டாயிற்றென்றாலோ சொல்லலாகாது. அம்சத்தினால் உண்டாயிற்றென்று பகவத்பாகவத துரோகம்செய்த இரண்யகசிப அம்சத்தில் பிறந்தவனாதலால் பிராமணத்துவம் உண்டாயிற்றென்றாலோ சொல்லலாகாது. ஜன்மத்தினால்உண்டாயிற்றென்றாலோ

அசுரவேளையாகிய சந்தியாவந்தனகாலத்தில் பிறந்தவனாதலால் பிராமணத்துவம் உண்டாயிற்றென்று சொல்லலாகாது. பிரமபீஜத்தினால் பிறந்தவனென்று சொன்னாலோ புலஸ்தியப் பிரம்மனுடைய சாபத்தினால் கர்ப்பம் தரித்து ஓர் ராஜ கன்னிகைக்குப் பிறந்த விஸ்ரவசுவின் வீரியத்திற்குப் பிறந்தவனாதலால் பிரமபீஜத்தினால் பிறந்தவனென்று சொல்லலாகாது. ஆதலால் தாமசகுணமுடையவனும் நீசனுமிருந்து உலகத்திலுள்ள ஜனங்களை எல்லாம் விசேஷமாய் வதைசெய்துகொண்டிருந்த இராவணனை சம்மாரம்செய்தபடியால் எங்கள் இராமமூர்த்திக்கு பிரம்மஹத்தி உண்டாயிற்றென்று சொல்வது ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. அந்த வமிசத்தில்வந்த கும்பகர்ணன் முதலாகிய துஷ்டராக்ஷதர்களை எல்லாம் சம்மாரம் செய்தபோது உண்டாகாத பிரம்மஹத்தி மிகவும் துன்மார்க்கனான இராவணனைச் சம்மாரஞ் செய்ததனால் பிரம்மஹத்தி உண்டாயிற்றென்று சொல்வது சரியானதல்ல.

"காணபத்யேஷு ஸைவேஷு ஸாக்தஸௌரேஷ்ய பீஷ்டதஃ; வைஷ்ணவேஷ்யபி ஸர்வேஷு ராமமந்த்ரஃ பலாதிகஃ; காணபத்யாதி மந்த்ரேஷு கோடிகோடிகுணாதிகஃ, மந்த்ரஸ்தேஷ்வப்யநாயாஸ பலதோயம் ஷடக்ஷரஃ; ஷடக்ஷரோயம் மந்த்ரஸ்யா ஸ்ஸர்வாகௌக நிவாரணஃ; மந்த்ரராஜ இதிப்ரோக்த ஸ்ஸர்வேஷா முத்தமோத்தமஃ; க்ருதம்திநே யத்துரிதம் பக்ஷமாஸர்த்து வர்ஷஜம்; ஸர்வம் தஹதி நிஸ்ஸேஷம் தூலாசல மிவாநலஃ; ப்ரஹ்மஹத்யா ஸஹஸ்ராணி ஜ்ஞாநாஜ்ஞாந க்ருதாநிச; ஸ்வர்ணஸ்தேய ஸுராபாந குருதல்பாயுதாநிச, கோடி கோடி ஸஹஸ்ராணி உபபாதகஜா ஜ்ஞபி; ஸர்வாண்யபி ப்ரணஸ்யந்தி ராமமந்த்ராநு கீர்த்தநாத்; பூதப்ரேத பிஸாசாத்யாஃ கூஸ்மாண்ட க்ரஹராக்ஷஸா ; தூராதேவ ப்ரதாவந்தி ராமமந்த்ர ப்ரபாவதஃ; ஐஹலௌகிக மைஸ்வர்யம் ஸ்வர்காத்யம் பாரலௌகிதம்; கைவல்யம் பகவத்வம்ச மந்த்ரோயங் ஸாதயிஷ்யதி; க்ராம்யாரண்ய

பஸுஷ்நத்யம் ஸஞ்சிதம் துரிதஞ்ச யத்; மத்ய பாநேந யத்பாபம் ததப்யாஸு விநாஸயேத்; அபக்ஷ்ய பக்ஷணோத்பந்நம் மித்யா ஜ்ஞாந ஸமுத்பவம். ஸர்வம் விலீயதே ராமமந்த்ரஸ்யா ஸ்யைவ கீர்த்திநாத், ஸ்ரோதி யஸ்வர்ண ஹாரணோத்டஸ்ச பாப முபஸ்திதம்; ரத்நா தேஸ் சாபஹாரேண ததப்யாஸு விநாஸயேத் ப்ராஹ்மணம் க்ஷத்ரியம் வைஸ்யம் ஸூத்ரம் ஹத்வாச கில்பிஷம்; ஸஞ்சிநோதி நரோ மோஹா த்யத்யத்ததபி நாஸயேத்; ஸம்யகாராதிதோ ராமஃ ப்ரஸீதத்யேவ ஸத்வரம்; ததாத்யாயுஷ்ய மைஸ்வர்ய மந்தே விஷ்ணுபந்தஸ் யத்" "அதிபஞ்சதண்டகாநி பித்ருக்நோ மாத்ருக்நோ ப்ரம்மக்நோ குருஹநநஃ கோடியதிக்நோ ரேகக்ருதபாபோ யோ மம ஷண்ணவதி கோடி நாமாநி ஜபதி தேப்யஃ பாபேப்யஃ ப்ரமுச்யதே ஸ்வயமேவ ஸச்சிதாநந்தஸ்வரூபோ பவேந்நகிம்."

பரமபவித்திரமான இராமமந்திரம் ஜபித்தவுடன் பிரம்மஹத்தி முதலாகிய மஹாபாவங்களெல்லாம் நாசமாகுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது; எங்கள் இராமமூர்த்தி விபீஷணனுக்கு உபதேசம்செய்தபோது தன் நாமத்தை தொண்ணூற்றாறுகோடிமுறை ஜபம்செய்தால் பிரம்மஹத்தி முதலாகிய மஹாபாபத்திலிருந்து விமுக்தனாய் பிரம்மசொரூபனாகின்றானென்று சொல்லியிருக்கின்றார். தாரகமந்திரப் பிரபாவத்தினாலேயே பரமசிவன் முதலானவர்கள் பிரம்மஹத்தி முதலாகிய பாபங்களிலிருந்து விடுபட்டு பவித்திரரானார்கள். பரமபவித்திரமாகிய தாரக பிரம்மத்திற்குப் பிரம்மஹத்தி தோஷம் எவ்வளவேனும் பற்றாதென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. பிரம்மதேவன் குமாரர்களாகிய சனகசனந்தனாதி முனிபுங்கவர்களால் சாபம்பெற்று அசுரர்களாய்ப் பிறந்த ஜய விஜயர்களை சாபவிமோசனர்களாய்ச் செய்து இரக்ஷிப்பதற்காகவே அவதரித்த பராபரன் இராவணனைக் கொன்றதனால் தோஷம் சம்பவித்ததென்று சொல்வது

சரியானதல்ல. தாமசகுணமுடைய ராவணனை சம்மாரம்
செய்ததனால் தாரகசொரூபனாகிய ஸ்ரீராமமூர்த்திக்குப்
பிரம்மஹத்தி உண்டாயிற்றென்று பரம பாஷாண்டிகளா
யிருக்கப்பட்டவர்கள் சொல்லுவார்களேயொழிய பண்டி
தர்கள் சொல்லார்கள். எங்கள்ராமமூர்த்தி, புத்திரசந்தா
னத்திற்காக கைலாசவாசனாகிய உருத்திரமூர்த்தியை ஆரா
தித்துப் புத்திரனைப்பெற்ற உங்கள் கிருஷ்ணமூர்த்தியைப்
போன்றவரல்ல.

ரோஹிதாஸ்:—"சதுர்ணாம் புருஷார்த்தாணாம் தாதா
வை தேவகீஸுத" என்னும் பிரமாணவாக்கியரீதியாய்
சர்வமும்தரத்தக்க எங்கள் கிருஷ்ணமூர்த்தி புத்திரனுக்
காக சிவனை பிரார்த்தித்தாரென்றுசொல்வது அறியாத்
தன்மையே. பூர்வம் "அஹம் மர்த்யாவதாரேஷு த்வாஞ்
சருத்ரமஹாபல; தாமஸா நாம் மோஹநாய பூஜயாமி
யுகேயுகே" "தேவகார்யநிமித்தேஷு மாநுஷத்வமுபா
கதஃ த்வாமேவா ராதயிஷ்யாமி த்வம்சமே வரதோபவ"

என்று பத்ம வராஹ புராணங்களில் சொல்லியது
போல் தேவர்களுக்காக பூலோகத்தில் மானவரூபமாய்
அவதரித்தபோது பாமரஜனங்களுக்கு புத்திரர்களின்மீது
மோஹம் உண்டாக்கும்படி தான் பரமசிவனை ஆராதிப்ப
தாய் வாக்தானம் செய்தபடியால் அவ்வாறு செய்ததே
யொழிய தனக்குப் புத்திரசந்தானம் வேண்டுமென்று
செய்தவரல்ல. அப்படி சக்தியில்லாவிட்டால் 'க்ருஷ்ண
க்ருஷ்ண மஹாபாஹோ ஜாநேத்வரம் புருஷம் பரம்'
என்று எங்கள் கிருஷ்ணமூர்த்தியை பரமசிவனே ஸ்துதி
செய்யவேண்டியதேன்? இவ்விதமாய் உங்கள் இராமனை
யாராகிலும் ஸ்துதிசெய்தார்களா?

கபீர்:—சாமான்யமான உங்கள் கிருஷ்ணனையே
ஸ்துதிசெய்யும்போது பரமாத்மசொரூபனாகிய எங்கள்

இராமமூர்த்தியை ஸ்துதிசெய்யாமல் இருப்பார்களா?
பிரம்மருத்திராதி தேவதைகளெல்லோரும் ஸ்துதிசெய்
திருக்கின்றார்கள்.

"பவாந்நாராயணோ தேவஸ்ரீமாந் சக்ராயுதோ விபுஃ; த்வம்த்ரய
ணாம் ஹிலோகாநா மாதிகர்த்தா ஸ்வயம்ப்ரபுஃ; ஸஹஸ்ரசரண
ஸ்ரீமாந் ஸதஸீர்ஷ ஸ்ஸஹஸ்ரத்ருக்; த்வம் தாரயஸி பூதாநி வஸு
தாந்தச ஸபர்வதாம்"

என்று பிரமதேவர் ஸ்துதிசெய்திருக்கின்றார். "ஸ்ரீ
ராமஸ்யமநுஃ, காஸ்யாம்ஜஜாபபரமேஸ்வரஃ, ஏலடாந்தேஷட
ராமஸ்யமநுஃ, காஸ்யாம்ஜஜாபபரமேஸ்வரஃ
க்ஷரம் ஜபந்தோமந்த்ர ஸித்தாஸ்யுஃ" என்று இராமோப
நிஷத்தில் சொல்லியதுபோல் பரமசிவன் தாரகமந்திரத்தி
னால், தான்கடைத்தேறினதுமல்லாமல், தன் பத்தினியா
கிய பார்வதிதேவியையும் கடைத்தேற்றினார். "ஸ்ரீராமரா
மேதி ரமேராமே மநோரமே; ஸஹஸ்ரநாம தத்துல்யம்
ராமநாம வராநநே" என்று பார்வதிதேவிக்கு உபதேசித்
திருக்கின்றார். "முமூர்ஷோர்த்தக்ஷிணே கர்ணேயஸ்ய
கஸ்யாபிவாஸ்வயம்; உபதேக்ஷ்யஸிமந்மந்த்ரம் ஸமுக்தோ
பவிதாஸிவ" மரணமடைந்த ஜந்துக்களின் வலதுகாதில்
தாரகமந்திரம் உபதேசித்தால் அவைகளெல்லாம மோ
க்ஷத்தைஅடையுமென்று எங்கள் இராமமூர்த்தி பரம
சிவனுக்கு உபதேசித்தபடியால் இப்போது காசியில் மரண
மடைந்தவர்களின் வலதுகாதில் பரமசிவன் தாரகமந்திரம்
உபதேசம்செய்கின்றார் என்பது நீ அறியாயா?

ரோஹிதாஸ்:—எங்கள்கிருஷ்ணமூர்த்தி பரப் பிரம்ம
சொரூபனாதலால், அர்ஜுநனுக்கும் உத்தவனுக்கும் பர
மார்த்தோபதேசம்செய்து அவர்களை கிருதார்த்தர்க
ளாய்ச்செய்வித்தார். அவ்வாறு ஏதாகிலும் உங்கள் ராம
மூர்த்தி செய்தானா?

கபீர்:—சாமான்யர்களான அர்ஜுனன் யுத்தவனுக்கு மாத்திரம் உங்கள்கிருஷ்ணன் பரமார்த்தோபதேசம் செய்தானேயொழிய எங்கள்இராமமூர்த்தியைப்போல் "அஷ்டமூர்த்தே விலஸ்யாஷீ த்வாயு ரூபாத்ஸுதோ பலீ; ஹநுமாந் கேஸரிக்ஷேத்ரே மகாரார்த்த ஸ்ஸ உச்யதே" பரமசிவன் அம்சத்தில் அவதரித்த அநுமான் மூர்த்திக்கும் பரமபாகதனான விபீஷணனுக்கும் பரமார்த்தோபதேசம் செய்து அவர்களை பரம பவித்திரர்களாய்ச் செய்திருக்கின்றார். இவருக்கும் கிருஷ்ணனுக்கும் இருக்கும் தாரதம்மியங்களை நீயே யோசித்துப்பார். இன்னும் உங்கள் கிருஷ்ணன் எப்படிப்பட்டவனென்றால், சுதர்ஸன சக்கரத்தினால் சூரியனை மறைத்து சத்யவந்தனாயிருக்கும் அர்ஜுனனை பலவந்தமாய் உச்சாகப்படுத்தி கௌரவர்களின் கண்களைக்கட்டி சைந்தவன்சிரசை அனியாயமாய்க் கண்டிக்கும்படிச்செய்தும், துரோணாசாரியரை ஜயிக்கச் சத்தியில்லாமல் தருமராஜனை "அஸ்வத்தாம ஹதாகுஞ்சரம்" என்று பொய்சொல்வித்தும் யுத்தத்தில் ஆயுதத்தைக் கையில் பிடிப்பதில்லை என்றுசொல்லி பிரதிக்ஞைசெய்து சத்தியம் தவறி சக்கரத்தினால் சூரியனை மூடியும் யுத்தத்தில் பூமியில் இறங்கியரதத்தை எடுக்க கர்னன் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கும்போது கர்னன்மீது அர்ஜுனனுக்கு கோபம்உண்டாகும்படிச் செய்து பாணத்தைவிடுவித்த இடையனை மஹா பெருமையாய்ச் சொல்ல வந்தாய்; போதும் போதும்; இனி, உன்பாரதத்தைக் கட்டிவையும்.

ரோஹிதாஸ்:—ஐயா! கபீர்! அவ்வளவு ஆத்திரப்படவேண்டாம்; எங்கள்கிருஷ்ணமூர்த்திசெய்த காரியங்கள் அனியாயமானதல்ல அந்தக்காரியங்களுக்கெல்லாம் காரணங்கள் இருக்கின்றன. காரணங்களைத் தெரிந்துகொள்ளாமலே பேசுவதனால் பிரயோஜனமென்ன? எந்தெந்த

சமயங்களில் எந்தெந்தக் காரியங்களை நடத்தவேண்டுமோ, அந்தந்த சமயங்களில் அந்தந்தக் காரியங்களை நடத்தவேண்டியது முக்கியமான தர்மம். சைந்தவன் துரோணர் கர்னன் முதலானவர்கள் யுத்தத்தில் அவ்வாறுமரணமடைய பிராரப்த மிருந்தபடியால் விதிப்பிரகாரம் நடந்தது. கிருஷ்ணன் அஸ்தத்தால் சக்கரம் எடுக்கும்படி செய்விக்கின்றேன்என்று பீஷ்மர் பிரதிக்ஞைசெய்து கொண்டார். பீஷ்மர் கிருஷ்ணனுக்கு அந்தரங்க பக்தனாயிருப்பதனால் அவர் பிரதிக்ஞையை நிறைவேற்றுவது கிருஷ்ணருக்கு முக்கிய தருமமாயிருப்பதனால் தன் பிரதிக்ஞையைமீறி அச்சக்கரத்தை அஸ்தத்தில்பிடித்தார். அவருக்குப் பக்தர்களின் மீதிருக்கும் கருணை இவ்வளவென்று சொல்லமுடியாது. பக்தர்களுக்காகத் தான் பொய்யனானாலும் அவருக்குச் சந்தோஷமே. அவர்களுக்கு எவ்வளவேனும் அபஜயம் உண்டாகும்படிச் சம்மதிக்கார். பிராணனுக்கு அபாயம் வருங்காலத்தில் பொய்சொல்வதனால் தோஷமில்லை என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலால், பிராணஅபாயகாலத்தில் தர்மராஜனால் பொய் சொல்லிவைத்தனால் பாபமில்லாமற்போயிற்று. துரியோதனன் நிறைந்தசபையில், துச்சாதனன் அக்கிரமமாய் திரௌபதாதேவியைக்கொண்டுவந்து துகிலுரிந்தபோது, திரௌபதாதேவி நடுநடுங்கி, ஹா! கிருஷ்ணாவென்று இருகைகளையும் விட்டுவிட்டவுடன் அக்ஷயசேலைகளைக் கொடுத்து மானத்தைக்காப்பாற்றிய எங்கள் கிருஷ்ணமூர்த்தியின் மகத்துவத்தை விசாரித்துப் பார்ப்பாயாகில் அப்போது உனக்கே நன்றாய்த்தெரியவரும்.

கபீர்:—ஆம், நீ சொல்லுவது வாஸ்தவமே. உதவாத ஓர் வேடன் பாணத்தினால்வீழ்ந்து பிராணனைவிட்டான் என்று கேட்டபோதே, உங்கள்கிருஷ்ணன் சர்வக்ஞனென்

றும் சர்வசக்தனென்றும் சர்வேஸ்வரனென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. இதைவிட வேறு வேண்டியதேன்? மிகவும் நன்றாயிருக்கின்றது! எங்கள் இராமமூர்த்தி மகிமையினால் ஆஞ்சனேயர்வால் பெரிதானது அறியமாட்டாயா?

ரோஹிதாஸ்:—அடே துலுக்கா! உன் முரட்டுப்புத்தியை விடமாட்டாயல்லவா? சீதையைக் காப்பாற்ற சக்தியின்றி சரயுநதியில்வீழ்ந்து ஜீவனைவிட்ட உங்கள் இராமனை மிகவும் பெருமையாய்ச்சொல்லி பூஜிக்கவந்தாய்! ஆஹா! உன்விவேகத்தை என்னவென்றுசொல்லலாம், போதும். போதும்; உன பிரசங்கத்தை இதனுடன் நிறுத்து.

கபீர்:—அடே! சக்கிலிப்பயலே உனக்கிவ்வளவு கர்வமா? தகனம்செய்வதற்கும் திக்கில்லாமல் அர்ஜுனன் வந்து நிறைவேற்றும்வரையில் திக்கில்லாத பிணம்போல் ஆரண்ணியத்தில் வீழ்ந்திருந்து கடைசியில் பாதிவெந்தும் பாதிவேகாமலும் சமுத்திரத்தில் அடித்துக்கொண்டுபோன உன்கிருஷ்ணன் பிரதாபத்தை என்முன் எடுத்துச்சொல்ல வந்தாய். உன் கிருஷ்ணனுடன்கூடவந்த பதினாறாயிரம் கோபிகா ஸ்திரீகளை வழியில் வேடர்கள் அடித்து ஆபரணங்களைக் கொள்ளையடித்துபோனபோது உங்கள் கிருஷ்ணன் பராக்கிரமம் எங்குபோயிற்று? உதவாத பேச்சுகளைப்பேசி சர்வலோக சர்வஞ்ஞனை எங்கள்இராமமூர்த்தியை நிந்திக்கின்றாயா? இதோபார் உன்னை என்னசெய்கின்றேனென்று பற்களை நறநறவென்னும் சப்தத்துடன் உதட்டைக்கடித்து கண்கள்சிவந்து தன் அக்குளிலிருந்த சோட்டாத்தடியையெடுத்து ரோஹிதாஸ் சிரசில் போடப்போனார்.

விஷ்ணுமூர்த்தி, கபீர் ரோஹிதாசுகளை சமாதானஞ் செய்தல்.

இதற்குள் விஷ்ணுமூர்த்தி அவர்களின்விவாதங்களைத் தீர்த்துச் சமாதானப்படுத்தாவிட்டால் பிரமாதம் உண்டாகுமென்றெண்ணி விக்நேசுவரரை வரவழைத்து சீக்கிரமாய்ச்சென்று கபீர் ரோஹிதாசுகளைச் சமாதானம்செய்து வரக்கடவாய். என்று சொல்லிஅனுப்பினர். விக்நேசுவரர் உடனே ரோஹிதாஸ் வீட்டிற்குச்சென்று அங்கு கையில் ஓர்பெரிய சக்குமாந்தடியைப்பிடித்து மிகவும் கோபாவேசமாய் ருத்திரனைப்போல் நின்றிருக்கும் கபீரைப்பார்த்து "ஐயா! கபீர்! ஏன் அவசரப்படுகின்றீர்? கோபிக்காதே. சாந்தமாய்இரும். ரோஹிதாஸ் சொன்னவைகளெல்லாம் சரியானவைகளே; அவர்வார்த்தையைத் தள்ளிவிடக்கூடாது" என்று விக்நேசுவரர் சொல்லினர்.

கபீர் அதைக்கேட்டவுடன் கண்கள் இன்னும் அதிகமாய் நெருப்புப்போல் சிவந்து கணபதியைப்பபார்த்து, தோண்டியைப்போன்ற தொப்பையை முன்னேவைத்துக்கொண்டுவந்து ஏதோ மஹா ஞாயம்தெரிந்தவனைப்போல் பேசவந்தாய். பராத்பரனை எங்கள் இராமமூர்த்தியைவிட வேறுதெய்வம் யார் இருக்கின்றார்கள்? உன் அப்பனும் எங்கள் இராமமூர்த்தியைச் சதாகாலமும் ஸ்மரித்துக்கொண்டிருக்கின்றான். எள்ளுண்டை குழைக்கட்டை சுண்டல் முதலியவைகளைச்சாப்பிடும் சாப்பாட்டுராமனாகிய உனக்கு என்னஞாயம்தெரியவரும்? எப்போதாகிலும் இவன் உனக்கு குழைக்கட்டைகளை அதிகமாய் பரிமாறியிருக்கலாம். அதனால், நீ இவ்விதமான பக்ஷபாதங்களைப் பேசுகின்றாய். பூர்வம் இராவணன் உன்காதைநிமிட்டி தலை

யில்குட்டியது ஞாபகம் இருக்கின்றதா? இந்த ஞாயம் தீர்க்கும்படி உன்னை அனுப்பினவர்கள்யார். விசேஷம் பேசாதே ஓடிப்போ? இப்போது ஏதாகிலும் வாயைத் திறந்தால் இத்தத்தடிக்கு இரையாவோயென்று எண்ணிக்கொள்'' என்று சொல்லினர். அப்போது விக்நேசுவரர் கபீரினுடைய கோபத்திற்குப்பயந்து சும்மாய் நின்றிருந்தார்.

பிறகு விஷ்ணுமூர்த்தி சூரியனை அழைத்து 'நீசென்று கபீர் ரோஹிதாசுகளை சமாதானப்படுத்திவா' என்று சொல்லிஅனுப்பினர் அப்போது சூரியன் நல்லதென்று சொல்லி பிராமணவேஷத்துடன் ரோஹிதாஸ் வீட்டிற்குச் சென்று "ஐயா, கபீர் ! அவசரப்படாதே ? இப்போது ரோஹிதாஸ் சொல்லியவிஷயம் சரியானதே அவர் ஒன்றும் விரோதமாய்ச் சொல்லவில்லை. விரோதமாய் அவர் மீது கோபிப்பதனால் பிரயோஜனமென்ன ? அவர் சொல்லியவார்த்தைகளைஎல்லாம் யோசித்துப் பார்ப்பாயாகில் அதன்ஞாயம் உமக்கேதெரியவரும்'' என்றுசொல்லினர்.

கபீர் அதைக்கேட்டவுடன் இன்னும் கோபம் அதிகமாய் சூரியனைப்பார்த்து "இதுவரையில் உன்னை மிகவும் யோக்கியனென்று எண்ணியிருந்தேன். உன்னுடையயோக்கியதை இப்போதல்லவோ தெரியவந்தது.

"த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி, த்வமேவ ப்ரத்யக்ஷம் விஷ்ணுரஸி ; த்வமேவ ப்ரத்யக்ஷம் ருத்ரோஸி ; த்வமேவ ஸர்வம் சந்தோஸி''

என்னும் சுருதி ரீதியாய் நீ திரிமூர்த்திகளில் ஒருவனும் வேதங்களுக்கெல்லாம் அதிபதியா யிருந்தும் ஞாய அனியாயங்களை விசாரிக்காமல் ரோஹிபுரமாய் பக்ஷபாதம் பேசவந்தாய்? ஸ்ரீராமமூர்த்தி உன் வம்சத்தில் அவதரித்தவர்; அவருக்கு நாங்கள் பக்தர்கள். அவர் ஒருவரே பராத்பரன் ; அவரது மஹிமையை நீ நன்றாய் அறிந்திருந்தும்

இடையன் மகிமையை
இப்போது ரோஹிபுரமாய்சேர்ந்து இன்றது ! எப்போதாகி
பேசவந்தாய்? சரி சரி, நன்றாயிருக்கின்றது ! எப்போதாகி
லும் இவன் உனக்கு பாயாசம் கொடுத்திருக்கின்றனா? வீர
பத்திரன் பற்கள் உதிரும்படி தவடையின்மீது அடித்திருக்
கும்போதே நீ இவ்வளவு வாயாடவந்தாய். போதும்
போதும்; நீ வந்தவழியே செல் செல்'' என்றுகோபித்தார்.
அப்போது சூரியன் மிகவும் ஆச்சரியமடைந்து ஒன்றும்
பதில்சொல்ல நாவெழாமல் ஸ்தம்பம்போல்நின்றிருந்தார்.
பிறகு, விஷ்ணுமூர்த்தி பிரமதேவரை வரவழைத்து
"ஐயா ! நீர் கபீர் ரோஹிதாசுகளிடம்சென்று எவ்விதத்தி
லாகிலும் அவர்களைச் சமாதானப்படுத்தி வரவேண்டும்''
என்றுசொல்லினர். அப்போது பிரமதேவர் நல்லதென்று
சொல்லி அம்சவாகனத்தின்மீதேறி ரோஹிதாஸ்வீடு சேர்
ந்து கபீரைப்பார்த்து "ஐயா ! பக்தசிகாமணீ ! நீ பகவத்
பக்தனயிருந்தும் இப்படி அவசரப்படுவது சரியல்ல. யார்
எதைச்சொல்லியபோதிலும் அதற்குக் கோபம் செய்யா
மல் சாந்தமாயிருந்து நன்றாய் ஆலோசனை செய்யவேண்
டும். இப்போது ரோஹிதாஸ் செய்துவரும் பக்தியும்
விசேஷமானதே ! கிருஷ்ணமூர்த்தியைக்குறித்து அவர்
சொல்லிய விஷயங்களெல்லாம் சரியானவைகளே? இதற்கு
யாதொரு சந்தேகமும் இல்லை. கிருஷ்ணமூர்த்தி லோக
ரக்ஷணார்த்தமாய் அவதரித்தவரேயன்றி வேறல்ல. அவர்
சர்வேசுவரன் ; அவர்விஷயத்தில் நீ பேதபுத்திவைப்பது
சரியானதல்ல'' என்றுசொல்லினர்.
கபீர் அதைக்கேட்டு " நீ விஷ்ணுமூர்த்தி நாபிக்கம
லத்தில் பிறந்து சகல பிரபஞ்சங்களையும் சிருஷ்டிசெய்து
சகல வேதங்களையும் தெரிந்தவனயிருந்தும் இப்படிப்பட்ட
உதவாதவார்த்தையைச் சொல்லுவது சரியானதல்ல. உன
க்கு இன்னும் அஹங்காரம் ஒழியவில்லை. அஹங்காரத்தின

லல்லவோ பூர்வம் ஓர் சிரசைப்போக்கடித்துக்கொண்டாய்.
அஹங்காரம் ஒழியும்வரையில் யதார்த்தஞானம் உண்டாக
மாட்டாது. நான்குமுகத்திலும் நான்குவேதங்களைத் தாரா
ளமாய் பாராயணம் செய்கின்றாயேயொழிய அதிலுள்ள
ரஹஸ்யார்த்தங்களை அறிந்தவனல்ல. குமாரசுவாமி கேட்ட
பிரணவமந்திரத்திற்குப் பதில்சொல்லச் சக்தியில்லாமல்
சிறைச்சாலையில் அடைத்திருந்த விஷயம் மறந்துவிட்டாய்ப்
போயிருக்கின்றது. ஏதோ மஹா தெரிந்தவனைப்போல்
ஞாயம்பேச வந்துவிட்டாய்? பெற்ற பெண்ணென்றும்
எண்ணாமல் சரஸ்வதியை மணம்புரிந்த துர்மார்க்கன் நீயல்
லவோ? அன்றியும் திலோர்த்தமையை சிருஷ்டிசெய்து
அவள் சௌந்தரியத்தைப்பார்த்து மோஹித்து அவளைப்
பலவந்தமாய்ப்பிடித்தபோது அவள் கிளிரூபம் கொண்டு
பறந்தபோதிலும் அவளை விடாமல் நீயும் ஆண்கிளிரூபங்
கொண்டு துரத்திய மஹாநுபாவனல்லவா? ஆதலால் உன்
னைப்போன்ற காமியாகிய கிருஷ்ணனை மிகவும் வர்ணித்துப்
பேசுகின்றாய். ஹிரண்யாக்ஷ ஹிரண்யகசிபர்கள், ராவணன்
கும்பகர்ணன் முதலாகிய துஷ்டராக்ஷதர்கள் தவம்செய்து
உலகத்திற்குக் கெடுதி உண்டாக்கத்தக்க வரத்தைக்கேட்ட
போது நீயதை ஆலோசிக்காமல் அவர்களின் இஷ்டம்
போல் கொடுத்தவனல்லவா? அப்படிப்பட்ட உனக்கு ஞாய
அனியாயம் என்னதெரியவரும்? பூர்வம் அன்னபக்ஷி
ரூபம்தரித்து சிவனுடைய முடியைக் கண்டுபிடிப்பதற்காக
ஆகாசமார்க்கமாய்க் கிளம்பி அனேக யோஜனைதூரம்
சென்று முடியைக் கண்டுபிடிக்கச் சக்தியில்லாமல் மிகவும்
சிரமப்பட்டுவந்து சிவனது முடியைக் கண்டேனென்று
பொய்சொல்லிய உனக்கு என்னஞாயம் தெரியவரும்? சீசீ!
வாயை மூடிக்கொண்டுபோ" வென்று மிகவும்கடினமான
வார்த்தையைச்சொல்லினர். அப்போது நான்முகன் கபீரி

னுடைய வைராக்கியத்திற்கு மிகவும் ஆச்சரியப்பட்டு
யாதொன்றும் பதில்சொல்ல நாவெழாமல் சும்மாய் நின்
றிருந்தார்.

பிறகு, சரஸ்வதியை வரவழைத்து "நீ சென்று கபீர்
ரோஹிதாஸ் விவாதங்களைத்தீர்த்துச் சமாதானப்படுத்
திவா" வென்று சொல்லியனுப்பினர். அப்போது சரஸ்
வதிதேவி நல்லதென்று சம்மதித்து ரோஹிதாஸ் வீடு
சேர்ந்து பிரளயகால ருத்திரமூர்த்திபோல் நின்றிருக்
கும் கபீரைப்பார்த்து "நாயனே! நீ எல்லாம்தெரிந்தவன்;
உனக்கு இவ்வளவு கோபம்வருவது சரியானதல்ல; ரோஹி
தாஸ் சொல்லியவைகளெல்லாம் சரியானவிஷயமே. நான்
பக்ஷபாதமாய்ச் சொல்லுகின்றேனென்று எண்ணவேண்
டாம். வாஸ்தவமான விஷயங்களையே சொல்லுகின்
றேன்" என்றுசொல்லினள். கபீர் அதைக்கேட்டு பக்
கென்றுசிரித்து "தேவி! நீ வாஸ்தவமே சொன்னாய்.
வாஸ்தவம் தெரிந்தவளாதலால் வீரபத்திரனால் அவ
மானப்பட்டாய். உனது மாமியின்மீது உனக்கிருந்த
அதிக பிரீதியைக்குறித்து உலகத்தில் விசாரிக்கும்பக்ஷத்
தில் உன் குணங்கள் நன்றாய்த்தெரியவரும். இப்படிப்
பட்ட நடவடிக்கையுள்ள உன் ஞாயம் எவ்வளவு நன்மை
யானதோ அதை நீயே சற்று ஆலோசித்துப்பார்" என்று
ஏளனம்செய்தார். அப்போது சரஸ்வதி மறுவார்த்தை
பேச யாதொன்றும் தோன்றாமல் புன்சிரிப்பாய்ச் சிரித்து
நின்றிருந்தாள்.

பிறகு, விஷ்ணுமூர்த்தி பரமசிவனைப்பார்த்து "நீர்
சென்று கபீர் ரோஹிதாசுகளை சமாதானப்படுத்திவாரும்"
என்றுசொல்லியனுப்பினர். அப்போது பரமசிவன் ரிஷப
வாஹனத்தில் பார்வதி சமேதராய் எழுந்தருளி ரோஹி
தாஸ் வீடுசேர்ந்து கபீரைப்பார்த்து "ஐயா! பரமபாகவத

சிகாமணி! உனக்கும் ரோஹிதாசுக்கும் உண்டாகிய மனஸ்
தாபங்களைத் தீர்த்துவரவேண்டுமென்று பகவான் ஆக்ஞ
ஞாபித்தபடியால் நான் இங்கு வந்தேன். நீங்கள் இருவ
ரும் என்வார்த்தையைக்கேட்கவேண்டும். அதென்ன
வென்றால், ரோஹிதாஸ் சொல்லிய வார்த்தைகளெல்லாம்
வாஸ்தவமானதேயொழிய பிசக்கானதல்ல. அவரது
பக்தி மிகவும் பரிசுத்தமானது. கிருஷ்ணமூர்த்தி பரதத்வ
முடையவர் என்பதற்குச் சந்தேஹமில்லை. நீங்கள் பேத
புத்தியினால் வாதாடுகின்றீர்கள் இதனால் என்னபிரயோ
ஜனம். நீங்கள் இருவரும் சமாதானமாயிருப்பதே மிகவும்
உத்தமம்'' என்று சொல்லினர்.

கபீர் அவ்வார்த்தைகளைக்கேட்டவுடன் ருத்திரமூர்த்தி
யைக் கோபப்பார்வையுடன்பார்த்து "நீ இராமபக்தனா
யிருந்தும் இவ்வாறு சொல்லலாமா? இஷ்டதெய்வமென்
னும் அபிமானமில்லாமல் ஸ்ரீராமமூர்த்தியை திரஸ்காரம்
செய்து துஷ்டதெய்வமாகிய கிருஷ்ணனைப் புகழ்ச்சியுடன்
பேசுகின்றாய். சரி சரி, உன் லக்ஷணம் இப்போதல்லவோ
தெரியவந்தது. ஊமத்தம் விதைகளைத்தின்று கஞ்சாப்
புகை குடித்து மயக்கங்கொண்டு இராக்காலங்களில் பிசா
சங்களுடன்கூடி ஸ்மசானத்தில் வாசம்செய்து உடலைமறந்
திருக்கும் உனக்கு இராமமஹிமை எவ்விதமாய்த் தெரிய
வரும்? ஈசுவரதத்துவம் இன்னும் நீ யறிந்தவனல்லன்.
அசுரர்கள் மோகிப்பதற்காக விஷ்ணுமூர்த்தி மோகினி
வேஷம் தரித்தபோது அவரைப்பார்த்து பிரமித்து அதிக
மோஹம்கொண்டாயல்லவா? அன்றியும் தாருகாவனத்தி
லிருக்கும் பதிவிரதைகளாகிய ருஷிகளின் பத்தினிகளைப்
பார்த்து மோஹித்தாயல்லவா? கிருஷ்ணனும் உன்னைப்
போன்ற வியபிசார குணமுடையவனாதலால், நீ அவனைக்
குறித்து மிகவும் கௌரவமாய்த்தான் பேசவேண்டும்.

பித்தனானபடியால் முன் நடக்கப்போகும் சங்கதியைத்
தெரிந்துகொள்ளாமல் பஸ்மாசுரனுக்கு வரங்கொடுத்து
கடைசியில் அவன் அஸ்தத்தை உன்சிரசின்மீது வைக்க
வந்தபோது அதற்குப் பயந்து ஐவேலங்காயிற்புகுந்து
லிங்கரூபமாய்விட்டாயல்லவா? பார்வதீ தேவியுடன்
சூதாடி தோல்வியடைந்தபோதிலும் நான் ஜெயித்தே
னென்று விஷ்ணுமூர்த்தியைச் சாக்ஷியாய்க் கூப்பிட்ட
மஹானுபாவன் நீயல்லவோ? இப்போது எங்கள் ஞாயம்
தீர்க்கவந்தாய். எப்போதாகிலும் இவன் உனக்கு கொஞ்
சம் கஞ்சாயிலை கொடுத்திருக்கலாம்'' என்று கேலிசெய்
தார். அப்போது பார்வதீதேவி கபீரைப்பார்த்து "ஐயா
கபீர் ஏன் அவசரப்படுகின்றாய்? சொன்ன விஷயங்களைக்
கிரகிக்காமல் வாயிற்குவந்தபடி தாறுமாறாய்ப் பேசுகின்
றாய். ரோஹிதாஸ் சொன்னவிஷயத்தில் என்ன தப்பித
மிருக்கின்றது. அவர்சொல்லியவிஷயம் எல்லோரும் ஒப்
புக்கொள்ளத்தக்கதே. ஞாயம் சொல்லப்பட்டவர்களை எல்
லாம் தூஷணமாய்ப்பேசுகின்றாய். இது உனக்குத் தகுதி
யல்ல'' வென்று சொல்லினள்.

கபீர் அதைக்கேட்டு மந்தஹாசம்செய்து "தேவீ!
மேல்வேஷத்திற்காக மிகவும் பரம பக்தர்களைப்போல்
நடித்து உலகத்தைப் பிரமிக்கச்செய்யும் உங்கள் மாயாவே
ஷம் ஒன்றும் இவ்விடம் உதவமாட்டாது? நீங்கள் வந்த
வழியே மறுபடியும்செல்வது மிகவும் உத்தமமானது. நீங்
கள் தத்துவங்களை அறிந்தவர்களல்லர், நீங்கள் சதாகால
மும் தாரகமந்திரம்ஜபித்து சகலசித்திகளையும் அடைந்து
சதா ஆனந்தத்தில் இருப்பவர்களாயிருந்தும் ரோஹிசொல்
வதே வாஸ்தவமென்று வாதாடுகின்றீர்கள். தக்ஷகன்
செய்யும் யாகத்திற்கு நீ போகலாகாதென்று உனது நாய
கன் எவ்வளவுசொல்லியும்கேளாமல் அவார்த்தையைவரது

மீறிச்சென்று அங்கு அவமானப்பட்டு அனேகர்களுக்கு ஆபத்துக்களை உண்டாக்கிய மஹா பாக்கியவதி நீயல்லவோ? இப்படிப்பட்ட குணமுடைய உன்ஞாயம் எவ்விதமாயிருக்குமோ, அதை நீயேசற்று ஆலோசித்துப்பார்'' என்று மிகவும் கோபமாய்ச்சொல்லினர்.

அப்போது பார்வதிதேவி யாதொன்றும் பதில்சொல்லாமல் ஸ்தம்பம்போல் நின்றிருந்தாள். பிறகு பரமசிவன் கபீரைப்பார்த்து "கபீர் உனக்குச் சிறிதேனும் புத்தியில்லை! இங்கு வந்திருக்கப்பட்டவர்களெல்லாம் உனக்கு எவ்வளவு ஞாயம் எடுத்துச் சொல்லியபோதிலும் அவைகளைக் கேளாமல நான்பிடித்த முயலிற்கு மூன்றுகால் என்று சாதிப்பதுபோல் சாதிக்கின்றாய். நீ எங்களைத் தூஷிப்பதனால் தோஷமில்லை. ஆயினும் மறுபடியும் சொல்லுகின்றேன்கேள் ரோஹிதாஸ் பக்தியே மிகவும்உத்தமானது. கிருஷ்ணமூர்த்தி பரமபுருஷனென்று சொல்வதற்குச் சந்தேஹமில்லை'' என்றுசொல்லினர்.

கபீர் அவ்வார்த்தைகளைக்கேட்டவுடன் மிகவும்ரோஷமுடையவராய் பரமசிவனைப்பார்த்து "வேப்பமரத்திற்கு பானகம்விட்டு வளர்த்தபோதிலும் அதன் கசப்பு விடுமா? அதுபோல் உனக்கு ராமமந்திரம் கிடைத்தபோதிலும் உன் துர்க்குணம் போகுமா? சீ சீ! தெய்வத் துரோகம் செய்தவன் முகத்திலும்விழிக்கலாகாது ; என்முன் நிற்காதே ; சீக்கிரமாய்ப் போய்விடு'' என்று கடுகடுத்துச் சொல்லினர்.

அப்போது பரமசிவன் கண்கள் சிவந்து சூலத்தைக் கையிலேந்தி கபீரைப்பார்த்து "அடேமூடா ! என்ன சொன்னாயடா? சிறியவனென்றும் பெரியவனென்றும் எண்ணாமல் தூஷிக்கஆரம்பித்தாய்; உன் மூர்க்கமாகிய பிடிவாதத்தை விடுவிக்கின்றேன் பார்'' என்று அட்டகாசம் செய்தார்.

163980

கபீர் அதைக்கேட்டு மந்தஹாசம் செய்து "ஐ...
என்னை யாரென்று நினைத்தாய்? [உ]ன் மிரட்டலுக்கு ந...
பயந்தவனல்ல. விஷயானந்தங்களுக்கெல்லாம் அதிபதியா...
யிருந்த மன்மதனை எரித்த உன் மூக்கண்ணைத் திறந்து
காட்டுப் பார்ப்போம். ஸ்ரீராமபக்தனிடம் உன் ஐபம் சாரு...
மாட்டாதென்று நன்றாய் அறியக்கடவது'' என்று சொல்
லினர்.

அப்போது சங்கரனுக்கு இன்னும் கோபம் அதிக
முண்டாய் கபீரைப்பார்த்து "அடே! உனக்குத்தகுந்த
சிக்ஷை செய்கின்றேன்பார்'' என்றுசொல்லி சூலாயுதத்தை
கிருகிருவென்று திருப்பி கபீர்மீது விசிரிஎறிந்தார். அப்
போது கபீர் மிகவும் கோபமாய்ப் பரமசிவனைப்பார்த்து
தன் கையிலிருக்கும் தடியை கிருகிருவென்று திருப்பி,
"இதோபார் ராமமந்திரம் வருகின்றது; இதைத்தப்பித்துக்
கொள்'' என்று சொல்லி மிகவும் அட்டகாசம்செய்துநின்
றார். இந்த விநோதங்களைப் பார்ப்பதற்காக தேவர்கள்எல்
லோரும் விமானங்களில் ஏறி ஆகாயத்தில்நின்று வேடிக்
கைப்பார்த்திருந்தார்கள்.

இதற்குள் விஷ்ணுமூர்த்தி கபீர் சங்கரர்களுக்கு சம்ப
வித்த விரோதங்களைப்பார்த்து தான்சென்று சமாதானப்
படுத்தாவிட்டால் காரியம் கெட்டுவிடுமென்றுஎண்ணி அதி
சீக்கிரமாய் ரோஹிதாஸ்வீடுசேர்ந்து "ஓஹோ! கபீர்!
என்ன செய்கின்றாய்? சற்றே சாந்தமாயிரு, சாந்தமாயிரு''
என்றுசொல்லினர். அப்போது கபீர் ஸ்ரீராமமூர்த்தியைப்
பார்த்து மிகவும் சந்தோஷமடைந்து தன் கையிலிருந்த
தடியை எறிந்துவிட்டு ஸ்ரீராமமூர்த்தியை பிரதக்ஷணம்
செய்து நமஸ்கரித்து "எங்கள் ஸ்ரீராமமூர்த்தியே சர்வோ
த்தமமானதெய்வ'' மென்றுசொல்லி ஸ்ரீராமமூர்த்தியை
ஆலிங்கனம்செய்து நர்த்தனம்புரிய ஆரம்பித்தார். பிறகு

இ 221332
N22

ஸ்ரீராமமூர்த்தி ஜகன்மோஹனாகாரமாகிய ஸ்ரீ கிருஷ்ணாவ
தாரமெடுத்து புள்ளாங்குழல்வாசித்து எல்லோருக்கும்
நேத்திரோச்சவமும் சிரவணானந்தத்தையும் உண்டாக்கி
னார். அப்போது தேவதைகளெல்லோரும் பரமானந்த
மடைந்து ஜயஜயவெனத் தொனித்துப் புஷ்பமாரிபொழிந்
தார்கள். அப்போது ரோஹிதாஸ் பரமானந்தமடைந்து
ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப் பிரதக்ஷணம்செய்து நமஸ்கரித்து
"எங்கள்கிருஷ்ணமூர்த்தியே சர்வோத்தமமானதெய்வ"
மென்றுசொல்லி ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை ஆலிங்கனம்
செய்து நர்த்தனம்புரிய ஆரம்பித்தார். அப்போது ஸ்ரீ
கிருஷ்ணபகவான் கருணாகடாக்ஷமுடையவராய்க் கபீர்
ரோஹிதாசுகளைப் பார்த்து "பரமபக்தர்களே! உங்கள்
இருவர்களின் பக்தி ஞான வைராக்கியங்கள் சமமாயிருக்
கின்றது. உங்கள்சரித்திரம் மிகவும் பவித்திரமானது.
நான் பிரதி யுகத்திலும் தர்ம ஸ்தாபனார்த்தமாம் லீலா
மானுஷரூபமாய் அவதரித்து அநேகவிநோதங்களைச்
செய்துகொண்டு வருகின்றேன். நான் சர்வாந்தர்யாமி
யாய் உள்ளும் புறமும் நிறைந்து இருந்தபோதிலும் எதி
லும்பற்றாமல் இருப்பேன். நான் நிர்மலன்: ஆதலால்,
என்னை எந்தத் தோஷங்களும்பற்றாது. மானவரூபம்
எடுத்தபோது தேசத்திற்குத் தகுந்தவேஷமும், வேஷத்
திற்குத்தகுந்த பாஷையும், பாஷைக்குத்தகுந்த நடவடிக்
கையும் இருக்கவேண்டியது முக்கியமாதலால் சமயோசித
மாய் பண்டிதனைப்போலவும் பாமரனைப்போலவும் நடக்க
வேண்டும். நான் மாயாதீதனாயிருந்தும் மாயைக்கு உட்
பட்டவனைப்போல் அபிநயித்து உலகத்தை மோஹிக்கும்
படிச் செய்துகொண்டிருப்பேன். என் ஜன்ம கர்மங்களை
எல்லாம் தத்வவேத்தர்கள்மாத்திரம் அறிவார்களே
யொழிய மற்றவர்கள் யாராயிருந்தபோதிலும் அறியமாட்

டார்கள். ராவண கும்பகர்ணாதி பூர்வஜன்மங்களின் கர்மங்
களை நாசப்படுத்த ராமாவதாரமும், வாலியைக்கொன்ற
தோஷத்தினால் கிருஷ்ணாவதாரமும் எடுத்து வேடனது
பாணத்தினால் வீழ்ந்து மரணமடைந்த தாயும் நடித்துக்
காட்டினேன். ஜலத்திற்கு ஸ்தானமாயிருக்கும் நாராய
ணன் நானே ஆதலால், ராமாவதாரம் எடுத்தபோது சரயு
நதியில் இரங்கி மாயமானேன். உலகத்திலுள்ள ஜனங்க
ளெல்லோரும் அல்ப ஆயுர்பாக முடையவர்களாதலால்
அவர்கள் தபோ யோக தியான தாரணைகளால் கடைத்
தேறுவது மிகவும் துர்லபமென்றுஎண்ணி "ஹரேராம
ஹரேராம ராமராம ஹரேஹரே, ஹரேகிருஷ்ண
ஹரேகிருஷ்ண கிருஷ்ணகிருஷ்ண ஹரேஹரே" என்னும்
மந்திரத்தை மிகவும் பக்தியுடன் உச்சரித்தமாத்திரத்தில்
சம்சாரமென்னும் சமுத்திரத்தைத்தாண்டி பரமபதத்தை
அடைய அனுக்கிரகம்செய்தேன். நான் திரேதாயுகத்தில்
ராமமூர்த்தியாய் அவதரித்து வனத்திற்குச் சென்றபோது
அங்குள்ள முனிவர்களெல்லோரும், சர்வ அங்கமும்
சௌந்தர்யமாயிருக்கும் என் திருமேனியைக் கண்குளிரப்
பார்த்து என்னை ஆலிங்கனம்செய்யவந்தபோது நான்
ராமாவதாரத்தில் ஏகபத்னீவிரதனா யிருப்பதால் இந்தச்
சரீரத்தை நீங்கள் தீண்டலாகாது, துவாபரயுகத்தில்
கிருஷ்ணாவதாரம்எடுத்து உங்கள் இஷ்டத்தைப் பூர்த்தி
செய்விக்கின்றேன் என்று வரம்கொடுத்திருந்தேன். அது
போல் அவர்கள் கோபிகைகளாய்ப் பிறந்து சதாகாலமும்
என்னைத் தைலதாரையைப்போல் ஆராதித்து விஷயசுகங்
களை பரமானந்தத்துடன் அனுபவித்து சந்தோஷமடைந்
தார்கள். ஆதலால், ராமமூர்த்தி வேறென்றும் கிருஷ்ண
மூர்த்தி வேறென்றும் பேதமாய் எண்ணலாகாது. மாயை
யால் மூடப்பட்ட சில பாமரஜனங்கள் என்னை சாமான்ய

மனுஷ்யனென்றெண்ணி அனியாயமாய்க் கெட்டுப்போ
கின்றார்கள். சத்வ ரஜ தமோகுணமுடைய இந்த சர்வ
பிரபஞ்சத்தையும் சிருஷ்டிசெய்து கண்ணாடியில் தன்னைக்
கண்டபுருஷன் தான் கண்ணாடிக்குள் பிரவேசிக்காவிட்டா
லும் பிரவேசித்தவனைப்போல் காணப்படுகின்றான். அது
போல் சகல பிரபஞ்சத்திலும் நான் நுழையாவிட்டாலும்
நுழைந்தவனைப்போல், காணப்படுகின்றேன். இப்படிப்
பட்ட என் சொரூபம் தெரிந்தவர்களுக்கே பிரம்மானந்த
பதவி உண்டாகுமேயொழிய மற்றவர்களுக்கு உண்டாக
மாட்டாது. ஆதலால், நீங்கள் இருவரும் இன்றுமுதல்
ராமகிருஷ்ணனென்னும் பேத புத்தியைவிட்டு இரண்டை
யும் சமமாய்எண்ணி பக்திசெய்துவரவேண்டும்'' என்று
சொல்லி அவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தி ஆசீர்
வதித்து அந்தர்த்யானமாயினார். பிறகு பிரம்ம ருத்திராதி
தேவதைகளெல்லோரும் பரமானந்தமடைந்து அவர்களின்
பக்தி வைராக்கியங்களுக்கு மிகவும்சந்தோஷமடைந்து
அவர்களைப்பார்த்து "உங்கள் வைராக்கியங்களைப் பரிசோ
திப்பதற்காகவே இந்த விநோதங்கள்நடந்தது'' என்று
சொல்லி அதிக பிரீதியுடன் அவர்கள் இருவரையும் ஆலிங்
கனம்செய்து அனேக ஆசீர்வாதம்செய்து அந்தர்த்யான
மாயினார்கள்.

அப்போது கபீர் ரோஹிதாஸ்களின் விரோதங்கள்
நீங்கி மிகவும் சினேகமாய் ஒருவரையொருவர் ஆலிங்கனம்
செய்து கபீரை தன்னுடன் கூடயிருக்கும்படி ரோஹிதாஸ்
மிகவும் கேட்டுக்கொண்டபடியால் கபீர் ரோஹிதாசுடன்
கூட மூன்றுதினங்களிருந்து நான்காவதுநாள் ரோஹி
தாசரிடம்செலவுபெற்றுக்கொண்டு காசிப்பட்டணம்வந்து
சேர்ந்தார்.

கோரக் இரண்டாவதுமுறை கபீரிடம்வந்து தோல்வியடைதல்.

சிலநாள் சென்றபிறகு பூர்வம் இராமானந்தரை
ஜயிக்க வந்து, கபீரால் அவமானப்பட்டு அப்போது ஓர்
விதமாய்த் தப்பித்துக்கொண்டுசென்று கபீரை எவ்விதத்
திலாகிலும் ஜயிக்வேண்டுமென்று எண்ணி அன்றுமுதல்
அகோரமான பிராணாயாமம்செய்து சகலசித்திகளையும்
பெற்று அதன்மஹிமையினால் தான் நினைக்கும் ரூபங்க
ளைத்தரிக்க சக்தி உண்டானபிறகு தான் சிஷ்யவர்க்கங்களு
டன்புறப்பட்டு ஜகத்பயங்கரமாகிய ஆடம்பரத்துடன்புறப்
பட்டு காசிப்பட்டணம் வந்துசேர்ந்து கபீர் வீட்டுஎதிரில்
வந்துநின்று கம்பீரமான கண்டத்தொனியுடன் கபீரைக்
கூப்பிட்டான். அப்போது ராமஸ்மரணை செய்துகொண்
டிருக்கும் கபீர் அவ்வார்த்தையைக்கேட்டவுடன் திடீரென்
றெழுந்து "யாரது என்றுகேட்டனர். இதற்குள் ஜனங்க
ளெல்லோரும் கூட்டம்கூடி மறுபடியும் கோரக் கபீருடன்
வாதம் செய்ய வந்திருக்கின்றான் என்றுபேசிக்கொண்டார்
கள். அது விஷயம் ஊரெங்கும்பரவி அதைப்பார்க்கக்
கூட்டம்கூட்டமாய்க்கூடி கபீர்வீடுவந்து சேர்ந்தார்கள்.
அப்போது கபீர் வெளிவந்தவுடன் கோரக் கபீரைப்
பார்த்து "நான் யாரென்று அறிவாயா?'' என்றுகேட்
டான். "ஆஹா! உன்னை அறியேனா? என் சிஷ்யனாகிய
கோரக் அல்லவா? இதென்ன ஆச்சரியம் சிறிதேனும் குரு
வென்னும் மரியாதையில்லாமல் பனைமரம்போல் என்எதி
ரில் நின்றிருக்கின்றாய்? சீ சீ! சீக்கிரமாய்வந்து என்பாதத்
தில் விழுந்து நமஸ்காரம்செய்'' என்று கபீர்சொல்லினர்.
அப்போது "உன்னையும் உன்குருவையும் என்சிஷ்யர்க

ளாய்ச் செய்துகொண்டு உங்களால்நமஸ்காரம் செய்து கொள்வதற்காக இப்போது இங்குவந்திருக்கின்றேன். உன் குருவாகிய இராமானந்தன் எங்கிருக்கின்றான் அவனைச் சீக்கிரமாய் இங்கு வரவழைக்கக்கடவாய்'' என்று கோரக் கேட்டான். "முன் ஒருமுறை வந்து அவமானப்பட்டு வியர்த்து முகம் கறுத்துச் சொல்லாமல் ஓடிப்போன விஷயம் இதற்குள் மறந்துவிட்டாய்ப்போல் இருக்கின்றது. ஓஹோ! தெரியவந்தது. உன்குருவையும் எனக்குச் சிஷ்யனாய்ச் செய்துவைக்க வந்தவனாய்க் காணப்படுகின்றது. ஏதோ உன் ஆசாரியனாகிய மச்சேந்திரனையும் சீக்கிரமாய் இங்கு அழைத்துவந்து என்னெதிரில் நிறுத்தக்கடவாய்'' என்று கபீர் சொல்லினர். கோரக் அவ்வார்த்தையைக் கேட்டவுடன் வாலறுந்த குரங்கைப்போல் துள்ளிசர்ப்பம் போல் சீறி சிங்கம்போல் கர்ஜ்ஜித்துநின்றான். ஜனங்களெல்லோரும் அவன் அட்டகாசத்தைப்பார்த்து உடல் நடுநடுங்கி காசிப்பட்டணத்திற்கு என்ன கேடுவருகின்றதோவென்று எல்லோரும் திகிலடைந்தார்கள். அப்போது கபீர் கலகலவென்று நகைத்து "அடேகோரக்! இந்த மாயாவித்தையை எங்குகற்றுக்கொண்டாய்? நீ உயிர் பிழைத்துப் போகவேண்டுமென்று எண்ணமிருந்தால் என் பாதத்தில்விழுந்து நமஸ்கரித்துப்போ. அப்படிச் செய்யாமற்போவாயாகில் உனக்கு இதுவரையில் இருந்த கௌரவமெல்லாம் குறைந்து அபகீர்த்திக்கு ஆளாகுவாய் என் வார்த்தையைக்கேள்'' என்று சொல்லினர். அதற்குக் கோரக் "ஓஹோ! போதும் போதும்; வாயைமூடு; உன்னைப்போன்ற வாயாடிகளை இதுவரையில் எத்தனையோ பெயர்களைப் பார்த்திருக்கின்றேன். பெரிய மனிதனைப் போல் நடித்து எனக்கேதோ புத்தி சொல்லி நீ பெரிய மனிதனென்று பேரெடுக்கவந்தாய். உன்பெருமை கோரக்

முன் சம்பாதித்துக்கொள்வது கஷ்டமென்று தெரிந்துக்கொள். பக்தனைப்போல் வேஷம்தரித்து பஜனைகளைச் செய்து உலகத்தைப் பிரமிக்கச்செய்வதுபோலல்ல; இது கஷ்டமாகிய யோகவித்தை. தலை காட்டப்பட்டவர்களை மிதிக்கத்தக்கது'' என்றுசொல்லினன்.

அதற்குக் கபீர் மந்தஹாசம்செய்து "அடேமூடா! நீ என்னிடமிருந்து தப்பி ஓடினதுமுதல் இன்று வரையில் கற்ற யோகவித்தைகளையெல்லாம் சற்றேகாட்டும்பார்ப்போம்'' என்றுசொல்லினர். அப்போது கோரக் கலகலவென்றுநகைத்து அடாபயலே நான் உன்னைப்பரீக்ஷிக்க வந்தால், நீ என்னைப்பரீக்ஷிக்கின்றாயா? இதோ நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்பார்ப்போம்'' என்றுசொல்லினன். அப்போது கபீர் "ஆஹா! அதற்கென்னசந்தேகம். சிஷ்யன் கேட்கப்பட்டவைகளுக்கெல்லாம் குருவானவர் சொல்லவேண்டியது தருமமேயல்லவா? உன் சம்சயங்களையெல்லாம்கேட்டுத்தெரிந்துகொள்'' என்றுசொல்லினர். அப்போது கோரக், உன்குருத்வம் இப்போதல்லவோ தெரியப்போகின்றது என்று சொல்லி பின்வரும் கேள்விகளைக் கேட்கின்றான்.

கோரக்:—யோகமென்றால் என்ன?

கபீர்:—க்ஷணத்திற்குள் நானாவிதவிஷயங்களில் ஓடிக்கொண்டிருக்கும் மனதை ஓடவிடாமல் நிறுத்துவதே யோகம்.

கோரக்:—விருத்திஎன்றால் என்ன.

கபீர்:—ஏரியிலுள்ள ஜலம் மதகில் பிரவேசித்துக் கால்வாய்களின்வழியாய்ச்சென்று வயல்கள் எத்தனை கோணல்களாயிருக்கின்றதோ அத்தனைக் கோணல்களாய்ப்பாய்வது போல், தேஜஸ் சம்பந்தமாகிய மனது, கண்கள் மூக்கு

வாய் செவிகள் தேகசர்மம் என்னும் கடாதிகளின்வழியாய்ச்செல்வதே விருத்திஎன்று சொல்லப்படும்.

கோரக்:—யோகாங்கங்கள் என்பது எவை?

கபீர்:—இயம நியம ஆசன பிராணாயாம பிரத்தியாஹாரண தாரண தியான சமாதியாகிய இவை எட்டும் யோகாங் கங்களென்றுசொல்லப்படும்.

கோரக்:—இவைகளின் லக்ஷணங்களை சற்றேவிவரித்துச்சொல் பார்ப்போம்?

கபீர்:—ஜீவயிம்சை அசத்தியம் சோரத்துவம் வியபிசாரம் விஷயசுகங்களுக்குவேண்டிய வஸ்துக்களை இச்சைகொள்ளுதல் இவைமுதலானவைகள் இல்லாமலிருந்து, ஜாக்கிர சொப்பனத்திலும் திரிகரணசுத்தியாய் அயிம்சை விரதத்தை அனுஷ்டித்துவரும் சத்புருஷனிடம் பரஸ்பர விரோதமாயிருக்கும் மிருகஜந்துக்களும் விரோதம்நீங்கி சிநேகமாயிருக்கும். சத்திய விரதத்தை அனுஷ்டித்துவரப்பட்டவர்கள் மற்றஎந்தவிரதங்களையும் அனுஷ்டிக்காவிட்டாலும் அதன்பலன்களெல்லாம் தனக்குத்தானாகவே சித்திக்கும். பரதனத்தை ஆசிரயிக்காமல் பரிசுத்தனாயிருக்கப்பட்டவனுக்குத் தனக்குத்தானாய் சமஸ்த ரத்தினங்களும்உண்டாகும். இந்திரியங்களை ஜயித்து வியபிசாரம் முதலாகிய தோஷங்களைச்செய்யாமல் இருக்கப்பட்டவனுக்கு பிரமதேஜசு விசேஷமாயுண்டாகும். போகங்களை இச்சிக்காமல் நிச்சலசித்தத்துடன் இருக்கப்பட்டவர்களுக் பூர்வஜன்மஞானம் உண்டாகும். இவைஎல்லாம் 'இயம' மென்று சொல்லப்படும். உள்ளும்புறம்பும் எப்பொழுதும் பரிசுத்தமாயிருந்து மிகவும்சந்தோஷத்துடன் ஈசுவரபக்தி செய்துகொண்டிருப்பதே 'நியம' மென்று சொல்லப்படும். இந்த நியமத்தினால் சுசியும் சாத்விககுணமும், இவைகளினால் சித்தசுத்தியும், சித்தசுத்தியினால் இந்

திரியஒடுக்கமும், இந்திரிய ஒடுக்கத்தினால் ஆத்மதரிசன யோக்கியதையும் கிரமக்கிரமமாய் உண்டாகும். வேதங்களில்சொல்லப்பட்ட மந்திரங்களில் பிரணவமந்திரத்தைச் சேர்த்து தனக்கிஷ்டமானதேவதையை உபாசனாமூர்த்தியாய்வைத்து பூஜித்துவந்தால், அந்தத்தேவதை பிரத்தியக்ஷமாய்த் தான் கோரியவைகளைஎல்லாம் கொடுக்கும். ஈசுவரனிடத்தில் விசேஷபக்திவைத்து பிரதிதினம் பூஜித்துவந்தால், இருதயத்திலிருக்கும சமஸ்த மலினங்களும் நீங்கி ஈசுவரசொரூபம் நன்றாய்விளங்கும். இவைகளும் நியமமென்றுசொல்லப்படும்.

சித்தாசனம் பத்மாசனம் சிம்மாசனம் பத்திராசனம் கூர்மாசனம் கோமுகாசனம் முக்தாசனம் கவஸ்திகாசனம் சுகாசனம்முதலாகிய ஆசனங்கள் அநேகமுண்டு. அவைகளில் எவரெவர்களுக்கு எதெதுவேண்டுமோ அதையதை எடுத்துக்கொண்டு அதுபோல் அப்பியசித்துவரவேண்டும். இந்தஆசனங்களினால் சீதோஷ்ணங்களும் சுகதுக்கங்களும் பசியும் உண்டாகமாட்டாது.

உஸ்வாசநிஸ்வாசங்களைக் குரு உபதேசித்தபடி அப்பியாசம் செய்துவருவதே பிராணாயாமமென்று சொல்லப்படும். நாசித்துவாரங்களிலிருந்து வெளிவிடும்சுவாசம் ரேசகமென்றும், உள்ளுக்கிழுக்கும்சுவாசம் பூரகமென்றும், உள்ளுக்கிழுத்த சுவாசத்தை வெளியில்விடாமல் நிறுத்துவது கும்பகமென்றும் சொல்லப்படும். இந்த ரேசக பூரக கும்பகங்கள் பிரதிதினம் இவ்வளவு பிரமாணம் செய்யவேண்டுமென்பதை நிர்ணயம்செய்து அதுபோல் தப்பாமல் பிரதிதினமும் அப்பியாசம்செய்து வருவது சாங்கியயோகமென்றும், சுவாசத்தை நாசிகைகளிலிருந்து பதினாறங்குலம் வெளியில்விடுவது தேசதீர்க்கமென்றும், இருபத்திநான்குஅங்குலம்வரையில் வெளியில்விடுவது கால

தீர்க்கமென்றும், பிரதிதினம் செய்யவேண்டிய தொகையை விட அதிகமாய்ச்செய்வது ஸங்கியாதீர்க்கமென்றும், பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். நிர்ணயம் செய்து கொண்டதைவிட அதிகமாய்ச் செய்வது தீர்க்க பிராணுயாமம் என்றும், நிர்ணயம்செய்து கொண்டதைவிடக் குறைவாய்ச்செய்வது சூக்ஷ்ம பிராணுயாமமென்றும் சொல்லப்படும். ரேசக பூரகங்களில்லாமல் கும்பகத்தில் இருப்பது கேவலகும்பகமென்றும் சொல்லப்படும். இந்தக் கும்பகத்தினுல் சித்தசம்பந்தமாகிய சாத்வீகுணங்களுண்டாய் காயக்கிலேசங்களெல்லாம் நாசமாகும். மலினங்களாகிய கர்மங்களை எல்லாம் பாபமென்று சொல்லப்படும். இது பிராணுயாமத்தினுல் நாசமாகவேண்டியதே யொழிய இதரமானவைகளால் எவ்வளவேனும் நாசமாகத்தக்கதல்ல. பிராணுயாமத்தினுல் பரிபக்குவமடைந்த மனதை எங்குநிறுத்த எண்ணினுலும் அங்குநிறுத்தச் சக்தியுண்டாகும்; அதனுல், அதை 'தாரணை' என்று சொல்லப்படும்.

இந்திரியங்களை எல்லாம் விஷயங்களில் போகவிடாமல் நிச்சலனமாய்த் தன் ஸ்தானத்தில் நிறுத்துவதே 'பிரத்தியாஹார' மென்று சொல்லப்படும். பிரத்தியாஹாரம் உண்டாகும்பக்ஷத்தில் இந்திரியங்களின்வழியாய் ஓடிக்கொண்டிருக்கும் மனது வசமாகும். நாபியின்வழியாய் சலித்துக்கொண்டிருக்கும் சித்தத்தைக் கும்பகமாய் நிறுத்துவதே தாரணைஎன்று சொல்லப்படும். தாரணைக்கு விரோதமாயிருக்கும் எந்தவஸ்துக்களிலும் மனது நுழைய விடாமல் ஜாக்கிரதையுடன் இருப்பதே தியானமென்று சொல்லப்படும். இந்த தாரணை தியானங்கள் இல்லாமல் இருப்பதே சமாதிஎன்று சொல்லப்படும். இந்த சமாதியில் இருக்கப்பட்டவன் தன் நிஜசொரூபத்தை அடைவான் என்று அறியக்கடவாய்.

கோரக் :—ஞானசித்தி எவ்விதமாய் உண்டாகும்?

கபீர் :—பிரம்மரந்திரத்திற்குமேல் ஸஹஸ்ராரத்தில் சித்தத்தின் சாத்விககுணமும், பிரம்மரந்திரம் சமீபமாய் ராஜசகுணமும், பிரம்மாந்திரத்தின்கீழ் தாமசகுணமும் உண்டாகின்றது. இவைகளில் ஒவ்வோரிடத்திலும் சித்பிரம்மை இருந்துகொண்டிருக்கும். இந்த சித்பிரம்மைகளெல்லாம் எப்பொழுது புருஷனைவிட்டுஒழிகின்றதோ, அப்பொழுதே ஞானம்உண்டாகும். இந்தஞானமே அந்தக்கரணமா யிருக்கின்றது. சுத்த சத்வகுணத்திற்கு பிக்ஞைக்குஎன்றும், சத்வபாக பிரஞ்ஞைக்குப் புத்தி என்றும், ராஜசபாக பிரஞ்ஞைக்கு மனசு என்றும், தாமசபாக பிரஞ்ஞைக்கு அஹங்காரமென்றும், இவைகளுக்கெல்லாம், ஆதியிலிருந்து வந்துகொண்டிருக்கும் சம்சாரபந்தமே சித்தமென்றும் சொல்லப்படும். காலக்கிரமத்தில் ஞானம் அறியும்சக்தி உண்டாகும். புத்திக்கு வருங்காலமும், மனதிற்கு நிகழ்காலமும், சித்தத்திற்குச் சென்றகாலமும் அறியத்தக்க சக்தியுண்டு. அஹங்காரம் அஞ்ஞானத்தில் மூழ்கியிருப்பதனுல், அதற்கு எந்தஞானமும் உண்டாகமாட்டாது. மனம் புத்தி சித்த அஹங்காரங்கள் நான்கும் கேவல பிரபஞ்சசொரூபத்தில் மூழ்கிஇருப்பதால், இவைகள் தன் நிஜசொரூபத்தைத் தெரிந்துகொள்ளாமல் அந்தக்கரணமாகவே இருக்கும். ஞானம் அந்தக்கரணத்துடன் கூடிப்பிரபஞ்ச விஷயத்திற்கெல்லாம் சாக்ஷிபூதமாய் இருக்குமேயொழிய, விஷயஇச்சையில் பிரவேசிக்கமாட்டாது. ஆதலால், அதை அந்தக்கரணமென்று சொல்லலாகாது. அருணோதயத்திற்குமுன் கிரணங்கள் தலைக்காட்டுவது போல், ஞானத்திற்கு அறிவு எப்பொழுதும் தலைகாட்டிக்கொண்டிருக்கும். பிரபஞ்சவாசனையில் மூழ்கியிருக்கும் புத்திக்கு யாதொன்றும்தோன்றாது.

இந்தப் புத்தியை சரிப்படுத்துவதற்காக குருவை ஆசிரயிக்கவேண்டும். குருவை ஆசிரயித்தவுடன் சந்தேகமில்லாமல் தன் நிஜசொரூபத்தைத் தரிசிக்கலாம்.

கோரக் :—தூர சிரவணங்களை எவ்விதமாய்க் கேழ்க்கலாம்?

கபீர் :—கர்ணேந்திரியங்கள் ஆகாசதத்துவமாதலால், கர்ணேந்திரியம், ஆகாசம் இரண்டையும் சதாகாலமும் ஒன்றாய்ச்சேர்த்துவந்தால், ஆகாசத்தின் அம்சமாகிய கர்ணேந்திரியங்களுக்கு மிகவும் தூரத்தில் உண்டாகும் சப்தத்தைக் கேழ்க்கச் சக்தியுண்டாகும்.

கோரக் :—ஆகாசத்தில் எவ்விதமாய் நடக்கலாம்?

கபீர் :—சரீரத்திற்கும் ஆகாசத்திற்கும் உண்டாகிய சம்பந்தத்தைத் தெரிந்துகொண்டு அவைகளை ஒன்றுடன் ஒன்றாய்ச் சேர்க்கும்பக்ஷத்தில் சரீரம் பஞ்சுபோல் மிகவும் லேசாய் மேல்கிளம்பி தன்னிஷ்டம்போல் ஆகாசத்தில் நடக்கும் சக்தியைஅடையும்.

கோரக் :—எவ்விதமாய் பரகாயப்பிரவேசம் செய்ய வேண்டும்?

கபீர் :—புண்ணியபாபங்களெல்லாம் சமாதி நிஷ்டையில் நாசமானபிறகு தன் சித்தமானது இந்தநாடிகளை ஆசிரயித்துக்கொண்டிருக்கின்றதென்றும், இந்திரியங்கள் இந்த நாடியின் வழியாய்ப் பிரவேசித்து விஷயங்களைத் தெரிந்து கொள்ளுகின்றதென்றும், இந்திரியங்களுக்குப் பிராணாதி வாயுக்கள் ஆதாரமாய் இருக்கின்றதென்றும், தன்சரீரத்திலும் இதரர்களின் சரீரத்திலும் நடந்துகொண்டிருக்கும் தசவாயுக்களையும் நன்றாய் அறிந்தபிறகு தன் சரீரத்திலிருக்கும் தசவாயுக்களையும் இதரர்களின் சரீரத்தில் இருக்கும் அந்தந்த இந்திரியங்களின்வழியாய்ச் செல்லும்படிச் செய்து மறுபடியும் அந்தச்சரீரத்தைவிட்டு தன் சரீரத்தில்

வந்துசேருவதே பரகாயப்பிரவேசமெனப்படும். இவ்விதமாய்ப் பரகாயப்பிரவேசம்செய்வதற்கு லிங்கதேகம் ஒன்றிற்கே சக்தியுண்டேயொழிய மற்றவைகளுக்குச் சக்தி உண்டாகமாட்டாது. லிங்கதேகத்தை வசப்படுத்திக்கொள்வதே உபகோசவித்தையென்று சொல்லப்படும்; என்று கபீர் சொன்னவுடன் கோரக் மிகவும் ஆச்சரியப்பட்டு சற்றுநேரம் ஆலோசனைசெய்து தனக்குள்தான் பின்வருமாறு நினைக்க ஆரம்பித்தான் :—

“ஓஹோ! இவைகளினால் இவனை ஜயிக்க எவ்வளவேனும் சாத்தியமாகமாட்டாது. நான் இந்தகேள்விகளை இவனைக் கேட்பதற்காக எத்தனையோ தினங்களாய் யோசித்து வைத்திருந்தேன். அப்படிப்பட்டவைகளைஎல்லாம் முன்பின் ஆலோசிக்காமலே க்ஷணப்பொழுதில் மிகச் சுலபமாய்ச் சொல்லிவிட்டான். இவன் ஸ்திதியை யோசித்தால் சர்வ தந்திரங்களுக்கும் சுதந்திரனாயிருக்கின்றானென்பதற்கு ஓர் ஐயமுமில்லை. இப்படிப்பட்டவனென்று அறியாமல் வீண்வாதம் வைத்துக்கொண்டேன். இப்போதென்னசெய்யலாம். முதல்வந்தபோது இவன் சாமர்த்தியங்களைஎல்லாம் கண்டிருக்கின்றேன். சிறியவயதிலேயே மிகவும் சாமர்த்தியமாகிய வித்தைகளைஎல்லாம் காட்டியிருக்கின்றான். இவனுக்கு எந்த சாதனத்தினால் இப்படிப்பட்ட அசாத்தியமான யோகவித்தை உண்டாயிற்றோ தெரியவில்லையே. இப்பொழுது பரகாயபிரவேசம்செய்யும் வித்தையில் இவனை மோசம்செய்யவேண்டுமேயொழிய, மற்றவைகளால் மோசம் செய்யலாகாது. இவ்வாறு செய்யாவிடில் உலகத்தில் மிகவும் அபகீர்த்திஉண்டாகும்” என்று நிச்சயித்து கபீரைப்பார்த்து “நீ சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் யோகவித்தையை தெரிந்துகொண்டு பேசுவதனால் பிரயோஜனமென்ன? நீயும் நானுமாய்ச்

சேர்ந்து பரகாயப் பிரவேசம் செய்துபார்ப்போமா? நான் சொல்லியது போல் நீ பரகாயபிரவேசம்செய்வாயாகில், உனக்கு யோகவித்தை தெரியுமென்று ஒப்புக்கொள்வேன். நீ பரகாய பிரவேசம் செய்தபிறகு கேட்கவேண்டிய கேள்விகளை எல்லாம் பின்னிட்டுக் கேட்கின்றேன்'' என்று கோரக்சொல்லினன்.

அப்போது கபீர் கோரகின் அபிப்பிராயம்தெரிந்துகொண்டு கல்லென்றுசிரித்து "கோரக் இது ஓர் பெரிய காரியமென்று எண்ணிக்கொண்டாயா? உனக்கு இன்னும் யோகவித்தை பூர்த்தியாகவில்லை. ஆதலால், பரகாயப்பிரவேசம் மிகவும்பெரிதென்று எண்ணிக்கொண்டாய். இப்படிப்பட்ட சொல்பவித்தையில் நீ பிரவேசிப்பதனால் உனக்கு அவமானம்உண்டாகுமேயொழிய, பெருந்தன்மை எப்போதும் உண்டாகமாட்டாது. ஆதலால், என் வார்த்தையைக்கேட்டு இந்த துர் எண்ணத்தைவிட்டுவிடு'' என்று சொல்லினர்.

அதைக்கேட்ட கோரக் கைகளைக்கொட்டி அட்டகாசம்செய்து, "ஓஹோ! உன் சக்தி இப்போதல்லவோ தெரியவந்தது. பரகாயபிரவேசஞ்செய்ய கையிலாகாமல் இவ்விதமாய்ச் சொல்லஆரம்பித்தாய். உன்னை நான் ஜயித்தேன். நீ எனக்குச் சிஷ்யனாய்விட்டாய். சீக்கிரமாய் வந்து என்பாதத்தில்விழு; இப்போதே உனக்குப் பரகாயபிரவேசத்தை உபதேசஞ்செய்கின்றேன்'' என்று சொல்லி கூச்சலிட ஆரம்பித்தான்.

அதற்குக் கபீர் மந்தஹாசம்செய்து, 'குலைக்கும்நாய் வேட்டையாடா'தென்னும் பழமொழியைக் கேட்டிருக்கின்றாயல்லவா? என் அவ்வாறு ஆத்திரப்படுகின்றாய்? சற்றே சாந்தமாயிரு; நீ ஏதோ மஹா பெருமையாய் நினைத்துக்கொண்டிருக்கும் பரகாயபிரவேசம் ஓர் சிறிய

பிள்ளையும்செய்வான்; இப்படிப்பட்ட சொற்பவித்தையை மஹாபெருமையாய்ச்சொல்லி எகிரிக் கூத்தாடத்தொடங்கினாய், போதும்போதும்; இதுவரையில்நிறுத்து'' என்று சொல்லினர்.

அவ்வார்த்தைகளைக் கோரக் கேட்டவுடன் பரமானந்தமடைந்து இப்போது கபீர் அகப்பட்டுக்கொண்டான்; ஏதோ மஹாபுத்திசாலியைப்போல் அபிநயித்துச் சமத்கார வார்த்தகளை ஆடப்போய் கடைசியில் தன்னைக்கட்டக் கயிர் தானே கொண்டுவந்ததுபோல் செய்துகொண்டான்'' என்றுயோசித்து "ஏதோ இப்போது நீசொல்லியதுபோல் சிறியபிள்ளையால் பரகாயப்பிரவேசம் செய்விக்கவேண்டும்' என்றுசொல்லி கபீர்முன்வந்துநின்றான். ஜனங்களெல்லோரும் கபீர், கோரக்கிடம் அகப்பட்டுக்கொண்டான் என்று மிகவும் வருத்தமடைந்தார்கள். இவ்வார்த்தைகளை எல்லாம் கேட்டவுடன் கபீர் சித்தனைப்பார்த்து "கோரக்! நான் எவ்வளவுசொல்லியபோதிலும் என்வார்த்தையைக் கேழ்க்கமாட்டாயல்லவா? இதில் நீ பிரவேசிப்பாயாகில் அவசியமாய் அவமானமடைவாய்! உன்மீது கனிகரத்துடன் மற்றொருமுறையும் சொல்லுகின்றேன்கேள்'' என்று சொல்லினர்.

கோரக் அதைக்கேட்டு கலகலவென்றுசிரித்து "கபீர்! உன்ரகசியம் வெளியாய்விட்டது. பரகாயபிரவேசஞ்செய்யத் தெரியாதென்று சொல்லலாகாதா? உதவாதவார்த்தைகளைஎல்லாம் ஏன் டம்பமாய்ப்பேசுகின்றாய்? உன்மிரட்டலுக்கெல்லாம் கோரக் பயந்தவனல்ல. நீ சொல்லியதுபோல் சிறியபிள்ளையால் பரகாயப்பிரவேசஞ்செய்விக்கவேண்டும். அப்படிச்செய்யாவிட்டால் என் பாதத்தில் வீழ்ந்து என்னை ஆசிரயித்தால் உனக்கு உபதேசஞ்செய்கின்றேன். இவ்விரண்டில் ஏதாகிலும்ஒன்று செய்யாவிட்

டால், உன்னைச் சும்மாய்விடேன்'' என்று திரஸ்காரமாய்ச் சொல்லினன்.

அதன்பிறகு, கபீர் புன்சிரிப்பாய்ச்சிரித்து "நல்லது உன்னிஷ்டம்போல் செய்து உன்னையும் உன்குருவையும் சிஷ்யனாய்ச் செய்துகொள்ளுகின்றேன்'' என்று சொல்லி வேடிக்கைப்பார்க்கவந்த ஜனங்களில் நின்றிருந்த ஓர் சிறுவனைத் தன் சமீபமாய் வரும்படிக்கைகாட்டி அழைத்தார். அப்போது கோரக், வேடிக்கைப் பார்க்கவந்து நின்றிருக்கும் வேடன்கையில் இறந்திருந்த காகம் குயில்களை வாங்கிக் கபீர் முன்கொண்டுவந்துபோட்டு "ஏதோ! இந்தச்சிறுவனை இக்குயிலின் சரீரத்தில் பிரவேசிக்கும்படிச்செய் பார்ப்போம்'' என்று சொல்லினன்; அப்போது கபீர் கோரக்கைப்பார்த்து நீ முன் பிரவேசித்தால் பிறகு இந்தச்சிறுவன் பிரவேசிப்பான் என்று சொல்லினர். அப்போது கோரக் நல்லதென்று சம்மதித்து மாயமாய்ச்சென்று தன் தேகத்தை இமயபர்வதத்திலுள்ள குகையில் மிகவும் ஜாக்கிரதையுடன் ஒளித்துத் தான் தன் சரீரத்தைவிட்டு கபீர் முன் இறந்துக்கிடக்கும் காகத்தின் சரீரத்தில் பிரவேசித்து எகிரி ஓர்கூரை வீட்டின்மேல் உட்கார்ந்திருந்தான். பிறகு கபீர் தன்னிடம் நின்றிருக்கும் சிறுவனைத் தன்கைகளால் தடவி அவன்சிரசில் தன் அஸ்தத்தை வைத்து "நாயனே! இந்தக்குயிலின் சரீரத்தில் பிரவேசிக்கக்கடவாய்'' என்று சொல்லினர்; உடனே சிறுவன் தன் சரீரத்தைவிட்டு குயில் சரீரத்தில் போய்ப்பிரவேசித்து, கூ, கூ வென்று கூவிக்கொண்டு மேலே எகிரிச்சென்றான். அப்போது வீட்டின் மீது உட்கார்ந்திருந்த காகரூபமாயிருக்கும் கோரக் திடீரென்று எழுந்து குயிலைத்துரத்த ஆரம்பித்தது. அப்போது ஜனங்களெல்லோரும் அதைப்பார்த்து அற்புத ஆச்சரியமடைந்து கைகளைக்கொட்டி ஆகாசமார்க்கமாய்ப்

பார்க்க ஆரம்பித்தார்கள். குயிலும் காகமும் சிலதூரம் சென்று மறைந்துவிட்டன. பிறகு கோரக் சிஷ்யர்களிலொருவன் ஓர் பெரிய பக்ஷிரூபம்தரித்து, கபீர்முன் விழுந்துக் கிடக்கும் சிறுவனது சரீரத்தைக் ககனமார்க்கமாய் எடுத்துக்கொண்டு சென்றது. ஜனங்களெல்லோரும் "ஆஹா! சிறுவனைப் பக்ஷிகொண்டுபோய் விட்டதே'' என்று பயந்து, மிகவும் வருத்தமடைந்தார்கள். அவர்களில் சிலர் கபீர் மகிமை தெரியாதவர்கள் கபீரை விசேஷமாய்த் தூஷிக்க ஆரம்பித்தார்கள். கபீர் மகிமை தெரிந்தவர்களெல்லோரும் சிறுவனுக்கு யாதொரு பயமுமில்லை; கபீரைத் தூஷிக்கவேண்டாமென்று அவர்களைச் சமாதானப்படுத்தினார்கள். சிறு பிள்ளையின் தாய்தந்தையர்கள் மிகவும் வைராக்கியசீலர்களாதலால், பரமபாகவதர் அஸ்த ஸ்பர்சத்தினால் தன் குமாரன் பரம பவித்திரனானென்று மிகவும் சந்தோஷமடைந்திருந்தார்கள். சிறுவன் சரீரத்தை மாயம் செய்தால் ஜனங்களெல்லோரும் கபீர்மீதுவிழுந்து விசேஷபாதையை உண்டாக்குவார்கள். அதனால், கபீர் தன்னைச் சரணமடைவானென்று கோரக் தன்சிஷ்யனிடம் சொல்லிச் சிறுவன் சரீரத்தைக்கொண்டுபோய் மறைத்து வைக்கும்படி உத்தரவளித்திருந்தான். ஆதலால், சிஷ்யன் சிறுவன் சரீரத்தைக்கொண்டுபோய் கோரக் சரீரம் இருக்குமிடத்தில் ஒளித்துவைத்து சிறுவனைப்போன்ற ஓர்மாயா சரீரத்தைச் சிருஷ்டிசெய்து கைகள் கால்கள் சிரசு முதலானவைகளை வெவ்வேறாய்க் கண்டித்துக் கபீர்முன் கொண்டுவந்து போட்டான். கபீர் தன்முன் விழுந்த பிரேத கண்டங்களைப் பார்த்து புன்சிறிப்பாய்ச்சிறித்தார். அவர் சிறித்தமாத்திரத்தில் சிறுவன் முண்டங்களெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து கோரக் சிஷ்யர்களின்மீது விழுந்து அவர்களையெல்லாம் தும்சம் செய்ய ஆரம்பித்தது. அப்போது

சிஷ்யர்களெல்லாம் மிகவும் ஆச்சரியப்பட்டு தாம்செய்த மாயை தமக்கே கேடுவந்ததென்று எண்ணி கபீரினுடைய மகிமையைப் பலவிதங்களாய்ப் புகழ்ந்துநின்றார்கள்.

பிறகு கபீர் குயில் ரூபமாயிருக்கும் சிறுவனை மனதில் நினைத்து நாயனே! நீ சீக்கிரமாய் கோரக் சரீரத்தில் போய் பிரவேசித்து இங்கு வரக்கடவாய்என்று சங்கல்பித்தார். அவர் சங்கல்பித்தவுடனே காகத்தினால் துரத்தப்பட்ட குயில் திடீரென்று கீழேவிழ்ந்து, அதிலிருந்த ஜீவன் கிளம்பி இமயமலையின் குகையில் ஒளித்துவைத்திருக்கும் கோரக் சரீரத்தில்போய்ப்புகுந்து ஓர் க்ஷணத்திற்குள் கபீர்முன் வந்துநின்றான். ஜனங்களெல்லோரும் அதைப் பார்த்து ஒன்றும் தோன்றாமல் ஸ்தம்பம்போல் நின்றிருந்தார்கள்.

குயில் கீழேவிழ்ந்தவுடன் காகம் மிகவும் ஆச்சரியமடைந்து பூமியில் இறங்கி குயிலைத் தன்மூக்கினால்குத்தி, அதிலிருந்த ஜீவன் எங்குபோயிற்றென்று சற்றுநேரம் ஆலோசித்து, சந்தேகமுண்டாய் இமயபர்வதத்திற்குச் சென்று, அங்கு ஒளித்துவைத்திருந்த தன் தேகத்தைக் காணாமல் மிகவும் திகிலடைந்து, சிறுவனே தன் தேகத்தில் பிரவேசித்தானென்று நிச்சயித்து, யாதொன்றும் தோன்றாமல், தன் யுக்தி சமத்காரங்கள் கபீர்முன் சாத்தியப்படவில்லை என்று நினைத்து பிறகு கபீரிடஞ்சென்று, தன் தேகத்தைத் தனக்குத்தரவேண்டுமென்று மிகவும் தாழ்மையாய் ஈனசுரத்துடன் கேட்டான். கபீர் புன்சிரிப்பாச்சிரித்து "நான் முன்பு எவ்வளவுசொல்லியும் கேளாமல் போனையல்லவா? என் வார்த்தையை மீறி நடந்ததால் உனக்கு இப்படிப்பட்ட ஆபத்துகள்வந்து சம்பவித்தது. இனியாகிலும் புத்தியுடன் இருந்து எவர்களுக்கும் கெடுதி செய்யாமல் இரு'' வென்று சொல்லி "சிறுவன் சரீரத்தை

உன் சிஷ்யன் இமயபர்வதத்தில் கொண்டுபோய் மறைத்து வைத்திருக்கின்றான்; அதைச் சீக்கிரமாய் கொண்டு வரும்படிச் சொல்'' என்று சொல்லினர். அவ்வார்த்தைகளைக் கோரக் சிஷ்யர்கள் கேட்டவுடன் தன் குரு சரீரத்தில் சிறுவன் ஜீவன் பிரவேசித்திருக்கின்றதென்றும் தன் குருவின் ஜீவன் காகத்தின் சரீரத்திலிருக்கின்றதென்றும் தெரிந்து கொண்டு கோரக் சிஷ்யர்கள் மிகவும் பயந்து இமயபர்வதத்தில் ஒளித்து வைத்திருந்த சிறுவனது சரீரத்தைக் கொண்டுவந்து கபீர்முன்வைத்து "நாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று'' பிரார்த்தித்தார்கள். அப்போது கபீருக்குக் கனிகரமுண்டாய், கோரக் சரீரத்திலிருக்கும் சிறுவனை அவன் சரீரத்தில் பிரவேசிக்கும்படிச் சொல்லினர். உடனே சிறுவன் கோரக்சரீரத்தை விட்டுத் தன் சரீரத்தில் பிரவேசித்தவுடன், காகத்தின் சரீரத்திலிருந்த கோரக் தன் சரீரத்தில் பிரவேசித்து, மறுபடியும் கபீர்மேல் அட்டகாசம்செய்து "கபீர்! இதனால், என்னை ஜயித்துவிட்டோமென்று எண்ணவேண்டாம். உன் பிரம்ம தத்துவத்தை இப்போதல்லவோ அறியப்போகின்றேன்'' என்றுசொல்லி ஓர்கர்ஜனை கர்ஜித்துத் தன் யோகாக்கினியினால் காசியிலுள்ள கங்காநதி முதலாகிய ஜலங்களையெல்லாம் இழுத்துக்கொண்டு எங்கும் சுரண்டி ஜலம் இல்லாமல் செய்துவிட்டான். காசியிலுள்ள ஜனங்களெல்லோரும் ஜலமில்லாமல் மனம்கலங்கி கபீரிடஞ்சென்று முறையிட்டு தம்மைரக்ஷிக்கும்படிக் கேட்டுக்கொண்டார்கள். அப்போது கபீர் அவர்களைப்பார்த்து "பயப்படாதீர்கள்'' என்றுசொல்லி அவர்களை ஆதரித்து ஸ்ரீராமமூர்த்தியைப் பிரார்த்தித்து, "ஜயராமாகந்தா'' வென்று சொல்லி தன் பெருவிரலைப் பூமியின்மேல்வைத்து அழுத்தினவுடனே நீர்த்தாரை ஒன்று பூமியிலிருந்து மேல்கிளம்

பிற்று. அந்த நீர்த்தாரையைப் பார்த்து ஜனங்களெல்லோரும் மிகவும் ஆச்சரியமடைந்து கைகளைக்கொட்டி கபீரினுடைய மகிமைகளுக்காக ஸ்துதிசெய்து கூத்தாட ஆரம்பித்தார்கள். பிறகு கபீர் ஜலம்வேண்டுமென்று கோரப்பட்டவர்கள் எல்லோரும் தங்களுக்குவேண்டிய இடங்களில் “ஜயராமானந்தா” வென்றுசொல்லி பெருவிரலால் பூமியை அழுத்தும்படிச் சொல்லினர். எல்லோரும் அது போல் தங்களுக்கு ஜலம் வேண்டிய இடத்தில் விரல்களால் அழுத்தி ஜலம் உண்டாக்கிக்கொண்டார்கள். கோரக் அதைப்பார்த்து திக்பிரமையடைந்து இனி தன்ஜபம் கபீர்முன் சாயாதென்று நினைத்து யாதொன்றும் பேசாமல் கபீரைப்பார்த்து நின்றான். கபீர் கோரக்கை கோபப் பார்வையுடன் பார்த்து “இனி நீ உன் சித்திர விசித்திர வேலைகள் எதையும் செய்யமுடியாமல் இவ்விதமாய் நின்றிருக்கவேண்டியவனே” என்று சொல்லினர். இவ்வார்த்தை கபீரினுடைய வாக்கிலிருந்து வந்தவுடன் கோரக்கின் சக்திகளெல்லாம் குறைய, மிகவும் பயந்து இனிச் சும்மாயிருப்பது நன்மையல்லவென்று எண்ணி “பரமபாகவதசிகாமணீ! நான் தங்கள் மகிமையை அறியாமற்செய்த அபராதத்தை மன்னித்து என்னை சிஷ்யனாய்ச் செய்துகொண்டு ரக்ஷிக்கவேண்டும்” என்று மிகவும் தீனசுரத்துடன் முறையிட்டுக்கொண்டான். கோரக் சரணமடைந்ததை ஜனங்களெல்லோருங்கேட்டு கலகலவென்று சிரித்து கைகளைக்கொட்டி எங்கள்கபீரிடம் கோரக் இன்று அபஜயமடைந்து சரணமடைந்தான் என்று காசிப்பட்டணமெங்கும் ஜயகோஷம் உண்டாயிற்று. காசியிலுள்ள ஜனங்களெல்லோரும் காசியை மிகவும் அலங்காரஞ்செய்து மாவிலைத்தோரணங்களைக் கட்டி யானையின்மீது அம்பாரியை அலங்கரித்து அதில் கபீரை எழுந்தருளச்செய்து

பட்டணமெங்கும் அதிரும்படி அனேகவாத்தியங்களுடன் ஊர்கோலம் செய்வித்து அநேக சாதுசந்தர்ப்பணைகளைச் செய்வித்தார்கள்.

பிறகு, கபீர் கோரக்கை ஆதரித்து கருணைகடாக்ஷ பார்வையுடன்பார்த்தார். அவர் அவ்வாறுபார்த்தவுடன், கோரக் பந்தங்களெல்லாம்நீங்கி யதாப்பிரகாரம் சரீரத்தில் சக்தியுண்டாயிற்று. சக்தியுண்டானபிறகு கோரக் கபீரிடம் சென்று பிரதக்ஷணம்வந்து நமஸ்கரித்துநின்று தனக்குத் தத்வோபதேசம்செய்து ரக்ஷிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். கபீர் பரிபூர்ணானுக்கிரகத்துடன் அவன் மஸ்தகத்தில் தன் அஸ்தத்தைவைத்துப் பின்வருமாறு உபதேசஞ் செய்ய ஆரம்பித்தார்:—

ஐயா! நான் சொல்லப்போகும் விஷயங்களை எல்லாம் சாவதானமாய்க் கேழ்க்கவேண்டும். உலகத்திலுள்ள ஞானவான்களெல்லோரும் சமாதிநிஷ்டையில் இருக்கவேண்டுமென்றும், யோகசாதனங்களில்லாமல் உண்டாகியஞானம் அவ்வளவு ஸ்திரமானதும், சுகத்தைத்தரத்தக்கதும் அல்லவென்றும், உலகவியாபாரங்களில் மூழ்கியிருக்கப் பட்டவர்களுக்கு ஞானம் சாத்தியமாகாதென்றும் சில விவேகிகளுக்குச் சம்சயம் உண்டாகின்றது. சம்சயம்இருந்தால் ஞானம் உண்டாகமாட்டாது. ஆதலால்,அப்படிப்பட்டசம்சயத்தை முதல் நிவர்த்திசெய்யவேண்டும். எப்பொழுதும் தனக்கு எதிலும் எச்சம்பந்தமுமில்லைஎன்றும், பிரபஞ்சமெல்லாம் சொப்பனம்போன்றதென்றும் எண்ணி நித்திய நைமித்திய ரூபமாகிய யஞ்ஞாதி கர்மங்களும் தேவதாபூஜைகளும் சந்தியாவந்தனாதி கிரிகைகளும் சதாகாலமும் செய்து வந்தபோதிலும், தான்மாத்திரம் சாக்ஷியாயிருக்கின்றேனென்றும், தான் எந்தக் கர்மங்களையும் செய்வதில்லைஎன்றும், அஹங்காரம் முதலானவைகள் சர்வவிஷயங்களில் ஓடிக்

கொண்டிருக்கின்றதென்றும், தான் அசங்கனென்றும். தனக்குச் சாக்ஷியாயிருப்பதும் கல்பிதமென்றும், நிச்சயித்து உலகவியாபாரங்களெல்லாம் நடத்தப்பட்டவனே பிரம்மவித்துஎன்று சொல்லப்படும். வெளியில் தோன்றும் தோற்றங்களெல்லாம் துக்கமே என்றும், அவைகளினால் தனக்கு யாதொரு லாபமுமில்லை என்றும் தெரிந்துகொண்டு சகல வியாபாரங்களையும்விட்டு நித்திரை செய்பவனைப்போலிருந்து காலத்திரயத்திலும் பிரபஞ்சமில்லைஎன்றும்; ஒருவேளை பிரபஞ்சம்இருப்பதாய்த் தோன்றினாலும், அது மித்தைஎன்றும், தனக்குச் சாக்ஷியாயிருப்பதே ஆத்மாவென்றும் நிச்சயித்து, தன்னை ஆசிரயித்த முமுக்ஷுக்களுக்கு உபதேசம்செய்து, தான் எந்த கர்மங்களையும் செய்வதில்லைஎன்றுநிச்சயித்து, இந்திரயங்களை வெளிவியாபாரங்களில் போகவிடாமல்நிறுத்தி, எப்பொழுதும் ஏகாந்தமானஸ்தளத்தில் நிஷ்டையில் இருப்பவனே வரன் என்று சொல்லப்படும். வெளிவியாபாரங்களெல்லாம் துக்கமென்றுஎண்ணி அவைகளைஎல்லாம் நிவர்த்திசெய்து எப்பொழுதும் நிதித்யாசனத்திலிருந்து விசேஷ பிரீதியுடன் இதரர்களால் கொடுக்கப்படும் அன்னபானாதிகளைப் புஜித்து சமஸ்த வியாபாரங்களும் அஹங்காரத்தினால் உண்டாகின்றதென்றும், தான் எந்தகாரியங்களையும் செய்வதில்லையென்றிருக்கப்பட்டவனே வரியான் என்றும் சொல்லப்படும். வெளிவியாபாரங்களெல்லாம் துக்கமென்னும் சம்சயம்நீங்கி வெளிவியாபாரங்களும், அந்தர்வியாபாரங்களும் சமாதிநிஷ்டையில்லயித்து அன்னபானாதிகளில்லாமல் நிர்விகல்பசமாதியில் நித்தியானந்தசுகத்தை அனுபவித்துக்கொண்டு பரமபவித்திரனா யிருக்கப்பட்டவனே வரிட்டனென்றும் சொல்லப்படும். இந்த நான்கு அப்பியாசிகளுக்கும் மோக்ஷம் சமானமானதேயாம். இவர்களின் கர்மவிதிப்படி இவ்

விதமா யிருக்கின்றார்களேயொழிய, ஞானிகள் இவ்விதமாய் இருக்கவேண்டுமென்னும் நிர்பந்தமில்லை. பூர்வம் ஜனகர் ராஜ்ஜியபாரம் செய்தாரென்றும், ஜடபரதர் நிஸ்ஸங்கமா யிருந்தாரென்றும், உபநயனத்திற்குமுன்பே சுகர் கிருகத்திலிருந்து வெளிப்பட்டாரென்றும், தூர்வாசர் சிலரை நீக்கி சிலருக்கு அனுக்கிரகம் செய்தாரென்றும், புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஞானம், கர்மானுசாரமாய் உண்டாகின்றது. ஆதலால், ஞானம் இதனால் உண்டாகின்றதென்றும், அதனால் உண்டாகின்றதென்றும், விவேக முடையவர்கள் சொல்வார்கள். மற்றொரு விசேஷஞ் சொல்லுகின்றேன்கேள் :—

தனத்தைவிட குமாரனும், குமாரனைவிட தேகமும், தேகத்தைவிட இந்திரியங்களும்,இந்திரியங்களைவிட பிராணனும், பிராணனைவிட ஆத்மாவும் சிரேஷ்டமானதென்று அறியவேண்டும்.

ஒருவேளை தன்குமாரன் துஷ்டகாரியங்களைச் செய்து ராஜதண்டனைக்கு உட்படும்பக்ஷத்தில், முன்பின் யோசிக்காமல் தனத்தை உத்தியோகஸ்தர்களுக்குப் புளியம்விதையைப்போல் நினைத்துக்கொடுத்து அவர்களை வசப்படுத்தித் தந்தை குமாரனை விடுவித்துக்கொள்ளுகின்றான். ஆதலால், தனத்தைவிட புத்திரனே சிரேஷ்டமானது. ஒருவேளை தனத்தைப் பெற்றுக்கொண்டு குற்றம்செய்த புத்திரனை விடாமல் அவனுக்குப்பதிலாய் தந்தையை தண்டனைக்கு உட்படும்படி அதிகாரிகள்சொல்லியபோது குமாரன் போனாலும்போகட்டும் தான் தண்டனைக்கு உட்படாமல் தப்பித்துக்கொள்வான். ஆதலால், குமாரனைவிட சரீரமே பிரியமானது. குற்றம்செய்த ஒருவன் கண்களைப் பிடுங்கிவிடவேண்டுமென்றாகிலும் அல்லது மூக்கை அறுத்துவிடவேண்டுமென்றாகிலும் தண்டனைச் செய்தால், அவன் தன்

தேகத்திலுள்ள எந்த அங்கங்களையும் அறுபடும்படிச் சம்மதிக்காமல், எவ்விதத்திலாகிலும் இந்திரியங்களைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்று யோசிப்பான். ஆதலால், தேகத்திலும் இந்திரியங்களே சிரேஷ்டமானது. ஒருவேளை இந்திரியங்களை அறுக்காமல் சிரச்சேதம் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டால், அப்போது இந்திரியங்களை அறுப்பித்துக்கொண்டு பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள யோசிப்பான். ஆதலால், இந்திரியங்களைவிட பிராணனே சிரேஷ்டமானது. ஆதலால், பிராணனைவிட ஆத்மாவே பிரியமாயிருக்கப்பட்டதென்று ஸ்திரப்படுகின்றது. புத்திர மித்திர களத்திர தேஹேந்திரியாதிகள் யாவும் துக்கமயமானதுஎன்று எண்ணி, அவைகளின் மீதிருக்கும் துரபிமானத்தைவிட்டு, இவைகளுக்கெல்லாம் விலக்ஷணனாயும் அதிக பிரியமாயும் இருக்கும் ஆத்மாவே தானென்று தெரிந்துகொண்டவன் சந்தேகமில்லால் முக்தனாகின்றான் என்றுசொல்லி தாரகமந்திரத்தை உபதேசம்செய்து ஆசீர்வதித்தார்.

பிறகு, கோரக் கபீரினுடைய பூர்ணகடாக்ஷத்தினால், ஆத்மதத்துவத்தை நன்றாய் அறிந்து கிருதார்த்தனாய் கபீரிடம் விடைபெற்று தன் சிஷ்யர்களுடன்கூட தன் ஆசிரமம் போய்ச்சேர்ந்தான். இந்த விநோதங்களைஎல்லாம் பார்த்துக்கொண்டிருந்த பரம பாகவதர்களெல்லோரும் கபீரை ஆசிரயித்து பரமார்த்தோபதேசம்பெற்று கிருதார்த்தர்களானார்கள்.

பகவான் கபீரை பரமபதம்வரும்படி ஆஞ்ஞைசெய்தல்.

பிறகு கபீர் ஓர்நாள் இராத்திரி பிரம்மநிஷ்டையிலிருந்து ஆனந்தத்தை அனுபவித்து சமாதிகலைந்து கண்களை விழித்துப்பார்த்தபோது தன் எதிரில் நின்றிருந்த ஸ்ரீராமமூர்த்தியைத் தரிசித்து பரமானந்தமடைந்து திடீரென்றெழுந்து பிரதக்ஷணஞ்செய்து நமஸ்கரித்துநின்று பின்வருமாறு ஸ்துதி செய்யஆரம்பித்தார்:—

"பரமேசுவரா! உன் கல்யாணகுணங்களை வர்ணிக்க பிரம ருத்திராதி தேவதைகளுக்கும் சாத்தியமாகாமலிருக்க, அற்பனாகிய அடியேன் எவ்வளவுமாத்திரன்? சதுர்த்தச புவனங்களுக்கெல்லாம் பிரபுவாயிருக்கும் பிரம ருத்திராதி தேவதைகளுக்கெல்லாம் நீர் பிரபுவாயிருக்கின்றீர். சமஸ்த உலகங்களும் உம்மால் சிருஷ்டிக்கப்பட்டு அவைகளிலெல்லாம் நீர் பூரணமாய் நிறைந்திருக்கின்றீர். சர்வ பிரபஞ்சங்களையும் சிருஷ்டிக்கவும், ரக்ஷிக்கவும், சிக்ஷிக்கவும் நீரே கர்த்தனாயிருக்கின்றீர். பக்தர்களின் இஷ்டார்த்தங்களைச் சந்தோஷமாய்க் கொடுக்கப்பட்டவராயிருக்கின்றீர். பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசத்தைவிட அதிகமாயும், அஹங்கார மஹதத்வ மூலப் பிரகிருதியைவிட பெரியவனாயும், சர்வ புண்ணிய சொரூபனாயும் இருக்கின்றீர். சுர நர ஜல சர பசு பக்ஷி கிருமி, கீடகங்கள் முதலாகிய சர்வ ஜந்துக்களின் சரீரத்தின் இருதயகமலத்திலுள்ள ஜலமத்தியில் நிவசித்துக்கொண்டிருக்கின்றீர். சர்வபூத சொரூபனாயும், சர்வ பரிபூர்ணனாயும் இருக்கின்றீர். நீர் ஆணவ காமிய மாயை என்னும் மும்மலங்களும், பஞ்சமலங்களும் இல்லாமல் நிர்மலனாயிருக்கின்றீர். பிரணவரூப

பிரபஞ்சத்திற்கு அதீசுவரனாயிருக்கின்றீர். பிரணவத்தினால் உச்சரிக்கப்பட்டவராயிருக்கின்றீர். திவ்யஞான சம்பன்னர்களாகிய முனிவர்களால் துதிக்கப்படுபவராயிருக்கின்றீர். பரமோத்கிருஷ்டமான மோக்ஷலக்ஷ்மிக்கு நிவாசஸ்தானமாயும், திரிகுண உதபயங்களுக்கு முக்கிய காரணமாயும் சுத்த சத்துவமாயும், பூத பவிஷ்ய வர்த்தமான காலங்களிலும் ஜாக்ர ஸ்வப்ன சுஷுப்தியிலும் நசிக்காமல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் உமக்கு மாயாசம்பந்தமாகியகுணங்களும், குணசம்பந்தமாகிய விகாரங்களும் இல்லை. துஷ்டர்களைச் சிக்ஷித்து, சிஷ்டர்களை ரக்ஷிப்பதற்காக கோபசாந்த முதலாகிய குணங்கள் இருப்பவரைப்போல் காணப்படுகின்றீர். உமது மாயை உமக்குத்தெரியுமேயொழிய இதரர்களுக்குத் தெரியவராது. பரமேசுவரா! உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். அடியேன் பாமரன். துரஹங்காரமுடையவன். துஷ்டன். துர்மார்க்கன். மதமுடையவன். நிந்தையுடையவன். அடியேனை எவ்விதத்திலாகிலும் ரக்ஷிப்பது உமது பாரமே'' என்று பிரார்த்தித்துக் கண்களில் ஆனந்த பாஷ்பம் ஆறாய்ப்பெருகி நர்த்தனம்புரிய ஆரம்பித்தார். அப்போது ஸ்ரீராமமூர்த்தி பரமபிரீதியுடன் கபீரை ஆலிங்கனஞ்செய்து "பரமபாகவத சிகாமணீ! உன்பக்தி ஞான வைராக்கியங்கள் மிகவும் ஆச்சரியத்தைஉண்டாக்குகின்றது. நீ பரம தபோதனன். மூன்றுலோகங்களிலும் உனக்குச் சமானமானவர்களில்லை. அநேக பாமரஜனங்கள் உன்னால் கடைத்தேறினார்கள்; நீ அவதரித்த காரியம் முடிந்துவிட்டது. இனி, பரமபதம்வந்து சேரக்கடவாய்'' என்று ஆஞ்ஞாபித்து மிகவும் பக்திசிரத்தையுடன் கபீர் சமீபமாய் நின்றிருக்கும் கமாலைப்பார்த்து, "சத்பக்த சிகாமணீ! நீ அவதரித்த காரியமும் நிறைவேறிற்று. ஆத

லால், இனி நீ இங்கிருக்கவேண்டிய அவசியமில்லை; பரமபதத்திற்குவரலாம்'' என்று ஸ்ரீராமமூர்த்தி ஆஞ்ஞாபித்தார். கமால் அவ்வார்த்தையைக் கேட்டவுடன் பரமானந்தமடைந்து இருகைகளையுங்குவித்து அஞ்சலிஅஸ்தனாய் நின்று பகவானது முககமலத்தில் நிச்சல திருஷ்டிநிறுத்தி "பரமேசுவரா! உலகத்தில் ஸ்திரீ புருஷ ரூபமாயிருக்கும் மானவஜனங்களெல்லாம் உன்மாயையால் கட்டுப்பட்டுச் சம்சாரமென்னும் சமுத்திரத்தில் மூழ்கி தனைச என்னும் வியாதியினால் பிடிக்கப்பட்டு விஷயவாசனாரூபமாகிய அற்ப சுகங்களுக்கு உட்பட்டு எப்போதும் பரிதபித்துக்கொண்டிருப்பார்களேயொழிய நித்தியானந்த சொரூபியாகிய உன்னை ஒரு நிமிஷமாகிலும் நினையார்கள். காட்டில் பள்ளத்தின்மீது செழுமையாய் வளர்த்து வைக்கப்பட்ட பயிரைப்பார்த்து, அதனால் கேடுவந்து சம்பவிக்குமென்னும் விசாரமில்லாத யானையானது அந்தப்பயிரை மேய்வதற்காக துரிதப்பட்டுச்சென்று அந்தப்பாழும்பள்ளத்தில் விழுவதுபோல், பூர்வஜன்மார்ஜிதபுண்ணியவிசேஷத்தினால் துர்லபமாகிய மானவஜன்மம் உண்டாகியும், உன்னைப் பூஜிக்காமல் சம்பூர்ண விஷயாசக்தியினால் சம்சாரமென்னும் பாழும்பள்ளத்தில்விழுந்து நாசமாகின்றார்கள். சர்ப்பங்கள்காத்திருந்து சமயம்பார்த்து எலிகளைப்பிடித்து விழுங்குவதுபோல், அநேகவிதங்களாகிய காமக்குரோத லோபாதிவிஷயங்களில் அதிக ஆசைவைத்து உடலை மறந்து உன்னைச்சேவிக்காதவர்களை நீ சமயம்பார்த்து அவர்களைக்கொன்றுவிடுவாய். அறிவில்லாத சில புருஷர்கள் குரங்கைப்போல் ஓடிக்கொண்டிருக்கும் மனதை நிறுத்தி விஷயபோகங்களைவிட்டு இந்திரியங்களைஜயித்து கோரமாகிய தவம்செய்து கடைசியில் அழியத்தக்க இந்திர போகங்களைக் கோருகின்றார்களேயொழிய சாஸ்வதமாகிய

உன் நித்தியானந்தபதவியை கோரார்கள். அப்படிப்பட்டவர்கள் எப்பொழுதும் உன் அனுக்கிரகத்திற்குப் பாத்திரர்களாகமாட்டார்கள். சம்சாரபாசத்தினால் கட்டப்பட்டு துக்கப்படும் மானவஜனங்களுக்கு உன் அனுக்கிரகம் உண்டானபோதே அவர்களின்பந்தம் விமோசனமாய் சத்சாங்காத்துவம் உண்டாகும்; அப்படி உண்டாவதனால் உன் சேவைகிடைக்கும். உன் சேவை கிடைப்பதனால், நித்தியானந்தமாகிய மோக்ஷ சாம்ராஜ்ஜியபதவி சித்திக்கும். ஆதலால், யோக்கியர்கள் எப்பொழுதும் சம்சாரபந்தத்தில் அகப்படாமல் உன்னை எப்பொழுதும் மிகவும்பக்தியுடன்சேவித்து நித்தியானந்தபதவியை கொள்ளை கொள்வார்கள். சர்வேசுவரா! உமக்கு நமஸ்காரம். சிருஷ்டி ஸ்திதி சம்மாரங்களுக்கெல்லாம் நீயே கர்த்தனும் சுயம்பிரகாசனும் சச்சிதானந்தனும் சர்வஞ்ஞனும் சர்வமயமாயுமிருக்கும் உன்னை ஆசிரயித்தேன். ஞானேந்திரியங்களை ஜயிக்கச் சக்தியில்லாத என்னை கருணாகடாக்ஷத்தினால் வீக்ஷித்து ஜனனமரணமென்னும் பயத்திலிருந்துவிடுவித்து ரக்ஷிக்கவேண்டும்'' என்று பிரார்த்தித்துப் பகவானது திவ்வியதேஜஸ் சொரூபத்தில் மனதை லயிக்கச்செய்து தேஜோரூபமாகிய கர்ப்பூரக்கட்டியைப்போல் கரைந்து நாரத அம்சத்துடன் கலந்துவிட்டார்.

பிறகு, பகவான் சுந்தராதேவியைப்பார்த்து "அம்மா! நீ பரம பதிவிரதை உன்பக்தி அமோகமாயிருக்கின்றது; நீசெய்த பதிபக்திக்கு பஞ்சகன்னிகைகளும் சமானமாகமாட்டார்கள். நீ வந்தகாரியம் நிறைவேறிற்று. ஆதலால், இப்போதே என்னுடன் கூடப்புறப்படு'' என்றுசொல்லினார். பகவத்வாக்கியங்களைச் சுந்தராதேவிகேட்டவுடன்தன் நாயகனை நமஸ்கரித்து, "அடியாளுக்கு என்ன ஆஞ்ஞை கொடுக்கின்றீர்கள்?'' என்று கேட்டனள். அதற்குக்

கபீர் மந்தஹாசம்செய்து, "பகவதாஞ்ஞானுசாரமாய் நடந்தொள்ளவேண்டியதே நமக்கு முக்கியமான தருமமாதலால் யாதொரு அக்ஷேபனையுமில்லாமல் இப்போதே பகவானுடன்கூடச் செல்லக்கடவாய்'' என்று உத்திரவு செய்தார். அப்போது ஆகாசமார்க்கமாய்த் திவ்வியவிமானமொன்று தசதிசைகளும் ஜொலித்துக்கொண்டு பகவான் சமீபமாய்வந்துநின்றது. இந்த அற்புதங்களையெல்லாம் பார்ப்பதற்காக காசிப்பட்டணத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும் புறப்பட்டுவந்து கபீர்வீட்டைச்சுற்றிலும் எள்ளிறங்க இடமில்லாமல் சூழ்ந்துகொண்டு நின்றார்கள். உடனே பகவான் திவ்விய விமானத்திலேறி சுந்தராதேவியை வரும்படி அழைத்தார். அப்போது சுந்தராதேவி தன் நாயகனை நமஸ்கரித்து கண்களில் ஜலம் ததும்பி மிகவும் தாழ்ந்த தொனியுடன் "பரமபதத்திற்குச்செல்ல விடைகொடுக்கின்றீர்களா?'' என்று மிகவும் வணக்கமாய்க்கேட்டனள். அதற்குக் கபீர் "சந்தோஷமாய்ப்போகலாம். இதைவிட உனக்கு வேறு என்னவேண்டும்? மிகவும் புண்ணியவதியாதலால், சாந்தியுடன் பரமபத சம்பத்தை அடைந்தாய் உன்ஜன்மம் கடைத்தேறிற்று; இனிச்சந்தோஷமாய்ப்போகலாம்'' என்று விடைகொடுத்தார். மறுபடியும் சுந்தராதேவி நாயகனை நமஸ்கரித்து திவ்வியவிமானமேறி பகவான் பக்கத்தில்போய் உட்கார்ந்தாள்.

இவ்வம்மையார் உட்கார்ந்தவுடன் விமானம் ஆகாசமார்க்கமாய்க்கிளம்பி மிகவும்வேகமாய்ச்சென்றது. சுரர்களும் முனிவர்களும் ஜயஜயவென்று தொனிசெய்தார்கள். அப்ஸரர்கள் நாட்டியஞ்செய்தார்கள். கந்தர்வர்கள் பாடினார்கள். தும்புருநாரதர்கள் வீணைவாசித்தார்கள். இவைகளையெல்லாம் பார்த்திருந்த ஜனங்களெல்லோரும் சுந்தராதேவி பிரபாவத்தையும், கபீரினுடைய மகிமையையும் பலபலவிதங்களாய்வர்ணித்து அவரவர்கள் வீடுபோய்ச்சேர்ந்தார்கள். பிறகு, கபீர் இன்றுதான் ஜன்மம் கிருதார்த்தமாயிற்றென்று எண்ணி பகவான் ஆஞ்ஞானுசாரமாய் மிகவும் சந்தோஷத்துடன், "இச்சரீரத்தை தகனமும் செய்யலாகாது; சமாதி

வுஞ் செய்யலாகாது" என்று சுவரின்மீது எழுதிவிட்டு பத்மாசனத்துடன் உட்கார்ந்து யோகபலத்தினால் நாபியிலிருக்கும் குண்டலிசக்தியைக் கிளப்பி பிரமரந்திரத்தைத் திறந்துகொண்டு சுகப்பிரம்மரிஷியாய் திவ்விய விமானமேறிச் செல்லும்போது, சுரர்களும் முனிவர்களும்வந்து எதிர்கொண்டு அழைத்துச்சென்றார்கள்.

பொழுதுவிடிந்தவுடன் கபீர் பரமசித்தியடைந்த விஷயம் பட்டணமெங்கும் வியாபித்து இந்துக்களும் மகம்மதியர்களும் அதிகவேகமாய் ஓடிவந்து கபீர் பத்மாசனத்துடன் உட்கார்ந்து பிரம்ம கபாலத்தின் வழியாய் ஆத்மாவைவிட்டுவிட்டாரென்றறிந்து, அவருக்கு வந்தனங்கள் செய்து, சுவற்றின்மீது எழுதிவைத்த வாக்கியத்தை வாசித்து, யாதொன்றும் தோன்றாமல் மிகவும் ஆச்சரியமடைந்துநின்றார்கள். அப்போது மகம்மதியர்கள் எல்லோரும் இந்தப்பிரேதத்தை எப்படியாகிலும் நாம்கொண்டு போய் நமது ஆசாரப்படி கருமங்களைச்செய்யவேண்டுமென்று தம்மில்தாம் ஆலோசித்துக்கொண்டு இந்துக்களைப் பார்த்து "இந்தப்பிரேதம் எங்களுக்குச்சம்பந்தப்பட்டது. ஆதலால், இதைநீங்கள் தீண்டலாகாது" என்றுசொன்னார்கள்.

அப்போது, இந்துக்களெல்லோரும் யோசித்து எவ்விததிலாகிலும் இந்தப்பிரேதத்தைத் துலுக்கர்களுக்குக் கொடாமல் நமது சாஸ்திரவிதிப்படி சமாதிசெய்யவேண்டுமென்று நிச்சயித்து, துலுக்கர்களைப்பார்த்து "இந்தச் சவத்திற்கும் உங்களுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை; இதற்குச் செய்யவேண்டிய கிரியைஎல்லாம் எங்கள் சாஸ்திரவிதிப்படிச் செய்யவேண்டும்; ஆதலால், இந்தச் சவத்தை நீங்கள்தீண்டலாகாது" என்றுசொன்னார்கள்.

மகம்மதியர்கள் "இந்தச்சவம் எவ்விதமாய் உங்களுக்குச் சம்பந்தப்படும்? இவர் துலுக்கர். இவர்தந்தை துலுக்கர். இவர்பாட்டன் துலுக்கர்; இவர்அம்மான் துலுக்கர்; இவர் குமாரன் துலுக்கர்; இவர்தாய் துலுக்கச்சி; இவர்பாட்டி துலுக்கச்சி; இவர்மாமி துலுக்கச்சி; இவர்

அத்தை துலுக்கச்சி; இவர்பாரியாள் துலுக்கச்சி; ஆதலால் இவர்தேகம் எங்களுக்கேசேரவேண்டும். இதில் உங்களுக்கு எவ்விதமான சம்பந்தமும்இல்லை" என்று சொன்னார்கள்.

இந்துக்கள், இவர் பாட்டன் முப்பாட்டன்களால் எங்களுக்குப் பிரயோஜனமில்லை, இவர் இராமபக்தர்; இவர் தந்தை இராமபக்தர்; இவர்குமாரர் இராமபக்தர்; இவர் தாய் இராமபக்தியுடையவள்; இவர்பாரியாள் இராமபக்தியுடையவள். ஆதலால், இவர்தேகம் எங்களுக்கே சேரவேண்டும்; இதில் உங்களுக்கு எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றுசொன்னார்கள்.

அதன் பிறகு, மகம்மதியர்கள் "நீங்கள் சொல்லும்விஷயம் சரியானதல்ல. எங்களுக்கு ஜாதியினால் பிரயோஜனமேயொழிய நீதியினால்பிரயோஜனமில்லை. அவர் வேஷத்தைப்பாருங்கள்; இந்துவாய்க் காணப்படுகின்றாரா? அல்லது மகம்மதியராய்க் காணப்படுகின்றாரா? இந்துவென்பதற்கு அப்படிப்பட்ட முக்கியகுறிகள் அவரிடத்தில் என்னயிருக்கின்றது? யாரைக்கேட்டபோதிலும் இவர் மகம்மதியர்என்றுசொல்வார்கள்? இப்படிப்பட்ட விஷயங்களில் நீங்கள் பிரவேசிப்பது மிகவும் அக்கிரமம்" என்று சொன்னார்கள்.

இந்துக்களெல்லோரும் "தாடிவளர்த்து லுங்கிதரித்து குல்லாய்ப் போட்டுக்கொண்டதனால் துலுக்கனென்று நிச்சயிக்கலாகாது. சுன்னத் செய்தாலல்லவோ துலுக்கன் என்பதற்கு முக்கிய திருஷ்டாந்தம்? இவருக்கு ஏதாகிலும் சுன்னத்செய்திருக்கின்றதாபாருங்கள். காஜியிடத்திலாகிலும் மௌலியிடத்திலாகிலும் இவர் உபதேசம்பெற்றாரா? எப்போதாகிலும மஜீதுக்குவந்து நிமாஸ் செய்தாரா? சொல்லுங்கள்பார்ப்போம். இவர் எங்கள் இராமானந்த சுவாமிசிஷ்யர்; ஸ்ரீராமமூர்த்தியை பரமபக்தியுடன் உபாசனைசெய்தவர். இவரிடம் தாரகமந்திரம் உபதேசம் பெற்று கிருதார்த்தர்களான இந்துக்களும் மகம்மதியர்களும் அனேகர் இருக்கின்றார்கள். அவர் நெற்றியில் ஊர்த்துவ புண்டரங்கள் வைத்தக் குறிகள் இருக்கின்றன. கழுத்

தில் துளசிமாலையிருக்கின்றது. இவர் சாதுக்களுடன் கூடப்புறப்பட்டு பண்டரீபுரயாத்திரைச்செய்தது ஜனங்களெல்லோருக்கும் பகிரங்கமாய்த்தெரியவரும். இதுவரையில் இவர் சாதுக்களை பூஜித்துவந்தாரேயொழிய பக்கிரிகளை பூஜித்தவரல்லர். இவர் இந்துமதத்தில் பிரவேசித்தாரென்றல்லவோ, நீங்கள் இவர்களை உங்களுடன் சேர்த்துக்கொள்ளாமல் தள்ளிவிட்டீர்கள்? நேற்றையதினம் எங்கள் ஸ்ரீராமமூர்த்தியல்லவோ சுந்தராதேவியை பரமபதத்திற்கு அழைத்துச்சென்றார். இந்துமதத்தில் இவர் பிரவேசித்தார் என்பதற்கு இத்தனை பிரத்தியக்ஷதிருஷ்டாந்தங்களிருக்க மகம்மதியரென்று நீங்கள்எவ்விதமாய்ச் சொல்லலாம்? இவரால் உங்களுக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. இந்தப் பிரேதத்திற்குச் செய்யவேண்டிய கிரிகைகளையெல்லாம் நாங்களே செய்யவேண்டும். நீங்கள் மெதுவாய் வந்தவழியேசெல்லவேண்டும்'' என்றுசொன்னார்கள. அதனால் துலுக்கர்கள் கபீரைத் தம்முடையவரென்றுசொல்ல இடமில்லாமல் சிலநேரம் யோசித்து எவ்விதத்திலாகிலும் அந்தச் சவத்தை தம்வசஞ்செய்துக் கொள்ளநிச்சயித்து தம்தம் வீடுகள்சென்று கத்திகள் ஈட்டிகள் தடிகள் முதலானவைகளைக்கொண்டுவந்து'' "இந்துக்கள் யாராகிலும் இந்தச் சவத்தினிடம்வந்தால் பலியிடுவோம்'' என்று எல்லோரையும் வெளியில்தள்ளி வாசற்படியில் காவலாய் நின்றார்கள். அப்போது இந்துக்களெல்லோரும் சற்று யோசித்து "பரமபாகவதரான கபீருடைய சரீரத்தை இந்தப் பாபாத்மாக்களுக்குக் கொடுத்து நாம் ஓடிப்போவது சரியல்ல'' வென்று நிச்சயித்து இவர்களும் வீடு சென்று, சத்தி ஈட்டி பாகு பாணு முதலாகிய சாதன வஸ்துக்களை எடுத்துக்கொண்டு அதிக வீராவேசத்துடன் ஓடிவந்து துலுக்கர்களையெல்லாம் வெளியில்தள்ளி வாசற்படியில்நின்று நீங்கள் இதில் பிரவேசிப்பீர்களானால், துலுக்கபூண்டுஇல்லாமல் பலியிடுவோம் என்று உரத்த சப்தத்துடன் கூச்சலிட்டார்கள்.

துலுக்கர்களுக்கெல்லாம் அதிககோபமுண்டாய் இந்துக்களின்மீதுவீழ்ந்து வெட்டஆரம்பித்தார்கள். பிறகு இந்துக்களும், துலுக்கர்களின்மீதுவீழ்ந்து ஒருவரோடொருவர் கலந்து யுத்தம்செய்தார்கள். அப்போது இவர்களில் அனேகர்கள் மாண்டார்கள்.

தன்குருவாகிய கபீர் பரமசித்தியடைந்தாரென்னும் வார்த்தை அரசன்கேழ்விப்பட்டு மிகவும் சோகத்தில் மூழ்கிஇருந்தான். அப்படிப்பட்டசமயத்தில் கபீர் பிரேதத்திற்காக மகம்மதியர்களும் இந்துக்களும் ஒருவரோடொருவர் யுத்தம்செய்து அனேகர்மாண்டார்களென்று அரசனிடம்வந்துசொன்னார்கள். உடனே அரசன் திடுக்கிட்டெழுந்து மந்திரி பிரதானிகளை அழைத்துக்கொண்டு கால்நடையாய் கபீர் வீட்டுக்கு ஓடிவந்து யுத்தம் செய்துகொண்டிருக்கும் இந்துக்களையும் மகம்மதியர்களையும் சமாதானப்படுத்தி சங்கதிகளைவிசாரித்து அதற்குப் பதில்சொல்ல சாத்தியமாகாமல் வீட்டிற்குள் சென்று கபீரை நமஸ்கரித்து சுவரில்எழுதிவைத்த வாக்கியங்களை வாசித்து சற்றுநேரம்யோசித்து "தகனம் செய்யாமலும், சமாதி செய்யாமலும்போனால் இந்தச்சரீரம் என்ன ஆகவேண்டும். இதில் ஏதோ ஓர்விசேஷம இருக்கவேண்டும். இதைப்பரீக்ஷித்தால்தான் தெரியவரும்'' என்று சொல்லி வெளியில் வந்து இந்துக்களையும் மகம்மதியர்களையும் பார்த்து, சற்றேபொறுங்கள் என்றுசொல்லித் தான் சீக்கிரமாய் கங்காநதிக்குச் சென்று ஸ்நானம்செய்து மடியுடன்வந்து கபீர் தேகத்தை ஓர் பீதாம்பரத்தினால்மூடி கைகளைக் குவித்து அஞ்சலி அஸ்தனாய் நின்று "பரமபாகவதசிகாமணீ; நீர் தர்ம ஸ்தாபனார்த்தமாய் உலகத்தைக் காப்பாற்ற, மானவரூபமாய் அவதரித்த மஹானுபாவர்; நீர் செய்த காரியங்களெல்லாம் மிகவும் ஆச்சரியமானவைகள்; உமது மஹாமஹிமையை வர்ணிக்க நான் எவ்வளவுமாத்திரன்? இந்தச் சுவற்றின்மீது எழுதிவைத்த வாக்கியத்திற்குத் தாத்பரியம் என்னமோதெரியவில்லை. இந்துக்களும் மகம்மதியர்களும் தேவரீர் நிமித்தமாய்க் கலகம்செய்து அன்னியாயமாய்

மாண்டுபோகின்றார்கள். நீர் தர்மசொரூபர்; உம்மால் இவர்கள்மாண்டால், உமக்கு உலகத்தில் சாஸ்வதமான அபகீர்த்திஉண்டாகும். ஆதலால், தயைசெய்து இவர்களுக்கு உண்டாயிருக்கும் கலகத்தைத்தீர்த்து தேசத்தை ரக்ஷிக்கவேண்டும்'' என்று மிகவும் பயபக்தியுடன் ஸ்துதிசெய்து கபீரைமூடியிருந்த பீதாம்பரத்தை எடுத்துவிட்டார். அதை எடுத்தவுடன் கபீர் சரீரம் பாதி, மணமுள்ள நல்லிய மல்லிகை புஷ்பங்களாகவும், மற்றைப்பாதி நிர்மல பசுந்துளசிதளங்களாகவும் காணப்பட்டு எல்லோருக்கும் அதிக ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. அப்போது இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் உண்டாகிய ஆனந்தம் இவ்வளவென்று சொல்லமுடியாது. உடனே அவர்கள் இருவரும் விரோதம்நீங்கி கைகளைக்கொட்டி ''ஜயஜய கபீர், ஜயஜய கபீர்'' என்று ஸ்துதிசெய்து நர்த்தனம் புரிய ஆரம்பித்தார்கள். இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் சம்பவித்த அசாத்தியமான விரோதத்தை சுலபமாய்த்தீர்த்து சமரசப்படுத்தியவிஷயத்தில் அரசனுக்கு உண்டாகிய சந்தோஷம் இவ்வளவென்று சொல்லலாகாது. தன் குருவாகிய கபீர் தன்தேசத்திலுள்ள ஜனங்களுக்கு விசேஷ அபாயம் வாராதபடி ரக்ஷித்ததற்காக அரசன் கபீர்மகிமையை விசேஷமாய்ப்புகழ்ந்து அநேக வந்தனங்களைசெய்தான். அப்போது எல்லோரும் கேழ்க்கும்படி ஆகாசவாணி ''கபீர் சாமான்னியமானவரல்ல; அயோனி சம்[illegible]ஞானாசாரமாய் உலகத்தை உத்தரிக்க வந்த சுகப[illegible]. தான் அயோனிசம்பவரென்று [illegible] தெரி[illegible]கொள்வதற்காக சுவற்றின் மீது அந்த வாக்கியங்களை எழுதிவைத்து மகம்மதியனால் வளர்க்கப்பட்டு இந்துமதத்தை அனுஷ்டித்துவந்தபடியால் இவைகளுக்கு திருஷ்டாந்தமாய் தன் சரீரத்தை மல்லிகை புஷ்

163980

(1)	(2)	(1)	(2)